வெளியீடு 16-2-2004

Issued 16-2-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, மே 8, 2003 – தொகுதி 49 – எண் 1

**Thursday the 8th May, 2003 – Volume 49 – No. 1**

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

[Price Rs. 3.00

8-5-2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | v-ix |
| Governor and Council of Ministers | xi-xiv |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xviii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-35 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 36-101 |
| **2. தகவல் கோரல்—** | |
| அரசு ஊழியர்கள், மருத்துவ மாணவர்கள் போராட்டம் | 101-105 |
| **3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 105 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 105 |
| (ஆ) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 | 106 |
| மாண்புமிகு திரு. செ. செம்மலை | 106 |

பக்கங்கள்

**3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி

(இ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவு, 2003 — 107-108

மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் — 107,108

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 107

திரு. ஜி.கே. மணி — 107

திரு. வை. சிவபுண்ணியம் — 107

திரு. ஜே. ஹேமச்சந்திரன் — 107

(ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 — 108-109

மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி — 108,109

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன் — 109

**4. அறிவிப்புகள்**—

(அ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 106

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.) — 108

**5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 14-சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை — 109-211

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் — 109-110,120-121,137,140,143,144,150,151,153-154,163,164,168-169,176-177,184-205

*டாக்டர் பி. வள்ளல் பெருமான் — 123-130



பக்கங்கள்

**5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. எஸ். மாணிக்காராஜ் — 130-135

*திரு. டி.என். சிவசுப்பிரமணியன் — 136-142

*திரு. கி. பாரிமோகன் — 142-154

*திருமதி நளினி மனோகரன் — 154-160

திரு. டி. மணி — 160-166

திரு. வை. சிவபுண்ணியம் — 167-175,212

*திரு. கே.வி. முரளிதரன் — 176-184

(ஆ) கோரிக்கை எண் 25 - வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் — 212-213,235,240-242,266-267,278,279-280,281,284,285-286,287-288,290

(இ) கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம்

*மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்பிரமணியன் — 220-236

(ஈ) கோரிக்கை எண் 28 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா

*மாண்புமிகு திரு. அ. மில்லர் — 227-236,247,248,292,293

திரு. சி. ஞானசேகரன் — 237-250,258,263

*திரு. ராதாரவி — 250-263

திரு. மு. கார்த்தி — 264-273

*திரு. இ.ஏ. ஷியாவுதீன் சேட் — 273-278

| | பக்கங்கள் |
|---|---|
| 5. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (ஈ) கோரிக்கை எண் 28 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா—தொடர்ச்சி | |
| திரு. கே.சி. கருணாகரன் | 278-288 |
| திரு. சோ. இராசேந்திரன் | 289-294 |
| திரு. ஜெக. வீரபாண்டியன் | 294-298 |
| 6. **விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை**— | |
| இராணி மேரி கல்லூரி முதல் மாடி வராண்டா இடிந்து விழுந்ததால் ஊனமடைந்த மாணவி எம். ஷீலாவிற்கு இழப்பீடு | 121-123 |
| 7. **அரசினர் தீர்மானம்**— | |
| விதி 32-ஐத் தளர்த்தல் | 299 |
| 8. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— | 300-301 |


185076



## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் - திரு. பெ.ஸ்ரீ. ராமமோகன் ராவ்

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** .. **மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை மற்றும் சிறுபான்மையினர் நலன்.

2. **பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள், சிறுபாசனம் உட்பட பாசனம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கரும்பஞ்சாற்றுக் கசண்டு, இலஞ்ச ஒழிப்பு மற்றும் சிறைகள், வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத்தாள் சட்டம், எழுதுபொருள் & அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம் மற்றும் கடவுச் சீட்டுகள்.

3. **நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல் மற்றும் சட்டமன்றம், சட்டமியற்றல், எடைகள், அளவைகள், கடன் கொடுத்தல் மீதான சட்டம் உட்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்.

4. **சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல்.

| | | |
|---|---|---|
| 5. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** இந்து சமய மற்றும் அறநிலையங்கள் |
| 6. மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன், கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல் பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாடு, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 7. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன். |
| 8. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு, மக்கள்தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃபு. |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:** வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு. |



| | | |
|---|---|---|
| 10. சமூக நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு இல்லங்கள், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம். |
| 11. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி:** ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர், கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன். |
| 12. போக்குவரத்துத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள். |
| 13. மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு, தொழிற்சாலைகள், இரும்பு, உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள், கனிமங்கள் மற்றும் மின்னணுவியல். |
| 14. வணிக வரித் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** வணிக வரிகள். |
| 15. கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் | .. | **மாண்புமிகு திரு. ப. மோகன்:** கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல், விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல். |

| | |
|---|---|
| 16. உள்ளாட்சித் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு எம்.சி. சம்பத்:** நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல். |
| 17. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** கால்நடை பராமரிப்பு. |
| 18. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. ஆர். வடிவேல்:** குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர் கிராமத் தொழில் வாரியம். |
| 19. வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு. |
| 20. வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** வீட்டு வசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்புத் திட்டமிடல், குடிசை மாற்றுத் திட்டங்கள், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப் பகுதி வளர்ச்சி, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம். |
| 21. பால் வளத் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி. |



| | |
|---|---|
| 22. செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல், திரைப்படச் சட்டம் மற்றும் செய்தித்தாள் கட்டுப்பாடு. |
| 23. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்:** கைத்தறி மற்றும் துணித் தொழில். |
| 24. மீன்வளத் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மீன்வளம் |
| 25. சுற்றுலாத் துறை அமைச்சர் .. | **மாண்புமிகு திரு. அ. மில்லர்:** சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம். |

## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - THIRU P.S. RAMAMOHAN RAO

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | | |
|---|---|---|
| 1. **Chief Minister** | .. | **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police and Minorities Welfare. |
| 2. **Minister for Public Works, Prohibition & Excise and Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Public Works, Highways, Irrigation including minor irrigation, Prohibition and Excise, Molasses, Prevention of corruption, Prisons, Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery & Printing, Government Press, Bhoodhan & Gramdhan and Passports. |
| 3. **Minister for Finance** | .. | **The Hon. Thiru C. Ponnaiyan:** Finance, Planning, Elections and Legislature, Legislation, Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 4. **Minister for Law and Information Technology** | .. | **The Hon. Thiru D. Jayakumar:** Law, Courts and Information Technology. |
| 5. **Minister for Hindu Religious and Charitable Endowments** | .. | **The Hon. Thiru P.C. Ramasamy:** Hindu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| Health<br>ıtion | .. | **The Hon. Thiru S. Semmalai:**<br>Health, Medical Education and Family Welfare, Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians Overseas, Refugees and Evacuees. |
| d Classes | .. | **The Hon. Thiru A. Papasundaram:**<br>Backward Classes, Most Backward Classes and Denotified Communities. |
| Labour | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:**<br>Labour, Employment and Training, Urban and Rural Employment, Census and Wakfs. |
| Agriculture | .. | **The Hon. Thiru R. Jeevanantham:**<br>Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development. |
| ır Social | .. | **The Hon. Tmt. B. Valarmathi:**<br>Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| r<br>idar Welfare | .. | **The Hon. Thiru C. Karuppasamy:**<br>Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |



| | | |
|---|---|---|
| **12. Minister for Transport** | .. | **The Hon. Thiru R. Viswanathan:**<br>Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Ports. |
| **13. Minister for Electricity and Industries** | .. | **The Hon. Thiru Nainar Nagenthran:**<br>Electricity, Non-conventional energy development, Industries, Iron & Steel Control, Mines & Minerals and Electronics. |
| **14. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru Se.Ma. Velusamy:**<br>Commercial Taxes. |
| **15. Minister for Co-operation, Food & Civil Supplies & Consumer Protection** | .. | **The Hon. Thiru P. Mohan:**<br>Co-operation, Food, Civil Supplies, Price Control and Statistics. |
| **16. Minister for Local Administration** | .. | **The Hon. Thiru M.C. Sampath:**<br>Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| **17. Minister for Animal Husbandry** | .. | **The Hon. Thiru P.V. Damodaran:**<br>Animal Husbandry. |
| **18. Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru R. Vadivel:**<br>Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |

19. **Minister for Forests and Environment** - **The Hon. Thiru R. Vaithilingam:** Forests & Environment and Pollution Control.

20. **Minister for Housing and Urban Development** - **The Hon. Thiru Anitha R. Radhakrishnan:** Housing, Housing Development, Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority

21. **Minister for Dairy Development** - **The Hon. Thiru S. Ramachandran:** Milk and Dairy Development.

22. **Minister for Information and Publicity** - **The Hon. Thiru K.K. Balasubramanian:** Information and Publicity, Film Technology, Cinematograph Act and Newsprint Control.

23. **Minister for Handlooms and Textiles** - **The Hon. Thiru V. Somasundaram:** Handlooms and Textiles.

24. **Minister for Fisheries** - **The Hon. Thiru M. Radhakrishnan:** Fisheries.

25. **Minister for Tourism** - **The Hon. Thiru A. Miller:** Tourism and Tourism Development Corporation.



## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

**பேரவைத் தலைவர்**

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து

**பேரவைத் துணைத் தலைவர்**

மாண்புமிகு திரு. அ. அருணாசலம்

**மாற்றுத் தலைவர்கள்***

திரு. கே. பாண்டுரங்கன்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. லா. சந்தானம்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

**செயலாளர்**

திரு. வெ. இராசாராமன்

*28-1-2003 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) (விடுப்பு) |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. மா. ரவிச்சந்திர ராஜ், பி.ஏ., | .. குழு அலுவலர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |

| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. ந. ருத்ரமணி, எம்.ஏ. | .. சார்புச் செயலாளர், பேரவைத் தலைவரின் தனிச் செயலர் (பொறுப்பு) |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. தலைமை நிருபர் (விடுப்பு) |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் (பொறுப்பு) |



## பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அண்ணாதுரை, திரு. செ. | .. ஜெயங்கொண்டம் |
| 3. | அண்ணாமலை, திரு. கு. | .. தென்காசி |
| 4. | அண்ணாவி, திரு. ப. | .. தொட்டியம் |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 6. | அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. திருவையாறு |
| 7. | அரசன், திரு. ப. | .. அறந்தாங்கி |
| 8. | அருணாசலம், திரு. அ. | .. வரகூர் |
| 9. | அருள், திரு. பி.எஸ். | .. புவனகிரி |
| 10. | அழகம்மாள், திருமதி வி. | .. தலைவாசல் (செ.வ.) |
| 11. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 12. | அன்பழகன், திரு. ஆ.கு.சீ. | .. பொ்ணமல்லூர் |
| 13. | அன்பழகன், திரு. கு. | .. நிலக்கோட்டை (செ.வ.) |
| 14. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 15. | அன்பழகன், திரு. ஜெ. | .. தியாகராய நகர் |
| 16. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 17. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 18. | அன்வர் ராஜா, திரு. அ. | .. இராமநாதபுரம் |
| 19. | ஆண்டிவேல், திரு. ப. | .. வேடசந்தூர் |
| 20. | ஆறுமுகம், திரு. கே. | .. செங்கல்பட்டு |

21. ஆறுமுகம், திரு. த. - திருவொற்றியூர்
22. ஆற்காடு நா. வீராசாமி, திரு. - அண்ணா நகர்
23. ஆஸ்டின், திரு. - நாகர்கோவில்
24. இரவிராஜ், திரு. கோ. - திருத்தணி
25. இராசேந்திரன், திரு. இ. - திருவோணம்
26. இராசேந்திரன், திரு. சோ. - கோவில்பட்டி
27. இராமசாமி, திரு. கே.ஆர். - திருவாடனை
28. இராமச்சந்திரன், திரு. எஸ். - கலசப்பாக்கம்
29. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். - கம்பம்
30. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். - சாத்தூர்
31. இராமு, திரு. ந. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
32. இராம் பிரபு, திரு. இரா. - பரமக்குடி (செ.வ.)
33. இராஜசேகர், திரு. மா. - ராஜபாளையம் (செ.வ.)
34. இராஜரெத்தினம், திரு. ப. - பெரம்பலூர் (செ.வ.)
35. இராஜா, திரு. டி.கே. - திருப்பத்தூர்
36. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. - பத்மநாபபுரம்
37. இராஜேந்திரன், திரு. பி.ஜி. - ஆலங்குளம்
38. இலட்சுமணன், திரு. கே.என். - மயிலாப்பூர்
39. இளவழகன், திரு. ப. - அரியலூர்
40. இளையகண்ணு, திரு. கா.தி. - ஏற்காடு (ஆ.வா.)
41. இன்பத் தமிழன், திரு. இரா.தா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
42. ஈஸ்வரன், திரு. ரா. - வாசுதேவநல்லூர் (செ.வ.)



43. உசேன், திரு. எஸ்.ஏ.எம். - திருவல்லிக்கேணி
44. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். - தஞ்சாவூர்
45. உமாதேவன், திரு. கே.கே. - திருப்பத்தூர்
46. உலகரட்சகன், திரு. பி.எஸ். - செய்யாறு
47. ஏழுமலை, திரு. வெ. - செஞ்சி
48. கணபதி, திரு. ந. - வானூர் (செ.வ.)
49. கணேசன், திரு. ஐ. - எடப்பாடி
50. கணேசன், திரு. ஆர். டி. - தேனி
51. கண்ணன், திரு. ஏ.எஸ். - பொன்னேரி (செ.வ.)
52. கந்தசாமி, திரு. க.ரா. - சத்தியமங்கலம்
53. கந்தசாமி, திரு. கா. - குன்னூர் (செ.வ.)
54. கருணாகரன், திரு. கே.சி. - சிங்காநல்லூர்
55. கருணாநிதி, திரு. மு. - சேப்பாக்கம்
56. கருப்பசாமி, திரு. சொ. - சங்கரநயினார்கோவில் (செ.வ.)
57. கருப்பணன், திரு. கே.சி. - பவானி
58. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ. - குளத்தூர் (செ.வ.)
59. கலாவதி, திருமதி கு. - சேந்தமங்கலம் (ஆ.வா.)
60. கனகதாரா, செல்வி சி. - பேரணாம்பட்டு (செ.வ.)
61. கனிதா சம்பத், திருமதி எஸ். - திருப்போரூர் (செ.வ.)
62. காசாம்பு பூமாலை, திருமதி - சங்கராபுரம்
63. காமராஜ், திரு. மே.ப. - தாரமங்கலம்
64. கார்த்தி, திரு. மு. - சேலம்-2
65. காளிமுத்து, டாக்டர் கா. - திருமங்கலம்

66. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
67. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
68. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
69. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
70. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
71. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்
72. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
73. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
74. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
75. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
76. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
77. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
78. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
79. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
80. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
81. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
82. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
83. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
84. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
85. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
86. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
87. சாவணன், திரு. துரை. கி. .. சிதம்பாம்



88. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
89. சாமி, திரு. ஆர். .. மேலூர்
90. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
91. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்
92. சிவகாமி, திருமதி வி. .. தாராபுரம் (செ.வ.)
93. சிவசாமி, திரு. கே.கே. .. அருப்புக்கோட்டை
94. சிவசாமி, திரு. சி. .. திருப்பூர்
95. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். .. கரூர்
96. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
97. சிவபெருமாள், திரு. அ. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)
98. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
99. சின்னசாமி, திரு. மா. .. பழனி (செ.வ.)
100. சீனிவேல், திரு. எஸ்.எம். .. திருப்பரங்குன்றம்
101. சுதர்சனம், திரு. கே. .. கும்மிடிப்பூண்டி
102. சுதர்சனம், திரு. டி. .. திருவள்ளூர்
103. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
104. சுந்தராம்பாள், திருமதி செ. .. மேட்டூர்
105. சுப்பிரமணியன், திரு. வீ. .. கண்டமங்கலம் (செ.வ.)
106. சுப்பையா பாண்டியன், திரு. எம். .. கடையநல்லூர்
107. சூரியகலா, திருமதி சி.எம். .. குடியாத்தம்
108. செம்மலை, திரு. செ. .. ஓமலூர்
109. செல்லையா, திரு. வி.ஏ. .. மருங்காபுரி

110. செல்வம், திரு. எஸ்.கே. .. வீரபாண்டி
111. செல்வராஜ், திரு. ஏ.கே. .. மேட்டுப்பாளையம்
112. செல்வி முருகேசன், திருமதி .. காங்கேயம்
113. சேகரன், திரு. கே.என். .. திருவெறும்பூர்
114. சேகர்பாபு, திரு. பி.கே. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்.
115. சோமசுந்தரம், திரு. வி. .. உத்திரமேரூர்
116. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
117. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. .. திருநாவலூர்
118. தமிழரசன், திரு. செ.கு. .. நன்னிலம் (செ.வ.)
119. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி .. மேல்மலையனூர்
120. தம்பிதுரை, டாக்டர் மு. .. பர்கூர்
121. தவமணி, திரு. க. .. திருவிடைமருதூர்
122. தளவாய் சுந்தரம், திரு. ந. .. கன்னியாகுமரி
123. தனபால், திரு. ப. .. சங்கரி (செ.வ.)
124. தாமோதரன், திரு. எஸ். .. விருதுநகர்
125. தாமோதரன், திரு. செ. .. கிணத்துக்கடவு
126. தாமோதிரன், திரு. ப.வெ. .. பொங்கலூர்
127. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. .. பேராவூரணி
128. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். .. காஞ்சிபுரம்
129. திருமாவளவன், திரு. இரா. .. மங்களூர் (செ.வ.)
130. துரைமுருகன், திரு. .. காட்பாடி
131. துரைராஜ், திரு. சி. .. சேடப்பட்டி



132. தென்னரசு, திரு. கே.எஸ். .. ஈரோடு
133. நடராஜன், திரு. அ. .. குத்தாலம்
134. நடராஜன், திரு. எஸ். .. நாட்றாம்பள்ளி
135. நடராஜன், திரு. பி.கே.டி. .. ஆத்தூர்
136. நடராசன், திரு. வது. .. இளையான்குடி
137. நயினார் நாகேந்திரன், திரு. .. திருநெல்வேலி
138. நரசிம்மன், திரு. பி.எம். .. பள்ளிப்பட்டு
139. நளினி மனோகரன், திருமதி .. போளூர்
140. நன்மாறன், திரு. என். .. மதுரை கிழக்கு
141. நீலகண்டன், திரு. ப. .. ஆற்காடு
142. நீலமேகவர்ணம், திரு. லெ. .. சாத்தான்குளம்
143. நெப்போலியன், திரு. து. .. வில்லிவாக்கம்
144. பச்சைமால், திரு. தா. .. குளச்சல்
145. பதினெட்டாம்படியான், திரு. க. .. முதுகுளத்தூர்
146. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-I
147. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
148. பவானி கருணாகரன், திருமதி கே. .. அரக்கோணம் (செ.வ.)
149. பழனிசாமி, திரு. கே.எஸ். .. பெருந்துறை
150. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
151. பழனியப்பன், திரு. பெ. .. மொரப்பூர்
152. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி

153. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
154. பாண்டுரங்கன், திரு. கே. - அணைக்கட்டு
155. பாப்பாசுந்தரம், திரு. அ. - குளித்தலை
156. பாரமலை, திரு. க. - மானாமதுரை (செ.வ.)
157. பாரிமோகன், திரு. கி. - தருமபுரி
158. பாலகிருஷ்ணன், திரு. சோ. - கடலாடி
159. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். - தொண்டாமுத்தூர்
160. பாலசுப்ரமணியன், திரு. கே.கே. - ஸ்ரீரங்கம்
161. பாலபாரதி, செல்வி க. - திண்டுக்கல்
162. பாலன், திரு. எஸ்.எம். - லால்குடி
163. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். - சேரன்மகாதேவி
164. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
165. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
166. பூபதி மாரியப்பன், திருமதி - வலங்கைமான் (செ.வ.)
167. பூவராகமூர்த்தி, திரு. ஏ. - அச்சரப்பாக்கம் (செ.வ.)
168. பெருமாள், திரு. என்.கே. - விளாத்திகுளம்
169. பொன்முடி, டாக்டர் க. - விழுப்புரம்
170. பொன்னம்பலம், திரு. ப. - சமயநல்லூர் (செ.வ.)
171. பொன்னையன், திரு. சி. - திருச்செங்கோடு
172. போளூர் வாதன், திரு. - செங்கம் (செ.வ.)
173. மகாலிங்கம், திரு. எஸ். - அவினாசி (செ.வ.)
174. மகேந்திரன், திரு. கே. - பெரம்பூர் (செ.வ.)



175. மகேஸ்வரி, திருமதி எஸ். - கோயம்புத்தூர் மேற்கு
176. மணி, திரு. கோ.சி. - கும்பகோணம்
177. மணி, திரு. டி. - விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. - பெண்ணாகரம்
179. மலையப்பசாமி, திரு. அ.இரா. - கபிலர்மலை
180. மல்லிகா சின்னசாமி, திருமதி - முசிறி
181. மாணிக்கராஜ், திரு. எஸ். - நாங்குநேரி
182. மில்லர், திரு. அ. - கடலூர்
183. முரளிதரன், திரு. கே.வி. - தளி
184. முருகவேல் ராஜன், திரு. க. - வந்தவாசி (செ.வ.)
185. முருகேசன், திரு. ஆகு. - ஆத்தூர்
186. முனுசாமி, திரு. கா.பூ. - காவேரிப்பட்டினம்
187. மைதீன்கான், திரு. டி.பி.எம். - பாளையங்கோட்டை
188. மோகன், திரு. ப. - சின்னசேலம்
189. யசோதா, திருமதி டி. - ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
190. ரங்கநாதன், திரு. ப. - புரசைவாக்கம்
191. ரங்கராஜன், திரு. என்.ஆர். - பட்டுக்கோட்டை
192. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். - கோபிசெட்டிப்பாளையம்
193. ராதாகிருஷ்ணன், திரு. எம். - திருமயம்
194. ராதாரவி, திரு. - சைதாப்பேட்டை
195. ராமசாமி, திரு. பி.சி. - மொடக்குறிச்சி
196. ராமராஜ், திரு. ச. - போடிநாயக்கனூர்
197. ராம்குமார், திரு. எம். - பாபநாசம்
198. ராஜகோபால், திரு. ஆ. - சிவகாசி

199. ராஜம்மாள், திருமதி எஸ். - தூத்துக்குடி

200. ராஜா, திரு. எச். - காரைக்குடி

201. ராஜாங்கம், திரு. வி.ஆர். - சோழவந்தான்

202. ராஜு, திரு. எச்.எம். - உதகமண்டலம்

203. ரெங்கநாதன், திரு. என். - பூம்புகார்

204. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. - பேரூர்

205. லட்சுமணன், திரு. வி.கே. - கோயம்புத்தூர் கிழக்கு

206. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. - அரவக்குறிச்சி

207. வடிவேல், திரு. ஆர். - வாணியம்பாடி

208. வளர்மதி, திருமதி பா. - ஆலந்தூர்

209. வளர்மதி ஜெபராஜ், திருமதி - மதுரை மேற்கு

210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. - காட்டுமன்னார் கோவில் (செ.வ.)

211. வாசுதேவன், திரு. பெ. - மதுராந்தகம்

212. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்

213. வில்வநாதன், திரு. இரா. - சோளிங்கர்

214. வினாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. - பூங்கா நகர்

215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. - புதுக்கோட்டை

216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. - பனமரத்துப்பட்டி

217. வீரபாண்டியன், திரு. ஜெக. - மயிலாடுதுறை

218. வெங்கடாசலம், திரு. அ. - ஆலங்குடி

219. வெங்கடாஜலம், திரு. செ. - சேலம்-1

220. வேதாத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்

221. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்



222. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு

223. வேல் முருகன், திரு. தி. - பண்ருட்டி

224. வைதியலிங்கம், திரு. மீ.அ. - தாம்பரம்

225. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு

226. ஜீவானந்தம், திரு. இரா. - நாகப்பட்டினம்

227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. - ஆரணி

228. ஜெயக்குமார், திரு. கு. - நாமக்கல் (செ.வ.)

229. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்

230. ஜெயராமன், திரு. வி. - பொள்ளாச்சி

231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி

232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு

233. ஹக்கீம், திரு. எம்.ஏ. - மதுரை மத்தி

234. ஹேமச்சந்திரன், திரு. ஜே. - திருவட்டாறு

235. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி - (நியமனம்)

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. என்.ஆர். சந்திரன் - தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 25, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034**
**2003 மே 8, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

***"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது***
***தூக்கங் கடிந்து செயல்"***

மனக் குழப்பமின்றி, தெளிவாக முடிவு செய்யப்பட்டு, ஒரு செயலை தளர்ச்சியும், தாமதமும் இடையே ஏற்படாமல் விரைந்து நிறைவேற்ற வேண்டும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 401, திரு. நா. சந்திரமோகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

401—

**தார்ச் சாலை அமைத்தல்**

***17985—திரு. நா. சந்திரமோகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சியிலிருந்து பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன்

[2003 மே 8

கோயில் செல்லும் சாலையை அகலப்படுத்தி, தார்ச் சாலையாக கிராமச் சாலைகள் திட்டத்தின்கீழ் நடைமுறைப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப வருங்காலங்களில், முன்னுரிமை அடிப்படையில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சீர்காழி தொகுதி, சட்டநாதபுரம் ஊராட்சி அருகிலுள்ள பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் ஆகிய கிராமங்களில் பொதுமக்கள் சுமார் 6,000 நபர்கள் வசித்து வருகின்றனர். இதில், பெரும்பாலானோர் ஆதிதிராவிட மக்களும், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களும் ஆவார்கள். அவர்கள் சீர்காழி நகரத்திற்கோ அல்லது கோயில் ஸ்தலமான வைத்தீஸ்வரன் கோயிலுக்கோ செல்ல வேண்டுமானால், சுமார் 4 கிலோமீட்டர் தூரம் கால்நடையாக நடந்து செல்ல வேண்டிய மிகவும் கஷ்டமான நிலை உள்ளது. குறிப்பாக, பெண்களை பிரசவக் காலங்களில், இன்றும் கட்டிலில் தூக்கிக் கொண்டுதான் உப்பனாற்றைக் கடந்து சீர்காழி மருத்துவமனைக்குச் செல்கின்றனர். மழைக் காலங்களில், சாலைகள் சேறும், சகதியுமாக உள்ளதால், பொதுமக்கள், சீர்காழி நகரத்திற்கோ அல்லது வைத்தீஸ்வரன் கோயிலுக்கோ செல்ல முடியாத சூழ்நிலை உள்ளது. மேலும், இப்பகுதியிலுள்ள மாணவ மாணவிகளுக்கு, போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், மேற்படிப்பைத் தொடர வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. எனவே மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, இப்பகுதியிலுள்ள ஆதிதிராவிட மக்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், மாணவ மாணவிகளின் நலன் கருதி,



2003 மே 8]

சீர்காழி ஒன்றியம் சட்டநாதபுரத்திலிருந்து, பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன் கோயில் வரை செல்லும் மண் சாலையை, கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அகலப்படுத்தி, முன்னுரிமை அடிப்படையில், இந்த ஆண்டிலேயே தார்ச் சாலையாக மேம்பாடு செய்து கொடுக்க, அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற வினாவில் குறிப்பிட்டுள்ள சாலை, கும்பகோணம், சீர்காழி அரசு மாநில சாலை கிலோமீட்டர் 54/0-லிருந்து பிரிந்து, பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் வழியாக வைத்தீஸ்வரன் கோயிலில் இதே அரசு சாலையில் கிலோமீட்டர் 49/6-ல் இணைகிறது. இந்தச் சாலை 0/0 முதல் 6/0 கிலோ மீட்டர் வரையிலும் உள்ள சாலையாகும். இதில் 4/6 முதல் 6/6 வரை தார்ச் சாலையாக உள்ளது. மீதமுள்ள பகுதி, 0/0 முதல் 4/6 வரையிலுள்ள சாலையை மேம்பாடு செய்வதனால், சட்டநாதபுரம், பனமங்களம், குமாரநத்தம், மருவத்தூர் மற்றும் வைத்தீஸ்வரன் கோயில் ஆகிய கிராமங்கள் பயனடையும். ஏற்கெனவே, சட்டநாதபுரம், வைத்தீஸ்வான் கோயில் கிராமங்கள் அரசு சாலையில் அமைந்துள்ளன. பனமங்களம், மருவத்தூர் கிராமங்கள், வரையறுக்கப்பட்ட கிராமங்களாக, 1991-ன் கணக்கெடுப்புப் புத்தகத்தில் இடம் பெறவில்லை. ஆனால் குமாரநத்தம் கிராமத்தின் மக்கள்தொகையான 235-ல் ஆதிதிராவிட மக்கள் தொகை 131 ஆக உள்ளது. இது 50 விழுக்காட்டிற்கு மிகுந்து உள்ளதால், இந்தச் சாலையைச் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்திடலாம். இந்தச் சாலை மேம்பாட்டிற்கு ரூ. 92 இலட்சம் தேவைப்படும். அரசின் நிதிநிலைமைக்கேற்ப, முன்னுரிமை அடிப்படையில், வருங்காலங்களில், இந்தச் சாலை வேலை எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 402, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**402—**

**மருத்துவமனை தரம் உயர்த்துதல்**

**•31247—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், சிறுகாம்பூரில் அமைந்துள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை முப்பது படுக்கைகள் கொண்ட, முழுநேர மருத்துவமனையாக மாற்றம் செய்து, தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகாம்பூரில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை முப்பது படுக்கை வசதி கொண்ட முழுநேர மருத்துவமனையாக மாற்றும் சாத்தியக்கூறுகள் இல்லை. காரணம், ஏற்கெனவே அந்த ஒன்றியத்தில், மண்ணச்சநல்லூரிலும், ஓமந்தூரிலும் மருத்துவமனை—அரசு மருத்துவமனை—செயல்பட்டு வருகிறது. எனவே அந்த மருத்துவமனைகள் இருக்கிற காரணத்தினாலே எந்த ஆரம்ப சுகாதார நிலையமும் அங்கே தரம் உயர்த்தபபடுவதற்கு வாய்ப்பு இல்லை.

முற்பகல் 10-05

**திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறுகாம்பூரில் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வாய்ப்பு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் என்னுடைய தொகுதியில் மண்ணச்சநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. அது ஒன்றியத்தின் தலைமையிடமாகும். மேலும் என்னுடைய தொகுதியில் ஓமந்தூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. நோயாளிகள் பெருமளவில் வருகின்றார்கள். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் இந்த 2 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கைகள் கொண்ட முழுநேர மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மண்ணச்சநல்லூரிலும், ஓமந்தூரிலும் ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. மண்ணச்சநல்லூரில் வட்ட மருத்துவமனையும், ஓமந்தூரில் வட்டம் சாரா மருத்துவமனையும்தான் இப்போது செயல்பட்டு வருகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அந்த 2 மருத்துவமனைகளிலும் போதுமான மருத்துவர்கள், படுக்கை வசதிகள் குறைவாக இருப்பது என்பது உண்மைதான். தமிழகத்தினுடைய முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக உலக வங்கி இப்போது இதுபோன்ற மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு நிதி உதவி அளிப்பதற்கு முன்வந்திருக்கிறது. உலக வங்கியினுடைய நிதி உதவியுடன் மண்ணச்சநல்லூர் வட்ட மருத்துவமனையையும், ஓமந்தூர் வட்டம் சாரா மருத்துவமனையையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய விருப்பத்திற்கு ஏற்ப 30 படுக்கைகள் கொண்ட தரம் வாய்ந்த மருத்துவமனையாகத் தரம் உயர்த்தித் தரப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 403, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**403—**

**அவசர சிகிச்சைப் பிரிவு**

**•35825—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை புறநகர் மருத்துவமனை, சின்ன ஸ்டான்லி மருத்துவமனையில் எப்போதும் இயங்கும் வகையில் அவசர சிகிச்சைப் பிரிவு தொடங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[2003 மே 8

சென்னை, தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையான சின்ன ஸ்டான்லி மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு ஏற்கெனவே இயங்கி வருகிறது. தினசரி ஒரு மருத்துவர் காலையில் புறநோயாளிகள் பிரிவைக் கவனித்த பிறகு, அவசர சிகிச்சைப் பிரிவில் காலை பத்து மணி முதல் மறுநாள் காலை வரை பணி செய்யும் ஏற்பாடு சுழற்சி முறையிலே செய்யப்பட்டு வருகிறது. எனவே அவசர சிகிச்சைப் பிரிவு புதிதாக ஏற்படுத்துவதற்கான அவசியம் அங்கு எழவில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வட சென்னைப் பகுதியில், மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அமைந்த பிறகுதான் அந்த சின்ன ஸ்டான்லி மருத்துவமனையான புறநகர் மருத்துவமனை நல்ல முறையிலே செயல்படத் தொடங்கியிருக்கிறது. தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனை அமைந்து இருக்கின்ற அந்தப் பகுதியைச் சுற்றியும் எண்ணூர், மீஞ்சூர், பொன்னேரி, கொடுங்கையூர் போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற நோயாளிகள் இந்த மருத்துவமனையை நாடுகின்ற சூழ்நிலைதான் ஏற்படுகின்றது. மேலும் பாரம் தூக்குபவர்கள், மூட்டை சுமப்பவர்கள், ஆலைத் தொழிலாளிகள், கடுமையான பணிகளைச் செய்பவர்கள், செயற்கையால் ஏற்படும் விபத்து போன்ற உபாதைகளுக்கும், மாரடைப்பு, நெஞ்சுவலி போன்ற இயற்கை உபாதைகளுக்கும், அவசர சிகிச்சைகளுக்கும் G.H., ஸ்டான்லி போன்ற மருத்துவமனைகளை நாடுகின்ற சூழ்நிலை இருப்பதால், காலதாமதத்தின் காரணமாக அவர்களுக்கு நேரத்தில் செய்ய வேண்டிய சிகிச்சை தள்ளிப்போகின்ற சூழ்நிலை ஏற்படுவதால்— மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவு செயல்படுவதாகக் கூறி இருக்கின்றார்கள்— தீவிர அவசர சிகிச்சைப் பிரிவை அந்த மருத்துவமனையிலே ஏற்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் இங்கே சுட்டிக்காட்டியதைப்போல வட சென்னைப் பகுதியிலே ஆலைகள் பல இருப்பதாலே அடிக்கடி விபத்து ஏற்பட்டு, விபத்துக் காயங்களினால் வருகின்ற நோயாளிகளின் எண்ணிக்கை அதிகமாகி, அவர்கள் சின்ன ஸ்டான்லியிலிருந்து ஸ்டான்லி மருத்துவமனைக்கோ



2003 மே 8]

அல்லது நம்முடைய சென்னை பொது மருத்துவமனைக்கோ வர வேண்டிய சூழ்நிலைதான் இப்போது இருக்கிறது. இருந்தாலும் நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சீரிய முயற்சியின் காரணமாக, அரசு புறநகர் மருத்துவமனைகளைத் தரம் உயர்த்துவதற்கு, விரிவுபடுத்துவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையிலே சென்னை, தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையும் நிச்சயமாக விரிவுபடுத்தப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல தீவிர சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்துவதற்கு இந்த அரசு தீவிரமாக முயற்சி செய்யும்.

முற்பகல் 10-10

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சின்ன ஸ்டான்லி மருத்துவமனையானது, 2001 ஆம் ஆண்டு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மருத்துவமனையைப் பார்வையிட வந்தபோது புற நோயாளிகளின் எண்ணிக்கை தினமும் 200-லிருந்து 250 என்ற நிலையும், 100 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக அது இருந்தாலும், உள் நோயாளிகளாக 5-லிருந்து 10 பேர்கூட அங்கே தங்கி சிகிச்சை பெற முடியாதிருந்த நிலையும் இருந்தது. இதை மாற்றி இன்றையதினம் தினசரி சராசரி 1,500-லிருந்து 1,600 நபர்கள் புற நோயாளிகளாகவும், அங்கேயிருக்கிற படுக்கை அறைகள் போதாமல் 100-க்கும் மேற்பட்டவர்கள் உள் நோயாளிகளாகவும் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள். கடந்த 3 தினங்களுக்கு முன்புகூட மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் ஒரு கவன ஈர்ப்புக்கு பதில் அளிக்கின்ற நேரத்திலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள்—இப்படி மருத்துவ சிகிச்சைக்கு உள் நோயாளிகளாக அனுமதிக்கப்படுகிறவர்களுக்கு போதிய படுக்கை வசதிகள் இல்லாததை—கவனத்திற்குக் கொண்டு சென்றவுடன் ரூ. 60 இலட்சம் செலவிலே மேலும் புதிதாக 50 படுக்கைகள் கொண்ட ஒரு அறையை உருவாக்குவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கு நன்றியைக் கூறிக்கொள்கிற அதேநேரத்திலே, இப்படி எல்லா வகையிலேயும் பயனுள்ள இந்த மருத்துவமனையிலே, Intensive Care Ward, Trauma Ward போன்றவற்றை ஏற்படுத்துவதால் ஸ்டான்லி, G.H. போன்ற மருத்துவமனைகளில் ஏற்படுகின்ற நெரிசலும் குறைக்கப்படும்

[2003 மே 8

என்பதால் இந்த ஆண்டிலேயே, இதை ஒரு சிறப்புத் திட்டமாக ஏற்று செயல்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனையில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் புற நோயாளிகளின் எண்ணிக்கை, உள் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருப்பது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல உண்மைதான். நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு எடுத்துக்கொண்டிருக்கிற சிறப்பு முயற்சியின் காரணமாக, அந்த மருத்துவமனையிலே மருத்துவ சேவை சிறப்பாக இருக்கிறது என்பதும் அதறகுக் காரணம். இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில், புறநகர் மருத்துவமனைகள் அனைத்தையுமே விரிவுபடுத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய கொள்கையாக இருக்கிறது. ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல தண்டையார்பேட்டை புறநகர் மருத்துவமனைக்கு மட்டும் ரூ. 60 இலட்சத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு ஒதுக்கி, பல சிறப்புப் பிரிவுகளை அங்கே ஏற்படுத்தி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, மேலும் சில சிறப்புப் பிரிவுகளை ஏற்படுத்துவதற்கு புரட்சித் தலைவியினுடைய அரசு முயற்சிகளை மேற்கொண்டு இருக்கிறது. நிச்சயமாக எதிர்காலத்திலே அப்படிப்பட்ட சிறப்புப் பிரிவுகள் அந்த மருத்துவமனையிலே உருவாக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாக வட சென்னைப் பகுதி மக்களுக்கு அது சிறப்பான மருத்துவ சேவை அளிக்கின்ற ஒரு சிறந்த மருத்துவமனையாக விரிவுபடுத்தப்படும், தாம் உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் தமிழகத்திலே ஆட்சியில் இருந்தபோது சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனைகளிலே ஏற்படக்கூடிய, கூட்ட நெரிசலை, நோயாளிகளுடைய நெரிசலைத் தவிர்ப்பதற்காக இந்த புறநகர் மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டன.



2003 மே 8]

மாண்புமிகு உறுப்பினர் சேகர்பாபு அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல வட சென்னைப் பகுதியிலே தொழிற்சாலைகள் கூடுதலாக இருக்கக்கூடிய அந்தப் பகுதியில் சின்ன ஸ்டான்லி மருத்துவமனைக்குக் கூடுதலான நோயாளிகள் வரக்கூடிய காரணத்தால் தீவிர சிகிச்சைப் பிரிவு, அனைத்து வகையான மருத்துவத்தையும் அந்த மருத்துவமனையிலே பெறுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புவதோடு, மேலும் சென்னை மாநகரத்திலே புறநகர் மருத்துவமனைகளை உருவாக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கே. மகேந்திரன் அவர்கள் சொன்னதைப்போல, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் எந்த நோக்கத்திற்காக இப்படிப்பட்ட புறநகர் மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டனவோ, அந்த நோக்கத்தைப் புரிந்துகொள்ளாமல், கடந்த ஆட்சிக் காலத்திலே—திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே அந்த புறநகர் மருத்துவமனைகளை, அக்கறை இல்லாமல், விரிவுபடுத்தாமல், எந்தவித வசதியும் செய்து தராமல் அப்படியே விட்டுவிட்டார்கள். எனவே மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சி வந்த பிறகுதான் அந்த புறநகர் மருத்துவமனையை விரிவுபடுத்த வேண்டும், அங்கே போதுமான வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும் என்று இப்போது முயற்சிகளை மேற்கொண்டு நம்முடைய சென்னை மாநகரத்திலே இருக்கிற 4, 5 புறநகர் மருத்துவமனைகளை இப்போது விரிவாக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். எனவே இப்போது இருக்கிற புறநகர் மருத்துவமனைகளை விரிவாக்கம் செய்து விட்டு, தேவையான இடத்தில் மாண்புமிகு உறுப்பினர் மகேந்திரன் அவர்கள் சொன்னதைப்போல, புதிதாக புறநகர் மருத்துவமனைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுபற்றிப் பிறகு யோசிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை சின்ன ஸ்டான்லி மருத்துவமனைக்கு அவசரப்

பிரிவு அவசியம் தேவை என்ற கேள்வி வந்து இருக்கிறது. அதேபோல் மன்னார்குடி பகுதியினுடைய தலைமை வட்ட.. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு கேள்வி போடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, இல்லை, பதில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். வட்ட மருத்துவமனைக்கு புதிய மருத்துவமனை கட்டுவதற்கான திட்ட முன்வடிவுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு நிலுவையிலே இருக்கின்றன. தொடர்ந்து அந்தக் கோரிக்கையை நான் வலியுறுத்திக்கொண்டே இருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக இதிலே கவனம் செலுத்துகின்றார்கள் என்றாலும், நிதி ஒதுக்கீடு செய்து அந்தப் பணிகள் இன்னும் தொடங்கப்படவில்லை. அதைவிட அந்த மருத்துவமனைக்கு நேரில் வருவதாக இங்கேயும், திருத்துறைப்பூண்டிக்கும் வருவதாகக்கூட வாக்குறுதி அளித்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எப்போது அங்கே வருகை தந்து, அதைப் பார்வையிட்டு அந்த மருத்துவமனையை அமைத்துத் தருவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியாவது என் வாயிலேயிருந்து உறுதிமொழியை வாங்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் இந்தக் கேள்வியை சம்பந்தம் இல்லை என்று சொன்னாலும், தொகுதி மக்களுடைய நலன் கருதி இங்கே எழுப்பியிருக்கிறார்கள். அவரும் என்னிடம் பலமுறை இந்தக் கோரிக்கையை வைத்து இருக்கிறார்கள். ஏற்கெனவே மன்னார்குடி அரசு மருத்துவமனையை 150 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையாக தரம் உயர்த்தி மேம்படுத்திட முன்மொழிவு அனுப்பப்பட்டு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அப்படிப்பட்ட மருத்துவமனைகளை எல்லாம் தரம் உயர்த்துவதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய அரசு உலக வங்கியினுடைய உதவியை நாடி இருக்கிறது. உலக வங்கி ரூ. 650 கோடியை வழங்குவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறது. இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்புதான் இங்கே உலக வங்கியினுடைய நம்முடைய Country Director மைக்கேல் கார்டர் வந்துவிட்டுச் சென்று இருக்கிறார். அதுவும் இங்கே நம்முடைய மருத்துவமனைகளை, ஆரம்ப சுகாதார நிலைய செயல்பாடுகளை எல்லாம் அவர் நேரிலே பார்த்து





ஆய்வு செய்து மகிழ்ச்சியோடு, அதாவது இந்தச் சேவையை மிகவும் பாராட்டி டெல்லியிலேகூட அவர் பேட்டி கொடுத்து இருக்கிறார். அவர் நிச்சயமாக இந்த ரூ. 650 கோடியை இந்த ஆண்டு இறுதிக்குள் வழங்குவதாக உறுதி அளித்துவிட்டுச் சென்று இருக்கிறார். உலக வங்கியினுடைய இந்த உதவி கிடைத்தவுடன் மன்னார்குடி அரசு மருத்துவமனை, திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனை போன்ற மருத்துவமனைகள் நிச்சயமாக விரிவுபடுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல அமைப்புகளெல்லாம், நம்முடைய மருத்துவர்களுடைய சேவையைப் பாராட்டுகின்ற வகையில், நம்முடைய மருத்துவர்கள் எல்லாம் பணியாற்றுகிற இந்த நிலை குறித்தும், அதேபோல தண்டையார்பேட்டை மருத்துவமனையில்கூட அங்கு இருக்கக்கூடிய தலைமை மருத்துவர் மிகச் சிறப்பாகப் பணியாற்றுகிற அந்தத் தன்மையைப் பற்றியெல்லாம், அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கினார்கள். அப்படிப்பட்ட மருத்துவர்களை, இன்று மருத்துவக் கல்லூரி மாணவர்கள் நியாயமான கோரிக்கைக்குப் போராடிக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், நீங்கள் அவர்களை அழைத்துப் பேசுவீர்களா என்று அறிய விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 404, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**404—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**•28501—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 8

(அ) கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் தொகுதி, வாள்வச்சகோஷ்டம், வட்டம் ஆகிய இடங்களில் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்குரிய நிலம் கையகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மூலமாக நிலம் கையகப்படுத்த திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இந்தக் கேள்விக்கு இடம் இல்லை.

**திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியிலே மக்கள் குறைகளைக் கேட்டு, கிராமம் கிராமமாகச் சென்றபோது, சொந்தமான நிலம் இல்லாமலும், வீடு இல்லாமலும் கஷ்டப்பட்டுவரும் பிற்படுத்தப்பட்ட மக்கள் இலவச வீட்டுமனைப் பட்டா கேட்டு, 500-க்கும் அதிகமான மனுக்களைத் தந்தார்கள். அவற்றைப் பெற்று சம்பந்தப்பட்ட மாவட்ட அதிகாரிகளிடம் கொடுத்தபோது, அவற்றைப் பரிசீலனை செய்ததில் 300-க்கும் மேற்பட்ட நபர்கள், தகுதி உள்ள பயனாளிகள் என்று கண்டறியப்பட்டு உள்ளனர். நிலம் கையகப்படுத்துவதற்குத் தேவையான நிதி அரசிடமிருந்து வரவில்லை. ஆகையால் பிற்படுத்தப்பட்டோருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாது என்று மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியில் வாள்வச்ச கோஷ்டம், வட்டம், கப்பியறை, இரணியல் போன்ற பகுதிகளில் அதிக அளவில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் சொந்த நிலமும், வீடும் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திடும் இலட்சிய நோக்குடன் நல்லாட்சி நடத்திவரும் இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் நடப்பு ஆண்டிலாவது மேற்படி கிராமங்களில் வாழும் மிகவும் பிற்படுத்தப்பட்ட ஏழை மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க, நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கையை மீண்டும் மறுபரிசீலனை



2003 மே 8]

செய்ய முன்வருவார்களா என்பதை மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், இதுவரை சுமார் 1½ இலட்சம் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் இதுகாறும் 4,100 வீடுகள் மட்டுமே பயனாளிகளால் கட்டப்பட்டுள்ளன. இதனை அறிந்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களிலே அடிப்படை வசதிகளான சாலை, தெருவிளக்கு, குடிநீர், கழிவுநீர் போக்கிடம் ஆகியவை இல்லாமையைக் கண்டறிந்து, அவர்கள் வீடுகள் கட்டிக்கொள்ள இயலாத நிலை உள்ளது என்பதை அறிந்தார்கள். இதனைக் கருத்திற்கொண்டு, தமிழ்நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினருக்கு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில், மேலே குறிப்பிட்ட அடிப்படை வசதிகளுக்காக ரூ. 725 இலட்சம் செலவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் இந்த வேலைகள் முடுக்கிவிடப்பட்டிருக்கின்றன. நடப்பு நிதி ஆண்டிலும் இந்தத் திட்டம் தொடரப்பட இருக்கிறது. எனவே இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கு புதிய நிலம் கையகப்படுத்தும் திட்டம் நடப்பு ஆண்டில் இல்லை என்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த வாள்வச்ச கோஷ்டம், வட்டம் போன்ற இடங்களிலே மிகவும் பிற்படுத்தப்பட்டோர் அதிகமாக இருக்கிறார்கள் என்பதைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு இந்த வேலைகளை எல்லாம், அடிப்படை வசதிக்கான — infrastructure — வேலைகள் எல்லாம் முடிந்த பிறகு, வருகின்ற நிதி ஆண்டில் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இந்த நிலையை எடுத்துச் சொல்லி, அடுத்த ஆண்டாவது இதை எடுத்துக்கொள்ள இந்த அரசு சிந்திக்கும் என்பதை உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய, குறிப்பாக,

குமரி மாவட்டத்திலே வீடுகள் கட்டுவதற்கோ அல்லது காலனிகள் அமைப்பதற்கோ அல்லது மாணவர்களுக்கு விடுதிகள் அமைப்பதற்கோ முயற்சிக்கிற நோத்திலே நிலத்தினுடைய சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போய் தடையை வாங்கி பல வருடங்கள் காலதாமதத்தை ஏற்படுத்துகிறார்கள். அரசு வேகமாக அந்த Stay-ஐ vacate பண்ணுவதற்கு அல்லது அந்த நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு வேகமான நடவடிக்கைகளை எடுக்காமல் இருந்துகொண்டிருக்கிறது. இது அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? இல்லையென்றால், இதை உடனடியாக, பிற்படுத்தப்பட்ட மக்களுடைய நலன் பாதிக்கப்படுகிற ஒரு பிரச்சினை என்ற முறையிலே அரசு தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து, வேகமாக இப்படிப்பட்ட தடைகளை அகற்றி நிலத்தைக் கையகப்படுத்தி, அந்த மக்களுக்குச் சேர வேண்டிய நன்மைகளைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு மாண்புமிகு உறுப்பினர் ஹேமச்சந்திரன் அவர்கள் பேசும்போது அதிகமான ஏழை எளிய மக்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் வாழ்கிறார்கள்; ஆகவே அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், கோர்ட்டிலே இருக்கிற தடையாணைகளை எல்லாம் வாபஸ்பெற முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அந்த மாவட்டத்திலே இதுவரை 333 இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பாக வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அங்கே கட்டப்பட்டிருக்கின்ற வீடுகள் 72 தான். மீதியுள்ள இடங்களில்கூட அவர்கள் வீடுகள் கட்டப்படாத நிலையை ஆராய்ந்தால், மற்ற இடங்களுக்கும் அடிப்படை வசதிகளைச் செய்துகொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஆண்டு நிலம் கையகப்படுத்தும் நிலையை நிறுத்திவிட்டு, அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்து, இந்தப் பட்டா நிலங்களில் எல்லாம் வீடுகள் கட்டிய பிறகு எடுக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். கோர்ட்டுகளிலே இருக்கிற வழக்குகளுக்கு விரைவிலே தீர்ப்புகள் கிடைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற, அதிகமாக கையகப்படுத்தப்பட்ட நிலங்களில், கோர்ட்டிலே நிலுவையில் இருப்பது அதிகமாக இல்லை. ஒன்றிரண்டு இருந்தாலும்கூட, அதை இந்த அரசு



வெகுவிரைவிலே முடிவுக்குக் கொண்டுவந்து, அந்த ஏழை எளியவர்களுக்குப் பட்டா வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என்று இந்த நோத்திலே உங்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமாரி மாவட்டத்திலே, ஏற்கெனவே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியதுபோல, பிற்படுத்தப்பட்டவர்கள் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. அங்கிருந்து அவர்கள் தங்களுக்கு பட்டா வழங்கப்பட வேண்டும் என்கிற விதத்திலே கோரிக்கை எதுவும் அரசிடம் வந்திருக்கிறதா? இல்லையென்று சொன்னால், எங்கள் மூலம், அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் மூலம் அந்த மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலே இருந்து ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான மனுக்கள் வருகிற பட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு அந்த ஏழை எளிய மக்களுக்கு முன்னுரிமை அளித்து, பட்டா வழங்குவதற்கு முன்வருமா என்பதையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நான் முதலிலேயே விவரமாக எடுத்துச் சொன்னேன். ஏற்கெனவே வழங்கப்பட்ட பட்டாக்களிலேகூட கன்னியாகுமரி மாவட்டத்தில் இன்னும் 200-க்கும் மேற்பட்ட இடங்களில் வீடுகள் கட்டப்படாமல் இருக்கின்றன. சில இடங்களில் கையகப்படுத்தியும், மேல்முறையீட்டுக்காக நில உரிமையாளர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். அதையும் கையகப்படுத்தி, இந்த ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதோடு, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக்கொள்ளும். இவையெல்லாம் முடிந்த பிறகு, வருகின்ற நிதியாண்டில் நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த அந்த இடங்களில் எல்லாம் ஏழைகளுக்கு மனைப்பட்டா வழங்குவதற்கு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு சிந்திக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மே 8

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா எண் 405, திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**405—**

**கண்காணிப்பு மையம்**

***13240—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் வாகனப் புகை கண்காணிப்பு மையம் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வாகனப் போக்குவரத்து அதிகரித்துள்ளதால், காற்று மாசுபடுதலைக் குறைக்க ஒவ்வொரு மாவட்டத்திலும் வாகனப் புகை கண்காணிப்பு மையம் விரைவில் தொடங்குவதற்கான திட்டம் அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டின்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த வாகனப் புகையால் ஏற்படும் கொடிய நோய்களைத் தடுக்கும் வகையில், மாவட்டங்களில் வாகனப் புகை கண்காணிப்பு மையங்கள் அமைக்க அவசியம் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில், சென்னையில் கணினி வாகனப் புகை சோதனை மையங்கள் தொடங்கப்பட்டன. அதைப்போல அனைத்து மாவட்டங்களிலும் கணினி வாகனப் புகை சோதனை மையங்கள் தொடங்கப்படுமா என்பதையும், இந்த வாகனப் புகை சோதனையில் தேர்ச்சி பெறாத வாகனங்களுக்கு Fitness Certificate அதாவது தகுதிச் சான்றிதழ் கொடுப்பது நிறுத்தப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2003 மே 8]

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சுற்றுச்சூழல் மாசு ஏற்பட வாகனங்கள் வெளியேற்றும் புகை முக்கிய காரணமாக உள்ளது. இன்றைக்கு மனிதர்களுடைய ஆரோக்கியமான வாழ்க்கைக்கு மிக அத்தியாவசியமானது குடிதண்ணீரும், தூய்மையான காற்றும் ஆகும். இதை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை வழங்குவதிலே எவ்வளவு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறார்களோ, அதைப்போல, பாதுகாப்பான, சுத்தமான காற்றை பேணிக் காத்திட வேண்டுமென்று, காற்று மாசுபடுதலைத் தடுத்திட வேண்டுமென்பதற்காக பல அரிய ஆலோசனைகளை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் இப்பொழுது இந்தத் துறை பல அரசுத் துறைகளோடு ஒருங்கிணைந்து காற்று மாசுபடுதலைத் தடுப்பதற்காக குறிப்பாக, வாகனங்களிலிருந்து புகை வெளியேறுதலைத் தடுப்பதற்காக, பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இன்னும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, மற்றும் காவல் துறையோடு இணைந்து, இந்தத் துறை உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதேபோல இன்றைக்கு போக்குவரத்துத் துறை, இந்த வாகனங்கள் குறித்து குறிப்பாக அது தனியார் வாகனங்களாக இருந்தாலும் சரி, அரசுத் துறை வாகனங்களாக இருந்தாலும் சரி, அல்லது அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குச் சொந்தமான வாகனங்களாக இருந்தாலும் சரி, எந்தப் பாகுபாடும் இன்றி அனைத்து வாகனங்களும் புகைக் கட்டுப்பாட்டுச் சான்றிதழ், புகை அளவுச் சான்றிதழைப் பெற வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் இன்றைக்கு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், திண்டுக்கல் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களில் கட்டாயமாக புகை அளக்கும் சான்றிதழ் பெற வேண்டும். அந்தச் சான்றிதழ் இருந்தால்தான், தகுதிச் சான்றிதழ் பெற முடியும் என்று கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மிக விரைவிலே இந்த மாநிலம் முழுவதற்கும் இந்த முறை விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்பதையும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல இன்றைக்கு manual power-ஐ வைத்து அறிந்துகொண்டிருக்கிற புகை அளவுக் கருவி, கணினிமயமாக்கப்படுமா என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். மாண்புமிகு அம்மா அவர்களும் இன்றைக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். புகை அளவுச் சான்றிதழை வழங்கும் அந்தச் சோதனை மையங்களை கணினிமயமாக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களும் உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆகவே அரசு கொள்கை

அளவில் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த ஐந்து மாவட்டங்களைத் தவிர, மற்ற மாவட்டங்களிலும் இந்தத் தகுதிச் சான்றிதழ், புகை அளவுச் சான்றிதழ் பெற வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்படும். அதைப்போல அந்தச் சான்றிதழ் மிக விரைவிலே கணினிமயமாக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்,

**திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியாருக்குச் சொந்தமான வாகனங்களை வாகனப் புகை சோதனைக்கு உட்படுத்துவது போலவே— அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளிலும் வாகனப் புகை வருகின்றது. அந்த வாகனங்களிலும் சோதனை நடக்கிறதா என்பதையும், அதன்மீது எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன என்பதையும், அதிகமான வாகனப் புகையை வெளிவிடக்கூடிய லாரிகள் பல மாவட்டங்களிலிருந்து சென்னைக்குள் நுழையும்போது அது பெரிதும் சென்னை நகரத்தைப் பாதிக்கிறது என்ற சூழ்நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து நம்முடைய மாநிலத்தில் நுழையும்போது அந்த எல்லைகளில்கூட இதுபோன்ற வாகனப் புகை சோதனை மையங்களை அமைக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறேன். புகை அளவுச் சான்றிதழ் பெற வேண்டுமென்று இப்போது குறிப்பிட்ட சில மாவட்டங்களில் கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. மிக விரைவிலே அனைத்து மாவட்டங்களிலும் அந்தச் சான்றிதழ் பெற வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட உள்ளது. அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட உள்ளது. அதேபோல இன்றைக்கு மாநிலம் முழுவதும் எட்டு இடங்களில் நமது மாசு கட்டுப்பாடு வாரியம் புகை அளக்கும் சோதனை மையங்களை நடத்தி வருகிறது. அதேபோல தனியாரும் 210 மையங்களில், இன்றைக்கு புகை அளவுச் சான்றிதழ்களை வழங்கி வருகிறார்கள். ஆகவே இப்போது அந்த அளவிலே, அது வெளி மாநிலத்திலேயிருந்து வருகிற வாகனமாக இருந்தாலும் சரி, Transport வாகனமாக இருந்தாலும் சரி, non-transport வாகனமாக இருந்தாலும்



சரி, அது தனியாருக்குச் சொந்தமான வாகனமாக இருந்தாலும் சரி அல்லது அரசுக்குச் சொந்தமான வாகனமாக இருந்தாலும் சரி, அனைத்து வகை வாகனங்களும் இந்தச் சான்றிதழ் பெற வேண்டுமென்று இன்றைக்கு கட்டாய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஆகவே மிக விரைவிலே அதைக் கணினிமயமாக்குவதற்கும் அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சந்தானம் அவர்கள்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்று மாசுபடாமல் இருப்பதற்கு சீனா போன்ற நாடுகளிலே பேருந்துகள் எல்லாம் மின்சாரத்தின் மூலமாக இயக்கப்படுகின்றன. தமிழகத்தை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்குவதற்காக முயற்சி எடுத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வருடைய இந்த அரசு, அப்படிப்பட்ட திட்டத்தை இந்தியாவிலே முதல் மாநிலமாக மின்சாரத்தின் மூலமாக சென்னையிலே பேருந்துகளை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய வாகனச் சட்டத்தையும் உள்ளடக்கி அனுமதி பெற்றாக வேண்டும். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஆலோசனையைப் பற்றி நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ராதாரவி.

**திரு. ராதாரவி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாசு கட்டுப்பாட்டுக்கு எட்டு மையங்களில் இடம் இருக்கிறது. அதற்கு என்னென்ன கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்பதைப் பற்றிச் சொன்னார்கள். அதற்கு எனது நன்றியைத் தெரிவித்து, அதேபோல பஸ்களில், லாரியும் - நீங்கள் Highways-லே போகும்போது பார்த்தீர்கள் என்றால் overtake பண்ண வேண்டும் என்று கேட்டால், right side signal போடுகிறார்கள். right side signal போட்டால் right side திரும்புகிறார்களா, இல்லையென்றால் overtake பண்ணச் சொல்கிறார்களா என்று தெரியாமல் போனதனாலே, விபத்துகள் நிறைய ஏற்படுகின்றன. அதனாலே licence கொடுக்கும்போதே

right signal போட்டால் அது right திரும்புவதற்காக மட்டும்தான்; overtake பண்ணுவதாக இருந்தால் left side signal போட வேண்டுமென்று சொல்வதற்கு ஓட்டுநர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்கு ஏதாவது திட்டங்கள் அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர் உரிமம் வழங்குவதற்கு முன்பு இப்படிப்பட்ட விதிமுறைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டுமென்று அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதேபோல, ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முன்பு, அவர்களுக்கு உரிய முறையிலே அந்தச் சட்டங்களைப் பற்றியெல்லாம் பயிற்சி அளிக்கப்படுகிறது. அதற்குப் பின்புதான் இப்படிப்பட்ட உரிமங்கள் வழங்கப்படுகின்றன. ஏற்கெனவே நடைமுறையில் இருக்கின்ற வழக்கம்தான் இது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாகனப் போக்குவாத்து அதிகரித்துள்ளதால், ஒவ்வொரு மாவட்டத்திலும் வாகனப் புகைக் கண்காணிப்பு மையங்கள் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே கூறியிருக்கிறார்கள். தற்பொழுது பல்லாயிரக்கணக்கான லாரிகள், டாக்சிகள், டெம்போக்கள் இவையெல்லாம் bye-pass road, ring road ஆகிய பகுதிகளில்தான் அதிமாகச் செல்கின்றன. இதை மனதிலே வைத்து அப்படி அமைக்கப்படுகின்ற கண்காணிப்பு மையங்களை bye-pass road, ring road பகுதிகளிலே அமைப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காற்றை மாசுபடுத்தாமல் சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடுதான் அந்தத் தகுதிச் சான்றிதழ் பெறுவதற்கு முன்பாகவே அந்தந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்களில் இந்தச் சான்றிதழை, புகை அளக்கும் சான்றிதழைப்





பெற வேண்டும் என்று இப்போது கட்டாயப்படுத்துவதற்கு அரசு மூலம் கட்டாய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்தச் சான்றிதழ் பெற்றதற்குப் பின்பு இப்புகையினால் காற்று மாசுபடுவதைத் தடுக்க முடியும். இருந்தாலும் கூட ஆங்காங்கு சோதனை செய்வதன் மூலமாக, மாசுக் கட்டுப்பாடு வாரியம், காவல் துறை மற்றும் போக்குவரத்துத் துறை போன்ற துறைகள் ஆங்காங்கு சோதனைகள் செய்வதன் மூலமாக இப்படிப்பட்ட தவறுகளை, குற்றங்களைக் கட்டுப்படுத்த முடியும். அதனால் இப்படிப்பட்ட நடவடிக்கைகளை அரசு எல்லா இடங்களிலும் National Highways மட்டுமல்ல, தேசிய நெடுஞ்சாலை மட்டுமல்ல, மாநில நெடுஞ்சாலை மற்றும் அனைத்துச் சாலைகளிலும் அப்படிப்பட்ட சோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வாகனப் போக்குவாத்தின் மூலமாக புகைக் கழிவுகளும், வாயுக் கழிவுகளும் அதிக அளவிலே வந்துகொண்டிருக்கின்றன. வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கையை எங்கெங்கு அதிகரிக்க வேண்டி இருக்கிறதோ அங்கெல்லாம் அதிகரிக்க வேண்டும். மேலும் எல்லாப் போக்குவரத்துக் கழகங்களுக்கும் புகை மானிகள் தேவைப்படுகின்றன. இவை எல்லாம் இருந்தால் இந்த மாசு கட்டுப்பாட்டைச் சிறப்பிக்க முடியும். மேலும் காரீயம் இல்லாத 3% அளவு உள்ள Benzyne பெட்ரோல் உபயோகித்தால் இந்தப் புகை அதிக அளவிலே வராது. குறைந்த sulphur உள்ள, எல்.பி.ஜி. போன்ற தூய்மையான பெட்ரோலை எரிபொருளாக உபயோகிப்பதன் மூலம் கண்டிப்பாக புகையைக் கட்டுப்படுத்த முடியும். கோயம்பேடு, கிண்டி போன்ற பகுதிகளிலே இவை இப்போது அமைக்கப்பட்டு இருக்கின்றன. மாநிலத்தினுடைய மற்ற முக்கியமான இடங்களுக்கும் இந்த வசதி விஸ்தரிக்கப்படுமா என்பதை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகை அளக்கும் சோதனை மையங்கள் தனியார் துறை மூலமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அரசு 210 தனியாருக்கு இப்போது அங்கீகாரம் வழங்கி,

அந்த 210 தனியார் நிறுவனங்களும் புகை அளக்கும் சான்றிதழ்களை வழங்கி வருகின்றன. இன்னும் அதை விரிவுபடுத்துவதற்காக யார் அரசை அணுகினாலும் அவர்களுக்கு உரிய தகுதிகள் இருக்குமானால், அவர்களுக்கு அரசு அங்கீகாரம் அளித்து, இப்படிப்பட்ட சோதனைகளைச் செய்வதற்கு அவர்களுக்கும் வாய்ப்புகள் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றபடி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், பெட்ரோலில் வருகிற புகை அளவு சற்றுக் குறைவாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்கள். உள்ளபடியே பெட்ரோல் வாகனங்களுக்கு 3% Volume என்ற அடிப்படையிலே புகை இருக்க வேண்டும். அதேபோல இரண்டு சக்கர வாகனங்களுக்கு 4.5% இருக்க வேண்டும். இப்போது அந்த அளவிற்கு மேல் புகை வந்தால் அவர்களுக்குத் தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட மாட்டாது என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதுபோல, இன்றைக்கு அந்தப் புகை அளப்பதற்கான நிறுவனங்கள் பல்வேறு இடங்களுக்கு விரிவுபடுத்தப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். இந்தத் தனியார் நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் அல்ல; 210 தனியார் நிறுவனங்களும், தமிழ்நாடு அரசு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்குச் சொந்தமான 8 சோதனை மையங்களும் தமிழகத்திலே எந்தப் பகுதியிலே இருக்கிற வாகனங்களையும் சோதனை செய்யலாம். எந்தப் பகுதியிலே இருக்கிற வாகனங்களும் அந்தச் சான்றிதழ் பெறலாம் என்பதால் தனித் தனியாக விரிவுபடுத்த வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் வாகனப் புகை கண்காணிப்பு மையங்கள் 210 இருப்பதாக அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கப் புத்தகத்திலும், அதேபோல இந்த அவையிலும் சொல்லி வருகிறார்கள். அப்படி தனியார் வாகனப் புகை கண்காணிப்பு மையம், ஒவ்வொரு வாகனத்திற்கும் மிக அதிகமான தொகையை வசூல் செய்து சான்றிதழ் அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. கிட்டத்தட்ட 6 இலட்சத்திற்கும் அதிகமான வாகனங்கள் தமிழகத்திலே இருக்கின்றன. அதற்குப்



போதுமான அளவில் இந்த அரசினுடைய புகை அளக்கக்கூடிய கண்காணிப்பு மையங்கள் இல்லை. 210 தனியாருடைய வாகனப் புகை கண்காணிப்பு மையங்கள் போதுமானதாகவும் இல்லை. இந்த அரசுக்கு வாகனத்தின் மூலமாக சுமார் 870 கோடி ரூபாய்க்கு மேல் வாக்கூடிய இந்தத் துறையிலே, மிக முக்கியமாக மாசுபடுவதைத் தடுப்பதற்காக இந்த நிதியாண்டிலே தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களிலும், அதேபோல, அனைத்து தாலுகாக்களிலும் இந்த வாகனப் புகை கண்காணிப்பு மையங்களை கணினி மூலம் தொடங்க அரசு முன்வருமா என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தனியார் மூலமாக 210 சோதனை மையங்கள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பது போதாது, இன்னும் அதிக அளவிலே அவர்களுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, இன்றைக்கு சென்னை நகரிலே 112 மையங்கள் தனியாருக்கும், இதர மாவட்டங்களிலே 98 பேருக்கும், ஆக 210 பேருக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் 12 விண்ணப்பங்கள் அரசினுடைய பரிசீலனையில் இருக்கின்றன. இது போதாது என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் போன்றவர்கள், இன்னும் எத்தனை பேருக்கு புகை சோதனை அளக்கும் கருவிகளுக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று சொல்லி எவ்வளவு பேர் வந்தாலும் அவர்களுடைய தகுதியினுடைய அடிப்படையில் அந்த உரிமம் வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. தனியார் சோதனை மையங்கள் குறிப்பிட்ட அளவுக்கு மேல் கட்டணம் பெறுவதாக ஒரு குற்றச்சாட்டு சொன்னார்கள். நான் அவருக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், அரசு நிர்ணயித்த தொகைக்கு மேல் அந்தச் சான்றிதழ் பெறுவதற்கு தனியார் நிறுவனங்கள், சோதனை மையங்கள் பணம் வாங்கக்கூடாது என்று கடுமையாக அமல்படுத்தப்பட்டு வருகிறது, கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதற்கு மேல் அப்படி யாராவது கூடுதலாகப் பணம் வாங்குகிறார்கள் என்று சொன்னால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால், அவர்களுக்கு

வழங்கப்பட்டிருக்கின்ற உரிமம் உடனடியாக இரத்து செய்யப்படும் என்பதையும் இந்த நேரத்தில் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. இந்தத் துறை ஏராளமான வருவாயைப் பெறுவதால், இன்னும் பல பேருக்கு, இப்படிப்பட்ட நடவடிக்கைகளை விரிவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். காசு மட்டும் முக்கியமல்ல, மாசும் முக்கியம். மாசு கட்டுப்பாடு முக்கியம் என்பதால் காசுபற்றிக் கவலைப்படாமல், மாசு கட்டுப்பாடு, அதிலே கவனம் செலுத்துகின்ற அரசுதான் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை உங்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வினா என் 406, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர்.

**திரு. இ. கணேசன்:** நான் கேட்ட கேள்விக்குப் பதில் இல்லை. இது ஆரம்பிக்கப்படுமா, எவ்வளவு வருமானம் வருகிறது, தாலுகா அளவில் தொடங்கப்படுமா என்று கேட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் வேண்டியதில்லை. கேள்வி நேரத்தில் விவாதம் வேண்டியதில்லை.

**திரு. இ. கணேசன்:** மாசு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகத்தான் ஆரம்பிக்க வேண்டுமென்று சொன்னேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** ஏற்கெனவே பலமுறை பதில் சொல்லியிருக்கிறேன். அதை நீங்கள் கவனிக்கவில்லை. அது தமிழ்நாடு முழுவதற்கும் பொருந்தும், யாருக்கும் குறிப்பிட்டு வட்டார அளவில் இல்லை. மாவட்ட, வட்டார போக்குவாத்து அலுவலகத்திற்கு என்று jurisdiction கிடையாது. நாங்கள் கொடுத்திருக்கிற அனுமதி தமிழகம் முழுவதற்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்த கேள்வி. வினா எண் 406, செல்வி சி. கனகதாரா, மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர்.



**406—**

## புதிய பேருந்துகள்

***15322—செல்வி சி. கனகதாரா:**

மாண்புமிகு போக்குவாத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டத்தில் ஓடும் பெரும்பான்மையான அரசுப் பேருந்துகள் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பழுதடைந்துள்ள பேருந்துகளுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் இயக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்திற்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் 150 பேருந்துகள் வாங்க உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதில் 51 பேருந்துகளுக்கு மட்டுமே ஆணை வழங்கப்பட்டு, 51 புதிய அடிச்சட்டங்கள் வாங்கப்பட்டு கூண்டு கட்டும் பணி முடிக்கப்பட்டு பழைய பேருந்துகளுக்குப் பதிலாக 51 புதிய பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், 10 புதிய அடிச்சட்டங்கள் வாங்குவதற்கு தற்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியார் சிந்தனை போல் துணிவான ஆட்சி, அறிஞர் அண்ணா சிறப்புரை போல் துடிப்பான ஆட்சி புரிந்துவரும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மாவின் சிரடி கமலப் பாதங்களைத் தொட்டு வணங்குகின்றேன். வேலூர் மாவட்டத்திற்கு கடந்த ஆண்டு 150 புதிய பேருந்துகள் வாங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டதில் 51 புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு சாலைகளில் இயங்குவதாகவும், மேலும், 10 புதிய பேருந்துகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்காக எனது சார்பாகவும், என் தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும்,

[2003 மே 8

வேலூர் மாவட்டத்திற்கு. குறிப்பாக பேரணாம்பட்டு தொகுதிக்கு அதிக அளவு பேருந்துகள் தேவைப்படுவதால் ஏற்கெனவே வாங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 150 பேருந்துகளில் மீதமுள்ள 89 பேருந்துகளை நடப்பாண்டில் வாங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. வேலூர் அரசுப் போக்குவாத்துக் கழகத்தில் 836 பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அவற்றிலே இப்போது பழுதடைந்து, வயதான பேருந்துகள் என்று கணக்கிடப்பட்டு, மாற்றப்பட வேண்டுமென்று கணக்கிடப்பட்டவை 150. அவற்றுக்குப் பதிலாக புதிய பேருந்துகள் வாங்க கொள்கையளவிலே முடிவு செய்யப்பட்டுள்ளது. அதிலே ஒரு கட்டமாகத்தான் 51 புதிய பேருந்துகள் வாங்கி, இப்போது ஓடிக்கொண்டிருக்கின்றன. அடுத்த கட்டமாக 10 புதிய அடிச் சட்டங்கள் வாங்குவதற்கு இப்போது ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. மீண்டும் தேவைக்கேற்ப அந்தப் போக்குவாத்துக் கழகத்தினுடைய நிதிநிலைக்கேற்ப படிப்படியாக அதுபற்றி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு இன்னும் கூடுதலாக புதிய அடிச் சட்டங்கள் வாங்குவதற்காக, புதிய பேருந்துகள் இயக்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், போக்குவாத்துக் கழகம் முழுமையாக தனியார்மயமாக்கப்படாது என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த மாமன்றத்திற்கு அறிவித்தார்கள். ஆகவே பேரணாம்பட்டு தொகுதிக்கு கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படுவதற்கு - குறிப்பாக, பேரணாம்பட்டு to பெங்களூர் 444, பேரணாம்பட்டு to தங்கவயல் 87, பேரணாம்பட்டு to சென்னை 84 ஆகிய தடங்களில் கூடுதலாகப் பேருந்துகள் இயக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல நிதிநிலைக்கேற்ப புதிய பேருந்துகள் வாங்குவதற்கு அரசு முடிவு



2003 மே 8]

செய்கின்றபட்சத்தில், கூடுதலாக இன்னும் புதிய பேருந்துகள் வாங்குகின்ற நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவோடு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஒரு பேருந்தை வாங்கி எத்தனை ஆண்டுகளுக்குப் பயன்படுத்திய பின்னால் அது ஏலத்திற்கு விடப்பட்டு, பிறகு புதிய பேருந்துகளை வாங்குகின்றன? வேலூர் மாவட்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற அரசுப் போக்குவாத்துக் கழகத்தில் இருக்கக்கூடிய 836 பேருந்துகளில், எத்தனை பேருந்துகள் 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்பட்டு, இப்போது பழைய பேருந்துகளாக மாறி புதிய பேருந்துகள் புகுத்தப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதான பேருந்துகள் அங்கே கூடுதலாக இருந்தாலும்கூட, தினந்தோறும் அவை நல்லமுறையில் பராமரிக்கப்பட்டு வருவதன் மூலமாக 100 சதவிகிதம் அந்த 836 பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். 5 ஆண்டுகளுக்கு மேலுள்ள பேருந்துகள் எத்தனை என்று கேட்டார்கள். 5 ஆண்டுகளுக்கு மேலுள்ள பேருந்துகள் 354, 6 ஆண்டுகளுக்கு மேல், 7 ஆண்டுகளுக்கு மேலுள்ள பேருந்துகள் 305. வயதான பேருந்துகள் என்ற அடிப்படையிலே பேருந்துகள் மாற்றப்படுவதில்லை. அதனுடைய mechanical condition— ஓட்டுத் திறனைப் பொறுத்த அளவிலேதான் அந்தப் பேருந்துகள் மாற்றப்படுகின்றன. அந்த வகையிலே வயதான பேருந்துகளாக இருந்தாலும்கூட தகுதியின் அடிப்படையில் சரியாகப் பராமரிக்கப்படுவதன் மூலமாக அந்தப் பேருந்துகள் சிறப்பாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வில்வநாதன்.

[2003 மே 8

**திரு. இரா. வில்வநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு பல்வேறு வழித் தடங்களில் இருந்துவந்த பழைய பேருந்துகளை அகற்றி புதிய பேருந்துகளாக வெகுவிரைவிலே மாற்றி வருகிறார்கள். அந்த வகையிலே வட ஆற்காடு, வேலூர் மாவட்டத்தைப் பொறுத்த அளவிலே 51 பேருந்துகள் புதியதாக பல்வேறு வழித் தடங்களிலும் விடப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். இருந்தபோதிலும்கூட அந்தச் சாலைகளிலே தனியார் வழித்தடங்களில் செல்கின்ற பேருந்துகள் புதியனவாகவும், அரசுப் பேருந்துகள் பழுதடைந்த நிலையிலே, பாழ்பட்ட நிலையிலேயும் செல்வதால், வசூல் குறைவாகவும், அந்தப் பேருந்துகளிலே பயணிகள் பயணிப்பதற்கும் ஒரு தடை ஏற்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டும் அப்படிப்பட்ட கிராமப்புற வழித்தடங்களிலே, அரசுப் பேருந்துகள் புதியதாக வாங்கப்பட்டு அங்கு புதிய பேருந்துகளை விட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைமைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகள் வாங்குகின்றபோது, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு ஏற்று, தனியார் பேருந்துகளை இயக்கக்கூடிய அப்படிப்பட்ட இடங்களிலே, போட்டி மனப்பான்மையோடு, ஒரு ஆரோக்கியமான போட்டி மனப்பான்மையோடு, அவர்களுக்கு ஈடுகொடுக்கின்ற வண்ணம் அந்தப் பகுதிகளிலே புதிய பேருந்துகள் விடுவதைப்பற்றி அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.எஸ். சந்திரசேகரன்.

**திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஏழை மக்கள் எல்லாம் அன்றாடம் அந்தப் பகுதிகளிலே செல்கின்ற டவுன் பஸ்களில் பயணம் செய்கின்றார்கள். அந்த டவுன் பஸ்களை எல்லாம் பார்க்கின்றபோது, அந்த மக்கள் அவற்றைப் பயன்படுத்துவதில்கூட சிரமத்துடன் பயன்படுத்தி வருகிறார்கள் என்ற சூழ்நிலையை மாற்றி மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய



2003 மே 8]

அரசு அந்த டவுன் பஸ்கள் செல்கின்ற வழித்தடங்களில் எல்லாம் புதிய பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகள், அவை நான்கு வயது உடைய பேருந்துகளாக இருந்தாலும் சரி, ஐந்து வயது அல்லது ஏழு வருடங்களுக்கு மேல் இருந்தாலும்கூட, mechanical condition என்று சொல்லக்கூடிய அளவிலே, தகுதியின் அடிப்படையிலே மிகச் சிறப்பாக அந்த வாகனங்கள் பராமரிக்கப்படுவதன் மூலமாக கிராமப்புறங்களிலே ஓடிக்கொண்டிருக்கின்ற நகரப் பேருந்துகள் கூட, இப்போது நிற்காமல் 100 சதவீதம் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிய பேருந்துகள் விட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நான் ஏற்கெனவே சொன்னதுபோல் புதிய பேருந்துகள் வாங்குகின்றபோது, நிதி நிலைமைக்கு ஏற்ப, அந்த வழித்தடங்களில் புதிய பேருந்துகள் விடுவதுபற்றி அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நிதிநிலை அறிக்கையில் 2,000-த்திற்கும் மேற்பட்ட பேருந்துகள் புதிதாக வாங்கப்படும் என்று அறிவித்திருந்தீர்கள். அப்படி புதிய பேருந்துகள் வாங்கினீர்களா? அப்படி வாங்கி, அவை எந்தெந்த மாவட்டங்களுக்கு, எவ்வளவு பேருந்துகள் தரப்பட்டன என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மானியக் கோரிக்கையிலேயே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். ஏற்கெனவே 1,550 புதிய பேருந்துகள் வாங்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருந்தார்கள். அதனுடைய அடிப்படையிலே ஏற்கெனவே 1,316 பேருந்துகள் வாங்கப்பட்டு, இப்போது புதிய பேருந்துகள் அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களிலும் இயக்கப்பட்டு வருகின்றன.

அடுத்தபடியாக, இப்போதும் 531 பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு நடவடிக்கையிலே இருக்கின்றது. அந்தந்தப் போக்குவரத்துக் கழகத்தினுடைய நிதி நிலைமைக்கு ஏற்ப அந்தப் புதிய பேருந்துகள் வாங்கப்பட்டு பிரித்து வழங்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ச. ராமராஜ்.

**திரு. ச. ராமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலிருந்து போடிநாயக்கனூர், கம்பம் பகுதிகளுக்கு கிட்டத்தட்ட 530 கிலோமீட்டர் தூரம் இருப்பதால், எங்களுடைய பகுதியிலிருந்து வரும் பேருந்துகள் மிகப் பழமைவாய்ந்த பேருந்துகளாக இருக்கின்றன. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இரண்டு தடவை கோரியிருந்தேன். ஆதலால் மிகத் தூரம், அதாவது 530 கிலோமீட்டர் தூரம் உள்ள - இடைவெளி இருப்பதால்-மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் புதிய பேருந்துகளை விடுவதற்கு ஆணை இடுவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே நேரில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, தொலை தூரத்திலேயிருந்து வருகின்ற பேருந்துகள் என்பதால், அந்தப் பேருந்துகளை மாற்றிவிட்டு, மிகப் பழமையான பேருந்துகளை மாற்றிவிட்டு, ஓரளவு நடுத்தர வயதுடைய பேருந்துகளை அந்தப் பகுதிகளிலே ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதோடு மட்டுமல்ல. (குறுக்கீடு) அதாவது நடுத்தரம் என்றால் Old age bus-ம் கிடையாது, புதிய பஸ்ஸும் கிடையாது. இளமையும் இல்லை; முதுமையும் இல்லை, அதுதான் நடுத்தரம்.

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏறத்தாழ திரு. சி. ஞானசேகரன் வயதுள்ள பேருந்து. (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** அப்படிப்பட்ட பேருந்துகளை, mechanical condition-உடன் நல்ல தகுதியுடைய பேருந்துகளை அந்தப்



பகுதியிலே இயக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை திருப்தி அளிக்கவில்லை என்று சொன்னால், இன்னும் புதிய பேருந்துகள் வாங்குகின்றபோது அந்த வழித்தடத்தில் புதிய பேருந்துகள் விடுவதற்கு அரசு பரிவுடன் சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 407, டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**407—**

### சர்க்கரை ஆலை

***3976—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைத்துத் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் சிறிய சர்க்கரை ஆலை அமைக்க உத்தேசம் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குளத்தூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைக்கப்படும் உத்தேசம் இல்லை என்று பதிலுரையிலே கூறியிருக்கின்றார்கள். ஆனால் குளத்தூர் தொகுதி மிகவும் பின்தங்கிய தொகுதி. மக்களுக்கு வேலைவாய்ப்பு தரக்கூடிய பெரிய ஆலைகளோ, தொழிற்சாலைகளோ எதுவுமே இல்லை. மக்கள் வேலைவாய்ப்புக்காக வெளியூர் சென்று பிழைத்து வருகின்றார்கள். குளத்தூர் தொகுதியில் அன்னவாசல், குன்றாண்டார் கோயில், விராலிமலை ஆகிய மூன்று ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கி உள்ளன.

இவற்றில் குன்றாண்டார் கோயில், அன்னவாசல் ஆகிய இரண்டு ஊராட்சி ஒன்றியங்களிலும் கரும்பு அதிகமாக பயிரிடப்பட்டு வருகின்றது. எனவே குளத்தூர் தொகுதி மக்களின் நலன் கருதியும், கரும்பு விவசாயிகளின் நலன் கருதியும் தமிழக மக்களின் நலன் காத்துவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நல்லாட்சியில் கனிவோடு மறுபரிசீலனை செய்து, அடுத்த நிதி ஆண்டிலாவது சர்க்கரை ஆலை அமைக்கப்படுமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்தில் நாள் ஒன்றுக்கு 2,000 டன் அரவைத் திறன் கொண்ட புதிய சர்க்கரை ஆலை E.I.D. Parry என்ற தனியார் நிறுவனத்தால் நிறுவப்பட்டு இயங்கி வருகிறது. இந்தச் சர்க்கரை ஆலையில் முழு அரவைத் திறனுக்கு ஆண்டுக்குத் தேவையான 4,30,000 டன்கள் கரும்பு கிடைப்பதற்கு சிரமமாக இருக்கிறது. இதற்காக சுமார் 15,000 ஏக்கர் நிலத்தில் விளையும் கரும்பு தேவைப்படுகிறது. இந்நிலையில் குளத்தூர் தொகுதியில் சாகுபடியாகும் கரும்பை மட்டுமே வைத்து ஒரு சிறிய சர்க்கரை ஆலை நிறுவ சாத்தியக்கூறுகள் தற்சமயம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சிறிய ஆலைகூட தொடங்கப்படுவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று பதிலுரையிலே கூறியிருக்கின்றார்கள். அடுத்த நிதி ஆண்டிலாவது நிதிநிலைக்கு ஏற்ப குளத்தூர் தொகுதி மக்களின் நலன் கருதி, ஒரு சிறிய சர்க்கரை ஆலையாவது தொடங்கப்பட வேண்டும் என்பதை என்னுடைய பணிவான கோரிக்கையாக வைக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 408, திரு. க. பாரமலை, மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.



**408—**

**காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

***6055—திரு. க. பாரமலை:**

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்திலுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் கடந்த 5 ஆண்டுகளாக காலியாகவுள்ள பணியிடங்களை பணி மூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் திருத்திய ஆள் பலப் பட்டியலைவிட கூடுதலாகப் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். எனவே, திருத்திய ஆள்பலப் பட்டியலின்படி காலியிடங்கள் ஏற்படும்போது பணி மூப்பு மற்றும் கல்வித் தகுதி அடிப்படையில் பதவி உயர்வு வழங்கி நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே ஒரு வருடத்திற்கு முன்பாக இந்தக் கேள்வியைக் கேட்டிருந்தேன். திருத்திய விதிகள்படி அதிகமாக ஆட்கள் இருக்கிறார்கள் என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு முன்பாக காலியிடங்கள் இருந்திருக்கக்கூடும். அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு Representation சரியாக உரிய முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு தகவல் வந்திருக்கிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் நேரடியாக இதை ஆய்ந்து இருக்கின்ற இடங்களிலே, அந்த இடங்களைக் கணக்கிட்டு அதிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பணியிடங்களை வழங்குவதற்கு முயற்சி எடுப்பாரா என்பதை அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள் சொன்ன தகவல் சரியாக இருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுத்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உரிய பணியிடம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 400, திரு. சோ. இராசேந்திரன், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**409—**

## விற்பனை வரி விலக்கு

**•19723—திரு. சோ. இராசேந்திரன்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

முற்பகல் 11-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சரின் பதில் முடிகிற வரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1959, பிரிவு 2(n)-ன்கீழ் உள்ள விளக்கம் I-ன்படி, கூட்டுறவுச் சங்கமும் ஒரு வணிகராகக் கருதப்படும். கூட்டுறவுச் சங்கங்களின் விற்பனைகளுக்கு பொதுவான வரி விலக்கு அளிக்க இயலாது. தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் வரி விலக்கிற்கு விண்ணப்பிக்கும்போது, அக்கோரிக்கையின் தன்மை மற்றும் தேவை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு பரிசீலனை செய்யப்படும்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான வரி விலக்கு அளிக்கப்படாது என்ற பதிலை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். தனிப்பட்ட கூட்டுறவு நிறுவனங்கள் விண்ணப்பிக்கும்போது, அதற்கான வரி விலக்கு பரிசீலனை செய்யப்படும் என்ற ஒரு அறிவிப்பை அறிவித்திருக்கிறார்கள். பொதுவாக கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம், அந்த பால் உற்பத்தியோடு இணைந்து அந்தத் தொழில், மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்களிலே பால் கொள்முதல் செய்தது போக, அதிகமாக உள்ள பால் உற்பத்தி என்ற அடிப்படையிலே அதனோடு இணைந்த



2003 மே 8]

தொழிலான அந்தக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்தில் ஒரு தேநீர் விடுதியோ அல்லது மிகுதியாக உற்பத்தி செய்யப்படுகின்ற பாலிலே பால்கோவா தயாரிப்பு போன்ற இந்த உப தொழில்களுக்கு வணிக வரியாக கிட்டத்தட்ட பால் கோவா தயாரிப்பதற்கு 12 சதவீதம் என்ற அடிப்படையிலேயும், தேநீர் விடுதிகளுக்கு 8 சதவீதம் என்ற அடிப்படையிலேயும் வரி விதிக்கப்படுகிறது. அதற்கும் மேலாக sur-charge என்ற அடிப்படையிலே 5 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அந்தக் கூட்டுறவுச் சங்கம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம், அந்த வரி விதிப்பை கட்டத் தவறும்பட்சத்தில் அதற்கு penalty-யாக வேறு 150 சதம் அளவுக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராசேந்திரன், என்ன கேள்வி என்பதைச் சொல்லுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** வரி வசூலிக்கப்படுகிறது. ஆகையால் எனது தொகுதிக்கு உட்பட்ட எட்டையபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத்திலே இதுமாதிரி வரி விதிப்பதன் மூலமாக அந்தச் சங்கம்-மேன்மேலும் இலாபகரமாக செயல்படுகின்ற அந்தச் சங்கம்-வரி விதிப்புக்கு உட்பட்டு பாதிப்புக்கு உள்ளாகின்றது என்ற அடிப்படையிலே அந்தச் சங்கத்தின் மூலமாக பல்வேறு தடவைகள் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே அதைப் பரிசீலித்து ஆவன செய்வாரா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்கள் மற்றும் குழந்தைகள் பயன் பெறும் வகையில், தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்துடன் இணைக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்களில் இரண்டு மாதங்கள் வரை பால் கெடாமல் இருக்கும் வண்ணம் Tetra Pack-ல் அடைத்து வைக்கப்படும் பாலுக்கு 28-8-2001 முதல் வரி விலக்கு அளித்து, மாண்புமிகு இதய தெய்வம் அம்மாவினுடைய அரசு ஆணையிட்டுள்ளது. இதேபோன்று மேற்கூறிய மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டதன் தன்மைகளை ஆய்ந்து அதனுடைய தேவைகளைக் கருத்தில்கொண்டு அரசு சிந்திக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2003 மே 8

## *(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்

### (இருபத்தொன்றாவது பட்டியல்)

### பொது ஏலம்

1—

**வினா 21318 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இந்து சமய அறக்கட்டளையின் மடங்கள் மற்றும் கோயில் கட்டடங்களை, பொது ஏல முறையை அமல்படுத்தி வாடகைக்கு விட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கோயில்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் இந்து சமய சட்ட விதிகளின்படி டெண்டர் மற்றும் பொது ஏலமுறை மூலமாகவே வாடகைக்கு விடப்படுகிறது. டெண்டர்/ஏலம் வைத்தும் ஏலம் போகாத மற்றும் 'சுவாதீனம்' போன்ற சட்ட இடர்கள் காரணங்களினால் டெண்டர்/ஏலம் வைக்க இயலாத ஒரு சில இனங்களில் மட்டும் தல அதிகாரிகளின் அறிக்கையைப் பெற்று காரணங்களை கூர்ந்து பரிசீலித்து தவிர்க்க இயலாதது என அறியப்படுபவற்றில் மட்டும் சிறப்பு நேர்வுகளாக தனிப்பட்ட முறையில் நேரடியாக வாடகைக்கு விடப்படுகின்றன. இருப்பினும் இவற்றையும் கூட இயன்றவரை தவிர்த்து டெண்டர்/பொது ஏலம் மூலம்தான் வாடகைக்கு விட வேண்டும் என இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் சார்நிலை அலுவலர்களுக்குத் தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு கண்காணிக்கப்பட்டு வருகிறது. மடங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்களைப் பொறுத்தவரையில் மடங்களுக்கு அறநிலைய சட்டத்தின்படியான குத்தகை விதிகள் செல்லுபடியாகாது. எனவே அச்சொத்துக்கள் பொது ஏலம் மூலம் குத்தகை/வாடகைக்கு விடப்பட வேண்டும் என வலியுறுத்த இயலாது.

*இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2003 மே 8]

2—

### சுகாதார நிலையம்

**வினா 20052 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீஞ்சூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான வசதிகள் இல்லை என்று அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் போதுமான வசதிகள் உள்ளன. மீஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையம் தொடர்பாக எவ்வித புகாரும் பெறப்படவில்லை. இந்த ஆரம்ப சுகாதார நிலையம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

3—

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 23898 — திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் மாவட்டம், கபிலர்மலைத் தொகுதி, கபிலர்மலை ஒன்றியம், சோழசிராமணி ஆரம்ப சுகாதார மையம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

[2003 மே 8

**விடை**-

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சோழசிராமணி கிராம மக்கள்தொகை 1,234 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமம் ஜேடர்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தினைச் சார்ந்தது. இக்கிராமத்திற்கு 3 கி.மீ. தொலைவில் எறையமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையமும், 15 கி.மீ. தொலைவில் திருச்செங்கோடு அரசு மருத்துவமனையும் செயல்படுகிறது. இக்கிராமம் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. கபிலர்மலை ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை 77,417 (1991 கணக்கெடுப்பு) இவ்வூராட்சி ஒன்றியத்தில் மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 1) கபிலர்மலை 2) ஜேடர்பாளையம் 3) வெங்கரை ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் என்ற அடிப்படையில் கபிலர்மலை ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள மூன்று ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. மேலும் இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் சோழசிராமணி கிராமத்திற்கும், எறையமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதாலும், தமிழ்நாட்டின் கிராம மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் 1,111 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதாலும், சோழசிராமணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**4—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா 24671 — திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சியில் புதிதாக கட்டப்பட்டுள்ள இரண்டு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிகளைத் துரிதப்படுத்தி உடன் திறக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



2003 மே 8]

**விடை**-

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமகொண்டஅள்ளி ஊராட்சியில் இராமகொண்டஅள்ளி மற்றும் மலையனூர் ஆகிய இரண்டு துணை சுகாதார நிலையங்கள் டேனிடா திட்டத்தின்கீழ் கட்டப்பட்டு, 24-5-2002 முதல் செயல்பட்டு வருகின்றன. இந்த இரண்டு சுகாதார நிலையங்களிலும் கிராம சுகாதார செவிலியர் 24-5-2002 முதல் தங்கி பணிபுரிந்து வருகின்றனர்.

**5—**

### பெண் குழந்தைகள் பிறப்பு

**வினா 24893 — திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் கொலைத் தடுப்பு மற்றும் தொட்டில் குழந்தைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட பின்பு பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் கொலைத் தடுப்பு மற்றும் தொட்டில் குழந்தைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்ட பின்பு பெண் குழந்தைகள் பிறப்பு விகிதம் சிறிது அதிகரித்துள்ளது.

(ஆ) கடந்த 3 ஆண்டுகளில் ஆயிரம் ஆண் குழந்தை பிறப்புடன் ஒப்பிடுகையில், பெண் குழந்தை பிறப்பு விகிதம் [illegible] கொடுக்கப்பட்டுள்ளது:

| ஆண்டு | பிறக்கும்பொழுது ஆண், பெண் விகிதம் (பெண் குழந்தைகள் விகிதம் ஆயிரம் ஆண் குழந்தைகளுக்கு) |
|---|---|
| 1999-2000 | 862 |
| 2000-2001 | 869 |
| 2001-2002 | 878 |

**6—**

**விடுதி**

**வினா 25156—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை அரசுக் கல்லூரி மாணவியர் விடுதியில் உள்ள எண்ணிக்கையை (இடங்கள்) அதிகப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை அரசுக் கல்லூரி மாணவியர் விடுதியில் மாணவியர் எண்ணிக்கையை அதிகப்படுத்தும் கருத்துரு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

**7—**

**கூடுதல் கட்டடம்**

**வினா 28477—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி யூனியன், வகுரணி அரசு கள்ளர் மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, வகுரணியில் கள்ளர் சீரமைப்பு உயர்நிலைப் பள்ளிதான் உள்ளது. இப்பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறை கட்டடம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் ஆய்வில் இல்லை.

**8—**

**மனமகிழ் மன்றம்**

**வினா 16536—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் மகளிர் மனமகிழ் மையங்கள் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**9—**

**கூட்டுறவுச் சங்கங்கள்**

**வினா 25640—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 8

(அ) சேலம் மாவட்டத்தில் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை உள்ளன?

(ஆ) இதன் மூலம் எவ்வளவு சீருடைகள் தைத்து வழங்கப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் இரண்டு தையல் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. அவை:

1. சேலம் பெண்கள் தையல் தொழில் கூட்டுறவுச் சங்கம், 8/17சி, சன்னதி தெரு, சுப்பிரமணிய நகர், சேலம்-5.
2. ஆத்தூர் ஆதிதிராவிட பெண்கள் தொழில் கூட்டுறவுச் சங்கம், 2-வது காந்தி ரோடு, தெற்கு உடையார் பாளையம், ஆத்தூர், சேலம் மாவட்டம்.

(ஆ) சேலம் மாவட்டம், தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கீழ்க்கண்ட துறைகளுக்கு இலவச சீருடைகள் நடப்பு ஆண்டில் தைத்து வழங்கப்பட்டுள்ளன:

| வ.எண் | துறை | சீருடை எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | சத்துணவுத் திட்டம் | 5,12,942 |
| 2. | ஆதிதிராவிடர் நலம் | 65,631 |
| 3. | பிற்படுத்தப்பட்டோர் நலம் | 1,008 |
| 4. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலம் | 4,456 |
| | மொத்தம் | 5,84,037 |

10—

## இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்தோர்

**வினா 19629—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

(அ) இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை தமிழ்நாட்டில் உள்ளன?

(ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) இரண்டாம் உலகப் போரில் பணிபுரிந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் எத்தனை தமிழ்நாட்டில் உள்ளன? | பாதிக்கப்பட்டோர் இல்லை. பணிபுரிந்த வீரர்கள் 32,451 பேர்கள் |
| (ஆ) அவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் எவ்வளவு? | ஓய்வூதியம் வழங்கப்படுவதில்லை. கொடி நாள் நிதியிலிருந்து, சிவில் ஓய்வூதியம் பெறாத, உலகப் போர் வீரர்களுக்கு மாதம் ரூ.500/-ம் அவர்களின் விதவையர்களுக்கு மாதம் ரூ.300/-ம் ஆயுட்கால நிதியுதவியாக வழங்கப்படுகிறது. |

11—

## நியாய விலைக் கடைக் கட்டடம்

**வினா 15515—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, விளாரிப்பட்டு கிராமத்தில் பொது விநியோகக் கடைக் கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், இக்கிராமத்திற்கு பொது விநியோகக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் ஒன்றியத்தில் முளகிரிப்பட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகைக் கட்டடத்தில் 92 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதி நேரக் கடை இயங்குகிறது. பகுதி நேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டுமென்று வரையறை வகுக்கப்பட்டுள்ளது. இருப்பினும், விளாரிப்பட்டு ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் தகுதியான நிலம் தேர்வு செய்து நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

**12—**

**முழுநேர நியாய விலைக் கடை**

**வினா 31564—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, உதயம்பாக்கம் என்ற ஊரில் இயங்கும் பகுதி நேர நியாய விலைக் கடையினை முழு நேர நியாய விலைக் கடையாக மாற்ற அரசு ஆணை பிறப்பிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை-**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், பொன்விளைந்த களத்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 256 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வந்த உதயம்பாக்கம் பகுதி நேர நியாய விலைக் கடை 4-2-2003-ஆம் நாளிட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் ஆணைப்படி, தீபம்/மல்லிகை களஞ்சியம் மகளிர் சுய உதவிக் குழு மூலம் நடத்தப்பட்டு வருகிறது.



இக்கடையுடன் வேறு பகுதி குடும்ப அட்டைகளை இணைக்க வாய்ப்பில்லாததால், உதயம்பாக்கம் பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற வாய்ப்பில்லை.

**13—**

**முழு நேர நியாய விலைக் கடை**

**வினா 31565—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, பொன்பதிர்கூடம் என்ற ஊரில் பகுதி நேர நியாய விலைக் கடை இயங்குவதை முழு நேரக் கடையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், சாலூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி கட்டுப்பாட்டில் 223 குடும்ப அட்டைகளுடன் இயங்கும் பொன்பதிர் கூடம் பகுதி நேர நியாய விலைக் கடை சரிவர இயங்காததால், கங்கை அம்மன் களஞ்சியம் மற்றும் கங்கை அம்மன் மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம், இக்கடையை நடத்தும் பொருட்டு, 5-2-2003 ஆம் நாளன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரால் ஆணையிடப்பட்டு, தற்போது மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடையோடு வேறு பகுதி குடும்ப அட்டைகளை இணைப்பதற்கு வாய்ப்பில்லாததால், 223 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள பொன்பதிர்கூடம் பகுதி நேரக் கடையை முழு நேரக் கடையாக மாற்ற வாய்ப்பில்லை.

14—

**மயான வசதி**

**வினா 3898—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், எஸ். கைகாட்டி பகுதியில் மயான வசதி ஏற்படுத்தித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், எஸ். கைகாட்டி பகுதியில் மயான வசதி ஏற்படுத்தும் பணி, நீலகிரி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ. 1.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ளது.

15—

**வீடுகள் பழுதுபார்த்தல்**

**வினா 4128—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், பூலாம்பட்டி, மோளப்பாறை அருந்ததியர் காலனியில் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட அரசு வீடுகள் பழுதடைந்துள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு ஏதும் இல்லை.



16—

**தொகுப்பு வீடுகள் பழுது நீக்குதல்**

**வினா 6432—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், பாண்டி ஊராட்சி, செம்பியமங்கலம் மற்றும் கீழம்பெருமழை ஊராட்சி, பாப்பான் கோட்டகம் ஆதிதிராவிடர் நலக் குடியிருப்புக் காலனி வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால், அக்காலனி வீடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் தற்போது ஏதும் நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரிசெய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

17—

**வீடுகள் ஒதுக்கீடு**

**வினா 11310—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் அருந்ததியர்களுக்கு வீடுகள் அதிக அளவில் ஒதுக்கீடு செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2003 மே 8

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்டறம்பள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஊராட்சிகளில் வாழும் ஆதிதிராவிடர்/அருந்ததியர்களுக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் 172 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**18—**

**தார்ச் சாலை**

**வினா 11791—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, மேலச்செவல் பேரூராட்சி—கொழுமடை சாலையில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், மேலச்செவல் பேரூராட்சிப் பகுதியில் உள்ள கொழுமடை சாலையில் 2001-2002 ஆம் ஆண்டு தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் 2.20 இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

**19—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 11794—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

சேரன்மகாதேவி பேரூராட்சி, திலகர் தெருவில் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி பேரூராட்சியின் திலகர் தெரு 135 மீட்டர் நீளம் ஆகும். இங்கு சுமார் 300 மக்கள் வசித்து வருகிறார்கள். தார்ச் சாலை அமைக்கப் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணியை மேற்கொள்ள இயலாது.

**20—**

**தெரு விளக்குகள்**

**வினா 12133—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் அருந்ததியர் மேல்பகுதி, ஆனந்த பொன் நகர், கலெக்டர் ஆபிஸ் பின்புறம் பகுதி ஆகிய இடங்களில் தெரு விளக்குகள் அமைக்க அரசு உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேரன்மகாதேவி பேரூராட்சியில் அருந்ததியர் மேல் பகுதியில் 3 குழல் விளக்குகளும், ஆனந்த பொன் நகர் பகுதியில் 4 குழல் விளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. இதுவே போதுமானது.

(ஆ) நிதிநிலை சீரானபின் 2003-2004 ஆம் ஆண்டில் இரண்டு தெரு விளக்குகள் துணை ஆட்சியர் அலுவலகம் பின்புறம் பகுதியில் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2003 மே 8

21—

## குடிநீர் வசதி

**வினா 13190—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை சோலையார் டேம் அருகில் உள்ள இடக்கரை வலக்கரை பகுதியில் குடிநீர் வசதி செய்ய நடவடிக்கை எப்போது எடுக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட இடதுகரை பகுதியில் தரைமட்டத் தொட்டி கட்டி பைப் லைன் விரிவுபடுத்தப்பட்டு, வேலைகள் முடிக்கப் பெற்று, 6 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யபபடுகிறது. அதுபோல் வலதுகரை பகுதியிலும் பைப் லைன் போடப்பட்டு, 4 பொதுக் குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவை தவிர மேற்படி பகுதிகளில் இரண்டு ஆழ்துளைக் கிணறுகளில் கைப்பம்பு அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது.

22—

## ஆழ்துளைக் கிணறு

**வினா 13440—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பொச்சாரம்பட்டி கிராமத்திற்கு கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், பொச்சாரம்பட்டி குடியிருப்பில் மூன்று கையிறைப்பான்



2003 மே 8]

திட்டங்கள் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்புத் திட்டம் ரூ. 3.50 இலட்சம் மதிப்பீட்டில் 1986 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது. இக்குடியிருப்பிற்கு தற்போதுள்ள குடிநீர்த் திட்டங்களே போதுமானதாக உள்ளது. எனவே அப்பகுதியில் கூடுதலாக ஆழ்துளைக் கிணறு அமைக்க தேவை எழவில்லை.

23—

## சாக்கடை, திண்காரை வசதி

**வினா 14971—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் பேரூராட்சியில் சாக்கடை வசதிகள் மற்றும் தெருக்களுக்கு திண்காரை சாலைகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை-**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) பேரூராட்சிகளில் திண்காரை சாலை அமைக்க அரசு தற்போது தடை செய்துள்ளதால் திண்காரை சாலை அமைக்க இயலாது. மேலும் பெண்ணாகரம் பேரூராட்சியில் சாக்கடை வசதி செய்ய ரூ. 24.00 லட்சம் செலவாகும் என்பதால் பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணி மேற்கொள்ள இயலாது.

24—

## சமத்துவ மயானம்

**வினா 15852—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்கலம் ஊராட்சி, அல்லிகுளம் கிராமத்தில் சமத்துவ மயானம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை-

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சமத்துவ மயானம் அமைக்க நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் தற்பொழுது நடைமுறையில் இல்லை.

**25—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா 17085—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், அரசூர் ஊராட்சியிலுள்ள திருச்சிற்றம்பலம் ஆதிதிராவிடர் காலனியில் 1997-98 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகளும் கண்டிராயநல்லூர் ஆதிதிராவிடர் காலனியில் 1998-99 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**26—**

**காலனி வீடுகள் கட்டுதல்**

**வினா 17103—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் குறவர் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆச்சாள்புரம் ஊராட்சி, குறவர் தெருவில் நரிக்குறவர் இனத்தைச் சார்ந்த 8 குடும்பங்கள் உள்ளன. இவர்கள் யாரிடமும் வீட்டுமனை பட்டாக்கள் இல்லை. எனவே மேற்படி தெருவிற்கு காலனி வீடுகள் கட்டிக் கொடுக்க வாய்ப்பில்லை.

**27—**

**பழுது பார்த்தல்**

**வினா 18108—திரு. எஸ்.வி. திரு. ஞானசம்பந்தம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், ஒட்டங்காடு ஊராட்சி நடுமனைக்காடு, மதன்பட்டவூர் நவக்கொல்லைக்காடு ஆதி திராவிடர் தெரு இந்திரா நினைவு தொகுப்பு கான்கிரீட் மற்றும் ஓட்டு வீடுகள் கூரைகளை சரி செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசு திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**28—**

**பள்ளிக் கட்டடம்**

**வினா 19690—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி ஒன்றியம், நடுப்பட்டி பஞ்சாயத்து பெருமாள் கோவில்பட்டியில் இயங்கும் ஒன்றிய ஆரம்பப் பள்ளி ஓடு கட்டடத்தில் உள்ளதை கரும்பலகைத் திட்டத்தின் மூலம் கெட்டிக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நடப்பு நிதியாண்டில் கரும்பலகைத் திட்டம் செயல்பாட்டில் இல்லாததால் கரும்பலகைத் திட்டத்தின்கீழ் பள்ளிக் கட்டடம் கட்ட தற்போது வாய்ப்பில்லை.

**29—**

**தொகுப்பு வீடுகள்**

**வினா 22717—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, வேப்பனூத்து பஞ்சாயத்துக்கு இலவச தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வேப்பனூத்து ஊராட்சியில் ஏற்கெனவே 50 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், 2002-2003 ஆம் நிதியாண்டில் 7 வீடுகள் கட்டிக் கொடுக்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**30—**

**தெருவிளக்கு அமைத்தல்**

**வினா 25750—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சிக்கு தெரு விளக்கு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் 341 குழல் விளக்குகளும் 14 சோடியம் ஆவி விளக்குகளும் 3 மெர்குரி விளக்குகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

(ஆ) கேள்வி எழவில்லை.

**31—**

**தெரு விளக்குகள்**

**வினா 25760—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியிலுள்ள 21 வார்டுகளிலும் தெரு விளக்குகள் போதுமானதாக இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தெரு விளக்குகள் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சியில் 21 வார்டுகளிலும் 597 குழல் விளக்குகளும், 50 சோடியம் ஆவி விளக்குகளும் 6 மெர்குரி விளக்குகளும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இதுவே போதுமானதாகும்.

(ஆ) வினா எழவில்லை.

**32—**

**வீடுகள் கட்டுதல்**

**வினா 25906—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2003 மே 8

(அ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் வருவாய் கிராமம், மோதுரமலை பகுதியிலுள்ள பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், களியல் மற்றும் பொன்மனை கிராமங்களுக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் பழங்குடியினருக்கு 2000-2001 ஆம் ஆண்டில் 47 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**33—**

### வீடுகள் கட்டிக் கொடுத்தல்

**வினா 16591—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முடிய தமிழகத்தில் வீட்டுவசதி வாரியம் மூலம் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) இதில் எத்தனை வீடுகள் பொது மக்களுக்கு வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

| | |
|---|---|
| (அ) அடுக்குமாடி வீடுகள் | 49,745 |
| தனி வீடுகள் | 1,38,934 |
| மொத்தம் | 1,88,679 |

(ஆ) 8,192.



2003 மே 8]

**34—**

### ஓய்வு விடுதி

**வினா 21707—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி நகரில் வீட்டு வசதித் துறை மூலம் ஓய்வு விடுதி கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**35—**

### வீடு கட்டி விற்பனை

**வினா 22827—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் இயற்கை சூழ்ந்த ஆழியார் நகர், சேத்துமடை பகுதிகளில் வீடு கட்டி விற்பனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[2003 மே 8

36—

## குறைந்த விலை வீடுகள்

**வினா 22828—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பிளசின்னம்பாளையம், இங்களக்குறிச்சி ஊராட்சிகளில் இடங்களை வாங்கி வீட்டு வசதி வாரியம் மூலம் குறைந்த விலையில் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

37—

## வீடுகள்

**வினா 25596—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் மூலம் வால்பாறை தொகுதி, ஆழியார் நகரிலுள்ள பல ஏக்கர் காலியிடங்களில் வீடுகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**



2003 மே 8]

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

38—

## வீடு கட்டும் திட்டம்

**வினா 26906—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியில் சேத்துமடையில் உள்ள மக்களுக்கென நீண்ட காலத் தவணை முறையில் வீடு கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

39—

## அடுக்குமாடி வீடுகள்

**வினா 31046—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செஞ்சி பேரூராட்சியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் மக்களுக்கு அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

இல்லை.

**40—**

**பொருட்காட்சி**

**வினா 30923—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) இவ்வாண்டு சேலத்தில் பொருட்காட்சி நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா?*

*(ஆ) ஆம் எனில், கடந்த 5 ஆண்டுகளில் வசூலிக்க முடியாத தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:**

(அ) இந்த ஆண்டு (2003) சேலத்தில் ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் அரசுப் பொருட்காட்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) கடந்த 5 ஆண்டுகளில் சேலத்தில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சியில் அரசுக்குக் கிடைத்த வருவாயும், வசூலிக்கப்படவுள்ள நிலுவைத் தொகையும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. நிலுவைத் தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| ஆண்டு | வசூலிக்கப்பட்ட வருவாய் | நிலுவைத் தொகை |
|---|---|---|
| 1998 | ரூ.60,44,000.00 | ரூ.1,13,930.00 |
| 1999 | பொருட்காட்சி நடத்தப்படவில்லை. | |
| 2000 | ரூ.65,03,000.00 | ரூ.3,52,924.00 |
| 2001 | ரூ.72,45,000.00 | ரூ.90,418.00 |
| 2002 | ரூ.94,91,000.00 | ரூ.1,47,966.00 |





**41—**

**வேட்டி சேலை திட்டம்**

**வினா 5351—திரு. வெ. ஏழுமலை:—** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செஞ்சி தொகுதியிலுள்ள ஏழை எளிய, பின்தங்கிய, மிகவும் பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் இலவச வேட்டி சேலை வழங்கிட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இலவச வேட்டி சேலை திட்டம் கைவிடப்பட்டு மாற்றுத் திட்டமாக மலிவு விலை வேட்டி சேலை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

**42—**

**கொள்முதல்**

**வினா 14744—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*அரசே நூல் கொள்முதல் செய்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கும் திட்டத்தை அரசு கொண்டுவருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான நூல் வகைகள், கைத்தறித் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 14 கூட்டுறவு

[2003 மே 8

நூற்பாலைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, கோ-ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் பல்வேறு நூல் கிடங்குகளுக்கு அனுப்பப்படுகின்றன. பின்னர் பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் கோ-ஆப்டெக்ஸ் நூல் கிடங்குகளிலிருந்து ஆலை வாயில் விலைக்கு நூல் கொள்முதல் செய்து கொள்கின்றன. கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக பிரதம நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நூல் தேவை முழுவதுமாகப் பூர்த்தி செய்யப்பட்டு வருவதால் அரசே நூல் கொள்முதல் செய்து சங்கங்களுக்கு வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்சமயம் இல்லை.

**43—**

### கோ-ஆப்டெக்ஸ்

**வினா 22282—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோ-ஆப்டெக்ஸின் பட்டுப் புடவை சேமிப்புத் திட்டத்தின்கீழ் எவ்வளவு உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர்?

(ஆ) இத்திட்டம் லாபகரமாக நடைபெற்று வருகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டு டிசம்பர் முடிய சேலம் கோ-ஆப்டெக்ஸின் பட்டுப் புடவை சேமிப்புத் திட்டத்தின்கீழ் 73 உறுப்பினர்கள் சேர்ந்துள்ளனர். இதன் மூலம் ரூ.5.61 இலட்சம் அளவிற்கு விற்பனை ஆகியுள்ளது.

(ஆ) இத்திட்டம் லாபகரமாகச் செயல்படுகிறது.

**44—**

### கோ-ஆப்டெக்ஸ்

**வினா 22283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

கோ-ஆப்டெக்ஸின் பட்டுப் புடவை சேமிப்புத் திட்டம் எந்தெந்த கோ-ஆப்டெக்ஸ் பட்டுப் புடவை நிலையங்களில் நடைபெற்று வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

கோ-ஆப்டெக்ஸின் பட்டுப் புடவை சேமிப்புத் திட்டம் தமிழ்நாட்டில் பட்டுப் புடவை விற்பனை செய்யும் 113 விற்பனை நிலையங்களிலும் மற்ற மாநிலங்களில் 19 விற்பனை நிலையங்களிலும் ஆக மொத்தம் 132 விற்பனை நிலையங்களில் நடைபெற்று வருகிறது.

**45—**

### விவசாயம்

**வினா 26919—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு கையகப்படுத்தும் தரிசு நிலத்தில் நெசவாளர்கள் சிறு விவசாயம் செய்து முன்னேற குழு அமைத்து, அரசு உதவி புரிய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) அரசு கையப்படுத்தும் தரிசு நிலத்தை நெசவாளர்களுக்கு விவசாயம் செய்ய அளிக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**46—**

**சமுக்காளங்கள் விற்பனை**

**வினா 27321—திரு. கே.சி. கருப்பணன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானி தொகுதியில் சமுக்காளம் விற்பனையின்றி நெசவாளர்கள் கஷ்டப்படுவதால், இச்சமுக்காளங்களை அரசு வாங்கி விற்பனை செய்ய முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

கோ-ஆப்டெக்ஸ் நிறுவனம் தனது விற்பனை நிலையங்களின் தேவைக்கேற்ப பிரதம சங்கங்களுக்கு உற்பத்தித் திட்டம் வழங்கி அதன்படி நடைபெறும் உற்பத்தியை கொள்முதல் செய்து வருகிறது. மீதமுள்ள உற்பத்தியை சங்கங்கள் நேரடியாக விற்பனை செய்து வருகின்றன. மேலும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் பவானி சமுக்காளம் உட்பட அனைத்து பருத்தி இரக ஜவுளிகளின் விற்பனையை அதிகரித்து சங்கங்களில் உள்ள இருப்பினைக் குறைப்பதற்கு ஏற்கெனவே வழங்கப்பட்டு வரும் 20% தள்ளுபடியை 30% ஆக உயர்த்தி 15-9-2002 முதல் 31-1-2003 வரை சிறப்புத் தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளது. எனவே பவானி சமுக்காளங்களை அரசு மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

**47—**

**மீன்கள் உலர்களம்**

**வினா 20429—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், ஜெகதாப்பட்டினத்தில் மீன்கள் உலர்களம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

ஆம்.

**48—**

**மீன் வளர்ப்பு**

**வினா 27190—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டொன்றிற்கு தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் இறால் மற்றும் மீன்களின் மதிப்பு எவ்வளவு?

(ஆ) இறால் மற்றும் மீன் வளர்க்க புதிய திட்டம் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டிலிருந்து சென்னை மற்றும் தூத்துக்குடி துறைமுகங்கள் வாயிலாக ஏற்றுமதி செய்யப்பட்ட மீன் மற்றும் இறால்களின் மூன்றாண்டுகளுக்கான விவரம் பின்வருமாறு:

| ஆண்டு | துறைமுகங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சென்னை | | தூத்துக்குடி | | மொத்தம் | |
| | எடை (டன்னில்) | தொகை (ரூ.கோடி) | எடை (டன்னில்) | தொகை (ரூ.கோடி) | எடை (டன்னில்) | தொகை (ரூ.கோடி) |
| 99-00 | 25646 | 1050.70 | 17818 | 412.00 | 43464 | 1462.70 |
| 00-01 | 35772 | 1766.07 | 17233 | 498.71 | 53005 | 2264.78 |
| 01-02 | 41516 | 1570.13 | 16966 | 446.27 | 58482 | 2016.40 |

(ஆ) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 15 அம்ச திட்டத்தின்கீழ் மீன்வளத்தை அதிகரிக்கவும், உள்நாடு மற்றும் கடல் நீர் பரப்பில் பலவகை மீன்வளர்ப்பை மேம்படுத்தவும், அதன் மூலம்

[2003 மே 8

மீன் வளர்ப்போர் மற்றும் எளிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தவும் அறிவிப்பு வெளியிட்டார்கள். அதன்படி பாரம்பரிய மற்றும் மேம்படுத்தப்பட்ட பாரம்பரிய இறால் வளர்ப்பு முறையினைப் பின்பற்றி ஒவ்வொரு ஆண்டும் 1000 ஹெக்டேர் கரையோர உவர் நீர் நிலத்தில் பண்ணைகள் அமைக்கப்படும். அவற்றில் இறால் மற்றும் ஏனைய நீர்வாழ் உயிரினம் வளர்க்கப்படும். இவ்வாறு 5 ஆண்டுகளில் 5000 ஹெக்டேர் உவர் நீர் நிலத்தில் பண்ணைகள் அமைக்க உத்தேசிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இதனால் 5 ஆண்டுகளில் 5000 டன் இறால் உற்பத்தி கூடுதலாக செய்ய இயலும்.

49—

### கோடை விழா

**வினா 31769—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சுற்றுலா பயணிகள் வருகையை முன்னிட்டு ஆண்டுதோறும் நடைபெறும் கோடை விழாவை வரும் ஆண்டு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிதி வசதிக்கேற்ப வால்பாறையில் கோடை விழா நடத்துவது குறித்து முடிவு செய்யப்படும்.

50—

### பூங்கா அமைத்தல்

**வினா 31771—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

(அ) வால்பாறையில் பொழுதுபோக்கு வசதியுடன் கூடிய சிறுவர் விளையாட்டுப் பூங்கா ஒன்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பொழுதுபோக்கு வசதியுடன் கூடிய சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

1—

### இருபத்திரெண்டாவது பட்டியல்

### நீதிமன்றங்களுக்கு கட்டடம்

**வினா 9585—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நீதிமன்றங்கள் எத்தனை?

(ஆ) அவை வசதி குறைவான இடங்களில் இயங்கி வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) அவற்றிற்கு அரசு நிரந்தர கட்டடம் கட்டித்தர முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் ஆறு நீதிமன்றங்கள் போதிய அடிப்படை வசதிகளுடன் வாடகைக் கட்டடத்தில் இயங்குகின்றன.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(இ) அரசின் நிதிநிலைமைக்கேற்ப அனைத்து நீதிமன்றங்களுக்கும் படிப்படியாக (Phased manner) கட்டடம் கட்டப்படும்.

2—

**சார்பு நீதிமன்றம், துணை மினி அமர்வு நீதிமன்றம்**

**வினா 29819—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் தொகுதி, இராசிபுரத்தில் சார்பு நீதிமன்றம் மற்றும் மினி அமர்வு நீதிமன்றம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய நிதிநிலை காரணமாக இராசிபுரத்தில் சார்பு நீதிமன்றம் அமைக்கக் கோரும் உயர்நீதிமன்றத்தின் கருத்துரு தற்போதைக்கு தள்ளிவைக்கப்பட்டுள்ளது.

3—

**வழக்குகளின் எண்ணிக்கை**

**வினா 29624—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட தலைமை நீதிமன்றத்தில் 2001-2002-ல் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை என்ன?

(ஆ) நிலுவையிலுள்ள வழக்குகளின் விவரம் என்ன?





**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001 ஆம் ஆண்டில் 7,725 வழக்குகளும், 2002 ஆம் ஆண்டில் 7,411 வழக்குகளும் புதுக்கோட்டை மாவட்ட முதன்மை நீதிமன்றத்தால் தீர்வு செய்யப்பட்டுள்ளன. 30-11-2002-ல் நிலுவையிலுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 1,412 ஆகும்.

4—

**கிளை நூலகத்திற்குக் கட்டடம்**

**வினா 16500—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வான் கோயிலில் இயங்கிவரும் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி வைத்தீஸ்வரன் கோயிலில் இயங்கிவரும் கிளை நூலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலிமனை நாகப்பட்டினம் நூலக ஆணைக் குழுவால் கிரயம் ரூ.30,776/- செலுத்தி பெறப்பட்டுள்ளது. தற்போது இம்மாவட்ட நூலக ஆணைக் குழுவில் கட்டடம் கட்ட போதுமான நிதிவசதி இல்லை. இருப்பினும் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள பொது நிதியினை இம்மாவட்டத்திற்கு பகிர்ந்தளித்து கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2003 மே 8

5—

## கணினி மூலம் பதிவு செய்தல்

**வினா 20100—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த மாவட்ட அரசு மருத்துவமனைகளில் நோயாளிகளின் வருகை குறித்து கணினி மூலம் பதிவு செய்யப்படுகிறது?

(ஆ) இத்திட்டம் தாலுகா மருத்துவ (அரசு) மனைகளுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேறுசார் மற்றும் குழந்தை நலத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உள்ள மாவட்ட மற்றும் வட்ட மருத்துவமனைகளில் நோயாளிகளின் வருகை குறித்து கணினி மூலம் பதிவு செய்யும் பணி விரைவில் தொடங்கப்பட உள்ளது.

6—

## விளையாட்டு விருது.

**வினா 21528—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000 ஆண்டு முதல் இதுவரை தலைசிறந்த விளையாட்டு வீரர், வீராங்கனைகளை கௌரவிக்கும் வகையில் "முதலமைச்சரின் மாநில விளையாட்டு விருது" எத்தனை பேருக்கு அரசு வழங்கி உள்ளது?



2003 மே 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

*2000-2001ல்* 1. எஸ். விஜயலட்சுமி, சதுரங்கம்.

2. எஸ்.திருமால்வளவன், வளைகோல்பந்து.

3. டி.முத்து, பளுதூக்குதல், ஆகிய மூவருக்கும்.

*2001-2002-ல்* யாரும் தகுதி பெறாததால் வழங்கப்படவில்லை.

*2002-2003-ல்* வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

7—

## உடற்பயிற்சி மையங்கள் அமைத்தல்

**வினா 21540—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் எத்தனை புறவிளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2000-2001 ஆம் நிதியாண்டில் 33 விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டன. எனவே தற்போது புறவிளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மையங்கள் அமைக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

8—

## இலவச பால்

**வினா 24910—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி மருத்துவமனை உள்நோயாளிகளுக்கு இலவசமாக பால் வழங்கப்படுகிறதா?

(ஆ) அதற்காக மாதந்தோறும் வழங்கப்படும் தொகை எவ்வளவு?

(இ) அந்தத் தொகைக்கு அரசு கட்டுப்பாடு உண்டா? அல்லது தேவைக்கேற்ப வழங்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். எட்டயபுரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளுக்கு நோயின் தன்மைக்கேற்ப தினசரி பால் மற்றும் உணவு ஆகியவை இலவசமாக வழங்கப்படுகிறது.

(ஆ) மற்றும் (இ) ஒட்டுமொத்தமாக நோயாளிகளின் உணவுக்கான நிதி ஒதுக்கீட்டின்கீழ் (Budget allotment under— "Diet" "Head of Account") உணவுப் பொருட்கள் மற்றும் பால் ஆகியன கொள்முதல் செய்யப்பட்டு நோயாளிகளுக்கு வழங்கப்படுகிறது. பாலுக்கென, தனியாக நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை. உள் நோயாளிகளுக்கு நோயின் தன்மை மற்றும் அவர்களின் வயதின் அடிப்படையில் அரசு நிர்ணயித்துள்ள அளவில், உணவுடன் பால் வழங்கப்படுகிறது. இதற்கான செலவுக்கு வேறு உச்சவரம்பு ஏதும் இல்லை.

**9—**

**சாரண, சாரணியர் இயக்கம்**

**வினா 25615—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் சாரண, சாரணியர் இயக்கத்தில் கூடுதலாக மாணவ, மாணவிகளை சேர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேர்?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சாரண, சாரணியர் இயக்கத்தில் மாணவ, மாணவியர்கள் சேர்க்கை:

2000-2001 ஆம் ஆண்டில் 1,01,081 எனவும்,

2001-2002 ஆம் ஆண்டில் 1,56,337 எனவும்,

2002-2003 ஆம் ஆண்டில் இரண்டு இலட்சமாக உயர இலக்கு நிர்ணயிக்கப்பட்டு முதற்கட்டமாக சாரண ஆசிரியர்/ஆசிரியைகளுக்கு அதிக அளவில் மாவட்டந்தோறும் பயிற்சி முகாம்கள் நடத்தப்படுகின்றன.

**10—**

**கரும்பலகைத் திட்டம்**

**வினா 26978—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை தொகுதியில் கரும்பலகைத் திட்டத்தின் மூலம் நிறைவேற்றப்பட்ட பணிகளின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித்துறை அமைச்சர்:**

கரும்பலகைத் திட்டம் 4-ம் கட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 105 நடுநிலைப் பள்ளிகளும், 11 தொடக்கப் பள்ளிகளும், 5-ம் கட்டத்தின்கீழ் 45 நடுநிலைப் பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 10,000/- மதிப்பில் நூலகப் புத்தகங்களும் ரூ. 20,000/- மதிப்பில் வரைபடங்கள், விளக்கப்படங்கள் மற்றும் மாதிரிகள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. மேலும் 4-ம் கட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் சேமிப்பாக இருந்த தொகையைக் கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட 105 நடுநிலைப் பள்ளிகளுக்கும் பள்ளி ஒன்றிற்கு ரூ.18,000/- மதிப்பில் 10 ஸ்டீல் டெஸ்க் மற்றும் 10 ஸ்டீல் பெஞ்ச் ஆகியவை டான்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டுள்ளன.

11—

## நோய் தடுப்பு

**வினா 28126—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ஸ்டோன்மோர் ஆற்றுப்பாலம் உள்ள பகுதிகளில் ஆட்டு இறைச்சி, பன்றி இறைச்சிகளை ஆற்று நீரில் கழுவுவதால் அசுத்தம் ஏற்பட்டு, அதனால் ஏற்படும் நோய்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை ஸ்டோன்மோர் ஆற்றுப்பாலம் அருகே கடந்த 7 மாதங்களாக நடத்தப்பட்டு வந்த ஆட்டிறைச்சிக் கடை, பன்றி இறைச்சிக் கடை மற்றும் மாட்டிறைச்சிக் கடைகள், பொதுமக்கள் புகார் செய்ததின் பேரில் வால்பாறை பேரூராட்சி செயல் அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு 31-1-2003 முதல் தடை செய்து மூடப்பட்டுள்ளன. தற்போது இப்பகுதியில் இறைச்சிக் கடைகள் ஏதும் இல்லை. இதனால் பொதுமக்களுக்கு நலக்கேடு விளைய சாத்தியமில்லை.

12—

## ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம்

**வினா 29917—திரு. பி. எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை ஆரம்ப சுகாதார நிலையம், 30 படுக்கை வசதிகளுடனும், குடும்ப நலப் பிரிவுடனும், மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையமாக சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

13—

## சுற்றுச்சுவர்

**வினா 31400—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டியில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குச் சுற்றுச்சுவர் கட்டுவதற்கு அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் தற்போது செய்யப்படுவதில்லை. எனவே நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கெஜல்நாயக்கன்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

14—

## பூங்கா, விளையாட்டுப் பயிற்சி மையம்

**வினா 31640—திரு. என். கே. பெருமாள்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பார் கடற்கரையில் பொழுதுபோக்குப் பூங்கா மற்றும் விளையாட்டுப் பயிற்சி அரங்கம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் :**

(அ) விளாத்திகுளம் தொகுதி, வேம்பார் கடற்கரையில் பொழுதுபோக்குப் பூங்கா மற்றும் விளையாட்டுப் பயிற்சி அரங்கம் அமைத்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**15—**

**கணக்கெடுப்புப் பணிகள்**

**வினா 19884—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்புப் பணிகளுக்கு தமிழகத்தில் எவ்வளவு நபர்களை அரசு நியமித்தது?

(ஆ) இதற்காக அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வீடுகள் கணக்கெடுப்புப் பணிக்காக 1,20,968 அலுவலர்களும், மக்கட்தொகை கணக்கெடுப்புப் பணிக்காக 1,05,166 அலுவலர்களும் நியமிக்கப்பட்டனர்.

(ஆ) வீடுகள் கணக்கெடுப்புப் பணிக்கு நியமிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு ரூ.750/-ம் மக்கள்தொகைக் கணக்கெடுப்பின்போது நியமிக்கப்பட்ட நபர் ஒருவருக்கு ரூ.1,500/-ம் மதிப்பூதியம் அளிக்க மத்திய அரசு நிர்ணயித்தது. அதன்படி மதிப்பூதியம் அளிக்கப்பட்டு மாநில அரசினால் செலவு செய்யப்பட்ட தொகை மத்திய அரசிடமிருந்து



திரும்பப் பெறப்பட்டது. இந்தப் பணிக்கு அரசு ஊழியர்களும், ஆசிரியர்களும் மட்டுமே நியமிக்கப்பட்டனர். இந்தப் பணிக்காக 2000-2001 ஆம் ஆண்டில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 26,66,68,811/- ஆகும். 2001-2002 ஆம் ஆண்டில் செலவு செய்த தொகை ரூ. 5,54,08,401/- ஆகும். இதுவரை இப்பணிக்காக மைய அரசு திரும்ப அளித்துள்ள தொகை ரூ.32,20,77,215/- ஆகும். 2002-2003 ஆம் ஆண்டிற்கு ரூ. 1,20,000/- ஒதுக்கீடு செய்யுமாறு மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**16—**

**கடன்**

**வினா 17849—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2000-2001 ஆம் நிதியாண்டில் சொட்டுநீர் பாசனத்திற்காக எவ்வளவு விவசாயிகள் கடன் கேட்டு விண்ணப்பித்து இருந்தார்கள்?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு கடன் வழங்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சொட்டு நீர்ப்பாசனத்திற்கு கடன் கேட்டு விண்ணப்பம் பெறப்படுவதில்லை. மானியம் மட்டுமே வழங்கப்படுகிறது. மத்திய அரசு உதவியுடன் செயல்படும் சொட்டு நீர்ப் பாசன திட்டத்தின்கீழ் சிறு, குறு மகளிர் மற்றும் ஆதிதிராவிட/மலைவாழ் விவசாயிகளுக்கு, சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க மொத்த செலவில் 50 சதம் வரையிலும் (ஹெக்டேருக்கு ரூ. 22,500/-க்கு மிகாமலும்) மானியம் வழங்கப்படுகிறது.

இதர விவசாயிகளுக்கு 35 சதவீதம் மானிய விகிதத்தில் (ஹெக்டேருக்கு ரூ.16,000/-க்கு மிகாமலும்) மானியம் வழங்கப்பட்டு வருகிறது. எடப்பாடி தொகுதியில் 4 விவசாயிகள் தங்களது நிலத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க 2000-2001-ம் ஆண்டில் மானியம் பெற்று பயனடைந்துள்ளனர். மேற்கண்ட 4 விவசாயிகளுக்கு மானியமாக ரூ.41,260/- (பரப்பு 4.80 ஹெக்டேர்) விடுவிக்கப்பட்டுள்ளது.

[2003 மே 8

**17—**

### முழு மானிய நிதி உதவி

**வினா 21574—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளி மின்சாரத்தில் குடிநீர் இறைப்பான்கள் வைக்க சிற்றூராட்சிகளுக்கு முழுமானிய நிதி உதவி வழங்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரங்களை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இல்லை. சூரிய ஒளி சக்தியால் உற்பத்தியாகும் மின்சாரத்தில் குடிநீர் இறைப்பான்கள் வைக்க சிற்றூராட்சிகளுக்கு முழுமானிய நிதி உதவி அளிப்பது பற்றிய திட்டம் ஏதும் தற்போது மாநில அரசின் பரிசீலனையில் இல்லை. மத்திய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகம், சூரிய ஒளி மூலம் இயங்கும் மின்பம்புகளுக்கு அவற்றின் விலையில் 10 சதவீதம் வரை மானியமாக வழங்கி வருகிறது. மாநில அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து சூரிய ஒளி மின்சார குடிநீர் இறைப்பான்கள் அமைப்பதற்காக சிற்றூராட்சிகளுக்கு கூடுதல் நிதி உதவி அளிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.

**18—**

### முறைசாரா மின் உற்பத்தி

**வினா 21595—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மத்திய அரசின் திட்டமான முறைசாரா மின் உற்பத்தித் திட்டம் தமிழகத்தில் எத்தனை இடங்களில் நிறுவுவது என அரசின் பரிசீலனையிலுள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?



2003 மே 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முறைசாரா மின் உற்பத்தி கீழ்க்கண்ட சக்திகளிலிருந்து உற்பத்தி செய்யப்படுகிறது:

**(1) காற்றாலை மூலம் மின் உற்பத்தி:**

காற்றாலைகள் அமைத்து மின் உற்பத்தி செய்வதில் தனியார் நிறுவனங்கள் பெருமளவில் ஈடுபட்டு வருகின்றன. காற்றாலைப் பண்ணைகள் அமைப்பதற்கு தனியார் நிறுவனங்கள் தமிழ்நாடு அரசுக்கு விண்ணப்பிக்கத் தேவையில்லை. ஆனால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு விண்ணப்பித்து இசைவு பெற வேண்டும். மின்சாரம் விற்பதென்றால் அதற்கான ஒப்பந்தத்தில் கையொப்பமிட வேண்டும். 31-12-2002 அன்று நிலவரப்படி மொத்தம் 55.47 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு 100 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் காற்றாலை அமைக்க அனுமதி கோரி நிலுவையில் இருக்கின்றன.

**(2) தாவரக் கழிவுகள் மூலம் எரிசக்தி:**

தாவரக் கழிவு மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்காக தமிழ்நாடு மின்சார வாரியம் இதுவரை விழுப்புரம் மாவட்டம், வானூரில் 12 மெகாவாட் அளவிலும், இராமநாதபுரம் பரமக்குடியில் 18 மெகாவாட் அளவிலும் இரண்டு மின் கொள்முதல் ஒப்பந்தத்தில் (PPA) கையெழுத்திட்டுள்ளது. மேலும் 31-12-2002 வரை 22 விண்ணப்பங்கள் தமிழ்நாடு மின்வாரியத்தின் இசைவுக்காக நிலுவையில் உள்ளன. இவற்றின்மீது மின் உற்பத்தி அமைப்பாளர்களிடமிருந்து சில கூடுதல் தகவல்கள் பெற வேண்டியுள்ளன. இது தவிர தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம் (TEDA) தமிழ்நாடு தொழில் மேம்பாட்டு நிறுவனத்துடன் (TIDCO) இணைந்து தாவரக் கழிவு மூலம் மின் உற்பத்தி செய்ய முனையும் தனியார் நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் பெற்றுள்ளன. இம்மனுக்கள் தற்போது பரிசீலனையில் உள்ளன. இவ்விண்ணப்பங்களை தமிழ்நாடு அரசு அமைத்துள்ள குழு பரிசீலித்து மைய அரசின் மரபுசாரா எரிசக்தி அமைச்சகத்துக்கு தங்கள் பரிந்துரையை விரைவில் அனுப்பவுள்ளன.

**(3) இணை மின் உற்பத்தி:**

88 மெகாவாட் செயல்திறன் கொண்ட நான்கு (4) இணை மின் உற்பத்தி நிலையங்கள் தனியார் சர்க்கரை ஆலைகள் மூலம் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இவை விரைவில் நிறைவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் 4 இணை மின் தயாரிப்புத் திட்டங்களுக்கு (68 மெகாவாட்) மின்வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

**(4) கரும்புக் கழிவுக் கசடிலிருந்து மின்சாரம் தயாரித்தல்:** பின்வரும் இரண்டு திட்டங்கள் மைய அரசின் பரிசீலனையில் உள்ளன:

செயின்ட் ஜான் சங்கம் டிரஸ்ட் பெரம்பலூர்: பெரம்பலூர் சர்க்கரை ஆலையில் கரும்புக் கழிவுக் கசடை உபயோகித்து (2 மெகாவாட்) மின் சாரம் தயாரிப்பதற்காக மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் மற்றும் கரும்புக் கழிவுக் கசடைப் பயன்படுத்துவதற்காக மைய அரசின் உணவு அமைச்சகம் ஆகியவற்றின் அனுமதி பெற வேண்டும் என்ற நிபந்தனையுடன் ஒப்புதல் அளித்துள்ளது.

சுபஸ்ரீ பயோ எனர்ஜி பிரைவேட் லிமிடெட், நாமக்கல்: கோழி எச்சத்தைப் பயன்படுத்தி அதிலிருந்து கிடைக்கும் வாயுவிலிருந்து 2.5 மெகாவாட் மின்சாரம் தயாரிப்பதற்காக அனுமதி கோரி அனுப்பப்பட்ட திட்டம், மரபு சாரா எரிசக்தி அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது.

**19—**

## பம்பு செட்டுகள்

**வினா 27170—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மின்சாரமின்றி சூரிய ஒளியில் நீரிறைக்கும் இயந்திரம் (பம்புசெட்டுகள்) இயக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?



**விடை—**

**மாண்புமிகு திரு. நயினார் நகேந்திரன், மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்:**

தற்போது சூரிய ஒளிசக்தி மூலம் விவசாய நீரிறைக்கும் இயந்திரம் அமைக்கும் திட்டம் மத்திய அரசின் மானியத்துடன் செயல்படுத்தப்படுகிறது. இதற்கு முன்னர் தமிழகத்தில் 195 சூரிய ஒளி மின்பம்புகள் மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் மற்றும் மாநில அரசு உதவியுடன் நிறுவப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்காக 2002-2003-ல் மத்திய அரசின் மரபு சாரா எரிசக்தி அமைச்சகம் பின்வருமாறு நிதி உதவி அளிக்கிறது. இந்த நிதி உதவி பெற்று மாநிலத்தில் சூரிய ஒளியில் விவசாய நீரிறைக்கும் இயந்திரம் நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

| | |
|---|---|
| 900 வாட் (எச்.பி.) சூரிய ஒளியின் பம்பிற்கு ஆகும் மொத்த செலவு | ... ரூ.2,24,000/- |
| மத்திய அரசு மானியம் ஒரு வாட்டிற்கு ரூ.1.10 வீதம் | ... ரூ.99,000/- |
| பயனாளி கட்ட வேண்டிய மீதித் தொகை | ... ரூ.1,25,000/- |

பயனாளி செலுத்த வேண்டிய தொகை அதிகமாக இருப்பதால் அதன் ஒரு பகுதியை மானியமாக வழங்குவதுபற்றி அரசின் நிதி நிலைமையைக் கருத்தில் கொண்டு பரிசீலிக்கப்படும்.

**20—**

## பணி ஓய்வு

**வினா 17133—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் பணியாற்றி வந்த ஊழியர்கள் எவ்வளவு பேருக்கு கட்டாயப்பணி ஓய்வு அளிக்கப்பட்டது?

(ஆ) அவர்களில் எவ்வளவு பேருக்கு சட்டரீதியான நியாயமான ஈட்டுத்தொகை வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடியில் பணியாற்றி வந்த பணியாளர்களில், எந்தப் பணியாளருக்கும் கட்டாயப்பணி ஓய்வு அளிக்கப்படவில்லை.

**21—**

**நியாயவிலைக் குடிமைப்பொருள் கட்டடம்**

**வினா 19602—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், விக்கிரமங்கலம் பஞ்சாயத்து நரியம்பட்டிக்கு நியாயவிலைக் குடிமைப்பொருள் (PDS Building) கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி நடத்திவரும் நரியம்பட்டி நியாயவிலைக் கடைக்கு அரசுக்குச் சொந்தமான இடத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**22—**

**நியாயவிலைக் கடை கட்டடம்**

**வினா 21035—திரு. ஜி. கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேப்பலஅள்ளி ஊராட்சி, சஜ்ஜல அள்ளி கிராமத்திற்கு நியாயவிலைக் கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேப்பல அள்ளி ஊராட்சி, சஜ்ஜல அள்ளியில் செயல்படும் நியாயவிலைக் கடை பகுதிநேரக் கடை ஆகும். அரசாணை வரையறையின்படி பகுதிநேரக் கடைகளுக்கு அப்பகுதிவாழ் மக்களே இலவசமாக இடவசதி செய்துதர வேண்டும். எனவே சஜ்ஜல அள்ளியில் செயல்படும் நியாயவிலைக் கடைக்கு அரசு நிதியுதவி திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

**23—**

**கடன் தொகை**

**வினா 22724—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு வங்கியில் 1996 முதல் 2001 வரை எவ்வளவு நபர்களுக்கு அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அடமானக் கடன் தொகை வசூலிக்க முடியாத, நிலுவையில் உள்ள கடன் எண்ணிக்கை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை கூட்டுறவு நகர வங்கியில் 1996 முதல் 2001 வரை 3,791 நபர்களுக்கு அடமானக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ரூ.38,83,07,000 அளவுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட அனைத்து அடமானக் கடன்களும் வங்கிக்கு அசையாச் சொத்தின் ஆதாரத்தின்பேரில் அடமானக் கடன் பத்திரம் எழுதி

பதிவு செய்யப்பட்டதாகும். எனவே அனைத்துக் கடன்களும் வசூலிக்கத் தக்கவையாகும்.

**24—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா 23093—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, புலிவாய் ஊராட்சிக்கு புதிதாக நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், புலிவாய் ஊராட்சியில் 204 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாயவிலைக் கடை ஏற்கெனவே இயங்கி வருகிறது. எனவே அப்பகுதியில் மேலும் ஒரு கூட்டுறவுக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**25—**

**நியாயவிலைக் கடை அமைத்தல்**

**வினா 23095—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வந்தவாசி தொகுதி, கடலூர் ஊராட்சி, லட்சுமிபுரம் கிராமத்திற்கு பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



*விடை—*

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, கடலூர் ஊராட்சியில் 350 குடும்ப அட்டைகளுடன் ஒரு நியாயவிலைக் கடை இயங்கி வருகிறது. தாய்க் கடையிலிருந்து 2.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள லட்சுமிபுரம் பகுதியில் 96 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடையில் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க்கடையில் இருக்க வேண்டிய குடும்ப அட்டைகள் குறித்த வரையறைகள் நிறைவு பெறாததால் லட்சுமிபுரம் பகுதியில் பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**26—**

**பகுதிநேர நியாயவிலைக் கடை**

**வினா 26408—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலவாடி நியாயவிலைக் கடையிலிருந்து பிரித்து மேல்குள்ளப்பட்டிக்கு புதிய பகுதிநேர நியாயவிலைக் கடை அமைக்க அரசு நடப்பாண்டில் துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*விடை—*

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாலவாடி நியாயவிலைக் கடையில் 696 குடும்ப அட்டைகள் உள்ளன. 56 குடும்ப அட்டைகளை மட்டும் கொண்டுள்ள குள்ளம்பட்டி, பாலவாடியிலிருந்து 1½ கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. பகுதிநேரக் கடையில் இணைக்கப்பட வேண்டிய குடும்ப அட்டைகள் மற்றும் தாய்க்கடையிலிருந்து பகுதிநேரக் கடை அமைய வேண்டிய தொலைவு ஆகிய வரையறைகள் நிறைவு பெறாததால் குள்ளம்பட்டிக்கு பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

[2003 மே 8

27—

**சலுகை**

**வினா 28498—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூட்டுறவு வங்கிகளில் வட்டி தள்ளுபடி சலுகை அரசு அறிவித்துள்ளது, விருத்தாசலத்தில் உள்ள நிலவள வங்கிக்கும் பொருந்துமா?

(ஆ) இல்லையெனில், அவ்வங்கிக்கு வட்டிச் சலுகை அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசாணை (டி) எண் 68, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள்: 23-8-2002 நாளிட்ட ஆணையின்படி கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளுக்கு ஒட்டுமொத்த கடன் தீர்வுத் திட்டத்தை (One Time Settlement Scheme) நிறைவேற்ற அரசு ஆணை வெளியிட்டுள்ளது. கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் இத்திட்டத்தின்படி 31-3-98-ல் தவணை தவறிய வாரா மற்றும் சந்தேகக் கடன்கள் பட்டியலில் சேர்க்கப்பட்ட கடன் தொகையினை ஒட்டுமொத்தமாக செலுத்தும் கடன்தாரர்களுக்கு 1-4-1998 முதலான வட்டி மற்றும் அபராத வட்டி ஆகியன தள்ளுபடி செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் விருத்தாசலத்திலுள்ள தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிக்கும் பொருந்தும்.

28—

**மண்ணெண்ணெய் வழங்குதல்**

**வினா 30289—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. மோகன், கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இதர அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் நியாயவிலைக் கடையிலேயே மண்ணெண்ணெய் வழங்குவதில் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஏற்படும் நடைமுறை சிரமங்களைக் கணக்கில் கொண்டும், குடும்ப அட்டைதாரர்களுக்கு அனைத்து வேலை நாட்களிலும் மண்ணெண்ணெய் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்யவும், மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் மூலம் குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்பட்டு வருகிறது. இச்செயல்முறைக்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு உள்ளது. எனவே பெரும்பாலான குடும்ப அட்டைதாரர்கள் பயன்பெற்று வரும் சீர்காழி விவசாய உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மண்ணெண்ணெய் வழங்கு நிலையத்தில் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளை மீண்டும் நியாயவிலைக் கடைகளில் இணைத்து மண்ணெண்ணெய் வழங்க வேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது.

29—

**ஈமக்கிரியை மண்டபம்**

**வினா 6903—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, கள்ளப்புலியூர் ஊராட்சியில் ஒரு ஈமக்கிரியை மண்டபம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கும்பகோணம் ஊராட்சி ஒன்றியம், கள்ளப்புலியூர் ஊராட்சிக்கு ஈமக்கிரியை மண்டபம் கட்ட போதுமான நிதி வசதி இல்லாத காரணத்தினால் அதனைக் கட்டித்தர இயலாத சூழ்நிலை உள்ளது.

**30—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா 7520—திரு. எஸ்.கே. செல்வம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வீரபாண்டி தொகுதிக்குட்பட்ட வீரபாண்டி ஒன்றியம், சேலம் ஒன்றியம் அனைத்து பகுதிகளிலும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் பயன்பெறும் ஊராட்சிப் பகுதிகள் எத்தனை? எவை எவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் வீரபாண்டி ஒன்றியத்தில் 15 ஊராட்சிப் பகுதிகளும், சேலம் ஒன்றியத்தில் 12 ஊராட்சிப் பகுதிகளும் பயன்பெறுகின்றன. அவை வீரபாண்டி ஒன்றியத்தில் ஆரிகவுண்டம்பட்டி, முருங்கப்பட்டி, மூடுதுறை, பெருமா-கவுண்டம்பட்டி, கல்பாராபட்டி, பெரிய சீரகாபாடி, சேளைபாளையம், வேம்படிதாளம், வீரபாண்டி, உத்தமசோழபுரம், புதூர் அக்ரஹாரம், நெய்காரப்பட்டி, பெருமாள்பட்டி, மாமங்கலத்துப்பட்டி, இராபப்பம்பட்டி ஆகிய 15 ஊராட்சிகளுக்கும் சேலம் ஒன்றியத்தில் ஆண்டிப்பட்டி, சேலத்தாம்பட்டி, திருமலைகிரி, வேடுகாத்தாம்பட்டி, வட்டமுத்தாம்பட்டி, மகரகொல்லப்பட்டி, தளவாய்பட்டி, சர்க்கார் கொல்லப்பட்டி, மல்லமூப்பம்பட்டி, அய்யம்பெருமாபட்டி, உருமாபாளையம், சன்னியாசிகுண்டு ஆகிய 12 ஊராட்சிகளும் ஆகும்.

**31—**

**வீடு கட்டுதல்**

**வினா 9258—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) சேலம் மாவட்டத்தில் 2000 ஆண்டு தமிழக அரசு அறிவித்த ஊரகப் பகுதிகளில் வீடு கட்டும் திட்டத்தில் எத்தனை பேர் பயன்பெற்றனர்?

(ஆ) அதில் ஆதிதிராவிடர்கள், மற்றவர்கள் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், 2000-2001 ஆம் ஆண்டு ஊரகப் பகுதிகளில் வீடு கட்டும் திட்டத்தின்கீழ் 1,133 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். அதில் 964 நபர்கள் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 169 நபர்கள் இதர இனத்தைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

**32—**

**இலவச தொகுப்பு வீடுகள்**

**வினா 11192—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் தொகுதி, பெரும்பாலை ஊராட்சி, பெரும்பாலை இந்திரா நகர் காலனியில் இலவச தொகுப்பு வீடுகளைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்த தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய மாநில அரசு திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2003 மே 8

33—

### கழிப்பிடம்

**வினா 12449—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் கே.கே. நகர் பகுதியில் நீர் வசதியுடன்கூடிய பெண்கள் கழிப்பிடம் கட்டித் தரப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சியில் கே.கே. நகர் பகுதியில் நீர் வசதியுடன்கூடிய பெண்கள் கழிப்பிடம் உள்ளது. இதை அப்பகுதி பெண்கள் உட்பட அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர். எனவே கூடுதலாக கழிப்பிடம் கட்டுவதற்கு அவசியம் எழவில்லை.

34—

### ஜீவன்தாரா

**வினா 13752—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டம், மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஜீவன்தாரா திட்டத்தில் கிணறு வெட்டி பயன் அடையும் வகையில் அதிக எண்ணிக்கையில் பயனாளிகளைத் தேர்வு செய்ய அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2003 மே 8]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: ஜீவன்தாரா திட்டம் என்பது மில்லியன் கிணறுகள் திட்டமாக மாறி அதுவும் 1-4-1999 முதல் நிறுத்தப்பட்டு விட்டது. எனவே ஜீவன்தாரா திட்டத்தின்கீழ் தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பகுதி மக்களைத் தெரிவு செய்யும் வாய்ப்பு இல்லை.

35—

### வாகனம்

**வினா 20680—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் மற்றும் மீனம்பாக்கம் பேரூராட்சிகளில் கழிவுநீர் அகற்றும் வாகனங்கள் பயன்படுத்தப்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)*: தாம்பரம் தொகுதி, பெருங்களத்தூர் மற்றும் மீனம்பாக்கம் பேரூராட்சிகளில் கழிவுநீர் அகற்றும் வாகனங்களும் குப்பைகள் அகற்றும் லாரிகளும் ஓரளவு பயன்படுத்தப்பட்டு வரப்படுகின்றன.

36—

### கட்டடம்

**வினா 21816—திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, வீரமான்குடி ஊராட்சி மன்ற அலுவலகம் முழுமையாக சேதமடைந்துள்ளதால், புதிதாக கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2003 மே 8

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பாபநாசம் தொகுதி, வீரமாங்குடி ஊராட்சிமன்ற அலுவலகம் வரும் நிதியாண்டான 2003-2004-ல் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**37—**

**கதிர் அடிக்கும் களம்**

**வினா 26240—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, குன்னமலை ஊராட்சி, நல்லப்பன் நாயக்கன் பாளைய விவசாயிகள் கதிர் அடிக்கும் களம் இன்றி சிரமப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா? எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): பாமத்தி ஊராட்சி ஒன்றியம், குன்னமலை ஊராட்சி, நல்லப்பன் நாயக்கன்பாளையம் கிராமத்தில் வரும் நிதியாண்டில் கதிர் அடிக்கும் களம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**38—**

**தூர்வாருதல்**

**வினா 26431—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் வடவாளம் ஊராட்சியில் இச்சடியிலுள்ள அம்மா ஊரணியில் (சிறிய ஊரணி) தூர்வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2003 மே 8]

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வடவாளம் ஊராட்சி இச்சடியில் உள்ள அம்மா ஊரணியை தூர்வாரும் பணி 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**39—**

**குடிநீர்**

**வினா 27397—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட ரொட்டிக்கடை பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் குடிக்கும் குடிதண்ணீர் மண் கலந்து களிம்பு வாசனையுடன் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட ரொட்டிக்கடை பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் குடிக்கும் குடிதண்ணீர் குடிக்கும் வசதியுடன் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**40—**

**காட்டாமணக்குச் செடிகளை அழித்தல்**

**வினா 28011—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், சின்ன ஊரணிப்பட்டியில் உள்ள போதண்டாங்குளத்தைத் தூர்வாரி காட்டாமணக்குச் செடிகளை அழிக்க அரசு ஆவன செய்யுமா? எப்போது?

[2003 மே 8

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், சின்ன ஊரணிப்பட்டியில் உள்ள போதண்டாங்குளத்தைத் தூர்வாரி, காட்டாமணக்குச் செடிகளை அழிக்கும் பணி 2003-2004 ஆம் நிதியாண்டில் மேற்கொள்ளப்படும்.

**41—**

### பட்டியலில் சேர்த்தல்

**வினா 29557—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சிப் பகுதியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலில், விடுபட்டவர்களை மீண்டும் சேர்த்துக்கொள்ள அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் குறித்து அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் பட்டியலில் விடுபட்ட நபர்களை மீண்டும் சேர்த்துக்கொள்வது தொடர்பாக மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள விடுபட்ட நபர்களை பட்டியலில் சேர்ப்பது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**42—**

### பணிகள்

**வினா 30317—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2003 மே 8]

(அ) சேலம் மாவட்டத்தில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் எத்தனை பணிகள் மேற்கொள்ளப்பட்டன?

(ஆ) அதன் மதிப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டத்தில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் 2001-2002ஆம் ஆண்டில் ரூ. 336.760 இலட்சம் மதிப்பீட்டில் 431 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**43—**

### தூர்வாருதல்

**வினா 30468—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சியிலுள்ள நடுநிம்மேலி கிராமம், பாம்புலியம்மன் கோயில் குளத்தைத் தூர்வாரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சியிலுள்ள நடுநிம்மேலி கிராமம், பாம்புலியம்மன் கோயில் குளம் தூர்வாரும் பணி 2003-2004 ஆம் நிதியாண்டில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**44—**

### கரும்பலகை திட்டம்

**வினா 31291—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2003 மே 8

2000-2001ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதி மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை கரும்பலகை திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி மற்றும் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியங்களில் கரும்பலகை திட்டங்கள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

**45—**

**ஒதுக்கீடு**

**வினா 31546—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் நிதியாண்டில் எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் எவ்வளவு?

(ஆ) முடிக்கப்பட்ட பணிகள் எவ்வளவு ?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில் 2000-2001ஆம் நிதியாண்டில் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்கீழ் ரூ.12,70,388 மதிப்பீட்டில் 18 பணிகள் செயல்படுத்தப்பட்டு அனைத்துப் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன.



2003 மே 8]

**46—**

**கால்நடை மருத்துவக் கட்டடம் பழுதுபார்த்தல்**

**வினா 26971—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், மட்டங்கால் பகுதியிலுள்ள கால்நடை மருந்தக கட்டடத்தைப் பழுது நீக்கிட அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், மட்டங்கால் பகுதியிலுள்ள கால்நடை மருந்தக கட்டடத்தைப் பழுது நீக்கிட மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆவன செய்து வருகிறது.

(ஆ) ஊராட்சி ஒன்றியத்திலிருந்து நிதி ஒதுக்கீடு பெறப்பட்டதும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்களால் பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.

**47—**

**கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம்**

**வினா 25542—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகாரத்தில் கைவினைப் பொருட்கள் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் நிறைவேற்றப்படும் ?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வடிவேல், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கடந்த 3 ஆண்டுகாலமாக தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் நட்டத்தில் இயங்கி வருவதால், சிறிய ஊரான பெண்ணாகாத்தில் விற்பனை நிலையத்தினை அமைப்பது இயலாத காரியம் ஆகும்.

(ஆ) வினா எழவில்லை.

**48—**

**வைப்புத்தொகை**

**வினா 27209—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் வீட்டுவசதிச் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் எத்தனை பேர்?

(ஆ) 2001-2002ஆம் ஆண்டு வரை சங்கத்தில் வைப்புத்தொகை எவ்வளவு உள்ளது?

(இ) வசூல் செய்ய முடியாமல் நடவடிக்கையிலுள்ள தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தின் மொத்த உறுப்பினர்கள் எண்ணிக்கை 31-12-2002-ல் 14,534. இதில் 1-4-2002 முதல் 31-12-2002 வரை 734 புதிய உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். 260 உறுப்பினர்கள் விலகியுள்ளனர்.



(ஆ) இட்டுவைப்புத்தொகை 31-12-2002-ல் மொத்த நிலுவை ரூ.18,76,00,000 ஆக உள்ளது என்றும், இதில் நிரந்தர இட்டுவைப்புகள் ரூ.6,26,00,000, கஸ்தூரி நினைவு இட்டுவைப்புகள் ரூ.12,50,00,000 எனவும், மேற்கண்ட தொகையில் அடமான கடனாக ரூ.16.10 இலட்சமும், இட்டுவைப்புக் கடனாக ரூ.1.76 இலட்சமும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் ரூ.0.90 இலட்சமும் இட்டுவைப்பு செய்யப்பட்டுள்ளது.

(இ) கடன் நிலுவை (புதிய வீடு கட்டுவதற்கான கடன்) சேலம் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் 31-12-2002-ம் தேதியில் வசூல் செய்ய முடியாமல் உள்ள கடன் நிலுவை ரூ.743 இலட்சம். அதில் ஒன்று முதல் மூன்று மாதம் வரை தவணை தவறியது ரூ.160 இலட்சம். 4 மாதம் முதல் ஒரு வருடம் வரை தவணை தவறிய கடன் நிலுவை ரூ.211 இலட்சம். ஒரு வருடத்திற்கு மேல் 3 வருடம் வரை தவணை தவறியவர்கள் கடன் நிலுவை ரூ.60 இலட்சங்கள். தாவா நடவடிக்கையில் ரூ.247 இலட்சங்கள். நிறைவேற்று நடவடிக்கை மூலம் ரூ.65 இலட்சங்கள் நிலுவையாக உள்ளன.

**49—**

**வீடுகளின் மொத்த மதிப்பீடு**

**வினா 27210—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் பேலஸ் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மொத்த மதிப்பீடு எவ்வளவு?

(ஆ) அச்சங்கத்தின் மூலம் கட்டப்பட்டுள்ள வீடுகள் அனைத்தும் விற்பனை செய்யப்பட்டுள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப் பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் பேலஸ் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தில் கட்டப்பட்டுள்ள வீடுகளின் மொத்த மதிப்பீடு ரூ.14.09 கோடியாகும்.

(ஆ) இச்சங்கத்தின் மூலம் கட்டப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை 119. இவற்றுள் 47 வீடுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 72 வீடுகள் விற்பனை ஆகாமல் உள்ளன. சங்கத்தின் மூலம் கட்டப்பட்ட வணிக வளாகங்கள் 12. இவை முற்றிலும் விற்பனையாகாமல் உள்ளன. சங்கத்தின் மூலம் கட்டப்பட்ட கடைகள் 52. இவற்றுள் 19 கடைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 3 கடைகள் விற்பனை ஆகாமல் நிலுவையாக உள்ளன. மேலும் விற்பனையாகாமல் உள்ள இடங்களை விற்பனை செய்யும்பொருட்டு கூட்டுறவு கட்டுமானப் பிரிவு மற்றும் பொதுப் பணித் துறையிடம் மதிப்பீடு நிர்ணயம் செய்திடவும் கேட்டுக்கொண்டுள்ளது.

**50—**

**சாலை வசதி**

**வினா 20419—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதியிலுள்ள மீனவ கிராமங்களுக்கு சாலை வசதி செய்து கிழக்குக் கடற்கரை சாலையுடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதிக்கு உட்பட்ட கீழ்க்காணும் மீனவ கிராமங்களில் 1996-97-ஆம் ஆண்டிற்கு 5.20 கி.மீ. நீளத்திற்கு ரூ.10.30 இலட்சம் செலவில் இணைப்புச் சாலைப் பணிகள், மீன்பிடித் துறைமுக திட்டக்கோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.



| வ.எண் | மீனவ கிராமத்தின் பெயர் | போடப்பட்டுள்ள இணைப்புச் சாலையின் நீளம் (கி.மீல்) | செலவினம் (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | அறந்தாங்கி தொகுதி கட்டுமாவடி | 1.50 | 2.90 |
| 2. | அம்மாப்பட்டினம் | 1.00 | 2.00 |
| 3. | அய்யம்பட்டினம் | 0.75 | 1.50 |
| 4. | ஆர்.புதுப்பட்டினம் | 1.20 | 2.40 |
| 5. | கோபாலப்பட்டினம் | 0.75 | 1.50 |
| | மொத்தம் | 5.20 | 10.30 |

அறந்தாங்கி தொகுதியிலுள்ள மீனவ கிராமங்களுக்கு சாலை வசதி செய்து கிழக்குக் கடற்கரை சாலையுடன் இணைக்கும் திட்டம் ஏதும் தற்போது இத்துறையின் பரிசிலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### அரசு ஊழியர்கள், மருத்துவ மாணவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள் தாங்கள் போராடுவதாக அறிவித்திருக்கிறார்கள். மறியல் போராட்டம் இன்று நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். போராடிப் பெற்ற உரிமைகளைப் பறிக்கும் ஆணையை ரத்து செய்ய வேண்டுமென்று கோரி அவர்கள் போராடிக் கொண்டிருக்கிற[illegible] போராட்டம் இன்றையதினம் வெற்றிபெறவில்லை[illegible] தொடர்ந்து தொடர்



சென்னை-600 009
188076. V2, 31 P03
P03.471

போராட்டம் நடத்த இருப்பதாகவும் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதேபோல பல்வேறு தரப்பினர்கள்—இன்றையதினம் மாணவர்கள், மருத்துவ மாணவர்கள் போராட்டக் களத்திலே இருக்கிறார்கள், போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாக டாக்டர்களும் போராட இருப்பதாக அறிவித்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், பல்வேறு பிரச்சினைகள் இன்றையதினம் புதிதாக முளைத்துக் கொண்டிருக்கின்றன. உதாரணமாக நீலகிரியைப் பொறுத்தவரையில்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, ஏதாவது ஒரு பிரச்சினையை நீங்கள் கொண்டு வாருங்கள். நாடு முழுவதும் இருக்கக்கூடிய பிரச்சினைகள் பூராவையும பேசினால் சரியாக வராது. ஏதாவது ஒரு பிரச்சினையை அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வாலாம்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** இல்லை. ஒரே செகண்ட், முக்கியமான பிரச்சினை. வேறு ஒன்றும் இல்லை. நீலகிரியைப் பொறுத்தவரையில் எப்போதுமே எந்தப் பணியாக இருந்தாலும் மதிப்பீட்டிலே 25 சதவீதத்தை அரசு கூட்டி அளிக்கும், அதிகமாகக் கொடுக்கும். அப்போதுதான் அங்கே பணி நடைபெறும். காரணம், எல்லா பொருட்களும் கீழேயிருந்து மேலே செல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இதற்கெல்லாம் அரசுத் தரப்பிலே பதில் இருக்காது. நீங்கள் எதாவது ஒரு பிரச்சினையை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அவ்வளவுதான்.

*(முற்பகல் 11-05*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** சரி ஏற்கெனவே அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமைகளை அரசாங்கம் பறிக்க நினைப்பதை அரசு ஊழியர்களும் ஆசியர்களும் எதிர்க்கிறார்கள். எனவே, அதைப் பறிக்க நினைப்பது சரியாக இருக்காது. அந்த ஊழியர்களை, அரசு ஊழியர்களை, ஆசிரியர்களை அரசு அழைத்துப் பேச வேண்டும். இதை கௌரவப் பிரச்சினையாகக் கருதக்கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். கௌரவப் பிரச்சினையல்ல. ஏனென்றால், இது அவர்களை மட்டும் பாதிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அழைத்துப் பேச வேண்டுமென்று சொல்லி அதோடு முடியுங்கள். (குறுக்கீடு)





**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** பொதுமக்களையும் பாதிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சரி.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களை மட்டும் பாதிக்கவில்லை. மருத்துவக் கல்லூரி மாணவர்களை மட்டும் பாதிக்கவில்லை. பொதுமக்களையும் பாதிக்கிறது. எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். சுமூகமான தீர்வு காண வேண்டும். பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண வேண்டும். ESMA சட்டம் பாயும் என்று அச்சுறுத்தக்கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. மணி என்ன சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இன்று அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் தங்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதே பிரச்சினைதானே?

**திரு. ஜி.கே. மணி:** கோரிக்கைகளை முன்வைத்து (குறுக்கீடு) இல்லை. சொல்லிவிடுகிறேன் தலைவா! ஒரே நிமிடத்திலே சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர்.பி. அவருடைய கோரிக்கை குறித்து திரு. ஜி.கே. மணி அவர்களும் சொல்கிறார்கள். அவ்வளவுதான்.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, இல்லை, சொல்லிவிடுகிறேன். நான் ஒரே நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாறி. மாறி இதே கருத்தைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை, சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கவனத்திற்குத்தான் கொண்டு வந்திருக்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** இது முக்கியமான பிரச்சினை. அழைத்துப் பேச வேண்டும் என்பது ஒன்று. அதே நோத்திலே அவர்களை அச்சுறுத்தவும்

கூடாது. இன்றுகூட பார்த்தீர்களேயானால், அதிகாரிகள் மூலமாக, துறையினுடைய அதிகாரிகளின் மூலமாக தலைமைச் செயலாளர், மற்ற துறைச் செயலாளர்கள் மூலமாக அச்சுறுத்தல் எல்லாம் இருக்கின்றன. கோரிக்கையைக் கேட்கின்ற நோக்கிலே இப்படியெல்லாம் அச்சுறுத்தல் கூடாது என்பது ஒன்று.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். முடியுங்கள். திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்). இல்லை எஸ்.ஆர்.பி. கருத்தை நீங்களும் சொல்கிறீர்கள் அவ்வளவுதான். (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடைய ... (குறுக்கீடு).

**திரு. ஜி.கே. மணி:** அவர்களுடைய போராட்டம் நியாயமான போராட்டம். அதேபோல மாணவர்கள் போராடுவது தனியார் மருத்துவக் கல்லூரிகள் ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை திரு. மணி, இதைப் பிரச்சினையாக எடுத்துக்கொள்வதாக இல்லை. (குறுக்கீடு) திரு. ஹேமச்சந்திரன் சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்களுடைய...

**திரு. ஜி.கே. மணி:** அவர்களை அச்சுறுத்துகிற வகையிலே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று சொல்லியிருக்கிறார்களே தவிர, யாரையும் அச்சுறுத்தவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மறியல் போராட்டம் மக்களைக் கடுமையாகப் பாதிக்கக்கூடிய அளவிலே உள்ளது. (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், சொல்லுங்கள்.





**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாநிலத்திலே மக்களின் மாமூல் வாழ்க்கை பாதிக்கப்பட்டிருக்கிறது. அரசு அந்த ஊழியர்களை அழைத்துப் பேசி ஒரு நல்ல முடிவு ஏற்படுத்தி, தமிழகத்திலே மாமூல், சகஜ வாழ்க்கையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் (குறுக்கீடு). சொல்லியாகிவிட்டது அவ்வளவுதான்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2003 மே 8

**(ஆ) தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் கல்வித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 4. அறிவிப்புகள்

**(அ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

**(இ) தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவு, 2003**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவு. மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார நுகர்வின் அல்லது விற்பனையின் மீதான வரி சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

(குறுக்கீடுகள்)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இச்சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சேபிக்கிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், நீங்களும் எதிர்க்கிறீர்களா?

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** ஆமாம். நாங்களும் அறிமுக நிலையிலேயே எதிர்க்கிறோம்.

[2003 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

முற்பகல் 11-10

## 4. அறிவிப்புகள்

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 3. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2003 மே 8] [திரு. செ.ம. வேலுசாமி]

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலேயே காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதானா? மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 14-சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 14—சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக்

கணக்கில் ரூ.113,44,68,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 746, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4519, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5118, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5607, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6652, திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7267, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7763, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8090, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8237, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8376, டாக்டர் ஆர். கோவிந்தசாமி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8725, திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4824, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7084, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7472, திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7502, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5693, திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6016, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6271, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6320, திரு. கே.வி. முரளிதரன்.



**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3450, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சங்கராபுரம் தொகுதியில் உள்ள கிராமப்புற விவசாயிகளுக்கு பழக் கன்றுகள், தேக்கு மரக் கன்றுகள் வனத் துறையின் மூலம் இலவசமாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 563, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை வைகை ஆற்றின் இருபுறமும் பயன்பெறும் மாக் கன்றுகள் வனத் துறையால் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1995, திரு. சோ. இராசேந்திரன்.

[2003 மே 8

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் மற்றும கோவில்பட்டி தொகுதிகளுக்கு உட்பட்ட கண்மாய்களில் 'கருவேல மாம் வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6094, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ரப்பர் பிளாண்டேசனில் வெட்டப்பட்ட ரப்பர் மரங்களுக்குப் பதிலாக புதிய ரப்பர் மரங்கள் நடவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6145, திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திருவள்ளூர் மாவட்டம், அதிக அளவு வனத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் உள்ள மாவட்டம் என்பதால், இம்மாவட்டத்தில் சிறப்புத் திட்டத்தின்மூலம் அதிக மாங்கள் நட்டு வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".



2003 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6873, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'விருதுநகர் மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலைக் காட்டில் உள்ள காலியிடங்களில் புதிதாக மரக் கன்றுகள் நட்டு மண் அரிப்பினைத் தடுப்பதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7614, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தாரமங்கலம் தொகுதியில் உள்ள வனப் பகுதிகளில் செடிகள் நட வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 417, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வால்பாறையில் முறைகேடுகள் செய்து மாம் வெட்டுபவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5326, செல்வி க. பாலபாரதி.

**செல்வி க. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'திண்டுக்கல் மாவட்டம், கடலூர், பன்றிமலை ஆகிய பகுதிகளில் காபி பயிரிட்ட விவசாயிகள் தங்கள் சொந்த நிலத்தில் வேறு பயிரிட்டு வளர்க்க விரும்பும் விவசாயிகளுக்கு மரங்களை வெட்டிக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 459, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நீலகிரி மாவட்டம், கோத்தகிரி வட்டம், கன்டட்டி கிராமத்தில் வனத் துறைக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலத்தில் உள்ள தனியார் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4333, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'வண்டலூர் மிருகக்காட்சி சாலையில் அதிக எண்ணிக்கையில் யானைகளை வளர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5262, திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. விநாயகமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சென்னை, பூங்கா நகர் தொகுதியின் மையத்தில் ஓடிக்கொண்டிருக்கும் பக்கிங்காம் கால்வாயின் கரையில் அமைந்திருக்கும் எவர்சில்வர் பாலிஷ் செய்யும் தொழிற்சாலைகளால் சுற்றுச் சூழல் பெருமளவில் பாதிக்கப்பட்டு சுகாதாரச் சீர்கேடு உருவாவதைத் தடுக்க, நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5990, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், கெரிகப்பள்ளி ரயில்வே கேட்டை அடுத்துள்ள ராஜாராம் சுண்ணாம்பு பேக்டரியிலிருந்து வெளிவரும் நச்சுத் தன்மை வாய்ந்த நெடியினால் ஏற்படும் சுற்றுச் சூழல் பாதிப்பைத் தடுக்க, நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6986, திருமதி எஸ். மகேஸ்வரி.

[2003 மே 8

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பிளாஸ்டிக் கேரி பேக்ஸ் மற்றும் பிளாஸ்டிக் பெட் பாட்டில்களைத் தடை செய்து சுற்றுப்புறத்தை மாசிலிருந்து காப்பாற்ற உடனடியாகச் சட்டம் கொண்டு வரவேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய 14 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.113,44,68,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6902, திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**THIRU J. HEMACHANDRAN**: Hon. Speaker Sir, 'to discuss the need to implement the settlement agreed by the Arasu Rubber Corporation to pay the balance of wages to the workers in the Corporation', I move--

"That the sum of Rs. 106,39,91,000/- allocated under Revenue account and Rs. 113,44,68,000/- allocated under Capital account under No. 14-Environment and Forests Department, be reduced by Rs. 100/-"

முற்பகல் 11-15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர் அவர்கள் முன்னோடியாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு

@ 302 முதல் 358 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



2003 மே 8] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னால் என்னுடைய பதில் உரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

### இராணி மேரி கல்லூரி முதல் மாடி வராண்டா இடிந்து விழுந்ததால் ஊனமடைந்த மாணவி எம். ஷீலாவிற்கு இழப்பீடு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அவருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள ஆறரை கோடி மக்களின் நலனை முன்னிறுத்திச் செயல்படும், தலையாய கேந்திரமாகிய, தலைமைச் செயலகத்தை, பல்வேறு ஆய்வுகளுக்குப் பிறகு, இராணி மேரி கல்லூரி வளாகத்தில் அமைக்க, இந்த அரசு முடிவெடுத்தது. ஒரு சிலர் அரசியல் காரணத்திற்காக, காழ்ப்புணர்ச்சியால், இந்த மகத்தான திட்டத்தை எதிர்த்து, மாணவிகளைத் தூண்டிவிட்டனர்.

5-5-2003 அன்று, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விதி எண் 110-ன்கீழ் நான் வெளியிட்ட அறிக்கையில் சில சுயநலவாதிகள் சௌகரியமாக மறந்துவிட்ட, மறைத்துவிட்ட, ஒரு அப்பட்டமான உண்மையை அப்போது நான் தெளிவாக்கினேன்.

இன்றைக்கு சுமார் 12 ஆண்டுகளுக்கு முன்பு, இன்னும் சரியாகச் சொல்லப்போனால், 8-4-1991 அன்று காலை 11-00 மணியளவில் இராணி மேரி கல்லூரியில், எம்.ஏ. ஆங்கில இலக்கியம் இறுதியாண்டு படித்து வந்த எம். ஷீலா என்ற மாணவி, ஆங்கிலத் துறையின் ஹாலுக்கு வெளியே உள்ள வராண்டாவில் நின்று, தனது சிநேகிதியுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அந்த இரண்டு மாணவிகளின் பளுவைக்கூடத் தாங்க இயலாமல், அந்த வராண்டா திடீரென்று உடைந்து, அந்த இரண்டு மாணவிகளும் முதல் தளத்திலிருந்து தரைத் தளத்தில் கீழே விழுந்தனர். இதனால்

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மே 8

எம். ஷீலா என்ற அந்த மாணவி, கடுமையான காயமுற்று. இரண்டரை மாதக் காலம், மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்ட பிறகும், அறுவை சிகிச்சை நடத்தப்பட்ட பிறகும், நிரந்தர ஊனம் அடைந்து, நடக்க முடியாமல், ஊன்றுகோல்களின் துணையோடு மட்டுமே நடக்கின்ற நிலை ஏற்பட்டது. அதற்குப் பின், கல்லூரி நிர்வாகமும், பொதுப் பணித் துறையும், தனக்கு 5 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று, 1992-ல் அந்த மாணவி உயர் நீதிமன்றத்தில், வழக்குத் தொடுத்தார். பின்னர் 1998-ல், தனக்கு 9 இலட்சம் ரூபாய் நஷ்ட ஈடு தர வேண்டும் என்று மாநகர் உரிமையியல் நீதிமன்றத்தில் தனது கோரிக்கையைத் திருத்தி சமர்ப்பித்தார். இந்த உண்மைகள் எல்லாம், எனக்கு வெகு அண்மையில்தான் தெரிய வந்தன. அதுவும், தற்செயலாகத்தான், இவற்றைத் தெரிந்துகொள்ள நேரிட்டது. ஆனால் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, என்னுடைய முந்தைய ஆட்சிக் காலத்திலேயே, அதாவது 1991 முதல் 1996 வரையிலான அந்த ஐந்து ஆண்டுகளிலேயே. நஷ்டஈட்டைக் கொடுத்திருக்கலாமே என்று கேட்டுள்ளார்.

கட்டடம் இடிந்து விழுந்து, மாணவி ஷீலா ஊனமுற்ற நிகழ்ச்சி, 8-1-1991 அன்று நடந்தது. அதாவது, குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் நடந்தது. இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் 1991-ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் முன், நடைபெற்ற சம்பவம் அது. இந்தச் சம்பவம் நடைபெற்றது 1991 ஏப்ரல் மாதத்தில். நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றது 1991 ஜூன் மாதத்தில். மாணவி ஷீலா, நஷ்டஈடு கேட்டு, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது 1992 ஆம் ஆண்டில். ஆனால் இந்தத் துயர சம்பவத்தைப் பற்றியோ, உயர் நீதிமன்றத்தில் அவர் தொடுத்த வழக்கு பற்றியோ, அப்போது என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. பொதுப் பணித் துறை அலுவலகத்திலேயே, இதுபற்றிய விவரங்கள், முடங்கிக் கிடந்திருக்கின்றன.

இராணி மேரி கல்லூரி வளாகத்தில், தலைமைச் செயலகத்தை உருவாக்குவதை, எதிர்க்கின்ற வழக்கு, சமீபத்தில் உயர் நீதிமன்றத்திற்கு வந்தபோது, அரசு தலைமை வழக்கறிஞர், தமது வாதத்தின்போது, மாணவி ஷீலாவின் விபத்து பற்றிய விவரங்களை நீதிமன்றத்தில் எடுத்துரைத்தார். அப்போதுதான் எனக்கு இதைப்பற்றித் தெரியவந்தது. அப்போதும்கூட சில அடிப்படைத் தகவல்கள் மட்டும்தான், எனக்குச்



2003 மே 8] [செல்வி ஜெ ஜெயலலிதா]

சொல்லப்பட்டன. எனவேதான், 4-1-2003 மற்றும் 10-4-2003 அன்று நான் இந்த அவையில் விதி 110-ன்கீழ் அளித்த அறிக்கைகளிலும்கூட, மாணவி ஷீலாவைப்பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. ஏனென்றால், அதுவரை, இந்தத் துயர சம்பவத்தைப்பற்றி, என்னிடம் எடுத்துக் கூறாமல், ஒரு சதியின் பேரிலே, என்னிடமிருந்து, அது மறைக்கப்பட்டுவிட்டது. பின்னர், அரசு தலைமை வழக்கறிஞர், உயர் நீதிமன்றத்தில், இதுகுறித்துக் கூறியதையடுத்து, இவ்வாறு கல்லூரியில் படித்த ஒரு மாணவி, தனது வாழ்க்கையைத் தொலைத்துவிட்ட துயரத்தைக் கேள்வியுற்று, அதைப்பற்றிய முழு விவரங்களையும், எனக்குத் தெரிவிக்கும்படி கூறினேன். இதுபற்றிய முழு விவரமும் எனக்குத் தெரிய வந்தபோது, நான் மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். இப்படி மாணவி ஷீலா பற்றிய தகவலை, நமக்குத் தெரியாமல் செய்து விட்டார்களே என்று மிகவும் வருத்தம் அடைந்தேன்.

*முற்பகல் 11-20*

வசந்தத்தின் தலைவாசலில் நிற்க வேண்டிய ஒரு பெண், தனது வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு, துயரத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதை அறிந்து, உடன் அவருடைய இழப்புக்கு, உரிய பரிகாரத்தை வழங்க வேண்டுமென்று நினைத்தேன். உடனே பாதிக்கப்பட்ட அந்தப் பெண், செல்வி எம். ஷீலாவிற்கு 9 இலட்சம் ரூபாய், முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்குவதற்கு ஆணையிட்டுள்ளேன் என்பதை இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

## 5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். பேசுகிற உறுப்பினர்கள் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். டாக்டர் வள்ளல் பெருமான்.

***டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொள்வதற்கு வாய்ப்புத் தந்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

வனங்கள் உலகத்தை குளிர்ச்சியாகவும், வளமுடையதாகவும் வைத்து இருக்கும் அருட் செல்வங்கள் ஆகும். வேளாண்மைக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக நிலத்தைப் பயன்படுத்தும் மிகப் பெரிய அரசுத் துறையாக வனத் துறை விளங்கிக்கொண்டிருக்கிறது.

மரங்கள் பூமியிலுள்ள நீரை ஆவியாக்கி காற்று மண்டலத்தில் வெளியிடுவதன் மூலம் நீர் சுழற்சியினை நிலைப்படுத்தும் ஒரு முக்கிய இணைப்பாக இங்கே விளங்கிக்கொண்டிருக்கின்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையில் இருக்கின்ற, பணி செய்கின்ற பணியாளர்களுடைய பிரச்சினைகள் சம்பந்தமாக சில கோரிக்கைகளை நான் இங்கே வைக்க விரும்புகிறேன்.

வனத் துறைப் பணியாளர்கள், தமிழ்நாடு மாநில வனச் சட்டம், 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம், 1972, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகள் யாவையும் வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. வனத் துறையில் Watcher, Guard, Forester, Forest Ranger என பல்வேறு பதவிகளில் சுமார் 5,000-க்கும் மேற்பட்டோர் பணி செய்கிறார்கள். Forester பதவிகளிலே, 1,700 பேர் பணி செய்கிறார்கள். 700 பேர் பணி செய்கின்றார்கள். Forester, Forest Ranger பணி செய்கின்ற கிட்டத்தட்ட 1500-க்கு மேற்பட்ட பதவிகளில் தாங்கள் பணியில் சேர்ந்ததிலிருந்து கடந்த 25 பணியாளர்கள் உயர்வு இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக் ஆண்டுகளாக பதவி கூறுகிறார்கள். ஆகவே இதைக் கருத்தில்கொண்டு கொண்டிருப்பதாகக் அவர்கள் பதவி உயர்வு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய துறை அமைச்சர் நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வேண்டுமென்று உயர்வு கொடுப்பதன் காரணமாக எந்த நிதிச் சுமையும் பதவி ஏற்படாது என்று நான் நினைக்கிறேன். காரணம், ஏற்கெனவே கூடுதலாக பதவி உயர்வு பெற்றிருந்தால் என்ன சம்பளம் வாங்குவார்களோ, அவர்கள் அதை தற்போது பெற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு பதவி உயர்வு கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, காவல் துறை, தீயணைப்புத் துறை, சிறைத் துறை ஆகியவற்றில் பணி செய்கின்ற காவலர்களுக்கு என்னென்ன வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளதோ, அதைப்போல இந்த வனத் துறையில் பணி செய்கின்ற பணியாளர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று,



குறிப்பாக வனக் காவலர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இங்கே நான் கேட்டுக்கொள்கிறேன். இவர்களையும் Uniformed Services சீருடைப் பணியாளர் துறையிலே சேர்த்தால் மிக நன்றாக இருக்குமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-25

அதேபோல வனத் துறையில் பணி செய்கின்ற காவலர்கள் பல risk-களை அவர்கள் சந்திக்க நேரிடுகிறது. ஆகவே அவர்களுக்கு ஒரு கணிசமான risk allowance-ஐ வழங்க வேண்டுமென்று இந்தத் துறையின் சார்பிலே நான் கேட்டுக்கொள்கிறேன். வன விலங்குகளால் அடிக்கடி மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அதையும் கருத்தில்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக நடவுகள் செய்யப்படும் மரக் கன்றுகளை தொடர்ந்து பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கையையும் எடுக்க வேண்டுமென்று நான் இங்கே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இதுபோன்ற பல்வேறு பிரச்சினைகள் இருப்பதன் காரணமாக பல காலங்களில் பல கோரிக்கைகளை வனத் துறையைச் சார்ந்த பணியாளர்கள் வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கைகளை நிவர்த்தி செய்வதற்காகவும் வனத் துறையை நவீனப் படுத்துவதற்காகவும், ஊழியர்களுடைய நலப் பணிகளை ஆய்வு செய்வதற்காகவும் ஒரு வனத் துறை Commission—ஆணையம் அமைத்தால் நன்றாக இருக்கும் என்று பல ஆண்டுகளாக வனத் துறையிலே பணி செய்கின்ற பணியாளர்கள் கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களும், துறை சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களும் வனத் துறை Commission ஒன்றை அமைத்தால் மிக நன்றாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இப்பொழுது தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமாக தரிசு நிலங்களிலே மரக் கன்றுகளை வளர்க்கவும், நடவு செய்திடவும் வனத் துறையிலே பணிசெய்கின்றவர்களுக்கு அந்தப் பணியைக் கொடுத்தால் மிகச் சிறப்பாகச் செய்வார்கள். காரணம், அவர்களுக்கு ஏற்கெனவே அந்த வனத் துறையிலே நல்ல ஒரு அனுபவம் இருக்கின்ற காரணத்தால் அவர்கள் நிச்சயமாக இந்தத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்திற்கு மிக உதவியாக இருப்பார்கள் என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல தமிழகத்திலே வனத் துறை சம்பந்தமாக வன மண்டலம் 11 மண்டலங்கள் இருக்கின்றன. அந்த 11 மண்டலங்களோடு, விழுப்புரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு 12-வது வன மண்டலம் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். தற்சமயம் விழுப்புரம், கள்ளக்குறிச்சி போன்ற பகுதிகளில் இருக்கின்ற அந்த வனக் கோட்டங்கள் தருமபுரி மாவட்டத்திற்குச் சென்று பணிகளைக் கவனிக்க வேண்டிய ஒரு கட்டாயத்தில் இருப்பதன் காரணமாக விழுப்புரம் Territorial கோட்டம், விழுப்புரம் சமூகக் காடுகள் கோட்டம், கள்ளக்குறிச்சி கல்வராயன்மலை உள்ளிட்ட கோட்டம், இடைபடுகாடுகள் உற்பத்திக் கோட்டம் ஆகிய கோட்டங்களைச் சேர்த்து மேலும் செங்கல்பட்டு மாவட்டம், சேலம் மாவட்டம் (ஆத்தூர்) போன்ற மாவட்டங்களில் இருக்கின்ற ஒரு சில கோட்டங்களைச் சேர்த்து ஒரு புதிய வன மண்டலத்தைத் தொடங்கிட வேண்டும் என்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்ததாக, சுற்றுச் சூழல்பற்றி நான் சில கருத்துகளை வைக்க இருக்கின்றேன். இங்கே கேள்வி நேரத்தின்போது, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். அதற்கு பல சட்டமன்ற உறுப்பினர்களும் துணைக் கேள்விகளைக் கேட்டு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் சிறப்பாக, விளக்கமாக பதிலை இங்கே சொன்னார்கள். இருந்தாலும், சென்னை மாநகரத்தின் மக்கள் பெருக்கத்தின் காரணமாகவும் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாகவும், வாகனப் போக்குவரத்து மிக அதிகரித்து வருகிறது. அந்த வாகனப் போக்குவரத்து அதிகரித்ததன் காரணமாக அவை வெளியேற்றும் வாயுக் கழிவுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இந்த வாயுக் கழிவுகளைப் போக்குவதற்காக Emission Test Centre பரிசோதனை நிலையத்தை தமிழக அரசு கிண்டி, அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி போன்ற பகுதிகளிலும் மற்றும் 120 Centre-கள் தனியாரிடமும் கொடுத்து சோதனை நடத்திக் கொண்டிருக்கின்றன. ஆனாலும் இவ்வளவு Centre-களிலும் அந்த Emission Test செய்யப்பட்டாலும் காலையிலே 11 மணிக்கு மேல், மாலையிலே 5,6 மணிக்கும் அண்ணா சாலையில் செல்லும்போது, வாகனத்தில் செல்கின்றவர்கள் கண் எரிச்சல் அடைகின்ற அளவிற்கு இன்றைக்கு காற்று மாசு பட்டிருக்கின்றது. இதைக் கருத்தில்கொண்டு, இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்கள் இதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ....



**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையிலேகூட கேள்வி நேரத்தின்போது ஏறத்தாழ 10 துணைக் கேள்விகளுக்கு மேல் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு மனிதனுடைய ஆரோக்கியத்திற்கு மிக அத்தியாவசியமாக தேவைப்படுகின்ற அந்த காற்று மாசுபடுதலைத் தடுக்க வேண்டுமென்பதற்காக இந்தத் துறைக்கு பல்வேறு அரிய ஆலோசனைகளையும், உத்தரவுகளையும் வழங்கி இருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையிலே காற்று மாசுபடுவதைத் தடுப்பதற்காக இப்பொழுது 5 மாவட்டங்களிலே மட்டும் கட்டாயமாக மாசுக் கட்டுப்பாடு சான்றிதழ் பெற வேண்டுமென்ற நிலை உள்ளதை மாநிலம் முழுவதற்கும் விரிவுபடுத்தச் சொல்லியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே இப்பொழுது பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மேற்கொண்டு வருகிறது. அதற்குப் பின்பாகவும், இப்பொழுது கணினிமயமாக்குவதற்காகவும், அப்படிப்பட்ட manual மூலமாகச் செய்கின்ற இந்தப் பணி, மனித சக்தியை மட்டும் பயன்படுத்தி செய்கின்ற அந்தப் பணியை கணினிமயமாக்கி. அதிலே மிகக் கடினமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவுறுத்தியதன் காரணமாக இப்பொழுது தமிழக அரசு அதை கொள்கை அளவிலே ஏற்றுக்கொண்டு, மிக விரைவிலே காற்று மாசு படுவதைத் தடுப்பதற்காக அதிதீவிரமான, மிகக் கடுமையான நடவடிக்கைகளை புதிய தொழில்நுட்பத்தைக் கையாண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் *11-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் பி. வள்ளல் பெருமான், இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலும், இந்த தனியார் பரிசோதனை நிலையங்கள் வாகனங்களைப் பார்க்காமலேயே, அதை செய்யாமலேயே, சான்றிதழ் வழங்குவதாகத் தெரிய வருகின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து...

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி தனியாருக்கு அனுமதிக்கப்பட்டு இருக்கின்ற

அந்த நிறுவனங்கள் சரியாகக் கவனிக்காமல் அந்தச் சான்றிதழ்களை வழங்கினால், அப்படிப்பட்ட நிறுவனங்களின் உரிமங்கள் உடனடியாக இரத்து செய்யப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** அந்த Test-களை Monitoring செய்வதற்கு Tamil Nadu Pollution Control Board-க்கு ஒரு சிறப்பு அதிகாரத்தைக் கொடுத்தால் நிச்சயம் நன்றாக இருக்கும்; மேலும், சிறப்பாக இருக்கும் என்ற கருத்தை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, கடலூர் மாவட்டத்திலே சதுப்பு நிலக் காடுகள் பிச்சாவாம் வனப் பகுதியில் இருக்கிறது. இந்த பிச்சாவரம் வனப் பகுதி கிட்டத்தட்ட 1,500 ஹெக்டேர் பாப்பளவிலே இருக்கிறது. இந்த பிச்சாவாம் வனப் பகுதியிலே மாங்குரூஸ் காடுகள் வளர்ந்திருக்கின்றன. இந்த பிச்சாவரம் வனப் பகுதியில் மேலும் பல்வேறு மரங்கள் வளர்கின்றன. வெண்கண்டன், கடுங்கண்டன், சொரப்புண்ணை, பண்ணகுத்தி, சிறுகண்டன், நரிகண்டன், தில்லைமரம் மற்றும் தாவரங்களான பெருஉமரி, சிறுஉமரி, மணிஉமரி, வங்காாவாசி, கழிமுள்ளி போன்ற பல்வேறு தாவரங்கள் சிறப்பான முறையில் அங்கே இருப்பதன் காரணமாக, இயற்கைச் சீற்றங்களால், வெள்ளக் காலங்களிலே அடிக்கும் புயலைத் தடுத்து நிறுத்தக்கூடிய, அந்த இயற்கையின் வேகத்தை தடுத்து நிறுத்தக்கூடிய ஒரு சக்தியாக இந்த சதுப்பு நிலக் காடுகளிலே இருக்கின்ற மாங்களும் தாவாங்களும் இருக்கின்றன.

அதைப்போல, சதுப்பு நிலக் காட்டில் சுற்றுச்சூழலைப் பாதுகாத்திடவும், மண் அரிப்பைத் தடுத்திடவும் இது மிக உயர்வாகப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்படிப்பட்ட சதுப்பு நிலக் காட்டை மேலும் சிறப்பாகப் பாதுகாத்திட அங்கு வெள்ளாற்றிலே இருந்து, வங்காள விரிகுடா கடலிலே கலக்கின்ற தண்ணீர், அடிக்கடி வெள்ளக் காலங்களிலே வருகின்ற காரணத்தால், மண்மேடிட்டு அங்கே இதுபோன்ற தாவரங்கள் வளருவதற்குத் தடையாக இருக்கிறது. எனவே அந்த முகத்துவாரத்தை, தமிழக அரசும், இந்தத் துறையினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அதைக் கருத்தில்கொண்டு, அந்த முகத்துவாரத்தை வெட்டினால் அந்தச் செடிகள் வளருவதற்குண்டான தண்ணீர் தாராளமாக வரும். அந்த வனப் பகுதியில் 4,443 வாய்க்கால்கள், கால்வாய்கள் இருக்கின்றன. இந்த வாய்க்கால்கள், கால்வாய்கள் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை மூலமாக படகு சவாரி



செய்யப்படுகிறது. ஆகவே இது சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்றது. அதைப்போல, சுற்றுலா மையமாகவும் இருக்கின்றது. ஆக, இந்த இரண்டிற்குமான ஒரு சிறப்பான இடமாக கடலூர் மாவட்டம் விளங்குவதால், இந்த சதுப்பு நிலக் காட்டை மேன்மேலும் பாதுகாத்திட ஒரு சிறப்பு நிதியை தமிழக அரசு ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு மணித்துளிகளில் முடித்துவிடுகிறேன்.

அதேபோல, கடலூர் மாவட்டத்திலே நெய்வேலியில் மிகப் பெரிய பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் இருக்கிறது. அந்தப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கத்திலே வெட்டப்படும் பழுப்பு நிலக்கரி போக, மீதி வெளியேற்றப்படுகின்ற அந்தக் கழிவுநீரின் மூலமாகக் கிட்டத்தட்ட 25,000-லிருந்து 30,000 ஏக்கர் நிலங்களில் பயிர்கள் விவசாயம் செய்யப்படுகின்றன. அந்தக் கழிவுநீரிலே பல்வேறு Chemicals இரசாயனங்கள் கலந்திருப்பதன் காரணமாக, அந்த நிலங்களிலே எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக அதன் தன்மை, தாம் குறைந்து வருகின்றது. அதற்கு சுற்றுப்புறச் சூழல் துறை உரிய நடவடிக்கை எடுத்து, பாதிக்கப்பட்ட அந்த நில உரிமையாளர்களுக்கு நஷ்ட ஈட்டைப் பெற்றுத்தர வேண்டும். அதைப்போல, நெய்வேலியில் உள்ள...

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வள்ளல் பெருமான் அவர்கள் பேசுகின்றபோது, Forest Rangers, Foresters, Forest Guards, Forest Watchers இவர்களையெல்லாம் சீருடைப் பணியாளர்களின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று கூறினார். அவர்கள் ஏற்கெனவே சீருடைப் பணியாளர்கள் என்றுதான் வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் பி. வள்ளல் பெருமான்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த நெய்வேலி நிறுவனத்தின் மூலமாக பாதிக்கப்படுகின்ற அந்த விவசாயிகளுக்கு நெய்வேலி நிறுவனத்திற்கு கொடுக்கின்ற royalty தொகையிலே ஒரு குறிப்பிட்ட தொகையைப் பெற்றுத்தந்தால், கடலூர் மாவட்டத்திலே இருக்கின்ற அந்த விவசாயிகள் பயனடைவதற்கு சிறப்பான ஒரு நல்ல திட்டமாக இருக்கும். அதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைக் கூறி விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். மாணிக்கராஜ்.

**திரு. எஸ். மாணிக்கராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறை மற்றும் சுற்றுச் சூழல் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவை தலைவர் அவர்களுக்கும், முதற்கண் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

12 ஆண்டுகள் நாங்குநேரி ஒன்றியக் கழகச் செயலாளராகவும், 2 ஆண்டுகள் நெல்லை புறநகர் கிழக்கு மாவட்டக் கழகத்தினுடைய துணைச் செயலாளராகவும் பணியாற்றிய என்னை நாங்குநேரி சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் எங்கள் அன்னையே, நானும் எனது குடும்பத்தாரும் வாழ்நாள் முழுவதும் வணங்கும் இதய தெய்வம் அம்மா அவர்களே, உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன்.

தாங்கள் சர்ச் பார்க் கான்வென்ட்டில் படித்த காலத்தில் படிப்பில் மட்டுமல்லாது விளையாட்டு, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, கவிதைப் போட்டி அனைத்திலும் முதல் மாணவியாகவும், மெட்ரிகுலேசன் தேர்வில் தமிழகத்திலேயே முதல் மாணவியாகத் தேர்ச்சி பெற்ற தாங்கள், தமிழக முதல்வராகப் பொறுப்பேற்று தமிழக மக்களுக்கு அரும்பணியாற்றுவது அறிந்து, அனைத்து மக்களும் பெருமைப்படுகிறார்கள். இந்தியாவிலேயே தமிழகத்தை முதல் மாநிலமாக மாற்றிட அனைத்துத் துறைகளையும் ஆய்வு செய்து, அல்லும் பகலும் அயாராது அரும்பணியாற்றும் அன்னையே, உங்கள் ஆங்கிலச் சொல்லாற்றலைக் கண்டு அகில உலகமே வியக்கிறது. இந்தியாவின் வருங்கால நம்பிக்கை நட்சத்திரம் என எண்ணி மகிழ்கிறது.

சட்டமன்ற நடவடிக்கைகளை இருட்டடிப்பு செய்தும், இட்டுக்கட்டியும் செய்திகளை வெளியிட்டன சில பத்திரிகைகள். ஆனால் உண்மைச் சம்பவங்கள் மக்களுக்குத் தெரிய வேண்டும் என்ற நோக்கத்தோடு, தொலைக்காட்சியின் மூலம் சட்டமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பி சாதனை படைத்திருக்கிறீர்கள். பல கிரிமினல் வழக்குகளில் சம்பந்தப்பட்டவர், சட்டமன்றத்திலே பேரவை மரபை மீறி, கலவரம் செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தில் நடந்துகொண்டதையும், சுமார் 30 நிமிடங்கள் சட்டமன்றத்தில் உரையாற்றிட வாய்ப்புக் கொடுத்தும், பேரவைத்



தலைவர் முன்பு கொள்கை விளக்கக் குறிப்பைக் கிழித்தெறிந்த சம்பவத்தையும் தொலைக்காட்சியிலே நேரடியாக ஒளிபரப்பியதை மக்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள். இத்தகைய மலிவான விளம்பரம் தேடுபவர்களை மக்கள் அடையாளம் கண்டுகொண்டார்கள். குற்றங்களையும் செய்துவிட்டு, மக்கள் பிரச்சினைகளை இந்த மாமன்றத்தில் பேசாமல் கூட்டத்தொடர் முழுவதும் அவையைப் புறக்கணிப்பு செய்யும் இந்தக் கலகக்காரர்களை மக்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டு வருகிறார்கள்.

கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு வளாகம் கட்டுவதில் 3 மடங்கு கூடுதல் கான்ட்ராக்ட் விட்டு முறைகேடு செய்த பெருச்சாளிகள்தான் இவர்கள். இவர்கள் ஜம்பம் இனி பலிக்காது. அத்தனை பேருக்கும் டாட்டா காட்டி அகிலம் புகழும் ஆட்சி நடத்தும் அம்மா அவர்களே, உங்கள் திசைநோக்கி வணங்குகிறேன்.

கொடுமுடியாறு திட்டம் நிறைவேற்றி உங்கள் திருக்கரங்களால் திறந்து வைக்கும் நிலை ஏற்பட்டிருக்கிற நிலையைச் செய்திருக்கிறீர்கள். களக்காடு பேரூராட்சி பேருந்து நிலையத்தை ரூ. 1.7 கோடி செலவில் அமைக்க அடிக்கல் நாட்டியமைக்கும், வடக்கு வள்ளியூர், பணகுடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் ரூ. 16.5 கோடியில் அமைக்க அடிக்கல் நாட்டியமைக்கும், ரூ. 45 கோடி செலவில் நாங்குநேரி-திசையன்விளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைத் தொடங்கி வைத்தமைக்கும், வள்ளியூர் அரசு மருத்துவமனை நபார்டு அல்லது உலக வங்கி மூலம் ரூ. 1.1 கோடி செலவில் அமைக்கப்படும் என்று அமைச்சர் கூறியமைக்கும், எனது தொகுதி மக்கள் சார்பாகவும், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தொகுதியில், கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படாத 134 கிராமங்கள் விடுபட்டுள்ளன. அதற்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. ஆதலால் விடுபட்டுள்ள இந்தக் கிராமங்களுக்கு தாமிரபரணி ஆற்றிலிருந்து தண்ணீர் கிடைத்திட ஆவன செய்யப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி நாங்குநேரியில், கடந்த தி.மு.க. அரசு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு அவசரக் கோலத்தில் நிலங்களை முழுமையாகக் கையகப்படுத்தாமல், அடிக்கல் நாட்டிவிட்டுச் சென்றுவிட்டனர்.

[திரு. எஸ். மாணிக்கராஜ்] [2003 மே 8

தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தொழில் துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்கியிருக்கிற இந்தக் காலகட்டத்தில், மற்றொரு மைல் கல்லாக நாங்குநேரியில் ஒரு சிறப்புப் பொருளாதார மண்டலத்தை ஏற்படுத்திட அம்மா அவர்களின் அரசு முன் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்காக எனது தொகுதி மக்கள் சார்பாக அம்மா அவர்களின் அரசுக்கும், புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-40)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களே, நீலகிரி மாவட்டம், முதுமலை தெப்பக்காட்டில் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தால் கட்டப்பட்ட விடுதி ஒன்று செயல்பட்டு வந்தது. அங்கு, நாங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் சென்றால், தங்கிக்கொள்ள ஏதுவாக இருந்தது. அங்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணிகள் அதிகமான அளவில் தங்கிச் செல்கின்றனர். அந்த விடுதி சிறப்பாகச் செயல்பட்டு வந்தது. கடந்த தி.மு.க. ஆட்சியில், 5 ஆண்டுகளாக அது மூடப்பட்டிருந்தது. அதை உடனே திறக்க அம்மா அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பச்சையாறு அணைத் திட்டத்தை நிறைவேற்றித் தந்த புனிதத் தலைவி புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மேலும் ஒரு நன்றியை உரித்தாக்குகிறேன். நாங்குநேரி மற்றும் வள்ளியூரில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தந்தமைக்கும், மாவடி, சிதம்பரபுரம் ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துத் தந்தமைக்கும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1998 ஆம் ஆண்டு தி.மு.க. அரசு ஓர் அரசாணை வெளியிட்டது. அதனால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் தடிகள் மூலம் பதிவு செய்யும் கட்டணம், அனுமதிச் சீட்டு போன்ற இனங்களில் அரசுக்குக் கிடைத்து வந்த கோடானுகோடி ரூபாய் வருமான இழப்பு அரசுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த அரசாணை எண் 239, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை, நாள் 12-8-1998 என்பதாகும். இவ்வரசாணையை இரத்து செய்தால் வனத் துறைக்குப் பல கோடி ரூபாய் வருவாய் ஈட்ட வாய்ப்பு இருக்கிறது என்று தெரிகிறது.



2003 மே 8] [திரு. எஸ். மாணிக்கராஜ்]

எனது தொகுதியில் வனத் துறைக்குச் சம்பந்தப்பட்டது களக்காட்டு மலை. தமிழகத்தில் புலிகள் காப்பகம் இங்கு மட்டும்தான் உள்ளது. இது இந்தியாவில் 5-வது இடத்தில் இருக்கும் பெருமையுடையது. இங்கு சிங்க வால் குரங்கு, சிறுத்தை, வேங்கை, கடுவாய் போன்ற 38 புலிகளையும், யானை, மான் வகைகளையும், 250 வகையான பறவைகளையும் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசாங்கம்தான் பாதுகாத்து வருகிறது. ஆனால் கடந்த தி.மு.க. ஆட்சியில் களக்காடு மலையில் பூமியில் உள்ள, உலக அளவில் புகழ்பெற்ற தரம் மிகுந்துள்ள அபூர்வமான கற்களைத் தோண்டித் தோண்டி பல கயவர்கள் கடத்தி உள்ளார்கள். அவர்கள் காலத்தில் அமெரிக்கா சென்றபோது வைரக் கடத்தல் நடைபெற்றது என்று செய்தி வெளியானதே, அதேபோன்றுதான் எனது தொகுதியிலும் இந்த இடத்திலே வைரக் கற்கள் போன்ற பல உயர்ந்த கற்கள் கடத்தப்பட்டிருக்கின்றன. இதை ஆராய்ந்து, விலை மதிப்புள்ள இந்தப் பொருட்களைப் பாதுகாக்க, அரசாங்கத்திற்கு வருமானம் வர நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

களக்காடு பேரூராட்சியில், செங்கச்சேரியிலே ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சுற்றுலாத் துறை மூலம் திட்டம் நிறைவேற்ற வேண்டுகிறேன். கூந்தங்குளம் பறவைகள் சரணாலயத்திற்கு மாநில அரசு நிதி உதவியுடன் சுற்றுலாத் துறை மூலம் அபிவிருத்தி செய்ய ரூ.24 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதையும் நிறைவேற்றித் தருமாறும், திருக்கருங்குடியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் செய்திடவும், எனது தொகுதிக்குட்பட்ட மூலக்கரைப்பட்டியில் ஓர் அரசு பேருந்து நிலையம் புதிதாக அமைத்திடவும், மேலும், அதில் ஒரு புறவழிச் சாலை ஒன்று அமைத்திடவும் வேண்டுகிறேன்.

அம்மா, வள்ளியூர் ஒரு வளர்ந்து வருகிற நகரம், சிறப்பு நிலை பேரூராட்சி. அங்கு ஒருவழிப் பாதையாக இருப்பதால் பல விபத்துகள் ஏற்படுகின்றன. அதற்கு ஒரு புறவழிச் சாலை அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். நாங்குநேரி சார்பு நீதிமன்றம் அமைத்திட ரூ.50 இட்சத்தில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் சார்பு நீதிமன்றம் அமைத்திட ரூ.2½ கோடியில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதற்கும் நிதி ஒதுக்கீடு செய்துதர வேண்டுகிறேன்.

மற்றும், நாங்குநேரி ஒன்றியம், தோட்டாக்குடி பஞ்சாயத்து, மருதகுளத்தில் கால்நடை மருத்துவமனை ஒன்றை புதிதாக அமைத்துத் தர வேண்டுகிறேன். வடக்கு விஜயநாராயணம், திருக்கருங்குடி, நாங்குநேரி போன்ற பெரிய குளங்களில் தூர்வாரி பல வருடங்கள் ஆகின்றன; அவற்றைத் தூர்வாரிச் செம்மைப்படுத்தி, அப்பகுதிவாழ் மக்களுக்கும் விவசாயிகளுக்கும் பயன்படும்படிச் செய்ய வேண்டுகிறேன்.

முற்பகல் 11-45

களக்காடு ஒன்றியத்தில், பெல்ஜியம் என்ற பகுதியில் அரசு மருத்துவமனை ஒன்று செயலிழந்து உள்ளது. இதைப் புதுப்பித்து, புத்துயிர் பெற்று மீண்டும் இயங்க, அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்வில் ஒளியேற்றி, வட்டி ரூ.310 கோடி தள்ளுபடி செய்த கருணை உள்ளம் கொண்ட தாயே, எனது நாங்குநேரி தொகுதிக்குட்பட்ட குளங்களுக்கு மணிமுத்தாறு அணைத் திட்டத்தின் மூலம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. மணிமுத்தாறு நீர்த்தேக்கத்தில் 80 அடி முதல் 94 அடி வரை நீர்மட்டம் உயருகிற நோத்தில் மட்டுமே இந்தத் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அது மிகவும் செழிப்பான காலத்தில்தான் நடைபெறுகிறது.

தற்போது எனது தொகுதிக்குட்பட்ட பாணான் குளத்திலிருந்து அம்மா அவர்களின் செல்லக்குட்டித் தொகுதியான சாத்தான்குளத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்ல ரூ.11 கோடி நிதியளவில் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது.

நாங்குநேரி தொகுதி வழியாக வெட்டப்படுகிற இந்தக் கால்வாயால் அதற்கு அருகில் உள்ள குளங்களும் தண்ணீர் வசதி பெறுகின்ற வகையில் இந்தத் திட்டம் அமைந்திட எனது தொகுதி விவசாயப் பெருங்குடி மக்கள் சார்பாக, அம்மா அவர்கள் பாதம் தொட்டு வணங்கி கேட்டுக்கொள்கிறேன்.

அம்மா, ஏர்வாடி பேரூராட்சி, ஏர்வாடி மக்கள்தொகை அதிகமாக உள்ள இடம். அந்த இடத்தில் அரசு மருத்துவமனை அமையாமல் இருக்கிறது. அந்தப் பகுதியில் அரசு மருத்துவமனை அமைப்பதற்கு, பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, பேரூராட்சிக்குச்



சொந்தமான நிலத்தையும் தந்திருக்கிறார்கள். அந்த இடத்தில் மருத்துவமனைக் கட்டடங்கள் கட்ட அரசு அனுமதி வழங்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

களக்காட்டிலிருந்து சிதம்பரபுரம் போகும் பாதையில் ராஜாக்கமங்கலம் என்ற பஞ்சாயத்தில் அணைக்கரை என்ற கிராமம் இருக்கிறது. மழை வந்தால், அந்த இடத்திலிருந்து மக்கள் எங்கேயும் போகமுடியாத நிலை. இப்படி, தமிழகத்தில் ஓர் இடம் இருக்கிறது என்றால், அது அணைக்கரை என்ற கிராமத்தில்தான் இருக்கிறது. அந்த அணைக்கரை கிராமத்திற்கு ஒரு பாலம் கட்டித் தரவும், நம்பியாற்றின் குறுக்கே பாலம் ஒன்று அமைத்திடவும், கீழக்காடுவெட்டியில் ஒரு பாலம் அமைத்துத் தந்திடவும் அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், திருக்கருங்குடியிலிருந்து ராஜாபுதூர் போகும் பாதையில் தாம்போதியில் வெள்ளம் ஏற்படும்போது பொதுமக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அம்மா அவர்கள் போக்குவரத்து வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேலும் பாப்பான்குளம் ஊராட்சியில், வடக்கு விஜயநாராயண ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட, பாப்பான்குளம் ஆரம்ப சுகாதார நிலையம் முள்செடிகள் முளைத்து, அந்தக் கட்டடங்கள், பாழ்பட்டுக் கிடக்கின்றன. அவற்றைச் சீர்செய்து, செவிலியர் நியமனம் செய்ய வேண்டும். வள்ளியூரில் 'டுபிக்கோ' நிதி உதவியுடன் அங்கு ஏற்பட்டிருக்கிற தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக, ரூ.94 இலட்சத்தில் ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. அது கொடுமுடியாறிலிருந்து வருகிற நிலை. அதையும் தாங்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வள்ளியூரில் வணிக வளாகம், திருமண மண்டபம் ஆகியவை கட்டுவதற்கும், 'டுபிக்கோ' நிதியில், ரூ.2 கோடி அதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. அதையும் அம்மா அவர்கள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பினைத் தந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியினைக் கூறி விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.என். சிவசுப்பிரமணியன்.

***திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** வனம் மற்றும் சுற்றுச் சூழல் தொடர்பான மானியக் கோரிக்கையிலே என்னைப் பேச அனுமதித்தமைக்காக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு முதற்கண் என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். விண்ணைப் படைத்து, மண்ணைப் படைத்து மனிதனைப் படைக்கும் முன்னே, மனிதனுக்குத் தேவையான இயற்கை வளங்கள் அனைத்தையும் படைத்துவிட்டு, இறுதியாகத்தான் இறைவன் இந்தப் பூவுலகிலே மனிதனைப் படைத்தான். ஆரம்ப காலத்திலே இயற்கையோடு இயைந்து வாழ்ந்துவந்த மனிதன் நாகரிக முதிர்ச்சியிலே தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்வதுபோல், சுயநலம் காரணமாக இயற்கையைச் சூறையாடத் தொடங்கினான். இயற்கை வளங்கள் குன்றக் குன்ற மனித வளங்கள் குன்றத் தொடங்கின. மனித ஆரோக்கியத்திற்கு அடிப்படையாய், ஆதாரமாய் இருந்த சுற்றுச் சூழலும், மாசுபட்டுப்போய், மெல்ல, மெல்ல மனித வளமும் மாசுபடத் தொடங்கியது. மேலும், இயற்கையை இறைமையாய் வழிபடும் தேசம் இது. ஆக, இறைமையைப் போற்றும்முகத்தான், இயற்கையைப் பேணி, மனித சமுதாயத்தை மாசிலிருந்து மீட்டு, நலம் மேவ வாழ வைக்கும் நல்ல சிந்தனையோடு, இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பினைத் தயாரித்துத் தந்தமைக்காக, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களை நான் முதற்கண் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். காடு செழிக்க, நாடு செழிக்கும். அதனால் வீடு செழிக்கும் என்னும் உன்னத நோக்கினை உள்ளடக்கி வனக் கொள்கை, உற்பத்தி வன்வியல், சமூக வனவியல் போன்ற நல்ல பல திட்டங்கள் சொல்லப்பட்டு உள்ளன. அவை அனைத்தையும் நான் மனமார வரவேற்கிறேன். அதில் முதலாவதாக வனக் கொள்கையும், அதன் முக்கியக் குறிக்கோள்களையும் நான் வரவேற்கின்றேன்.

முற்பகல் 11-50

மேலும், தமிழகத்தில் மொத்த நிலப் பரப்பிலே, 25 விழுக்காடு வனப் பரப்பாக உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது சிறப்பான அம்சமாகும். ஆனால் அதேநேரத்திலே, ஓர் ஓட்டைப் பானையிலே ஒரு வாளி நீரை மட்டுமல்ல; ஒரு கேணி நீரையும் ஒட்டுமொத்தமாக இறைத்து ஊற்றினாலும், அப்பானை நிரம்ப வழியில்லை. அதுபோல, வனங்கள் கொள்ளையடிக்கப்படும் கொடுஞ்செயலுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்காமல் வனப் பரப்பினை அதிகப்படுத்துவதால் மட்டுமே அதன் உண்மையான இலட்சியத்தை



நாம் எட்டிவிட முடியாது. ஆகவே வனப் பாதுகாப்பிற்கு நமது அரசு மேலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், காட்டை வெட்டிக் காசாக மாற்றும் கயவர்களை, இவ்வாசு கடுமையான தண்டனைக்கு உட்படுத்த வேண்டும். ஒருபுறம் இதுபோன்ற வனத் துறையைச் சார்ந்த மரங்கள், சட்ட விரோதமாக வெட்டப்பட்டு, திருடப்பட்டு வரும் நிலையிலே, நீலகிரி போன்ற மாவட்டங்களில் தனியார், தங்களது பட்டா நிலங்களில் வளர்த்து வருகின்ற சில்வர் ஓக் போன்ற மரங்களை வெட்டுவதற்கு மட்டும் அனுமதி மறுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அனுமதி மறுக்கப்பட்டு வருவதால மக்கள் பாதிக்கப்படுகின்றனர். ஆகவே பட்டா நிலங்களில் .... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்வர் ஓக் மரங்கள், 1997 ஆம் ஆண்டு, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், மாப் பட்டியலில் இருந்து எடுக்கப்பட்டு அவர்கள் Transit form 2 வாங்காமல், வெட்டிக்கொண்டு சென்றார்கள். அதை சன் டி.வி. தினந்தோறும்—நாம் ஆட்சிக்கு வந்த பிறகு, சில்வர் ஓக் மரங்கள் சென்றதை, மாத்தை வெட்டி, காடுகள் அழிக்கப்படுகின்றன என்று தினந்தோறும்—கூறிக் கொண்டிருந்தது. இப்போது அது கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறது. இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட பிறகு, சன் டி.வி.-யில் அந்த நிகழ்ச்சியைக் காண்பிப்பது கிடையாது. இப்படிச் சட்டத்திற்குப் புறம்பாக வெட்டப்படுவதைத் தடுப்பதற்குத்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில்வர் ஓக் மரங்கள் என்பது, நிழல் தரும் மரங்கள். தேயிலைச் செடிகளுக்கு நிழல் தரும் மரங்கள். அந்த மரங்களை 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை, 15 ஆண்டுகளுக்கு ஒருமுறை வெட்டாவிட்டால், அதில் இருக்கிற வேர்கள், வேர் ஊடுறுவி, பயிரைக் கெடுத்துவிடும். தேயிலைச் செடிகள் எல்லாம் வீணாகிப் போய்விடும். எனவேதான் அதை வெட்டுவதற்கு அனுமதி வேண்டுமென்று கேட்கிறோம். அங்கே ஒரு மாம் வெட்டப்பட்டால், சில்வர் ஓக்-ஐப் பொறுத்தவரையில், உடனே வேறு ஒரு சில்வர் ஓக் மரம் அங்கே நட்டுவிடுவார்கள். ஏனென்றால், அந்த மரம் நிழல் தரும் மரம். கண்டிப்பாகத் தேயிலைச் செடிகளுக்குத் தேவை. ஒரு மரம் போனால், ஒரு மரம் வருமே தவிர, காடு அழியாது. அது காட்டிலே வளர்க்கின்ற

மாம் அல்ல. தேயிலைத் தோட்டங்களில் நடப்படுகிற மாம். எனவே அதை வெட்டுவதற்கு அனுமதிக்க வேண்டும். வெட்டவில்லை என்று சொன்னால், விவசாயிகளுக்கு மிகவும் சிரமம் என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி வாங்கி வெட்டலாம்; அதில் எந்தத் தடையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி.

பட்டா நிலங்களிலே வளர்க்கப்படும் மரங்களை வெட்டுவதற்கு, உரிமையாளருக்கு அனுமதி வழங்க வேண்டுமென்று ஊட்டி சட்டமன்ற உறுப்பினர் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், காலப்போக்கிலே, சோலைப் பகுதிகள், வெகுவாகக் குறைந்துபோய் மனிதனுக்குத் தேவையான காபி, டீ எஸ்டேட்டுகளாக உருமாறிப் போனதன் காரணத்தினாலும், வனத் திருட்டுகள் மூலம் வன வளங்கள் குன்றிப்போய், நீராதாரங்கள் அடியோடு வற்றிப்போகும் அபாயம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், இதனால் இயற்கையான மழை வாத்தும் குறைந்து வருகிறது. ஆகவே தொன்மையான மர வகைகள் அடங்கிய வனச் சோலைகளை மீண்டும் உருவாக்கவும், இருக்கின்ற சோலைப் பரப்பினை அதிகரிக்கவும், மற்றும் பாதுகாக்கவும் இவ்வரசு போர்க்கால அடிப்படையிலே நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சமூகக் காடுகள் என்பது பற்றியெல்லாம் சென்ற ஆட்சிக் காலத்திலே பேசப்பட்டது. ஆனால் அவை ஏட்டளவிலே இருந்ததேயன்றி, யதார்த்தத்திலே நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதனை அடைய தனியார் மற்றும் சமுதாய நலன்களில் அக்கறையுள்ள சேவை அமைப்புகள் ஆகியவற்றின் வாயிலாக மரம் நடும் பணியை ஊக்குவிக்க இவ்வரசு முன்வர வேண்டும். இதன் மூலம் தமிழகத்தை ஒரு பசுமைத் தமிழகமாக மாற்றியமைக்க முடியும். இச்செயலால் சுற்றுச் சூழலை வெகுவாகத் தூய்மைப்படுத்த முடியும். இந்த நோக்கத்தின் முதற்படியாக இவ்வரசு முதலிலே சென்னையைப் பசுமை மாநகரமாக மாற்றியமைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும். மேலும், இதன் முதற்கட்டமாக, வாகனங்களால் வெளியேற்றப்படும் நச்சுப்



புகையிலேயிருந்து, சென்னை மாநகரையும், மக்களையும் நாம் காப்பாற்ற வேண்டும். என்னதான் emission test centre வைத்தாலும், புகையைக் கட்டுப்படுத்த முடியாது. இந்திய தேசிய காங்கிரஸ் ஆளுகின்ற டெல்லி மாநகரத்திலே வாகனப் புகையைத் தவிர்க்கும்பொருட்டு, டீசலுக்குப் பதிலாக இயற்கை எரிவாயுவை, அதாவது Compressed Natural Gas -ஐப் பயன்படுத்த வேண்டுமென்று கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதேபோல் சென்னை மாநகரிலும் நமது அரசு இத்திட்டத்தைப் படிப்படியாக அமல் நடத்த வேண்டுமென்று எனது தாழ்மையான கருத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-55

அதேபோல் நிலத்தடி நீர் மாசுபடுவதைத் தடுக்க, சாயப்பட்டறைகள், காகித ஆலைகள், Processing Units போன்ற தொழிற்சாலைகளில் குளோரினை அதிக அளவில் பயன்படுத்துவதால் வெளிவரும் கழிவுநீரில் Organo Chlorine Compounds, Dioxin இருப்பதால் அதைப் பயன்படுத்தும் மக்களுக்குப் புற்றுநோய் மற்றும் அடுத்த தலைமுறையினருக்குப் பிறப்பு உறுப்புகள் சிறுத்துப்போய், புத்தி சுவாதீனம் இல்லாத குழந்தைகள் மற்றும் அங்கஹீனமாகக் குழந்தைகள் பிறக்க வாய்ப்பு இருப்பதாக மேலை நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது. ஆகவே அதுபோன்ற அபாயங்களிலிருந்து நம் வருங்காலச் சந்ததியினரைக் காப்பாற்ற நமது மாசு கட்டுப்பாடு வாரியம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் பாராட்டுக்குரியன என்றாலும் இன்னும் இப்பணிகள் முழு வீச்சிலே முடுக்கிவிடப்பட வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2 மணித்துளிகளில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** குளோரின் பயன்பாட்டைத் தவிர்க்கும்பொருட்டு என் தொகுதியில் உள்ள தமிழ்நாடு காகித ஆலைக்கு இந்த ஆண்டு நிதி ஒதுக்கி, பணிகள் தொடங்க ஏற்பாடு செய்தமைக்காக எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கரூர், திருப்பூர் போன்ற நகரங்களில் உள்ள சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் சுத்திகரிக்கப்பட்டு ஆற்றிலே விடப்படுகின்றது. அந்நீர் சுத்திகரிக்கப்பட்டாலும்கூட, அதன் நச்சுத் தன்மை முழுமையாக அகற்றப்பட இயலாது. ஆகவே அந்நீர் ஆற்று நீரோடு கலப்பதால், ஆற்று நீரும் மாசுபட்டுப்போய், குடிநீர்

உபயோகப்படுத்தப்பட இயலாத நிலை ஏற்படுகின்றது. தற்போது சாயப்பட்டறைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரை முழுமையாகச் சுத்திகரித்து மறுசுழற்சி செய்ய மாசு கட்டுப்பாடு வாரியம் உத்தரவிட்டு இருந்தாலும்கூட, அதை முழுமையாக அமல்படுத்தும் வரை அந்த சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை ஆற்றிலே கலக்காமல் வறண்ட நிலங்களில் பாசனத்திற்கு உரிய நீராகப் பயன்படுத்தலாம் என்ற யோசனையைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற புகார் வந்து, கரூரில் சாயப்பட்டறை தொழிற்சாலை மூடப்பட்டது. உடனே அங்கிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும், தொழிலாளர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்; தொழிற்சாலையைத் திறப்பதற்கு வழிவகை செய்யுங்கள் என்று சொன்னார்கள். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொழில் துறையில் தமிழ்நாடு முதலிடமாக இருக்க வேண்டுமென்று எப்படி நினைக்கின்றார்களோ, அதேபோல் சுற்றுச் சூழலில் தமிழ்நாடு முதல் மாநிலமாக இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள். இரண்டும் இரண்டு கண்கள். சுற்றுச் சூழலும் பாதுகாக்கப்பட வேண்டும். அதனால்தான் மாசு கட்டுப்பாடு வாரியம் reverse osmosis என்று ஒரு new technology-ஐப் பயன்படுத்தி, சுத்திகரிக்கப்படுகின்ற அந்நீரை மறுபயன்பாட்டிற்கும் பயன்படுத்துகின்ற அளவிற்கு, இப்போது ஒரு திட்டத்தைத் தீட்டி, அது கரூரிலும், திருப்பூரிலும் உள்ள 2 பெரிய தொழிற்சாலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கிறது. மற்ற தொழிற் சாலைகளிலும் நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கிறோம்; அங்கும் நடவடிக்கை வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. டி.என். சிவசுப்பிரமணியன்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. இந்த வறட்சியான நேரத்தில் குடிநீருக்குப் பெரிய தட்டுப்பாடு இருப்பதனால் இந்த யோசனையை உங்களுக்குத் தெரிவித்தேன். இவ்வாறு அபாயகரமான பொருட்கள் மேலாண்மையை எளிமையாகவும், பயனுள்ள வகையிலும் நிர்வகிக்கலாம். அதேபோன்று திடக்கழிவுகள் மேலாண்மையைப் பொறுத்தவரையிலும், அனைத்து மாநகராட்சிகளிலும் மற்றும் பெரிய நகராட்சிகளிலும் குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்தை இவ்வரசு உடனடியாகத் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். இதன் வாயிலாக சுற்றுச் சூழல் கெடாமல், மின்



உற்பத்தியைப் பெருக்குவதோடு, குப்பைகள் அதிக அளவில் குவிந்து, சுற்றுச் சூழலை மாசுபடுத்துவதைத் தவிர்க்கலாம்.

பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை என்ற தலைப்பிலே, பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக சுற்றுச் சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக நடமாடும் கண்காட்சி சென்னையிலே ஏற்பாடு செய்யப்பட்டது எனவும், நீலகிரி, ஒகேனக்கல், கன்னியாகுமரி, கொடைக்கானல், இராமேஸ்வரம், வால்பாறை, ஏலகிரி, ஏற்காடு, திருமூர்த்தி நீர்வீழ்ச்சி முதலிய பகுதிகள் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் அற்ற இடங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். அதேவேளையிலே, ஒட்டுமொத்த தமிழகத்தையும் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் அற்ற மாநிலமாக ஏன் இவ்வரசு அறிவிக்கக்கூடாது என்னும் கேள்வியைத் தங்கள்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் மனித சமுதாயத்திற்கு ஏற்படும் அபாயம்பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே மிகத் தெளிவாக இந்தப் பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களால் ஏற்படும் அபாயத்திலிருந்து தமிழகத்தையும், தமிழக மக்களையும் காத்திட இவ்வரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன். (குறுக்கீடு)

நண்பகல் *12-00*

**திரு. டி.என். சிவசுப்பிரணியன்:** காட்டு யானைகள் வால்பாறையில் தொடர்ந்து கூட்டம் கூட்டமாக வந்து மக்களைக் கொன்று, சத்துணவுக்கூடங்களை இடித்து வருவதால் அரசின் வனத் துறை, மின் வேலிகள் அமைத்து, பொதுமக்களைக் காப்பாற்ற ஏற்பாடுகள் செய்ய முன்வர வேண்டும். சென்ற மாதம் வால்பாறையிலே சக்தி எஸ்டேட்டிலே தேவிகா என்ற பெண்ணை சிறுத்தைப் புலி அடித்துக் கொன்றுவிட்டது. இஞ்சிப்பாறையில் அப்பாவு என்பவரை யானை மிதித்துக் கொன்றுவிட்டது. இவர்கள் இருவரும் தோட்டத் தொழிலாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களுக்கு உடனடியாக அரசு நஷ்டஈடு வழங்க வேண்டுமென வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் கோவை தங்கம் அவர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நஷ்டஈடு

கொடுக்கும்போது மத்திய அரசின் பங்கான 75 சதவிகிதத் தொகை உடனடியாகக் கிடைப்பதில்லை. அதை மாநில அரசு, மத்திய அரசை வலியுறுத்தி பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) திரு. கி. பாரிமோகன்.

***திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையிலே என்னைப் பேசுவதற்காக அழைத்த தங்களுக்கும், சுற்றுச்சூழலிலே மிகுந்த ஈடுபாடு கொண்டு 1995லே பசுமை தாயகம் என்ற சுற்றுச் சூழல் அமைப்பை நிறுவிய எங்களுடைய டாக்டர் ஐயா அவர்களுக்கும், அந்தச் சுற்றுச் சூழல் அமைப்பிலே தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டு தமிழகத்திலே இன்றைக்குச் செயல்படுத்திக் கொண்டுவருகிற ஆற்றல் மிகுந்த இளைஞனாக தமிழகத்திலே வலம் வந்துகொண்டிருக்கிற பசுமை தாயகத்தினுடைய தலைவர், எங்களுடைய அன்பு அண்ணன் டாக்டர் அன்புமணி அவர்களுக்கும், எங்களுடைய சட்டமன்றக் கட்சித் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நேற்றைக்கு எங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு டி.கே. இராஜா அவர்கள் பேசுகின்றபோது, மலிவு விலை வேட்டி-சேலை விற்பனை போக மீதம் உள்ளது 9 இலட்சம் சேலைகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரிமோகன், மானியக் கோரிக்கையிலே பேசுங்கள். அதையெல்லாம் தனியாக, கடிதமாக அப்புறம் கொடுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று முதலமைச்சர் சொன்னார்கள், அதிலே உண்மை இருக்கிறது என்ற விவாதத்தைச் சொல்ல வருகிறேன். (குறுக்கீடு) உண்மை இல்லை, இதனாலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது என்ன, எல்லா மானியக் கோரிக்கையிலும் எல்லாவற்றையும் பேசிவிடுவதா? முறையல்ல அது. உங்களுக்கு அதிலே ஏதாவது பிரச்சினை இருக்கிறது என்று சொன்னால்—ஏற்கெனவே என்னிடம் வந்து சொன்னீர்கள்—



அதைக் கடிதமாகக் கொடுங்கள். முதலமைச்சர் அவர்களுக்கு அனுப்பிவிடுகிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** நான் தனியாகக்கூட ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி, அதை எடுத்துக்கொண்டீர்களென்றால், நான் விளக்கத்தைச் சொல்லிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. எப்போதுமே எடுக்க முடியாது. (குறுக்கீடு) திரு. பாரிமோகன், மானியக் கோரிக்கையிலே பேசுவதாக இருந்தால் பேசுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். ஒழுங்குப் பிரச்சினை ஒன்றும் இதிலே கிடையாது.

**திரு. கி. பாரிமோகன்:** தருமபுரி மாவட்டத்திலே கடந்த 3,4 மாதங்களாக கடுமையான வறட்சி நிலவியபோது, அந்த வறட்சி நிலவுகின்ற சூழ்நிலையிலே வனத்திலே இருக்கிற விலங்குகள் எல்லாம் ஊர்களுக்குள்ளே புகுந்த நிகழ்வுகள் நடந்திருக்கின்றன. அந்த வகையிலே இரண்டு யானைகள்கூட தண்ணீரைத் தேடி வந்து, தக்கட்டி, ஜவளகிரி என்ற இடத்திலே சேற்று நீரைக் குடித்ததால் இறந்தன. அதைப்போல குடிநீரைத் தேடி வந்த யானைக் கூட்டம் ஒன்று ஓசூர் பகுதியிலே, கெலமங்கலத்தின் அருகிலே இரவிலே சென்றுகொண்டிருந்தபோது இரயில் மோதி 5 யானைகள் துடிதுடித்து இறந்தன.

அதுமட்டுமல்லாமல், போச்சம்பள்ளி பகுதியிலே ஒரு சிறுத்தை வந்து பள்ளி மாணவர்களைக் கடித்து, அதிலே ஒரு மாணவன்கூட இறந்துவிட்டான். அந்த யானைகளை விரட்டச் சென்ற கிராமத்தினரில் ஏறத்தாழ 10 பேர் இறந்திருக்கிறார்கள். ஆகவே நான் கேட்க விரும்புவது என்னவென்றால், 1991-1996-லேயே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, யானையை விரட்டச் சென்ற 10 பேர் இறந்துவிட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்தான் சொல்கிறார். அது பத்திரிகையிலும் வரவில்லை. எங்களுக்கு அந்தச் செய்தி வரவில்லை, எங்கள் துறையின் மூலமாக என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இறந்த செய்தியைப்பற்றி கடந்த ஆண்டு சட்டமன்றத்திலே

நானே பேசியிருக்கிறேன். நிவாரணத் தொகை வேண்டுமென்று சொல்லிக்கூட, இதுவரையிலே வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்திலே, முன்னால் இருந்த அமைச்சரிடத்திலே சொல்லியும்கூட இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு, இரயிலில் அடிபட்டு யானைகள் இறந்தன என்பது ஒரு மாதத்திற்குள்தான். அப்போதுதான் யானைகள் விரட்டப்படும்போது 10 பேர் இறந்துவிட்டார்கள் என்று நினைத்து நான் சொன்னேன். ஒரு வருடத்திற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியது தெரியவில்லை.

**திரு. கி. பாரிமோகன்:** இரயிலிலே அடிபட்டபோது அவர்கள் இறக்கவில்லை.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பாட்டாளி மக்கள் கட்சியின் உறுப்பினர் இத்தனை கேள்விகளைக் கேட்கிறார். பதிலுக்கு நான் அவரிடம் ஒரேயொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். வனத் துறை என்பது காடுகள் வளர்ப்பு பற்றியதாகும். மரங்களைப் பாதுகாத்து வளர்ப்பது பற்றியதாகும். இந்தத் துறையின்மீது பாட்டாளி மக்கள் கட்சியினர் பேசுவது ஒருவிதத்தில் வேடிக்கையாக இருக்கிறது. பாட்டாளி மக்கள் கட்சியினர் முன்பு எத்தனை வளர்ந்த மரங்களை வெட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பசுமை தாயக நாயகன் எத்தனை மரங்களை நட்டு இருக்கிறார் என்ற விவாத்தை இங்கே கூற முடியுமா?

பிற்பகல் 12-05

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்லியதும், எனக்கு மிக மிக விந்தையாக இருக்கிறது. விந்தையிலும் விந்தை, என்ன விந்தை என்று சொன்னால், பாட்டாளி மக்கள் கட்சியினர் ஏதோ மாத்தை வெட்டியதாகவே, மரம் வெட்டியவர்கள் போல் என்றும் ஒரு சித்தரிப்பான ஒரு செய்தியைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார். இது மிகப் பெரிய வேதனை. என்ன வேதனை என்று சொன்னால், சமூக நீதிக்காக இட ஒதுக்கீட்டிற்காகப் போராடிய நேரத்திலே மிகப் பெரிய போராட்டம்,



தமிழ்நாடு மட்டும் அல்ல, இந்திய நாடு, உலகமே வியக்கத்தக்க 7 நாள் சாலை மறியல் போராட்டம். அந்தப் போராட்டத்திலே ஒருசில மரங்கள் வெட்டப்பட்டது உண்மை. அதிலே மாற்றம் இல்லை. ஆனால் அதற்குப் பிறகு தமிழ் நாட்டிலே எத்தனை அரசியல் கட்சிகள் மரங்களை வெட்டின? அதைப்பற்றி பேச்சே வரவில்லையே?

அதுமட்டுமல்ல. கடந்த ஆண்டு - ஒரே நாளிலே பசுமை தாயகத்தின் சார்பிலே மரியாதைக்குரிய டாக்டர் அன்புமணி அவர்கள் 1 லட்சத்து 60 ஆயிரம் மரக்கன்றுகளை நட்டார்கள் என்ற செய்தி எல்லா பத்திரிகைகளிலும் வந்தது. 'பசுமை தாயகம் நாள்' என்று சொல்லி ஆண்டுதோறும் மரம் நடுகிறோம். ஓர் ஆண்டிலே 1 இலட்சம் மரங்கள். அடுத்த ஆண்டிலே 1 லட்சத்து 60 ஆயிரம் மாக்கன்றுகள். இப்படி எல்லா பத்திரிகைகளிலும் வந்த செய்தி. இன்றைக்கு தமிழ்நாட்டிலேயே பசுமைச் சூழலை, சுற்றுச் சூழலைக் காப்பாற்ற பசுமைத் தாயகத்தின் சார்பிலே அதிக மரக்கன்றுகள் நட்ட பெயர் பசுமை தாயகத்திற்கு உண்டு; டாக்டர் அன்புமணிக்கு உண்டு. இங்கு மட்டுமல்ல. கடந்த மாதம்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** கடந்த மாதம் ஜப்பான் நாட்டில் உலக அளவிலான மாநாடு (குறுக்கீடு) இல்லை, ஒன்று சொல்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முதலமைச்சர் சுருக்கமாகச் சொன்னார்கள். இதற்கு நீங்கள் இவ்வளவு விளக்கம் சொல்ல வேண்டியதில்லை.

**திரு. ஜி.கே. மணி:** உலக அளவிலே ஒரு மாநாடு ஜப்பான் நாட்டிலே நடைபெற்று, அதிலே அவருக்கு ஒரு மிகப் பெரிய அவார்டு. மூன்று மாதங்களுக்கு முன்பு, தென் ஆப்பிரிக்காவிலேயே சுற்றுச் சூழலை பசுமைப் புரட்சியை உருவாக்குவதற்கு தென் ஆப்பிரிக்காவிலே ஒரு மாநாடு. அந்த மாநாட்டிலே இந்தியாவின் சார்பிலே கலந்துகொண்ட டாக்டர் அன்புமணி அவர்களுக்கும் அங்கு பாராட்டுப், பத்திரம் எல்லாம் வழங்கப்பட்டு இருக்கிறது. அப்படி சுற்றுச் சூழலைச் சரியாகக் காத்து வருகிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, முதலமைச்சர் அவர்கள் சொல்வது, பழைய பாவத்திற்குப் பரிகாரமா என்பதைப்போலக்

கேட்கிறார்கள். (சிரிப்பு) திரு. பாரிமோகன், பேசுங்கள் (குறுக்கீடு) திரு. பாரிமோகன்பேசலாம்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற அரசியல் கட்சிகள் மரம் வெட்டியதாகச் சொல்கிறார்கள். நாங்கள் யாரும் மரம் வெட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, உங்களை, காங்கிரஸ் கட்சி வெட்டியது என்று சொல்லவில்லையே அவர்.

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு மணி அவர்கள் எந்தெந்த அரசியல் கட்சிகள் மரங்களை வெட்டின என்ற பட்டியலையும் கூற வேண்டும்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

**திரு. ஜி.கே. மணி:** ** நான் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. சந்தானம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** இல்லை; இல்லை; நாங்கள் வெட்டியது மட்டும் அவைக்குறிப்பில், ரெக்கார்டில் இருக்கிறது.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; இல்லை; நீங்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். நீங்கள் அதற்கு விளக்கம் சொல்லிவிட்டீர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் நீண்ட நெடிய வியாக்யானம் செய்வதில் பயன் இல்லை. ஒவ்வொரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



கட்சிக்கென்று ஒரு பெயர் உண்டு. தி.மு.க. என்றால் மொழிப் போராட்டத்தில் ஈடுபட்ட கட்சி, இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த கட்சி என்ற பெயர் உண்டு. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்றால் சத்துணவுத் திட்டத்தைக் கொண்டுவந்த கட்சி என்ற பெயர் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போலவே பாட்டாளி மக்கள் கட்சி என்றால், மரங்களை வெட்டி, வீழ்த்திய கட்சி என்ற பெயர் உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) அதை நீங்கள் என்ன செய்தாலும் மூடி மறைக்க முடியாது; துடைக்க முடியாது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொன்ன வரிசையிலே தமிழ்நாட்டிலே, சமூக நீதிக்காகப் போராடிய ஒரு கட்சி என்று சொன்னால், அது பாட்டாளி மக்கள் கட்சி என்று நிலைத்த வரலாறு இருக்கிறது. தமிழ்நாட்டிலே அது நிலைபெற்ற வரலாறு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், சொல்லுங்கள். (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** காங்கிரஸ் என்றால் சுதந்திரம் பெற்றுத் தந்த கட்சி என்ற வரலாறு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த காங்கிரஸ் என்பதுதான் பிரச்சினை.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் குறிப்பிடுகின்றபோது எல்லா அரசியல் கட்சிகளும், மரத்தை வெட்டிய கட்சிகள்தான் என்று சொன்னார். அதைத்தான் எந்த எந்த அரசியல் கட்சிகள் மரத்தை வெட்டிய கட்சிகள் என்பதை நமது மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் விளக்கம் கேட்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரிமோகன், பேசுங்கள்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சிக்கு மரத்தை வெட்டிய கட்சி என்று பெயர் என்று சொன்னார். பாட்டாளி மக்கள் கட்சி என்றால் இட ஒதுக்கீட்டிற்காக இருக்கிற கட்சி என்றுதான் தமிழகத்திலே பெயர் இருக்கிறதே தவிர, ஒரு போராட்ட காலத்திலே...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 69 சதவீத இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தியது,

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2003 மே 8

நிலை நாட்டியது. அதற்காக இந்தச் சட்டமன்றப் பேரவையிலேயே தீர்மானம் நிறைவேற்றியது. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு. அதற்காகத்தான் சமூகச் சீர்திருத்தத்திற்காகவே பெயர்போன, சமுதாயப் புரட்சிக்காகவும், மறுமலர்ச்சிக்காகவும் பெயர்போன திராவிடர் கழப் பொதுச் செயலாளர் அவர்களே எனக்கு சமூக நீதி காத்த வீராங்கனை என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டி இருக்கிறார் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12-10*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நீதி காத்த வீராங்கனை என்பதை நாங்கள் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். அதிலே மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால் இன்றைய சூழ்நிலையிலே அந்த 69 சதவிகித இட ஒதுக்கீட்டினுடைய நிலை என்ன? 14 வருடங்களாக நீதிமன்றத்திலே தூங்கிக் கொண்டிருக்கிறது. விரைந்து நடவடிக்கை எடுக்கவில்லை. அது ஒரு வேதனை. *(மணியடிக்கப்பெற்றது)* அதுமட்டுமல்ல தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வனத் துறை மானியக் கோரிக்கை. திரு. பாரிமோகன் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உண்மையைச் சொல்லிவிடுகிறேன். அதே நேரத்திலே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; இந்த விவாதம் எல்லாம் இப்போது கூடாது. திரு. பாரிமோகன் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** அந்த இட ஒதுக்கீட்டிலே கூடுதலாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரிமோகன், பேசுங்கள். இல்லையென்றால் அடுத்த உறுப்பினரைக் கூப்பிட வேண்டியிருக்கும்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட்டாளி மக்கள் கட்சி என்றால் இட ஒதுக்கீட்டிற்காகப் பிறப்பெடுத்த....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை; இதுபற்றி மணி பேசிவிட்டார்கள். நீங்கள் மறுபடியும் அதற்குள்ளே நுழையாதீர்கள். சேற்றை நீங்களே விலைக்கு வாங்காதீர்கள்.



2003 மே 8]

**திரு. கி. பாரிமோகன்:** இயக்கம் என்றுதான் தமிழகத்தினுடைய வரலாறு. ஒரு போராட்டம் தீவிரமாக நடைபெறுகிறபோது ஒருசில நிகழ்வுகள் நடப்பது இயல்பு. அஹிம்சாமூர்த்தி என்று போற்றப்படுகின்ற, வாழ்த்தப்படுகின்ற புகழப்படுகின்ற மகாத்மா காந்தி அஹிம்சா வழியிலே போராடியபோதுகூட 21 பேர் காவல் துறையைச் சேர்ந்தவர்கள் உயிரோடு காவல் நிலையத்திலே வைத்து கொளுத்தப்பட்ட நிகழ்ச்சி நடந்தது.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடனே போராட்டத்தையே நிறுத்திவிட்டார் அவர்.

**திரு. கி. பாரிமோகன்:** நாங்களும் அப்போது போராட்டத்தை நிறுத்திவிட்டோம். *(சிரிப்பு)* ஆகவே அந்த வகையிலே நான் சொல்ல வந்தது என்னவென்றால், 1991-96-லே நடைபெற்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசிலே அன்றைக்கு இதுபோல வறட்சி ஏற்பட்டபோது, வனங்களிலே அன்றைக்கு 'J' என்ற எழுத்து வடிவிலேயே தொட்டி அமைத்து, தண்ணீர்விட்டு, அந்த வன விலங்குகளுக்குத் தண்ணீர்விட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு அதுபோன்ற நடவடிக்கைகளை எடுப்பதிலே எந்தத் தீவிரமும் காட்டப்படவில்லை. ஏறத்தாழ நான்கு மாத காலமாக உயிருக்காக, தண்ணீருக்காகப் போராடிக்கொண்டிருந்த...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வறட்சியை முன்னிட்டு காட்டுப் பகுதிகளில் வன விலங்குகளுக்காக இந்த அரசு உத்தரவிட்டு, பல தொட்டிகள் ஏற்படுத்தப்பட்டு, அந்தத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** எங்களுடைய தருமபுரி மாவட்டத்திலே அதுபோல புதிய தொட்டிகள் எதுவும் ஏற்படுத்தவில்லை என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஒரே ஓர் ஏரி மட்டும், வனத் துறைக்கு ரூ. 1 இலட்சம் நிதி ஒதுக்கி, தூர் எடுத்திருப்பதாக மாவட்ட வன அலுவலர் பத்திரிகையிலே பேட்டியில் சொல்லியிருக்கிறார். ஆகவே அதைத்தவிர அந்தப் பகுதிகளிலே வேறு எந்த நடவடிக்கையும் எடுத்திருப்பதாக எங்களுக்குத் தெரியவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போல வனத் துறையிலே...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி என்றவுடன் எங்கள் இலாகாவின் மூலமாக, வன விலங்குகள் வாழ்கின்ற அந்த இடங்களிலே தண்ணீர்ப் பிரச்சினை இருக்கக்கூடாது, வனங்களுக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படக்கூடாது, தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. ஐ. கணேசன்:** தருமபுரி மாவட்டத்தில் எந்தவிதமான தொட்டிகளும் கட்டவில்லை என்றுதான் உறுப்பினர் சொல்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர்தான் பேசுகிறாரே ! (குறுக்கீடு) திரு. கணேசன், அவர்தான் பேசுகிறாரே !

**திரு. ஐ. கணேசன்:** அவருடைய கேள்விக்கு அமைச்சருடைய பதில் சரியில்லை.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் யானைகள் இறந்தவுடன், அவை தண்ணீருக்காகத்தான் வந்தன; அதனால்தான் யானைகள் இரயிலில் அடிபட்டு இறந்தன என்று கேள்விப்பட்டவுடன், வன விலங்குகளுக்கு, அங்குள்ள கசிவு நீர்க் குட்டைகள், Check Dam போன்றவற்றில் தண்ணீர் இருக்கிறதா என்பதை ஆய்வு செய்யச் சொல்லி, இருக்கிறது என்று கேள்விப்பட்டு, மேலும் தொட்டிகள் கட்டுவதற்கும் உத்தரவிடப்பட்டுள்ளது என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** ஆக, கடந்த 4 மாதங்களிலே இந்த நிகழ்ச்சிக்குச் சற்றுக் காலதாமதமாகத்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஒரு நாட்டினுடைய நிலப்பரப்பிலே மூன்றில் ஒரு பங்கு வனம் இருக்க வேண்டும் என்பது தேசிய வனக் கொள்கையாக இருந்துகொண்டிருக்கிறது. நம்முடைய தமிழகத்திலே 17.5 சதவிகிதம் வனம் இருந்துகொண்டிருக்கிறது. அதை மேம்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை வனத் துறை எடுத்து வருகிறது என்பதிலே சந்தேகம் இல்லை. இருந்தாலும்கூட அப்படி எடுத்து வருகின்ற நடவடிக்கைகளிலே ஒன்றுதான் இன்றைக்கு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம். அந்தத் திட்டத்திலே சில குறைபாடுகள் இருக்கின்றன. கடந்த



நாட்களிலேகூட சில சட்டமன்ற உறுப்பினர்கள் அதை கேள்விகள் மூலமாக இங்கே சுட்டிக்காட்டினார்கள். ஆக 325 எக்டேர் அல்லது 350 எக்டேரிலே காடுகள் வளர்க்க வேண்டுமென்று இருக்கிறபோது, ஏறத்தாழ 1¼ இலட்சம் அல்லது 1½ இலட்சம் மரக் கன்றுகளை நட வேண்டும் என்று இருக்கின்ற சூழ்நிலையிலே 60,000 அல்லது 75,000 மரக் கன்றுகளை நட்டுவிட்டு, மீதியை நடாமல் விடுகின்ற அந்தச் சூழ்நிலை எல்லாம் இருக்கிறது.....

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கிராமத்தில் மரக் கன்றுகள் நடப்படவில்லை என்று உறுப்பினரவர்கள் சொன்னால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதைக் குறிப்பிட்டுச் சொல்லக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் *12-15*

**திரு. கி. பாரிமோகன்:** குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஏனென்றால், அந்த T.A.P.-னுடைய தலைவராக எங்கள் கட்சியைச் சேர்ந்த ஒருவரே கடந்த காலத்திலே இருந்திருக்கிறார். நடந்த நிகழ்வுகள் எங்களுக்கு T.A.P.-னுடைய தலைவர் மூலமாகவே வந்திருக்கிறது. அப்படி கடந்த காலத்திலே நடந்தது தொப்பூர் பகுதியிலே அமைக்கப்பட்ட T.A.P. என்று சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலம் என்றால், எந்தக் காலம் என்பதைச் சொல்ல வேண்டுமென்று விரும்புகிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** T.A.P. என்கின்றபோது 1997-ல்.........

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பாரிமோகன், இன்னும் 2 மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கி. பாரிமோகன்:** ஒரு 5 மணித் துளிகளில் பேசி முடிக்கிறேன். அதிகம் குறுக்கீடு ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேண்டாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் காடு வளர்ப்புகூட வருகிறது. இதற்காக ஏறக்குறைய 60 இலட்சத்திற்கும்

மேற்பட்ட மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டன. இந்த 60 இலட்சம் மரக் கன்றுகளையும் நடுவதற்கு வனத் துறைக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் கடுமையான வறட்சியின் காரணமாக கிட்டத்தட்ட 23 இலட்சம் மரக் கன்றுகள்தான் நட முடிந்தது. அதற்குக் காரணம், வறட்சிதானே தவிர, வேறல்ல. இந்த விவரங்களையெல்லாம் ஏற்கெனவே இந்த அவையில் தெரிவித்திருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** அந்தத் திட்டம் செயல்படவில்லை என்று சொல்லவில்லை அந்தக் குறைகளை நீக்க வேண்டுமென்றுதான் நான் என்னுடைய கோரிக்கையாகச் சொல்கிறேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்ணீர் இல்லை. திட்டத்தில் எந்தக் குறையும் இல்லை. 60 இலட்சத்திற்கும் மேற்பட்ட மரக் கன்றுகள் வளர்க்கப்பட்டு தயார் நிலையில் இருக்கின்றன. ஆனால் நடுகின்றபோது தண்ணீர் ஊற்ற வேண்டும். வறட்சியின் காரணமாக நட முடியவில்லை. ஆகவே 23 இலட்சம் மரக் கன்றுகள்தான் நடப்பட்டிருக்கின்றன. மழை பெய்தால், வறட்சி நீங்கினால் மீதமுள்ள மரக் கன்றுகளும் உடனடியாக நடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கி. பாரிமோகன்:** இந்தத் திட்டத்திலே கட்டப்படுகின்ற தடுப்பணையில்கூட அந்த வரைபடத்தை, வனத் துறையிலே, Draughtsmen என்பவர்கள் வரைகிறார்கள். அதை P.W.D. Engineer மேற்பார்வையிலே உருவாக்கினால் இன்னும் தரமாக இருக்கும் என்ற கருத்தை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல சுற்றுச் சூழல் என்று சொல்லும்போது, தமிழ்நாட்டில் இருக்கிற பல்வேறு ஆறுகள், இன்றைக்கு பாலாறு ; அதைச் சொல்கிறபோது சொல்வார்கள், பாலாறு பாழாகிவிட்டது; பவானி நஞ்சை சுமக்கிறது ; நொய்யல் ஒரு செத்த ஆறு ; வைகை மாசுபட்டுள்ளது; தாமிரபரணி துயரத்தில் உள்ளது ; அமராவதி அழிந்துவிட்டது....

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையில் இருப்பதைப் போல வனத் துறையிலும் Draughtsmen இருக்கிறார்கள். அவர்களைக் கொண்டுதான் இந்தத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நடைமுறைக்குக்





கொண்டுவரப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. பி. சி. ராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு, சென்ற ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக எங்கெங்கு பொது இடங்கள் இருக்கின்றதோ, அங்கெல்லாம் இலட்சக்கணக்கான மரக் கன்றுகள் நட வேண்டுமென்ற ஆணையின் அடிப்படையில், பல இலட்சம் மரக் கன்றுகள் 10 ஆணையாளர்கள் பணியாற்றக் கூடிய அந்தப் பகுதிகளிலே எல்லாம் நடப்பட்டிருக்கின்றன என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. பாரிமோகன், ஒரு மணித்துளியில் உரையை முடியுங்கள்.

**திரு. கி. பாரிமோகன் :** இரண்டு மணித்துளிகள். வான் பொய்த்தாலும் தான் பொய்யாக் காவிரி என்று சொல்லப்படுகின்ற காவிரியின் தலைவிதியை இன்றைக்கு கர்நாடகம் நிர்ணயித்துக்கொண்டிருக்கிறது. அந்த ஆறுகள் மாசுபடுவதைத் தடுக்க வேண்டுமென்ற வகையில் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். லண்டனை அழகுபடுத்திக்கொண்டிருக்கிற தேம்ஸ் நதியை பளிங்கு போன்ற நீர் ஓடுகிறது என்று புகழ்வார்கள். ஆனால் ஒரு சமயம் அது நம் கூவத்தைவிட மிக மோசமாக, நீரோடும் ஓர் ஆறாகத்தான் இருந்தது. அதைத் தூய்மையாக்கியே தீர வேண்டும் என்ற தீராத ஆர்வத்தோடு இங்கிலாந்து அரசும், மக்களும் தீவிரமாக முயற்சி எடுத்த காரணத்தால் இன்று படிகத் தூய்மையான நீராக அது ஓடிக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் நம்முடைய கூவத்தையும், சென்னையின் தேம்ஸ் நதியாக மாற்றிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையும் இப்பொழுது தேசிய சென்னைப் பெருநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் செயல்பட்டு வருகிறது. கிட்டத்தட்ட 422 கழிவு நீர் சாக்கடைகள் தடுத்து நிறுத்தப்பட்டு, குழாய் மூலமாக மாற்று வழியில் எடுத்துச் செல்லும் பணிகள் 10 கட்டங்களாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் சென்னைக் குடிநீ:

வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ. 491.52 கோடி நிதியுதவி வழங்க இசைவு தந்துள்ளது. ஆனால் அவர்கள் இதுவரைக்கும் கொடுத்திருப்பது ரூ. 111.90 கோடி. தமிழ்நாட்டினுடைய அரசு, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ரூ. 119.98 கோடி செலவிட்டுள்ளது. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் ஒரு மாதத்திற்கு முன்னால் இங்கே வந்தபோது, நாங்கள் பணக் காவடி எடுக்கிறோம்; கொடுக்கின்ற பணத்தை தமிழ்நாடு அரசு செலவு செய்யவில்லை என்ற ஒரு தவறான தகவலைத் தெரிவித்தார். ஆனால் இந்தியாவிலேயே மத்திய அரசு கொடுக்கின்ற பணத்தைவிட அதிகமாக செலவு செய்த மாநிலம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா மாநிலம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12-20*

**திரு. கி. பாரிமோகன்:** அதைப்போல பிளாஸ்டிக் பொருட்களைத் தடை செய்ய ஏற்கெனவே இந்த மன்றத்திலே ஒரு மசோதாவைக் கொண்டுவந்து, மீண்டும் மாற்று வடிவத்திலே கொண்டுவருவதாக உறுதியளிக்கப்பட்டது. அந்த மசோதாவைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி நளினி மனோகரன். (குறுக்கீடு) இன்னும் நான்கு பேர் பேசி அமைச்சர் பதிலுரை சொல்ல வேண்டும். (குறுக்கீடு) எல்லாம் கழித்துத்தான் சொல்கிறேன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of order.

***திருமதி நளினி மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னையாய், தந்தையாய், ஆசானாய், ஆண்டவனாய், என்னைப் போன்ற இலட்சோப லட்சம் தொண்டர்களை உருவாக்கி, ஆசீர்வதித்து நல்லாட்சி தரும் அம்மா! நீங்கள் 21 ஆம் நூற்றாண்டின் மக்கள் சக்தி, தமிழக வரலாற்றில் ஒரு புதினம்! வைகறையில் எங்கள் வழிபாட்டுத் தலம்!

*(திரு. கி. பாரிமோகன் நின்றுகொண்டு பேசிக் கொண்டிருந்தார்.)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு பாரிமோகன், குறுக்கீடுகள் எல்லாம் போக 10, 12 மணித்துளிகளுக்கு மேலே கொடுத்திருக்கிறேன். அதற்குமேலே கொடுப்பதற்கு வழியில்லை. எல்லோரும் ஒத்துழையுங்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு பதிலுரையை பிற்பகலில் முடிக்க வேண்டும். (குறுக்கீடு) எல்லோருக்கும் பின்பற்றப்படுகிற நடைமுறைதான் பின்பற்றப்படுகிறது.

*(பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. கி. பாரிமோகன் வெளிநடப்புச் செய்தார்.)*

**திருமதி நளினி மனோகரன்:** *அன்னையே! உங்களை வணங்காத கைகள் வெறுங்கை! உங்களைப் பேசாத நாக்கு புண் நாக்கு! உங்களைக் காணாத கண் இடுக்கண்! உங்களைத் தேடாத நெஞ்சம் பஞ்சம்! உங்களைப் பாடாத பாட்டு வெறும்பாட்டு! உங்களை எண்ணாத உள்ளம் பள்ளம்! உங்களை ஏற்காத உள்ளம் கள்ளம்!*

*தாயே! உங்கள் பார்வையில் எத்தனை கருணை! உங்கள் பாதையில் எத்தனை பெருமை! உங்கள் தோள்களிலே எத்தனை பெரிய சுமை! எனினும் உங்கள் உள்ளத்தில் எத்தனை துணிவு! உங்கள் கண்களில் எத்தனை தெளிவு! உங்கள் எண்ணங்களில் எத்தனை உறுதி! உங்கள் கொள்கையிலே எத்தனை உயர்வு!*

மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, உங்கள் திசை நோக்கி வணங்கி சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்று ஊராண்ட மன்னர், உலகாண்ட மன்னர் பேராலயம் காத்த பெருமை போல தாயே, இன்று அவதரித்தாய்! ஆலயம் காத்தாய்! அன்னமிட்டாய்! நீ ஆலயத் தாய்! அவதாரத் தாய்! பரமன் சொன்ன ஆண்-பெண் சமத்துவத்தை புராணம் சொல்லும். ஆனால் சேய்க்கு உயிர் கொடுக்கும் தாய்க்கு அவள் பெயரின் முதல் எழுத்தை அச்சேயின் பெயருக்கு முன் எழுதிட அரசு ஆணையிட்ட மாண்புமிகு அம்மா அவர்களின் சமத்துவத்தை இந்த உலகம் சொல்லும்! *(மேசையைத் தட்டும் ஒலி)*

தன்னைக் குறிப்பதற்கு தனியாக ஒரு சொல் கூட இல்லாதவள் பெண் என்ற அவலம் நீக்கி ஆணுக்குப் பெண் நிகரென நிகராக்கி, உயர்வாக்கி ஓங்கச் செய்யும் பெண் குலம் வாழப் பிறந்த பெருந்தவமே!

நீங்கள் பெண் சிசு காக்கும் பெருமை தந்து பெண்மையை உயர்த்திய பெரிய நாயகி!

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்னும் வள்ளுவனின் மருத்துவ மகத்துவம் மாவட்டந்தோறும் பெருகிட அரசின் கொள்கைப் பாதையில் மருத்துவக் கல்லூரி ஒன்றைப் புதியதாகவும் புதினமாகவும் எனது தொகுதியில், பெண்ணாத்தூர் பகுதியில் அமையச் செய்து நோயற்ற வாழ்விற்கு அர்ப்பணித்தமைக்காக என் சார்பிலும் என் தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை மேம்பாட்டிற்காக அறிவிக்கப்பட்டிருக்கின்ற அரசின் பல்வேறு கொள்கைத் திட்டங்கள் நலமான மற்றும் வளமான வாழ்வுக்கும், வருவாய் மற்றும் வேலைவாய்ப்புப் பெருக்கத்திற்கும் முக்கியத்துவம் அளிப்பதாக உள்ளது. இத்திட்டங்கள் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியதாக உள்ளன.

அம்மா அவர்களால் ஏற்கெனவே உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும் வனப் பாதுகாப்புக் குழு அந்தப் பகுதிவாழ் மக்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளும் சிறு தடுப்பணைகள், கசிவுநீர்க் குட்டைகள் அமைத்தல், கறவை மாடுகள் மற்றும் விதைதெளிப்பான் வாங்குதல், மண்புழு உரத்தொழில், தேனீ வளர்த்தல், இட்லி வியாபாரம், ஓலை, கூடை, முறம் முடைதல், பெட்டிக்கடை வைத்தல் போன்ற தொழில்கள் தொடங்க திறனறிந்து கடனளித்து உதவும் நடவடிக்கைகளால் தீயாகச் சுட்ட தி.மு.க. ஆட்சியில் வனத் துறை அலுவலர்களைப் பார்த்தாலே பயமும், பீதியும் அடைந்த வனவாழ் மக்கள் இப்பொழுது வனத் துறை பாதுகாப்புக் குழுவினருடன் இணைந்து அச்சம் நீங்கி பலவகையான பயன்பாடுகளை அடைந்து வருகிறார்கள். மேலும் பெண்களை சுய உதவிக் குழுக்களில் பங்குபெறச் செய்து அவர்களையும் பெருமளவில் பயனடையச் செய்திருப்பது, அம்மா ஆட்சியில் குக்கிராமங்களிலும் ஜனநாயகம் சிறப்பாகச் செயல்படுவதைக் காட்டுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி)



கூட்டு நிர்வாக முறையில் வனப் பகுதிகளில் மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும் வகையில், அரசு மேற்கொள்ள இருக்கும் வன மேம்பாடு திட்டங்கள் பாராட்டுக்கு உரியது.

மொத்த வனப் பரப்பில் 25 சதவீதம் பாதுகாக்கப்பட்ட பகுதியாக மேற்கொள்ளப்படும். அரசின் திட்டங்கள் வனப் பாதுகாப்பையும் வனவாழ் மக்களின் பயன்பாட்டையும் வனப் பகுதி மக்களின் வருவாய் மற்றும் வேலைவாய்ப்புகளையும் அதிகரித்து, வனவாழ் மக்களின் நல்வாழ்வினை மேம்படுத்த உள்ளது போற்றத்தக்கதாக உள்ளது.

*பிற்பகல் 12-25*

நீர்வளமும் விவசாயிகளின் பொருளாதார நலனும் அதிகரிக்க நீர்ப்பிடிப்புப் பகுதிகளை ஒட்டி அமைந்துள்ள வனங்களை மேம்படுத்தும் அரசின் திட்டங்கள் சுற்றுச்சூழலையும் வன வளர்ச்சியையும் சிறப்புற மேம்படுத்துவதாக உள்ளது. அனைவரின் பாராட்டுக்கும் உரியதாக உள்ளது.

இதைப்போல, பழங்குடியினரின் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகள், கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றை மேம்படுத்த, அரசு தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பது ஒட்டுமொத்தமாக, தமிழகத்தில் பொருளாதார சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து சமத்துவம் ஏற்படுத்துவதாக உள்ளது.

எனது தொகுதியில் உள்ள மக்களின் தேவைகளை அம்மா அவர்களின் கருணை உள்ளத்திற்குக் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள் என் வேண்டுகோள்களை நிறைவேற்றித்தர வேண்டுமெனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

என் தொகுதியில் உள்ள அமிர்தி காடுகள் விரிந்து பரந்து உள்ளன. இங்கு நாள்தோறும் பொழுதுபோக்கிற்காகச் சுற்றுலா வரும் பயணிகளின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகமாக உள்ளது. ஆனால் இக்காடுகளைக் கடந்து வாழும் மலைவாழ் மக்களும், இக்காடுகளுக்கு அருகில் வாழும் கிராம மக்களும் காட்டு விலங்குகளால் ஏற்படும் ஆபத்துக்களைத் தவிர்க்கும் பாதுகாப்பு

இல்லாமல் வாழ்கிறார்கள். சென்ற மாதம் இறுதி வாரத்தில்கூட காட்டிலிருந்து பல யானைகள் காட்டைத் தவிர்த்த பகுதிக்கு வந்து நீரோடையில் நீர் பருகிவிட்டுப் பக்கத்திலுள்ள பயிர்களுக்கு பெரும் சேதம் விளைவித்துச் சென்றது. இக்காடுகள் திருவண்ணாமலை-வேலூர் மாவட்டங்களுக்கு உடையதாக இருப்பதால், இக்காடுகளின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் இரு மாவட்ட நிர்வாகத்தாலும் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு வருகிறது. மக்கள் நலம் காக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசு, அமிர்தி காடுகளை ஒழுங்குபடுத்தி ஓர் உயிரியல் பூங்கா அமையச் செய்து பராமரித்தால் பாதுகாப்பும். அரசுக்கு வருவாயும், அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைத்திடும். ஆதலால் அம்மா அவர்கள் நடவடிக்கை எடுத்து ஆணையிட வேண்டுகிறேன்.

அடுத்ததாக என் தொகுதியில் நீண்டு பரந்து பாயும் நாகநதி உள்ளது. நாள்தோறும் பிழைப்பு, கல்வி, மருத்துவம், அங்காடி, ஊர்ப் பயணம் மற்றும் வியாபாரம் இவற்றின்பொருட்டு 26-க்கும் மேற்பட்டக் கிராமங்களைச் சார்ந்த 5,000-க்கும் மேற்பட்ட மக்கள் இந்நதியை நாள்தோறும் கடந்து சென்று வருகின்றனர். ஆனால் மழைக்காலங்களில் ஆற்றில் தண்ணீர் அதிக அளவில் செல்லும்போது மக்கள் ஆற்றைக் கடக்க இயலாமையால் அவர்களின் அனைத்துப் பணிகளும் தடைப்பட்டு அவர்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. ஆகையால் நாகநதி ஆற்றில் வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையின்மீது பாலம் கட்ட ஏற்கெனவே மதிப்பீடு செய்து அரசின் ஆய்வில் உள்ள நடவடிக்கையைத் துரிதப்படுத்தி பாலம் அமைத்துத் தர வேண்டும் எனப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

தாயே! சுமார் 3,800 ஏக்கர் வேளாண்மை நிலம் பாசன வசதி பெறும்பொருட்டு அமிர்தி அருகே நாகநதி ஆற்றின் குறுக்கே நீர்த்தேக்க அணை வேண்டுமென்ற என் தொகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை அரசின் சார்பில் மதிப்பீடு செய்யப்பட்டு, அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டு, அறிக்கை தற்பொழுது பொதுப் பணித் துறையின் ஆய்வில் உள்ளது. அனைத்தும் ஒளிமயமாக வாழ்வளிக்கும் தாயே! மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே! போதிய நிதியொதுக்கீடு செய்து அணை கட்டி முடிக்க ஆணை வழங்கி தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்ற தங்களின் பாதங்களை வணங்கிக் கேட்டுக்கொள்கிறேன்.





அடுத்ததாக, திருவண்ணாமலை மாவட்டத்திலுள்ள பெண்களில் ஏறக்குறைய 20% பெண்கள் என் போளூர் சட்டமன்றத் தொகுதியில் மட்டும் வசிக்கிறார்கள். இதனால், உயர் கல்வியை பெண்கள் பெருமளவில் எளிதாகப் பெறும் வகையில் போளூரில் ஓர் அரசு பெண்கள் கலை அறிவியல் கல்லூரியை அமைத்துப் பெண்களின் உயர் கல்வி வாய்ப்பினை அதிகரிக்க மாண்புமிகு அம்மா அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கடந்த அம்மா ஆட்சியில் போளூரில் பேருந்துப் பணிமனை அமைக்க 25-12-1995 ஆம் வருடம் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால் இத்திட்டம் தி.மு.க. ஆட்சியில் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டதால் இன்று பேருந்துப் பணிமனை மயானப் பகுதிக்கு அருகில் திறந்தவெளியில் வாடகைக் கட்டடத்தில் இயக்கப்படுகிறது. ஏற்கெனவே அம்மா அவர்கள் அரசு ஒதுக்கிய இடத்தில் சிறந்த பேருந்துப் பணிமனை ஒன்றினை அமைத்துத்தர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தாயே! என் தொகுதியில் உள்ள ஜமுனாமரத்தூர் மலைப்பகுதியில் 73,000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கிறார்கள். இப்பகுதியில் இயற்கைக்கு மாறாக ஏற்படும் மனித மரணத்தின்போது, விசாரணைக்காக மேற்கொள்ளப்படும் பிரேதப் பரிசோதனை ஆய்வுக்காக கடினமான மலைப் பகுதியைக் கடந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள போளூருக்கு வர வேண்டியுள்ளது. இதனால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமத்தை மேற்கொள்ள வேண்டியிருப்பது வேதனைக்குரியதாகவுள்ளது. இத்துன்பத்தைத் தவிர்ப்பதற்கு ஜமுனாமரத்தூரில் இப்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தோடு இணைக்கப்பட்டு செயல்படக்கூடிய பிரேதப் பரிசோதனை ஆய்வகம் ஒன்றை ஏற்படுத்தித் தர வேண்டுமென அம்மா அவர்களை என் சார்பிலும், என் தொகுதி மலைவாழ் மக்கள் சார்பிலும் கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பு வழங்கிய வாய்மையின் இமயமே, அச்சமில்லை, அச்சமில்லை அச்சம் என்பதில்லையே என சங்காய் முழங்கும் வீரத்தின் விளைநிலமே, அம்மா அவர்களே, நீங்கள் உலகுக்குத் தந்த தமிழகம், பொன்னையே விரும்பாத புனிதம், தமிழகம் உங்கள் பார்வையில் தழைத்தது. தமிழ் மக்கள் உன் பாதையில் செழித்தனர். தாயே நீங்கள், ஏழைகளின் வாழை, இயலாதோர்க்கு பனிமலை, எதிரிகளின் எரிமலை,

தொண்டில் வெளிப்படும் தூய உள்ளம், துணையென வருவோர்க்கு கருணை வெள்ளம். கோடானுகோடி தொண்டர்களின் கோபுர தரிசனம், கோடை நிலவாய் கொள்கை விமர்சனம், அம்மா உங்கள் அயராத உழைப்பும், அசையாத மனமும், தூயத் தொண்டும், துணிவான பார்வையும், உலகையே வழி நடத்தும். வாழ்க நீ எங்கள் அம்மா. தாழ்வுற்று வறுமை மிஞ்சி விழுமிய வாழ்வு கெட்டு, பாழ்பட்டு நின்ற தாமோர் பைந்தமிழ் நாடு தன்னை வாழ்விக்க வந்த எங்கள் அம்மா, யாம் வாழும் நாளும் நீ வாழிய எங்கள் அம்மா.

*பிற்பகல் 12-30*

தாயே எனக்கு மக்கள் பணி ஆற்ற வழி நடத்தி, வாய்ப்பளித்த தெய்வீகமே. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்கி நன்றி கூறி, விடைபெறுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, எட்டு மணித்துளிகள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறையப் பிரச்சினைகள் இருக்கக்கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மற்றவற்றையெல்லாம் எழுதிக் கொடுத்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** வனத் துறை சம்பந்தமாகவும், சுற்றுப்புறச் சூழல் சம்பந்தமாகவும் பல்வேறு கருத்துகளை உங்களுடைய கொள்கைக் குறிப்பிலே தந்திருக்கிறீர்கள். அதற்குள்ளே நின்றுகொண்டு சில விஷயங்களைச் சொல்ல நான் விழைகின்றேன். குறிப்பாக, இந்தச் சுற்றுப்புறச் சூழல் என்று சொல்கின்றபோது எங்கள் ஊரில் ஒரு பழமொழி சொல்வோம். அதாவது கோலும் ஒடியக் கூடாது பாம்பும் சாகக் கூடாது என்று சொன்னால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்ற பிரச்சினை ஒரு பக்கம். இன்னொன்று, நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய மக்களைப் பாதுகாக்க வேண்டிய பிரச்சினை மறுபக்கம். எனவேதான் நவீனமயமாக்கப்பட்ட, விஞ்ஞானம் நவீனமயமாகி இருக்கின்றபோது தண்ணீர் மாசுபடாமல், காற்று மாசுபடாமல், எந்தச் சம்பிரதாயத்தை மேற்கொள்ள வேண்டுமென்பதை ஆழமாக நாம் பரிசீலனை செய்து, அதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டுமே தவிர, ஆலைகளை மூடுவதால் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு, அதை மூடவில்லையென்று சொன்னால், மக்களுக்குப் பாதிப்பு.



அப்படியொரு தன்மையிலேதான் நான் இந்த ஊர்மொழியைச் சொன்னது; கோலும் ஒடியக்கூடாது, பாம்பும் சாகக் கூடாது. அந்த வகையிலே நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டாவது, இந்த வனத் துறை சம்பந்தமாக நான் பேசுகின்றபோது கூட நம்முடைய கொள்கைக் குறிப்பிலே, நம்முடைய தேயிலை, நாம் உற்பத்தி செய்கின்ற தேயிலை, நாம் உற்பத்தி செய்கின்ற ரப்பர், இவை இரண்டும் இந்தியாவிற்குத் தேவையான சரக்கை, தமிழ்நாட்டிற்குத் தேவையான சரக்கை நாம் உற்பத்தி செய்கின்றோம். ஏற்றுமதி செய்யக்கூடிய அளவிலே நாம் வளர்ந்திருக்கின்றோம். ஆனால் எந்த அரசும், முன்னால் இருந்த அரசோ, பின்னால் இருந்த அரசோ, அந்த ஏற்றுமதி என்பதற்குப் பதிலாக தேயிலையை இறக்குமதி செய்ததால் அதனுடைய விளைவு நம்முடைய நீலகிரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை, விவசாயிகளை, சின்னஞ்சிறிய விவசாயிகளை பாதிக்கின்றது. அதை இன்னும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்த உடனே சில நடவடிக்கைகளை மேற்கொண்டார்கள். பாராட்டுக்குரிய நடவடிக்கைகளாக இருந்தன. இருந்தாலும்கூட முழுமையாக நம்முடைய விவசாயிகளைப் பாதுகாக்கின்ற வகையில் அது போய்ச் சேர்ந்ததா என்று கேட்டால் இல்லை. இன்னும் அதிலே பிரச்சினைகள் இருந்துகொண்டுதான் இருக்கின்றன. அந்த வகையிலே தேயிலை இறக்குமதியைத் தடைசெய்வதற்கு உரிய நடவடிக்கையை மத்திய அரசாங்கத்திலே— நாம் எங்கே மோதுவது என்று சொன்னால், மத்திய அரசாங்கத்தினுடைய தவறான ஒரு கொள்கையின் காரணமாகத்தான் இந்த நிலை நீடிக்கின்றது. அந்த நிலையைக் கட்டுப்படுத்துவதற்கு அல்லது அந்த நிலையைத் தடுத்து நிறுத்துவதற்கு மாநில அரசாங்கம் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்பதுதான் இதிலே என்னுடைய வேண்டுகோள்.

மூன்றாவது, ரப்பர். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய ரப்பர் என்பது ரப்பர். கன்னியாகுமரி மாவட்டத்திலே இருக்கக்கூடிய ரப்பர் செய்கின்ற வகையில், நம்முடைய இந்தியாவினுடைய தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில், அடுத்து கேரள மாநிலத்தினுடைய ரப்பரையும் சேர்த்துக்கொண்டு பார்த்தால், நம்முடைய நாட்டுக்குத் தேவையான ரப்பரை நாம் உற்பத்தி செய்கின்றோம். எதற்காக இறக்குமதி செய்கின்றார்கள் என்பதுதான் புரியவில்லை. இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். இந்த வெளிநாடுகளிலேயிருந்து இறக்குமதி

[திரு. டி. மணி]

செயற்கையான ரப்பர் மலிவான விலை சரி, மலிவான விலை என்று சொன்னால், M.R.F. ஒரு டயரை, ஒரு டயரை உற்பத்தி செய்தால், அதனுடைய விலை குறைந்ததா? இந்த மூன்று, நான்கு, ஆண்டுகளாக இருக்கின்ற நடவடிக்கைகளைப் பார்த்தால், அவர்கள் உற்பத்தி செய்கின்ற ரப்பரினுடைய டயரினுடைய விலை குறைக்கப்பட்டதா என்று கேட்டால், இல்லை. நம்முடைய நாட்டிலே இருக்கக்கூடிய ரப்பரினுடைய விலை எங்கே போனது? ரூ. 22/- ஒரு கிலோவுக்கு தற்போது அதனுடைய விலை, ஒரு சில கட்டுப்பாடுகள், எந்த வகையிலே ஏற்பாடு செய்திருந்தாலும் அதன் விளைவாக இன்று ரூ. 48/- என்ற அளவுக்குச் சென்றுவிட்டது. எனவேதான் இந்த ரப்பரிலே இருக்கக்கூடிய மிகப் பெரிய பிரச்சினைகள். அந்த வட்டாரத்திலே வருகின்ற அரசினுடைய நிலம். அந்த அரசினுடைய நிலம் என்பது ஒரு பக்கத்திலே இருக்கட்டும்.

இரண்டாவது, நம்முடைய காடுகளைப் பாதுகாக்கின்ற வழி என்ற முறையிலே இங்கே தினமலர் பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது.

நீலகிரி வனக் காடுகளில் இன்று சாம்பிராணி மரங்களை வெட்டி வீழ்த்துகின்ற அல்லது கடத்துகின்ற ஒரு பெரிய நடவடிக்கை நடந்துவருகிறது என்று தினமலர் பத்திரிகையிலே படத்தோடு போட்டு ஒரு செய்தியைத் தந்திருக்கிறார்கள்.

அது எப்படி என்று கண்டுபிடித்து அதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுபோன்றுதான் கன்னியாகுமரி மாவட்டத்தில் வருகின்றபோது தடிக்காரகோணம் பகுதியிலேயிருந்து பாலமூருக்கு மேல்பேட்டை பகுதிகளிலே ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அங்கே ஒரு re-survey வேண்டுமென்று நான் ஒரு கோரிக்கை வைத்திருந்தேன். அதற்கான ஓர் உத்தரவையும் தந்தார்கள். இருந்தும், எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஏனென்றால் சாதாரண ஒரு சின்ன விவசாயி ஒரு ஏக்கர் நிலத்திலே பயிர் ஏற்றினால் அல்லது வனத்திற்குள் சென்றால் அவனைத் தடுத்து விடுகின்றனர். ஆனால் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களை பெரியவர்கள் என்று சொல்கின்றவர்கள், கையகப்படுத்தி— அது வனத் துறையில் உள்ளவர்களுக்கும் தெரியும்— மோதல்களை உருவாக்கி, [illegible]ரும் வரை சென்று நம்முடைய வனத் துறை சாதகமான பல [illegible]களை வாங்கிய பின்னரும், நிலத்தை எடுத்துக்கொள்ள முடியாத [illegible]நிலை இருக்கிறது. அந்த வகையிலே ஒரு re-survey அதற்கு [illegible]ம். அந்த re-survey-யிலே எப்படிப்பட்ட பெரியவர்களாக [illegible]ணி, அவர்களுடைய கையிலே இருக்கின்ற அந்த நிலங்களை–



பிற்பகல் 12-35

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை survey பண்ண உத்தரவிட்டு survey நடந்துகொண்டிருக்கிறது. நடவடிக்கை துரிதமாக எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்திருக்கின்றார்கள். ஏற்கெனவே கடந்த வாரம் அந்தப் பகுதியிலே சென்று நான் இந்த விவரங்களைச் சேகரிக்கின்றபோது, அந்தப் பணி ஆரம்பிக்கவில்லை என்று ஒரு தகவல் உள்ளது. அதை என்னவென்று நீங்கள் verify பண்ண வேண்டும். ஆக, அந்த re-survey என்பது முடிவு பண்ணும்போது, பல நூற்றுக்கணக்கான ஏக்கர் தனியார் கையிலே இருப்பது அரசினுடைய சொத்தாக மாறும். மாற்றுவதிலே ஏதாவது தடங்கல் ஏற்பட்டு யார் வந்தாலும் சரி, எந்தக் கொம்பனாக இருந்தாலும் சரி அதை...

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சொத்தை தனியார் நிச்சயமாக என்றைக்கும் பெற்றுவிட முடியாது. கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே யார் கையிலே இருந்தாலும் சரி, எடுத்தாக வேண்டும் என்பதிலே இரண்டுவிதமான கருத்தில்லை. அரசு, அந்தக் கடமையை ஆற்றியாக வேண்டும் என்பதுதான். ஏனென்றால் இது பல வருடங்களாக நாங்கள் போராடுகின்ற ஒரு பிரச்சினை. அந்தப் பிரச்சினையிலே இப்போது கவனம் செலுத்தியிருக்கின்றார்கள். அந்த வகையிலே நான் அரசைப் பாராட்டுகின்றேன். அந்த நடவடிக்கை முழுமையாக வெற்றி பெற வேண்டும், வெற்றி பெற அதனுடைய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விஷயங்களுக்குள்ளே நான் வரவில்லை. அதற்கு நேரம் எனக்கு முன்னால் இல்லை. ஆக, இதனுடைய பின்னணியிலேதான் அங்கே இருக்கின்ற ரப்பரைப் பற்றி

[திரு. டி. மணி] [2003 மே 8

நான் ஒன்றைச் சொல்ல விரும்புவது, 1956 வாக்கிலே அரசினுடைய சொத்து என்று இருந்ததை ரப்பர் கழகத்திற்கு, கழகம் என்று ஒன்றை உண்டாக்கி ரப்பரை நட்டார்கள். அப்போது, அந்த 4 ஆயிரம் சொச்சம் வாக்கூடிய ஹெக்டேர் நிலத்திலேயிருந்த, அருங்காடாக இருந்த, விலையுயர்ந்த மரங்களை, பூராவையும் விற்று இந்தத் துறையினர் கையகப்படுத்தினார்கள். அதிலேயிருந்து ஆரம்பித்து இந்த ரப்பர் மரம் வைத்து, பயிர் வைத்து, 6 வருடத்திலே yielding அது வெட்ட ஆரம்பித்ததற்குப் பின்னால் படிப்படியாக அது இலாபத்தில் வந்தது. ஆனால் ஒவ்வொரு வருடமும் ரூ. 6,000/- ஒரு ஹெக்டேர் நிலத்தில் குத்தகையாக அந்த ரப்பர் கழகம் அரசுக்குத் தர வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்னால் இந்தப் பிரச்சினையை இந்த மாமன்றத்திலே கிளப்பி, அதை ரூ. 3,000/- என்று குறைத்தார்கள். இருந்தும், நட்டம் என்று சொல்லுகின்ற இடத்திலிருந்து நாம் மீளவில்லை. எனவேதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 6000/- த்திலிருந்து ரூ. 3,000/- ஆகக் குறைத்தது, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். ரூ. 3,000/- என்பதை இனி முற்றிலுமாகக் குறைத்து விட வேண்டும். ஏனென்றால் இப்போது ரூ. 48/- ரப்பருக்கு விலை இருக்கிறது. இந்த விலையிலே அந்த நிர்வாகத்தை, ரப்பர் கழகத்தை....

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 6,000/-த்திலிருந்து ரூ. 3,000/- ஆகக் குறைத்தால் ரூ.12.90 கோடியை ரப்பர் கழகம் அரசுக்குக் கொடுக்க வேண்டியது இருந்தது. அதில் ரூ.6.45 கோடியை அரசுப் பங்காகவும், மீதியுள்ள ரூ. 6.45 கோடியை கடனாகவும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரப்பர் கழகத்திற்கு வழங்கியுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2003 மே 8]

*பிற்பகல் 12-40*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள்ளே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** இரண்டு விஷயங்கள்தான். பேசி முடித்துவிடுகிறேன். அதனால்தான் நான் முதலிலேயே சொன்னேன். அந்த நிலங்களைக் கையகப்படுத்துகின்றபோது கோடிக்கணக்கான ரூபாய்க்கான மரங்களை இந்த அரசு அல்லது இந்தத் துறை எடுத்துக்கொண்டது. இருந்தும் கடன் என்று வருவதற்கும், இடம் இல்லாத நிலைக்கும் நாம் வந்திருக்கின்றோம். எனவேதான், என்னுடைய வேண்டுகோள் என்பது, இந்தக் கழகம், அதிலே உற்பத்தி ஆகின்ற ரப்பர் மூலமாக அது வளர்ச்சிப் பாதையிலே செல்வதற்கு இது தேவையாகின்றது. இன்னும் அதை நஷ்டம், நஷ்டம் என்று சொல்லி அதைத் தள்ளிவிடக்கூடாது. ஏனென்றால் ரூ. 48/- கிடைக்கும் என்று சொன்னால், அதனுடைய அர்த்தம் நம்முடைய வருமானம் பெருகும் என்பதாகும். அந்த அடிப்படையிலே அதைப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் அதைச் சரிவர நடத்துவதற்கான ஏற்பாடு என்ன என்பதைத்தான் நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். அதற்கு நேரம் இல்லை; அதனால் அதற்குள்ளே வரவில்லை.

இன்னொன்று, ஒரு கிராம்புத் தோட்டம் இருக்கின்றது; நம்முடைய அரசாங்கத்தினுடைய ஏற்பாட்டிலே ஒரு கிராம்புத் தோட்டம் இருக்கின்றது. அந்தக் கிராம்புத் தோட்டத்தைப் பாதுகாப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோல அங்கே வேலை செய்கின்ற ஏறத்தாழ 2,000 தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய சம்பளப் பிரச்சினைபற்றி பேசி முடிக்கப்படாமல் காலம் தாழ்த்துகின்ற ஒரு நிலை நீடிக்கின்றது. எனவே அவர்களுடைய பஞ்சப்படி என்பது கடந்த காலத்திலே வரப்படாமல் இருந்த நிலையில் தலைக்கு ரூ. 1,250/- நாம் வழங்க வேண்டிய நிலையில் இருக்கின்றோம். அதைக் கொடுத்து முடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுடைய ஒத்துழைப்பும், நம்முடைய நிர்வாகமும் நிர்வாகத்தில் வரக்கூடிய செலவு இருக்கிறதே, அதிகப்படியான பெரிய ஊழியர்கள், அதிகாரிகள்-அந்தப் பெரிய அதிகாரிகளைச் சற்று குறைப்போமானால், இன்னும் அதை இலாபகரமாக நடத்திக் கொண்டுவருவதற்கு வாய்ப்பு வரும்.

அதுபோன்று அந்த வட்டாரத்திலே வருகின்ற சட்டமன்ற உறுப்பினர்களும், தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் சேர்ந்து ஒரு கமிட்டியை உருவாக்கி, அதை மேற்பார்வையிடுவதற்கும், வழிநடத்திச் செல்வதற்கும் ஏதுவாக ஒரு ஏற்பாடு செய்யபபடுமேயானால் இலாபகரமாக, பல கோடி ரூபாய் இலாபம் ஈட்டுகின்ற ஒரு நிறுவனமாக நாம் அதை மாற்றிக் கொள்ள முடியும். அந்த வகையிலே அதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். (மணியடிக்கப்பெற்றது)

அந்தப் பக்கத்திலே காளிகேசத்திற்கும் கீரிப்பாறைக்கும் இடையிலே ஓர் ஆறு ஓடுகிறது. 1992 ஆம் ஆண்டிலே ஏற்பட்ட பெருவெள்ளத்திலே அந்தப் பாலமே இழுத்துக் கொண்டு போய்விட்டது. ஆனால் அன்றிலிருந்து இன்று வரையிலும் அந்தப் பாலத்தைக் கட்ட வேண்டும் என்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. தொழிலாளர்கள் அந்த மழைக் காலங்களிலே அந்தப் பக்கம் செல்ல முடியாத ஒரு நிலை இருக்கின்றது. ஏனென்றால் வன இலாகாவிலே அதைத் தர இயலாது என்றும், நம்முடைய சாலை அதற்குள்ளே வருகின்ற காரணத்தால் இப்படிப்பட்ட இடர்பாடுகள் இருக்கின்றன. எனவே நம்முடைய வன இலாகாவும், இந்த ரப்பர் கழகமும் எல்லாம் சேர்ந்து, அதைப் பேசி முடித்து, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. டி. மணி:** ஒரு நிமிடம். அதாவது, மணலோடையிலே கொஞ்சம் ஊழியர்கள் குடியிருப்புக்கள் இருக்கின்றன. அவற்றுக்கு மின்சாரம் கேட்டு 24 வருடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும், மின்சாரம் தருவதற்கு வன இலாகாவினுடைய சட்டம் நமக்குத் தடையாக இருக்கின்றது. அந்தத் தடையை நீக்கி அந்தத் தொழிலாளர்களுடைய குடியிருப்புக்களுக்கு மின்சாரத்தைத் தருவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம். திரு. சிவபுண்ணியம், நான் உங்களைக் கவனித்துக் கொண்டேயிருந்தேன். நீங்கள் தயாரித்திருப்பதைப் பார்த்தால், ஒரு மணி நேரம் பேசுவதற்காகத் தயாரித்திருப்பதைப்போல் தெரிகிறது.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எட்டு மணித்துளிகளுக்குள்ளே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயாரித்தது உண்மை. உங்களைப் பார்த்ததற்குப் பின்னாலே குறிப்புகளை எல்லாம் தனியாக வைத்துவிட்டேன். கோயில்களிலே நடுநிசிகால பூஜை செய்வதைப் போல், நடுப்பகலிலே எனக்கு நேரம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் மணியை நீங்கள் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் வித்தியாசமாக இருக்கிறது. கொஞ்சம் விரைவாகப் பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொஞ்சம் நேரம் இங்கே இருந்து பாருங்கள். அப்போதுதான் தெரியும் உங்களுக்கு. (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறைபற்றிப் பேச வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றி. கொள்கை விளக்கக் குறிப்பிலே, "மனிதச் சமுதாயத்திற்குத் தேவையான உயிர்ச்சூழல் பாதுகாப்பினை அளிப்பதில் அடர்ந்த காடுகள், சுத்தமான நீர், வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பழந்தமிழ்ப் புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, பண்டைக்காலத்திலேயே வலியுறுத்திக் கூறப்பட்ட மிக முக்கியமான, பாதுகாக்கப்பட வேண்டிய அந்த அம்சங்கள் இப்போது இந்தியாவிலேயே பாதுகாக்கப்படவில்லை என்பது வருத்தத்திற்குரிய ஒன்று. அதோடு தமிழகத்திலேயும் அது குறைந்து வருவது மிக வேதனை அளிக்கக்கூடிய ஒன்றாகத்தான் நான் கருதுகிறேன். அதைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் என்ற அடிப்படையில், கொள்கை விளக்கக் குறிப்பிலே பல செய்திகள், நல்ல செய்திகளும், நம்பிக்கையூட்டக்கூடிய வகையிலே பல அறிவிப்புகளும், செய்திகளும் இருப்பது வரவேற்கக்கூடிய ஒன்று.

பிற்பகல் 12-45

குறிப்பாக, நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்ந்து வருகின்றன. குடிநீர்ப் பற்றாக்குறை, வறட்சியைப்பற்றி நாம் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருக்கிறோம். இதற்கு ஆதாரமாக இருக்க வேண்டிய வன வளம் பாதுகாக்கப்பட வேண்டியது மிக அவசியமாக இருக்கிறது. அதற்குரிய முயற்சிகளைப்பற்றி சில செய்திகளைச் சொல்ல நான் விரும்புகிறேன். குறிப்பாக, மத்திய அரசாங்கத்தினுடைய நிலத்தடி நீர் வாரியம் ஒரு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டு, அதிலே பல மாநிலங்களைக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறது. குஜராத், அரியானா, மகாராஷ்டிரா, பஞ்சாப், ராஜஸ்தான் போன்ற மாநிலங்களோடு—தமிழகமும் நிலத்தடி நீர் மிக அதிகமாக உறிஞ்சப்பட்டு பாதிக்கப்பட்டு மிக அபாயகரமான நிலையில் இருக்கிற மாநிலங்களில்—தமிழகத்தையும் சேர்த்து அறிவித்திருக்கிறார்கள். ஆகவே இந்த நிலத்தடி நீர் பாதுகாக்கபபடுவதற்கான முயற்சி எப்படி எடுக்கப்பட வேண்டும் என்பதைப்பற்றி நாம் ஆழமாக சிந்திக்க வேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு 40 சதம், வீட்டுக் குடிநீருக்கு 60 சதம் நாம் பயன்படுத்திக் கொண்டிருக்கிறோம். இப்படி எல்லா வகையிலும் நீர் தேவையாக இருக்கிறபொழுது, வன வளம் மிகக் குறைந்த அளவிலேயே இருக்கிறது. அதைக் குறிப்பிட்டுச் சொல்கிறபொழுது நமது கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு நாட்டிலே 33.33 சதம் காடு இருக்க வேண்டும் என்பதைப்பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லிவிட்டு, தமிழகத்திலே 17.584 சதம்தான் காடுகளும் மரங்களும் இருக்கின்றன என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஒரு சரி பாதி அளவிற்கு ....

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வன அளவை நிறுவனம் டேராடூனில் இருக்கிறது. தமிழகத்தில் 17,078 சதுர கிலோ மீட்டர் ஆக இருந்த வனப் பரப்பு—அதனுடைய அறிக்கை 2003, இந்த வருடம்தான் வந்திருக்கிறது. இருந்த வனப் பரப்பு 21,482 சதுர கிலோ மீட்டராக தமிழ்நாட்டில் உயர்ந்துள்ளது என்பதையும், மேலும், அடர்ந்த காட்டினுடைய பரப்பு சதுர கிலோ மீட்டர் 8,680 ஆக இருந்தது. அது 12,499 சதுர கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் புரட்சித் தலைவி அவர்களுடைய தொலைநோக்குத் திட்டத்தில் 1994 ஆம் ஆண்டு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் காடு



வளர்ப்புத் திட்டத்தை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தீட்டினார்கள். அதன் விளைவாக இன்றைக்கு வனப் பரப்பு உயர்ந்திருக்கிறது. அதனுடைய சதவீதமும் உயர்ந்து இருக்கிறது என்பதைப் பெருமையுடன் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திலே எனக்கு மாறுபாடு இல்லை. நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனாலும் போதிய அளவு வன வளத்தைப் பாதுகாப்பதற்குரிய முயற்சியைப் பற்றித்தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். குறிப்பாகவே, நமது தமிழ்நாடு என்பது பூமத்திய ரேகைக்கு வடக்கே, வெப்ப மண்டலப் பகுதியில் அமைந்திருக்கிற காரணத்தினாலேயே வறட்சி தொடர்ந்து வரும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். இயற்கையாகவே வறட்சி வருவதற்குரிய ஒரு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலேயே, வன வளத்தை அதிகப்படுத்தினால்தான் இந்த கோர விபத்துகளைத் தடுப்பதற்கான முயற்சி எடுக்க முடியும் என்ற காரணத்தினாலேதான் சொல்கிறேன். குறிப்பாக, ஒருவர் உண்ணாமல் 60 நாட்கள் இருந்துவிடலாம். ஆனால் 4 நாட்களுக்குள்ளாக குடிநீர் இல்லை என்று சொன்னால் அவருக்கு உயிர் இழப்பு ஏற்பட்டு விடுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தண்ணீர் அவ்வளவு அவசியத் தேவையாக இருக்கிறது. அதேபோல, ஒருவருக்கு தினசரி 16 கிலோ காற்றும், 3 லிட்டர் குடிக்க தண்ணீரும் கண்டிப்பாக இருக்க வேண்டும் என்பது ஆய்வு ரீதியாக சொல்லப்படுகிறது. ஆகவே இந்தத் தேவையை உறுதி செய்து மக்களுக்கு வழங்க வேண்டிய கடமையும் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது. அந்தக் கடமை என்ற அடிப்படையில் நீரினுடைய ஆதாரத்தைப் பெருக்குவதற்கு வன வளம் அவசியம் தேவையாக இருக்கிற காரணத்தினாலேயே இதைப்பற்றி ஆழமாகச் சிந்திப்பதற்காகத்தான் நான் இந்தக் கருத்தைச் சொன்னேன்.

குறிப்பாக, தண்ணீரினுடைய அளவும் நாம் பயன்படுத்துகிற முயற்சிகளையும் எடுத்துப் பார்த்தால் எல்லா வகையிலும் சேதாரம் அடைந்துகொண்டேயிருக்கிறது. நிலத்தடி நீரை எடுத்துக்கொண்டே இருக்கிறோம். ஒரு லிட்டர் பெட்ரோல் தயாரிப்பதற்கு 10 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு கிலோ காகிதம் செய்வதற்கு 100 லிட்டர் தண்ணீர் பயன்படுத்தப்படுகிறது. ஒரு டன் சிமெண்ட் தயாரிப்பதற்கு 4,500 லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஒரு டன் ரேயான் துணி தயாரிப்பதற்கு 20 இலட்சம் டன் தண்ணீர்

தேவைப்படுகிறது. ஒரு டன் டெர்லின் துணி தயாரிப்பதற்கு 42 இலட்சம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. ஆகவே உற்பத்திக்கும், மற்றவைக்குமாகப் பார்க்கிறபொழுது ஏராளமான தண்ணீர் தேவைப்பட்டுக்கொண்டே இருக்கிறது. இதனால் மிகவும் அதிகமாக நிலத்தடி நீர் எடுக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஆகவே நிலத்தடி நீர் பாதுகாக்கப்பட வேண்டுமானால் மழை வளம் வேண்டும். மழை வளம் வேண்டுமானால் வன வளம் வேண்டும். வன வளத்தைப் பாதுகாத்து மழை வளத்தைப் பெருக்குவதற்குரிய முயற்சி எடுத்து அது எல்லா வகைகளிலும் தண்ணீர் ஆறுகள் மூலமாக, கால்வாய்கள் மூலமாகச் சென்று அடைகிறபொழுது அந்த ஆறுகளும் கால்வாய்களுமே பாதுகாக்கப்பட வேண்டிய அவசியம் இருக்கிறது. அவற்றிலே இருக்கிற மணல் இப்பொழுது கொள்ளை போய்க்கொண்டே இருக்கிறது. அதைத் தடுப்பதற்கான முயற்சி அரசின் சார்பில் எடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். ஆனாலும் இதை அடிப்படைப் பிரச்சினையாகக் கவனத்திலேகொண்டு தடுக்க வேண்டும். காவிரி ஆற்றிலே, கரூரிலே, அமராவதி ஆற்றிலே ஆற்றுக்குள்ளேயே சாலைகள் அமைத்து மணல் கொள்ளை நடந்துகொண்டே இருக்கிறது. இது கேரளாவிலே நடைபெற முடியாது. ஆனால் தமிழகத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புகிறேன். இதன்மீது உரிய கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

***மாண்புமிகு திரு. அ. பாப்பாசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டத்தில் மணல் கொள்ளை போவதாக, அமராவதி/காவேரி ஆற்றிலே பாதை போட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் சொன்னார்கள். அந்த மாதிரி நிகழ்வுகள் எதுவும் அமராவதி/காவேரி ஆற்றில் இல்லை. யாராவது வீட்டு உபயோகத்திற்கு வேண்டுமானால் எடுத்திருக்கலாம், அரசாங்கக் கட்டடத்திற்கு வேண்டுமானால் எடுத்திருக்கலாமே தவிர, மற்றபடி அங்கீகரிக்கப்பட்டவர்கள்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் எந்த நிகழ்வும் அங்கு நடைபெறவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு வந்திருக்கிற தகவலைச் சொல்லியிருக்கிறேன். இன்னும் ஒரு தகவலைக் கூடுதலாகச் சொல்ல வேண்டுமானால், கரூர் பகுதியிலே இன்னும் ஒரு வாரம், 10 தினங்களுக்குள்ளாகவே விவசாயிகள், மற்றவர்கள் எல்லாம் குழு அமைத்து இதை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதற்குத் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் இதைக் கேட்டறிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிற நமது கொள்கை விளக்கக் குறிப்பில் ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்பைப்பற்றி ஒரு குறிப்பு சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் தீ தடுப்புகளுக்கான கோடுகள் அமைத்தல், மற்ற நிகழ்ச்சிகளைப்பற்றிச் சொல்லி, அதற்கான நிதி ஆதாரத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் தீயினால் காடுகள் அழிக்கப்படுவதைத் தடுப்பதிலே ஒரு கருத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. இப்போதுகூட சமீப காலங்களாக, குற்றாலத்திலே, களக்காடு பகுதியிலே, ஊட்டி, நீலகிரி, முதுமலைக் காடுகள் பகுதியிலே எல்லாம் பல கிலோ மீட்டர் காடுகள் அழிந்துகொண்டே இருக்கின்றன, தீயின் காரணத்தாலே. இதைத் தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று சொன்னால்கூட, ஒரு சந்தேகமும், ஒரு அச்சமும், ஒரு செய்தியும் வெளியில் இருக்கிறது. இந்தத் தீ ஏற்படுவது என்பது அந்தக் காடுகளிலே இருக்கக்கூடிய விலை உயர்ந்த தரமான மரங்கள் எல்லாம் திருடு போகின்றன. அதை வெட்டிவிட்டு, திருடச் செய்துவிட்டு, அதை மறைப்பதற்குரிய முயற்சியாக தீ வைத்துக் கொளுத்திவிட்டு, அது தீயிலே போய்விட்டதாக ஒட்டுமொத்த கணக்கைக் கொடுப்பதற்குரிய முயற்சிகள் நடைபெறுவதாக வலுவான சந்தேகம் இருக்கிறது. ஆகவே இந்தத் தீ தடுப்புச் சம்பவங்கள்பற்றிச் சொல்கிறபோது, இந்தத் தீ போன்ற காரியங்கள் நடைபெறுவது என்பதே சமூக விரோதிகள் மூலமாகவும், அதற்கு இசைவாக இருக்கின்ற அதிகாரிகளுடைய உறுதுணையின் மூலமாகவும் இந்தக் காடுகள் அழிக்கப்படுகின்றன, மரங்கள் கொள்ளை அடிக்கப்படுகின்றன. அவற்றை மறைப்பதற்காக தீ வைக்கப்படுகிறது என்ற செய்தி இருக்கிறது. இதைப்பற்றி நமது அரசு பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக ஒரே ஒரு செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** எங்களது மாவட்டத்திலே, குறிப்பாக நமது திருத்துறைப்பூண்டி தொகுதிக்கு உட்பட்ட பகுதி, முத்துப்பேட்டை பகுதி. அந்தப் பகுதியிலே தில்லைவளாகம் பகுதி என்ற ஒரு முக்கியமான பகுதி , இருக்கிறது. அது மேங்குரோவ் காடுகள் வளர்க்கப்படும் பகுதி. உலகத்திலே அதிசிறப்பு வாய்ந்த பகுதிகளிலே அது ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆனால் அது வெளி உலகத்திற்குத் தெரியாமல் இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியில் இப்போது இறால் பண்ணைகள் அமைப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டு, அந்தப் பகுதி மிகப் பெரிய பிரச்சினைக்குரியதாக, கொந்தளிப்பாக, சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையாக மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கு அரசு அதிகாரிகள் அனுமதி அளித்துவிடுகிறார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகளைக் கேட்டால், அங்கே அந்த இறால் பண்ணைகள் அமைக்கக்கூடாது. அது வடிமுனைப் பகுதி, காவிரி டெல்டா பகுதியினுடைய, வடிமுனைப் பகுதியினுடைய முக்கிய பகுதியாக இருக்கிறது என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அனுமதி அளிக்கிறார்கள். ஏன் என்று அது தெரியாத பிரச்சினையாக இருக்கிறது. அதைப் பரிசீலித்து...

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் காவிரி வடிநிலப் பகுதியில் இறால் பண்ணைகள் அமைப்பதைப்பற்றிச் சொன்னார்கள். அதுபற்றி விசாரணை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் சொன்னதற்கு மிக்க நன்றி. மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள் குறிப்பிட்டது போன்று முன்னாள் ஜனாதிபதியாக இருந்த திரு. வெங்கட்ராமன் போன்றவர்கள் எல்லாம் அந்த மேங்குரோவ் காட்டைப் பார்த்து, அழகை ரசித்த இடம். எப்படி பிச்சாவரத்தில்—பேரறிஞர் அண்ணா அவர்கள் போய் தங்கி ஓய்வெடுப்பதற்காக பிச்சாவரத்தைத் தேர்ந்தெடுத்தாரோ, அதேபோன்று முன்னாள் ஜனாதிபதி திரு. வெங்கட்ராமன், முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்கூட அந்த இடத்தைப் பார்வையிட்டுள்ளார்கள். உண்மையிலேயே என்



தொகுதியிலே இருப்பது, சீரழிந்து போய்விட்டது—அவ்வளவு இறால் பண்ணைகள்—அது ஒரு நல்ல வடிமுனைப் பகுதி. அநேகமாக நம்முடைய வன இலாகா சார்பாக மேங்குரோவ் மரங்களை நட்டுவைத்திருந்தார்கள். அந்தக் காடுகள் பூராவும், முற்றிலுமாக அழித்துவிட்டார்கள். அது சுற்றுலா மையத்திற்கு ஏற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரடியாகப் பார்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால்கூட, எப்படியாவது—திருச்சிக்கு வருகிறபோதோ அல்லது தஞ்சாவூர் வருகிறபோதோ விமானம் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்த்துவிட வேண்டும். அங்கு கடலில் திட்டு இருக்கிறதைப் பாருங்கள், அந்த அழகு நம்முடைய தமிழ்நாட்டில் வேறு எந்த இடத்திலும் அந்த அழகைப் பார்க்க முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கண்டிப்பாக ஒரு தடவை வாய்ப்பு கிடைக்கிறபோது ஹெலிகாப்டர் மூலமாகவாவது அதைப் பார்த்து அதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். உடனடியாகத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

***மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆண்டு அறநிலையத் துறையின் மூலமாக ஆய்வு செய்த நேரத்தில் தமிழ்நாட்டில் மழை பெய்யாததற்கு காட்டிலே இருக்கிற மரங்கள் எல்லாம் வெட்டப்பட்டதுதான் காரணம் என்றும் அறநிலையத் துறைக்கு 4.70 இலட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்கிறீர்களே, அங்கெல்லாம் பலன் தரும் மரங்களை, பலன் தராத மரங்களை நட வேண்டுமென்றும் ஆணையிட்டார்கள்.

*பிற்பகல் 12-55*

அந்த ஆணையினுடைய அடிப்படையில் தமிழ்நாட்டிலே இருக்கின்ற 10 மண்டலங்களான—சென்னை மண்டலத்தில் 11 ஆலயத்தின் சார்பாக 7,135 மரக் கன்றுகளும், வேலூர் மண்டலத்தில் 59 ஆலயங்களின் சார்பாக 14,761 மரக் கன்றுகளும், சேலம் மண்டலத்தில் 25 ஆலயங்களின் சார்பாக 14,250 மரக் கன்றுகளும், திருச்சி மண்டலத்தில் 29 ஆலயங்களின் சார்பாக 4,402 மரக் கன்றுகளும், கோவை மண்டலத்தில் 53 ஆலயங்களின் சார்பாக 13,306 மரக் கன்றுகளும், தஞ்சை மண்டலத்தில் 74 ஆலயங்களின் சார்பாக 46,584 மரக் கன்றுகளும், மயிலாடுதுறை மண்டலத்தில் 90 ஆலயங்களின் சார்பாக 17,040 மரக் கன்றுகளும்,

மதுரை மண்டலத்தில் 21 ஆலயங்களின் சார்பாக 8,590 மரக் கன்றுகளும், சிவகங்கை மண்டலத்தில் 4 ஆலயங்களின் சார்பாக 4,193 மரக் கன்றுகளும், திருநெல்வேலி மண்டலத்தில் 28 ஆலயங்கள் சார்பாக 1,423 மரக் கன்றுகளும் ஆக மொத்தம் ஏப்ரல் 2002 முதல் டிசம்பர் 2002 வரை 1,31,684 மரக் கன்றுகள் நடப்பட்டன. இந்த ஆண்டு மொத்தம் 3,00,000 மரக் கன்றுகள் நடப்படவேண்டுமென்று ஆணையிட்டதன் அடிப்படையில் 2,02,510 மரக் கன்றுகள் இதுவரையிலும் நடப்பட்டுள்ளன என்பதைத் தங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், பேச்சை நிறைவு பண்ணுங்கள். ஒரு மணித்துளியில் முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** நிறைய குறுக்கீடுகள் வந்துவிடுகின்றன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறையின் சார்பிலே எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கும், அதற்கு வித்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதுபோல எங்களுடைய இயக்கத்தின் சார்பிலும் நாகை, திருவாரூர் மாவட்டத்திலே இந்த ஆண்டிலே ஒரு இலட்சம் மரக் கன்றுகளை நடுவது என்று நாங்கள் திட்டமிட்டு இருக்கிறோம். அதற்கான முயற்சிகளை நாங்கள் எடுக்க இருக்கிறோம். அதற்கும் அரசு உதவி செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதற்கு அமைச்சர் பெருமக்களும் வந்து பங்கேற்க வேண்டுமென்று நாங்கள் அன்போடு கேட்டுக்கொள்கிறோம். சமூக வனக் காடுகள் என்பது மத்திய அரசாங்கம் அறிவித்து, மாநில அரசு ஏற்பாடு செய்தாலும்கூட, அது பல இடங்களிலே சமூக வனக் காடுகள் என்ற போர்டுதான் அங்கே இருக்கிறது. காடுகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே காடுகளை உருவாக்குவதற்கான முயற்சிகள் எடுக்க வேண்டும்.

அதேபோல, அந்தக் காடுகள் பகுதியிலே வாழ்ந்துகொண்டு இருக்கின்ற விவசாயிகள் அதிலே, அங்கே பிழைத்துக்கொண்டிருக்கிற பகுதி மக்களுக்கு உதவி செய்வதற்கான பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன, மகிழ்ச்சி அளிக்கிறது. நம்பிக்கை அளிக்கிறது. ஆனால் அவர்களை வெளியேற்றுவதற்கான முயற்சிகள் இன்னொரு புறம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதைத் தடுப்பதற்கான முயற்சியை ,எடுக்க வேண்டும்.



அதேபோல, பட்டா வழங்குவதைப்பற்றி கருத்து சொல்லப்படுகிறது. முடிந்த வரை வழங்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதிலே பழங்குடியின மக்களுடைய மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்கான வரவேற்பை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளியில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்து விடுகிறேன். முடித்து விடுகிறேன். குறிப்பாக மகளிர் பங்கேற்புக்கான சில திட்டங்களையும் இதிலே அறிவித்திருக்கிறார்கள். வரவேற்கக்கூடிய ஒன்று. அது எந்த ரீதியான பங்கேற்பு என்ற அறிவிப்பு அதில் இல்லை. அதைத் தெளிவுபடுத்துவதற்கான முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தரம் குன்றிய காடுகளை மேம்படுத்துவதற்கான முயற்சி வரவேற்கக்கூடியது. அதனால், அதிலே இருக்கக்கூடிய மேய்ச்சல் பகுதிகள், அதன் மூலமாகப் பயன்பெறக்கூடிய மக்கள், விறகுகளை வெட்டிப் பிழைத்துக்கொண்டு இருக்கிற மக்களால், தரம் குன்றிவிட்டது என்ற வார்த்தையும் இருக்கிறது. அது அவர்களுக்குரிய பாதிப்பாக மாறிவிடாமல், தரத்தை உயர்த்துவதற்கு உரிய முயற்சியை, அரசு எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுப்புறச் சூழல் சார்பாக ஓரே ஒரு செய்தி. குறிப்பாக, தொழிற்சாலைகளைப்பற்றி இதிலே சில செய்திகள் சொல்லப்பட்டிருக்கின்றன. 50 வருடங்களுக்கு முன்னாலே தொடங்கப்பட்ட Engineering தொழிற்சாலைகள் இருக்கின்றன. ஆனால் இந்த சுற்றுச் சூழல் துறை இருக்கிறதே, 50 வருடங்களுக்கு முன்னால் தொடங்கப்படவில்லை. இப்பொழுது சில விதிகளை விதிக்கிறார்கள். அதிலே, எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. நகர்ப்புறங்களிலே இருக்கின்ற Engineering தொழிற்சாலைகளை வெளியிடத்திற்கு மாற்ற வேண்டுமென்ற முடிவு சரி. ஆனால் அதற்குரிய இடம், மற்ற உதவிகளைச் செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

வட சென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கொதி நீரால் பழவேற்காடு ஏரியில் மீன் உற்பத்தி மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்படுகிறது. உயர்தர இறால், நண்டு வகைகளும் அழிக்கப்படுகின்றன. இதனால் ஆண்டுதோறும் ரூ. 100 கோடி இழப்பு ஏற்படுகிறது. அதை நம்பியுள்ள மீனவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அதற்குரிய முயற்சிகளை நீங்கள் எடுக்க வேண்டுமென்று கேட்டு அன்போடு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன் (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனல் மின் நிலையத்தினால் அந்த ஏரிக்கு எந்தப் பாதிப்பும் இல்லை. நான் என்னுடைய பதில் உரையில் அதைப்பற்றி நீண்ட விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

***திரு. கே.வி. முரளிதரன்:** (உறுப்பினர் தெலுங்கில் பேசினார்). மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 மானியக் கோரிக்கையான Forest and Environment-ல் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த தமிழ் வாழ் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழ்த் தாய் முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதி எல்லாம் forest சேர்ந்த தொகுதி. இந்த demand-ல் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்ததற்கு மீண்டும் நன்றி கூறி, இந்த Forest and Environment-லே கொண்டு வந்திருக்கும் schemes-களை எல்லாம் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் நாங்கள் பாராட்டுகிறோம். ஆனால் சில கருத்துகளை மட்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே யானை மிதித்து சாகிறவர்களுக்கு - கர்நாடக மாநிலத்தில் உடனே ஒரு வாரத்திற்குள்ளே பணம் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் 6 மாதம், 1 வருடம் ஆகிறது. நீங்கள் Central Government-ற்கு எழுதி, அது வந்தபிறகு கொடுக்கிறீர்கள். ஆனால் கர்நாடக மாநில Forest and Environment Minister-ஐக் கேட்கும்போது, C.M. Fund-லிருந்து உடனே கொடுத்து விடுகிறார்கள். அப்புறம் Central Government Fund-லே இருந்து fund வந்த பிறகு அதைச் சரி பண்ணுகிறார்கள் என்று சொல்கிறார்கள். அந்தமாதிரி நம்முடைய தமிழ்நாட்டிலே.....

பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சக்திவேல் முருகன் அன்று இந்தச் சபையிலே சொன்னார். மறுநாளே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாதிக்கப்பட்ட எசக்கியம்மாளுக்கு ரூ. 1 இலட்சம் பணம் கொடுத்தார். இப்போது மாண்புமிகு



உறுப்பினர் சொல்லியிருக்கிறார். அவர் சொல்கின்ற பாதிக்கப்பட்ட நபர்களுக்குக் கூடிய சீக்கிரத்தில் பணம் கொடுக்கப்படும் என்கின்ற உத்தரவாதத்தினை, (குறுக்கீடு) உடனுக்குடன் கொடுக்கப்படும் என்ற உத்தரவாதத்தினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் . . .

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இனிமேல் இதுபோன்ற நிகழ்வுகள் நிகழும்போதெல்லாம் உடனுக்குடன் உதவித்தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். அதே மாதிரி நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் பாரிமோகன் சொல்லும்போது, train accident-ல் 5 யானைகள் செத்துவிட்டன என்று கூறினார். அமைச்சர் கூறும்போது Check dam-ல் எல்லாம் தண்ணீர் இருக்கிறது என்று சொன்னார். ஆனால் எங்கள் area-வில் எந்த Check dam-மும் கிடையாது. Forest-லே Check dam கிடையாது. தண்ணீர் இல்லை, தக்கட்டிலும், ஜவளகிரியிலும் கூட mud water-ஐ குடித்த இரண்டு யானைகள் செத்துவிட்டன. இதற்கு உடனடியாக . . . .

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நீலகிரி மாவட்டத்தில் முதுமலைக் காடுகளில் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்போது மாண்புமிகு இரண்டு உறுப்பினர்கள் தருமபுரி மாவட்டத்தில் உள்ள காடுகளில் இதுபோன்ற ஏற்பாடுகள் செய்யப்படவில்லை என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்துள்ளதால், உடனடியாக தக்க ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி கூறுகிறேன். அதே மாதிரி கர்நாடக மாநிலத்தில் forest ending-ல் யானை, பயிர்களை நாசம் பண்ணக்கூடாது, சேதம் பண்ணக்கூடாது என்பதற்காக drain எடுத்திருக்கிறார்கள். 5 அடியில் வனப் பகுதியிலேயிருந்து, நிலப் பகுதிக்கு வராமல் இருப்பதற்கு அந்தமாதிரி தமிழ்நாட்டில்கூட அப்படி எடுத்தால் — கிட்டத்தட்ட 200 ஏக்கர் ஏரியாவில் tomato, cabbage எல்லாம் வீணாகிவிட்டது. அதுபோல அந்த trench எடுத்துவிட்டால் யானை தோட்டங்களுக்கு வராது. அந்த மாதிரி தமிழ்நாடு அரசுகூட அதை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி வனப் பகுதியிலே ஏற்கெனவே highways ரோடு நிறைய போட்டிருக்கிறார்கள். இப்போது அதெல்லாம் முழுவதுமாகப் பழுதாகி விட்டது. அவற்றைப் பராமரிக்க வேண்டும். அதற்கு வனத் துறை அனுமதி கொடுப்பதில்லை. எங்களுடைய ஏரியாவிலே அந்த மாதிரி ரோடு அதிகமாக இருக்கிறது. அதற்கு வனத் துறை நெடுஞ்சாலைத் துறைக்குக் கண்டிப்பாக அனுமதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி இப்போது பிரதமரின் கிராம சதக் யோஜனா என்று Central Government-லே எங்களுடைய உத்தமத் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் (சிரிப்பு) ஆயிரம் மக்கள்தொகை இருக்கிற ஊருக்கெல்லாம் ரோடு போட வேண்டும் என்று சொல்லி நல்ல Scheme P.M.G.S.Y. கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் பாரஸ்ட்டிலே 32 அடி விடுவதில்லை என்று ஒரு நிலை இருக்கிறது. P.M.G.S.Y.-ல் ரோடு போடும் போது 32 அடி விட வனத் துறை அனுமதி கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேமாதிரி forest- அந்த greenish - முதலமைச்சர் அவர்களுக்குக் கூட இந்த green colour என்பது மிகவும் நன்றாகப் பிடிக்கும். அதற்குத்தான் அடுத்த மழைக்காலம் 'greenish month' அல்லது 'greenish week' என்றோ அறிவித்து எல்லா கலெக்டர்களுக்கும், எல்லா தலைமை ஆசிரியர்களுக்கும், எல்லாத் துறைகளுக்கும், நெடுஞ்சாலைத் துறை - Central Government Highways இருபுறமும் செடி நட வேண்டும் என்று 'Greenish month' என்று நீங்கள் அறிவித்துவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். அதில் Medical plants பூங்காக்கள் - தமிழில் சரியாகத் தெரியவில்லை - ஆந்திராவில் நிறைய செடிகள் நட்டிருக்கிறார்கள். அந்தச் செடிகளை நட்டுவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். நம்முடைய



தமிழ்நாடு heat climate நாடாகும். கொஞ்சம் cold climateஆக இருந்தால், அந்தச் செடி நட்டால் மிகவும் நன்றாக இருக்கும். இதை நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல என்னுடைய தொகுதியில் பல பிரச்சினைகள் இருக்கின்றன - தொகுதிப் பிரச்சினைகளை எழுதிக் கொடுங்கள் என்று பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடாதீர்கள். ஏனென்றால் எங்கள் தொகுதி வனப் பகுதியாகும். அதனால்தான் தொகுதிப் பிரச்சினையைப் பேச வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சருடைய பதிலுரை இருக்கிறது, அதனால்தான்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இரண்டே நிமிடம் போதும் தலைவரே, எங்கள் தொகுதியில் பெட்டமுகலாளம் என்ற ஒரு பஞ்சாயத்து இருக்கிறது. அதில் S.T. மக்கள் நிறைய இருக்கிறார்கள். அங்கே Forest check post gate வைத்திருக்கிறார்கள். ரூ. 125, ரூ. 250 என்று வசூல் செய்கிறார்கள். அவர்கள் ஏழைகள், பாவம் அவர்களிடம் காசேயில்லை. அவர்கள் கூலி வேலை செய்வதற்கு டெம்போவில் அல்லது மற்றவற்றில் வந்தால் ரூ. 250 கொடுக்க வேண்டும். Gate இருக்கட்டும். நான் gate வேண்டாம் என்று சொல்லவில்லை. அங்கே காசு வாங்குவதை நிறுத்திவிட்டால் ரொம்ப நன்றாக இருக்கும். அதேபோல, அஞ்செட்டியிலே இருந்தது. ஏற்கெனவே அதை நிறுத்திவிட்டார்கள். அதேபோல பெட்டமுகலாளத்திலும் நிறுத்திவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி என்னுடைய தொகுதியில் இருக்கிற மஞ்சுகொண்டப்பள்ளி என்ற ஒரு பஞ்சாயத்துக்கு, கர்நாடக மாநிலத்தில் நுழைந்து 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு நாங்கள் சுற்றிக்கொண்டு போக வேண்டும். அங்கே 17 கிலோ மீட்டருக்கு வனப் பகுதிக்குள்ளே தார் ரோடு போட்டுவிட்டால், எங்களுக்கு 30 கிலோ மீட்டர் சுற்றிவருவது மீதியாகும். அதேபோல கர்நாடக மாநிலத்தினைச் சுற்றிப் போகத் தேவையில்லை. அந்த ரோட்டை நீங்கள் கண்டிப்பாக highways மூலமாகவோ, இல்லையென்றால், P.M.G.S.Y. திட்டத்திலோ.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனப் பகுதிக்குள் சாலை போட வேண்டுமென்றால் மத்திய அரசுதான் அதற்கு அனுமதி தர வேண்டும். அந்த அனுமதியை மாண்புமிகு உறுப்பினர், அவருடைய மத்திய அரசிடமிருந்து பெற்றுத் தந்தால் உடனடியாகச் சாலைகளைப் போட்டுத் தருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.வி. முரளிதரன்:** இங்கே மாநில அரசிமிடருந்து Proposal அனுப்பினால் நாங்கள் மத்திய அரசிடமிருந்து கண்டிப்பாக அனுமதி வாங்கிக் கொடுக்கிறோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரி ஏற்கெனவே அங்கே T.A.P. road இருக்கிறது. மரம் எல்லாம் இல்லை. T.A.P. road-ல் லாரி எல்லாம் போய்க் கொண்டிருந்தது. அந்த ரோடுதான் இருக்கிறது.

அதேமாதிரி எங்கள் தொகுதியில் ஒகேனக்கல் இருக்கிறது. கர்நாடக மாநிலத்திலேயிருந்து தருமபுரி ரோட்டுக்குப் போய் அவர்கள் போக வேண்டும். எங்கள் தொகுதியிலேயே நாட்ராம்பாளையம் வழியாகப் போனால் 30 கிலோ மீட்டர் குறைவாகிறது. ஒகேனக்கல்லில் தார்ச் சாலை போட்டுக் கொடுத்தால் மிகவும் நன்றாக இருக்கும். அதே மாதிரி....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே. மத்திய அரசிடமிருந்து அனுமதி பெறுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்கும்; இந்த அரசு கடிதம் அனுப்பும். ஆனால் மத்தியில் வனத் துறையில் அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் தமிழக அரசு கேட்டால் உடனடியாக அனுமதி தர மாட்டார். ஆகவேதான் நீங்கள் தலையிட வேண்டுமென்று சொன்னேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Forest and Environment Minister-ஆக திரு. டி.ஆர். பாலு இருந்தாலும், எங்கள் தலைவர், உத்தமத் தலைவர் அடல் பிகாரி வாஜ்பாய் இருக்கிறார். அவரிடம் சொல்லி நாங்கள் கண்டிப்பாக அனுமதி வாங்கிக் கொடுப்போம் என்று நான் சொல்கிறேன். அதே மாதிரி ....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டி.ஆர். பாலு கேட்டுக்கொண்டதால்தான் உங்கள் உத்தமத் தலைவர் வாஜ்பாய், என்னை அவர் பக்கத்தில் அமர அனுமதிக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. கே.வி. முரளிதரன்:** ஆனால் இதுபற்றி எங்களுக்குத் தெரியவில்லை. (சிரிப்பு) அது போல இருந்தால் வருத்தம் தெரிவிக்கிறோம்.

அத்திநத்தம் என்று ஓர் ஊர். அதில் நூறுசாமிபெட்டா என்ற கபீஸ்வரன் கோயில் இருக்கிறது. அது ஓர் அற்புதமான கோயில். அந்தக் கோயிலிலே தேங்காய் தண்ணீரில்தான் விளக்கை நாங்கள் பற்ற



வைக்கிறோம். தேங்காய் தண்ணீரில்தான். அந்த ஊருக்கு 10,000 பேர் 20,000 பேர் தினமும் போகிறார்கள். ஆனால் ரோடு இல்லை. அந்த ரோட்டை நீங்கள் கண்டிப்பாகப் போட்டுத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வனப் பகுதியில் கல்யாணம் செய்ய வேண்டுமென்றால் அங்கே Community Hall கிடையாது. ஏற்கெனவே நீங்கள் ஆட்சியில் இருந்தபோது Community Hall கொண்டுவந்தீர்கள். இப்போதுகூட, எங்களுடைய வனப் பகுதியில் பாவம் அவர்கள் கல்யாணம் செய்ய வேண்டுமென்றால் அந்த வீட்டிலேதான்-அந்த வீடுகூட சிறியதாக இருக்கிறது-அங்கே கல்யாணம் செய்ய முடியாது. Community Hall . . . .

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தொகுதியில் உள்ள வனப் பகுதியில் சமுதாயக் கூடம், Community Hall கட்டுவதற்கு மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தே நிதி வழங்கி அதைச் செய்ய வைக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** நீங்கள் கொடுத்த ரூ. 82 இலட்சத்தில் வேறு எந்தத் திட்டத்திற்கும் கொடுக்காமல் கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்றால் நாங்கள் கொடுக்கிறோம். நீங்கள் கொடுக்கிற ரூ. 82 இலட்சத்தில் நாங்கள் ஒரு தார் ரோடு போட்டால் ரூ. 8 இலட்சம் போய்விடுகிறது. ஒரு Community Hall கட்டினால் 5 இலட்ச ரூபாய். அதற்கு ஒரு Special fund கொடுத்து — ரூ. 82 இலட்சத்தினை ரூ. 1 கோடியாக உயர்த்தினால்....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பணிகளுக்காகத்தான் இந்த தொகுதி மேம்பாட்டு நிதி சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படுகிறது. தாராளமாக அதிலிருந்து நீங்கள் 5 இலட்சம் ரூபாய் செலவு செய்து இந்த Community Hall-ஐக் கட்ட வைக்கலாமே!

**திரு. கே.வி. முரளிதரன்:** அதை ரூ. 1 கோடியாக உயர்த்திக் கொடுத்தால் கண்டிப்பாக நாங்கள் கட்டிக் கொடுத்து விடுகிறோம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

அதே மாதிரி Central Government-லிருந்து schemes நல்ல schemes-Hill Area Development Programme, Tribal block scheme, Western Ghats Development Programme, Integrated Tribal Development Programme, Wasteland Development Programme (மணியடிக்கப்பெற்றது) ஒரேயொரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன் தலைவரே, இந்த மாதிரி schemes

எல்லம் தளி தொகுதியில்—எல்லாம் hills area—ஒரு schemeகூட நீங்கள் போடவில்லை. கண்டிப்பாக எங்கள் வனப் பகுதிக்கு வந்து அந்தத் திட்டங்கள் எல்லாம் போட்டு நன்றாகச் செய்தால் - ஏற்கெனவே 50 வருடங்களாகச் செய்யாததை இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகுதான் எங்களுக்கு, வனப் பகுதியில் ரூ. 2 கோடியில் low voltage avoid செய்வதற்கு சப்-ஸ்டேஷன் கொடுத்திருக்கிறீர்கள். ஒரு பாலம், ரூ. 1 கோடியில் கட்டுவதற்குக் கொடுத்திருக்கிறீர்கள், ரூ. 75 இலட்சம் செலவில் தார் ரோடு போட்டு கொடுத்திருக்கிறீர்கள். அதற்கெல்லாம் நாங்கள் முதலமைச்சருக்குப் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதே போல S.T. மக்களுக்கு, Central Government-லிருந்து ஒரு scheme. அந்த மக்களுக்கு நிறைய வீடு கட்டிக்கொடுக்க வேண்டும். அரசும், கலெக்டரும் சேர்ந்து எங்க்ள் ஏரியாவுக்கு 500 Group houses கொடுத்திருக்கிறீர்கள். அதற்காக முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் பாராட்டைத் தெரிவித்துக்கொள்கிறோம். ஆனால் இந்த 14 பஞ்சாயத்துக்களும் Forest area-க்களில் இருக்கின்றன. அந்த Forest areas-க்கு officers போவதற்குப் பயப்படுகிறார்கள். காரணம் Naxalite problem, smuggler வீரப்பன் problem, யானை problem இந்த மாதிரியெல்லாம் இருக்கிறது. மக்களிடம் போய் Government-ல் ஒரு scheme வருகிறது. இதை நீங்கள் use செய்யுங்கள் என்று சொல்வதற்கு எல்லாம் பயப்படுகிறார்கள்.

பிற்பகல் 1-10

அதுபோல, அஞ்சட்டியை ஒரு Tribal Block ஆக நீங்கள் announce செய்தால் மிகவும் நன்றாக இருக்கும். கண்டிப்பாக இதை Tribal Block ஆக announce செய்துவிட்டால் நாங்கள் சாகும் வரை நீங்கள் நல்ல முதலமைச்சர் என்று நினைத்திருப்போம்.

அதேபோல, பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விஷயம். சென்ற 29ஆம் தேதி நான் பேசியபோது, மெகா முதலமைச்சரும், தமிழ்த் தாய் அம்மா என்று நான் பேசும்போது, சில paper-களில் வந்ததாகத் தெரிந்தது. நான் நேற்று ஒரு கல்யாணத்திற்குப் போயிருந்தேன். BJP MLA's daughter உடைய கல்யாணத்திற்குப் போயிருந்தேன். நேற்று பெங்களூரில் நடந்தது. அங்கே தமிழ்நாட்டு அரசியல் culture-க்கும், கர்நாடக அரசியல் culture-க்கும் மற்றும் C.M.-க்கும் உள்ள advantage, disadvantage பற்றி MLAs., MPs. எல்லாம் நாங்கள் பேசிக்கொண்டிருந்தபோது, என்னிடம் சொன்னார்கள், உனக்குத் தமிழ் பேசத் தெரியாதே, நீ எப்படி அங்கே போய்ப் பேசுகிறாய் என்று



ஒரு MLA கேட்டார். அதற்கு இன்னொரு MLA அவருக்கு என்னப்பா, all rounder முதலமைச்சர் இருக்கிறார். எல்லா பாஷைகளிலும் பேசுவார், (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு அதுவே போதும் என்று சொன்னார். அதற்கு உங்களுக்குப் பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதே மாதிரி, இப்பொழுது MLA கேள்வி கேட்கும்பொழுது minority language-ல் நாங்கள் பேசும்போதுகூட, முதலமைச்சரே எழுந்து ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குப் பதில் சொல்கிறார். இதையெல்லாம் நாங்கள் கண்டிப்பாகப் பாராட்டுகிறோம். எப்படியென்றால் 3 வருடத்திற்கு முன்பு 'சித்தி' என்ற சீரியல் வந்ததற்கு 9-30 மணிக்கெல்லாம் wait பண்ணினோம். இன்றைக்கு தமிழ்நாட்டில் என்னவென்றால் 10 மணிக்கு ஜெயா டி.வி.-யில் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு என்ன பதில் சொல்கிறார் என்று அங்கே discussion வந்தது. நிஜமாகவே அங்கே சொன்னது (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சர் She is a bold lady; she is a daring lady.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. முரளிதரன், அது சித்தி, இது அம்மா. (சிரிப்பு)

**திரு. கே.வி. முரளிதரன்:** நிஜமாகவே முதலமைச்சர் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பதில் சொல்வது, அமைச்சர் அவர்களுக்காகப் பதில் சொல்வதில்கூட without record எல்லா Departments பற்றிப் பேசுவதற்கு நிஜமாகவே முதலமைச்சர் அவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். அதை தமிழில் சொல்ல வேண்டுமென்று சொன்னால், சகலகலா வல்லி (மேசையைத் தட்டும் ஒலி) என்றுகூட முதலமைச்சரைச் சொல்லலாம். (சிரிப்பு)

அதேமாதிரி இன்னொன்று, அந்த disadvantage பற்றிப் பேசும்போது, என்ன பேசினோம் என்றால், தமிழ்நாட்டை எல்லாவற்றிலும் நன்றாக development செய்கிறார்கள் right, செய்கிறீர்கள். ஆனால் இந்த மாதிரி கல்யாணத்தில் எல்லா கட்சிகளையும்— நேற்று கர்நாடக முதலமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இருந்தார். எங்கள் daring dynamic வெங்கையா நாயுடு வந்திருந்தார். எல்லோரும் பக்கத்தில் பக்கத்தில் உட்கார்ந்திருந்தார்கள். திரு. அனந்தகுமார்ஜி உட்கார்ந்திருந்தார். தேவே கவுடா வந்திருந்தார். அதேமாதிரி உங்கள் தமிழ்நாட்டிலே யாருக்காவது கல்யாணம் என்றால் தி.மு.க.காரர் என்றால், தி.மு.க.காரர்கள்தான் போகிறார்கள். அ.தி.மு.க.காரர் என்றால், அ.தி.மு.க.காரர்கள்தான் போகிறார்கள். எல்லோரும் கலந்து போவது இல்லை. இதெல்லாம் சரியாகிவிட்டால் மிகவும் நன்றாக இருக்கும் என்று சொன்னார்கள்.

இனிமேல் நாம் எல்லா விழாக்களிலும் எல்லோரும் ஒன்றாகப் போய் கலந்துகொண்டு, தமிழ்நாட்டுக்கு நல்ல பெயர் ஏற்படுத்திக் கொடுப்போம் என்று சொல்லி, இங்கே நான் பேசுவதற்கு வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை .... (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைக்கு நமது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேருக்கும் விருந்து வைக்கிறார்கள். அந்த விருந்துக்கு எந்தெந்த எதிர்க் கட்சிகள் வருகின்றன அல்லது வரவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அம்மா அவர்கள் அனைவரையும்தான் அழைக்கிறார்கள். ஆனால் யார் அரசியல் காழ்ப்புணர்ச்சியோடு நடந்துகொள்கிறார்கள். இந்த ஆட்சியின்மீது அவதூறு பரப்பி, இந்த ஆட்சியை விரோத மனப்பான்மையோடு பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாளைக்கு நடைபெற இருக்கிற அந்த விருந்திலேயே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** நாங்கள் சுவாசிக்கும் உயிர் மூச்சுக் காற்று, ஸ்ருதி மாறாத சங்கீதப் பாட்டு, தாங்கிப் பிடித்திருக்கிற நிலம், தாகம் தீர்க்கின்ற நீர், கருணை மேகங்கள் உலாவும் ஆகாயம், எங்கள் காலைப் பொழுதில் கேட்கின்ற பூபாளம், நாங்கள் தூங்கும்போது தாலாட்டுகின்ற நீலாம்பரி பாட்டு, தூங்கிக் கிடக்கின்ற எங்களை, துள்ளி எழச்செய்கின்ற பள்ளி எழுச்சிப் பாட்டு, கொதிக்கின்ற கோடையிலே பொழிகின்ற ஆலங்கட்டி மழை, எங்கள் குடும்பங்களை ஆதரிக்க காலம் கொடுத்த கொடை, கங்கை வற்றினாலும், கருணை வற்றாத பேருள்ளம், நாங்கள் கற்காத அறிவெல்லாம் கற்றுத்தந்த ஞான வெள்ளம், அன்பு, அருள், பாசம், நேசம், பந்தம், சொந்தம், குறைதீர்க்கும் தெய்வம், கொலுவிருக்கும் கோயில், கோபுரத்தின் தீபம், எழுதாத வேதம், இன்னும் இத்தனைக்கும் எங்கள் அகராதியில் நாங்கள் கண்ட ஒரே ஒரு வரி அம்மா அம்மா என்ற அர்த்தம்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-15*

நாங்கள் அர்த்தசாஸ்திரம் படித்ததில்லை; நீங்கள் சொன்னதைப் படித்திருக்கின்றோம். காவிரியில் தண்ணீர் வரவில்லை; தஞ்சை கழனி



விவசாயிகளின் கண்ணில் கண்ணீர் வந்தது. அந்தக் கண்ணீரைத் துடைத்த கரம் உங்கள் கரம். காய்ந்து கிடந்த மக்கள் வயிறு காயாமல் செய்தது நீங்கள் தந்த வரம். புயல், பூகம்பம் எல்லாவற்றையும் சந்தித்தவர்கள் நீங்கள்; ஒரு பொற்கால ஆட்சிதனை சாதித்தவர்கள் நீங்கள்; மண்ணையும் பொன்னாக மாற்றத் தெரிந்தவர்கள் நீங்கள்: அதனால்தான் அம்மா என்னையும் அமைச்சராக ஆக்கியிருக்கிறீர்கள். உங்கள் பாதங்களைத் தொட்டு, நன்றியோடு உங்களைக் கைகூப்பி, இந்தப் பதிலுரையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன்.

மகாகவி பாரதியைப்பற்றி புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடுகிறார்.

பைந்த மிழ்த்தேர்ப் பாகன். அவனொரு
செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை!
குவிக்கும் கவிதைக் குயில்! இந் நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு
நீடு துயில்நீக்கப் பாடி வந்தநிலா
காடு கமழும் கற்பூரச் சொற்கோ

அப்படி காடு கமழ வந்த கற்பூரமாக நீங்கள் இருப்பதால், எனக்கு இந்தக் காட்டுத் துறையை, வனத் துறையைத் தந்திருக்கிறீர்கள் என்று கருதுகிறேன்.

இன்று அரசியலிலிருந்து அப்புறப்படுத்தப்பட்ட சிலபேர், கள்ளிக் காடுகளை பூங்காக்கள் என்று சொல்லி, ஊர் ஊராகச் சென்று வியாபாரம் செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தக் கள்ளிக் காடுகளைப்பற்றி நான் சொல்ல வரவில்லை. என் துறை காடு; வனம்; அதுபற்றிய விவரங்களைத்தான் இந்த அவையில் எடுத்து வைக்க விரும்புகிறேன்.

இந்த ஆட்டுக்கும், நம் நாட்டுக்கும் பெரும் கூட்டு இருக்குது கோணாரே;

இதை ஓட்டி ஓட்டித் திரிந்தவர்கள் ஒரு முடிவும் காணாரே

என்று பட்டுக்கோட்டை பாட்டு எழுதினார். அவர் சொன்னபடி ஆட்டுக்கும், நாட்டுக்கும் மாத்திரமல்ல; காட்டுக்கும் நாட்டிற்குங்கூட பெரிய அளவில் கூட்டு இருந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் கூட்டுக்களால் காந்தி நோட்டுக்கள்கூட கைமாறும் காரியங்கள் நடந்திருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை கை மாறியது? எந்தெந்தக் கை மாறியது என்பதெல்லாம் ஆண்டவனுக்குத்தான்

[திரு. ஆர். வைத்திலிங்கம்] [2003 மே 8

தெரியும்; அன்று ஆண்டவனுக்குத்தான் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை கை மாறியது? எந்தெந்தக் கை மாறியது என்பதெல்லாம் அன்று ஆண்டவனுக்குத்தான் தெரியும்.

இந்த மானியக் கோரிக்கையைச் சமர்ப்பிக்கும் இந்த வேளையில், வனத் துறையின் முக்கியத்துவத்தை எண்ணிப் பார்க்கிறேன். வனம் என்பது வெறும் வனம் அல்ல; அது ஒரு நாட்டின் தனம்; ஒரு நாட்டின் செல்வம். மரம் வளர்ப்போம்; மழை பெறுவோம் என்று சொல்கிறோம். மரத்திற்கும் மழை வேண்டும்; மழைக்கும் மரம் வேண்டும். ஒன்றுக்கு இன்னொன்று ஆதாரம் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உண்மையைச் சொல்லப்போனால், காடுகளால்தான் ஒரு நாடே வாழ்கிறது. பண்டைக் காலத்தில் சேர மன்னன் செங்குட்டுவன் மலை வளம் காணச் சென்றான் என்ற வரலாற்றைப் படிக்கின்றோம்.

ஒரு நாட்டுக்கு வருவாய் நிலம்படு பொருளாக, கடல்படு பொருளாக, மலைபடு பொருளாக வருகின்றன. மாதம் மும்மாரிப் பொழிந்த காலம் போய், ஆண்டுக்கு மும்மாரி பெய்யாதா என்று ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கிறோம். அதற்கு முக்கியமான காரணம், ஏராளமான காடுகள் அழிந்துபோய் இருக்கின்றன. திரு. கருணாநிதி ஆட்சியில் 1971 ஆம் ஆண்டு 30,000 ஏக்கர் நிலங்கள் பட்டா போட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மலையில், அதன் காடுகளில் இருக்கின்ற வளங்கள் ஏராளம். 'அகிலும், தேக்கும் அழியாக் குன்றம்' என்று பாரதிதாசன் பாடினார். கோங்கு, குறவம், அகில், தேக்கு, வேங்கை, சந்தனம் என்று இருக்கின்ற மரங்கள் எல்லாம் இயற்கை தந்த செல்வங்கள். இந்தச் செல்வங்களைச் சீராகவும், செம்மையாகவும் பாதுகாக்க வேண்டிய பணி ஒரு சிறந்த பணியாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஐந்திணை என்று பிரிக்கப்பட்ட திணைகளை வரிசைப்படுத்தும்போது, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்றுதான் வரிசைப்படுத்தி இருக்கின்றார்கள். அதனால், நிலங்களில் முதன்மையான இடத்தைப் பிடிக்கின்ற நிலமாக குறிஞ்சிதான் அமைந்திருக்கின்றது. மலையும், மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி என்று கூறுவார்கள். நான் நஞ்சை நிறைந்த தஞ்சை ஆகிய மருத நிலத்தைச் சார்ந்தவன் என்றாலும், இந்தக் குறிஞ்சி நிலத்தின் மாண்பை, மகிமையை நன்றாக அறிவேன்.



2003 மே 8] [திரு. ஆர். வைத்திலிங்கம்]

தெய்வப் புலவர் திருவள்ளுவர் அணிநிழற் காடுகளை நாட்டிற்கு அவசியமான அரணாகக் குறிப்பிட்டு

***"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்***
***காடும் உடையது அரண்"***

என்று குறிப்பிட்டுள்ளதை நினைவுகூற விரும்புகிறேன். மேலும் ஆதவன் கூடப் புக முடியாத அடர்ந்த காடுகள் நிரம்பப் பெற்ற முல்லை நிலத்தைக் குறிப்பிடும்போது "வெயிலொளி அறியாத விரிமலர்த்தண்கா" எனக் குறிக்கிறது கலித்தொகை பாடல்.

*பிற்பகல் 1-20*

ஔவைப் பிராட்டி மரத்தை, தீமை செய்வோருக்கும் நன்மையே செய்யும் அறிவுடையாருக்கு ஒப்பிட்டு "மாந்தர் குறைக்கும் தன்னையும் குளிர்நிழலைத் தந்து மறைக்குமாம் கண்டீர் மரம்" என்று போற்றுகிறார்.

***"வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்***
***மந்தி சிந்தும் கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்"***

என்று தமிழகத்தின் வன உயிரின வளத்தை திரிகூட இராசப்பக் கவிராயர் குற்றாலக் குறவஞ்சியில் படம் பிடித்துக்காட்டுகிறார்.

கபிலரது குறிஞ்சிப் பாட்டில் நிலத்தில் காணப்படும் செங்காந்தல் மலர்கள் உள்ளிட்ட 99 வகையான மலர்கள் குறிப்பிடப்படுகின்றன. நாளடைவில் வளமிழந்த வனத்தைப் பெருக்க நல்ல பல திட்டங்களைத் தீட்டி, வளங்குன்றா பாதையில் தமிழகத்தை இட்டுச் செல்லும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வனப் பாதுகாப்பை வலியுறுத்தவும், தரிசு நிலங்களைப் பசுமையாக்கிடவும் வனத் துறை மூலம் சிறப்பான திட்டங்களை வழங்கியுள்ளார்கள்.

இயற்கைச் சூழலை நிலைப்படுத்தவும், உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யும் இன்றியமையாத புதுப்பிக்கக்கூடிய இயற்கை வளமாகவும் வனங்கள் திகழ்கின்றன. "உணவென்பது நிலத்தொடு நீரே" என்ற புறநானூற்றுக்கு ஏற்ப உயிர்வாழ உதவும் உணவு உற்பத்திக்கு நீர் வளமும் நில வளமும் தேவை. வனங்கள் மண்ணிற்கு உரம் ஊட்டி, புத்துயிர் அளித்து நீரைத் தேக்கும் ஆற்றலைக் கொண்டவை. தேக்கிய நீரை கோடையிலே சுனைநீராகத் தவழவிடும்.

மண் வளம் பேணி, மழை வளம் சேர்த்திடும் வனங்கள், வேளாண் வளத்திற்கு ஆதாரமாக வளர்ப்புத் தாயாக விளங்குகின்றன. ஏறக்குறைய 14 மீட்டர் விட்டமுடைய அரச மரம் ஒவ்வொரு மணிநேரத்திலும் 2240 கிலோ கரியமில வாயுவை உட்கொண்டு, 1712 கிலோ ஆக்சிஜனை வெளியிட்டு துப்புரவுத் தொழிற்சாலையாகச் செயல்படுகிறது. அதேபோல் சாலையோர மரங்கள் 70 சதவீதம் தூசியையும், 30 சதவீதம் ஒலி மாசினையும் கட்டுப்படுத்த வல்லன. உள்ளூர் அளவிலும், உலக அளவிலும் வனங்கள் வரம் தரும் வனங்களாகத்தான் திகழ்கின்றன.

50 ஆண்டுகள் வாழும் ஒரு மரம், ரூ.18 இலட்சம் மதிப்புள்ள பயன்கள் தருவதாக ஆராய்ச்சியாளர்கள் கணக்கிட்டுள்ளார்கள். அவற்றைப் பேணிப் பாதுகாப்பது நம் ஒவ்வொருவரது கடமையாகும்.

தமிழகத்தைப் பொறுத்தவரை 9 வகையான காடுகள் 22,870 சதுர கிலோ மீட்டர் பரப்பில் அமைந்துள்ளன. இவை பெரும்பாலும் மேற்கு மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் அமைந்துள்ளன. தமிழகத்தின் மொத்த நிலப்பரப்பில் காடுகள் 17.59 விழுக்காடே உள்ளன.

1988 ஆம் ஆண்டிலே தேசிய வனக் கொள்கையின் இலக்கான 33.33 விழுக்காட்டை நோக்கும்போது இது மிகக் குறைவாகவே உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வனப்பரப்பின் அளவு 2007-ல் 25 விழுக்காடுகளாகவும், 2012-ல் 33.33 விழுக்காட்டை எட்ட வேண்டும் எனவும் தேசிய திட்டக் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்தக் குறிக்கோளை எய்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் காடு வளர்ப்புத் திட்டங்களுக்குச் செயல் வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தத் தருணத்தில் தமிழ்நாட்டில் வனப்பரப்பு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில் அதிகரித்துள்ள உண்மையினை இச்சபையில் பெருமையுடன், மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டேராடூனிலுள்ள இந்திய வன அளவை நிறுவனம் அதனுடைய அறிக்கையில், 17,078 சதுர கிலோமீட்டராக இருந்த தமிழகத்தின் வனப்பரப்பு, 21,482 சதுர கிலோமீட்டராக உயர்ந்துள்ளது. இதுபோல்





8,680 சதுர கிலோ மீட்டராக இருந்த அடர்த்தியான காடுகளின் பரப்பு 12,499 சதுர கிலோ மீட்டராக உயர்ந்துள்ளது என்று அதன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது என்பதை இந்த அவையில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவிலேயே காட்டுக்கு வெளியே உள்ள நிலங்களில் தமிழ்நாட்டில்தான் 5.83 விழுக்காடு மரங்கள் உள்ளதாக ஆய்வு கூறுகிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்கெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் தொலைநோக்குச் சிந்தனையில் ஏற்பட்ட தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம்தான் என்பதனை இந்த மாமன்றத்திலே நினைவுகூறுகிறேன்.

*பிற்பகல் 1-25*

அடுத்த தேர்தலை எண்ணிச் செயல்படுபவர் சாராசரி அரசியல்வாதி. அடுத்த தலைமுறையை எண்ணிச் செயல்படுபவர் அரசியல்ஞானி. இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசியல் ஞானியாகத் திகழ்வதால் (மேசையைத் தட்டும் ஒலி) தொலைநோக்குப் பார்வையுடன் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தைத் தீட்டியதன் விளைவாக 4,404 சதுர கிலோ மீட்டர் காடுகளின் பரப்பு அதிகரித்துள்ளது. அதனைப்போலவே, அடர்ந்த காடுகளின் பரப்பு 3,819 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது என்பதையும் இந்த மாமன்றத்தில் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தத் திட்டத்தில் 2002-2003-ல் ரூ. 83.16 கோடி செலவில் 34,900 ஹெக்டேர் பரப்பில் காடு வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்தத் திட்டத்தினால் பயனடைந்த 108 கிராமங்களிலும், கிராம வனக் குழு மூலம் கூட்டு வன நிர்வாகத்தை உள்ளூர் மக்களே செயல்படுத்துகிறார்கள்.

கிராமத்திலுள்ள ஏழைப் பெண்கள் பயனுறும் வகையில் 640 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, அவை மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைக்கப்பட்டு சிறப்பாகவும், திறம்படவும் மகளிர் முன்னேற்றத்திற்கு உதவிபுரிந்து வருகின்றன. இதுவரை இந்தத் திட்டத்தின் மூலம் 1,107 திட்டக் கிராமங்களில் வனக் குழுக்கள் அமைக்கப்பட்டு, ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழையெளியவர்களும், காட்டையே நம்பி வாழ்வோரும்

பயனடைந்துள்ளனர். மக்களே வனங்களைப் பாதுகாக்கும் உன்னதமான காட்டு வன நிர்வாகம் வெற்றிகரமான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என்றால், அது மிகையாகாது.

பின்தங்கிய இந்தக் கிராமங்களில் குடிநீர் வசதி, நியாயவிலைக் கடைகள், சத்துணவு மையங்கள், நெற்களங்கள், சாலை வசதி, சுகாதார வசதி போன்ற பல சமுதாயப் பணிகள் வனத் துறை மூலமாகவும், மாவட்ட ஆட்சியர்கள் வழிகாட்டுதலின்படியும் சம்பந்தப்பட்ட பிற துறைகள் மூலமும் செயல்பட்டுள்ளன என்பதைச் சுட்டிகாட்ட விரும்புகிறேன்.

காடுகளில் மேற்கொள்ளப்படும் மழைநீர் சேகரிப்புப் பணிகள் மூலம் தடுப்பணைகளும் கசிவுநீர்க் குட்டைகளும் கட்டப்பட்டு, வறட்சியான இந்தக் காலகட்டத்திலும் நிலத்தடி நீர்மட்டம் 5 முதல் 10 விழுக்காடு அதிகரித்துள்ளது; ஏழை விவசாயிகளின் வாழ்வு உத்தாவாதப்படுத்தப்பட்டுள்ளது என்ற பெருமை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் இந்த ஆட்சியைச் சாரும் என பெருமையுடனும், நன்றியுடனும் குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் பதவியேற்றவுடன், இந்தத் திட்டத்தின் பயன் மேலும் அதிகமான ஏழை மக்களுக்குச் சேர வேண்டும் என்ற கருணை உள்ளத்துடன் ரூ. 779 கோடி நிதி ஆதாரத்தில் 1,000 கிராமங்களில் 2,500 சதுர கிலோ மீட்டர் பரப்பிலுள்ள தரங்குன்றிய காடுகளை மேம்படுத்தும் விதத்திலும், திட்டக் கருத்துருவினை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். இதற்கான அயல்நாட்டு நிதியினைப் பெறும் வாய்ப்பு மிகவும் அதிகமாக உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், இந்தத் திட்டத்தின் செயல்பாட்டினை ஆய்வு செய்ய வந்த ஆய்வுக் குழு கடந்த 2 ஆண்டு காலத்தில் இத்திட்டம் மிகச் சிறப்பாக நடைபெறுவதாகவும், மற்ற மாநிலங்களின் செயல்பாடுகளைவிட முதலிடத்தில் தமிழகம் இருப்பதாகவும் பாராட்டு தெரிவித்தார்கள். இந்த ஆய்வுக் குழுதான் இரண்டாவது திட்டத்திற்கு நிதியுதவி அளிக்க ஆர்வமாக உள்ளார்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



நீலகிரி மாவட்டத்திலுள்ள மலைப் பகுதிகளில் உள்ள சோலைக் காடுகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ. 355.95 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டில் ரூ. 400 இலட்சம் செலவில் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்: தமிழகத்தின் வனப்பகுதியில் மிகவும் முக்கியமானது மேற்குத் தொடர்ச்சி மலைகளாகும்.

இப்பகுதிகள் தரமிழந்து வருவதைத் தடுக்கவும், மேம்படுத்தவும் மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.300 இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்புத் திட்டம் : காடுகளுக்கு அதிக சேதம் விளைவிப்பதற்கு காட்டுத் தீ முக்கியமான ஒரு காரணியாகும். எனவே காட்டுத் தீ தடுப்புத் திட்டத்திற்காக 2003-2004 ஆம் ஆண்டு ரூ. 371.08 இலட்சம் செலவு செய்ய இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு தீர்மானித்துள்ளது.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** குளக்கரை தோட்டங்கள் - 1981 முதல் 1996 வரை தமிழகத்திலுள்ள குளங்களின் உட்பகுதியில் சுவீடன் நாட்டின் நிதியுதவியின்கீழ் நடைபெற்ற சமூகக் காடுகள் திட்டத்தில் கருவேல் தோட்டங்கள் அமைக்கப்பட்டன.

ஆனால் முந்தைய அரசு குளங்களில் கருவேல் தோட்டம் அமைக்கத் தடை செய்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். எழுப்புவதைத் தடை செய்தது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காடுகளுக்கு வெளியே விறகு மரங்கள் எழுப்பி இயற்கைக் காடுகளைக் காப்பாற்றும் நல்லெண்ணத்துடன் தற்போது புரட்சித் தலைவியின் அரசு இத்தடையினை விலக்கி ஆணையிட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே, முதல்முதலாக, இப்பகுதியில் வளத்தைப் பாதுகாக்க வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த சீரிய முயற்சியின் விளைவாக, மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக சுற்றுச் சூழல் நிறுவனம் மற்றும் ஐக்கியநாடு சபை வளர்ச்சித் திட்டம் நிதி ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது.

வனத்தையும் வன உயிரினங்களையும் பாதுகாப்பதில் மட்டுமின்றி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் கடல்வாழ் உயிரினங்கள் பாதுக்காக்கப்பட வேண்டுமெனக் கருதி, மன்னார் வளைகுடாப் பகுதியில் சுமார் 560 ச.கி.மீ. பரப்பளவு உள்ள 21 தீவுகளை உள்ளடக்கி அமைந்துள்ள மன்னார் வளைகுடா கடல்வாழ் உயிரின தேசியப் பூங்காவினை 18-7-2002-ல் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

147 வகையான கடற்பாசிகள், 137 வகையான பவளப் பாறைகள் காணப்படும் இப்பகுதி 3,600 வகையான கடல் தாவரங்கள் மற்றும் கடல் உயிரினங்களுக்கு சிறந்த உறைவிடமாகவும், இனப்பெருக்க மண்டலமாகவும் திகழ்கிறது. தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலம், காட்டையே நம்பி வாழும் மக்களுக்கு சுய வேலைவாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுத்ததைப்போன்று, கடலை நம்பி வாழும் மக்களுக்கும் சுய வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்து, கடல்வாழ் உயிரினங்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு எடுத்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ.123.94 கோடி அரசால் தோற்றுவிக்கப்பட்டு, அறக்கட்டளை மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்.

125 கடலோர கிராம மக்களைக் கொண்ட இப்பகுதியின் முதற்கட்டப் பணிகளை மேற்கொள்ள மொத்தத் தொகையில் ரூ.50 இலட்சம் உலகச் சுற்றுச் சூழல் நிறுவனம் அளித்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ.5.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பழங்குடியினர் மேம்பாடு - காடுகளை நம்பி வாழும் பழங்குடியினரின் நலனைக் கருத்தில்கொண்டு, அவர்கள் வாழும்



மலைப்பகுதிகள் மேம்படுத்தப்படும். மலைவாழ் மக்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி மற்றும் சுகாதார வசதி ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

வன ஆராய்ச்சி - தமிழகத்திலுள்ள அரிய பல்லுயிரினப் பரவலைப் பாதுகாக்க தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. வளமையாகப் பயன்படுத்தப்படும் மரங்களைத் தவிர, இதர மரங்களைக் கொண்டு மரச் சாமான்கள் செய்ய தகுந்த தொழில்நுட்பத்தினைக் கண்டறிய, ஆராய்ச்சிப் பிரிவு நடவடிக்கை எடுத்து வருகிறது.

தகவல் தொழில்நுட்பம் - கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக வனத் துறையில் தகவல் தொழில்நுட்பம் தீவிரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அனைத்து மாவட்டங்களும் மின் அஞ்சல் மூலம், இணைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் தகவல் பெறுவதற்கு ஏதுவாக, இணையதளம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிக நவீன புவியியல் தகவல் தொழில்நுட்ப மையம், சென்னை தலைமை அலுவலகத்தில் செயல்பட்டு வருகிறது.

இம்மையம், செயற்கைக் கோள் படங்களைக் கொண்டு, வனப்பரப்பினைக் கண்காணித்து தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும், வன வரைபடத் தொகுப்பினை வெளியிட்டு வருகிறது. முதல் வரைபடத் தொகுப்பு 21-1-2002 அன்று காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு புரட்சித் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சியில்தான் வெளியிடப்பட்டது. இம்மையத்தின் பணிகளை பல வெளி மாநில நிபுணர்கள் பாராட்டியுள்ளார்கள்.

தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் - தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் கூழ்மரம் மற்றும் விறகு மரங்களை உற்பத்தி செய்தல், முந்திரி விற்பனை போன்றவற்றைச் செய்து வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் 1 இலட்சம் மெட்ரிக் டன் கூழ்மரத்தினை அறுவடை செய்துள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் 2,500 ஹெக்டேர் பரப்பில் கூழ்மரத் தோட்டங்களும், 800 ஹெக்டேரில் முந்திரித் தோட்டங்களும் எழுப்பப்படும். 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.347.72 இலட்சம் இலாபம் ஈட்டிய இக்கழகம், 2002-2003 ஆம் ஆண்டில்

ரூ.645.24 இலட்சம் லாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-35*

தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம்—தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் தேயிலையை உற்பத்தி செய்து, விற்பனை செய்து வருகிறது. அதிகமான அளவு தேயிலை உற்பத்தி செய்தாலும், தாராளமயமாக்கப்பட்ட இறக்குமதிக் கொள்கையினால், தேயிலை விலைகளில் ஏற்பட்ட கடும் வீழ்ச்சியினால், இக்கழகம் நட்டத்தில் இயங்கி வருகிறது. எனினும், உற்பத்தித் திறனை அதிகப்படுத்தியும், நிர்வாகச் செலவினைக் குறைத்தும், நட்டத்தைத் தவிர்ப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு ரப்பர் கழகம்—அரசு ரப்பர் கழகம், கன்னியாகுமரி மாவட்டத்தில், 4,280 ஹெக்டேர் ரப்பர் தோட்டத்தினை நிர்வகித்து வருகிறது. 1997-1998 முதல் நட்டத்தில் இயங்கிவரும் இக்கழகத்தினைச் சீர்செய்யும் பொருட்டும், தோட்டத் தொழிலாளர் நலன் கருதியும், தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள், குத்தகை வாடகையை ரூ.6,000-லிருந்து ரூ.3,000ஆக, அதாவது பாதியாகக் குறைத்துள்ளார்கள். 31-12-2001 வரை செலுத்தப்பட வேண்டிய ரூ.12.90 கோடி தொகையில் பாதி, அதாவது ரூ.6.45 கோடியைப் பங்கு மூலதனமாகவும் , மீதி ரூ. 6.45 கோடியினை மென்கடனாகவும் செலுத்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

சுற்றுச் சூழல் துறை—மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமது 15 அம்சத் திட்டத்தில், சூழல் பாதுகாப்பினை மிகவும் முக்கியமான இலக்காக நிர்ணயித்துள்ளார். நீர், நிலம், காடுகள், உயிர்ப்பன்மை போன்ற வாழ்க்கை ஆதாரங்களைக் பாதுகாப்பது, மேம்படுத்துவது, சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாதது. இதனைக் கருத்திற்கொண்டே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் இத்துறையை 1995-ல் தொடங்கி, முன்னோடி மாநிலமாக மிளிரச் செய்தார் என்பதைப் பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டின் முக்கிய நதிகளில் சேரும் கழிவுநீரைத் தடுத்து நதிகளைத் தூய்மைப்படுத்த, பெருந்திட்டம் தீட்டி, மத்திய அரசின் உதவியுடன் செயலாக்கி வருகிறது. முதற்கட்டமாக, காவிரி பாயும் ஈரோடு, பவானி, பள்ளிப்பாளையம், குமாரபாளையம், திருச்சி ஆகிய



நகரங்களில் ஏற்படும் கழிவுநீரைச் சேகரித்து சுத்திகரித்திட ரூ.36.27 கோடி செலவில் ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பவானி, பள்ளிப்பாளையம் நகரங்களுக்கு விரிவான திட்டம் மத்திய அரசின் ஒப்புதலை எதிர்நோக்கியுள்ளது. மேலும், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, தஞ்சை, கும்பகோணம், கரூர், மயிலாடுதுறை ஆகிய நகரங்களிலும் கழிவுநீரைச் சுத்திகரித்து, காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகளைத் தூய்மைப்படுத்த, மத்திய, மாநில அரசுகள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் ஆகியவை இணைந்து ரூ.575 கோடி செலவில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னைப் பெருநகரின் நீராதாரங்களில் கலக்கும் கழிவுநீரைத் தடுத்து நிறுத்தி இந்நீர்வழிகளைச் சுத்தப்படுத்த, தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் மத்திய அரசின் ரூ.491.52 கோடி நிதியுதவியுடன் சென்னை நதிநீர் மாசு களையும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்னை நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின் 16 பிரிவுகளில், 10 பிரிவுகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள், இந்த ஆண்டு நிறைவுபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள 6 பிரிவுகளும் அடுத்த ஆண்டு இறுதிக்குள் முடிவுற இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ரூ.491.52 கோடிக்கான இத்திட்டத்திற்கு இதுவரை மத்திய அரசு வழங்கியுள்ள தொகை ரூ.111.90 கோடியாகும். ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செலவழித்துள்ள தொகையோ ரூ.119.88 கோடியாகும். தேசிய நதிநீர்த் திட்டத்தின்கீழ் கொடுத்த தொகையைவிட, அதிகமாகச் செலவிட்டு ஏனைய மாநிலங்களை விஞ்சி, முதல்நிலை வகிக்கும் மாநிலம், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி செய்யும் தமிழ்நாடுதான் என்பதை உங்களிடையே பெருமையுடன் கூறிக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-40*

3-4-2003 நாளிட்ட தினகரன் நாளிதழில் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க மத்திய அரசு ரூ.1,500 கோடி தமிழக அரசுக்குக் கொடுத்ததாக அறிக்கைவிட்டு, தமிழ்நாடு இந்தப் பணத்தைச் செலவு செய்யவில்லை என்று ஒரு தவறான தகவலைக் கூறி இருக்கிறார் மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு. ஆனால் உண்மையிலேயே, மத்திய அரசு தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்திற்காக ரூ.1,109.98 கோடியில் இதுவரை

கொடுத்திருக்கிற பணம் கிட்டத்தட்ட ரூ.154.73 கோடி மட்டுமே. மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இத்திட்டத்திற்காகச் செலவு செய்தது ரூ.172.71 கோடியாகும். அதாவது, மத்திய அரசு கொடுத்ததைவிட ரூ.18 கோடி இத்திட்டத்திற்காக அதிகம் செலவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி தவறான தகவல்களை மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்கள் உண்மைக்குப் புறம்பாகப் பிரச்சாரம் செய்து இருக்கிறார். நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், உண்மைக்கு மாறான செய்திகளைச் சொல்வதே இப்போது திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கலை ஆகிவிட்டது.

இரண்டாம் உலகப் போரில் ஹிட்லரோடு மடிந்து போன அவருடைய புரோபகண்டா மினிஸ்ட்டர் மிஸ்டர் கோயபல்ஸ் எப்படி இறந்து போனானோ, அதேபோல் திரு. கருணாநிதியும், கருணாநிதி குடும்பங்களும் அழிந்துபோன அந்தத் தத்துவத்தை இன்னும் தூக்கி வைத்துக்கொண்டு, 1996-ல் குருட்டுப் பூனைக்கு கொழுக்கட்டை கிடைத்ததுபோல, ஆட்சி கிடைத்தது. இந்த பொய்யான பிரச்சாரத்தால்; அதை மனதில் வைத்துக்கொண்டு மீண்டும் பொய்யான பிரச்சாரம் செய்து புரட்சித் தலைவி அம்மா அவர்களுடன் சிவராசனும் தாணுவும் இருப்பதாக ஒரு புகைப்படத்தை வெளியிட்டார்கள். அம்மா அவர்கள் நபார்டுக்கு எழுதிக் கொடுத்துவிட்டார் என்று ஒரு பொய்யான தகவலைச் சொன்னார்கள். ஏன், 1971 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அருகில் ஒரு பங்களாவைப் போட்டு, ஏழைப் பங்காளன் படத்தைப் பார்த்தாயா என்று அன்றைக்கு ஊழல் செய்தார் காமராஜர் என்று சொன்னார்கள். அதேபோல எத்தனையோ பொய்யான தகவல்களை, (குறுக்கீடு) உண்மைக்கு மாறான தகவல்களை, ஏன் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கொட்டும் மழையில் கருணாநிதியைச் சந்தித்தார், அவரது வீட்டில்; எதற்காக? கள்ளுக்கடை, சாராயக்கடையை அன்றைக்கு திரு. கருணாநிதி திறக்க இருந்தார்; அவர் சந்தித்து, வருகின்ற தலைமுறை அழிந்துவிடும்; தயவுசெய்து நீங்கள் கள்ளுக்கடை, சாராயக்கடைகளைத் திறக்காதீர்கள் என்று அன்றைக்குச் சொன்னார். அதற்குப் பிறகு திரு. கருணாநிதியினுடைய ஆட்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? திரு. இராஜாஜி அவர்கள் தன்னுடைய மகன் திரு. நரசிம்மனுக்கு இராஜ்ய சபா M.P. seat கேட்க வந்தார் என்று ஒரு தவறான தகவலை அன்றைக்கே சொன்னார்கள். இப்படி கோயபல்ஸ் தத்துவத்தை இன்னமும் கையில் எடுத்துக்கொண்டு திரிகின்ற



(மேசையைத் தட்டும் ஒலி) திரு. கருணாநிதியினுடைய கும்பலுக்கு கோயபல்ஸ், ஹிட்லருடைய கதிதான் ஏற்படும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக பலவேறு திட்டங்களைத் தீட்டி செயல்பட்டுவரும் அதேநேரத்தில், அத்தொழிற்சாலைகளில் ஏற்படும் கழிவுகளால், நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுப்பதிலும் முதலிடம் வகிக்க வேண்டும் என்பதிலும் அக்கறையோடு செயல்பட்டு வருகிறது.

2002-2003 ஆம் ஆண்டின் சாதனைகள். (1) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் உள்ள பிரத்யேகமான தாவரங்கள் மற்றும் வன உயிரினங்களைப் பாதுகாக்க 45,777.57 ஹெக்டேர் பரப்பளவு, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்பேரில் அரசால் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(2) மன்னார் வளைகுடா வன உயிரினப் பாதுகாப்புப் பகுதி, உலகளாவிய அங்கீகாரம் பெற்று யுனெஸ்கோ இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது.

(3) கோடியக்கரை வன விலங்கு சரணாலயம், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலமாக "ராம்சர் சைட்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

(4) தமிழ்நாட்டில் வனத் துறை மேற்கொண்டுள்ள மருத்துவ மூலிகை பாதுகாப்புத் திட்டத்தைப் பாராட்டி, (குறுக்கீடுகள்) ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் 'ஈக்வேட்டர் இனிஷியேடிவ் அவார்ட்' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. கிடைக்கப்பெற்ற பரிசுத் தொகையினைக் கொண்டு மாநிலத்தின் 26 மாவட்டங்களில் 959 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 80,000 ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் இலவச சித்த மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டன.

(5) 1225.550 மெட்ரிக் டன் சந்தன மரங்கள் விற்பனை செய்யப்பட்டு இதுவரைக்கும் தமிழ்நாட்டில் செய்யப்படாத ரூ.121.59 கோடி ரூபாய் வருவாய் ஈட்டப்பட்டு உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 16.13 ஹெக்டேர்

பாப்பளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த ரூ. 95.15 இலட்சம் மதிப்புள்ள கஞ்சா பயிர்ச் செடிகள் அழிக்கப்பட்டன.

பிற்பகல் 1-45

இணையத் தொடர்பு வாயிலாக விவசாயம், சுகாதாரம், கால்நடை நலன், கல்வி, சமூக நலம், வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு துறைகளைச் சார்ந்த விவரங்களை காடு வளர்ப்புத் திட்ட கிராமத்திலேயே அறிந்துகொள்ளும் வகையில் தகவல் தொழில் நுட்பத்தை விரிவாக்கம் செய்யும்பொருட்டு மதுரை மாவட்டத்தில் வரிசப்பட்டி என்ற தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட கிராமத்தில் இணைய நிலையம் தொடங்கப்பட்டு 25-3-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 100 பள்ளிகள் என்ற வீதம், 29 மாவட்டங்களிலும் 2,900 பள்ளிகளில் 1.60 இலட்சம் மாணவர்கள் கொண்ட தேசிய பசுமைப் படை தொடங்கப்பட்டு சுற்றுச் சூழல் விழிப்புணர்வு பேரியக்கம் மிளிர்ந்துள்ளது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கழிவுநீரால் நிலத்தடி நீர் மாசு அடைவதைத் தடுக்க இதுவரை 50 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டு, 32 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன.

தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் இராணிப்பேட்டையிலும், சாயத் தொழிற்சாலைகளுக்கான ஒரு பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் பெருந்துறையிலும் 2002-2003-ல் தொடங்கப்பட்டுள்ளன.

திருப்பூரில் உள்ள ஒரு பெரிய தொழிற்சாலை உட்பட மாநிலத்தில் 10-க்கும் அதிகமான சாயப்பட்டறை தொழிற்சாலைகள் கழிவுநீரிலிருந்து உற்பத்திக்குத் தேவையான நீரை திரும்பப் பெறுவதற்கென (Reverse Osmosis Plant) எதிர்மறை சவ்வூடு முறைகள் அமைக்கப்பட்டுள்ளன.

சென்னையில் மாசு ஏற்படுத்தும் பேருந்துகளின் எண்ணிக்கை முன்பு 53 சதவீதமாக இருந்தது. இது தற்போது 10 முதல் 15 சதவீதமாகக் குறைந்துள்ளது. ஆலந்தூரில் உள்ள மாநகரப் பேருந்து பணிமனையில் டீசல் புகைமானி அமைக்கப்பட்டுள்ளது.



வீசியெறியப்படும் பிளாஸ்டிக் அற்ற பகுதிகளாக ஊட்டி, இராமேஸ்வரம், கொடைக்கானல் போன்ற தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத் தலங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

நகர்ப்பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்த 4 இலட்சத்திற்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன. 21 மாவட்டங்கள் காற்று ஒலிப்பான் அற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் தனது பேருந்துகளை காற்று ஒலிப்பான் அற்றதாக மாற்றியுள்ளது.

ஆசிய நகரங்கள் உயிரினச்சூழல் திட்டத்தினை, இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் மாசு கட்டுப்பாடு வாரியம், 2002 மற்றும் 2003 ஆகிய ஆண்டுகளில் செயல்படுத்தி வருகிறது.

நகர்மயமாதல், தொழில்மயமாதல் ஆகிய காரணங்களினால் நீர், நிலம், காற்று மாசுபடும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வந்தாலும், அவற்றை விஞ்ஞானபூர்வமாக அணுகித் தீர்ப்பதில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதி பூண்டுள்ளது என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தலைமையிலான இந்த அரசு காடு வளர்ப்புக்கும் சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்கும் அயராமல் பாடுபடும் என்பதைத் தெரிவித்து, புதிய அறிவிப்புகளை அறிவிக்கின்றேன். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், பகுதி-2 திட்டமானது ரூ.779.00 கோடி செலவில் வெளிநாட்டு நிதியுதவி மூலம் 2004-2005 முதல் அடுத்த 5 ஆண்டு காலத்திற்கு சுமார் 2,50,000 ஹெக்டேர் பரப்பளவில் உள்ள தரம் இழந்த வனங்களை, தரமுள்ள வனங்களாக மாற்றிட பணிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி ஜப்பானிய பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம், பகுதி-1 திட்டப்பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூபாய் 93.35 கோடி செலவில் செயல்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம் 150 கிராமங்களில் அமைந்துள்ள 47,500 ஹெக்டேர் பரப்பளவு நிலங்களில் வன வளர்ப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

பட்டா நிலங்களில் அதிக அளவில் மாம் வளர்ப்பதை ஊக்குவிப்பதற்காகவும், அம்மரங்களின் விற்பனை மூலம் அதிக இலாபம் பெறுவதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவும், தமிழ்நாட்டிலிருந்து வெளி மாநிலங்களுக்கு தடிமரங்களை எடுத்துச் செல்வதற்கு தற்சமயம் உள்ள தடையினை நீக்கி, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு ஆணையிடும்.

பிற்பகல் 1-50

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வனத் துறையால் உற்பத்தி செய்யப்பட்ட கருவேல் நாற்றுக்கள் அல்லாத, பிறவகையான வேம்பு, சிசு, புளி, புங்கன் போன்ற மாவகைகளைச் சார்ந்த 22 இலட்ச நாற்றுக்களை தேர்வு செய்யப்பட்ட 10 மாவட்டங்களின் ஏரி மற்றும் குளக்கரைகளில் 2003-2004 ஆம் நிதி ஆண்டில் ரூ.3.50 கோடி மதிப்பீட்டில் சுமார் 3,100 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் உயிரியல் ரீதியான தாவரவகை டீசல் (Bio-diesel) தயாரிப்பதற்காக ரூ.3.50 கோடி செலவில் சுமார் 1.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில் காட்டாமணக்குத் தோட்டங்களை 2003-2004 ஆம் ஆண்டிலிருந்து மூன்றாண்டு கால அளவில் வளர்க்க உத்தேசித்து, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் இந்தத் திட்டத்திற்கு பரிந்துரைக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) மிகவும் சந்தோஷமாக இருப்பவர், நிதி அமைச்சர் மிகவும் சந்தோஷமாக இருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் ரூ.354.32 கோடி மதிப்பீட்டில் 2.38 இலட்சம் ஹெக்டேர் பரப்பளவில், 2003-2004 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டு கால அளவில் மூங்கில் தோட்டங்களை எழுப்பிட திட்டம் ஒன்று தீட்டப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரையின்படி தமிழ்நாடு முழுவதிலுமாகவுள்ள படுகை நிலங்களில் 2003-2004 முதல் 2007-2008 வரையிலான ஐந்தாண்டு கால அளவில் தேக்கு மரங்களை



வளர்க்கும் திட்டம் ரூ.25.00 கோடியில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாடு தன்னகத்தேயுள்ள வளமிக்க உயிரினச்சூழல் பரவல் பாதுகாப்பிற்காகவும், வன உயிரினச் சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்களைப் பாதுகாப்பதற்காகவும் தன்னை அர்ப்பணித்துள்ளது. இம்முயற்சிகளுக்குப் பயனளிக்கும் வகையில் மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள வளமிக்க உயிரினப் பரவல் சூழலைப் பாதுகாக்கும் வகையில் அகஸ்தியர் மலையினை உயிரினச்சூழல் காப்பகப் பகுதியாக மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி விரைவில் அறிவிக்கை செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டில் தரம் தாழ்ந்த காடுகளை ஒட்டியுள்ள 3,000 கிராமங்களுள், தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டத்தினை ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்ட 1,000 கிராமங்களில் பராமரிப்புப் பணியினை, வரும் இரண்டு ஆண்டுகளில் செயல்படுத்த, கிராமம் ஒன்றிற்கு ரூ.50,000/- வீதம் ரூ.10.00 கோடி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் தலைமை அலுவலகம் ரூ.90.00 இலட்சம் செலவில், திருச்சிராப்பள்ளியில் 2003-க்குள் கட்டி முடிக்கப்படும்.

தற்சமயம் நலிவிலிருந்து மீண்டுவரும் அரசு ரப்பர் கழகத்தில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் கருதி, அவர்களின் ஊதிய நிலுவைத் தொகை வழங்க ஆகும் நிர்வாகச் செலவு மற்றும் வட்டியில்லா கடன் ஆகியவற்றிற்கு ரூ. 1 கோடி அளிக்க மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களினுடைய அரசு ஆணையிட்டுள்ளது. (குறுக்கீடு) (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** நன்றி சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய ரப்பர் கழகத்திலே பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே உள்ள ஒப்பந்தப்படி கழகம் நலிந்து வருகிறது என்ற காரணத்தினாலே, ஊதிய உயர்வும், பஞ்சப் படியும் கொடுக்காமல் இருந்தது. அதை அரசு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** சுற்றுச் சூழல். மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி பாலாற்றில் கலக்கும் ஆலை கழிவுநீரில் கலந்துள்ள உப்பின் அளவினைக் குறைத்து பாலாற்றின் நீரின் தரம் மேம்பட இராணிப்பேட்டை, வாலாஜா நகரங்களில் பாலாறு பாதுகாப்புத் திட்டம் ரூ.25.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வேண்டி மைய அரசிற்கு இத்திட்டக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்பேரில் தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ், செங்கல்பட்டு நகரத்தையொட்டியுள்ள கொளவாய் ஏரி மாசுபடுவதிலிருந்து தடுப்பதற்காக ரூ.5.25 கோடி மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-55

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்பேரில் தமிழகத்தில் அமைந்துள்ள கோவில் குன்றுகளின் தரமிழந்த பகுதிகளைப் பசுமைப்படுத்தி நந்தவனம் அமைக்க உத்தேசித்து, முன்னோடித் திட்டமாக வேலூர் மாவட்டத்தில் உள்ள சோளிங்கர் கோவில் குன்றில் ரூ.9.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாகவும், சுற்றுலாத் தலமாகவும் திகழும் தஞ்சாவூர் நகரம், மத்திய அரசின் முன்மாதிரி சூழல் நகரமாக்கும் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் இந்நகரிலுள்ள அழகிகுளம், சிவகங்கை குளம், சமந்தன் குளம், பூக்குளம்



மற்றும் மோதிரப்பசாவடி குளம் ஆகிய ஐந்து பழைய குளங்களைப் புதுப்பித்தல், நகரின் கீழவாயில் பகுதியில் உள்ள இறைச்சி சந்தையை மேம்படுத்துதல், திடக் கழிவுகளைச் சேகரித்து வெளியேற்றும் அமைப்பினை ஏற்படுத்துதல் ஆகிய பணிகள் ரூ. 135 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படவுள்ளன. இச்செலவில் 50 விழுக்காடு மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும், 25 விழுக்காடு தொகை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தாலும், 25 விழுக்காடு தொகை தஞ்சாவூர் நகராட்சியாலும் செலவிடப்படும்.

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத் தலங்களை சூழலுக்கு உகந்த சுற்றுலாத் தலமாக மாற்றவும், பல்வேறு சுற்றுச் சூழல் பிரச்சினைகள் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மேம்படுத்தவும், ஒரு முன்மாதிரியான திட்டத்தை அரசு சாரா தன்னார்வுத் தொண்டு நிறுவனங்கள், சுற்றுச் சூழல் மேம்பாட்டில் ஊக்கமுடன் செயல்படுவோர் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியவர்கள் மூலம், அனைத்து மாவட்ட ஆட்சியாளர்களால் செயல்படுத்திட மாவட்டத்திற்கு ரூ.1.00 இலட்சம் வீதம் ரூ.29.00 இலட்சம் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி, மாநகரப் பேருந்து என்றால் மாசற்ற பேருந்து என்ற நிலைமையை உருவாக்க புகை மாசினை தவறேதும் இல்லாமல் துல்லியமாகக் கணக்கிட, கணினியால் செயல்படும் நவீனக் கருவிகளைக் கொண்டு புகை சோதனை செய்யப்படும். இதற்கான கருவிகள் பேருந்து தகுதிச் சோதனை செய்யப்படும் 6 மாநகரப் பணிமனைகளிலேயே வைக்கப்படும். புகை மாசின் தர அளவிற்குட்பட்ட பேருந்துகளுக்கு மட்டுமே தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். ஒரு புகை சோதனை கருவி ரூ. 2.00 இலட்சம் வீதம் 6 கருவிகள் வாங்குவதற்கு ரூ.12.00 இலட்சம் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நீங்கள் தொட்ட இடம் துலங்குவது தொடர் சாதனை என்றால், உங்கள் பார்வைபட்டவர்கள் உயர்ந்ததுதான் பார் போற்றும் சரித்திரமே. அன்புக்கு நீங்கள் அம்மா என்றால், அஞ்சாமைக்கு நீங்கள் ஓர் அரிமா அன்றோ! கெஞ்சல் உங்களுக்குப் பிடிக்காத கெட்ட சொல் என்றால், வஞ்சகமே உங்கள் வழிகூட வா மிரளும்

அருவருப்புச் சொல்லன்றோ! சிங்கத்தின் குணத்தை சிறு நரி பெற்றதாகச் சான்று இல்லை. சிறு நரியின் வஞ்சகத்தை சிங்கமும் கொண்டதாகச் சான்று இல்லை. அப்படியே நிகழ்ந்தது என்றால் முரண்பாட்டிற்கு அதுவே முதல் சான்றாகும். ஆனால் காட்டு விலங்குகூட நாட்டிற்கு வந்துவிட்டால் சோராத இடந்தனிலே சேர்ந்ததுபோல் சீரழிந்து, தன் குணம் மறந்து போய்விடுவது நாளும் நடக்கின்ற கொடுஞ்செயலாகும். அப்படித்தான் சமீபத்தில் சென்னை மயிலாப்பூர் பகுதியில் யானை ஒன்று கடைத் தெருவில் தன் தும்பிக்கை தூக்கி பிச்சை எடுத்த செய்தி கேட்டு, மனம் வருந்திய மாண்புமிகு அம்மா அவர்கள், யானைக்கு, பாகனிடமிருந்து விடுதலை பெற்றுத்தந்து. சாத்தூரிலே சர்க்கஸ் கூண்டிலிருந்த சிங்கங்களுக்கும் விடுதலை பெற்றுத்தந்து. தந்து, அதன் இனத்தோடு வாழ்ந்திட அடிமைத்தளையை அதிரடியாகக் களைந்திட்டார். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி வன விலங்குப் பட்டாளங்களும் சுதந்திரக் காற்றைச் சுவாசித்து மகிழ்ந்திட உடனடி நடவடிக்கை எடுத்த மாமனிதர் மட்டுமின்றி, அனைத்து உயிரினங்களும் அன்பொழுக வாழ்ந்திட அன்றாடம் உழைப்பவர்தான் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

எட்டிக்காயோ இனிக்குமென்று இட்டுக்கட்டிப் பேசுகிற கெட்ட மதியாளர்கள், பெட்டி, பெட்டியாக மக்கள் பணத்தைக் கட்டிக் குவித்ததினால் தட்டுத்தடுமாறி, விழி பிதுங்கி நின்ற தமிழகத்தின் நிதிக் களஞ்சியத்தை மீட்டு, மீளா சபதமேற்று, தம் மக்களைப் பிறரிடம் கையேந்தி நிற்க வைக்கும் கடிய மனம் கொண்டிராமல், கசப்பு மருந்து தருகிறேன் கடும் நோய்தீர்க்க என்று, கடுஞ்சுமையைத்தான் சுமந்து மக்கள் நிதிச் சுமையை நீக்கிடவே நித்தம் உழைக்கின்ற, நெஞ்சம் நிறைந்துள்ள இதய தெய்வமே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் காவிரித் தாயே; உங்களை வணங்கி என் உரையை நிறைவு செய்கிறேன்.

பிற்பகல் 2-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு பரிசிலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதை உறுதி கூறுகிறேன். அதனால் மாண்புமிகு





உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. (குறுக்கீடு) என்ன திரு. ஆறுமுகம்?

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு கொளவாய் ஏரிக்கு ரூ.5¼ கோடி மதிப்பில் அந்த ஏரி மாசுபடுவதைத் தடுப்பதற்காக நிதியை ஒதுக்குவதற்காக மத்திய அரசுக்கு தமிழக அரசு கருத்துரு அனுப்பியதற்கு நன்றி. அதே சமயத்தில் குடிநீர் வழங்கும் திட்டத்திற்காக ஏற்கெனவே ரூ.10 கோடி, ஏரி மாசுவை தடுப்பதற்காக அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது. அந்தத் திட்டமும், இந்தத் திட்டமும் ஒன்றா வேறு வேறா என்று அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளவாய் ஏரி மாசுபடுவதைத் தடுத்திட திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு, அதில் 20 எம்.எல்.டி. தண்ணீரை சென்னை மாநகருக்கு வழங்குவதற்காக ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டது. அந்தத் திட்டமும் இந்தத் திட்டமும் இணைந்து மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய அரசு பரிந்துரையின்பேரில் மத்திய அரசின் ஒப்புதல் பெற்று அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொளவாய் ஏரித் திட்டத்தில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. ஒன்று, மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்கீழ் வருகிறது. செங்கற்பட்டு நகரத்தில் வருகிற கழிவு நீரெல்லாம் இந்த ஏரிக்குள் விடப்பட்டு வருகின்றன. ஆகவே அதற்கு ஒரு மாற்று வழி செய்து. வேறு இடத்தில் அந்தக் கழிவுநீரைக் கொண்டு செல்ல வேண்டும். அந்தத் திட்டத்தைத்தான் மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் செய்யும். அதற்கு மத்திய அரசின் அனுமதி தேவைப்படுகிறது. பிறகு அந்த ஏரியில் உள்ள நீரை சுத்திகரித்து அதில் கிடைக்கக்கூடிய 20 எம்.எல்.டி. குடிநீரை, வீராணம் திட்டத்திற்காகப் போடப்பட்ட பைப்லைன்-- குழாயோடு இணைத்து சென்னை மாநகருக்கு 20 எம்.எல்.டி. குடிநீர் வழங்கப்படும். இது குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகச்

செயல்படுத்தப்படுகின்ற திட்டம். ஆகவே இந்தத் திட்டத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கோரிக்கை எண் 14-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம், கோடியக்கரையினுடைய காட்டை ஒரு தேசிய......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அதெல்லாம் பிறகு பேசிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களும் பிச்சாவரம் பகுதியில் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆகவே அந்த இடத்தில் (குறுக்கீடு) கோடியக்கரையும், முத்துப்பேட்டையும். (குறுக்கீடு) சரி. கோடியக்கரை, முத்துப்பேட்டை பகுதிகளில் இறால் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஆகவே அந்த இடங்களில் இயற்கை எழில் பாதிக்கப்பட்டுள்ளது என்பதையெல்லாம் இங்கே தெரிவித்தார்கள். இதைப்பற்றித் தீர விசாரித்து அந்த இடத்தை, ஒரு சிறந்த சுற்றுலா மையமாக develop செய்வதற்கு இந்த அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும். அந்த இறால் பண்ணைகளை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு இந்த அரசு தேவையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 14-சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** இல்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தி. வேல் முருகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி, இருக்கையில் இல்லை.

திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கி. பாரிமோகன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ. இரா. மலையப்பசாமி.

**திரு. அ. இரா. மலையப்பசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. இரா. மலையப்பசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி.கே. இராஜா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

[2003 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. ஆறுமுகம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ். நடராஜன்.

**திரு. எஸ். நடராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். நடராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ். இருக்கையில் இல்லை.

திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எம். ராம்குமார்.

**திரு. எம். ராம்குமார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ராம்குமார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.



2003 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி காசாம்பு பூமாலை அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. இரவிராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை.

திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

செல்வி க. பாலபாரதி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி எஸ். மகேஸ்வரி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை மானியக் கோரிக்கை எண் 14-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.106,39,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.113,44,68,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது. (குறுக்கீடு)

பிற்பகல் 2-05

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நடுவிலே நிற்காதீர்கள். முடித்து விடுகிறேன். முடித்துவிட்டுக் கூப்பிடுகிறேன்.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

நன்றியுரை, திரு. சிவபுண்ணியம். (சிரிப்பு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி அவர்களுடைய கோரிக்கையையும் என்னுடைய கோரிக்கையையும் ஏற்று, இந்தச் சபையிலேயே ஒரு நிரந்தரத் தீர்வு காணுவதற்கான அறிவிப்பினை வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது இருவரின் சார்பிலும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 5. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (ஆ) கோரிக்கை எண் 25—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மாலையில் எடுத்துக் கொள்ளவிருக்கும் மூன்று மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை அந்தந்த மானியக் கோரிக்கைகள் மீது தெரிவிக்கலாம். மானியக் கோரிக்கை எண் 25—வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.110,75,63,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 6034, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4607, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5153, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மு. கார்த்தி] [2003 மே 8

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6588, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8100, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8130, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



2003 மே 8] [திரு. கே. ஆறுமுகம்]

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8536, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8912, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4853, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. எச்.எம். ராஜு] [2003 மே 8

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7076, திரு. சு. சிவராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6109, திரு. டி. மணி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6289, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4689, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தால் குறைந்த விலையில் ஏழைகளுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2003 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6374, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் குடிசை மாற்று வாரியம் புதிய வீடுகள் கட்டி வழங்குவது போன்று அனைத்து நகரங்களிலும் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6879, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகாசி தொகுதியில் தீப்பெட்டி, பட்டாசு மற்றும் அச்சுத் தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6982, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தங்க நகைத் தொழிலாளர்கள் வாடகைகூட கொடுக்க இயலாத அளவு வறுமையில் வாடிக்கொண்டிருப்பதால் அவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதித் துறையின் மூலம் இலவச வீடுகள் கட்டித் தர

வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1233, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதி, ஆழியார் பகுதியில் வீட்டு வசதி வாரியம் மூலம் வீடு கட்டி வாடகைக்கு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7559, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5003, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி நகரில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் அரசு ஊழியர்கள் மற்றும் பொதுமக்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4776, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியம் மூலம் கட்டப்பட்டு விற்பனையாகாமலுள்ள ஆயிரக்கணக்கான வீடுகளை விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5349, செல்வி க. பாலபாரதி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1722, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்டு விற்பனையாகாமல் உள்ள வீடுகளை உடனடியாக விற்பனை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய 25 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.108,94,85,000/- மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.82,69,80,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.110,75,63,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7061, திரு. டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

## (இ) கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 27 - செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.28,49,95,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 740, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,49,95,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4798, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,49,95,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5172, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 28,49,95,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5781, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6546, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7557, திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7876, திரு. டி.கே. இராஜா.

**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8142, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8289, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8824, திரு. எஸ். நடராஜன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 8855, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5009, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



பிற்பகல் 4-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6027, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6862, திரு.எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6981, திருமதி எஸ். மகேஸ்வரி.

**திருமதி எஸ். மகேஸ்வரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1269, திரு. கோவை தங்கம்.

[2003 மே 8

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாணவ, மாணவியர்களுக்கு தேசப்பற்றை உருவாக்க கல்லூரி, பள்ளிகளில் தேசிய தலைவர்களின் வாழ்க்கை வரலாற்றை செய்தித் துறை மூலம் படமெடுத்து வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1579, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி வட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், அதியமான்கோட்டை கிராமத்தில் அமைந்துள்ள 900 ஆண்டுகள் பழமையான சென்றாய பெருமாள் கோயில் பற்றியும், பாளையம்புதூர் தேசிய நெடுஞ்சாலையில் உள்ள பழமையான தொல்லியல் துறை பாதுகாப்பில் உள்ள கோயில் பற்றியும் மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் சுற்றுலாத் துறை மூலம் விளம்பரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6233, திரு கோ. இரவிராஜ்.

**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மத நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் தமிழக செய்தித் துறையின் மூலம் திரைப்படமெடுத்து திரையரங்குகளில் அதனை வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2003 மே 8]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4717, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திரைப்படங்களில் வன்முறைக் காட்சிகள் அதிகம் இடம் பெறுவதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4774, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் வேலூரில் உள்ள அண்ணா கலையரங்கை நவீனப்படுத்தி அடுக்குமாடி கட்டடமாக மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4691, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

[2003 மே 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6881, திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் அருள்மிகு ஆண்டாள் திருக்கோயில் புராண வரலாறு குறித்து குறிப்பேடு வெளியிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6286, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் உள்ள விமான நிலையத்திற்கு பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பெயர் சூட்ட மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 528, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மறைந்த செவாலியே சிவாஜி கணேசன் அவர்களுக்கு சென்னையிலும் மதுரையிலும் பொருத்தமான இடத்தில் சிலை அமைக்க வேண்டியதன் அவசியம்பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய 27 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.28,49,95,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



2003 மே 8]

**(ஈ) கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 28—செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா. மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா மானியக் கோரிக்கை எண் 28-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.52,55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 739, திரு. தி. வேல் முருகன்.

**திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000 மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4627, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5175, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6556, திரு. அ.இரா. மலையப்பசாமி.

**திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7740, திரு. கி. பாரிமோகன்.

**திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7866, திரு. டி.கே. இராஜா.



**திரு. டி.கே. இராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8216, திரு. கே. ஆறுமுகம்.

**திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8279, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8901, திரு. பி.எஸ். உலகரட்சகன்.

[2003 மே 8

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6026, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4869, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7469, திரு. எம். ராம்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 343, திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.



2003 மே 8]

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், எட்டிப்பட்டி தூவலையை சுற்றுலாத்தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 986, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டத்தில் மொடக்குறிச்சி தொகுதி, ஓடாநிலையில் தீரன் சின்னமலைக்கு மணிமண்டபம் உடனே அரசு அமைத்து, அதைச் சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1067, திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டி தொகுதி, தேசியகவி சுப்ரமணிய பாரதியார் பிறந்த எட்டயபுரத்தைச் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1237, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் உள்ள புல்மலையை, மக்கள் நாள்தோறும் பார்க்க விரும்பும் இயற்கைக் காட்சிகள் நிறைந்த அழகுவாய்ந்த இடமாக இருப்பதால் சுற்றுலா மையமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1906, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேச்சேரியைச் சுற்றி பழங்கால கோவில்கள் சிஸ்கால் தேனி இரும்பு தொழிற்சாலை மற்றும் சிறப்பு ஆடு ஆராய்ச்சிப் பண்ணை உள்ளதால் மேச்சேரியை சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2328, திரு. ஆர். கிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3266, திரு. கோ. இரவிராஜ்.



**திரு. கோ. இரவிராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி தொகுதியில், திருமுருகப்பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியை சுற்றுலாத்தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3394, திருமதி காசாம்பு பூமாலை.

**திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கராபுரம் தொகுதிக்குட்பட்ட சேராப்பட்டு மலையைச் சுற்றுலா மையமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4692, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் நகரத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4715, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதியில் உள்ள பக்காசூரன் மலையை சுற்றுலாத்தலமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6882, திரு. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் செண்பகத்தோப்பு பகுதியில் உள்ள சாம்பல் நிற அணில்கள் வாழும் சரணாலய வனப் பகுதியைச் சுற்றுலாத்தலமாக அவசியம் மாற்றுவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6285, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னைக்கு அடுத்தபடியாக பெரிய நகரமான மதுரைக்கு பல்வேறு மாநிலங்களிலிருந்து கோயில்களுக்கு தரிசனம் செய்வதற்காக வருகின்றவர்களுக்கும், அந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கும் பயன்படுகின்ற வகையில் ஒரு சிறந்த சுற்றுலா மையமாக மதுரையை மாற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 801, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மன்னர் திருமலை நாயக்கர் மகால் பழுதுபார்க்கும் பணிக்கு மத்திய அரசின் உதவியைக் கோர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய 28 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.26,26,44,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.52,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. முன்னுரையாக மாண்புமிகு அமைச்சர்கள் ஏதாவது கூற விரும்பினால் கூறலாம். மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்பை @நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவை பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 359 முதல் 408 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[2003 மே 8

பிற்பகல் 4-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டு உள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பை நான் (ம) இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்பை (ம) நான் இந்த மாமன்றத்திலே படித்தாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களது அரிய கருத்துகளைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

---

(ம) 409 முதல் 510 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III மற்றும் IV-ஆக அச்சிடப்பெற்றுள்ளன



2003 மே 8]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, செய்தி மற்றும் விளம்பரம், சுற்றுலா ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டு வசதித் துறையைப் பொறுத்த அளவிலே, ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு இருந்தாக வேண்டும் என்கிற இலக்கை நோக்கி இந்த அரசு பயணித்துக் கொண்டிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே முதல் பாராவிலே நீங்கள் குறிப்பிட்டிருக்கிறீர்கள். வீட்டு வசதி வாரியத்தைக் கொண்டு நாம் எல்லோருக்குமே வீட்டை வழங்கிவிட இயலாது. ஆகவே தனியாரும், ரியல் எஸ்டேட் பிஸினஸ் செய்துகொண்டிருக்கிறவர்களும் ஆங்காங்கே நிலத்தை வாங்கி அவர்களும் இப்போது பிளாட்டுகளைப் போட்டு விற்பனை செய்துகொண்டு இருக்கிறார்கள். ஆனால் 1996-க்குப் பிறகு பார்த்தோம் என்று சொன்னால், ரியல் எஸ்டேட் பிஸினஸில் ஒரு மாபெரும் தேக்கம், மந்தம், வீழ்ச்சி என்று முழுமையாக அந்த வியாபாரத்தையே நசுக்கிவிட்டிருக்கிற ஒரு நிலையை உணர்ந்திருக்கிற இந்த அரசு, தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவைக்கு வந்தவுடனேயே ஆளுநர் உரையிலே சொல்கிறபோது ரியல் எஸ்டேட் வியாபாரத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும் என்கிற ஒரு வாக்குறுதியை நீங்கள் ஆளுநர் உரையிலே சொல்லி, இன்றைக்கு இந்த அவையிலேகூட இந்த அரசு இங்கே கொடுத்தது. ஆனால் இங்கே unapproved layouts பொறுத்த வரையில், அவற்றை ரெகுலரைஸ் செய்துகொள்வதற்கு நீங்கள் அரசு ஆணைகளைப் பிறப்பித்து 3,4 முறை அதற்குக் காலக்கெடுவை நீட்டித்துக் கொடுத்தும்கூட, பல பகுதிகளிலே பேரூராட்சி, நகராட்சி போன்ற பகுதிகளிலே, அந்த regularisation work, இன்னும் வரன்முறைப்படுத்தும் பணி முடிவு பெறவில்லை. அதனால் அரசாங்கத்திற்கு எதிர்பார்த்த பணமும் அதிலே வரவில்லை. ஆகவே நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், மீண்டும் அதற்கான ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து, நீங்கள் regularise செய்வதற்கு ஆணை இடுவீர்கள் என்று சொன்னால்—இந்த வீட்டு மனைகளை ஆங்காங்கே சில பேர் வாங்கி விட்டிருக்கிறார்கள். வாங்கியவர்கள் தன்னுடைய மகள் திருமணம் அல்லது தன்னுடைய தாய் இறந்துவிட்டால், பெற்றோர் இறந்துவிட்டால் ஏதாவது காரியம் செய்ய வேண்டும் என்று சொன்னால், அதற்காக,

அவசாத்திற்காக விற்கக்கூட முடியாமல்--இன்று பதிவுத் துறை அலுவலகத்திலே பதிவுகூட செய்யாமல்--இருந்துகொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுவிட்டன. ஏற்கெனவே registration செய்யப்பட்டு விட்டது இன்னும் release ஆகாமல் அங்கே இருந்துகொண்டிருக்கின்றன. N.O.C. வாங்கி வந்தால்தான் அதை —release செய்வோம் என்று சொல்கிற காரணத்தினாலே N.O.C-யை உள்ளாட்சித் துறை மூலம், நகராட்சியோ பேரூராட்சியோ வழங்காத காரணத்தினாலே, பல பத்திரங்கள் இன்னும் விடுவிக்கப்படாமல் இருந்துகொண்டிருக்கின்றன. இந்த Real Estate Business-க்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று சொன்னால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மீண்டும் இன்றைக்கு துறைகளை அழைத்து—ஏன் என்றால் வீட்டு வசதித் துறை ஓரிடம் இருக்கிறது. பிறகு உள்ளாட்சித் துறை இந்த நிர்வாகத்தை நடத்திக்கொண்டிருக்கிறது. இதற்கெல்லாம் முதல்வர் அவர்கள்தான் கொஞ்சம் எப்படியாவது ஒரு விடிவை ஏற்படுத்தி Real Estate Business-க்கு--ஏன் என்றால் பணப்புழக்கம் வரும் வரும் என்பவர்களுக்கு இன்னும் மனப்புழுக்கம்தான் இருந்து கொண்டிருக்கிறதேயொழிய பணப்புழக்கம் முழுமையாக வந்து சேரவில்லை. Real Estate Business இன்னும் pick up ஆகாமல் இருந்துகொண்டு இருக்கக்கூடிய நிலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்து இந்தக் காலக்கெடுவை நீட்டித்து, மீண்டும் வரன்முறை செய்வதற்கு காலக்கெடு அளிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-45

சென்னையிலே கூட நிறையபேர் அவர்கள் அனுமதியில்லாமல் வீடுகள் மற்றவையெல்லாம் கட்டிவிட்டார்கள். அதற்கு காலக்கெடு நீட்டித்துக் கொடுத்து சென்ற ஆண்டு 6 மாதத்தோடு நீங்கள் முடித்துவிட்டீர்கள். நம்முடைய அரசுக்கு அதிலே கொடுத்திருக்கிற தொகையோ வெறும் ரூ.179 கோடி. ஆனால் பல வீடுகள் 90 சதவிகித வீடுகள் இன்னும் வரன்முறை செய்யப்படாமல் அப்படியேதான் இருந்துகொண்டிருக்கின்றன. ஏனென்றால் அதற்கு rate ரொம்ப அதிகம். நாங்களும் பலமுறை இந்த அவையிலே எடுத்துச்சொல்லிவிட்டோம். ஆந்திரா மாடல் என்று எங்களுக்கெல்லாம் சொல்லி, அந்த மாடலை



பின்பற்றுங்கள் என்று சொன்னோம். முன்பு இருந்த ஆட்சியும் சரி, இது ஆந்திரா மாடல், அது, இதற்கு ஒத்துவராது என்று கை விட்டுவிட்ட காரணத்தினாலே நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதைத்தான் rate-களை நீங்கள் ஒரு sq.metre-க்கு இவ்வளவு என்று வைத்திருக்கிற rate -ஐக் குறைத்து இருக்கிற நிலையில் கட்டிவிட்ட வீடுகளை இடிக்கப்போவதில்லை. பணமும் அரசுக்கு வந்தபாடில்லை. 1,000 கோடி ரூபாய் நம் C.M.D.A. மூலமாகவே, இதை வரன்முறை செய்வோம் என்று சொன்னால், சென்னையிலே கூட ரூ.1,000 கோடி வந்துவிடும். நிதி நெருக்கடி, நெருக்கடி என்று தவித்துக் கொண்டிருக்கிற இந்த அரசு இதில் எப்படியாவது வரன்முறைக்கு வழிவகுத்து ரூ.1,000 கோடி இதிலே பெறுவதற்கு ஒரு வழியை நாங்கள் ஆலோசனையாகச் சொல்கிறோம். அதை ஏற்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கோவை மாநகராட்சி போன்று மற்றும் இருக்கக்கூடிய மாநகராட்சிகளை எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், சென்ற 30-ஆம் தேதியோடு காலக்கெடு, வரன்முறை செய்வதற்கான காலக்கெடு ஏற்கெனவே முடிந்துவிட்டது. கோவையிலே எடுத்துக்கொண்டோமென்று சொன்னால், ஒரு sq.metre-க்கு ரூ.300 approved layout-க்கு என்றும் unapproved layout-க்கு ரூ.500 sq.metre என்றும் ஏற்கெனவே ஒரு இடத்தில் நீங்கள் value fix செய்தீர்கள். ஆனால் அங்கே இருக்கக்கூடிய மக்கள் இதிலே அந்த அளவுக்கு தொகை அதிகமாக இருக்கிறது என்று, அதுவும் ஓரளவுக்கு நகராட்சி மாதிரிதான். அங்கே இன்னும் சொல்லப்போனால், மாநகராட்சிக்கு உள்ளே சில கிராமங்களும் கலந்துவிட்டன. அது கிராமங்களாக இருந்துகொண்டிருக்கிற காரணத்தினாலே அந்த இடத்திலே பணத்தைக் கொடுக்க முடியவில்லை. கோவையிலே இருக்கக்கூடிய மக்கள் approved layout-க்கு Sq. Metre-க்கு 30 ரூபாய் என்றும் அதேபோல் unapproved layout-க்கு 50 ரூபாய் என்றும் வைத்தால்தான் நாங்கள் இதிலே பெருவாரியாக எங்களுடைய மனுக்களைக் கொடுத்து நாங்கள் regularise செய்து கொள்வோம் என்கின்ற கருத்தை அங்கே இருக்கக்கூடிய மக்கள் சொல்கிறார்கள். இதேநிலைதான் மற்ற மாநகராட்சிகளுக்கும்கூட. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு ஒருவழிவகை காண வேண்டும். பல வீடுகள் இன்னும் unapporved, approved-இரண்டுக்குமே புதிய மனுக்களே வரவில்லை. ஆகவே இதற்கு ஒரு வழியைக் கண்டு இவற்றை எல்லாம் வரன்முறைப்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

Director of Town and Country Planning அலுவலகத்தை இங்கே வைத்திருக்கிறோம். இங்கே எதற்கெடுத்தாலும் கிராமத்தில் இருக்கிறவர்களோ அல்லது பேரூராட்சியில் இருக்கிறவர்களோ—நகரத்தில் இருக்கக்கூடியவர்களோ—இங்கே வந்து 1996 வரை பார்த்தோம் என்று சொன்னால் அப்போது இதே அரசு மாவட்ட அளவிலேயே Director Office-க்கு வராமல் அங்கேயே அந்த அதிகாரத்தை நீங்கள் பிரித்துக் கொடுத்து, அதை approve செய்து கொள்ளலாம் என்கிற நிலையை நாம் உருவாக்கினோம். பிறகு எல்லா மனுக்களுக்கும் ஒரு கிராமத்தில் இருக்கிறவர்கள் இங்கே சென்னைக்கு வந்து எல்லாவற்றையும் approve செய்து கொண்டு போவது என்பது — அந்த Layout approve செய்வது மிகச் சிரமமாக இருக்கிற காரணத்தினால் நான் மாண்புமிகு முதல்வரைக் கேட்டுக் கொள்வது எல்லாம், இந்த அதிகாரத்தை Director Office வரை நாம் வைத்துக் கொள்ளாமல் ஆங்காங்கே இருக்கிற Deputy Director of Town and Country Planning அளவுக்கே நீங்கள் பிரித்துக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், இந்தப்பணி மிக எளிதில் முடிந்துவிடும். நமக்குக் கிடைக்கக்கூடிய வருவாயும் ஓரளவுக்கு அந்த விதத்திலே கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இந்த அதிகாரத்தைப் பிரித்துக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்த அளவில் அகல காலை வைத்துவிட்டு பல இடங்களில், மதுரையிலே மட்டும் கிட்டத்தட்ட 1,000 வீடுகள் விற்கப்படாமல் இருக்கின்றன. சரி, விற்கப்படாமல் இருக்கக்கூடிய வீடுகளை நாங்கள் அரசு உறுதிமொழிக் குழு சார்பாக அவற்றைப் பார்வையிட்டோம் என்று சொன்னால் அங்கே வீடு உயரத்திற்கு புதர் வளர்ந்து இருந்தது. பல வீடுகள் crack—வெடிப்பு விட்டிருந்தது. அதனுடைய கலர் பொலிவிழந்து விட்டிருந்தது. நாங்கள், அங்கேயிருந்த E.E. போன்றவர்களை எல்லாம் அழைத்து இப்படி இருந்தால் யார் வந்து வாங்குவார்கள். நீங்கள் இந்த வீட்டு வெடிப்பை ஓரளவுக்கு அடைத்து முள்ளையெல்லாம் வெட்டி, அதில் சாலைகள் போட்டுக் கொடுத்தால்தான் விற்கமுடியும் என்று சொன்னோம். ஏனென்றால் ரோடு போட்டுக் கொடுத்ததெல்லாம் சரியாக இல்லை. ஆக, இப்படி எல்லாம் இருந்துகொண்டிருக்கிறபோது...

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே கட்டப்பட்ட வீடுகளுக்கு பல இடங்களிலே விலை அதிகமாக இருக்கிறது. வாங்க முடியாத நிலையெல்லாம் இருக்கிறது. ஆகவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர்



புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பதவி ஏற்றவுடன் அந்த விற்கப்படாத வீடுகளையெல்லாம் உடனடியாக விற்பதற்கான திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்ற வகையிலே இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு எந்தெந்த வீடுகளெல்லாம் விலை அதிகமாக இருக்கிறதோ, அந்தப் பகுதியினுடைய சராசரி சந்தையின் விலை எப்படியிருக்கிறது என்பதை ஆராய்ந்து, எதனால் இந்த விலை ஏற்றங்கள் ஏற்படுகின்றன என்பதை ஆராய்ந்து, அதை என்னென்ன முறையிலே குறைத்தால், உடனடியாக விற்பனை செய்ய முடியும் என்ற வகையிலே, இன்றைக்குக் கமிட்டியை அமைத்து, உடனடியாக விற்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்றைக்கு உத்தரவிட்டு, அந்தப் பணிகள், ஏறக்குறைய 10 பகுதிகளிலே விலைகள் குறைப்பு செய்து, விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-50

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட— (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடு) எழுந்துநின்று சொல்லுங்கள். நான் வேண்டுமானால் உட்கார்ந்துகொள்கிறேன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, எந்தெந்த இடங்களில் உடனடியாக விற்கும் என்ற அடிப்படைகூட தெரியாமல் ஏதோ பணம் வருகின்றது என்ற வகையிலே தரமற்ற வீடுகளையெல்லாம் ஒவ்வொரு பகுதியிலும் கட்டி, அதை எந்த வகையிலே குறைத்து விற்க வேண்டும் என்ற வகையிலே இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தக் கமிட்டியை அமைத்திருக்கின்றார்கள். ஆகவே மதுரையிலே கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே கட்டப்பட்ட வீடுகளையெல்லாம் நான் நேடியாகச் சென்று பார்த்தேன். அந்தப் பகுதியிலே வீடுகளெல்லாம் பழுதடைந்து, அந்த நிலையினுடைய விலைக்குத்தான் விற்க முடியுமோ என்ற நிலையெல்லாம் இருந்தது. அங்கே சென்று, அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அந்தப் பகுதியிலே குறுகிய வகையிலே ரோடுகள் போட்டால்

அதிகமான விலைக்கு விற்கலாம் என்ற வகையிலே பல திட்டங்களை அறிவுறுத்தி, இன்றைக்கு அதிகாரிகள் தலைமையிலே அந்த முடிவை எல்லாம் எடுத்து, மதுரையிலே இருக்கின்ற அந்த வீடுகளை விற்பதற்கான வழியைக் கண்டு இருக்கிறோம் என்பதை உறுப்பினர்களுக்கு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை விளக்கக் குறிப்பிலேகூட அமைச்சர் அவர்கள், இப்போது கல்யாண மண்டபம் போன்ற பகுதியிலே, சமுதாயக் கூடங்களிலே எல்லோரையும் வரவழைத்து வீடுகளையெல்லாம் விற்பனை செய்திருக்கக்கூடிய நிலையை விளக்கியிருக்கிறீர்கள். இருந்தாலும்கூட அது ஒரு 10 சதவிகிதம்கூட விற்று இருக்காது. இந்த கட்டப்பட்ட வீடுகள் தாமற்ற வீடுகள் என்கின்ற நிலை இப்போது உங்களுடைய பதிலில் இருந்தே தெரிகிறது. அப்படியிருக்கும்போது இப்போது rate-களை நீங்கள் மிகவும்.....

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவாவர்களே. கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தின்போது கட்டக் கூடாத இடங்களில், மக்கள் குடியேற விரும்பாத இடங்களில் (மேசையைத் தட்டும் ஒலி) பொதுவாக மக்கள் விரும்பாத இடங்களில் மிக மோசமான வகையில் தரமே இல்லாத, தாமற்ற கட்டடங்களைக் கட்டி இருக்கிறார்கள். இந்த அரசு வந்தபிறகு எவ்வளவோ முயற்சி செய்தும் இந்த வீடுகளை விற்க முடியவில்லை. சில வீடுகள்தான் விற்கக்கூடிய நிலையிலாவது இருக்கின்றன. ஆனால் பெரும்பாலானவை, நீங்களே தெரிவித்தது போல தெரிப்பு விட்டு, பழுதடைந்து, அதற்குள்ளேயே பாழ் அடைந்து, சிதிலம் அடைந்து யாருமே குடியிருக்க முடியாத நிலையில் இருக்கின்றன. உண்மையைச் சொல்ல வேண்டும் என்றால், இந்த வீடுகளை இலவசமாகக் கொடுத்தால் கூட யாரும் அங்கே போய் குடியிருக்கத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த நேரம் இந்த வீடுகள் இடிந்து விழுந்துவிடுமோ என்று மக்கள் பயப்படுகிறார்கள். ஆகவே தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட வீடுகளை இலவசமாகக் கொடுக்க இந்த அரசு முன்வந்தால் கூட யாரும் அந்த வீடுகளை பெற்றுக்கொள்ளவோ, அவற்றில் குடியிருக்கவோ தயாராக இல்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் தெரிவித்ததைப் போல என்ன செய்யலாம் என்பது குறித்து அரசுக்கு ஆலோசனை வழங்க ஒரு குழு



அமைக்கப்பட்டிருக்கிறது. மேலும், இந்தத் தரமற்ற, யாருமே குடிபோக முடியாத வீடுகளை எல்லாம், விற்க முடியாத வீடுகளை எல்லாம், இடித்து விடலாமா என்றுகூட இந்த அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த சிதிலம் அடைந்து, பாழடைந்த கட்டடங்களை, வீடுகளை வைத்துக்கொள்வதால் எந்தக் காலத்திலும், யாருக்கும், எந்தப் பயனும் இல்லை. ஆகவே பயன்படுத்த முடியாத அந்த வீடுகளை இடித்துவிட்டு அந்த வீட்டுமனைகளையாவது விற்கலாமா என்றுகூட இந்த அரசு ஆராய்ந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியம் இப்போது இந்த இடிந்துபோன வீடுகளை எல்லாம் விற்பதற்கு ஒரு குழு போட்டிருப்பதாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே தெரிவித்திருக்கிறார்கள். சில சரியான வீடுகளாக இருந்தாலும் கூட இந்த அளவிற்கு—ஏன் என்றால் பார்த்தவுடன் அதை வாங்கும் எண்ணம் யாருக்கும் இல்லாத ஒரு சூழ்நிலையில் இருக்கிற காரணத்தினால் விலையைக் கொஞ்சம் குறைத்து விற்றால்தான் வாங்குவார்கள். நம் வீட்டு வசதி வாரியத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், நூல் பிடித்த மாதிரி அவர்கள் தற்போது இருக்கக் கூடிய வட்டி 17 சதவிகிதத்தை நம்முடைய தலையிலே ஆண்டுக்கு ஆண்டு ஏற்றிக்கொண்டே போகிற காரணத்தினாலே அந்த வீடுகளினுடைய விலையும் ஏறிக்கொண்டே போகிறது. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் இப்போது தலையிட்டு அதிகபட்சம் குறைத்து, அதுவும் பாதிக்குப் பாதியாக குறைத்தாலாவது அது விற்கும். அந்த அளவிற்கு ஏதாவது நடவடிக்கையை எடுத்து விற்பதற்கு நீங்கள் ஒரு முன்னோடித் திட்டத்தை வகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 4-55*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலையைக் குறைப்பது ஒரு பிரச்சினையே அல்ல. எவ்வளவு வேண்டுமானாலும் குறைப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. நான் ஏற்கெனவே தெரிவித்ததைப் போல அதை free-யாகக் கொடுத்தால்கூட— இலவசமாகக் கொடுத்தால்கூட, யாரும் வாங்குவதற்குத் தயாராக இல்லை என்பதுதான் உண்மை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே வீட்டு வசதி வாரியம் மூலமாக ஏற்கெனவே கொட்டிவாக்கம் என்கிற இடத்திலே திருவான்மியூரில் 134 பத்திரிகையாளர்களுக்கு வீடுகள் எல்லாம் கட்டிக் கொடுத்து, அரசு மானியமாக ரூ.20 இலட்சம் கொடுத்தபோது, ஓர் ஆண்டு காலதாமதமாக அவர்களுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறது. வீட்டு வசதி வாரியம் அதற்கு ஒரு கணக்கு போட்டு ரூ.6.8 இலட்சம் வட்டியை நீங்கள் கட்டினால்தான், நாங்கள் கிரயப் பத்திரத்தைக் கொடுப்போம் என்று சொல்லி அவர்கள் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். பத்திரிகையாளர்கள், ஏற்கெனவே இந்தியன் வங்கியில் கடன் வாங்கி அதையே கட்ட முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய அரசு மானியம் ஏனென்றால் இதுவும் அரசு, நம்முடைய வீட்டுவசதி வாரியமும் ஒரு அரசுத் துறையைச் சார்ந்ததுதான்-- ஓர் ஆண்டு காலம் தள்ளி release செய்யப்பட்ட காரணத்தாலே அதற்கு ரூ.6 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வட்டி என்கிற நிலை வந்திருப்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். எனவே அதைத் தள்ளுபடி செய்து பத்திரிகையாளர்கள் 134 பேருக்கு அந்தக் கிரயப் பத்திரங்களை - sale deed-அவர்களுக்குப் போய்ச் சேருவதற்கு ஆணையிட வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள்ளே பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** நான் இன்னும் மானியக் கோரிக்கைகளுக்குள்ளேயே போகவில்லை. நிறைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. பதினைந்து நிமிடங்களுக்கு மேலே இப்போதே ஆகிவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** அதிலே நிறைய குறுக்கீடுகள் வந்தன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இரண்டு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுகிறேன்.

கோவையில் இருக்கக்கூடிய வீட்டு வசதி வாரிய வீடுகளிலே பல இடங்களிலே தலைமீது அந்தக் கூரை எல்லாமே கீழே விழுந்துவிடக்கூடிய ஒரு நிலைமை வந்துவிடுகிற காரணத்தினால்—



அவரைப் பந்தல் போல், கம்பியிலே பந்தல் போட்டு சில குடியிருப்புகள் இருப்பதாக அங்கு இருக்கக்கூடியவர்கள் எல்லோரும் தெரிவிக்கிறார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நான் சொன்னதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்களும் ஆமோதித்துக் கொண்டிருக்கிறார். அதைத்தான் சொன்னேன்; இலவசமாக இந்த வீடுகளை கொடுத்தால்கூட, நமக்கு வீட்டைப் பெறுவதைவிட, உயிரோடு இருப்பதுதான் முக்கியம் என்று கருதித்தான் யாரும் அங்கே போகமாட்டேன் என்கிறார்கள். நீங்களே சொல்கிறீர்கள், தலைமீதே கூரை இடிந்து விழுகிறது என்று.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் தெரிவித்துக்கொள்வது, அவை விற்கப்படாத வீடுகள். ஆனால் இப்போது கோயம்புத்தூரில் இருப்பது விற்கப்பட்ட வீடுகள். ஏற்கெனவே குடியிருக்கிறார்கள். அதாவது, வாடகைக் குடியிருப்புகளிலே இருந்துகொண்டிருக்கிற காரணத்தாலே அங்கே இப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சிலர், ஏமாந்து இப்படிப்பட்ட வீடுகளை வாங்கிவிட்டதால்தான், இப்போது யாரும் ஏமாறமாட்டேன் என்கிறார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாவைப் பொறுத்த அளவிலே, நம்முடைய தமிழகம் பல வளங்களைப் பெற்றிருக்கிற ஒரு மாநிலம். கர்நாடகத்திலே அவர்கள் வெறும் சரவணபெலகுளா போன்ற சில இடங்களை வைத்துக்கொண்டு, அவர்கள் இப்போது World Tourism Map-லே இடம் பிடித்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழகத்தில் நீளமான கடற்கரை இருக்கிறது. அழகிய கோபுரங்களைக் கொண்டிருக்கிற ஆலயங்கள் இருக்கின்றன. ஒகேனக்கல், குற்றாலம் போன்ற நீர்வீழ்ச்சிகள் இருக்கின்றன. மலைகளின் அரசி என்று சொல்லக்கூடிய நீலகிரி போன்ற அழகிய மலைகள் இருக்கின்றன. ஏழைகளின் ஊட்டி என்று அழைக்கப்படும் எங்களுக்குத் தகுந்தாற்போல் ஏலகிரி என்கிற ஒரு மலை எங்களுடைய மாவட்டத்திலே இருக்கிறது. அடுத்து, ஏற்காடு,

என இப்படி பல மலைகள் இருக்கின்றன. இந்த அளவிற்கு அழகிய அந்த வளம் நம்முடைய தமிழகத்தில் இருந்தும்கூட இன்னும் World Tourism Map-ல் நம்முடைய மாநிலம் இடம் பெறவில்லை என்று அறிகிறேன். ஆகவே நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கு நடவடிக்கை எடுத்து Tourism-ஐ இன்னும் எவ்வளவு வளப்படுத்த முடியுமோ, அவற்றையெல்லாம் செய்து, நீங்கள் அடிப்படை வசதிகளைப் பெருக்கித் தந்து, Tourism Map-லே நம்முடைய தமிழகம் இடம் பெறுவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*1997 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் தேதி குஜராத்திலிருந்து, குஜராத்தினுடைய சுற்றுலாத் துறை அமைச்சர் மாண்புமிகு ஹரீத் அவர்கள் இங்கே வருகை தந்து...*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்தில் இந்த Tourism மானியக் கோரிக்கைமீது பேசுகின்றபோது மாண்புமிகு ஞானசேகரன் போன்ற உறுப்பினர்கள் எல்லோரும் தமிழ்நாட்டில் Tourism துறையைப் பெருக்குவதற்கு, வளர்ப்பதற்கு, உலக Tourism Map-ல் இடம் பிடிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எல்லாம் பேசுகிறார்கள். நம்முடைய கடற்கரையைப்பற்றிப் பேசுகிறார்கள்.

உதாரணத்திற்கு, சென்னையில் இருக்கின்ற மெரீனா கடற்கரை உலகத்திலேயே இரண்டாவது நீளமான கடற்கரை. முதலாவது நீளமான கடற்கரை அமெரிக்காவில் California-வில், Long Beach-ல் இருக்கின்றது. உலகத்திலேயே இரண்டாவது நீளமான கடற்கரை நம்முடைய சென்னை மெரீனா பீச்தான். ஆனால் அமெரிக்காவிற்குச் சென்று California Long Beach எப்படி இருக்கிறது என்று பாருங்கள். இங்கே நம்முடைய மெரீனா பீச் எப்படி இருக்கிறது என்று பாருங்கள். சுற்றுலாத் துறையை வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும். இன்னும் சுற்றுலாப் பயணிகள் வர வேண்டும்; கடற்கரையை develop செய்ய வேண்டும் என்கிறீர்கள். ஆனால் கடற்கரையை அழகுபடுத்த நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னாலே, உடனே நீங்களே அதை ஆட்சேபிக்கிறீர்கள்; எதிர்க்கிறீர்கள்; போராட்டங்களைத் தூண்டி விடுகிறீர்கள். இந்த அரசை எதுவும் செய்ய விட மாட்டேன் என்கிறீர்கள். இரண்டையும் நீங்களே சொன்னால் எப்படி? (மேசையைத் தட்டும் ஒலி)



பிற்பகல்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உண்மையிலேயே அழகுபடுத்துவதை நாங்கள் எந்த வகையிலும் எதிர்க்கவும் இல்லை; அதை எதிர்த்துப் போராடவும் இல்லை. அங்கு வசதியோடு வாழக்கூடிய மக்கள், ஏதோ நாம் அவர்களைக் குடிபெயர்த்து எங்கேயோ அனுப்பிவிடுவோம் என்கிற அச்சத்தில்தான் சிலபேர் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். அதுவும் நாங்கள் தூண்டவில்லை. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் நாங்கள்தான் இதற்குப் போராட்டம் செய்ததைப்போல் இங்கே சொல்கிறீர்கள். அழகுபடுத்துவதிலே எங்களுக்கு எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆகவே நீங்கள் அதை அழகுபடுத்துவதில் முனைப்போடு செயல்பட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். முடித்துவிடுகிறேன்.

எங்களுடைய வேலூரில் பார்த்தோம் என்று சொன்னால் Tourism Officer மாமல்லபுரத்திலே இருக்கிறார்கள். வேலூரில் சி.எம்.சி. மருத்துவமனை இருக்கிற காரணத்தினாலே floating population பல வட மாநிலங்களிலிருந்து நிறையபேர் ஆஸ்பத்திரிக்கு வரக்கூடியவர்கள் குடும்பத்தோடு அங்கு வந்து தங்கி இருக்கிறார்கள். அவர்கள் நம்முடைய தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆலயங்களை, பக்கத்தில் இருக்கக்கூடிய திருப்பதி போன்ற கோயில்களுக்குச் செல்வதிலேயே மிக ஆர்வம் கொண்டு அவர்கள் டாக்சி பிடிக்க முடியாமல் சில டாக்சிகாரர்கள் ஏமாற்றுகிற நிலை எல்லாம் இருந்து கொண்டு இருக்கிறது. ஆகவேதான் ஒரு சுற்றுலா அலுவலகத்தை எங்களுடைய வேலூர் கோட்டை கோயிலிலேயே நீங்கள் வைத்து அங்கேயே ஒரு Tourism Circuit-ஐ வைத்தீர்கள் என்று சொன்னால், பக்கத்தில் இருக்கக் கூடிய திருவண்ணாமலை, திருப்பதி, காஞ்சிபுரம் போன்ற எல்லா பகுதிகளையும் சுற்றி வரக்கூடிய வகையில் ஐந்து பஸ் தினந்தோறும் அங்கிருந்து இந்தத் துறை மூலம் இயக்குவோம் என்று சொன்னால், துறைக்கும் இலாபம் வரும். அங்கிருந்து வெளி மாநில மக்களும் அடிக்கடி அங்கே சென்று அந்த ஆலயங்களைத் தரிசிக்க...

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் பகுதியில் சுற்றுலாத் தகவல் மையம் திறப்பதற்காக ரூ.3.60 இலட்சத்தில் கட்டடம் கட்டப்பட்டு பணிகள் அனைத்தும் தற்போது முடிவடைந்து உள்ளன. வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவரே

துறைக்குத் தெரிவித்துள்ளார். புதிதாக திறக்கப்பட இருக்கிற சுற்றுலாத் தகவல் மையத்திற்குத் தேவையான பணியாளர்களும் நியமிக்கப்படுவதற்கான உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் நீங்கள் அதை ஒரு சுற்றுலா அலுவலகமாகக் கொண்டு ஒரு அலுவலகமாகவே தொடர்ந்து நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன். செய்தி விளம்பரத் துறையிலிருந்து ஒரேயொரு தகவல் செய்தி விளம்பரத் துறையைப் பொறுத்த அளவில்...

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா அலுவலருடைய அலுவலகம், சென்னையிலும் மாமல்லபுரத்திலும் இருக்கிறது என்பதற்காக வேலூரில் தேவையில்லை என்று அரசு கருதுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மாவட்டத்திற்கு ஒன்று என்ற நிலையில் ஒரு சுற்றுலா அலுவலகத்தைத் திறந்து வைத்தீர்கள் என்று சொன்னால்— நம்முடைய இந்த ரோட்டில் பார்த்தோம் என்று சொன்னால், எங்களுக்குப் பக்கத்திலே மேற்கு வங்கத்திலிருந்து வந்து இங்கே அலுவலகத்தை வைத்து, அங்கு ஒரு Youth Hostel என்று வைத்து பிரமாதமாக வைத்துக் கொண்டு, அங்கிருந்து வரக்கூடிய மேற்கு வங்க ஆட்களுக்கு எல்லாம் சுற்றுலாத் தலங்களைக் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அதேபோல நீங்கள் மாவட்டத்திற்கு ஒன்று என்று வைத்தால் தமிழகத்தைச் சேர்ந்த நாங்களாவது பல இடங்களுக்குப் போய் வரக்கூடிய வாய்ப்பு இருக்கும். மற்ற மாநிலங்களில் சுற்றுலா மையங்களைப் பொறுத்த வரையில் நீங்கள் ஒரு நான்கு மாநிலங்களுக்குத்தான் வைத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய 29 மாவட்டங்களில் 16 சுற்றுலா அலுவலகங்கள்தான் இருக்கின்றன. அதற்காகத்தான் மாவட்டந்தோறும் இப்படி Information Centre (தகவல் மையம்) வைத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்தி விளம்பரத் துறையைப் பொறுத்த அளவில்..



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை ஒரு மணித்துளியில் முடித்துவிடுங்கள். ஒரு தகவல்தான் என்று சொன்னீர்கள். சொல்லி பேச்சை முடித்துவிடுங்கள். அதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயகத்தினுடைய நான்காவது தூண் என்று சொல்லப்படுகிற நம்முடைய பத்திரிகையாளர்களுடைய வசதியை நாம் நிச்சயமாக கொஞ்சம் பார்த்து ஆக வேண்டும். வாரப் பத்திரிகையாளர்களுக்கு இந்த accreditation pass என்பது கொடுக்கப்படவில்லை. தினப் பத்திரிகையாளர்களுக்கு மட்டும் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அந்த accreditation pass நீங்கள் கொடுத்தால்தான் அவர்கள் ரயிலிலே பயணம் செய்யக் கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும். ஏனென்றால் Press Pass மட்டும்தான் கொடுப்பதாகச் சொல்கிறார்கள். ஆகவே அந்த வாரப் பத்திரிகையிலேகூட தரமான வாரப் பத்திரிகைகள் எல்லாம் நம்முடைய தமிழகத்திலே இருக்கின்றன. அவற்றை எல்லாம் நீங்கள் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு Pass கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல நம்முடைய பத்திரிகையாளர்கள்மீது இப்பொழுது நம்முடைய அரசு 37 வழக்குகளைப் போட்டு இருப்பதாகச் சொல்கிறார்கள். அவற்றையெல்லாம்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள், முடித்துவிடுங்கள். திரு. ராதாரவி.

**திரு. சி. ஞானசேகரன்:** ஒரே ஒரு தகவல்தான் பேசிவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்துவிடுங்கள். நேரம் ஆகிறது. இன்னும் ஆறு பேர் பேச வேண்டும். (குறுக்கீடு) பேசி முடித்து விடட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** முடித்துவிடுகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, film division எங்களை எல்லாம் படம் எடுக்கிறபோது, நாங்கள் பேசிக் கொண்டு இருக்கிறபோது திடீர் என்று குரல்வளையை நெரிப்பதுபோல பாதியிலேயே கட் பண்ணி விடுகிறார்கள். ஆகவே நாங்கள் பேசிய பேச்சை எல்லாம் கொஞ்சம் முழுமையாக நீங்கள் படம் எடுக்க வேண்டும். ஏனென்றால் நாங்கள் பேசத் தெரியாமல் பாதியிலே விட்டு விட்டதாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டசபையில் நடக்கிறதை எல்லாம் காட்ட முடியாது; Edit பண்ணினால்தான் முடியும். நானே edit பண்ணுகிறேனே. உங்கள் பேச்சை. (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து எங்களை எல்லாம் முழுமையாகக் காட்டக்கூடிய அளவுக்கு film division அறிவுறுத்தப்பட வேண்டும். இல்லையென்று சொன்னால் நாடாளுமன்றத்தில் இருப்பதைப்போல நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் முழுமையாகவே இந்த அவையினுடைய நடவடிக்கையினைக்கூட நீங்கள் எடுத்துக் கொடுத்து மக்களுக்கு எங்களுடைய பிரச்சினையை உணர்த்த வேண்டும். ஏனென்றால் நாங்கள் எதிர்க் கட்சி வரிசையிலே இருக்கக் கூடியவர்கள்கூட முழு கருத்தைச் சொல்கிறோம் என்ற அளவிற்கு முழுமையான செய்தி மக்களைச் சென்று அடையக்கூடிய வாய்ப்பை நீங்கள் உருவாக்கித் தர வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன். நன்றி.

*பிற்பகல் 5-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராதாரவி.

***திரு. ராதாரவி:** பெருமதிப்பிற்குரிய இந்தப் பேரவையின் தலைவர் அவர்களுக்கு என்னுடைய முதல் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒரு விரல் நீட்டினால் பேரறிஞர் அண்ணாவைப்போல் இன்று காட்சி தரும், இரு விரலை நீட்டினால் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களைப்போல் இன்று காட்சி தரும். பகுத்தறிவு சிந்தனையிலே தந்தை பெரியாரைபோல் இன்று காட்சி தரும். அரசியல் சாணக்கியத்துவத்தில் மூதறிஞர் ராஜாஜியைப் போல் இன்று காட்சி தரும். ஒரு நகைகூட அணியாமல சாதாரண பெண்மணியாக வாழ்ந்துகாட்டுவதில் பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப்போல் இன்று காட்சி தரும், வீரத்திலே ஐயா முத்துராமலிங்கத் தேவரைபோல் இன்று காட்சி தரும், சிறுபான்மை மக்களுக்கு என்றும் உறதுணையாக இருப்பேன் என்று கூறுவதில் ஐயா காயிதே மில்லத்தைப்போல் இன்று காட்சி தரும், ஆதிதிராவிட மக்களுக்கு என்றும் உறதுணையாக இருப்பேன் என்று கூறுவதில் ஐயா அம்பேத்கரைப்போல் இன்று காட்சி தரும், அத்தனை பள்ளிக்கூடங்களிலும் தமிழ் முதல் பாடமாக இருக்க வேண்டும் என்று கூறுவதில், ஐயன் வள்ளுவனாக வாழ்ந்துகொண்டிருக்கும், பெண்கள் எப்போது நடுநிசியிலே தைரியமாக நடக்கிறார்களோ,



அன்றுதான் உண்மையான சுதந்திரம் என்று கூறினார் அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள். அதற்கு ஏற்ப மகளிர் காவல் நிலையம் அமைத்து இன்று பெண்கள் நடுநிசியில் தைரியமாகச் செல்ல நினைக்கிறார்கள் என்றால் அதற்கு முழு பொறுப்பாக இருக்கும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கி (மேசையைத் தட்டும் ஒலி) என் உரையை ஆரம்பிக்கிறேன்.

செய்தி மற்றும் விளம்பரம் மானியத்தில் என்னைப் பேச வைத்ததற்கு என்னுடைய நன்றியைக் கூறி, பத்திரிகையாளர் குடும்ப நிதி உதவித் திட்டம், பக்கம் 5. ஏனென்றால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையாளர்களுக்கு அதைச் செய்யுங்கள், இதைச் செய்யுங்கள் என்று சொல்லிக் கொண்டிருந்தார்களேயொழிய, எதைச் செய்திருக்கிறார்களோ, அதைச் சொல்லவில்லை என்ற வருத்தம்தான் எனக்கு இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி மறைந்த பத்திரிகையாளர்களின் குடும்பம் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவி நிதி ரூ.50,000-லிருந்து ரூ.2 இலட்சமாக 1-9-2001 முதல் உயர்த்தப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது ஒரு நல்ல திட்டம் இல்லையா? அதைப்பற்றி அவர் சொல்லிவிட்டு அடுத்ததைச் சொல்லியிருக்கலாம். நல்லதையெல்லாம் விட்டுவிட்டு, எது கெட்டதோ அதை மட்டும் சொல்கிறார்கள் என்ற வருத்தம்தான் எனக்கு.

அதேபோல் ஓய்வுபெற்று, நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு, 1986-லிருந்த ரூ. 250 மேலும் அது ரூ. 2,000 ஆக மாற்றப்பட்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முதலமைச்சரானவுடன்தான் அந்த ரூ. 2,000 இன்று ரூ. 3,000-ஆக மாறி 67 குடும்பங்கள் பயன்பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படி அந்த ஓய்வூதியம் பெற்றவர்கள் மறைந்துவிட்டால், இயற்கை எய்தினால் இதுவரை ரூ.500 வாழ்நாள் முழுவதும் அவரின் துணைவியாருக்கு வழங்கப்பட்டது. ஆனால் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்த பிறகுதான் அந்த ரூ.500-ஐ ரூ.1,500-ஆக மாற்றியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும் நிலைமைகள். இதில் ஒரு பெரிய விஷயம் என்னவென்றால், நடிப்பின் இமயமாகத் திகழ்ந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் மறைந்தவுடன் அவர் நினைவாக நினைவு மண்டபம் அமைப்பதற்கு இலவசமாக இட ஒதுக்கீடு செய்து, அதில் தென்னிந்திய நடிகர் சங்கம் கட்டுமானப் பணிகள் மேற்கொள்வதற்கு அரசு ஆணை வழங்கப்பட்டுள்ளது என்றால் அதற்கு மூல காரணம், முழு காரணம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல், கணினி மையம். நடப்பு ஆண்டில் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்காக ஒரு கணினி மையம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.11 இலட்சம் செலவில் அது அமைக்கப்பட்டுள்ளது. இக்கணினி மையத்தின் மூலம் மாணவர்களுக்கு மிக நவீன டிஜிட்டல், தொழில்நுட்பம் மற்றும் உயிரூட்டக் காட்சிகள் அமைக்கும் முறைகள் பயிற்றுவிக்கப்படும் என்பதை அறிந்தவுடன், நான் சினிமாக்காரன் என்பதால, ரொம்ப பாராட்டிக்கொண்டிருந்தேன். ஏனென்றால் எங்கள் குடும்பம் எல்லாம் இன்றைக்கு வாழ்ந்துகொண்டிருக்கிறது என்றால் அதற்கு முழு காரணம் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, சினிமா துறையைப்பற்றி அம்மாவுக்குத் தெரியாதது அல்ல. கலைமகளின் தலைமகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-10

நான் ஒரு சாதாரணமான நடிகன். நடிகனாக இருந்து இன்று இந்த சட்டமன்ற உறுப்பினராக அம்மாவின் தயவில் வந்திருப்பவன். ஆனால் கர்நாடகத்தில் கன்னடப் படங்களுக்கு கேளிக்கை வரி கிடையாது. அதை எப்படி சரி செய்கிறார்கள் என்றால், 70 சதவீதம் கேளிக்கை வரி மற்ற படங்களுக்கு, வெளி மாநில படங்களுக்குப் போட்டு அவர்கள் சரி செய்கிறார்கள். டப்பிங் படங்கள் எதுவும் கர்நாடக மாநிலத்தில் திரையிட முடியாது.

அதேபோல், ஆந்திர மாநிலத்தில் 30 பிரதிகளுக்கு மேல் எடுக்கப்படும் படங்களுக்கு 16 சதவீதம் கேளிக்கை வரி. அதற்குக் கீழே உள்ள படங்களுக்கு 6 சதவீதம் விதிக்கிறார்கள். ஆனால் நம்முடைய தமிழ்நாட்டில் எத்தனை படங்களாக இருந்தாலும் சரி, ரூ.500 கோடி செலவு செய்து ஆங்கிலப் படம் எடுக்கிறார்கள். அதற்கும் சரி, சாதாரண தமிழ்ப் படங்களுக்கும் சரி, 25 சதவீதம் flat rate ஆகப் போடுகிறார்கள். இது பழைய, முந்தைய ஆட்சியில் போடப்பட்டது. அது நடந்துகொண்டிருக்கிறது. அதை பெரிய மனது பண்ணி தாய் உள்ளம் கொண்ட இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மட்டும் நினைத்தால்தான் அதைச் சரி செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்த திருட்டு 'V.C.D.' என்ற உடன்...



**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே ஆய்வு நடத்தி இனிமேல் தமிழ் நாட்டில் டப்பிங் படங்களுக்கு இரட்டை மடங்கு, அதாவது 50 சதவிகிதம் கேளிக்கை வரி போட வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவிட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ராதாரவி:** கேளுங்கள் கொடுக்கப்படும். தட்டுங்கள் திறக்கப்படும். இது உலக நியதியாக இருந்தாலும், அம்மாவைப் பொறுத்த அளவில், சொன்னால் போதும் உடனே நடக்கும். அதுதான் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற நிகழ்ச்சி. இதை உடனே செய்து கொடுத்ததற்காக கலைத் துறையின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து, மேலும் இந்தத் திருட்டு 'V.C.D.'யால்—அம்மா அவர்களே, ரொம்ப சிரமமாக இருக்கிறது. சில நாட்களுக்கு முன்பு மின்சாரத்தைத் திருடுபவர்கள் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்படுவார்கள் என்று இதே அவையில் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். திருட்டு 'V.C.D.' தயாரிப்பதையே தொழிலாகக் கொண்டு ஏகப்பட்ட பணம் சேர்த்து கோடீஸ்வரனாக இன்று வாழ்ந்துகொண்டு இருப்பவர்கள். அந்த வழக்கில் கைதாகி விசாரணையின்போது இவர்களிடம் 'Copy right' பற்றி எதுவுமே கேட்கப்படுவது இல்லை. உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது என்று நீதிமன்றங்கள் கேட்பதில்லை. அதனால், திருட்டு 'V.C.D.' தயாரிப்பவர்கள் வழக்கிலிருந்து தப்பித்துக்கொள்கிறார்கள். இவர்கள் தப்பிக்காத வகையில், சட்டத் திருத்தம் கொண்டுவர வேண்டும். அம்மா அவர்களே, இதை ஏன் நான் உங்களிடம் கேட்கிறேன் என்றால், உங்களால் மட்டும்தான் முடியும். எதற்காக இது உங்களால் மட்டும்தான் முடியும் என்று சொல்கிறேன் என்றால், ஏதோ

ராதாரவி ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர், அதனால் இப்படிப் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். ஏன் உங்களால் மட்டும்தான் முடியும் என்று சொல்கிறேன் என்றால், நவீன திருட்டு ஒன்று 'S.T.D.' பூத்திலே செய்தார்கள், வெளி நாடுகளுக்குத் தொடர்புகொண்டு (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசி முடித்துவிடட்டும். பேசி முடிக்கட்டும் அவர். முடித்த உடனே கேளுங்கள். (குறுக்கீடு)

**திரு. ராதாரவி:** அண்ணே, உங்களைத் தாக்கி எதுவுமே சொல்லவில்லை அண்ணே. பொதுவாகச் சொல்கிறேன். (குறுக்கீடு). அண்ணே, நான் பேசி முடித்துவிடுகிறேன் அண்ணே. அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும். பேசி முடித்த உடனே வாய்ப்பு கொடுக்கிறேன்.

**திரு. ராதாரவி:** மேலும் ஏன் இது உங்களால் மட்டும்தான் முடியும் என்று சொல்கிறேன் என்றால், அம்மா அவர்களே, 'S.T.D.' பூத்திலே நவீன திருட்டு ஒன்று செய்தார்கள். வெளிநாடுகளுடன் தொடர்பு கொண்டு தொலைபேசித் துறைக்கு ரூ.3½ கோடி அளவிற்கு நட்டத்தை ஏற்படுத்தினார்கள். இதை நீங்கள்தான் கண்டுபிடித்து அந்த நபர்களை குண்டர் சட்டத்தில் அடைத்தவர்கள். அதனால் சொல்லிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், செய்தி மற்றும் விளம்பரம் கொள்கை விளக்கக் குறிப்பில் முன்னுரையாக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், அதாவது மக்கள் தொடர்பு என்றால் என்னவென்று ஒரு முன்னுரையிலே சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் மக்கள் தொடர்பு என்பது இரண்டு முக்கியமான செயல்பாடுகளைக் கொண்டதாகும். அவற்றுள், முதன் முதலானது, அரசு சார்ந்த பல்வேறு துறைகளின் திட்டங்களையும் சாதனைகளையும் மற்றும் செய்திகளையும் வெளியிடுவதாகும். செய்திகளை வெளியிடுவது யாருக்கு? பொதுமக்களுக்கு செய்திகளை வெளியிடுவது. அப்பொழுதுதான் அரசாங்கம் என்னென்ன நல்ல திட்டங்கள் செய்துகொண்டிருக்கிறது என்று தெரியும். யார் யார் தவறாகச் சொல்கிறார்கள், பொய்ப் பிரசாரங்கள் பண்ணுகிறார்கள் என்று சொல்வதுதான் மக்கள் தொடர்புத் துறை. இதனால்தான் சில செய்திகளை இங்கே கூறுகிறேன். இந்தப் படைப்பாளி FEFSI என்னவென்றால் FEFSI-யில் —Film Employees Federation of South India-வில் நான் 12 ஆண்டு காலம் உப தலைவராக இருந்தேன்.



அதனால் சொல்லிக்கொள்கிறேன். அன்று இருந்த அரசாங்கத்தில் அது படைப்பாளி FEFSI என்று இரண்டாக உடைந்தபொழுது அந்த FEFSI தொழிலாளர்கள் வேலையில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருந்தபோது ஏறத்தாழ 30,000 குடும்பங்கள்—இதைச் சொன்ன உடனே சிலர் யாராவது நல்ல அறிவாளிகள், என்னைவிட அறிவாளிகள் நிறையபேர் இருக்கிறீர்கள். நீங்கள் உடனே 30,000 குடும்பங்களா, இல்லை 30,000 போரா என்று கேட்டுவிடாதீர்கள். இது உண்மையிலே 30,000 குடும்பங்கள் — 30,000 குடும்பங்களுக்கு மேல் கஷ்டப்பட்டார்கள். அப்போது ஆளுங்கட்சியாக இல்லை புரட்சி தலைவி அம்மா அவர்கள். எதிர்க்கட்சியாக இருந்தார். அந்த நேரத்தில் 30,000 குடும்பங்கள் ஏறத்தாழ ஒரு இலட்சம் பேருக்கு உணவு, உடை அத்தனை உதவிகளையும் செய்தது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-15

அதேபோல ஒரு செய்தி. இந்த Film Employees Federation of South India-வுக்கு என்று சொந்தமாகக் கட்டடம் இல்லை. எப்போது பார்த்தாலும் வாடகை கொடுத்துக்கொண்டு இருக்க வேண்டும். 12 வருடங்களாக ரொம்ப கஷ்டப்படுகிறோம் என்று சொன்னார்கள். ரொம்ப கஷ்டப்பட்டோம். அப்போது நான் நான் அங்கே இருந்தேன். வேறு ஒரு இயக்கத்திலே இருந்தேன். ஆனாலும், கடிதத்தை அம்மாவிடம் கொடுத்தேன். அப்போது அவர்கள்தான் முதலமைச்சர். என்னை வேறு ஒரு இயக்கத்தைச் சேர்ந்தவன் என்றுகூட நினைக்காமல் FEFSI-Film Employees Federation of South India-வுக்கு. அம்மா அவர்கள் முதலமைச்சராக இருக்கும்போது இரண்டு கிரவுண்ட் நிலம் இலவசமாக, அதுவும் வடபழனியில் 100 feet road-ல் கொடுத்தார்கள். இன்றைக்கு சொந்தக் கட்டடம் கட்டிக்கொண்டு ஒவ்வொரு தொழிலாளியும் மார் தட்டிக்கொண்டு சொல்கிறான், எங்களுக்குச் சொந்தக் கட்டடம் இருக்கிறது என்று அவர்கள் பெருமையாகச் சொல்லும்போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது? இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், அம்மா அவர்களே, செய்திக்காகச் சொல்கிறேன். நான் நேற்று டீ குடிக்கப் போனேன். டீ குடிக்கும்போது என்னோடு பல நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். பெயரைச் சொல்லவில்லை. பல நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். அப்போது சொன்னார்கள், என்னங்க, ரொம்ப சூடாக இருக்கிறது, டீ குடிக்கிற இடமே. அம்மாவிடம்

சொல்லி நல்ல இடமாக ஒன்று கட்டிக் கொடுக்கச் சொல்லுங்கள் என்றார்கள். இதைத்தானே சொன்னார்கள் அம்மா, நல்ல இடமாகக் கட்டிக் கொடுக்கிறேன் என்று. அதை வேண்டாமென்று சொல்கிற ஆளே நீங்கள்தானே ஐயா? நாங்கள் என்ன ஐயா செய்ய முடியும் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (சிரிப்பு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**திரு. ராதாரவி:** அண்ணே, தெரியும் அண்ணே, பழனிசாமி அண்ணே, உட்காருங்கள் அண்ணே. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. பழனிசாமி, அதிலே சம்பந்தப்பட்டது நீங்கள்தானா? (சிரிப்பு) (குறுக்கீடு)

**திரு. ராதாரவி:** அண்ணே, பழனிசாமி அண்ணே, நீங்கள் பெரிய அறிவாளி என்று சொல்லிவிட்டேன். கொஞ்சம் உட்காருங்கள் அண்ணே. நான் சாதாரணமான பையன் அண்ணே. அதனாலே அதைச் சொல்லும்போது சொந்தமாகக் கட்டடம் கட்டிக் கொடுப்பார்கள்.

இந்த குயின் மேரிஸ் காலேஜைப்பற்றி நான் சொல்கிறேனே என்று தவறாக நினைக்காதீர்கள். செய்திக் குறிப்பில் இருப்பதனால், செய்திப் பிரச்சினையைச் சொல்கிறேன். அந்த குயின் மேரிஸ் காலேஜிலே, நான் 1972 ஆம் ஆண்டு புதுக் கல்லூரியில் படிக்கும்போது Inter Collegiate Competition-க்கு வரும்போது, 'இப்போதெல்லாம் அந்த department எல்லாம் இடிந்து விடுகிறது. ஏதாவது ஒரு போராட்டத்தையாவது பண்ணி அந்த இடத்தை இடிக்க வேண்டுமென்று சொன்னார்கள்', 1972 ஆம் ஆண்டிலேயே. ஆனால் இப்போது ஏறத்தாழ 30 வருடங்களுக்கு மேலேயே ஆகிவிட்டது. இப்போது இடிக்க வேண்டுமென்று ஆசைப்படுகிறார்கள்; வேண்டாம் என்று சொல்லும்போது கவலையாக இருக்கிறது. ஏனென்றால், அப்போதே சொன்னார்கள் இடிந்து விழுகிறது என்று. அந்த நிலையில் இருக்கிறது என்று நான் சொல்ல, அப்போதுகூட அந்தச் சகோதரர்கள் எல்லாம் சொன்னார்கள், 'இல்லை, இல்லை நாங்கள் ஏன் எதிர்க்கிறோம் என்றால், நிதிப் பற்றாக்குறை இருக்கிறதே, காசு இல்லையே. இந்த நேரத்திலே ஏன் போய் அதை எல்லாம் செய்துகொண்டு' என்று சொன்னார்கள். நான் சொன்னேன்.



கரெக்ட்தான். நீங்கள் அறிவாளி, கரெக்டாகச் சொன்னீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், வீட்டிலே பொங்கல் வருகிறது, தீபாவளி வருகிறது, ரம்சான் வருகிறது, கிறிஸ்துமஸ் வருகிறது; குடும்பத்திலே கஷ்டம் இருக்கும்தான். கஷ்டம் இருந்தாலும் கொஞ்சம் கடன் வாங்கி துணி வாங்கித் தரவில்லையா? பட்டாசு வாங்கி வெடிக்கவில்லையா? அதுமாதிரிதான் என்று சொன்னேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தமாதிரிதான் இது. கொஞ்சம் நல்லது நடக்கும், அரசாங்கம் என்பதும் ஒரு குடும்பம் தானப்பா, ஒரு குடும்பமாக நினையுங்கள் என்று சொன்னேன். ஏன் என்றால் money can build a house but only a woman can build a home என்று ஆங்கிலத்திலே சொன்னார்கள். ஏன் என்றால் பணத்தால் வீட்டைக் கட்ட முடியும். நல்ல பெண்மணியால்தான் அதைக் குடும்பமாக மாற்ற முடியும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அதனாலே சொன்னேன். ஆனால் அவர் ஒத்துக்கொண்டார். இப்போதும் நான் பெயரைச் சொல்லவில்லை. சொன்னால், அவர்கள் கட்சியிலே ஏதாவது தவறாக எடுத்துக்கொண்டார்கள் என்றால் நமக்குத் தொல்லை. காட்டிக் கொடுத்ததாக ஆகக்கூடாது. அதனால் சொல்கிறேன். எனவே ஒன்றே ஒன்றை மாண்புமிகு அம்மா அவர்களிடம் சொல்லிக்கொள்கிறேன். அதனாலே நல்லது நடக்கும்போது எல்லோரும் ஆதரியுங்கள்; நல்ல விஷயம் நடக்கும்போது ஆதரியுங்கள்.

இப்போதுகூட மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது நான் உடனே எழுதிவைத்தேன். World Tourist Map-லே இருக்கிறதே the second longest beach is Marina Beach என்று எழுதியிருக்கிறார்கள். உடனே அதை எழுதிவைத்தேன். ஆனால் நம்மைவிட அறிவாளி ஆயிற்றே அம்மா அவர்கள். என்ன இங்கே கொண்டுவந்திருக்கிறார்கள் என்றால், அவர்கள் எவ்வளவு பெரிய ஆள். 'டக்' என்று அடித்தார்கள் பாருங்கள். அதோடு முடிந்தது கதை. நான் சொல்ல வேண்டாம் என்று விட்டு விட்டேன். இருந்தாலும் இதை நான் எதற்காகச் சொல்கிறேன் என்றால், சுத்தமாகவும் இருக்க வேண்டும், அதுவாகவும் இருக்க வேண்டும்; எவ்வளவு கஷ்டமப்பா இந்த இடத்திலே.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**திரு. ராதாரவி:** அண்ணே, ஞானசேகரன் அண்ணே, அண்ணே உட்காருங்கள் அண்ணே, உட்காருங்கள் அண்ணே.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is not world map. It has not found a place in the world map என்பதுதான் கேள்வி.

**திரு. ராதாரவி:** இன்னொன்று நான் என்ன சொல்கிறேன் என்றால் இதை எல்லாம் இவர்கள் வந்து தவறாக நினைப்பார்கள். இப்போது நான் ஒன்றே ஒன்றைச் சொல்லிக்கொள்கிறேன். ஒரு செய்திக்காகச் சொல்கிறேன். என்னவென்றால், தயவுசெய்து நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். 'நீதிக்குத் தலை வணங்கு' என்ற படத்திலே பெரிய கலைஞரும், எஸ். வரலட்சுமி அம்மா அவர்களும் பாடியிருக்கிறார்கள்.

பிற்பகல் 5-20

*'எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்*
*மண்ணில் பிறக்கையிலே*
*பின் நல்லவன் ஆவதும் தீயவன் ஆவதும்*
*அன்னை வளர்ப்பதிலே'*

என்று சொல்லியிருக்கிறார்கள் அப்போது. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் அம்மாவிடம் நான் சொல்லக்கூடாது. இருந்தாலும் எதற்குச் சொல்கிறேன் என்றால், எல்லாக் குழந்தைகளும் நல்லக் குழந்தைகள்தான், பிறக்கும்போது. ஆனால் வளரும்போது, அம்மா கையிலேதான் இருக்கிறது, நல்லவன் ஆவதும், கெட்டவன் ஆவதும். அதனாலே இப்போது பிரச்சினை நாட்டிலே இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஏனென்றால் அம்மா கையில் வளர்ந்து இருந்தால் எல்லோரும் நன்றாக இருப்பார்கள். அப்பா கையிலே வளர்கிறதாலே பிரச்சினைதான். (மேசையைத் தட்டும் ஒலி)

'அம்மாவிற்கு எப்பொழுதும் வெற்றி' செய்தியாகப் பார்த்ததனால் சொல்கிறேன். ஏன் அம்மாவிற்கு இவ்வளவு பெரிய வெற்றி என்றால், Non-violence needs more courage than violence; Non-violence needs more courage than violence என்று யார் சொன்னார்கள்? நான் சொல்லவில்லை. இதோ படமாக மாட்டியிருக்கிறோமே, அண்ணல் மகாத்மா காந்தி அவர்கள் சொன்னார்கள். அவர்கள்தான் சொன்னார்கள். அராஜகம் செய்வதற்கு தைரியம் தேவையில்லை. சாத்வீகமாக இருப்பதற்குத்தான் தைரியம் தேவை. அதனால்தான்



உங்களைக் கைது செய்யும்போது மற்றவர்களைப்போல் அராஜகம் செய்யாமல், சாத்வீகமாகப் போனதால்தான் அம்மா வெற்றி உங்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால் எல்லோரும் வியந்து பேசுகிறார்கள். நான்தான் அதிகமாகப் பேசலாம் என்று ஆசைப்பட்டேன். எனக்கு முன்னால் காலையில் பேசிய பி.ஜே.பி. மாண்புமிகு உறுப்பினர் தெலுங்கிலே, தமிழிலே போட்டு அடித்து, அம்மாவை அப்படியே அசத்திவிட்டார். எனக்கு மேலே பேசுகிறாரே என்ற கவலை. ஏனென்றால் உலகமே அவர்களைப் பார்த்து வியக்கிறது. Because you are administering the time. So the world is admiring at you. நீங்கள் time-ஐ நிர்வாகம் செய்கிறீர்கள். நேரத்தை நிருவாகம் செய்கிறீர்கள். அதனால்தான் இந்த உலகமே உங்களைப் பார்த்து வியக்கிறது. ஏன் வியக்கிறார்கள் என்றால், ஒரு function என்றால்கூட, திருச்சியாக இருந்தாலும் சரி, தஞ்சாவூராக இருந்தாலும் சரி, ஹெலிகாப்டரில் போய்விட்டு உடனே வருகிறீர்கள். Time factor-ஐ நீங்கள் administer பண்ணுகிறீர்கள். இது புரியாமல் வேலையில்லாமல் இரயிலில் ஜாலியாகப் போனவர்கள் சொல்கிறார்கள். ஏன்தான் ஹெலிகாப்டரில் போறாங்க; ஏன்தான் ஹெலிகாப்டரில் போறாங்க? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

நான் ஒரேயொரு நிமிடத்தில் பேச்சை முடித்துக்கொள்கிறேன். தவறாக எடுத்துக்கொள்ளாதீர்கள். ஏனென்றால் செய்தியாக வந்ததனால் மக்கள் கேட்கிறார்கள். அதனால்தான் இதையெல்லாம் சொல்கிறேன்.

செய்தித் துறையிலே Green Tax என்று ஒன்று போட்டார்கள் அய்யா, நிதியமைச்சர் சொல்லிவிட்டார் Green Tax என்று. உடனே மேதாவி ஒருவர் எழுந்திருந்து என்ன Green Tax அம்மாவிற்குப் பிடித்த கலரா? நான் சொன்னேன். இது என்னடா வம்பாகப் போயிற்றே? இதற்குப் பதில் சொல்லியாக வேண்டுமே என்று அப்போது நினைத்தேன். என்னைப் பேச விடவில்லை. இப்போது நேரம் கிடைத்தது. நல்ல வேளை, அதனால்தான் செய்தித் துறை மானியத்தில் செய்தியாகச் சொல்லிக்கொண்டிருக்கிறேன் எல்லாம். இந்த Green Tax-லே தெரியாத ஒரு விஷயம் என்னவென்றால், கலரிலே எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது. Red என்று சொன்னவுடன் கோபித்துக்கொள்ளாதீர்கள். கம்யூனிஸ்ட் நண்பர்கள் தயவுசெய்து கோபித்துக்கொள்ளாதீர்கள். (சிரிப்பு) Red என்றால் danger (சிரிப்பு) Red என்றால் danger.

Red என்றால் எச்சரிக்கை. டேய், இங்கே வந்தால் விழுந்துவிடுவாய், அதைச் சொல்கிறேன். நல்லதைத்தான் சொல்கிறேன். தவறாக ஒன்றும் சொல்லவில்லை. *(சிரிப்பு)* Red என்றால் danger. Green என்றால் உலக அளவிலே அம்மா, உலக அளவிலே, நான் ஐரோப்பா போயிருக்கிறேன்; ஆஸ்திரேலியா போய் இருக்கிறேன். I have gone to London. I have gone to Malaysia; I have gone to States எல்லா ஊர்களுக்குப் போனாலும், green-தான் சொல்கிறார்கள். பசுமைக்கு green தான் அம்மா சொல்கிறார்கள் எல்லா நாடுகளிலேயும். நம்ம நாட்டில் மட்டுந்தான் அம்மா கிண்டல் பண்ணுகிறார்கள். அம்மாவுக்குப் பிடித்த கலர். அதனால்தான் green. உலக அறிவு இருந்து பேச வேண்டுமே? என்ன செய்வது? மக்கள் ஓட்டுப் போடும்போது அதையெல்லாம் நினைக்க மாட்டார்கள். அது வேறு விஷயம். அதைப்பற்றி நான் இப்போது பேசவில்லை. இருந்தாலும், Green Tax என்று அம்மா போட்டது, அம்மாவுக்காக அல்ல. அது உலக நியதி, பசுமையாக இருக்க வேண்டும். Pollution இல்லாமல் இருக்க வேண்டுமென்றால், அந்த கார்களுக்கெல்லாம் Green Tax போடுங்கள் என்று சொன்னார்கள். அவர்கள் Yellow Tax போடச் சொல்கிறார்களோ என்னமோ தெரியவில்லை. ஆனால் Yellow என்றால் என்ன அர்த்தம் என்றால் bankruptcy திவால் என்று அர்த்தம். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)* இந்த நாட்டை 5 வருடங்களிலே திவால் ஆக்கியது போதாது என்று, டேக்ஸிலேயும் திவால் பண்ணினால் என்ன ஆவது? சரி அதை விடுங்கள். இருந்தாலும் சொல்கிறேன். இப்போதுகூட, சகோதரர்கள் எல்லாம் சேர்ந்துகொண்டு பேசினார்கள். அந்த வீடு கட்டியதை, வீட்டு வசதி வாரியத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் பேசினார். யார் கட்டியது என்று கேட்கிறோம், சொல்ல மாட்டேன் என்கிறார். *(சிரிப்பு)* ஏன் நான் இதைச் சொல்கிறேன் என்றால், அவர் 1991-ஆம் ஆண்டிலிருந்து இருக்கிறார் என்று இப்போதுதான் சொன்னார். நான் ஆச்சரியப்பட்டேன். நான் எல்லாம் குவிந்து கிடக்கும் செங்கல். அவரெல்லாம் கட்டி முடித்த கோபுரம். அதனால் அவர்களுக்குத் தெரியாதது அல்ல. எதற்குப் பதில் சொல்ல வேண்டும், எதற்குப் பதில் சொல்லக்கூடாது என்று அவர்களுக்குத் தெரியும். எனக்குத் தெரியாது. ஆனால் யார் கட்டியது என்று கேட்கிறேன், சொல்ல மாட்டேன் என்கிறாரே? *(சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)* அப்போதுதான் நினைத்தேன். அவருக்குத் தெரிகிறது. ஆனால் சொல்லக்கூடாது. அவையெல்லாம் நல்ல விஷயம்தான் *(சிரிப்பு) (மேசையைத் தட்டும்*



*ஒலி)* அதனால்தான் ஆங்கிலத்தில் சொன்னான். When a dove joins with the crow, it won't change the colour; It will change the heart என்று சொன்னான். ஏனென்றால் ஒரு புறா, காக்காய் கூட்டத்தோடு போய்ச் சேரும்போது, கலரை மாற்றாது. கறுப்பாக. மனது மட்டும்தான் கறுப்பாகிவிடும். ஏனென்றால் எந்தக் கட்சிகளாக இருந்தாலும், அந்தக் கூட்டத்தோடு சேரும்போது, தன் கொள்கையை விட்டுக்கொடுக்க மாட்டார்கள். மனது மட்டும் கறுப்பாகி விடுகிறது. அதற்கு என்ன செய்வது நாம். *(சிரிப்பு)* அது அப்படித்தான் இருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)* அண்ணாச்சி.....

*பிற்பகல் 5-25*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களைச் சொல்லவில்லை, அவர்.

**திரு. ராதாரவி:** அண்ணே, நான் பேசிவிடுகிறேன். அண்ணே, நீங்கள் கட்டி முடித்த கோபுரம். பேசலாமா? ஒத்துக்கொள்ளுங்கள் அண்ணே, உட்காருங்கள் அண்ணே. பேசிவிடுகிறேன் நான். *(குறுக்கீடு)* சரி. நான் கட்டிமுடித்த கோபுரம் என்று சொல்லக்கூடாது என்று சொல்கிறார்கள். சொல்லவில்லையப்பா. *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், உறுப்பினர் பேசி முடிக்கட்டும்.

**திரு. ராதாரவி:** இன்னொன்று தெரியுமா அம்மா அவர்களே, உங்களுடைய வெற்றிக்கு ஒரே ஒரு காரணம், நான் கடைசி தகவலைச் சொல்லி முடித்துவிடுகிறேன். ஏனென்றால் எல்லோருக்கும் நான் எதற்கு வீம்பாக ஆக வேண்டும். அதனாலே நான் ஒரேயொரு விஷயத்தைச் சொல்லிவிடுகிறேன். நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். நீங்கள் இன்றைக்கு நன்றாக இருக்கிறீர்கள் என்றால், கொடுக்கும் தன்மை உங்களுக்கு மட்டுமே உண்டு. இது எப்படியென்றால், இரண்டு பேர் சந்தித்துக்கொண்டார்கள். ஒரு சின்ன கதையை மட்டும் சொல்லிவிடுகிறேன். பேரவைத் தலைவருக்கு முன்னால் கதை சொல்கிற அளவிற்கு ராதாரவி வளரவில்லை. இருந்தாலும் நான் எனக்குத் தெரிந்த அறிவுக்கு ஒரு இரண்டு சிறிய கதைகளைச் சொல்லி-ஒரே ஒரு கதைதான். இரண்டு பேர் சந்தித்தார்கள். ஒரு வைஷ்ணவனும், ஒரு சைவனும், அப்பொழுது சைவன் சொன்னான் நான் வந்து இப்படி

அடித்தால்தான் (மூன்று விரல்களால் சைகை காட்டினார்) இப்படி அடிக்கிற பட்டைதான் பெரியது என்று. உடனே வைஷ்ணவர் சொல்கிறார். நான் இப்படி போடுகிற நாமம்தான் (தன் மூன்று விரல்களால் நாமம் போடுவதுபோல் சைகை காட்டினார்) பெரியது என்று. இப்படிப் போடுவது பெரிதா? இப்படிப் போடுவது பெரிதா என்று மூன்று கோட்டுக்குள்ளேயே தகாறு நடந்துகொண்டிருக்கிறது. அப்பொழுது ஒரு சாமியார் வந்தார். அவரிடம் கேட்டார்கள். ஏங்க இப்படிப் போடுவது பெரிதா? இல்லை, இப்படிப் போடுவது பெரிதா என்று சொல்லும்போது அவர் சொன்னார், இப்படிப் போடுவதும் பெரிதில்லை. இப்படிப் போடுவதும் பெரிதில்லை. இப்படிப் போட வேண்டும். (தர்மம் அளிப்பது போல் சைகை காட்டினார்). தர்மம் செய்ய வேண்டும். அதுதான் பெரியது என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தர்மத்தை அம்மா மட்டும்தான் அன்னதானமாகச் செய்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால் அம்மா அவர்களே, நீங்கள் எந்தப் போராட்டம் வந்தாலும் பயப்படாதீர்கள். நீங்கள் பயப்பட மாட்டீர்கள். தைரியத்திற்கு நீங்கள்தான் பெயர், நீங்கள்தான் உருவமே. உங்களைப்பார்த்துதான் எனக்கெல்லாம் தைரியமே வந்தது ஒரு நோத்திலே. உங்களுக்குத் தெரியும் அதெல்லாம். நான் உங்களிடம் பேசியிருக்கிறேன். அப்போதுகூட நான் கண்ணீர் விடும்போது நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். கண்ணீர் விடுவது தவறு என்று சொன்னீர்கள். என்ன செய்வது? நம்முடைய குடும்பத்திலே ரத்தக் கண்ணீர் வடித்து வடித்தே வந்தவர்கள் நாம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) அதனாலே கண்ணீர் விட்டேன். இருந்தாலும் சொல்கிறேன். உங்கள் போராட்டங்களிலே நீங்கள் கவலையேபடாதீர்கள். நாங்கள் இவ்வளவு பேர் உங்களுடைய போர் வாளாக என்றும் இருப்போம் என்று கூறி, தொகுதியின் கோரிக்கைகளை நான் தரவில்லை. பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னதை நான் மீறாமல் இருக்கிறேன். கோடு போட்டால் தாண்ட மாட்டேன் நான். நீங்கள் சொன்னீர்கள். கோரிக்கை கொடுக்கக்கூடாது என்று, கொடுக்கவில்லை. மத்தியானம் நேராகப் போய் அம்மாவைப் பார்த்தே கொடுத்துவிட்டு வந்துவிட்டேன். இது அட்வான்சிலே. ஏனென்றால், இங்கே கொடுத்தால் நேரம் இருக்காது. போன தடவை கற்றுக் கொண்டேன். என்னுடைய கன்னிப் பேச்சிலே கற்றுக்கொண்டேன். ஆஹா, எல்லோரும் பயமுறுத்துவார்கள் போல என்று. அதனாலே தயவுசெய்து அம்மா அவர்களே, நீங்கள் எந்தப் போராட்டமாக



இருந்தாலும் இங்கே 141 வாள்கள் இருக்கின்றன உங்களிடம் என்ற எண்ணத்தில் நீங்கள் போராடுங்கள், என்றும் உறுதுணையாக இருப்போம் என்று கூறி, உங்களுடைய தர்ம குணங்களுக்கு நீங்கள் என்றென்றும் வாழ வேண்டும் என்று, உலகத்தில் இருக்கும் அத்தனை கோடானுகோடி தமிழ் மக்களின் சார்பாக, — ஏனென்றால் நான் அண்ணன் துரைமுருகன் மாதிரி அய்யோ, சாமி என்று கையெடுத்து கும்பிட மாட்டேன். ஏனென்றால் அவர் திரைக்கதை வசனம் எழுதுகிற கம்பெனி. நான் அப்படியல்ல. நானெல்லாம் original நடிகன். நான் நடிக்க வரவில்லை. இருந்தாலும், அத்தனை பேர் சார்பாக — என் நன்றியினைக் கூறி என்னைப் பேச வைத்ததற்கு உங்களின் பொன்னான பாதங்களைத் தொட்டு வணக்கங்களைக் கூறி, பேரவைத் தலைவருக்கு நன்றியைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கார்த்தி. (குறுக்கீடு)

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ... (குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ராதாரவி அவர்கள் பேசுகிறபோது, எங்களுடைய இதயங்கள் கருப்பாகிவிட்டதாகச் சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. உங்களைச் சொல்லவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை. எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிறபோது, துறையிலிருக்கக்கூடிய, நடக்கக்கூடிய நடப்புகள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அவர் ஓர் உதாரணத்தைச் சொன்னார். அது ஓர் உதாரணம், பொன்மொழி அது. காக்கையோடு புறா சேருகிறபோது, புறாவினுடைய நிறம் கறுப்பாகாது. மனம் கறுப்பாகிவிடும் என்று சொன்னார். (குறுக்கீடு) உங்களைச் சொல்லவில்லை. திரு. கார்த்தி காசு கொடுக்காமலேயே நீங்கள் இங்கே ஒரு சினிமாவைப் பார்த்திருக்கிறீர்கள். (சிரிப்பு)

பிற்பகல் 5-30

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி, செய்தி, விளம்பரத் துறை மற்றும் சுற்றுலாத் துறை மீதான மானியக் கோரிக்கைகளிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாகப் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு தந்த தங்களுக்கும், பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர், தமிழகத்தினுடைய போராளி டாக்டர் ஐயா அவர்களுக்கும், டாக்டர் சின்ன ஐயா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியினுடைய தலைவர் அண்ணன் திரு. ஜி.கே. மணி அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்திலே நகாமயம் மிக வேகமாக வளர்ந்து வருகிறது. மொத்தமுள்ள 6.2 கோடி மக்களில் 2.85 கோடி மக்கள் இன்றைக்கு நகர்ப்புறப் பகுதிகளிலே வாழ்ந்து வருகிறார்கள். இதனால் அங்கு சுற்றுப்புறச் சூழல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் பெருகி வருகின்றன. இப்பிரச்சினைகளை நகா உள்ளாட்சி அமைப்புகளின் உதவியோடு தீர்ப்பதற்கு அாசு உரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். சென்னை நகாத்தின் மக்கள்தொகை தற்போது 45 இலட்சம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் ஒரு பெருநகரமாக விளங்குகின்றது. 2011-ல் சென்னை மாநகாம் மற்றும் சுற்றியுள்ள நகரப் பகுதிகளும் சேர்ந்து, மக்கள்தொகை சுமார் 75 இலட்சம் இருக்கும் எனக் கூறுகிறார்கள். சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லை, 1,177 சதுர கிலோ மீட்டர் பரப்பளவு கொண்டதாகும். சென்னை நகர எல்லைக்குள் அமைந்திருக்கும் பகுதிகள் அதிக அளவில் நகாங்களாக மாறி வருவதால், அடிப்படை வசதிகள் மற்றும் சுகாதார வசதிகளுக்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அாசு தீவிர கவனம் செலுத்தி, அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாநகாாட்சிப் பகுதியிலிருந்து ஒரு குறிப்பிட்ட சுற்றளவிற்கு பட்டா வழங்கக் கூடாது என்று அரசு தடை விதித்துள்ளது. சென்ற தி.மு.க. ஆட்சியில், 2 ஆண்டிற்கு இந்தத் தடைச் சட்டத்தை நீக்கியதன் மூலம் அவர்கள் பட்டாவை வழங்கியுள்ளார்கள். விலக்களிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் முடிந்து, தற்போது அந்தத்



தடைச் சட்டம் மீண்டும் அமலில் இருந்து வருகிறது. இதனால் என்னைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மாநகராட்சிப் பகுதியிலே இருக்கும்பொழுது, மக்களிடமிருந்து வாங்கும் மனுக்களில் கேட்கின்ற அந்தப் பட்டாவினை அளிக்குமாறு அதிகாரிகளிடம் வழங்கும்போது, அந்தப் பட்டாவை வழங்க இயலாத ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் வழங்கியதைப்போல, இந்த அரசு அந்தச் சட்டத்தை மாற்றி, விலக்களித்து, மாநகராட்சி மற்றும் இணைக்கப்பட்ட பகுதிகளில் ஏழை மக்களுக்கு பட்டா வழங்கி, அந்தப் பகுதியினுடைய வளர்ச்சிக்கு உதவியாக இருக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தற்பொழுது நகரப் பகுதிகளில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் அடுக்குமாடி கட்டடங்களுக்கும் மற்றும் குடியிருப்புக் கட்டடங்களுக்கும் மின்சார இணைப்பு, குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு வழங்குவதில் மிகவும் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. காரணம், Completion Certificate வேண்டுமென்று அதிகாரிகள் கேட்கிறார்கள். இதனால் பல சிரமங்கள் ஏற்பட்டு, கட்டடங்கள் முடிக்க முடியாத சூழ்நிலையில் இன்றைக்கு அந்தக் கட்டடங்கள் எல்லாம் அப்படியே நிலுவையிலே இருக்கின்றன. ஆகவே இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசு அந்தச் சட்டத்திருத்தம் கொண்டு வந்து, அவர்களுக்கு எளிய முறையில் அனுமதி வழங்க, அந்த Completion Certificate இல்லாமலேயே அதை அவர்களுக்குக் கொடுப்பதற்கு, விதிமுறைகளைத் தளர்த்த ஆவன செய்ய வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு சேலம் மாவட்டம், மிட்டா அய்யம் பெருமாம்பட்டி கிராமத்தில், 1981 ஆம் ஆண்டு சுமார் 267 ஏக்கர் நிலங்கள், முப்போகமும் நெல், கரும்பு மற்றும் காய்கறிகள் விளையக்கூடிய விவசாய நிலங்களை தரிசு நிலம் என்று கூறி அரசு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திற்காகக் கையகப்படுத்தியது--அந்த 267 ஏக்கர் நிலங்கள் முழுவதும் விவசாய நிலங்களாக அந்த விவசாய பெருமக்கள், சிறு விவசாயிகள் பயிரிட்டு வருகிறார்கள். அதிலே ஒரு விவசாயிக்குக்கூட 3 ஏக்கருக்கு மேல் விவசாய நிலங்கள் இல்லை. அரசு தற்போது தரிசு நிலங்களை விவசாய நிலங்களாக மாற்றுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுத்து வருவதை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். ஆனால் முப்போகமும் விளையக்கூடிய அந்த விவசாய

நிலங்களை, இன்றைக்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தியிருக்கிறது. இது கடந்த 1981 ஆம் ஆண்டு நடைபெற்றிருக்கிறது. இன்றைக்கு அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் எல்லாம், முப்போகமும் அதிலே விவசாயம் செய்கின்ற அந்த இடத்தை எடுகட்டுவதற்கு மிகவும் ஆட்சேபணை தெரிவிக்கிறார்கள். ஆகவே இந்த இடங்களை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் இதுவரை சுவாதீனம் எடுக்காத காரணத்தாலும், இந்த நிலங்கள் முப்போகமும் விளையும் விவசாய நிலங்களாக இருக்கிற காரணத்தாலும், இந்த ஏழை மக்களுடைய கண்ணீரைப் போக்குகின்ற வகையில், அரசு நில ஆர்ஜித நடவடிக்கையிலிருந்து விலக்கு அளிக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு தமிழ்நாட்டில் பல பகுதிகளில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், சாக்கடை, தெருவிளக்கு, சாலை போன்ற அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமல் சிரமப்படுகிறார்கள். காரணம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாகத்திடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் குடியிருப்பு இடங்களை ஒப்படைப்பதில்லை. ஆகையால் அந்தப் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு உள்ளாட்சி...

*பிற்பகல் 5-35*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் கட்டப்பட்ட பகுதிகளில் எல்லாம் ரோடுகள், சாக்கடை வசதிகள் எல்லாம் சரியாக இல்லை என்று இங்கே குற்றஞ்சாட்டினார்கள். ஏற்கெனவே வீட்டு வசதி வாரியம் வீடுகளை அமைப்பதற்கு முன்னால் எல்லா திட்டங்களும் நிறைவு செய்யப்பட்ட பிறகுதான் அதிலே வீடுகள் கட்டப்படுகின்றன. குறிப்பிட்ட கால அளவு ஆனவுடன் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்போரே அதைப் பாதுகாக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக கட்டப்பட்டு இருக்கிற வீடுகளை எல்லாம் உள்ளாட்சி அமைப்புகள் மூலம் பராமரிப்பதற்காக இன்றைக்கு ஒரு ஆணையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அந்த ஆணையின்படி உள்ளாட்சி அமைப்பு மேலதிகாரிகளிடம் பேசப்பட்டு, எல்லா பகுதிகளிலும் இருக்கின்ற



வீடுகளையெல்லாம் உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைப்பதற்கான பணிகள் நடந்து வருகின்றன என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. இந்த அறிவிப்பின் மூலமாக கண்டிப்பாக அந்தப் பகுதியில் இருக்கிற மக்கள் பயன் பெறுவார்கள். நான் இருக்கின்ற சேலம்-2 தொகுதிக்குட்பட்ட மிட்டா அய்யம் பெருமாம்பட்டி கிராம மக்கள் அங்கே சென்று குறைகளைக் கேட்கும்போது ஒன்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் அதைச் செய்ய வேண்டும் அல்லது நீங்கள் கூறியதுபோல— அரசாங்கத்திடம்—முறையாக மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைத்தால், அவர்கள் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்று கூறினீர்கள். உண்மையிலே நீங்கள் செய்திருக்கிற இந்தத் திட்டத்தினால் அந்தப் பகுதி மக்களுடைய அந்தக் குறை தீரும் என்று நினைக்கிறேன். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தினால் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் அடுக்கு மாடி வீடுகள் பல மாவட்டங்களில் பழுது பார்க்கப்படாமல் இருந்து வருகின்றன. இதற்காக அரசு கடந்த ஆண்டுகளில் சில குறிப்பிட்ட அளவுக்கு நிதிகளை ஒதுக்கியிருக்கிறது. ஆனாலும்கூட அந்த நிதிகள் எல்லாம் குறைவாக இருக்கின்றன. இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற நிலைமையில் பல ஆண்டுகளாக அவை பராமரிக்கப்படாத காரணத்தால் அவை பழுதடைந்த நிலையில் உள்ளன. குறிப்பாக, சேலம் பழைய பஸ் நிலையம் எதிரில் உள்ள அண்ணா நகர் குடியிருப்புகள், செவ்வாய்ப்பேட்டை காளியம்மன் கோயில் எதிரே உள்ள கட்டடங்கள், செவ்வாய்ப்பேட்டை மார்க்கெட்டில் இருந்து சிவதாபுரம் செல்லும் சாலையில் உள்ள தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய அடுக்கு மாடிக் கட்டடங்கள் எல்லாம் பல்லாண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் மிகவும் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. ஆகவே அந்த இடங்களில் எல்லாம், வருகின்ற நிதியாண்டில், அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சென்னை நகர துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின்கீழ், திட்டம்-2-ன்கீழ் திருமயிலையிலிருந்து வேளச்சேரி வரை 11.17 கி.மீ. தூரத்திற்கு ரூபாய் 680 கோடி திட்டப் பணியை இந்த ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மற்றும் பல நகரப் பகுதிகளில், பல குடும்பங்கள் சாலை ஓரங்களில், கூவத்தின் கரைகள் மற்றும் ஓடைப் பகுதிகளில், வெட்ட வெளியில் வாழ்ந்து வருகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசினுடைய திட்டமான ஒருவருக்கு ஒரு வீடு என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையிலே, இந்த நிலையில் இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களையும் அந்தத் திட்டத்தின்கீழ் கொண்டுவருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

செய்தி மற்றும் மக்கள் தொடர்பு என்பது அரசுக்கும் மக்களுக்கும் இடையே நல்லெண்ணத்தையும், ஒத்துழைப்பையும் வளர்க்கும் இருவழி தொடர்பு சாதனமாகும். பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகளுக்கும் மேல் தொடர்ச்சியாகப் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் துணை ஆசிரியர்கள் பணியில் இருக்கும்போது இயற்கை எய்தினால், அவர்களுடைய குடும்பங்களுக்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ.2 இலட்சம் கொடுப்பதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். அதிலே பல சிரமங்கள் இருப்பதாகக் கூறுகிறார்கள். காரணம் 20 ஆண்டுகள் என்பது மிக அதிகமாக இருக்கிறது. அவர்களுக்கு அந்தச் சான்றிதழ்கள் கிடைக்காத காரணத்தால், அந்தத் திட்டத்தின்கீழ் பயன்பெறுவதில் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே அரசு அதை ஆராய்ந்து அந்தப் பத்திரிகையாளர் குடும்பங்களுக்கு ரூ.5 இலட்சம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல, பத்திரிகைத் துறையில் பணியாற்றி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளுக்குள் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** முடித்துவிடுகிறேன். பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் தற்போது



66 பத்திரிகையாளர்கள் பயன்பெற்று வருகிறார்கள். அப்படி பயன்பெறுவதில் இருக்கின்ற பத்திரிகையாளர்களில், இன்றைக்கு பலர் வறுமைக் கோட்டிற்குக்கீழ் இருக்கின்ற பல பத்திரிகையாளர்கள் அதிலே, அந்தத் திட்டத்தின்கீழ் நுழைய முடியாத அளவுக்கு பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன. அதை இந்த அரசு தளர்த்தி, அவர்கள் அந்தத் திட்டத்தின் கீழே பயன்பெறுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை மூலமாக பொருட்காட்சி, பல மாவட்டங்களில் ஆண்டிற்கு ஒருமுறை அமைக்கப்பட்டு வருகிறது. அந்தப் பொருட்காட்சியை சேலம், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிப் பகுதிகளில் நிரந்தரமாக நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-40*

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, மிகவும் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழிலும் ஒன்று. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி போன்ற மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழில், உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாயை ஈட்டித் தருகிறது. தமிழ்நாட்டில் மொத்தம் 2,053 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. இதில் இன்றைக்கு பல திரையரங்குகள் மூடப்பட்டு திருமண மண்டபங்களாகவும், குடோன்களாகவும் மாறி வருகின்ற சூழ்நிலை உருவாகி வருகிறது. காரணம், புதிய திரைப்படங்கள் திரையில் வருவதற்கு முன்பாகவே சி.டி. கேசட்டுகள் மூலம் விற்பனைக்கு வந்துவிடுகின்றன. ஆகவே இந்த நிலைமையைத் தடுப்பதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை, 7-லிருந்து 9 சதவிகிதமாக இருக்கின்றது. இதை 10-லிருந்து 12 சதவிகிதமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோல, கேரளா மூணாறிலிருந்து கொடைக்கானல் மலைப் பாதையில் செல்ல சுமார் 30 கிலோ மீட்டர் தூரம்தான் ஆகிறது. ஆனால் அந்த இடத்தில் வாகனங்கள் செல்வதற்கு தற்போது தடை செய்யப்பட்டுள்ளது. அதனால், சுற்றுலாப் பயணிகள் சுமார் 200 கிலோ மீட்டர் சுற்றி கொடைக்கானல்

செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே இந்தப் பாதையை போக்குவரத்திற்கு அனுமதி கொடுத்து, கோளாவிலிருந்து அதிக சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதேபோல, இன்றைக்கு ஏற்காடு மலை அடிவாரத்தில் உள்ள வன உயிரியல் பூங்கா ஒன்று, சேலம் மாநகராட்சி எல்லையிலிருந்து சுமார் 2 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. இது, பொதுமக்கள் அதிகமாக வந்து செல்லக்கூடிய இடம். சேலம் மாவட்டத்திலே பொழுதுபோக்கிற்கு என்று எந்த இடமும் இல்லை. சென்னை, வண்டலூரில் உள்ள உயிரியல் பூங்கா போல் விரிவுபடுத்துவதற்கு போதிய இடவசதி அங்கு இருக்கிறது. ஆகவே அரசோ அல்லது தனியாரிடம் ஒப்படைத்தோ, சேலம் மாவட்ட மக்களுக்கு சிறந்த சுற்றுலாத் தலமாகப் பயன்படுத்திக்கொள்வதற்கு ஆவன செய்யுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இப்போது, பல்வேறு சுற்றுலா மையங்களிலும், கோயில் இடங்களிலும், வாகனங்களை நிறுத்துவதற்கு தனியாரிடம் ஏலம் விடப்பட்டிருக்கிறது. குத்தகைதாரர்கள் இப்போது மிக அதிகமான கட்டணத்தை வசூல் செய்கிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு ஒரு நியாயமான கட்டணத்தை அரசே நிர்ணயம் செய்ய வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற இரண்டு கோரிக்கைகளை மட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அனுமதியோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கைகளை எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** ஒரேயொரு நிமிடம். ஒரேயொரு நிமிடத்தில் சொல்லிவிடுகிறேன். சேலம் மாநகராட்சி, 2-வது தொகுதி முழுவதும் பயன்பெறக்கூடிய வகையில் அஸ்தம்பட்டிப் பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்கு 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அனுமதி கொடுக்கப்பட்டது. ஆனால் தேவையான இடம் இல்லாததால் அந்தப் பணி நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது. ஆகவே மாண்புமிகு முதல்வர் அவர்களும், நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்களும், அவர்களுக்கு வேண்டிய அந்த 3 ஏக்கர் நிலத்தை ஒதுக்கி, அந்தப் பகுதியினுடைய மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்துக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல, சேலம் மாநகராட்சியில் புதிதாகச் சேர்க்கப்பட்ட 21 பஞ்சாயத்துப் பகுதிகளில் 17 இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்கக் குடிநீர்த் தொட்டிகள் கட்டுவதற்கு ரூ.24.50 இலட்சம், 2000 ஆண்டில் அரசு அனுமதி வழங்கியது. கடந்த இரண்டு ஆண்டுகளில் குறிப்பிட்ட அளவிற்கு நிதி ஒதுக்கி, அந்தப் பணிகள் தற்போது நிறைவுபெறாமல் இருக்கின்றன. ஆகவே அந்தப் பணியை முடிப்பதற்கு இந்த ஆண்டில் நிதி ஒதுக்கி, சேலம் மாநகராட்சி 6-வது டிவிஷன், என்.ஜி.ஜி.'ஸ் காலனிப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு ஆவன செய்ய வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே தண்ணீர்ப் பிரச்சினை அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அதைக் கட்டிக் கொடுப்பதற்கு ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, சேலம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.5 கோடி செலவு செய்யப்பட்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதோடு உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** அறுவை சிகிச்சை மையக் கட்டடம் பல ஆண்டுகளாகத் திறக்கப்படாமல் உள்ளது. அதற்கு போதிய அறுவை சிகிச்சைக் கருவிகள் மற்றும் பொருட்கள் இல்லாத காரணத்தால், அது திறக்கப்படாமல் இருக்கின்றது. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்...

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், கிட்டத்தட்ட ரூ.4/- கோடிக்கு மேல் செலவு செய்து வெறும் கட்டடத்தை மட்டும் கட்டிவிட்டு, அது இயங்குவதற்கு எந்தவிதமான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்காமல், அதற்கு நிதி ஒதுக்கம் செய்யாமல், இவ்வளவு காலம் விட்டுவிட்டார்கள். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் ரூ.2 1/2 கோடிக்கு, அந்த அறுவை சிகிச்சை அரங்கத்திற்கு நவீனக் கருவிகள், அறுவை சிகிச்சைக் கருவிகள் வாங்குவதற்கு அனுமதி அளித்து, இப்பொழுது அந்த நவீனக் கருவிகள் T.N.M.S.C. மூலமாக, தமிழ்நாடு மருத்துவக் கழகம் மூலமாக வாங்கப்பட்டுவிட்டது. விரைவிலே அந்தக் கருவிகளெல்லாம் அங்கே வர இருக்கின்றன. மிக விரைவில், இன்னும் சொல்லப்போனால், 1 மாத காலத்திற்குள்ளே அந்த அறுவை சிகிச்சை அரங்கம் திறக்கப்பட்டு செயல்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்பிற்கு நன்றி. ஏனென்றால், 4 ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆட்சியிலேகூட அதைத் திறப்பதற்கு அவர்கள் நடவடிக்கை எடுக்கவில்லை. காரணம், நீங்கள் கூறியதுபோல, வெறும் கட்டடம் மட்டும்தான் ரூ.4 கோடியிலே கட்டிவிட்டார்கள். ஆனால் அதற்கு வேண்டிய உபகரணங்கள் இல்லாததால், அது திறக்கப்படாமல் இருந்தது. ஆகவே அமைச்சர் அவர்களுடைய முயற்சிக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-45

சேலம் மாநகராட்சிப் பகுதிகளிலே நாள் ஒன்றுக்கு 350-லிருந்து 400 மெட்ரிக் டன் வரை குப்பைகள் இப்போது கிடைத்துக்கொண்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள். (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. மு. கார்த்தி:** அதனை நகரப் பகுதிகளிலே கொட்டுவதற்கு இடம் போதுமானதாக இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கேள்வி ஒன்றிற்கு பதில் அளிக்கும்போது, 15 ஏக்கர் நிலம் இருந்தால், குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கு அனுமதி வழங்கலாம் என்று கூறினார்கள். சேலம் மாநகராட்சிக்குச் சொந்தமான, பனமரத்துப்பட்டி ஏரியில் இடம் உள்ளது. அந்த ஏரியினுடைய இடத்திலே குப்பைகளிலிருந்து மின்சாரம் எடுக்கும் திட்டத்திற்கு நிதி ஒதுக்கி அனுமதி வழங்குமாறு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு முதல்வர் அவர்களையும் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிற்கு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஏ. லியாவுதீன் சேட். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெருங்குடியிலே குப்பையிலிருந்து மின்சாரம் தயாரிக்கும், ஆஸ்திரேலியா தொழில் நுட்பத்துடன்கூடிய



ஒரு திட்டத்திற்கு இந்த அரசு அனுமதி அளித்து, அதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சேலத்தைப் பொறுத்தவரையில், மாநகராட்சிக்கு பொது நிதி வேண்டும். மிகப் பெரிய பொருளாதாரத்தில் அந்தத் திட்டம் வகுக்கப்பட வேண்டும் என்கின்ற காரணத்தினால், சென்னைக்கு மட்டும் அந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் கொண்டுவரப்படவுள்ளது என்பதைத் தெரிவித்து, சேலம் மாநகராட்சிக்கு தேவையைப் பொறுத்து, இந்த அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாநகராட்சிப் பகுதிகளிலே குப்பையைக் கொட்டுவதற்கு இடமில்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். இரண்டாவது, சேலம் மாநகராட்சியிலே இப்போது புதியதாக சேர்க்கப்பட்ட பகுதிகள் இதனால் மிகவும் பாதிக்கப்படுகின்றன. அதேபோல தமிழகத்திலேயிருக்கின்ற 6 மாநகராட்சிகளிலே, சேலம் மாநகராட்சியிலேதான், பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாமல் இருக்கிறது. இந்த நிதியாண்டிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (மணியடிக்கப்பெற்றது) ஒன்றே ஒன்றை சொல்லி முடித்துவிடுகிறேன். ஒன்றை மட்டும் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்....(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்.

***திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கைகளின் மீது பேசுகின்ற ஒரு நல்வாய்ப்பினைத் தந்து உதவிய தங்களுக்கும், சிறுபான்மை மக்களின் நம்பிக்கைக்குரிய நட்சத்திரம், தமிழகத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் முதற்கண் என் உளப்பூர்வ நன்றியுடன்கூடிய வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் காவியமாய், கவிதையின் ஜீவியமாய், ஞாலத்தின் தலைமகளாய், நானிலத்தின் கலைமகளாய், சீலத்தின் திருவடியாய், சீர்திருத்தும் மறுவடிவாய், கொள்கையிலே நேர்வழியாய்த் திகழும் கோலத்தின் பேரொளியாய், மாண்புமிகு புரட்சித் தலைவியின் "பூமனம் மலர்ந்தால், புஞ்சையிலே பொன்விளையும், தஞ்சையிலே தமிழ் விளையும், தரணியெல்லாம்

[திரு. இ.ஏ. லியாவுதீன் சேட்] [2003 மே 8

புகழ் விளையும், பஞ்சினிலே மணி விளையும், பசித்தோர்க்கு நலம் விளையும், நெஞ்சினிலே பலம் விளையும், நோத்தில் நிலம் விளையும், சொல்லாசி கேட்டே, சுகம் மறந்த ஏழைக்கு நல்லரிசி போட்டத்-தாய், நாடு போற்றும் நல்லமனத்தாய், கல்லெறியும் பாவிகளை, வெல்லரிய துணிவுடனே, வெகுண்டெழுந்தாய், வீரத் தாய், அறிவுடைமை, அன்புடைமை, அவை அஞ்சாமை, இனியவை கூறல், இன்னா செய்யாமை என்ற குறள் நெறி வழி நடந்து, வறியோர்க்கு ஈவதே ஈகை என்ற பெரியோர்களின் வாக்கிற்கு ஏற்பவும், வாடிய பயிரைக் காணும்போதெல்லாம், வாடினேன் என்ற வள்ளலாரின் மொழிக்கொப்பவும். அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா என்ற கொள்கை குறிப்புணர்ந்து, தர்மத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடியும் வெல்லும் என்ற அருள் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில், உறுதியும், விடாமுயற்சியும், தளராத மனமும், தன்னகத்தே கொண்ட, தனிப்பெரும் தலைவி, தந்தை பெரியாரின் துணிச்சலும், பேறிஞர் அண்ணாவின் ஆற்றலும், பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவரின் மனித நேயமும், ஒருங்கிணைந்த ஒப்பற்றத் தலைவி மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களே,

இஸ்லாமிய தர்காக்களிலும் அந்த ஏழை மக்களுக்கு அன்னதானம் வழங்கி அல்லாஹ்வின் பேரருளைப் பெற்றுள்ள தாயே. நான்தான் இஸ்லாமிய சமுதாய மக்களின் காவலன், என்னிடத்தில்தான் காயிதேமில்லத் அவர்கள் சமுதாயத்தை ஒப்படைத்துச் சென்றார் என்றெல்லாம் உண்மைக்கு மாறாக முழங்கியவர்கள் முடங்கிக் கிடக்க, அந்தக் கணணியத்தின் தெனறல் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் ரஹ்மதுல்லாஹ் அவர்களுக்கு, அரசு சார்பில் மாவட்டம் தோறும், நாற்றாண்டு விழா கொண்டாடியும், அவர்களின் நினைவு நாளன்று நினைவிடத்திற்குச் சென்று மலர் போர்வை போர்த்தி மரியாதை செலுத்தியும் வரும் அம்மா, சென்னை காயிதே மில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில், அரசுக்குச் சொந்தமான இடத்தில் ரூ.50 இலட்சம் செலவில் மணி மண்டபம் கட்டப்பட்டு, அதன் முகப்பை மாற்றியமைக்க கூடுதலாக அம்மாவின் அரசு ரூ.8.69 இலட்சம் வழங்கி, அம்மாமனிதருக்கு இன்று "கண்ணியத்தின் தென்றல் காயிதே மில்லத் முஹம்மது இஸ்மாயில் மணிமண்டபம்" திறப்பு விழாவினை அறிவித்து, அனைத்து இஸ்லாமிய சமுதாய மக்களின் ஏகோபித்த பாராட்டுதலைப் பெற்றுவிட்ட எங்களின் ஒப்பற்ற



2003 மே 8] [திரு. இ. ஏ. லியாவுதீன் சேட்]

தலைவியே, நீங்கள்தான் உண்மையான சிறுபான்மை மக்களின் நம்பிக்கை நட்சத்திரம். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 5-50

அம்மா, நீங்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசமாட்டீர்கள். தவறு என்றால், அது தவறு என்று திருத்திக்கொள்ளவும் தயங்கமாட்டீர்கள். எது முடியுமோ அதைச் செய்வீர்கள், கேட்காமலே. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு நிர்வாக மானியமாக ரூ.45 இலட்சமும், கட்டடம் கட்ட ரூ.40 இலட்சமும், வட்டார அலுவலகங்களுக்கு ரூ.15 இலட்சமும், ஆக ரூபாய் ஒரு கோடி வழங்கினீர்கள். இவ்வாண்டு பள்ளிவாசல்கள், தர்காக்கள் புதுப்பித்தல், இஸ்லாமியர் கபரஸ்தான், இடுகாட்டிற்குச் சுற்றுச் சுவர் கட்டுதல் அல்லது முட்கம்பி வேலி அமைத்தல் ஆகியவற்றிற்குச் சிறப்புப் பழுதுபார்ப்புப் பணிக்கென ரூ.40 இலட்சம் மானியமாக வழங்கப்படுமென அறிவித்துள்ளீர்கள். மேலும், வக்ஃப் வாரியத்திற்கு அஞ்சல் முத்திரைப் பொறி மற்றும் நிகரி, ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வழங்கப்படுமெனவும், தமிழ்நாடு ஹஜ் குழுவிற்கு கணினி மற்றும் குளிர்சாதன இயந்திரம் ரூபாய் ஒரு இலட்சம் செலவில் வழங்கப்படும் எனவும் அறிவித்து, அனைத்து இஸ்லாமிய மக்களின் பாராட்டுதல்களையும் பெற்றுள்ள மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, வக்ஃப் வாரிய உறுப்பினர் என்ற முறையிலும், தமிழ்நாடு ஹஜ் கமிட்டி உறுப்பினர் என்ற முறையிலும் என் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள், 2-12-1995 அன்று நடைபெற்ற குடிசைப் பகுதி மாற்று வாரிய வெள்ளி விழாவில், ஒரு முன்னோடி நடவடிக்கையாக, அடுக்குமாடி குடியிருப்புகளில் வாழ்பவர்களுக்கு, உயிர் மற்றும் உடமைகள் பாதுகாப்பு உறுதி செய்யும் நோக்கோடு, குடியிருப்புகள் பழுதுபார்க்க மானியமாக அரசு ரூ.5 கோடி நிதியுதவி வழங்கும் என அறிவித்தார்கள். இப்பணிகள் மேலும் தொடர ரூ.9.50 கோடி வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.14.50 கோடி செலவில் 29,510 அடுக்குமாடி குடியிருப்புகள் பழுதுபார்த்துப் புதுப்பிக்கும் பணிகள் நடைபெற்றுள்ளன.

தீ விபத்தைத் தடுக்க, தீப்பிடிக்காத கூரை வீடுகள், சென்னை, மதுரை, திருச்சி, சேலம், கோவை, நெல்லை ஆகிய நகரங்களில்

ரூ.56.92 கோடி செலவில், 15,308 குடும்பங்கள் பயன்பெறும் வகையில் சுற்றுச் சுவருடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மா அவர்கள், 2-12-1995 அன்று நடைபெற்ற குடிசைப் பகுதி மாற்று வாரிய விழாவில், குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க, ரூபாய் ஒரு கோடி மானியம் அளித்துள்ளார்கள். இம்மானியத்தைக் கொண்டு, வாரியம் 1996 ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டத்தை அமலாக்கி வருகிறது.

மகளிர் நலனில் அக்கறை கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் மூலம், மகளிர் பொருளாதார நிலையை உயர்த்தி, தன்னம்பிக்கை உடையவர்களாக மாற்றிட, 2001-2002 ஆம் ஆண்டில், இத்திட்டம் தொடங்கப்பட்டு, நகர குடிசைப் பகுதி பெண்களுக்கு 12,601 பேருக்குப் பயிற்சி அளித்து ரூ.50 இலட்சம் மானிய உதவியை வழங்கியுள்ளார்கள்.

மேலும், நாட்டின் விடுதலைக்கு வித்திட்டவர்களும், தமிழ் மொழி மேம்பாட்டிற்கு உழைத்திட்ட பெரியோர்களைப் போற்றிடும் வகையில், ரூ.35 இலட்சம் செலவில் தூத்துக்குடி, கட்டாரங்குளத்தில், வீரன் அழகுமுத்துக் கோன் மணிமண்டபமும், ரூ.75 இலட்சம் செலவில் கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் நினைவாக மணிமண்டபமும், ரூ.4.50 இலட்சம் செலவில் கேரள மாநிலம் வைக்கத்திலுள்ள தந்தை பெரியார் நினைவகத்தைச் சிறப்புப் பராமரிப்புச் செய்திடவும், தமிழக முன்னாள் முதல்வர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு ஓமந்தூர் கிராமத்தில் நினைவகம் அமைத்திடவும், தருமபுரி மாவட்டம் தொரப்பள்ளி கிராமத்தில், மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கு நினைவக மண்டபம் கட்டவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும, பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதித் திட்டங்கள் என பல திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராதாரவி அவர்கள் பேசுகின்றபோது அத்திட்டங்களையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

மேலும், நலிந்த நிலையிலுள்ள ஓய்வுபெற்ற பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியமாக மாதம் ரூ.2,000 வழங்கியதை அம்மாவின் அரசு ரூ.3,000 ஆக உயர்த்தி, 67 பத்திரிகையாளர்களுக்கு வழங்குகிறது. அதேபோல், ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இறந்துவிட்டால், அவரின் துணைவியாருக்கு மாதம் ரூ.500 வழங்கி வந்ததை ரூ.1,500 ஆக உயர்த்தியது அம்மாவின் அரசுதான்.



பிற்பகல் 5-55

அம்மா, எனது தொகுதி அரவக்குறிச்சியில் காசி விசுவநாத சுவாமி கோவில் திருப்பணி வேலைகள், உபயதாரர்கள் மூலம் ரூ.65 இலட்சம் செலவில் திருப்பணி செய்து, மீதி உள்ள திருப்பணி வேலைகள் செய்ய இயலாத நிலை உள்ளது. மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் திருக்கோயிலைப் பார்வையிட்டு, திருப்பணி மதிப்பீடு, பட்டயப் பொறியாளர் மூலம் தயார் செய்து, செயல் அலுவலர்/உதவி ஆணையர் மூலம் மனு அனுப்பப்பட்டுள்ளது. ஆகவே அரசு மானியம் கொடுத்து நிதி உதவி செய்தால், திருப்பணி வேலைகளை நிறைவு செய்து, மகா கும்பாபிஷேகம் செய்ய பேருதவியாய் இருக்குமெனப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்மா, எனது தொகுதியில் தென்னிலை கால்நடை நிலையம் (பொலிக்காளை பிரிவு) கால்நடைகளுக்கு சிகிச்சை அளிப்பதும், இப்பகுதியிலுள்ள கால்நடை மருந்தகங்களுக்கு காளைகளின் உயிரணுக்கள் விநியோகம் செய்யப்பட்டும் வந்தது. அந்நிலையம் பழுதடைந்ததால், சுமார் 75 ஆயிரம் கால்நடைகள் மருத்துவ வசதி பெறாத நிலை இருக்கிறது. அதை இயக்கிட வேண்டுமென்ற எனது கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தமைக்கு எனது தொகுதி மக்கள் சார்பாக நான் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அம்மா, சென்ற ஆண்டு என்னுடைய கன்னிப் பேச்சிலே எனது கரூர் மாவட்டம், எனது அரவக்குறிச்சி தொகுதி மிகவும் கடுமையான குடிநீர்ப் பஞ்சத்தால், எனது ஊரிலேகூட, 35, 40 நாட்களுக்கு ஒரு முறைதான் குடிநீர் வருகிறது என்று கூறினேன். அதன்பிறகு மாண்புமிகு அம்மா அவர்கள், 564 குடியிருப்புகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் முதற்கட்டமாக இரு பேரூராட்சிகள் - அரவக்குறிச்சி, பள்ளப்பட்டி பேரூராட்சிகளுக்கு தனி நிதி ஒதுக்கீடு செய்து தந்ததன் பேரில், இன்று 3 தினங்களுக்கு ஒரு முறை போதிய அளவு குடிநீர்

வருகின்றது. அப்பகுதி மக்கள், சிறுபான்மை சமுதாய மக்கள் எல்லாம் தங்களை மனதாரப் பாராட்டுகிறார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் இதயபூர்வ நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, என்னுடைய தொகுதியில் நாகம்பள்ளி, மலைக்கோவிலூர் போன்ற பல பகுதிகளில் கடும் குடிநீர்ப் பஞ்சம் உள்ளது. அப்பகுதி மக்கள், 'பாய' தன் பகுதிக்கு குடிநீர் கொண்டுவந்துவிட்டார்; நமக்கு வரவில்லையே என்று என்னைக் குறை கூறும் நிலை இருக்கிறது. ஆகவே தயவுகூர்ந்து அம்மா, மற்ற பகுதிகளுக்கான காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை விரைந்து முடித்துத் தர உத்தரவிடுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதி மலைக்கோவிலூரிலுள்ள திருச்சிராப்பள்ளி கூட்டுறவு நூற்பாலை சரிவர இயங்காத நிலை. அதனால் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பரிதவிக்கும் நிலை இருக்கிறது. அந்த ஆலையை இயக்குவதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, அந்த ஏழைத் தொழிலாளர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று அன்புடன் கோருகின்றேன்.

அம்மா, தங்களின் ஆட்சியில் அரவக்குறிச்சி தொகுதியை மிகவும் பின்தங்கிய தாலுகாவாக அறிவித்தால் தொகுதி முழுவதும் தொழில் வளம் பெருகி மக்கள் வேலைவாய்ப்பு பெற்று மகிழ்ச்சி அடைவார்கள் என்று இந்த நேரத்திலே எடுத்துக்கூறி, காலத்தின் அருமை கருதி, எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மரியாதைக்குரிய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் எனது நன்றியினைக் கூறி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, செய்தித் துறை சம்பந்தமான 2 மானியக் கோரிக்கைகள்மீது முடிந்தவரை சுருக்கமாக சில விஷயங்களைச் சொல்லி முடிக்கிறேன். ஆனால் சொல்ல வேண்டிய விஷயங்கள் மிக முக்கியமானதாக இருக்கின்றன. 4, 5 பிரதான பிரச்சினைகள் வீட்டு வசதி வாரியத் துறையில்



இருக்கின்றன. நான் துறையைத்தான் சொல்கிறேன். அவை நீடித்து நிலைத்து நிற்கின்றன. ஒன்று, கையகப்படுத்தப்பட்ட காலியிடங்களில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பயன்படுத்தப்பட முடியாமல், நிலம் கொடுத்தவர்களுக்கும் அது பயன்படாமல் தொடர்ந்து நீடித்து வருகிற பிரச்சினை. அது வழக்கு மன்றத்தில் இருக்கிறது என்ற நிலையில் 15, 20 வருடங்களாக பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள்— உதாரணத்திற்கு கோவையைப்பற்றிச் சொல்ல வேண்டுமென்றால், காளப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் 2,000-க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலம் 15 ஆண்டுகளுக்கு முன்னால் வீட்டு வசதி வாரியத்தால் கையகப்படுத்தப்பட்டு, விலை குறைவாக இருந்ததால் விவசாயிகள் கோர்ட்டுக்கு போனதனால், விவசாயிகளுக்கும் திரும்ப நிலம் கிடைக்கவில்லை; வீட்டுவசதி வாரியமும் கட்டவில்லை; நிலம் அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. அதேபோல மாநிலத்தில் பல பகுதிகளில் இருக்கின்றது. இது ஒரு பிரச்சினை.

இரண்டாவது பிரச்சினை, 15, 20 ஆண்டுகள் ஆனதற்குப் பிறகும் பயன்பாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய அவர்களுக்கு காலம் முடிந்ததற்குப் பிறகும் பத்திரத்தைப் பதிவுசெய்து கொடுப்பதில் பிரச்சினை இருக்கிறது. பதிவு செய்து கொடுப்பதில் எப்படி பிரச்சினை என்று சொன்னால், 15 மடங்கு, 20 மடங்கு அதிகமாக இப்போது கூடுதல் பணம், ஏற்கெனவே நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு மேல் கட்ட வேண்டும் என்ற நிர்ப்பந்தம் வாரியத்தின் மூலம் கொடுக்கப்படுகிறது. அந்த வீடுகள்......

*பிற்பகல் 6-00*

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே பணம் கட்டி முடிக்கப்பட்ட வீடுகளுக்கு 'Sale deed' கொடுக்கவில்லை என்ற குறைபாட்டைச் சொன்னார்கள். 'Sale deed' கொடுக்கப்படாத இடங்களிலே ஏற்கெனவே அந்த இடங்களுக்கான வழக்குகள்., வழக்கு மன்றத்திலே இருக்கும். அதற்கான, அதிகமாக உயர்த்தி இருக்கிற அந்தத் தொகையைக் கொடுப்பார்களேயானால் உடனடியாக அந்த 'Sale deed'-ஐக் கொடுப்பதற்கு வாரியம் தயாராக இருக்கிறது. இப்படிப்பட்ட குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்வதற்காகத்தான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது

ஓர் உயர்மட்ட கமிட்டியை அமைத்து, அதிலே உள்ள குறைகளையெல்லாம் நிவர்த்தி செய்கிற பணிகளை அவர்கள் பதவிக்கு வந்தபிறகு ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியப்படுத்துகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் அது அவ்வாறு நடந்துகொண்டிருக்கிறதா? அவ்வாறு உண்மையில் நடந்து இருக்கிறதா என்பதைப்பற்றி ஒரு மறு ஆய்வு செய்ய நீங்கள் நியமித்த கமிட்டி முன் வரவேண்டும். 1978-வது வருடத்திலே ஒப்படை செய்யப்பட்ட வீடுகள், இப்போது வரைக்கும் 25, 26 வருடங்கள் ஆகப் போகிறது, கொடுக்கவில்லை. அது என்னவென்று சொன்னால், G.O.Ms.No.1534, Housing and Urban Development Department, நாள் 9-11-1978-ல் அங்கீகாரம் அளித்து 222.55 ஏக்கர் தனியார் நிலமும் 11.91 ஏக்கர் அரசு நிலமும் உள்ளடக்கிய திட்டமாக மதுரை மாநகரம் எல்லிஸ் நகர் திட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் சுமார் 107.82 ஏக்கர் நிலம் மட்டும் ஆர்ஜிதம் செய்யப்பட்டு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் 2,614 வீடுகள் அடுக்குமாடி மற்றும் தனி வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு உள்ளன. 1983 ஆம் ஆண்டு முதல் தற்காலிக விலையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 20 ஆண்டுகளாக வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பெற்றும் இன்னும் கிரயப் பத்திரம் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற மதுரை பகுதியைச் சேர்ந்த எல்லிஸ் நகரிலே இருக்கிற குறைகளை, அந்தப் பகுதியினுடைய குடியிருப்போர் சங்கங்கள் மூலம் இப்போது இந்தத் துறையினுடைய தலைவர்கள் மூலம் பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கிறோம். அதிலே உள்ள குறைகளையெல்லாம் இப்போது போர்டிலே வைத்து அதை உயர்மட்ட கமிட்டிக்கு அனுப்பி, அந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை நாங்கள் செய்துகொண்டிருக்கிறோம் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி. இதிலே இந்தக்



கூடுதல் தொகை என்பது எப்படி, எவ்வளவிலே இருக்கிறது என்பதை இந்த அவைக்கு முன்னால் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நில ஆர்ஜிதத்திற்காக செலவழிக்கப்பட்ட தொகை ரூ.738.84 இலட்சம். அதற்கு கூட்டு வட்டி ரூ.2197.04 இலட்சம். செலவழிக்கப்பட்ட தொகை ரூ.738 இலட்சம், அதற்குக் கூட்டுவட்டி ரூ.2,197 இலட்சம். அபிவிருத்திச் செலவுகள் ரூ.276.60 இலட்சம். அதற்குக் கூட்டுவட்டி ரூ.2,789.25 இலட்சம். வட்டி, அபராத வட்டி, கூட்டு வட்டி, வட்டிக்கு வட்டி; 'சுண்டைக்காய் கால் பணம், சுமைக்கூலி முக்கால் பணம்' என்று கிராமத்தில் ஒரு பழமொழி உண்டு. இந்தத் தொகைகளை, அவர்கள் பணம் கட்டினால் . . .

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வாறு உள்ள குறைகளையெல்லாம் சரி செய்வதற்காகத்தான் இப்போது அந்தப் பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர்களான திரு. ஹக்கீம் போன்றவர்கள், அதேபோல திரு. நன்மாறன் போன்றவர்கள் எல்லாம் அந்தச் சங்கத்தை அழைத்து வந்து, எங்களுடைய துறையைச் சார்ந்த உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி, அதிலே உண்மையிலேயே குறைபாடுகள் இருக்குமானால், அவற்றை நிவர்த்தி செய்வதற்கான பணிகளை வாரியம் செய்து வருகிறது. அந்த வகையிலே வெகு சீக்கிரத்திலே உண்மையான, நியாயமான குறைகள் இருக்குமானால், அவற்றை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆலோசனையின் பேரில் நிவர்த்தி செய்து தருவோம்.

*பிற்பகல் 6-05*

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கையிலே இருக்கும் குறிப்புகள் 2-2-2001. 2-2-2001 தி.மு.க. ஆட்சிக் காலம்தான். இந்தச் சமாச்சாரங்கள் முழுவதும் அப்போது தொடங்கப்பட்டதுதான். அவர்கள் கட்டிய வீடுகள் எவ்வளவு பலவீனப்பட்டது என்று முதல்வர் அவர்கள் சொன்னார்கள். நூற்றுக்கு நூறு உண்மை. இடம் தேர்வு செய்யப்படக் கூடாத இடத்திலே, ஜனங்கள் குடியிருக்க முடியாத இடத்திலே கட்டியதால் வந்த விளைவுதான் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. அது ஏராளமான பக்கங்களில், விவரங்களில் இருக்கிறது. நேரம் கருதி

நான் கூறவில்லை. நான் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். 2001-லே நமமுடைய வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், மதுரை சிறப்புக் கோட்டம், எல்லிஸ் நகர் திட்டம், ஒதுக்கீடு செய்யப்பட்ட மனைகளுக்கான இறுதி விலை நிர்ணயம் செய்து அறிக்கை வெளியிடப்படுகிறது; வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 2-2-2001. இதிலே, நான் சொல்லிய புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. ரூ. 2 இலட்சத்திற்கு வாங்கிய ஒரு வீடு, இப்போது திரும்ப அதை கிரயம் பண்ணிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், ரூ.8 இலட்சம் மேல்கொண்டு கட்ட வேண்டுமென்று கேட்டால், 20 வருடம் இருந்ததற்குப் பிறகு, இடிந்த நிலையிலே இருக்கும் வீட்டிற்குப் பணம் தருவார்களா? தயவுசெய்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணையுடன் இதைப் பார்க்க வேண்டும். Not only Ellis Nagar, அதே மாதிரி . . .

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கருணாகரன் அவர்களுக்கு, இதற்காகத்தான், மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் ஏற்கெனவே சொன்னார். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு குழு போட்டு இருக்கிறார்கள். இதுபோன்ற கோரிக்கை, நியாயமான கோரிக்கை, இதை குழுவில் வைத்துப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே இந்தப் பிரச்சினைக்கு பரிகாரம் தேடப்படும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நிதி அமைச்சர் அவர்களின் விளக்க உரைக்கு நன்றி. அதேபோல, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், திருவான்மியூர், இதே பிரச்சினை. அதேமாதிரி, கோயம்புத்தூர் S.A.S.S. காலனி, காலபபட்டி, கணபதி சிவானந்தபுரம் உள்ளிட்ட குடியிருப்புகளில் இதேமாதிரியான பத்திரப் பதிவுப் பிரச்சினை. எல்லாம் நிலுவையில் இருக்கின்றன. அவர்களுக்கு அது கொடுக்க வேண்டும். நியாயமான கட்டணங்களை ஏற்கெனவே ஒரு விலை நிர்ணயம் செய்திருந்தோம் என்று சொன்னால், அதைச் செய்ய வேண்டும். 15 வருடத்திற்கு முன் அப்போது நிர்ணயம் செய்ததற்கு வட்டி போடுவது என்பது நியாயம் கிடையாது. அந்த வட்டிக்கு கூடுதல் வட்டி போடுவது என்பது நியாயம் கிடையாது. ஏனென்றால் ** நான் பின்னாலே சொல்கிறேன். ஆகையினால் இதுகுறித்து விசேஷக் கவனம் செலுத்த வேண்டும். அடுத்து.......*

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்துல் காதருக்கும் அமாவாசைக்கும் முடிச்சுப போடக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** சம்பந்தப்படுத்திப் பேசுவது முறையல்ல. அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. கருணாகரன், அமைச்சர், இரண்டு மூன்று தடவை சொல்லிவிட்டார். ஒரு குழு போடப்பட்டிருக்கிறது. அந்தக் குழு எல்லாவற்றையும் பரிசீலிக்கும், பரிசீலிக்கும் என்று சொல்லிவிட்டார். (குறுக்கீடு) எனவே அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. சம்பந்தம் இல்லாதது. திரு. கருணாகரன், இன்னும் இரண்டு மணித்துளிகளில் பேசி முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** நான் இரண்டு நிமிடங்கள்கூட பேசவேயில்லை இன்னும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை, இல்லை. முக்கியமான விஷயங்களைச் சொல்ல அனுமதிக்கவில்லையென்றால் நான் பேசவேயில்லை, உட்கார்ந்துவிடுகிறேன். நீங்கள் நடத்திக்கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 9 மணித்துளிகளுக்கு மேலே பேசிவிட்டீர்கள். மூன்று அமைச்சர்கள் பதில் உரை சொல்ல வேண்டும். சட்டமன்றம் என்பது திரு. கருணாகரனுக்கு மட்டுமல்ல. இன்னும் திரு. இராசேந்திரன் பேச வேண்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** ஒதுக்கப்பட்ட நோமாவது உண்டு இல்லையா? அடுத்து, கட்டி முடிக்கப்பட்டும், விற்பனையாகாத, ஒதுக்கீடு செய்ய முடியாத நிலையில் இருக்கிறது. வாங்கமாட்டேன் என்கிறார்கள் என்பது ஒன்று இருக்கிறது. ஆனால் கேட்டால் ஒதுக்கீடு செய்வது இல்லை என்ற நிலையும் இருக்கிறது. அதற்கும் ஏராளமான விவரம் இருக்கிறது. அரசினுடைய சிறப்புக் கோட்டாவிலிருந்து ஒரு வீட்டை வாங்குவதற்கு ஒரு நாடாளுமன்ற உறுப்பினருக்கு, அவருடைய மனைவி ஆசிரியராக இருந்து, எல்லாத் தகுதியும் பெற்றும்கூட அதை வாங்கிக் கொடுப்பதற்கு 6 மாதம் போராட வேண்டி வந்தது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அரசினுடைய ஒதுக்கீட்டில் உள்ள வீடுகளை யார் கேட்டாலும் உடனடியாக எழுதிக் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். அதுமட்டுமல்ல. இன்றைக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் நடைபெறுகின்ற விற்பனை விழாக்களிலே இந்த வீடுகளை விடுவித்து யார் கேட்டாலும் கொடுக்க வேண்டும். உடனடியாக விற்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய தலையாய கொள்கையாக நாம் எடுத்து இருக்கிறோம். அந்தப் பணியை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உடனடியாக, எல்லாம் விற்பனை செய்யப்பட வேண்டும் என்ற கொள்கையை இன்றைக்கு அறிவித்து இருக்கின்றார்கள். அந்த வகையிலே செயல்படுகின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 6-10*

**திரு. கே.சி. கருணாகரன்:** சமயணம்பட்டி என்ற இடத்தில் அரசு ஊழியர் குடியிருப்புகள், விநியோகிக்கப்பட்டு இருக்கின்றன. 36 வீடுகள், 10 வருடங்களாக காலியாக இருக்கின்றன. அந்த ஊழியர்கள் தாங்களே எடுத்துக்கொள்கிறோம் என்று கேட்கிறார்கள், கூடுதலாக. ஆனால் அதைக் கொடுக்காமல் காலியாகவே இப்போதும் வைத்துக் கொண்டிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. பல நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, விற்பனை ஆகாமல் இருக்கின்றன. அதையும் சேர்த்துப் பார்க்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு மிக முக்கியமான பிரச்சினை. கடந்த இரண்டு ஆண்டுகளாக நடவடிக்கை இருந்தும் நம்முடைய மேலாண்மை இயக்குநாகம், வீட்டு வசதி வாரியத்தினுடைய M.D., உள்பட தலையிட்டும் பழைய நிலையிலேயே அவர்கள் சொன்னதையே சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். 107 வீடுகளுக்கான காலிமனைகள், 1987-வது வருடத்தில் 107 சாதாரண டெக்ஸ்டைல் கம்பெனி தொழிலாளிகள் இடத்தை காலி மனையாக வாங்குகிறார்கள். கிரயம் பண்ணியிருக்கிறார்கள் ஒவ்வொருவர் பெயரிலும், 10 ஏக்கர் இடம் வாங்கி. வாரியம் ஒட்டுமொத்தமாக acquire பண்ணுகிறபோது இதையும் எடுத்துக்கொள்கிறார்கள். ஒரு நயா பைசாகூட வாரியம் செலவு பண்ணவில்லை. வீடு அங்கே கட்டவில்லை. 17 வருடங்களாக காலி இடமாக இருக்கிறது. அந்த இடத்திலே அபிவிருத்திக் கட்டணம் ரூ.2 இலட்சம் என்று 1987-ல் நிர்ணயம் பண்ணுகிறார்கள். அப்போது



அவர்களால் அதைக் கட்ட முடியவில்லை என்கிறார்கள். இப்போது என்ன கேட்கிறார்கள் என்றால் ரூ.50 இலட்சம் அதற்குக் கட்ட வேண்டும் என்று கடந்த இரண்டு ஆண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதற்கு? வீட்டு வசதி வாரியம் அதிலே என்ன பண்ணியது? வீட்டு வசதி வாரியத்தினுடைய நிலம் இல்லை. அவர்கள் கிரயம் பண்ணி, பத்திரம் வைத்திருக்கிறார்கள். இதை அவர்களுக்கு ஒப்படைக்கவில்லை. ரூ.50 இலட்சம் அபிவிருத்திக் கட்டணம் M.D. நேரில் போய் verify பண்ணிவிட்டு, போன வாரத்தில் போய்ப் பார்த்துவிட்டு வந்து, நாங்கள் ஒன்றும் பண்ண முடியாது, Government-இடம் போய்ப் பேசுங்கள், இல்லையென்றால் கோர்ட்டுக்குப் போங்கள் என்பதுதான் இந்த வாரியத்தின் M.D. reply. இது சரியல்ல. அந்த இடத்தை நியாயபூர்வமான முறையில் ஏதாவது அவர்கள் அபிவிருத்தி செய்திருந்தால், பழைய நிலையில் ரூபாய் இரண்டு இலட்சத்தை வாங்கிக் கொண்டு, அந்த 107 ஏழைத் தொழிலாளிகளுக்கும் அந்த நிலத்தை உடனடியாக வழங்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் உரையை முடியுங்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அடுத்து, பராமரிக்க வேண்டியது சம்பந்தமாக. ஒன்று, வீட்டு வசதி வாரியம் பராமரிக்க வேண்டும். இல்லையென்றால் உள்ளாட்சி மன்ற அமைப்புகள் பராமரிக்க வேண்டும். சில தினங்களுக்கு முன்னால் எழுப்பப்பட்ட கேள்வியின்போதுகூட அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். ஆனால் அவ்வாறு இல்லை. எனக்கு இப்போது கிடைத்திருக்கிற letter-படி இப்போது வரைக்கும் உள்ளாட்சி மன்றம் எடுத்துக்கொள்ளவில்லை. SISS Colony, உப்பிலிபாளையம் போன்றிருக்கிற கோவை மாநகராட்சிப் பகுதியில் இப்போது வரைக்கும் எடுத்துக் கொள்ளப்படவில்லை ....

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் வீடுகளைச் சரிபார்க்க வேண்டுமென்று சொன்னால், ஏற்கெனவே வீடுகளைப் பெற்றவர்கள்தான் சரி பண்ண வேண்டும். ஏனென்றால், அதிலே சிறிய குறைகளாக இருந்தால், இரண்டு வருட அளவிலே வாரியம் சரி செய்யும். மற்றும் கடக்கால் அதுபோன்ற குறைபாடுகள் இருந்தால் ஐந்து வருடங்கள் வரை வாரியம் அதைச் சரி செய்வதற்கு

குடிசைமாற்று வாரிய வீடுகள் பழுதாகி இருக்கின்றன என்று சொன்னால், உடனடியாக அதைச் சரிசெய்வதற்கான வழிவகையைக் காண்போம்.

பிற்பகல் 6-15

**திரு கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்று சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வினாயகமூர்த்தி, அவர் சொல்லி முடிக்கட்டும். அவர் ஒரு மணித்துளியில் பேச்சை முடித்துவிடுவார். முடித்தவுடன் உங்களைக் கூப்பிடுகிறேன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுப் பகுதியிலே குறைந்தபட்சம் குடிநீர் வசதியாவது செய்வதற்கு இந்தச் சட்டமன்ற உறுப்பினர் நிதியினைப் பயன்படுத்த ஒரு அனுமதி கொடுக்க வேண்டும். ஏனென்றால், முன்பு இருந்தது, இப்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. நீங்களும் செய்வதில்லை. நாங்கள் செய்யலாம் என்று சொன்னால் மாநகராட்சி நிறுத்தி வைத்திருக்கிறது. விளக்கு போடக்கூட அனுமதிப்பதில்லை. இது அநியாயம். ஆகவே சட்டமன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் நிதியிலிருந்து அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவு மக்களுக்கு அந்த அடிப்படை தேவைகளைச் செய்வதற்கு அனுமதி தர வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச்சை முடியுங்கள். திரு. இராசேந்திரன். (குறுக்கீடு) இல்லை, 15 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன. இன்னும் இரண்டு உறுப்பினர்கள் பேச வேண்டும். 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும். திரு. சோ. இராசேந்திரன். (குறுக்கீடு) திரு. வினாயகமூர்த்தி, என்ன கேளுங்கள்.

**திரு. எஸ்.ஜி. வினாயகமூர்த்தி:** ஒரு விளக்கம். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து குடிசைமாற்று வாரியத்திற்குப் பணம் கொடுக்கலாம் என்று ஓர் ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதன்படி கொடுக்கின்றபோது மேற்பார்வை செலவுக்கென 12-1/2 சதவிகிதமும், எதிர்பாராத செலவுக்கென 2-1/2 சதவிகிதமும் ஆக 15 சதவிகிதம் எடுத்துக்கொண்டுதான் மற்றவற்றுக்கு மதிப்பீடுகள் தயார் செய்கிறார்கள். உதாரணத்திற்கு, நான் என்னுடைய தொகுதியில் கடந்த



இரண்டு ஆண்டுகளில் ரூ. 40 இலட்சம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறேன். அதில் ரூ. 6 இலட்சம் இப்படி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவிர்க்கப்பட வேண்டுமென்று ஒரு கோரிக்கையாக நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி, செய்தி மற்றும் விளம்பரம், சுற்றுலா ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் மக்களின் குடியிருப்புத் தேவையைப் பூர்த்தி செய்வதிலே தமிழ்நாடு வீட்டு வசதி வாரியமும் அதேபோன்று கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும் பெரும் பங்கினை வகிக்கிறது என்றால் அது மிகையாகாது. நமது தமிழ்நாட்டைப் பொறுத்த அளவில் நகர்ப்புறங்களில் கிட்டத்தட்ட 837 கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்கள் செயல்படுகின்றன. அதேபோன்று கிராமப்புறங்களில் மக்களது குடியிருப்புத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற அளவிலே 196 வீட்டு வசதிச் சங்கங்கள் தமிழகத்தில் செயல்படுகின்ற சூழ்நிலையில், இவ்வாறான கூட்டுறவுச் சங்கங்களில் கடன்கள் வழங்குவதிலே பல்வேறு காலதாமதங்கள் ஏற்படுகின்றன. பல்வேறு சூழ்நிலைகளிலே அந்தக் கடன்கள் பயனீட்டாளர்களுக்கு செல்வதற்கு மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது என்ற அடிப்படையில், கடன்கள் வழங்குவதற்கான அந்த முறையை மாற்றியமைத்து, மிகவும் எளிதாக, காலம் கடக்காமல் கடன்கள் வழங்குவதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று இன்றைய சூழ்நிலையில் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் கடன் பெறுவதற்கு பல்வேறு ஸ்தாபனங்கள், L.I.C., மற்றும் வணிக வங்கி போன்ற ஸ்தாபனங்களும் போட்டி போட்டுக்கொண்டு வட்டி விகிதத்தைக் குறைத்து கடன்கள் வழங்குவதன் மூலமாக கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களிலும் அதுபோன்ற நிலையிலே வட்டியைக் குறைப்பதற்கான தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தத் தருணத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோன்று கிராமப்புற மக்கள் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் பெற்ற கடனுக்கான வட்டி, அபராத வட்டி ஆகியவற்றைத் தள்ளுபடி செய்து தமிழக அரசு சென்ற கூட்டத்தொடரில் அறிவித்தது.

அந்த அறிவிப்பு என்பது இன்று வரை முறையாக உறுப்பினர்களைச் சென்றடையாத சூழ்நிலையில் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன என்ற அடிப்படையில், உடனடியாக அந்த உறுப்பினர்களின் கடன் மீதான வட்டி, அபராத வட்டி தள்ளுபடி என்று அறிவித்ததை வரவு வைப்பதற்குத் தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், இதுபோன்ற கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களில் உறுப்பினர்கள் கடன் திருப்பிச் செலுத்தியபின்புகூட, அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய, அவர்கள் அந்தச் சங்கங்களில் தாக்கல் செய்த பத்திரங்கள் கிடைப்பதற்கு, ஆண்டுக் கணக்கில் காலதாமதம் ஏற்படுகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பத்திரங்கள் உடனடியாகக் கிடைப்பதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கத்திலே கடனைக் கட்டி முடித்தபின்பு அதனுடைய பத்திரங்கள் திருப்பி வரவில்லையென்று சொன்னார்கள். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, அப்படிப்பட்ட குறைகளெல்லாம் இருக்கக்கூடாது, பணம் கட்டி முடித்தவுடன் உடனடியாக வழங்கப்பட வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். அந்த வகையிலே உடனடியாக வழங்கப்படுகிறது என்பதைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** அமைச்சருடைய விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் இங்கு ஒரு கருத்தினை வலியுறுத்திக் கூறினார்கள். திருவான்மியூர் கொட்டிவாக்கத்திலே பத்திரிகையாளர்களுக்கு 134 வீடுகள் வீட்டு வசதி வாரியம் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டன. அதற்கு அரசு ரூ. 20 இலட்சம் மானியம் வழங்கியது. ஆனால் மானியம் ஓராண்டு கழித்து வாரியத்திற்கு வந்து சேர்ந்ததால், அதற்கு வட்டி கிட்டத்தட்ட ரூ. 6.8 இலட்சம் வரை பத்திரிகையாளர் சங்கம் கட்டினால்தான் கிரயப் பத்திரம் வழங்க முடியும் என்று வாரியம் ஒரு கடிதம் அனுப்புகிறது. இதில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலையிட்டு அந்த வட்டியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று இந்தத் தருணத்திலே அவர்களுடைய கருத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.



பிற்பகல் 6-20

அதேபோல, செய்தித் துறை என்று வரும்போது, தமிழகத்திலே தயாரிக்கப்படுகின்ற சிறந்த திரைப்படங்கள் தேர்வு செய்யப்படும்போதும், தேர்வுக் குழுவிலே தமிழகத்தைப் பொறுத்தமட்டிலும், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பிலும், அதேபோல தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கத்தின் சார்பிலும், பிரதிநிதிகள் இடம்பெற வேண்டும் என்ற ஒரு கருத்தை வலியுறுத்தி கூறிக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, திரையரங்குகளில் திரைப்படங்களை - செய்தித் திரைப்படங்களை தற்போது சரியாக திரையிடுவது இல்லையென்ற ஒரு கருத்து நிலவி வருகின்றது. நல்ல கருத்துகளுள்ள செய்திப் படங்கள் திரையரங்குகளிலே கட்டாயம் திரையிடப்பட வேண்டும் என்று, அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழகத்திலே உள்ள பல்வேறு தலைவர்களுடைய பிறந்த இல்லங்களிலே - நினைவிடங்களிலே காப்பாளர்களுடைய பணியிடங்கள் காலியாக உள்ளன. கன்னியாகுமரியிலே உள்ள காந்தி மணிமண்டபம், அதேபோல எட்டையபுரத்திலே உள்ள பாரதியார் பிறந்த இல்லம், விருதுநகரிலே உள்ள காமராஜர் பிறந்த இல்லம், ஈரோட்டிலே பெரியார் அவர்கள் பிறந்த இல்லம், காஞ்சிபுரத்திலே அண்ணா அவர்கள் பிறந்த இல்லத்திலே காப்பாளர் பணியிடம் ஒன்று காலியாக உள்ளது. அந்தப் பணியிடங்களை நிரப்புவதன் மூலமாக அந்த இல்லங்களைப் பராமரிப்பதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோவில்பட்டியிலே -- வாடகைக் கட்டடத்திலே இயங்கிவரும் பொது நூலகத்திற்கு நகராட்சியால் இடம் ஒதுக்கப்படாத சூழ்நிலை இருந்துவருகிறது. அந்த நகராட்சியால் இடம் ஒதுக்கப்படுவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மன்னார்குடியிலே 60 வருட காலமாக இயங்கிவருகின்ற பழமையான நூல் நிலையத்திற்கு இதுவரை சொந்தக் கட்டடம் இன்றி, வாடகைக் கட்டடத்திலே இயங்கிவருகின்றது. இதற்காக அரசு நிதி ஒதுக்க முன்வந்தும் நகராட்சி இதுவரை இடம் அளிக்க மறுத்து வருகிறது. உடன் அரசு தலையிட்டு

இடம் பெற்று நிதி ஒதுக்கீடு செய்வதன்மூலமாக அந்த நூலகம் கட்டித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இந்தியாவிலே பல்வேறு இயற்கை வளங்கள் இருந்தாலும்கூட, ஊட்டி, கொடைக்கானல், கன்னியாகுமரி, ஒகேனக்கல், குற்றாலம் இவையெல்லாம் இயற்கை தந்த வரம். இந்திய நாட்டினுடைய இயற்கை வளத்திற்கு இது ஒரு எடுத்துக்காட்டான அமைப்பு என்ற காரணத்தினால், அங்கே உள்ள மரங்கள் வெட்டப்படுவதன் மூலமாக பல்வேறு கட்டடங்கள், குடியிருப்புகள் கட்டப்படுவதற்கு மரங்கள் வெட்டப்படுவதன் மூலமாக அங்குள்ள இயற்கை பாழடிக்கப்படுகிறது என்ற காரணத்தினால், அந்த இயற்கை வளங்களைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்று பல்வேறு துறைகளிலே அரசு அதிகாரிகள் இருந்தும், இதுபோன்ற பல்வேறு சட்டங்கள் இருந்தும்கூட, அதைத் தடுப்பதற்கு போதிய நடவடிக்கை இல்லை என்ற அடிப்படையிலே அரசு அதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன்.

அதேபோல, தமிழக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக நடத்தப்படும் விடுதிகள், தங்கும் அறை என்பதும், அதேபோல அங்கு வழங்கப்படுகின்ற உணவு என்பதும் சரியான பராமரிப்பு இல்லாத சூழ்நிலை உள்ளது. அதேபோல அங்கே விடுதிகளிலே உள்ள அறைகளுக்கு அதிக அளவிலே வாடகை வசூலிக்கப்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால் சுற்றுலாத் தலத்திற்கு வருகின்ற சுற்றுலாவாசிகள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள் என்ற அடிப்படையில் ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இரண்டு மணித்துளிகளிலே உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் எந்த விடுதியில் அதுபோன்ற நிலைகள் என்பதைக் குறிப்பிட்டுச் சொல்வாரேயானால், நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தமிழ்நாடு ஓட்டல்கள் பூராவுமே அநேகமாக சரியாக நடத்தப்படாததனுடைய விளைவாக பத்தினை தனியாருக்கு விட்டுவிட்டதாக நீங்களே சொல்லியிருக்கிறீர்கள். சரியாக நடத்தியிருந்தால் அதை ஏன் தனியாருக்கு விட வேண்டிய அவசியம் வந்திருக்கிறது?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை.

பிற்பகல் 6-25

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நஷ்டத்தில் இயங்கக் கூடிய ஓட்டல்கள்—தமிழ்நாடு ஓட்டல்கள்—தனியாருக்கு குத்தகைக்கு விடப்படும் என்கிற திட்டத்தை 1998 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுவந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன் பேசுங்கள்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சோ. இராசேந்திரன், திரு. உலகரட்சகன் ஏதோ கேட்கிறார்.

**திரு. பி.எஸ். உலகரட்சகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஓட்டல் சென்ற ஆட்சிக் காலத்திலே— மகாபலிபுரத்திலே நடந்துகொண்டிருந்த ஓட்டலை—சென்ற ஆட்சிக் காலத்திலே, தனியாருக்கு விற்றுவிட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அ. மில்லர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஆட்சியிலும், எந்த ஓட்டலும் விற்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக நடத்தப்படுகின்ற விடுதிகளிலே அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக்

கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல எட்டயபுரத்திலே மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பிறந்த அந்தத் தலத்தை சுற்றுலாத் தலமாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோல், எட்டயபுரத்திலே இஸ்லாமிய புலவர் சீறாப்புராணம் ஆக்கிய உமறுப்புலவர் அவர்களுடைய மணிமண்டபம் கட்டுவதற்கு கருத்துரு என்ற அடிப்படையிலே அவர் நினைவு தினமான மே 26 ஆம் நாளை அரசு விழாவாக எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு நன்றிகூறி விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் செய்தி மற்றும் சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையிலே என்னைப் பேசப் பணித்த தங்களுக்கும், அவையோர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, காலத்தை அனுசரித்து மிகச் சுருக்கமாக சில விஷயங்களை மட்டும் இங்கே பதிய வைத்து, விடைபெறுகிறேன்.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டபடி மத்திய, மாநில அரசு நிதியுதவியோடு பல்வேறு திட்டங்களைக் குறிப்பிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவையனைத்தும் நிறைவேற்றப்பட்டால் நிச்சயமாக தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற பல பகுதிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் குடிசைவாழ் மக்களுக்கு பல நல்ல திட்டங்களை மானியத்தோடு வழங்கியிருக்கின்றன. அனைவருக்கும் பொருத்தமான நிலையிலே மத்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிற காரணம், இந்தத் திட்டத்தின்படி நகர, குடிசைப் பகுதிகளிலே புதிய வீடுகள் மத்திய அரசு மானியத் தொகை 50 சதவிகிதத்துடன், ஹட்கோ நிறுவனத்தினுடைய கடன் 40 சதவிகிதத்துடன் பயன்பெறும் குடும்பங்கள் 10 சதவிகிதம் என்பதோடு ஏறத்தாழ ரூ. 40,000/-க்கு ஒரு சாதாரண ஏழைக் குடும்பத்திற்கு இந்த வசதி வாய்ப்பு கிடைக்கின்றபோது, இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது பல்வேறு சிக்கல்கள் எழுகின்றன. பொதுவாக இந்தப் பயனாளிகள்,



மனுதாரர்கள் பட்டா நிலத்தில் வசிக்க வேண்டும். வறுமைக்கோட்டிற்குக் கீழே அவர்கள் வாழ வேண்டுமென்ற நிலையில் அந்தப் பட்டியலில் இடம் பெற்றிருந்தால்தான் அவர்களுக்கு இந்த உதவி கிடைக்கிறது. நகர்ப்புறங்களில் இப்படிப்பட்ட விஷயங்களில் பெரும்பாலான மக்களுக்கு பட்டா கிடைப்பது கிடையாது. இன்னும் சொல்லப்போனால் P.R.O. list-ல், B.P.L. list-ல் கூட அவர்களுடைய பெயர் இருப்பதில்லை. ஆகையினால், இந்தத் திட்டத்தை அமல்படுத்துகிறபோது இருப்பிடச் சான்றும், குடும்ப அட்டையும் இருந்தால், அப்படிப்பட்டவர்களுக்கு இந்த வால்மீகி அம்பேத்கர் திட்டத்தின்மூலம் கடன் தருகின்ற வாய்ப்பினை இந்த அரசு உருவாக்க வேண்டும்.

அதைப்போல செய்தி-சுற்றுலாத் துறையிலே பத்திரிகையாளர்களுக்கு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்திருந்தது செயல்படுத்தப்பட்டு வருகிறது. என்னைப் பொறுத்தவரை பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதை நான் மிகவும் வரவேற்கிறேன். அதுமட்டுமல்லாமல், ரூ. 2,000/-, ஓய்வூதியத்தை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 3,000/- என்று உயர்த்திக் கொடுத்திருப்பதை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதுமட்டுமல்ல, பத்திரிகையாளர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு ஓய்வூதியம், அவர்கள் மனைவிமார்களுக்கு இதுவரை வழங்கி வந்த தொகை ரூ. 500-ஆக இருந்தது. அதை நமது அரசு ரூ. 1,500 ஆக உயர்த்திக் கொடுத்ததை பாரதிய ஜனதா கட்சியின் சார்பாகப் பாராட்டி இந்தச்சலுகைகளை, இந்தத் உதவித் தொகையை சென்னை போன்ற பெரு நகரங்களில் வாழ்கின்ற ஜெர்னலிசம் படித்த நிருபர்களுக்கு மட்டுமல்ல, தாலுகா அளவிலே வாழ்கின்ற பத்திரிகையாளர்களுக்கும், செய்தியாளர்களுக்கும் இந்தப் பயன் கிடைக்கச் செய்ய வேண்டும். காரணம், இது ஏதோ ஓர் ஆர்வத்திலே, சிறு வயதிலே பத்திரிகையிலே சேர்ந்த 10 ஆண்டுகாலம், 50 ஆண்டுகாலம் பத்திரிகையிலே பணியாற்றி, இன்றுவரைக்கும்கூட மிகப் பெரிய பத்திரிகைகளில்கூட ரூ. 500, ரூ. 1,000 வரைக்கும் மாத ஊதியமாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். செய்தி விளம்பரங்களிலே கிடைக்கின்ற சிறு, சிறு தொகைதான் அவர்களுக்கு மாதாந்திர வருமானமாக இருக்கிறது. ஆகையினால், அவர்களுக்குப் பயன்தருகின்ற வகையிலே நமது அரசு இந்த ஓய்வூதியத் திட்டத்தை நீட்டித்துத் தரும்படி பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 6-30

அதுமட்டுமல்லாமல், செய்தி, விளம்பரங்கள் தருகிறபோது, அரசினுடைய விளம்பரங்கள், மாவட்ட அளவிலே கொடுக்கின்றபோது மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகத்தான் இப்போது விளம்பரங்கள் கொடுக்கபபடுகின்றன. நகராட்சி மன்றத்திலே, பத்திரிகையாளர்களுக்கும், நகராட்சி மன்றத்திற்கு வருகின்ற நிருபர்களுக்கும் நகராட்சியினுடைய நிர்வாகத்திற்கும் ஒரு நெருக்கமான உறவு இருப்பது அவசியம். ஆனால் நகராட்சியினுடைய திட்டங்களையோ அல்லது tender list கூட மாவட்டத்தினுடைய P.R.O. -வின் அனுமதி பெற்றுதான் கொடுக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தினால், நகராட்சி பற்றிய ஒருசில விஷயங்களுக்குக்கூட நிருபர்கள் ஒத்துழைப்பு தருவது கிடையாது. ஆகையால், நகராட்சி ஆணையருக்கோ அல்லது ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கோ அல்லது ஊராட்சித் தலைவருக்கோ அந்த அளவில், ரூ. 2,000/- வருகிற அளவில் வருகிற விளம்பரங்களை ஆணையர் மூலமாகவே நிருபர்களுக்கு நேரடியாகக் கொடுத்து உதவினால், நிருபர்களுக்கும் ஏதாவது ஒரு வகையிலே பொருளாதார இலாபம் கிடைக்கும் என்ற காரணத்தால் அவர்கள் ஒத்துக்கொள்வார்கள். ஆக, அந்த அளவில் அதிகார வாம்பைப் பரவலாக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து.

அதேபோல், சுற்றுலாத் துறை என்று சொல்கிறபோது சுற்றுலா மிக முக்கியமான இடமாக, ஏறத்தாழ 75 சதவீதம் பொழுதுபோக்குக்காக வருவதுபோல் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் இருக்கிறது. ஆன்மீகம் சுற்றுலாத் துறையிலே மிக முக்கிய இடம் பெற்றிருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சென்ற மகாமகத்திற்கு வந்து, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையிலே மகாமக விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அதேபோல் வருகிற மகாமக திருவிழா கூட நமது மாண்புமிகு அம்மா அவர்களுடைய தலைமையில்தான் மிகப் பெரிய, உலகத்தைக் கவருகிற வகையிலே அப்படிப்பட்ட விழா அமைய இருக்கிறது. ஆகவே குடந்தைக்கு நமது முதல்வர் அவர்கள் ரூ. 6 கோடிக்கும் அதிகமாக பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்து, சாலை வசதி, தங்கும் இட வசதி போன்றவற்றை எல்லாம் அறிவிப்பதாக திட்டம் இருக்கிறது.



குடந்தைக்கு வருகிற பல இலட்சக்கணக்கான மக்கள், ஏறத்தாழ 40 சதவீதம் மக்கள், மயிலாடுதுறைக்கு வருகிறார்கள். மயிலாடுதுறை ஒரு சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த நகரமாக இருக்கிறது. காரணம், நம்முடைய இந்தியாவிலே நவக்கிரக ஸ்தலங்கள் எல்லாமே மயிலாடுதுறையை மையமாக வைத்துத்தான் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் மயிலாடுதுறையை மையப்படுத்தி தரங்கம்பாடி, பூம்புகார், பிச்சாவரம், திருமலைவாசல் போன்ற பல்வேறு ஆன்மீக ஸ்தலங்கள், சுற்றுலா மையங்கள் இருக்கின்ற காரணத்தால், குடந்தை மகாமகத்திற்குச் செலவிடுகின்ற தொகையிலே 40 சதவீதத்தையாவது மயிலாடுதுறையை சுற்றுலா மையமாக்குவதற்காகவும், அதேபோல் மயிலாடுதுறைக்கு வருகின்ற பக்தர்களுக்கு வழி காட்டுவதற்கும் உதவுகின்ற வகையிலே தங்கும் இடவசதி, சாலை வசதி போன்றவற்றைக் கொடுக்கின்ற வகையிலேயும் 2 கோடி ரூபாய்க்கு ஒரு சிறப்பு நலத் திட்டத்தை மயிலாடுதுறை தொகுதிக்கு நீங்கள் வழங்க வேண்டும் என்று இந்த அரிய சந்தர்ப்பத்திலே நான் கேட்டுக்கொளகிறேன்.

அதுமட்டுமல்லாமல், காலையில் பேசுகிறபோது எங்களுடைய பி.ஜே.பி. கட்சி சட்டமன்ற உறுப்பினர், திரு. முரளிதரன் அவர்கள் தன்னுடைய கன்னித் தமிழிலும், தெலுங்கிலும் நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்களைப்பற்றி மிகவும் உயர்வாகப் புகழ்ந்து பேசினார்கள். அவர் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். அவருடைய தொகுதி தளி தொகுதி. Little England என்று அதைச் சொல்வார்களாம். மிகவும் சுற்றுச்சூழல் எழிலாக உள்ள, அனைவரையும் கவருகின்ற வகையிலே உள்ள அந்தத் தளி தொகுதியை சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த தொகுதியாக அறிவிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். அதையும் பரிசீலித்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன், அவருடைய ஊருக்குப் போயிருக்கிறீர்களா, நீங்கள்?

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** போயிருக்கிறேன். அதையும் பரிசீலிக்க வேண்டும் என்று என்னுடைய கோரிக்கை. அதுமட்டுமல்லாமல், இந்த அரிய சந்தர்ப்பத்திலே மயிலாடுதுறையிலே சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகள் பல இருக்கின்றன. நகர்ப்புற மேம்பாட்டு வளர்ச்சி—எங்கள் பகுதியிலே வருகிற மழைநீர் வடிகால் என்ற வகையிலே ஏறத்தாழ 88 குளங்கள் நகரத்தின் மையத்திலே இருக்கின்றன. இந்த

88 குளங்களிலே எல்லாம் மழைநீர் வடிகாலாக மிகக் குறைந்த செலவிலே செய்து பயன்படுத்த முடியும். மயிலாடுதுறைக்கு வருகிற பழங்காவேரியை நமது தமிழக அரசு கொஞ்சம் சீர்தூக்கி அதில் வடிகால் வசதி செய்துகொடுத்தால், அந்தப் பழங்காவேரியைச் சீரமைத்தால், நிச்சயமாக அந்த 88 குளங்களும் நிரம்பி, மழைநீர் வடிகாலாகப் பயன்படுத்தலாம் என்று சொல்லிக்கொண்டு, இந்தச் சந்தர்ப்பத்தை எனக்கு வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *9-5-2003* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நம்முடைய ராதாரவி அவர்கள் பேசும்போது, முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஒரு சம்பவத்தைக் கொண்டுவந்தார்கள். இப்போது தமிழ்நாட்டில் ஒரு பெரிய பிரச்சினையாக இருப்பது அந்தத் திருட்டு C.D...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** V.C.D.

பிற்பகல் 6-35

**திரு. ஜி. பழனிசாமி:** V.C.D. அது திருட்டாகிறது என்று கவனத்திற்குக் கொண்டு வந்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

அதேபோன்று நடிகர் சங்கத்திலேகூட அநேகமாக பெரிய அளவிற்கு ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நடத்தி, ஊர்வலம் எல்லாம் நடத்தி அரசுக்கு, முதலமைச்சர் அவர்களிடம் மனு கொடுத்தார்கள். நான் பத்திரிகைச் செய்தியிலே பார்த்தேன். ஒன்றை அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். புதிய படங்கள் எடுத்தால் சிங்கப்பூருக்கோ, மலேசியாவுக்கோ முதலில் விற்பனை செய்கிறார்கள். அப்படி விற்பனை செய்த உடனேயே இரண்டு தினங்களில் அந்த C.D. அநேகமாக தமிழ்நாட்டில் விற்பனைக்கு வந்துவிடுகிறது. ஒரு தமிழ்ப் படம் எடுக்கிறபோது, தமிழ்நாட்டிலே குறிப்பிட்ட வருடங்களுக்கு ஓடியதற்குப் பிறகு, வெளி மாநிலங்களிலே, வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு



நடிகர் சங்கத்தினுடைய அந்த அமைப்பு தயாராக இருக்கிறதா? ஏனென்றால் இதன் மூலமாகத்தான் திருட்டு V.C.D.யே இங்கே வந்து விற்பனை செய்வதற்கான ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. அதற்குரிய நடவடிக்கையிலே மாண்புமிகு உறுப்பினர் என்ன சொல்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

## 7. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *9-5-2003* அன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 9-5-2003 (வெள்ளிக்கிழமை) அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (9-5-2003) வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. நாளை மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (9-5-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 6-36 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும் ஆணைகளும்

109. 2001-2002 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிர்வாக அறிக்கை [1948 ஆம் ஆண்டு மின்சாரச் (விநியோகம்) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 54/1948) 75(1) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

110. அண்ணா பல்கலைக்கழகத்தின் 2001-2002 ஆம் ஆண்டு கணக்குகளின் மீதான தணிக்கை அறிக்கை [1978 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1978) 26(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

315. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

316. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை—கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

317. சிறு தொழில்கள் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)



348. கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை - கைத்தறி மற்றும் துணிநூல் மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் அவர்களால் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2003-2004. (தமிழ்)

349. மானியக் கோரிக்கை எண் 14—சுற்றுச் சூழல் மற்றும் வனத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

350. சுற்றுச் சூழல் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2003-2004 (தமிழ், ஆங்கிலம்)

351. வனத் துறையின் செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

352. மானியக் கோரிக்கை எண் 25 — வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

353. மானியக் கோரிக்கை எண் 27 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை - செய்தி மற்றும் விளம்பரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

354. மானியக் கோரிக்கை எண் 28 — செய்தி மற்றும் சுற்றுலாத் துறை—சுற்றுலா பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்)

355. உடுக்குறியிடாத வினாக்கள்—விடைகள் பட்டியல். (இருபத்தி ஒன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

356. உடுக்குறியிடாத வினாக்கள், விடைகள் பட்டியல் (இருபத்தி இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

## இணைப்பு-I

(120 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

# சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை

## மானியக் கோரிக்கை எண் 14

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

### முன்னுரை

*1.1* வனம் மற்றும் சுற்றுச்சூழல் அழியாமல் பாதுகாத்து வருவது நம் மாநிலத்தில் தொன்று தொட்டு வரும் நடைமுறையாகும். இது இயற்கையினை நாம் மதிப்பதற்கு கற்றுக் கொடுத்ததோடு அல்லாமல் உயிரினங்கள் மற்றும் உயிரற்றவைகள் இடையே ஒன்றுக்கொன்று பிணைந்த தொடர்பினை அறிந்துகொள்ள வழிவகை செய்துள்ளது. மனித சமுதாயத்திற்குத் தேவையான உயிர்ச்சூழல் பாதுகாப்பினை அளிப்பதில் அடர்ந்த காடுகள், சுத்தமான நீர், வளமான மண் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை பழந்தமிழ்ப் புலவர்கள் வலியுறுத்தியுள்ளனர். இந்திய அரசமைப்புச் சட்டத்தில், மாநிலக் கொள்கையின் நெறிமுறைக் கோட்பாட்டின்கீழ் சுற்றுப்புறச் சூழலின் தன்மையினைப் பாதுகாப்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. அரசமைப்புச் சட்டப் பிரிவு 18(A) சுற்றுப்புறச் சூழ்நிலை. வனம், வன உயிரினம் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துதல் அரசின் கடமை என்று அறிவுறுத்துகிறது. வனங்கள், ஏரிகள், ஆறுகள், வன உயிரினங்கள் மற்றும் அனைத்து உயிர்வாழ் இனங்கள் ஆகியவற்றைப் பாதுகாத்து மேம்படுத்துவது, ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும் என்று இந்திய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவு 51(A)(g) எடுத்துரைக்கிறது.

*1.2* வனங்கள், உலகத்தை குளிர்ச்சியாகவும் வளமுடையதாகவும் வைத்திருக்கும் அருள்செல்வங்கள் ஆகும். அவை இல்லாவிடில் பூமியானது வெறுமையானதாகவும் வளமற்றதாகவும் இருக்கும். வனங்கள் இயற்கை அன்னை மனித இனத்திற்கு அளித்த நன்கொடையாகும். வனங்கள் உயிரின வாழ்க்கைக்குத் தேவையான ஆதார வளங்களைக் கொண்டிருப்பதோடன்றி என்றும் புதுப்பித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்பு வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளன. நமது மாநிலத்தின்





வனவியல் சூழல் முறையானது பல்வேறு வகைப்பட்ட தாவரங்கள் மற்றும் உயரினங்களுடன் கூடிய ஒரு தனிச் சிறப்பு மிக்க உயிரினப் பரவல்களைக் கொண்டுள்ளது. இத்தகைய பல்லுயிர்ப் பாவல்களின் சூழலால்தான் நிலையான சுற்றுச்சூழல், பாதுகாப்பு மற்றும் உணவுத் தேவைகள் ஆகியன உறுதி செய்யப்படுகின்றன. நம் மாநிலத்தின் வனங்கள், உயிரினங்கள் வாழ்வதற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்குவதிலும் சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும், கிராமப்புற வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன. வேளாண்மைக்கு அடுத்தபடியாக இரண்டாவதாக, நிலத்தைப் பயன்படுத்தும் மிகப் பெரிய அரசுத் துறையாக வனத் துறை விளங்குகிறது.

*1.3.* மண் சரிவு, வன உயிரின உய்விடங்களில் உள்ள அரிதான உயிரினங்களுக்கு ஏற்பட்டுள்ள அழிவு மற்றும் பாதிப்பு. நீர்வரத்துப் பகுதிகளுக்கு ஏற்படும் பாதிப்பு, வாழ்க்கைத் தர சீரழிவு, மேம்பாட்டுப் பணிகளுக்கான வாய்ப்புகளின் குறைவு ஆகிய பல்வேறு வழிகளில் வனங்களுக்கு இழப்பும் பாதிப்பும் ஏற்படுகின்றன.

*1.4* சுற்றுச்சூழல் பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக வாழ்வியல் ஆதார அமைப்புகளைப் பாதுகாத்து மேம்படுத்துதலே, இம்மாமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட 15 அம்சத் திட்டத்தின் உள்ளடக்கமாகும். இத்திட்டம் அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் நலமான வாழ்விற்கு ஒரு வாய்ப்பினை நல்கும். 21-12-2002 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற ஐம்பதாவது தேசிய வளர்ச்சிக் கவுன்சில் கூட்டத்திலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நீர்ப் பிடிப்புப் பகுதி மேலாண்மை முறையினைக் கடைப்பிடித்து நிலையான சுற்றுச்சூழல் மற்றும் நீர்வளத்தைப் பாதுகாப்பதன் அவசரம் மற்றும் அவசியத்தினை வலியுறுத்தினார்கள். எனவே எல்லா வனத் திட்டங்களும் இந்த வழியினைப் பின்பற்றியே வடிவமைக்கப்பட்டுள்ளது.

## 2. வனத் துறை

*2.1* வனங்கள், இயற்கைச் சுற்றுச்சூழலை நிலைப்படுத்தவும். உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்யவும் இன்றியமையாத, மீண்டும் புதுப்பிக்கக்கூடிய இயற்கை வளமாகத் திகழ்கின்றன. இவ்வனங்கள் மண்ணிற்கு உரம் ஊட்டி, புத்துயிர் அளித்து நீரைத் தேக்கும் ஆற்றலைக் கொண்டதாக அமைந்துள்ளன. இது அருகில் உள்ள நிலப்பகுதிகளில்

விவசாயத்திற்குப் பயனளித்து வருகிறது. வனமானது உண்மையாகவே விவசாயத்திற்கு வளர்ப்புத் தாயாக விளங்குகிறது. மரங்கள் பூமியிலுள்ள நீரை ஆவியாக்கி காற்று மண்டலத்தில் வெளியிடுவதன் மூலம் நீர்ச்சுழற்சியினை நிலைப்படுத்தும் முக்கிய இணைப்பாக விளங்குகிறது. வனங்கள் நீர்ப் பிடிப்புப் பகுதியில் நீர் மற்றும் நில வளத்தினைப் பாதுகாத்து, தட்ப வெப்பத்தினைச் சீர்படுத்தி பூமி வெப்பமயமாவதையும், வறண்டு போகாமலும் தடுத்து நிறுத்துகின்றன. நமது மாநிலத்தின் வன வளத்தைப் பாதுகாப்பது அனைத்து நல்நோக்கு மக்களின் கூட்டுப் பொறுப்பாகும். வன ஆதாரங்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நிலையான பயன்பாடு, சுற்றுச்சூழல் மாறாத் தன்மையினைப் பாதுகாத்தல், மரபியல் வேறுபாடு ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் வனங்கள் மேலாண்மை செய்யப்பட வேண்டும்.

## 2.2 வனங்களின் பரப்பளவு

வனத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் 22.870 சதுர கிலோ மீட்டர் வன நிலங்கள் உள்ளன. இது தமிழ்நாட்டின் மொத்த நிலப் பரப்பளவில் 17.581 விழுக்காடாகும். இது 1988 ஆம் ஆண்டின் தேசிய வனக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உகந்த அளவான 33.33 விழுக்காட்டிற்கும் மிகவும் குறைவானதாகும். மனிதர்கள் மற்றும் உயிரினத் தலையீடுகளால் ஏறத்தாழ பாதி வனப் பகுதி தரமிழந்து காணப்படுகிறது. பல்வேறு திட்டங்கள் மூலம் தரமிழந்த காடுகளை மீண்டும் வளப்படுத்தவும், வனப் பகுதிகளை விரிவுபடுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.3 வனக் கொள்கை

தமிழகத்தின் வனங்கள், தேசிய வனக் கொள்கை 1988-ன்படி ஆளுமை செய்யப்படுகிறது. இருப்பினும் பெரும்பான்மையான வன மேலாண்மை மாநில அரசின் பொறுப்பிலுள்ளது. தமிழ்நாடு மாநில வனச் சட்டம் 1882, வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972, வனப் பாதுகாப்புச் சட்டம் 1980 மற்றும் அவற்றின்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகள் வனத் துறையால் செயல்படுத்தப்படுகின்றது. நீதிமன்றங்களினால் வனங்கள் பாதுகாக்கப்படுவதன் அவசியத்தை வலியுறுத்தி வழங்கப்பட்ட பல்வேறு முக்கிய தீர்ப்புகள் வனக் கொள்கையினைச் சீரிய முறையில் செயலாக்குவதில் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன. வனங்களைப் பாதுகாத்தல், மேம்படுத்துதல் மற்றும் வனப்பரப்பை அதிகரித்தல் ஆகியவற்றின் மூலம் உயிரின வாழ்க்கைச் சூழல் மேம்பாடு, சுற்றுச்சூழலை நிலைப்படுத்துதல் ஆகியவற்றை அடைவதே 1988-ஆம் ஆண்டின் தேசிய மற்றும் மாநில வனக் கொள்கையின் முதன்மையான குறிக்கோளாகும். வனங்களிலிருந்து நேரடியான பொருளாதாரப் பலன்களை அடைவது என்பது இந்த முதன்மையான குறிக்கோளுக்கு சார்புடையதாக அமைந்துள்ளது.



## 2.4. குறிக்கோள்கள்

தமிழகத்தின் வனங்கள், பின்வரும் முக்கிய குறிக்கோள்களுடன் மேலாண்மை செய்யப்படுகின்றன:—

- மாநிலத்தின் வனப் பகுதியையும், மரங்களின் அடர்த்தியையும் அதிகப்படுத்துதல்;

- சுற்றுச்சூழலை மீட்டு சுற்றுப்புறத்தின் சமநிலைத் தன்மையினைப் பாதுகாத்தல்;

- தற்கால மற்றும் எதிர்கால சந்ததியினர் பயனடையும் வகையில் பல்வேறு வகையான உயிரினங்களைப் பாதுகாத்தல்;

- வெள்ளப்பெருக்கு, வறட்சி மற்றும் நீர்த்தேக்கங்களில் வண்டல் படிவதைக் கட்டுப்படுத்த ஆறு, ஏரி மற்றும் நீர்த்தேக்கங்களில் மண் அரிமானத்தைத் தடுத்தல்.

- கூட்டு வன நிர்வாக முறையில் மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான விறகு, கால்நடைத் தீவனம், மரங்களல்லாத வனப் பொருட்கள் மற்றும் சிறு மர அவசியத் தேவைகளை கூடிய அளவு பூர்த்தி செய்தல்;

- காப்புக் காடுகளுக்கு வெளிப் பகுதியில், வனப் பொருட்களுக்கு மாறாக வேறு ஆதாரங்களை, மேம்படுத்தப்பட்ட வனத் தொழில்நுட்பத்தின் மூலம் விவசாயிகளுக்குக் கிடைக்க வழி செய்தல்;

- நுண்ணுயிர்கள், பூச்சிகள், பறவைகள் மற்றும் விலங்குகள் வசிக்க உயிரினச் சூழலை மேம்படுத்துதல்;

- வனங்களுக்குள் வாழும் பழங்குடியின மக்களுக்கு தொன்றுதொட்டு பெறப்படும் வனப் பொருட்கள் கிடைக்க வழி செய்யவும், அதனை உரிமையாக உபயோகிக்கவும் ஏற்பாடு செய்தல்.

## 2.5 செயல்முறை

கீழே விவரிக்கப்பட்டுள்ள உத்திகளின் அடிப்படையில் முக்கிய குறிக்கோள்களை அடைய திட்டமிடப்பட்டுள்ளது.

### 2.5.1 பசுமைப் பரப்பினை அதிகப்படுத்துதல்

மத்திய திட்டக் குழுவானது 2007-ல் நாட்டின் வனங்களின் பரப்பினை 25 விழுக்காடுகளாகவும், 2012-ல் அதன் அளவு 33.33 விழுக்காடுகளாகவும் அதிகப்படுத்தப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. தமிழகத்தில் வனம்/மரத்தின் அளவு 17.584 விழுக்காடாக உள்ளது. மாநிலத்தின் மொத்த நிலப்பரப்பளவில் 25 விழுக்காடு பகுதியில் மரங்களின் அளவு/வனங்களை அதிகப்படுத்த காப்புக் காடுகளிலும், அவற்றின் வெளிப் பகுதிகளிலும் மரங்களை நட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதுகுறித்த ஆதாரம் இந்திய வன அளவைத் துறை வெளியிட்டுள்ள "வனங்களின் நிலை" எனும் சமீப கால அறிக்கையிலிருந்து தெரிய வருகிறது.

### 2.5.2 கூட்டு வன நிர்வாகத்தின் மூலம் உயிரின மேம்பாடு மற்றும் சுற்றுச்சூழலை மீட்டு நிலைப்படுத்துதல்

வனங்களை ஒட்டி அமைந்துள்ள சுமார் 3,100 கிராமங்களிலுள்ள கால்நடைகள் மற்றும் மனிதர்களின் அபரிமிதமான பயன்பாடே வனங்கள் தாமிழந்ததற்கு முக்கிய காரணமாகும். மக்களுக்கு நிரந்தர வருவாய் கிடைக்கும்பொருட்டு, கூட்டு வன நிர்வாக முறையில் தரங்குன்றிய வனப் பகுதிகளில் சுற்றுச்சூழலை மீட்டு இயற்கை உயிரினச்சூழல் மேம்படுத்தப்படும். நமது மாநிலத்தில் பெருமளவில் தாமிழந்த வனங்களை மேம்படுத்தி, சுற்றுச்சூழலைப் புனரமைக்க வேண்டியுள்ளது.

### 2.5.3. சிறப்புப் பகுதி நிர்வாகம்

எளிதில் மாறக்கூடிய தனித்தன்மை வாய்ந்த மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரி, கடலோர சதுப்புக் காடுகள் மற்றும் கடல் பகுதிகள் ஆகியவற்றின் சுற்றுச்சூழல் சிறப்புத் திட்டங்களின் மூலம் ஒவ்வொரு பகுதியிலும் அவற்றின் தனித்தன்மை மாறாமல் பாதுகாக்கப்படும்.

### 2.5.4. சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் மேலாண்மை

தமிழ்நாடு சிறந்த உயிரினப் பரவல்கள் செறிந்துள்ள பகுதியாக விளங்குகிறது. இம்மாநிலத்தில் மொத்த வனப் பரப்பில் 3134.70 சதுர



5) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், மதுரை
6) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், மதுரை
7) சுற்றுலாத் தகவல் மையம், கூடலூர் (நீலகிரி மாவட்டம்)
8) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், கோயம்புத்தூர்
9) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், கோயம்புத்தூர்
10) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி
11) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், திருச்சிராப்பள்ளி
12) சுற்றுலாத் தகவல் மையம், ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்
13) சுற்றுலாத் தகவல் மையம், தரங்கம்பாடி
14) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (சென்ட்ரல்)
15) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (எழும்பூர்)
16) சுற்றுலாத் தகவல் மையம், காமராசர் உள்நாட்டு விமான நிலையம், சென்னை
17) சுற்றுலாத் தகவல் மையம், அண்ணா பன்னாட்டு விமான நிலையம், சென்னை
18) சுற்றுலாத் தகவல் மையம், சென்னை மாநகரப் பேருந்து நிலையம், கோயம்பேடு, சென்னை
19) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், பெங்களூர்
20) சுற்றுலாத் தகவல் மையம், ஹைதராபாத்
21) சுற்றுலாத் தகவல் மையம், திருவனந்தபுரம்

### 17) முடிவுரை

தற்போது தமிழக அரசு, சுற்றுலா வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டிவருகிறது. அதிக பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள்மீது கவனம் செலுத்தி மாபெரும் வளர்ச்சியை எதிர்நோக்கி இத்துறை செயல்பட்டு வருகிறது.

2003 மே 8]

கிலோ மீட்டர் அல்லது 13.7 விழுக்காடு பகுதியில் ஐந்து தேசியப் பூங்காக்கள், எட்டு வன உயிரின சரணாலயங்கள் மற்றும் பன்னிரண்டு பறவைகள் சரணாலயங்கள் வன உயிரினப் பாதுகாப்பிற்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளன. புதிய சரணாலயங்கள், தேசியப் பூங்காக்கள் மற்றும் பாரம்பரிய வனங்களை உருவாக்கி தாவர மற்றும் வன உயிரினப் பாதுகாப்பை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். தமிழகத்தில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளில் உள்ள உயிரினப் பரவல்களும், இயற்கை வளங்களும் வருங்கால சந்ததியினருக்காக, கல்வி மற்றும் பொழுதுபோக்கு அளித்து ஆர்வத்தைத் தூண்டுவதற்காக மேலாண்மை செய்யப்படுகிறது. மாநிலத்தின் மொத்த வனப் பரப்பளவில் வன உயிரின நிர்வாகத்தின் கீழுள்ள பாதுகாக்கப்பட்ட பகுதியினை 25 விழுக்காடளவிற்கு அதிகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இப்பகுதிகளில் பலவகையான மருத்துவச் செடிகள் மற்றும் மரபியல் முக்கியத்துவம் வாய்ந்த செடிகள் பாதுகாக்கப்படும்.

## 2.5.5. நீர்ப்பிடிப்புப் பகுதி நிர்வாகம்.

தமிழகத்தில் 32 ஆறுகள், 11 பெரும் நீர்த்தேக்கங்கள், 2,679 கால்வாய்கள், 38,863 ஏரி குளங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலான நீர்ப்பிடிப்புப் பகுதிகள் வன நிலங்களில் அமைந்துள்ளன. வனங்களை மேம்படுத்தும் நோக்கத்துடன் பாதிக்கப்பட்ட நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் வன வளர்ப்பு, மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புப் பணிகளைச் செயல் படுத்துவதால் ஆறுகள் மற்றும் ஓடைகளில் நீரோட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டு, நிலத்தடி நீர் உயர்த்தப்பட்டு அதனையடுத்த நிலங்கள் வளம் பெற வகை செய்யப்படுகிறது. இவ்வகையான பணிகளினால் நீர்வளம் பெருகுவதுடன் விவசாயிகள் பொருளாதார ரீதியாகவும் பயனுறுவர்.

## 2.5.6. வனப் பாதுகாப்பு

மாநிலத்தின் வன வளங்கள், திருட்டு மர வெட்டுகள், கஞ்சா பயிரிடுதல், தீ விபத்துகள், ஆக்கிரமிப்பு மற்றும் வன உயிரின வேட்டைக்காரர்களால் பெரிதும் பாதிப்பிற்குள்ளாகக் கூடியதாக இருக்கிறது. மாநிலத்தின் விலை மதிப்பற்ற வனச் சொத்துக்களான சந்தன மரம் மற்றும் இதர அட்டவணைப்படுத்தப்பட்ட தாவரங்கள் உள்ளிட்ட மதிப்புமிக்க வனப் பொருட்கள் அழிவிலிருந்து தடுக்க

பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாதுகாப்பிற்காக உள்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்தவும் மற்றும் பாதுகாப்புப் பணியாளர்களுக்கு நவீன ரக துப்பாக்கிகள், வாகனங்கள், கம்பியில்லாத் தொலைத் தொடர்பு சாதனங்கள் வழங்குவதன் மூலமாகவும் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வனங்களைத் தொடர்ந்து பாதுகாக்க வன உள்கட்டமைப்பு வசதிகள் மேலும் வலுப்படுத்தப்பட வுள்ளன.

வனங்களுக்கு அருகிலுள்ள பட்டா உரிமையாளர்கள் மற்றும் எல்லை உரிமையாளர்களால் செய்யப்படும் வன நில ஆக்கிரமிப்பு வன நிர்வாகத்திற்கு மிகுந்த பிரச்சினையாக உள்ளது. வருவாய்த் துறை மற்றும் காவல் துறையினரின் ஒத்துழைப்புடன், இவ்வகை ஆக்கிரமிப்புகளை அகற்ற வனத் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதன் மூலம் புதிய ஆக்கிரமிப்புகள் ஏற்படா வண்ணம் தடுக்க நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.3.7. உற்பத்தி வனவியல்

தொழிற்சாலைகள் மற்றும் மக்கள் வீட்டுத் தேவைக்கு 'தடிமரம்' ஒரு முக்கிய வனப் பொருளாகும். முந்தைய ஆண்டுகளில் ஏற்பட்ட தேவைக்கு அதிகமான தடிமரங்கள் உபயோகப்படுத்தப்பட்டதாலும், மக்கள்தொகை பெருக்கத்தினாலும், வனங்களில் இதன் இருப்பு குறைந்துள்ளது. உள்ளூர் மக்களின் தடிமர வனப் பொருட்களின் தேவையினைப் பூர்த்தி செய்யும்பொருட்டு முதல் தரம் மற்றும் இரண்டாம் தர தடிமரங்களை வன நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், குளக்கரைகள் மற்றும் தனியார் நிலங்களில் மக்களின் உதவியுடன் மரம் நடும் பணிகளை ஊக்குவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

### 2.5.8. பழங்குடியினர் மேம்பாட்டிற்கான வனவியல்

பழங்குடியினர் வனச் சூழல் அமைப்பின் ஒரு முக்கிய அங்கமாவர். இவர்களின் பொருளாதார நிலை வன வளங்களைச் சார்ந்துள்ளது. பழங்குடியினர் தொடர்ந்து நிலையான பயன்களைப் பெறும் வகையில் அவர்கள் வசிக்கும் பகுதிகளிலும் மற்றும் அவர்கள் சார்ந்துள்ள வனப் பகுதிகளிலும், மரவகை மற்றும் தாவர வகைகளை உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பினை உருவாக்குதல், கிராமப் பகுதிகளிலுள்ள பழங்குடியினருக்கு அடிப்படை உள்கட்டமைப்பு



வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் கல்வி ஆகிய பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து முனைப்புடன் செயல்படுத்தப்படும்.

### 2.5.9. வன விரிவாக்கம்

கிராம மக்களின் விறகு, தீவனம் மற்றும் இதர தேவைகளுக்காக வனத்தினைச் சார்ந்து இருப்பதைக் குறைக்கவும், பொதுத்துறையில் பசுமைப் பரப்பளவினை விரிவாக்கவும் வன விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். விவசாயிகள் பல்வேறு வகையான விரிவாக்க வனவியல் மூலம் பயன் அடைவதற்கான அறிவுத் திறன் மற்றும் தொழில்நுட்பம் ஆகியவை பரவலாக்கப்படும். பட்டா நிலங்களில் வன விரிவாக்கம் மூலம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அவர்களை இடத்திற்கேற்ப தகுந்த வேளாண் காடுகளை தேர்ந்தெடுத்து செயலில் உற்பத்தி செய்ய உதவுவதன் மூலம் சமூக வளர்ச்சிக்கு வன விரிவாக்கம் ஒரு கருவியாக செயல்படும்.

### 2.5.10. சமூக வனவியல்

இத்திட்டத்தின்கீழ் மாநிலத்தின் பசுமைப் பகுதிகளை அதிகரிக்க தனியார் மற்றும் சமுதாய நிலங்களில் மரங்கள் நடும் பணி மேற்கொள்ளப்படும். மேலும் இத்திட்டம் மரம் வளர்க்க ஆர்வமுள்ள தனிநபர் நிறுவன நில உரிமையாளர்கள் பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும். வன வளர்ப்பு பணிகளை மிகவும் பாதிக்கும் உபயோகமற்ற கால்நடைகளை கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களை விட்டு அகற்ற விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்படும்.

## 2.6 முக்கியப் பகுதிகள்

### 2.6.1. வன ஆராய்ச்சி

உயிரினப் பரவல் பாதுகாப்பு மற்றும் உற்பத்தித் திறன் அதிகரிப்பு ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தமிழக வன ஆராய்ச்சிப் பிரிவு ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. தமிழகத்திலுள்ள பல்வேறு வகையான உயிரினப் பரவல்களைப் பாதுகாத்தல் மற்றும் பல்வேறு வன உயிரினங்களின் இயக்க ஆற்றல் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வன மரபியல் ஆராய்ச்சிப் பிரிவின் மூலம் அதிகமாக உபயோகப்படுத்தக்கூடிய மர வகைகளைக் கண்டறிந்து அவற்றிலிருந்து கிடைக்கக்கூடிய பழங்கள், தண்டுகள், மற்றும் தரமுள்ள மரங்கள்,

இழைமரம், விறகு மரங்கள், கட்டடப் பணிக்காகப் பயன்படுத்தப்படும் தடிமரங்கள் போன்ற வீரிய மரங்களை உற்பத்தி செய்ய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வன ஆராய்ச்சித் துறையின் மூலம் வீரிய விதைப் பண்ணைகளில் அதிகமாக பயன்தரும் கீழ்க்காணும் விதைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. சந்தனம், சவுக்கு, யூகலிப்டஸ், புளி, மூங்கில் தடிமரம், இழைமரம், மாஇழை தாவல்ல உற்பத்தித் திறனுள்ள மர இனங்கள் மற்றும் எண்ணெய் தரும் மர இனங்கள் ஆகியவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்த ஆராய்ச்சி மூலம் சிறப்பான பங்களிக்கப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையில் ஒரு மரபணுத் தோட்டம் உள்ளது. இத்தோட்டத்தில் அரிதான **4,000** தாவர வகைகள் உள்ளன. அவற்றில் **1,000** தாவர வகைகளைச் சேகரித்து தோட்டமாக அமைத்து பாதுகாக்க தமிழக வனத் துறை - ஆராய்ச்சிப் பிரிவு இவ்வாண்டு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் மரச் சாமான்களின் உற்பத்திக்கு இதுவரை பயன்படுத்தப்படாத மர வகைகளைப் பதப்படுத்தி வீட்டிற்குத் தேவையான மரச் சாமான்கள் மற்றும் வீட்டு உபயோகத்திற்காகப் பயன்படுத்தும் வகையில் அறுவடைக்குப் பின் பின்னேர்த்தி செய்யும் தொழில்நுட்பத்தினை தமிழக வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

## 2.6.2 மனித வள மேம்பாடு

வனத் துறை மாநிலத்தின் பழமையான துறைகளுள் ஒன்றாகும். கடந்த ஆண்டுகளில் திறமை மற்றும் தொழில்நுட்பம் வாய்ந்த மனித வளத்தின் மூலம் மாநிலத்தின் வனப் பாதுகாப்பு, வன வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு தனது முக்கிய பங்களிப்பினை அளித்துள்ளது. இத்திறன் தகுந்த பயிற்சி மற்றும் அபிவிருத்தியின் மூலம் மேலும் மேம்படுத்தப்படும். **2002-2003** ஆம் ஆண்டில் கோயம்புத்தூர் தென்னக வனச் சரகர் கல்லூரியில் **114** வனச் சரகர்கள், வைகை அணை தமிழ்நாடு வனவியல் கல்லூரியில் **205** வனவர்கள் மற்றும் **90** வனக் காப்பாளர்களுக்கும் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

## 2.6.3 மகளிர் பங்கேற்பு

இலட்சக்கணக்கான கிராமப் பெண்கள் குடும்பப் பாதுகாப்பை தங்களது முக்கியப் பணியாக மேற்கொண்டுள்ளதால் குடும்பத் தேவைக்காக விறகு சேகரித்தல், கால்நடை தீவனம், நீர் எடுத்தல் போன்ற அன்றாட பணிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இவ்வன



வளங்கள் நலிவடைவது அவர்களின் பணிகளை மேலும் கடினமாக்குகிறது. ஆதலால், வன வளங்களையே பெரிதும் நம்பியுள்ள ஏழ்மை நிலையிலுள்ள பெண்கள் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வளங்களைப்பற்றி முடிவெடுப்பதில் பங்கேற்று அவற்றை மேலாண்மை செய்யவும் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## 2.6.4 வேலைவாய்ப்பு உருவாக்குதல்

வனநிதி ஒதுக்கீட்டில் ஏறக்குறைய 75 விழுக்காடு, வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கென செலவிடப்படுகிறது. வனங்களை அடுத்து வாழும் கிராம மக்களின் வேலைத் திறனை அறிந்து உள்ளூர் மக்கள் பங்கேற்று பயன்பெறும் வகையும் அவர்களின் பங்கேற்பு மற்றும் ஈடுபாட்டுடன் கிராமங்களின் சமூக மற்றும் பொருளாதார முன்னேற்ற நிலைகள் வலுப்படுத்தப்படும்.

## 2.7. 2002-2003 ஆம் ஆண்டு சாதனைகள்

**2002-2003** ஆம் ஆண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் ரூ. **83.16** கோடி செலவில் 31,000 ஹெக்டேர் நிலப் பரப்பளவில் தோட்டங்கள் வளர்த்தும் **108** கிராமங்களில் மேம்பாட்டுப் பணிகளைச் செய்தும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. **108** கிராம வனக் குழுக்கள் மற்றும் **640** சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. **83.30** லட்சம் மனித வேலை நாட்கள் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த சுய உதவிக் குழுக்கள் யாவும் மாநில மகளிர் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து திறமையாக செயல்பட்டு வருகின்றன. இதுவரை இத்திட்டம் சுமார் ரூ. **525.00** கோடி செலவில் **4.09.954** ஹெக்டேர் பரப்பில், **1,107** கிராம வனக் குழுக்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. மழை மிகவும் குறைந்த நிலையிலும், இத்திட்டத்தின் நீர் சேமிப்புப் பணிகள் மூலம் தண்ணீர் அளவு இக்கிராமங்களில் **5-10** விழுக்காடு உயர்ந்துள்ளது. **1225.550** மெட்ரிக் சந்தன மர ஏல விற்பனை மூலம் ஒரு சாதனையாக ரூ. **12,159.00** இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

பரந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் **54** இலட்சம் தரம் வாய்ந்த மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

மன்னார் வளைகுடா வன உயிரினப் பாதுகாப்பு யுனெஸ்கோ இணைய தளத்தில் இடம் பெற்றுள்ளது.

கோடியக்கரை வன விலங்கு சரணாலயம் உலக அளவில் முக்கிய சதுப்பு நிலமாக ராம்சர் இடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

[2003 மே 8

*16.13* ஹெக்டேர் பரப்பளவிலுள்ள ரூ. **95.15.310.00** மதிப்புள்ள கஞ்சாப் பயிர்ச் செடிகள் அழிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தின் விளவங்கோடு, கல்குளம், அகஸ்தீஸ்வரம் மற்றும் தோவாளை வட்டங்களில் உள்ள தாவரங்கள் மற்றும் வன உயிரினங்களின் தனித்தன்மையைப் பாதுகாக்க **45.777.57** ஹெக்டேர் பரப்பளவு அரசால் சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மருத்துவ மூலிகைகள் வளர்ப்பதும் பாதுகாப்பதும் எல்லோராலும் பாராட்டப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் சார்பில் 'ஈக்வேட்டர் இனிஷியேடிவ் அவார்ட்' என்ற விருது வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் கிடைக்கப்பெற்ற பரிசுத் தொகையினைக் கொண்டு மாநிலத்தில் **26** மாவட்டங்களில் இலவச சித்த மருத்துவ முகாம்கள் நடத்தபபட்டன.

## 2.8. வன வருவாய் மற்றும் செலவுகள்

### 2.8.1 வருவாய்

***2002-2003*** ஆம் ஆண்டில் பெறப்பட்ட வருவாய் (திருத்திய மதிப்பீடு) மற்றும் உத்தேச நிதி ஒதுக்கீடு விவரம் கீழ்வருமாறு:—

| வ.எண் | வருவாய்–இனங்கள் | 2002–2003 திருத்திய மதிப்பீடு | 2003–2004 நிதி ஒதுக்கீடு |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| அ. | சந்தன மரம் | 10000.00 | 10500.00 |
| ஆ. | தொழிற்சாலைக்கு மூலப்பொருட்கள் வழங்குதல் | 123.22 | 495.90 |
| இ. | மரங்களல்லாத வனப் பொருட்கள் (சிறு வனப் பொருட்கள்) | 142.87 | 150.00 |
| ஈ. | தடிமரம், விறகு, மூங்கில், முந்திரி, சவுக்கு, மென்மரம், வனப் பண்ணைத் தோட்டங்கள் மற்றவைகள் மூலமாக | 3714.11 | 3467.29 |
| | மொத்தம் .. | 13980.20 | 14613.19 |



2003 மே 8]

### 2.8.2. செலவினங்கள்

***2002-2003*** ஆம் ஆண்டில் வனத் திட்டப் பணிகளுக்கான செலவு ரூ. ***97.68*** கோடிகளாகும். **2001-2002**, **2002-2003** ஆம் ஆண்டு பல்வேறு திட்டங்களின்கீழ் செலவுத் தொகை பின்வருமாறு:—

(ரூ. இலட்சத்தில்)

| திட்டத்தின் பெயர் | 2001–2002ஆம் ஆண்டின் செலவினம் (உள்ளபடி) | 2002–2003ஆம் ஆண்டின் செலவினம் (திருத்திய மதிப்பீடுபடி) |
|---|---|---|
| மாநில வனத் திட்டங்கள் | 9643.36 | 8596.95 |
| மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100%) | 561.60 | 657.35 |
| மத்திய அரசும் மாநில அரசும் சம அளவில் பொறுப்பேற்கும் திட்டங்கள் (50:50) | 141.35 | 127.40 |
| மொத்தம் .. | 10346.31 | 9381.70 |

## 2.9. 2002-2003 ஆம் ஆண்டின் முக்கிய திட்டப் பணிகள்-தொடர் திட்டப் பணிகள்

### 2.9.1 தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்ட நீட்டிப்பு

நமது அரசு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் என்னும் தனித்தன்மை வாய்ந்த வன வளர்ப்புத் திட்டத்தினை ***1994-95***ஆம் ஆண்டு தயார் செய்து ***1997-98***ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளுக்கு செயல்படுத்தும் வகையில் தொடங்கியது. இத்திட்ட நடவடிக்கைகள் அனைத்தும் ***31.03.2002*** உடன் முடிவுபெறும் வகையில் திட்டப் பணிகளை மேற்கொள்ள ரூ. ***499.20*** கோடி செலவில் உருவாக்கப்பட்டது. இதில் ரூ. ***441.00*** கோடி ***31.03.2002*** வரை செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை வெற்றிகரமான முறையில் செயல்படுத்தியதைத் தொடர்ந்து ஜப்பான் செலாவணி **யென்** மதிப்பு அப்போதைய ரூபாய்க்கு உயர்ந்ததால் இருந்த மீதித் தொகையிலிருந்து மேலும்

[2003 மே 8

இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது 2002-2003, 2003-2004ஆம் ஆண்டுகளில் இத்திட்டத்திற்கு ரூ.172 கோடி செலவில் நடைமுறைபபடுத்த கருதப்பட்டு, 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 93.3472 கோடி மதிப்பீட்டில் கீழ்க்காணும் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன:

| வ.எண். | பணிகள் | 2002–2003 | 2003–2004 |
|---|---|---|---|
| 1. | எடுத்துக்கொள்ளப்படும் கிராமங்களின் எண்ணிக்கை | 108 | 150 |
| 2. | மீட்பு நிலைப்படுத்தப்படும் தரங்குன்றிய காடுகள் | 2700 ஹெக். | 37500 ஹெக். |
| 3. | நீர்ப்பிடிப்பு மேம்பாட்டுப் பணிகள் | 5,400 ஹெக். | 7,500 ஹெக். |
| 4. | சமுதாய நிலங்களை பசுமையாக்குதல் | 2,500 ஹெக். | 2,500 ஹெக். |
| 5. | 2002–2003 ஆம் ஆண்டின் திட்ட கிராமங்களில் இடைதாங்கு மண்டலப் பணிகள் | 108 கிராமங்கள் | 150 கிராமங்கள் |
| 6. | 1997–98 மற்றும் 1998–99 ஆம் ஆண்டு திட்ட கிராமங்களில் இடைத்தாங்கு மண்டலப் பணிகள் | 400 கிராமங்கள் | ஷை |

இவை தவிர, பழைய தோட்டங்களைப் பராமரித்தல், மனிதத் திறனை உயிரினப் பாதுகாப்பிற்கு விரிவாக்குதல், வாகனங்கள் மற்றும் கருவிகள், நிர்வாகம், வெளிநாட்டில் பயிற்சி போன்ற பணிகளும் 2003-2004ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ளன.

## 2.9.2. வன உயிரினத் திட்டங்கள்

தமிழகத்தின் பாதுகாக்கப்பட்ட வனப் பகுதிகளிலுள்ள தாவர மற்றும் உயிரினங்களைப் பாதுகாப்பதையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு வன உயிரினத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சரணாலயங்கள், தேசிய பூங்காக்கள் மற்றும் உயிர்வாழ் காப்பிடங்களில் உயிரினச் சூழலை மேம்படுத்துதல், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, வன உயிரினக் கணக்கெடுப்பு, கல்வி விழிப்புணர்வு முகாம், பாதுகாப்பு நடவடிக்கைகள், சுற்றுலாச்சூழல், வேட்டையாடுதல் தடுப்பு முகாம்கள் நடத்துதல், தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கிராமப்புற மக்களுக்கு



2003 மே 8]

குடிநீர் வசதி செய்து தருதல், மருத்துவ முகாம்கள், விளம்பரப் பலகைகள் அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா இந்தியாவிலேயே மிகப் பெரிய மற்றும் நவீன, அறிவியல் தொழில் நுட்பத்துடன் மேலாண்மை செய்யப்படும் ஓர் உயிரியல் பூங்காவாகும். இப்பூங்காவில் அருகிவரும் உயிரினங்களைப் பாதுகாத்தல், உயிரினச் சூழலை மேம்படுத்துதல் மற்றும் பொதுமக்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது.

2002-2003ஆம் ஆண்டில் இத்திட்டங்கள் யாவும் ரூ. 671.199 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2003-2004ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ. 356.099 இலட்சம் ஆகும்.

## 2.9.3. மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரியிலுள்ள சுற்றுப்புறச் சூழலை மேம்படுத்த இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. நிரந்தர பசுமைப் பரப்பினை விரிவாக்கவும், இயற்கை மீதான உயிரினத் தலையீடுகளை முறைப்படுத்தவும், காடு வளர்ப்பு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் இதர பணிகளின் மூலம் காடுகளைப் பாதுகாத்து, சுற்றுச்சூழலின் மேம்பாடு ஆகியவற்றை உறுதி செய்வதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தரங்குன்றிய காடுகளில் மரங்களை நடுதல், சோலை வனங்களைச் சுற்றி கம்பிவேலி நிறுவுதல், நீர்ப் பாதுகாப்புப் பணிகள், வனத் தீயினைத் தடுக்க தீத்தடுப்புக் கோடுகளை வெட்டுதல், பராமரித்தல் மண்வளப் பாதுகாப்பு மூலம் தரமிழந்த சோலைக் காடுகளை வளமாக்குதல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படுகின்றன.

**2002-2003** ஆம் ஆண்டில் இத்திட்டமானது ரூ. **355.95** இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. **2003-2004** ஆம் ஆண்டில் ரூ. **400.00** இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. மேலும், சாலையோரங்களில் நிழற் பூங்காக்களை உருவாக்கவும், நிழல் தரும் தரமான மரவகைகள் நடவும் ரூ. **2.10** இலட்சத்தில் செயல்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

## 2.9.4. மேற்குத் தொடர்ச்சிமலை மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்தின் மொத்த 22,870 சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பில், **5,598** சதுர கிலோ மீட்டர் வனப் பரப்பினை மேற்குத் தொடர்ச்சி

[2003 மே 8

பகுதியில் உள்ள காடுகளின் வனச் சுற்றுச்சூழல் தாழ்ந்து வரும் நிலையைத் தடுக்கவும் தற்போதுள்ள வளங்களையும் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள விலங்கினம் மற்றும் தாவர இனத்தை அதிகமாக்கவும், இனம் பெருக்கி நடுதல், சிறிய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நீர்ப்பிடிப்பு அமைப்புகளை ஏற்படுத்தி, சிறு வனப் பொருட்கள் தோட்ட உற்பத்தி மற்றும் பயிர் வகைகளுக்காக இயற்கைச் சூழலை நிலை மாறாமல் மேம்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தும் அனைத்துப் பணிகளும் கூட்டு வன நிர்வாக முறையில் மக்களை ஈடுபடுத்தி ஒருங்கிணைந்த நீர்ப்பிடிப்புப் பகுதி மேம்படுத்துதல் முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**2002-2003** ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. **375.65** இலட்சம் செலவில் நடைமுறைப்படுத்தப்பட்டது. **2003-2004** ஆம் ஆண்டில் ரூ. **300.00** இலட்சம் நிதி ஒதுக்கீட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்புள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் புல்வெளியை கொடுத்து புல்லினைச் செடிகளை வளர்த்து அவற்றை பாதுகாப்பதற்காக ரூ. 10.00 இலட்சம் கொண்ட புதிய திட்டம் மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்ப உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.9.5. ஒருங்கிணைந்த காட்டுத் தீ தடுப்பு

காடுகளில் வனங்களில் ஏற்படும் தீயினைக் கட்டுப்படுத்துதலே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் தீத்தடுப்புக் கோடுகள் அமைத்தல், கூட்டு வன நிர்வாக முறையில் ஏற்படுத்தப்பட்ட குழுக்களுக்கு உதவி செய்தல், நீர்ப்பிடிப்புக் குழிகள் ஏற்படுத்துதல், தொலைத் தொடர்புச் சாதனங்கள் வழங்குதல், தீத்தடுப்புக் கருவிகள் வாங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**2002-2003** ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. **100.00** இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. **2003-2004** ஆம் ஆண்டில் ரூ. 371.08 இலட்சம் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

## 2.9.6. வன ஆராய்ச்சி

தமிழகத்தின் வன ஆராய்ச்சிப் பிரிவு, உயிரினப் பாவல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் தேவையினை உறுதி செய்தல் மற்றும் உயிரியல் உற்பத்தியினை மேம்படுத்துதல் ஆகியவற்றினை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 100 இலட்சம் செலவில் செயல்படுத்தப்பட்டது. 2003-2004 ஆம் ஆண்டும் இத்திட்டம் தொடரப்படவுள்ளது.



2003 மே 8]

## 2.9.7. ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின்கீழ், பழங்குடியினர் பகுதிகளில் தோட்டங்களை உருவாக்குதல், பழங்குடியினர் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், பழங்குடியினர் பகுதிகளில் சாலைகள் அமைத்தல், சந்தனப் பண்ணைகளில் துறை நடவுகளைக் காத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.9.8. தேசிய வன வளர்ப்புத் திட்டம்

கிராம அபிவிருத்தி, கிராமங்களில் வேலைவாய்ப்புக்கு வழிவகை செய்தல் மற்றும் வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவற்றை ஒரே குடையின்கீழ் இணைக்கும் நோக்கங்களுடன் வன அபிவிருத்தி முகமை எனும் அமைப்பினை தேசிய காடு வளர்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசு ஏற்படுத்தியுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு முதல் மைய அரசின் நிதியுதவி பெறும் காடு வளர்ப்புத் திட்டங்கள் யாவும் கூட்டு வன நிர்வாக அடிப்படையில் வன அபிவிருத்தி முகமையின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென திட்டம் செயல்படுத்தப்படும் கோட்டங்களில் வன அபிவிருத்தி முகமைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் 15 வன அபிவிருத்தி முகமைகளை ஏற்படுத்த தமிழ்நாடு வனத் துறை மைய அரசுக்கு கருத்துரு அனுப்பியதில் இது வரை 13 கோட்டங்களில் வன அபிவிருத்தி முகமைகளை ஏற்படுத்த மைய அரசு ரூ. **4047.54** இலட்சம் ஐந்தாண்டுகளுக்கென ஒதுக்கீடு செய்து **2002-2003** ஆம் ஆண்டிற்கு ரூ. **918.52** இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. **2003-2004** ஆம் ஆண்டில் இந்த பதிமூன்று வன அபிவிருத்தி முகமைகளுக்கு மைய அரசினால் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ. **1062.88** இலட்சம் ஆகும்.

## 2.9.9. குளக்கரைத் தோட்டங்கள்

ஸ்வீடன் நாட்டு நிதியுதவியுடன் (சீடா) **1981** ஆம் ஆண்டு முதல் சமூகக் காடுகள் திட்டம் தமிழ்நாடு வனத் துறையால் செயல்படுத்தப்பட்டு வந்தது. ஏரிகள் மற்றும் குளங்களில் கருவேல மரங்கள் நடவு செய்வது இத்திட்டத்தின் முக்கிய அங்கமாகும். மேலும் தரிசு குன்றிய மலைகள் மற்றும் புறம்போக்கு இடங்களிலும் நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டது. ஸ்வீடன் நாட்டு நிதியுதவி **01.04.1996** ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டது. அதன்பிறகு ஏரி, குளங்களில் கருவேல நடவுப் பணி மேற்கொள்ள முந்தைய அரசால் தடை விதிக்கப்பட்டது. தற்பொழுது இந்தத் தடை விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக **2003-2004** ஆம் ஆண்டு மீண்டும் கருவேலத் தோட்டங்களை உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 2.9.10. மன்னார் வளைகுடா உயிரினப் பாதுகாப்பு

மன்னார் வளைகுடா உயிரின இயற்கைச் சூழல் மேம்பாட்டுத் திட்டத்திற்கு உலக சுற்றுச்சூழல் நிறுவனம் (GEF) மற்றும் ஐக்கிய நாடு சபை வளர்ச்சித் திட்டம் நிதி ஒதுக்கீடு வழங்க ஒப்புதல் அளித்துள்ளது. கடலோர உயிரினப் பாவல்களைப் பாதுகாத்தல், கடலோரப் பகுதி மேலாண்மையினை நிலைநிறுத்தல் மற்றும் தன்னலப் பயன்படுத்தலால் கடல் சார்ந்த வளங்களுக்கு ஏறபடும் அழுத்தத்தினை குறைத்து, அதனை நில அடிப்படை நடவடிக்கைகளுக்கு மாற்றுதல்மூலம் வேலை வாய்ப்பினைப் பெருக்குதல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடு ரூ. 123.94 கோடியுடன் இத்துறையினரால் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அரசால் தோற்றுவிக்கப்பட்ட அறக்கட்டளை மூலம் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இத்திட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.07.2002-ல் தொடங்கப்பட்டது.

2002-2003 ஆம் ஆண்டில் ரூ.50 இலட்சம் உலகச் சுற்றுச்சூழல் நிறுவனத்திடமிருந்து (GEF) பெறப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டம் ரூ. 5.15 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளது.

## 2.9.11. தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்

தமிழகத்திலுள்ள பயன்படாத தரிசு நிலங்களைப் பயன்படும் நிலமாக மாற்றும் குறிக்கோளுடன் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி, திருவண்ணாமலை, வேலூர், தேனி, சேலம், நாமக்கல், திருச்சி, திண்டுக்கல், இராமநாதபுரம், புதுக்கோட்டை ஆகிய 10 மாவட்டங்களிலுள்ள தரிசு நிலங்களில் நடவு செய்ய 54 இலட்சம் தரமான மரச் செடிகளை வனத் துறை உருவாக்கியது. இத்திட்டத்திற்கென 2002-2003 ஆம் ஆண்டு நிதி ரூ. 3.62 கோடி செலவிடப்பட்டது.

ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வனத் துறையால் உற்பத்தி செய்யப்பட்ட கருவேல் நாற்றுகள் அல்லாத பிறவகைச் செடிகளான வேம்பு, வாகை, சிசு, புளி, புங்கன், தைலம், சவுண்டல், சவுக்கு போன்ற மாவகைகள் சார்ந்த 22 இலட்சம் நாற்றுகளைத் தேர்வு செய்யப்பட்ட 10 மாவட்டங்களில்



குளக்கரைகளில் 2003-2004 ஆம் நிதியாண்டில் சுமார் 3,100 ஹெக்டேர் பரப்பளவில் தோட்டங்கள் உருவாக்கும் திட்டம் நிறைவேற்றப்படும். இத்திட்டத்தினை ரூ. 3.50 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 2.10 புதிய திட்டங்கள்

## 2.10.1. தமிழ்நாடு இயற்கை வள மேம்பாட்டுத் திட்டம்

### தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் (நிலை-II)

தமிழகத்திலுள்ள காடுகள் பெரும்பாலும், மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் தக்காண பீடபூமி ஆகியவைகளில் அடங்கும். அதிகமான மேய்ச்சல், காட்டுத்தீ மற்றும் இவ்வனங்களிலிருந்து தலைச்சுமையால் எடுத்துச் செல்லப்படும் அதிக பாதிப்பினாலும் தொடர்ந்து பெருவாரியான காடுகள் தரங்குன்றிப் போனது. கிராம மக்களின் வறுமையின் காரணமாகவும், தேவைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்படுகின்றன. 2,50,000 ஹெக்டேர் தரங் குன்றிய காடுகளைச் சார்ந்த 1,000 கிராமங்களைப் பராமரிக்க வேண்டியது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு காடு வளர்ப்புத் திட்டம் நிலை-II ரூ. 779 கோடி நிதி இலக்குடன் "தமிழ்நாடு இயற்கை வள நிர்வாகத் திட்டம்" என்ற பெயரில் ஐந்தாண்டுகளில் 1,000 கிராமங்களில் நடைமுறைப்படுத்த கருத்துரு தீட்டப்பட்டு ஜப்பான் பன்னாட்டு உலக வங்கி நிறுவனத்தின் நிதி உதவிக்காக இந்திய அரசின் ஒப்புதலுக்கு தமிழக அரசால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

## 2.10.2. பகுதி - II திட்டங்கள்

2003-2004 ஆம் ஆண்டில் பாதுகாப்பு, கட்டடங்கள், சாலைகள், வனக் குடியிருப்பு மற்றும் உயிரியல் பூங்கா மேம்பாடு போன்ற 17 பகுதி-II திட்டங்களைச் செயல்படுத்த ரூ. 320.32 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிதி நிலைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தப் புதிய திட்டங்கள் கீழ்க்கண்டுள்ள பட்டியலின்படி இவ்வாண்டு செயல்படுத்தப்படவுள்ளன.

[2003 மே 8

| வ. எண் | திட்டங்களின் விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | வனப் பாதுகாப்பினை பலப்படுத்த 5 மண்டலங்களுக்கு கம்பியில்லா தொலைத் தொடர்பு சாதனங்கள் வாங்குதல் | 25.00 |
| 2. | 3 முக்கியமான வனத் தணிக்கைச் சாவடிகளுக்கு நிரந்தர கட்டடம் அமைத்து பலப்படுத்துதல். | 6.60 |
| 3. | 11 மண்டலங்களில் தள்ளுபடி செய்யப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக 22 புதிய வாகனங்கள் வாங்குதல். | 110.00 |
| 4. | சென்னை மற்றும் விழுப்புரத்தில் வனப் பாதுகாப்புக் குழு அமைத்தல். | 3.70 |
| 5. | கோவை வனப் பாதுகாவலர் மற்றும் பிற மாவட்ட வன அலுவலர்களுக்கு ரூ. 25,000 அளவீடு முறையில் ஜி.பி.எஸ். உபகரணங்கள் வழங்குதல். | 2.75 |
| 6. | தலா ரூ. 1 இலட்சம் வீதம் 5 நிரந்தர வேட்டை தடுப்புக் கொட்டகைகள் கட்டுதல். | 5.00 |
| 7. | கோட்டப்பட்டி, கள்ளக்குறிச்சி மற்றும் ஒடுகத்தூர் ஆகிய இடங்களில் வனச் சரக அலுவலகம் கட்டுதல். | 19.50 |
| 8. | கொடைக்கானல் மலை ஏறுவோர் கூடாரம் மற்றும் தங்கும் விடுதி கட்டுதல். | 15.00 |
| 9. | தெப்பக்காடு, முதுமலை, கரக்குடி, நிலக்கோட்டை சரகங்களில் தற்போது உள்ள கல்பரப்பாத சாலைகளைச் செப்பனிடுதல். | 20.00 |
| 10. | பண்ணைக்காடு மற்றும் பெரும்பள்ளம் – 2 கீ.மீ. செப்பனிடுதல் மற்றும் தார் போடுதல். | 15.00 |
| 11. | சந்தவாசல் – செண்பகத்தோப்பு சாலை – 3 கி.மீ. – செப்பனிடுதல் மற்றும் தார் போடுதல். | 22.00 |



2003 மே 8]

| வ. எண் | திட்டங்களின் விவரம் | தொகை (ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 12. | பேரார் – தெங்குமலை சாலை 2 கி.மீ செப்பனிடுதல் மற்றும் தார் போடுதல். | 15.00 |
| 13. | மருத்துவத் தாவரங்கள் இருக்கும் இடத்தைப் பராமரித்து பாதுகாத்தல். | 11.77 |
| 14. | காட்டெருமை/மான் சஃபாரி மேம்படுத்துதல். | 5.00 |
| 15. | குடியேற்றத்திற்கான ரூ. 4.00 இலட்சத்தில் அளவை உபகரணங்கள் வாங்குதல். | 4.00 |
| 16. | கல்வி நிறுவனங்களுக்கு இலவசமாகவும், பொதுமக்களுக்கு உற்பத்திச் செலவில் 1/4 பங்கு விலையிலும் ரூ. 1 இலட்சம் நாற்றுகள் ஐந்து மாநகராட்சிப் பகுதிகளில் உற்பத்தி செய்து பராமரித்தல். | 30.00 |
| 17. | வனத் துறையில் பயிற்சி கொடுப்பதன் மூலம் மனித இனத்துக்குரிய ஆதாரத்தினைப் பெருக்குதல் | 10.00 |
| | மொத்தம் .. | 320.32 |

## 2.10.3. காட்டாமணக்குத் தோட்டம் உற்பத்தி செய்தல்

தமிழ்நாட்டில் 2003-2004 ஆம் ஆண்டு முதல் மூன்றாண்டுகளுக்கு உயிர்-டீசலை (Bio-diesel) உற்பத்தி செய்யும்பொருட்டு காட்டாமணக்குத் தோட்டங்களை 1.50 இலட்சம் ஹெக்டேர் பரப்பில் வளர்க்க, ரூ. 350 கோடிக்கான திட்டக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 2.10.4. மூங்கில் தோட்டம் உற்பத்தி செய்தல்

2003-2004 ஆம் ஆண்டு முதல் 5 ஆண்டுகளுக்கு மூங்கில் தோட்டங்களை 2.38 இலட்சம் ஹெக்டேரில் உற்பத்தி செய்வதற்கு ரூ. 354.32 கோடிக்கான திட்டக் கருத்துரு மைய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## 2.11 கழகங்கள்

### 2.11.1. தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம்

தொழிற்சாலைகளின் தேவைக்காக கூழ்மரங்கள் மற்றும் முந்திரித் தோட்டங்கள் உற்பத்தி செய்தல், பராமரித்தல், அறுவடை செய்தல் மற்றும் பொதுமக்களின் தேவையான விறகு மரங்கள் விநியோகம் செய்தல் ஆகியவை இக்கழகத்தின் முக்கிய குறிக்கோளாகும். இக்கழகத்தின் பங்கு மூலதனம் முழுவதும் தமிழ்நாடு அரசால் செலுத்தப்பட்டுள்ளது. இக்கழகத்தின் ஆளுமையின்கீழ் 71,013 ஹெக்டேர் காப்புக் காடுகள் வனத் துறையிலிருந்து குத்தகைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 கோடியாகும். மற்றும் இதில் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 3 கோடியாகும்.

### 2.11.2. சாதனைகள்

2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டு பராமரிக்கப்பட்ட தோட்டங்களின் விவரம் பின்வருமாறு:

(ஹெக்டேரில்)

| | 2001-2002 | 2002-2003 |
|---|---|---|
| யூகலிப்டஸ் தோட்டங்களின் உற்பத்தி | 1164 | 1500 |
| முந்திரித் தோட்டங்களின் உற்பத்தி | 1166 | 1250 |
| சவுக்குத் தோட்டங்களின் உற்பத்தி | 164 | 100 |

2003-2004 ஆம் ஆண்டில் இக்கழகம் 2500 ஹெக்டேரில் வீரிய முறையில் பலன் தரும் கூழ்மரத் தோட்டங்களையும் மற்றும் 800 ஹெக்டேரில் முந்திரித் தோட்டங்களையும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும் நாட்டுபனியல் ஒட்டு மூலம் 100 ஹெக்டேர் பரப்பளவில் சவுக்குத் தோட்டங்களும் 60 ஹெக்டேர் பரப்பில் நெல்லித் தோட்டங்களும், தேக்கு, மூங்கில் மரத்தோட்டங்கள் 15 ஹெக்டேரிலும் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.





### 2.11.3. கூழ்மர விநியோகம்

2002-2003 ஆம் ஆண்டில் இக்கழகம் 1,00,000 மெட்ரிக் டன் கூழ்மரங்களை அறுவடை செய்துள்ளது. இந்த 1,00,000 மெட்ரிக் டன்னும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ. 9.00 கோடி வருவாய் எதிர்பார்க்கப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் 1,00,000 மெட்ரிக் டன் கூழ் மரங்களை காகித ஆலை நிறுவனங்களுக்கு வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 2.11.4. சந்தன எண்ணெய் தொழிற்சாலை

2001-2002 ஆம் ஆண்டில் இக்கழகம் மூலம் 1587.300 கிலோ கிராம் சந்தன எண்ணெய் மற்றும் பிற இதர பொருட்களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இக்கழகத்தால் 2725.569 கிலோ கிராம் சந்தன எண்ணெயும் மற்றும் பிற இதர பொருட்களும் விற்கப்பட்டுள்ளது. சந்தன மரப்பொருட்களின் தர முத்திரையினை உள்ளூர் மற்றும் உலக சந்தைகளில் நிலைநிறுத்தும் தீவிர முயற்சியில் வனத் தோட்டக் கழகம் ஈடுபட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு 1434.940 கிலோ அளவு சந்தன எண்ணெயினை இக்கழகம் ஏற்றுமதி செய்து, அதன்மூலம் ரூ. 268.88 இலட்சம் அன்னிய செலாவணி ஈட்டப்பட்டது.

### 2.11.5. வருவாய் மற்றும் செலவின விவரம்

இக்கழகத்தின் 2001-2002 (உள்ளபடி) 2002-2003 (மதிப்பீடு) மற்றும் 2003-2004ஆம் ஆண்டின் (திட்ட மதிப்பீடு) நிதி ஒதுக்க விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:-

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | வருவாய் | செலவு | இலாபம் (+) நட்டம் (-) |
|---|---|---|---|
| 2001-2002 (உள்ளபடி) | 1892.26 | 1544.54 | (+)347.72 |
| 2002-2003 (மதிப்பீடு) | 3296.52 | 2651.28 | (+)645.24 |
| 2003-2004 (திட்ட மதிப்பீடு) | 3723.00 | 2306.49 | (+)516.51 |

## 2.12 தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், குன்னூர்.

குன்னூரை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வரும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், நீலகிரி மாவட்டத்தின் பொருத்தமான நிலங்களில் தேயிலை உற்பத்தி செய்து வெளி நாடுகளிலிருந்து இந்தியா திரும்பிய தமிழ் அகதிகளுக்கு நிரந்தர வேலை அளித்து வருவதை பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது.

தோட்ட உற்பத்தி மற்றும் மறுவாழ்வுப் பணிகள் இக்கழகத்தால் பல்வேறு கட்டங்களில் செயல்படுத்தப்பட்டன. இக்கழகத்தின் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் ரூ. 10 கோடி ஆகும். இதன் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 5.96 கோடியாகும்.

### 2.12.1. பசுந்தேயிலை உற்பத்தி

(இலட்சம் கிலோவில்)

| 2001-2002 (உற்பத்தி) | 2002-2003 (மதிப்பீடு) | 2003-2004 (மதிப்பீடு) |
|---|---|---|
| 440.97 | 495.00 | 525.00 |

### 2.12.2. பதப்படுத்தப்பட்ட தேயிலை

(இலட்சம் கிலோவில்)

| 2001-2002 (உற்பத்தி) | 2002-2003 (மதிப்பீடு) | 2003-2004 (மதிப்பீடு) |
|---|---|---|
| 104.76 | 118.80 | 126.00 |

### 2.12.2. தொழிலாளர்கள் நலன்

இக்கழகம் இதுவரை 2,445 குடும்பங்களுக்கு மறுவாழ்வளித்து 6,754 தொழிலாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பும் அதே அளவு தொழிலாளர்களுக்கு தினக் கூலி அடிப்படையில் வேலைவாய்ப்பும் வழங்கி வருகிறது. தொழிலாளர்களின் நலனை முன்னிட்டு அவர்களின் அடிப்படை வசதிகளான வீட்டு வசதி, மின்சாரம், பாதுகாக்கப்பட்ட குடிநீர், கழிப்பறைகள் மற்றும் விடுப்பு ஊதியம், மகப்பேறு விடுப்புக் கடன்கள், தொழிலாளர் நலநிதி போன்ற நிதிப் பலன்களை வழங்கி வருகின்றது. மேலும், தோட்டப் பகுதிகளில் மருந்தகங்களும், இரண்டு





மருத்துவமனைகளும் இயங்கி வருகின்றன. இவை தவிர இக்கழகம் பள்ளியினையும் தனியே இயக்கி வருகின்றது.

### 2.12.4. வருவாய் மற்றும் செலவினங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வருடம் | தேயிலை மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | செலவு | நிகரலாபம் (+) நட்டம் (–) |
|---|---|---|---|
| 2001–2002 (உள்ளபடி) | 4565 | 5286 | (–) 721 |
| 2002–2003 (மதிப்பீடு) | 4901 | 5411 | (–) 510 |
| 2003–2004 (திட்ட மதிப்பீடு) | 5408 | 5843 | (–) 435 |

இக்கழகம் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்டுள்ள அதிக செலவினாலும், தேயிலை இறக்குமதி கொள்கை தாராளமயமாக்கத்தினால் ஏற்பட்ட தேயிலை விலை வீழ்ச்சியினாலும் நட்டத்தில் இயங்கி வருகிறது. உற்பத்தித் திறனைப் பெருக்குவது மற்றும் சிக்கன நடவடிக்கையினை மேற்கொள்வதன் மூலம் இக்கழகத்திற்கு ஏற்பட்டுள்ள இழப்பினைக் குறைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 2.13 அரசு ரப்பர் கழகம், நாகர்கோவில்

அரசு ரப்பர் கழகம் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தமிழ்நாடு வனத் துறையின் 4,27,9.78 ஹெக்டேர் வன நிலங்களிலுள்ள ரப்பர் தோட்டங்களை குத்தகைக்கு எடுத்துள்ளது. தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் ரப்பர் பயிரிட மண்வளம், தட்ப வெப்பநிலை மற்றும் இட அமைப்பு பொருத்தமாக உள்ளது. 1956 ஆம் ஆண்டின் கம்பெனிச் சட்டத்தின் கீழ் 20.08.1984 அன்று, அரசு ரப்பர் கழகமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடியாகும். இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடியாகும்.

[2003 மே 8

1997-98-ஆம் ஆண்டு முதல் இக்கழகம் நட்டத்தில் இயங்கி வருகிறது. இக்கழகத்தின் தற்போதைய சிக்கல்களிலிருந்து மீட்டு புத்துயிர் அளித்து நல்ல நிலைக்குக் கொண்டு வர அரசு கீழ்க்காணும் சலுகைகளை வழங்கியுள்ளது:-

1. குத்தகை வாடகை ஹெக்டேருக்கு ரூ. 6,000/- லிருந்து ரூ. 3,000/- ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

2. இக்கழகம் 31-03-2001 வரை நிலுவை குத்தகைத் தொகையாக ரூ. 12.90 கோடி செலுத்த வேண்டும். இதில் ரூ. 6.45 கோடி (மேற்காண் நிலுவையில் 50 சதவீதம்) பங்கு மூலதனமாக மாற்றுவதற்கும் மீதி ரூ. 6.45 கோடியினை மென்கடனாக 3 ஆண்டுகள் காலந்தாழ்த்தி 5 ஆண்டுகளில் திருப்பி அளிப்பதற்கும் அரசு அனுமதியளித்துள்ளது.

3. பழைய மரங்களை வெட்டியதிலிருந்து கிடைக்கப்பெற்ற ரூ. 1.71 கோடியினை திருப்பி அளிக்கக்கூடிய கடனாக இக்கழகம் பயன்படுத்திக்கொள்ள அரசு அனுமதியளித்துள்ளது.

### 2.13.1. வருவாய் மற்றும் செலவுகள்

| வருடம் | ரப்பர் உற்பத்தி (மெட்ரிக் டன்னில்) | ரப்பர் மற்றும் இதர பொருட்கள் விற்பனையில் பெறப்பட்ட வருவாய் | விற்பனை (மெட்ரிக் டன்னில்) | மதிப்பு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|---|---|
| 2001-2002 (உள்ளபடி) | 2511 | 1028.42 | 1674.89 | (-) 646.47 |
| 2002-2003 (மதிப்பீடு) | 2800 | 1272.74 | 1255.82 | (+) 16.92 |
| 2003-2004 (திட்ட மதிப்பீடு) | 2800 | 1208.56 | 1189.34 | (+) 19.22 |

அரசு ரப்பர் கழகம், கடந்த சில ஆண்டுகளாக இறக்குமதி செய்யப்பட்ட ரப்பர் மலிவான விலையில் கிடைப்பதால், சந்தையில் ஏற்பட்ட ரப்பர் விலை வீழ்ச்சியால், நிதிநிலை திருப்திகரமாக இல்லாமல் நட்டத்தில் இயங்கி வருகிறது. இக்கழகத்தில் சிக்கன



2003 மே 8]

நடவடிக்கைகளை மேற்கொண்டு நிதி நிலைமையைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

## 3. சுற்றுச்சூழல் துறை

**3.1.** மக்கள்தொகைப் பெருக்கமும், நகர்மயமாக்கமும், பெருகிவரும் தொழிற்சாலைக் கழிவுகளும், நீர், நிலம் காற்றுச் சூழல் பாதுகாப்புக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளன. நீடித்து நிலைத்து நிற்கும் சமூகப் பொருளாதார வளர்ச்சியே, நமக்கும் வருங்கால சந்ததியினருக்கும் குந்தகம் ஏற்படுத்தாமல் நமது தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் வளர்ச்சிப் பாதையில் நாட்டைக் கொண்டு செல்வதற்கு அடிகோலும். மாண்புமிகு முதல்வர் அவர்களின் 15 அம்ச திட்டத்தில் "சூழல் பாதுகாப்பு" முக்கியமான ஒரு இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நீர், நிலம், காடுகள், உயிர்ப்பன்மயம் போன்ற வாழ்க்கை ஆதாரங்களைப் பாதுகாத்து மேம்படுத்துவது தமிழகத்தின் சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாதது. இதனைக் கருத்திற் கொண்டு தமிழ்நாடு அரசு நதிநீர் மாசினைக் களையவும், ஏரிகளைத் தூய்மைப்படுத்தவும், மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மேம்படுத்தவும், பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

### 3.2. சுற்றுச்சூழல் துறையின் குறிக்கோள்கள்

தமிழ்நாட்டில் சுற்றுச்சூழல் மேலாண்மையைச் செயல்படுத்தும் பொருட்டு சுற்றுப்புறம் மற்றும் வனத் துறை அரசாணை (நிலை) எண் 335, நாள் 13-10-1995-ல் சுற்றுச்சூழல் துறை ஏற்படுத்தப்பட்டது. இத்துறை பெரிய திட்டங்களான காவிரி, வைகை மற்றும் தாமிரபரணி ஆறுகள், தமிழ்நாட்டின் நகர்ப்புற ஏரிகள் மற்றும் சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இவற்றைத் தவிர, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினால் செயல்படுத்தப்படாத பிற சுற்றுச்சூழல் பணிகளையும் இத்துறை செய்து வருகிறது.

திட மற்றும் திரவக் கழிவுகளை மறுசுழற்சி செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், மழைநீர் சேகரம் செய்தல், மரம் நடுதல் ஆகியன சூழல் மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் முக்கிய செயல்களாகும். மக்களின் மனப்போக்கில் மாற்றம் ஏற்படுத்தி அதன் வாயிலாக சுற்றுச்சூழல் விழிப்புணர்வைத் தோற்றுவிப்பது சூழல் பாதுகாப்புக்கு இன்றியமையாததாகும். சூழல் மேம்பாடு அடைவதற்கு இம்மாதிரியான

[2003 மே 8

சிந்தனைகளை, பள்ளி மாணவர்களின் இளம் மனங்களில் பதியும் வண்ணம் புகட்டுதல் வேண்டும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட கருத்துரு மற்றும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கியுள்ள 15 அம்ச திட்டத்தின் கூறுகளை அடிப்படையாகக் கொண்டு, 2003-2004 ஆம் ஆண்டுக்கான திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம், சுற்றுச்சூழல் விழிப்புணர்வைப் பெருமளவு தோற்றுவிக்கவும், சூழல் மறுசீரமைப்பினை ஓரளவுக்கு ஏற்படுத்தவும் வழிகோலும்.

## 3.3. தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

இத்துறை, மத்திய அரசு பொறுப்பேற்கும் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் காவிரி ஆற்றின் கரையில் அமைந்துள்ள ஐந்து நகரங்களில் ரூ. 3,627.75 இலட்சம் மொத்த நிதி இலக்கினைக்கொண்டு, 1996-97 முதல் மாசுத் தடுப்புப் பணிகளை செயல்படுத்தி வருகிறது. இத்திட்ட காலம் 10 ஆண்டுகளாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்தும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும உள்ளாட்சி அமைப்புகளால் இதுவரை ரூ. 1,658.11 இலட்சம் செலவிடபபட்டுளளது. இத்திட்டம் மத்திய அரசின் 100 விழுக்காடு திட்டமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

குறைந்த செலவில் சுகாதார வசதி, ஆற்றங்கரையோரப் பகுதி அபிவிருத்தி போன்ற சிறு பணிகள் முடிவடைந்துவிட்டன. கழிவு நீரை ஆற்றில் கலக்காதவாறு தடுத்து மாற்றுவழிப் படுத்தும் பணிகள் ஈரோடு, பவானி, கொமாரபாளையம், பள்ளிப்பாளையம், திருச்சி ஆகிய இடங்களில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் செய்யப்பட்டு வருகின்றன. திருச்சியில் இப்பணி முடிக்கப்பட்டுள்ளது. கொமாரபாளையம் மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் கழிவுநீரினைத் தடுத்து குழாய்கள் மூலம் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அனுப்பும் பணிகள் முடிவுற்றுள்ளன. இதர இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

## 3.4. சென்னை பெருநகர நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

சென்னை நகரின் நீர் வழிகளில் மாசுத் தடுப்புப் பணிகளைச் செயல்படுத்த சென்னை நகரத்தின் முக்கிய ஆறு நீர்வழித் தடங்களான கூவம், அடையாறு, பக்கிங்ஹாம் கால்வாய், ஓட்டேரி ஓடை, காப்டன் குக் கால்வாய், மாம்பலம் கால்வாய் ஆகியவற்றில் சேரும் 422 கழிவுநீர் சாக்கடைகளைத் தடுத்து நிறுத்தி, குழாய் மூலம் மாற்று வழியில்



2003 மே 8]

எடுத்துச் செல்லும் பணிகள், 10 கட்டங்களில் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு மத்திய அரசு ரூ.191.52 கோடி நிதி உதவி அனுமதித்துள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக மத்திய அரசு வழங்கியுள்ள தொகையான ரூ111.90 கோடி முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மார்ச் 2003 வரையில் ரூ. 119.88 கோடி செலவிடப்பட்டுள்ளது.

## 3.5. தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம்—புதிய ஒருங்கிணைந்த திட்டம்

காவிரி, வைகை, தாமிரபரணி ஆறுகள் பாயும் ஏழு முக்கிய நகரங்களான திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், கரூர், மதுரை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் நதிநீரை தூய்மைப்படுத்த மத்திய அரசு ரூ.575.30 கோடிக்கான திட்டத்திற்கு ஏற்பளித்துள்ளது. இதில் ரூ. 282.15 கோடியினை மத்திய அரசும், மீதமுள்ள தொகையினை தமிழக அரசு, உள்ளாட்சி அமைப்புகள், மக்கள் பங்கேற்பு மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் நான்கு ஆண்டுகளில் நிறைவுறும். இராமேஸ்வரம் மற்றும திருச்செந்தூர் ஆகிய கடற்கரை நகரங்களில் சுற்றுச்சூழல் மாசினைக் கட்டுப்படுத்த பாதாள சாக்கடை அமைக்கும் திட்டம் முறையே ரூ. 8.18 கோடி, ரூ.8.21 கோடி செலவில் நிறைவேற்றப்பட உள்ளது. இத்திட்டத்தின் மூலம் பாதாள சாக்கடை அமைத்தல், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல், குறைந்த செலவில் சுகாதார அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

காவிரி ஆற்றில் மாசு களைதல் மற்றும் சென்னை நகர நீர்வழித் திட்டங்கள் ஆகியவை 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து மத்திய அரசின் தேசிய நதிநீர் பாதுகாபபு இயக்கக நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படும். இவற்றில் மதுரை, கும்பகோணம், தஞ்சாவூர், திருநெல்வேலி, மயிலாடுதுறை மற்றும் கரூர் ஆகிய ஆறு நகரங்களுக்கான விரிவான திட்ட அறிக்கைகளுக்கு மத்திய அரசின் ஒப்புதல் சமீபத்தில் பெறப்பட்டுள்ளது. மதுரை மற்றும் கும்பகோணம் நகரங்களின் திட்டப் பணிகள் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. மார்ச் 2003 வரையில் ரூ.35.32 கோடி இத்திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள கரூர், தஞ்சை, மயிலாடுதுறை மற்றும் திருநெல்வேலி ஆகிய நான்கு நகரங்களில்

[2003 மே 8

பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

### 3.6. தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம்

உதகை மற்றும் கொடைக்கானல் ஏரிகளில் மாசினைக் களைந்து தூய்மைப்படுத்துவதற்காக, ரூ.1228 இலட்சம் செலவில் விரிவான திட்ட மதிப்பீடுகள், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப் பணித் துறை மூலமாக நிறைவேற்றப் படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் மார்ச் 2003 வரை ரூ.91.69 இலட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது.

### 3.7. ஆம்பூரில் பாலாற்று நதிநீர் பாதுகாப்புத் திட்டம்

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிப்பு செய்யப்பட்ட கழிவுநீரில் காணப்படும் அதிகமான மொத்த உப்பின் அளவினைக் குறைப்பது கடினமாக உள்ளது. இதற்கு புதுமையான தீர்வாக, சுத்திகரிக்கப்பட்ட நகராட்சி கழிவுநீருடன் கலந்து ஆலைக் கழிவுநீரின் உப்பின் அளவை தேவையான அளவு குறைக்கும்பொருட்டு மொத்தம் ரூ.25 கோடி மதிப்பீட்டில் ஒரு திட்டம் தமிழ்நாட்டிலேயே முதல் முறையாக ஆம்பூர் நகராட்சியில் செயல்படுத்த விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதேபோல, இராணிப்பேட்டை மற்றும் வாலாஜா நகராட்சிகளில் உருவாகும் கழிவுநீரை சுத்திகரித்து சுத்திகரிக்கப்பட்ட தொழிற்சாலை கழிவுநீரில் கலந்துள்ள உப்புத்தன்மையைக் குறைக்க ரூ.25.00 கோடி செலவில் ஒரு புதிய திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு இந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் ஆலைகளிலிருந்து வெளியேறும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரின் மொத்த உப்பின் அளவினைக் குறைத்து பாலாறு மாசுபடுவதைக் குறைப்பதோடு மட்டுமல்லாமல் ஆம்பூர், இராணிப்பேட்டை மற்றும் வாலாஜா நகர மக்களுக்கு புதை சாக்கடைத் திட்ட வசதியினையும் அளிக்கிறது. இத்திட்டம் 70 சதவீதம் மத்திய அரசின் நிதியுதவியுடனும் மீதித் தொகை நகராட்சி மற்றும் தொழிற்சாலைகள் நிதி பங்கேற்பின் மூலமாகவும் செயல்படுத்தப்படவுள்ளது.



2003 மே 8]

### 3.8. கடற்கரைப் பகுதி மேலாண்மை

கடற்கரைப் பகுதிகளில் வளர்ச்சியினை ஒழுங்குபடுத்துவதற்காக மத்திய அரசு "கடற்கரை ஒழுங்குமுறை அறிவிக்கை 1991" வெளியிட்டுள்ளது. இதனைச் செயல்படுத்த சுற்றுப்புறம் மற்றும் வனத் துறைச் செயலரை தலைவராகவும், சுற்றுச்சூழல் துறை இயக்குநரை உறுப்பினர் செயலராகவும் கொண்ட மாநில கடற்கரை மேலாண்மைக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வறிவிக்கைகளின்கீழ் பல்வேறு கருத்துருக்கள் இந்தக் குழுமத்தால் பரிசீலிக்கப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதேபோல, அனல் மின் திட்டங்களுக்கு சுற்றுச்சூழல் அனுமதி வழங்குவதற்காக வல்லுநர் குழு ஒன்றையும் அரசு நியமித்துள்ளது. இக்குழுவும் இத்துறையுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

### 3.9. சுற்றுச்சூழல் விருதுகள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை ஆகியவற்றில் சிறந்த பணி செய்த வல்லுநர்கள், தனி நபர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் ஆகியோரைப் பாராட்டி ஊக்குவிக்கும் வண்ணமாக தமிழ்நாடு அரசால் ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வரும் சுற்றுச்சூழல் விருதுகள் 2003 ஆம் ஆண்டிலும், உலக சுற்றுச்சூழல் தினமான ஜூன் 5 ஆம் தேதி அன்று வழங்கப்பட உள்ளன.

### 3.10 2002-2003 ஆம் ஆண்டின் செயல்பாடுகள்

#### 3.10.1. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சுற்றுலாத் தலங்களான மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் மலைவாசஸ்தலங்களான ஊட்டி மற்றும் கொடைக்கானல் ஆகியவற்றின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் நகராட்சியுடன் இணைந்து சுற்றுச்சூழல் விழிப்புணர்வுத் திட்டங்கள் தொடர்ந்து செயலாக்கப்பட்டன. பொது மக்களிடையே சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகத்தான் உலக சுற்றுச்சூழல் தினம், ஓசோன் தினம், போகிப் பண்டிகை நாள் ஆகிய தினங்களில் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 3.10.2. தேசிய பசுமைப் படை

சுற்றுச்சூழல் விழிப்புணர்வை பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியரிடம் ஏற்படுத்துவதற்காக தமிழ்நாட்டில் உள்ள அனைத்து 29 மாவட்டங்களிலும் 1,260 சுற்றுச்சூழல் மன்றங்கள் இத்துறையால் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் உதவியுடன் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களிலும் 1,260 பள்ளிகளில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்த சுற்றுச்சூழல் மன்றங்கள் தொடங்கப்பட்ட தனிச்சிறப்பு கொண்ட மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இப்பணி 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடரும். சுற்றுச்சூழல் விழிப்புணர்வை மாணவ, மாணவியரிடையே மேலும் வலுப்படுத்த மத்திய அரசின் நிதியுதவியுடன் 2002-2003 ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 100 பள்ளிகள் என்ற வீதம், 29 மாவட்டங்களிலும் 2900 பள்ளிகளில் தேசிய பசுமைப் படை தொடங்கப்பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு ஒரு பள்ளிக்கு ரூ.1000 நிதியுதவி வழங்குகிறது. இந்த ஆண்டு இத்திட்டத்தின்கீழ் மாவட்ட அளவிலான பயிற்றுநர்களுக்கும் பள்ளி ஒருங்கிணைப்பாளர்களாகப் பணிபுரியும் சம்பந்தப்பட்ட ஆசிரியர்களுக்கும் இத்துறை மூலமாக மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட மாநில அளவிலும் மாவட்ட அளவிலும் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## 3.10.3. சூழல் தகவல் மையம்

உலக வங்கியின் உதவியுடன் மத்திய அரசு செயல்படுத்தி வரும் சுற்றுச்சூழல் மேலாண்மைத் திறனை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் (EMCB-TAP Environmental Management Capacity Building Technical Assistance Project) "சுற்றுச்சூழல் தகவல் மையம்" (ENVIS- Environmental Information System) ஒன்றை தமிழ்நாட்டில் அமைக்க சுற்றுச்சூழல் துறை மாநில அமைப்பாளராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது. கணினி வலையின் வாயிலாக தமிழக சுற்றுச்சூழல் பற்றிய பொதுவான தகவல்களை அளிப்பது மட்டுமன்றி, சுற்றுச்சூழலின் தற்போதைய நிலை, மாநிலத்தின் வளமான உயிர்ப்பன்மயம் மற்றும் ஆறுகளைத் தூய்மைப் படுத்தும் பணிகள் போன்றவை பற்றிய விவரங்களையும் சூழல் தகவல் மையம் வழங்கும். சூழல் தகவல் மையத்தினால் 5-12-2002 அன்று



உயிர்ப்பன்மயம் குறித்து ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இத்திட்டத்திற்கென மொத்தம் ரூ. 7.15 இலட்சம் மத்திய அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

## 3.10.4. சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை

மைய அரசின் நிதி உதவியுடன் செயலபடுத்தப்படும் பல்வேறு துறைகளின் தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டம், தேசிய ஏரிகள் பாதுகாப்புத் திட்டம் மற்றும் தேசிய பசுமைப் படை போன்ற திட்டங்களைத் துரிதப்படுத்தவும், அவற்றிற்கான மைய அரசின் நிதி உதவியை அவ்வப்போது பெற்று, ஒருங்கிணைத்து பணிகளை மேற்பார்வையிடவும், தன்னாட்சி அடிப்படையில் "சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை" ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இம்முகமை சுற்றுச்சூழல் துறையில் மேற்கொள்ளப்படும் சுற்றுச்சூழல் பாதுகாப்புப் பணிகளை வலுப்படுத்திடவும், மைய அரசிடமிருந்து எளிதில் நிதி உதவி பெற்றிடவும் சுற்றுச்சூழல் சம்பந்தப்பட்ட பன்னாட்டு நிதி நிறுவனங்களின் மூலம் தேவையான நிதி உதவி பெற்றிடவும் வழி வகுக்கும்.

## 3.11 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்

### 3.11.1. கோவில் குன்றுகளில் சூழல் மறுசீரமைப்பு முன்னோடி திட்டம்

சூழல் சீர்கேடுகளைக் களைந்து சுற்றுச்சூழலை மேம்படுத்துவது பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கியமான நோக்கமாகும். தமிழ்நாட்டில் பல கோவில்கள் குன்றின் மேல் அமைந்துள்ளன. அவற்றில் பெரும்பாலான குன்றுகள் தரிசாக தரங்குன்றி காணப்படுகின்றன. தற்பொழுது கோவிலிலிருந்து உற்பத்தியாகும் குப்பைகள், கழிவுகள் ஆகியவை சரியான முறையில் மேலாண்மை செய்யப்படுவதில்லை. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை மரக்கன்றுகளுக்கு பாய்ச்சுவதற்குப் பயன்படுத்தலாம். வேலூர் மாவட்டத்திலுள்ள சோளிங்கர் கோவில் குன்றில் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அறநிலைய வளர்ச்சித் துறையுடன் இணைந்து ஒரு முன்மாதிரி திட்டம் உருவாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மலை முகடுகளை வளப்படுத்தும் மர வகைகளை நடுதல், சூழலை விரைவாகப் பசுமைப்படுத்தும் " ஸ்டைலோ" போன்ற புல் பூண்டுகள் விதைத்தல், ஸ்தலவிருட்சம் நடுதல், கோயில் நந்தவனம் உருவாக்குதல் ஆகிய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மண் மற்றும் ஈரப்பதத்தினைப் பாதுகாக்கும்பொருட்டு சிறு தடுப்பணைகள் கட்டப்படும். இப்பணிகள் ரூ.9.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் வெற்றிகரமாகச் செயல்பட்டால், ஏனைய கோவில் குன்றுகளிலும் நடைமுறைப்படுத்த ஓர் எடுத்துக்காட்டாக அமையும்.

### 3.11.2. சுற்றுச்சூழல் கல்வி மற்றும் விழிப்புணர்வு

மாவட்டத்தில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வினை ஏற்படுத்த மாநிலம் முழுவதும் 1,200 பள்ளிகளில் சுற்றுச்சூழல் மன்றங்கள் ஒன்பதாம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைத் தவிர, ஒரு மாவட்டத்திற்கு 100 பள்ளிகள் வீதம் 2900 பள்ளிகளில் தேசிய பசுமைப்படைகள் 2002-2003-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மழைநீர் சேகரிப்பு, மண்புழு உரம் தயாரித்தல் போன்ற சுற்றுச்சூழலுக்கு உகந்த பணிகள் இம்மாநிலத்தில் தெரிவு செய்யப்பட்ட உயர்நிலை கல்வி நிறுவனங்களில் (கல்லூரிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள்) மேற்கொள்ளப்படும். இவை, முன்மாதிரி நிறுவனங்களாகக் கருதப்பட்டு, ஏனைய இதர கல்வி நிறுவனங்களுக்கும், மக்கள் சமூகத்திற்கும் எடுத்துக்காட்டாக அமையும். இதற்காக திடக்கழிவு மேலாண்மை, மழைநீர் சேகரிப்பு போன்றவற்றில் பயிற்சி அளிக்கப்படும். 2003-2004 ஆம் ஆண்டு தெரிவு செய்யப்பட்ட 60 பள்ளிகளில் முன்மாதிரியாக அமைக்கப்படும் ஒவ்வொரு சுற்றுச்சூழல் மன்றத்திற்கும் ரூ.5,000 நிதியுதவி வழங்கப்படும். இத்திட்டத்திற்கு ரூ.3.00 இலட்சம் தேவைப்படும்.

### 3.11.3. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு

உயிர்ப்பன்மய மதிப்பீடு, குறைந்த செலவில் கழிவுநீர் சுத்திகரித்தல், திடக்கழிவு மேலாண்மை பாலைவன மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மண்வளப் பாதுகாப்பு, ஆறுகள்/ஏரிகளில் உள்ள நீரின் தரத்தினைக் கண்காணித்தல், நகர்ப்புற வனவியல், நகரங்களின் காற்று மற்றும் ஒலி மாசினைக் குறைக்க பாரம்பரிய தோட்டமெழுப்புதல் போன்ற குறிப்பிட்ட தேவைக்கேற்ப சுற்றுச்சூழல் ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். இதற்கு அண்ணா பல்கலைக்கழகம், சென்னை பல்கலைக்கழகம், மதுரை பல்கலைக்கழகம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் மற்றும் பாரதிதாசன் பல்கலைக்கழகம் ஆகியவற்றிலுள்ள வசதிகள் பயன்படுத்தப்படும். சுற்றுச்சூழல் இயக்கத்திற்கு உதவவும், தேவையான



ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் மத்திய பல்கலைக்கழக மானியக்குழு/இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சியாளர்/மாணவர்களுக்கு இப்பல்கலைக் கழகங்களின் வாயிலாக உதவித்தொகை வழங்கப்படும். 2003-2004-ல் உடனடியாகத் தேவைப்படும் நீர் மற்றும் காற்று மாசு குறித்த தேர்ந்தெடுக்கப்பட்ட ஆராய்ச்சித் திட்டங்களுக்கு உதவ ரூபாய் 10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட உள்ளது.

### 3.11.4. சுய உதவிக் குழுக்கள் மூலமாக சுற்றுச்சூழல் மேம்பாடு

சுற்றுச்சூழல் துறையின் விழிப்புணர்வுப் பணிகளில் ஏற்கெனவே பல தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், கல்வியாளர்களும் பங்கேற்று வருகின்றனர். அரசு சாரா நிறுவனங்கள், சுய உதவிக் குழுக்கள் மூலமாக கழிவுக் காகிதங்களிலிருந்து காகிதப் பை மற்றும் காகிதப் பொருட்கள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும். அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்கள் மூலமாக இம்மாதிரித் திட்டம் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் ஆகிய ஐந்து நகராட்சிகளில் ரூ.12.00 இலட்சம் செலவில் செயல்படுத்தப்படும்.

## 4. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

4.1 தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 1982-ல் அமைக்கப்பட்டு, மாநிலத்தின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான கீழ்க்காணும் சட்டங்கள் மற்றும் விதிகளைச் செயல்படுத்தி வருகின்றது:

* 1978 மற்றும் 1988 ஆம் ஆண்டுகளில் திருத்தப்பட்ட 1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
* 1991 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1977 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரிச்சட்டம்.
* 1987 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம்.
* 1989 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம்.
* 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள்.

[2003 மே 8

* 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

* 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான இரசாயனப் பொருட்கள் தயாரித்தல், சேகரித்தல் மற்றும் இறக்குமதி விதிகள்.

* 2000 ஆம் ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

* 1999 ஆம் ஆண்டு மறுசுழற்சி பிளாஸ்டிக் தயாரிப்பு மற்றும் பயன்பாடு விதிகள்.

* 2000 ஆம் ஆண்டு நகர திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

* 2000 ஆம் ஆண்டு ஒலி மாசு (சீரமைப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள்.

* 2001 ஆம் ஆண்டு மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் தலைமை அலுவலகத்துடன் இயங்குகிறது. சென்னை, கோயம்புத்தூர், வேலூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, அம்பத்தூர், தாம்பரம், வாணியம்பாடி, ஓசூர், கடலூர், தஞ்சாவூர், கரூர், சேலம், நாமக்கல், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி, உதகமண்டலம், நாகர்கோவில், புதுக்கோட்டை, விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 25 மாவட்ட அலுவலகங்கள் உள்ளன.

சென்னை, சேலம் மற்றும் மதுரை ஆகிய 3 இடங்களில் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் அம்பத்தூர், வேலூர், கடலூர், திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், திருநெல்வேலி, கோயம்புத்தூர், திருப்பூர், ஓசூர் மற்றும் மணலி ஆகிய 10 இடங்களில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களையும் தூத்துக்குடியில் ஒரு நடமாடும் சுற்றுச்சூழல் ஆய்வகத்தையும் வாரியம் ஏற்படுத்தியுள்ளது.



2003 மே 8]

**4.2 மற்ற நிறுவனங்களுடனான தொடர்பு**

வாரியம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கான ஒருங்கிணைந்த செயலினை மேற்கொள்வதற்காக தொடர்புடைய பிற துறைகள் மற்றும் நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்கிறது. வாரியம், நகர திடக்கழிவு மேலாண்மைக்காக உள்ளாட்சி அமைப்புகளுக்கு பயிற்சி மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றை அளித்து உதவி வருகிறது.

**4.3 தொழிற்சாலை மாசு கண்காணிப்பு**

தமிழ்நாட்டில் வேகமாகப் பெருகிவரும் தொழிற்சாலை மயமாக்கல் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வரும் மாசினைத் தொடர்ந்து கண்காணிப்பது மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது. எல்லா தொழிற்சாலைகளும் வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடைவதற்குத் தேவையான மாசு தடுப்புச் சாதனங்களை அமைக்க வேண்டும். வாரியத்தின் கள அலுவலர்கள் அவர்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து செய்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக் கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைக் கண்காணிக்கின்றனர். வாரியம், தொழிற்சாலைகளைச் சீரியமுறையில் கண்காணிப்பதற்காக, அவற்றின் மாசு தன்மையின் அடிப்படையில் சிவப்பு, ஆரஞ்சு மற்றும் பச்சை என மூன்று பிரிவுகளாகப் பிரித்துள்ளது.

**4.3.1. தொழிற்சாலைகளுக்கு இசைவாணை வழங்கும் நடைமுறை**

வாரியம், கழிவுநீருக்கான தரத்தினையும் சுற்றுப்புற காற்றின் தரம் மற்றும் வெளியேற்றப்படும் புகையின் தர அளவினையும் நிர்ணயித்துள்ளது. தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், அவற்றை இயக்குவதற்கும், நீர் மற்றும் காற்றுச் சட்டங்களின்கீழ், இரண்டு கட்டமாக இசைவாணைகளை வாரியம் வழங்குகிறது. தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை, தொழிற்சாலை, கட்டுமானப் பணிகளைத் தொடங்குவதற்கு முன் அது அமையவிருக்கும் இடத்தின் தகுதியைப் பொறுத்து வழங்கப்படுகிறது. வாரியத்தின் வரையறுக்கப்பட்டுள்ள விதிமுறைகளின்படி, கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை தொழிற்சாலை அமைத்த பின்னர், தொழிற்சாலை உற்பத்தியைத் தொடங்கும் முன், தொழிற்சாலையை இயக்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது.

[2003 மே 8

வாரியம் இசைவாணையை வழங்கும்போது தொழிற்சாலைகள் பூர்த்தி செய்ய வேண்டிய தரத்தினைக் குறிப்பிடுகிறது. தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் இசைவாணை, கழிவுகளுக்கான அடிப்படை நிபந்தனைகளுடன், ஐ.எஸ்.ஓ.14001 சான்றிதழ் சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு, பசுமைப் பகுதி வளர்ச்சி, மழைநீர் சேமிப்பு வசதிகள், மாசு கட்டுப்பாடு அமைப்புகளைப் பராமரித்தல், வாகன பராமரிப்பு மற்றும் முறையான வாகன ஒப்பந்தம், வீசியெறியும் பிளாஸ்டிக்கின் உபயோகம் இல்லாத சிறந்த நிறுவன பராமரிப்பு ஆகியவற்றிற்கான நிபந்தனைகளையும் கொண்டுள்ளது.

1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையினை இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம், 1986 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டத்தின்கீழ் வெளியிட்டுள்ளது. இவ்வறிவிக்கையின்படி, அதில் குறிப்பிட்டுள்ள 30 வகை தொழிற்சாலைகள் இந்திய அரசிடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற வேண்டும். 10-4-1997-ல் வெளியிடப்பட்டுள்ள 1994 ஆம் ஆண்டு சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கைக்கான திருத்தத்தின்படி, அவ்வகையான திட்டங்களுக்கு பொதுமக்கள் கருத்தினைப் பெற பொது மக்கள் கேட்புக் குழுவினை அமைக்க தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. குறிப்பிட்ட தொழிற்சாலைகள்/திட்டங்கள் தொடங்குவதற்காகப் பெறப்படும் விண்ணப்பங்கள் குறித்து பொது மக்களின் கருத்துகளைக் கேட்பதற்கான கூட்டங்கள் 1998 ஆம் ஆண்டு மே மாதத்திலிருந்து சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளரின் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன. 31-1-2003 வரை 214 பொது மக்களின் கருத்துகளைக் கேட்பதற்கான கூட்டங்கள் நடைபெற்றுள்ளன. பொதுமக்கள் கேட்புக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் பெறப்பட்டவுடன், வாரியம் அதனை ஆராய்ந்த பின்னர், அந்தத் தொழிற்சாலைகள்/திட்டங்களுக்கு தடையில்லா சான்றிதழ் வழங்குவதற்கு முடிவெடுக்கும். வாரியத்தின் தடையில்லா சான்றிதழ் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிக்கையுடன், தொழில் முனைவோர், சுற்றுச்சூழல் அனுமதியினைப் பெற இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தினை அணுக வேண்டும். இந்திய அரசிடமிருந்து பெறப்பட்ட சுற்றுச்சூழல் அனுமதி சமர்ப்பிக்கப்பட்டவுடன், தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணை வாரியத்தால் வழங்கப்படுகிறது.



2003 மே 8]

வாரியம், 1995-1996 ஆம் ஆண்டு முதல் 31-1-2003 வரை 3,431 இசைவாணைகளை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு நீர்ச் சட்டத்தின் கீழும், 3,370 இசைவாணைகளை தொழிற்சாலைகள் அமைப்பதற்கு காற்றுச் சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது. வாரியம் 1982-1983 ஆம் ஆண்டு முதல் 31-1-2003 வரை 20,480 இசைவாணைகளை தொழிற்சாலைகள் இயக்குவதற்கு நீர்ச் சட்டத்தின் கீழும், 17,715 இசைவாணைகளை தொழிற்சாலைகள் இயக்குவதற்கு காற்றுச் சட்டத்தின் கீழும் வழங்கியுள்ளது.

### 4.3.2. புகார் மற்றும் சட்ட நடவடிக்கை

31-1-2003 வரை, வாரியம் நிர்ணயித்துள்ள நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யாத தொழிற்சாலைகளுக்கு 24,461 முகாந்திர விளக்கம் கோரும் கடிதங்களையும், 4,095 மூடுதல் ஆணைகளையும் வாரியம் வழங்கியுள்ளது. மாசு தடுப்புச் சட்டத்தினை மீறிய தொழிற்சாலைகளுக்கு எதிரான திருத்தப்பட்ட நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974-ன்கீழ் 321 வழக்குகளையும், திருத்தப்பட்ட காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981-ன்கீழ் 134 வழக்குகளையும் வாரியம் பதிவு செய்துள்ளது.

### 4.3.3. 17 வகையான அதிக மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகள்

இந்திய அரசு குறிப்பிட்டுள்ள 17 வகையான அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளைக் கண்காணிக்கும்பொருட்டு, ஒரு சிறப்புக் கண்காணிப்புப் பிரிவினை சென்னை தலைமை அலுவலகத்தில் அமைத்துள்ளது. அதிக அளவில் மாசு ஏற்படுத்தும் 17 வகையான தொழிற்சாலைகளின்கீழ், 175 தொழிற்சாலைகள் கண்டறியப்பட்டு, அவை தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

### 4.3.4. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்

தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் கூட்டமாக அமைந்திருக்கும் சிறிய முதலீட்டு தொழிற்சாலைகள் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கும் தீவிரமான திட்டத்தில் வாரியம் ஒரு முக்கிய பங்கினை வகிக்கிறது. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதில் தமிழ்நாடு இந்தியாவிலேயே முன்னோடி மாநிலமாக உள்ளது. இதுவரை 50 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்டக் கருத்துருக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் 32 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில்

[2003 மே 8

உள்ளன. மேலும் 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலைய திட்டங்கள் அமைக்கும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் விவரங்கள் பின்வருமாறு:

| வ.எண் | வகை | உருவாக்கப் பட்ட திட்டங்கள் | செயலில் உள்ள திட்டங்கள் |
|---|---|---|---|
| 1 | தோல் பதனிடும் தொழிற்சாலைகள் | 24 | 13 |
| 2 | சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகள் | 25 | 18 |
| 3 | உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் | 1திட்டம் | 1திட்டம் |
| | மொத்தம் | 50 திட்டங்கள் | 32 திட்டங்கள் |

மேற்கண்ட திட்டங்களில், பம்மல், சிட்கோ-இராணிப்பேட்டை, சிப்காட் பகுதி-2-இராணிப்பேட்டை, வாணியம்பாடி (வளையம்பட்டு), வாணியம்பாடி (உதயேந்திரம்), இராணிப்பேட்டை, ஆம்பூர் (துத்திப்பேட்டை), ஆம்பூர் (மளிகைதோப்பு), பேரணாம்பட்டு (பகாளப்பள்ளி), மேல்விஷாரம், திண்டுக்கல், மாதவரம் மற்றும் திருச்சிராப்பள்ளி (இராம்ஜிநகர்) ஆகிய 13 இடங்களில் 612 தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. திருப்பூர் பகுதியில் வீரபாண்டி, சின்னக்கரை, காசிப்பாளையம், குன்னங்கல்பாளையம், ஆண்டிப்பாளையம், மன்னரை, அங்கேரிபாளையம் மற்றும் மாணிக்கபுரம்புதூர், கரூர் பகுதியில் கருப்பம்பாளையம், அமராவதி நகர், திருமாநிலையூர், சுக்காலியூர், இராமகிருஷ்ணாபுரம், கலங்கரை விளக்குப் பகுதி, செல்லாண்டிப்பாளையம் மற்றும் ஆண்டான்கோயில், காஞ்சிபுரம் மாவட்டத்தில் அய்யம்பேட்டை-முத்தையால்பேட்டை மற்றும் ஈரோடு மாவட்டத்தில் பெருந்துறை ஆகிய 18 இடங்களில் 817 சலவை மற்றும் சாயப் பட்டறை தொழிற்சாலைகளுக்காக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. கொடைக்கானலில் 90 உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காக ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையமும் தொடங்கப்பட்டுள்ளது.

பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்காக தமிழக அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மாநில அரசு மானியமாக



2003 மே 8]

வழங்குகிறது. இந்திய அரசு, திட்ட மதிப்பீட்டில் 25 சதவீதம் வரை மைய அரசு மானியமாக வழங்குகிறது. ஒவ்வொரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படுவதன் முன்னேற்றத்தின் அடிப்படையில், அரசிடமிருந்து பெறும் மானியத் தொகையினை ஒவ்வொரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கும் வாரியம் வழங்குகிறது.

வாரியம், இதுவரை 48 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்காக ரூபாய் 25.90 கோடி மானியத் தொகையினைப் பெற்று, அதில் 31-01-2003 வரை ரூபாய் 22.66 கோடி மானியத் தொகையினை வழங்கியுள்ளது. தமிழக அரசு டால்கோ மூலமாக மேலும் 9 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு ரூபாய் 0.77 கோடி மானியத் தொகையினை மாநில அரசு மானியமாக திட்ட மதிப்பில் 25 சதவீதம் வரை வழங்கியுள்ளது.

இந்திய அரசு இதுவரை ரூபாய் 20.60 கோடியினை மைய அரசு மானியமாக தமிழகத்திலுள்ள 48 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்க அனுமதி அளித்துள்ளது. இந்திய அரசு, இம்மானியத் தொகையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், டால்கோ மற்றும் இந்திய தொழில் வளர்ச்சி வங்கி (ஐ.டி.பி.ஐ) மூலமாக வழங்கியுள்ளது. வாரியம், இதுவரை ரூபாய் 12.84 கோடியினை மைய அரசு மானியத் தொகையாகப் பெற்று, அதில் ரூபாய் 11.64 கோடியினை பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு, இதுவரை ரூபாய் 4.29 கோடியினை டால்கோ மூலமாகவும், ரூபாய் 3.47 கோடியினை ஐ.டி.பி.ஐ. மூலமாகவும், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியுள்ளது. இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ள ரூபாய் 20.60 கோடி மானியத் தொகையில் இதுவரை ரூபாய் 19.40 கோடி மானியத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

### 4.3.5. தூய்மையான தொழில்நுட்பங்கள்

வாரியத்தின் முனைப்பான ஆதரவு மற்றும் ஊக்குவிப்புடன் தொழிற்சாலைகள், காஸ்டிக் சோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல், சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல், 'இருமுறை மாற்றும் இருமுறை உட்கிரகிக்கும்' (double conversion double absorption) தொழில்

நுட்பத்தை கந்தக அமிலம் தயாரிக்கும் நிறுவனங்கள் செயல்படுத்துதல், சயனைடு உப்புக்குப் பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்ப கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல் மற்றும் சயனைடு அற்ற முலாம் பூசுதல் ஆகிய தூய்மையான தொழில்நுட்பங்களுக்கு மாறியுள்ளன. காகிதத் தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ-குளோரைட்ஸ் உருவாவதைக் குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினைப் பின்பற்ற ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன. ஓசோனை சிதைக்கும் பொருட்களை உபயோகிக்கும் தொழிற்சாலைகள் முறையாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருட்களுக்கு மாறி வருகின்றன.

தொழிற்சாலைகளில் சிறந்த சுற்றுச்சூழல் மேலாண்மை முறைகளை பயன்படுத்துவதற்காக வழங்கப்படும் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினைப் பெற பெரிய தொழிற்சாலைகள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 102 தொழிற்சாலைகள் ஐ.எஸ்.ஓ. 14001 சான்றிதழினைப் பெற்றுள்ளன. 83 தொழிற்சாலைகள் இச்சான்றிதழ்களைப் பெற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

### 4.3.6. கழிவுகள் குறைப்பு

தூய்மையான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதனால், கழிவுகளிலிருந்து பொருட்களை மீட்பதிலும், கழிவுகளைக் குறைப்பதிலும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. உதாரணமாக, தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுநீரிலிருந்து குரோமியமும், உர தொழிற்சாலைகளிலிருந்து அமோனியாவும் மீட்பு செய்யப்படுகின்றன. செய்முறைக் கழிவுநீர் வெளியேற்றாத நிலையினை அடைவதற்காக, 15 எரிசாராயத் தொழிற்சாலைகளில், 13 எரிசாராய தொழிற்சாலைகள், அவற்றின் கழிவுநீரை சர்க்கரை ஆலைக் கழிவு மண்ணுடன் சேர்த்து உயிர் உரமாகத் தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளன. இரண்டு எரிசாராயத் தொழிற்சாலைகள் தற்போது இயக்கத்தில் இல்லை. திருப்பூரில் உள்ள ஒரு பெரிய சாயப்பட்டறை தொழிற்சாலை செய்முறையில் கழிவுநீரை மறுஉபயோகம் செய்வதற்காகவும், அதில் மீட்கப்பட்டுள்ள உப்பினை மறுஉபயோகம் செய்யவும் உரிய அமைப்பினை நிறுவியுள்ளது.

செய்முறை சுழற்சி அல்லது கச்சாப்பொருளாக மறுபயன்பாடு மற்றும் மறுஉபயோகமாகும் பொருட்களை மீட்பு செய்தபின் கசடுகளை வெளியேற்றுதல் ஆகியவற்றை உள்ளடக்கி அபாயகரமான கழிவுகளை



சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மேலாண்மை செய்ய 2000 ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) திருத்தப்பட்ட விதிகள், வழிவகை செய்கின்றன. தமிழ்நாட்டில், கழிவு எண்ணெய் மற்றும் உபயோகிக்கப்பட்ட மின்கலன்களிலிருந்து பெறப்பட்ட காரீயம் ஆகியன சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகத்தில் பதிவு செய்யப்பட்ட நிலையங்களில் மறுசுழற்சி செய்யப்படுகின்றன. உற்பத்தியாளர்கள் மற்றும் ஏலதாரர்களிடமும் கட்டுப்பாட்டினை வாரியம் ஏற்படுத்துகிறது. அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பதிவு செய்யப்பட்ட நிலையங்கள் வைத்திருப்பவர் மட்டுமே இத்தகைய கழிவுகளைக் கையாள அனுமதிக்கப்படுகின்றனர்.

### 4.3.7. நீர் பாதுகாப்பு

நீர் பாதுகாப்பு முறையாக, மணலி மற்றும் பேசின்பிரிட்ஜ் பகுதியில் உள்ள மூன்று பெரிய தொழிற்சாலைகள், நாளொன்றுக்கு சுமார் 25 மில்லியன் லிட்டர் நகர கழிவுநீரை மூன்றாம் கட்ட சுத்திகரிப்பிற்குப் பிறகு குளிரூட்டும் தேவைகளுக்காக பயன்படுத்தி வருகின்றன. மணலியில் உள்ள பெரிய பெட்ரோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் திருப்பூரில் உள்ள பெரிய சாயப்பட்டறை தொழிற்சாலை உட்பட மாநிலத்தில் பத்திற்கும் அதிகமான சாயப்பட்டறைத் தொழிற்சாலைகள் கழிவுநீரிலிருந்து செய்முறைக்குத் தேவையான நீரை மீட்சி செய்வதற்காக எதிர்மறை சவ்வூடு நிலையங்களை அமைத்துள்ளன. மீட்சி செய்யப்பட்ட நீர் செய்முறைக்கு மறுஉபயோகம் செய்யப்படுகிறது. சர்க்கரை தொழிற்சாலைகளில், ஆவியாக்கும் நிலையத்திலிருந்து திரவமாக்கப்பட்ட நீர் மறுஉபயோகம் செய்யப்படுகிறது. இசைவு வழங்குவதில் ஒரு நிபந்தனையாக, தொழிற்சாலைகள் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை நிறுவ அறிவுறுத்தப்பட்டுள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளில் 418 தொழிற்சாலைகள் மழைநீர் சேமிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளன. 2,000 தொழிற்சாலைகள் இவ்வமைப்புகளை நிறுவ நடவடிக்கை எடுத்து வருகின்றன.

### 4.3.8. எரிசக்தி சேமிப்பு

எரிபொருள் பாதுகாப்பு மற்றும் மீட்சி செய்வதற்கான வழிமுறையாக, அனைத்து எரிசாராயத் தொழிற்சாலைகளும் தமது இறுதி கழிவிலிருந்து காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன.

பெரிய சர்க்கரை தொழிற்சாலைகள் உற்பத்தியுடனான மின்நிலையங்களை அமைத்துள்ளன. சவ்வரிசி தொழிற்சாலைகள், தமது செய்முறைக் கழிவுநீரிலிருந்து, காற்றிலி தொட்டியின் மூலம் மீத்தேன் வாயுவை மீட்சி செய்கின்றன. மேல்விஷாரத்தில் உள்ள ஒரு தோல் பதனிடும் தொழிற்சாலை தோல் பதனிடுவதிலிருந்து வரும் திடக்கழிவுகளை காற்றிலி தொட்டியின் மூலம் சுத்திகரிக்கப்படுவதிலிருந்து பெறப்படும் மீத்தேனைக் கொண்டு மின்உற்பத்தி நிலையத்தை அமைத்துள்ளது. பிற தொழிற்சாலைகள், குறைந்த எரிசக்தியினை உபயோகிக்க ஊக்கப்படுத்தப்படுகின்றன. இது, அத்தொழிற்சாலைகளின் சுற்றுச்சூழல் அறிக்கையின் வாயிலாக தணிக்கை செய்யப்படுகின்றது.

**4.4 காற்றுத் தன்மை கண்காணிப்பு**

பெருநகர்ப்புறங்களில் பெருகிவரும் தொழிற்சாலைகள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் காரணமாக தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் வாயுக் கழிவுகளினாலும் மற்றும் பெருகிவரும் வாகனங்களிலிருந்து வெளியேறும் புகையினாலும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை பாதிப்படைகிறது. காற்றுச் சட்டத்தின்படி, தமிழ்நாடு மாநிலம் முழுவதும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது.

**4.4.1. சுற்றுப்புறக் காற்றுத் தன்மை கண்காணிப்பு**

தேசிய சுற்றுப்புற காற்றுத் தரக் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ், சென்னை (3 இடங்கள்), கோயம்புத்தூர் (3 இடங்கள்), தூத்துக்குடி (3 இடங்கள்), மதுரை (3 இடங்கள்) மற்றும் சேலம் (1 இடம்) ஆகிய பெரிய நகரங்களில் சுற்றுப்புறக் காற்றின் தன்மையை வாரியம் கண்காணித்து வருகின்றது. மாநில சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு திட்டத்தின்கீழ் வாரியம், சென்னை மாநகரத்தில் 5 சுற்றுப்புற காற்று தரக் கண்காணிப்பு நிலையங்களையும், திருச்சிராப்பள்ளியில் 5 நிலையங்களையும் அமைத்துள்ளது. இத்திட்டங்கள் சுற்றுப்புறக் காற்றின் தன்மையினை நகரங்களின் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் நுட்பப்பகுதிகளில் கண்காணிக்கின்றன. இந்த கண்காணிப்பில் கண்டறியப்படும் காற்றுத் தர அளவுகள் ஒவ்வொரு வாரமும் முன்னோடி நாளிதழ்களில் வெளியிடப்படுகின்றன.

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் ஒரு சுற்றுப்புறக் காற்று தன்மை ஆய்வறிக்கையினை 2002 ஆம் ஆண்டில் வெளியிட்டது. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் காற்றுத்தரம் முக்கியத்துவம் வாய்ந்த 9 நகரங்களை



பட்டியலிட்டுள்ளது. சென்னை ஒரு பெருநகரமாக இருந்த போதிலும் இப்பட்டியலில் இடம் பெறவில்லை. மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் வெளியிட்டுள்ள 52 நகரங்களுக்கான காற்றின் தரம் குறித்த அறிக்கையின்படி சென்னையில்தான் காற்று மாசு மிகவும் குறைந்த அளவு உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முக்கிய தொழிற்சாலை வளாகங்கள், குறிப்பாக இரசாயன தொழிற்சாலைப் பகுதிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு வாரியம், 6 தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு நிலையங்களை தலா ரூபாய் 40 இலட்சம் மதிப்பில் கடலூர், தூத்துக்குடி, இராணிப்பேட்டை, மணலி- திருவள்ளூர், இராயபுரம்-சென்னை மற்றும் கத்திவாக்கம்-திருவள்ளூர் ஆகிய இடங்களில் சுற்றுப்புறக் காற்றில் உள்ள மாசு பொருட்களான மிதக்கும் துகள்கள், கரியமில வாயு, நைட்ராஜன் ஆக்ஸைடு, கார்பன் மோனாக்ஸைடு, அமோனியா, குளோரின், ப்ளூரின் முதலியவற்றை மதிப்பிடவும், தொழிற்சாலைகளில் பொருத்தப்பட்டுள்ள காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல் திறனை மதிப்பீடு செய்வதற்காகவும் அமைத்துள்ளது. மேலும் நிர்ணயித்த தரத்தினை விட மாசு அதிகமாகும் போது காற்று மாசு கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்த வாரியம் தொழிற்சாலையினை அறிவுறுத்தி வருகின்றது.

அதிகமாக மாசுபடுத்தும் தொழிற்சாலைகள், அவற்றிற்கான தொடர் காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. ஆதாரத்திலேயே வாயுக் கழிவுகளை கண்காணிக்கும் வகையில் கணினி பதிவு வசதி கொண்ட தொடர் புகைபோக்கி கண்காணிப்பு நிலையங்களை அமைக்கவும் இத்தொழிற்சாலைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளன. இத்தகைய காற்றுத் தரக் கண்காணிப்பு அமைப்புகளை 42 தொழிற்சாலைகள் நிறுவியுள்ளன. இத்தகைய அமைப்புகள் மூலமாக தொழிற்சாலைகளின் சுய கண்காணிப்பு ஊக்கப்படுத்தப்பட்டு வருகிறது.

**4.4.2. வாகனப் புகை கண்காணிப்பு**

நகரின் பெருக்கம் மற்றும் தொழில் வளர்ச்சியின் காரணமாக, வாகனப் போக்குவரத்து அதிகரித்து அவை வெளியேற்றும் கழிவுகளும், அபாயகரமான வாயுக்கழிவுகளும் அதிகரித்துள்ளன. வாகனப் புகை சோதனை செய்யும் மையங்கள் சென்னை மாநகரில் ஆலந்தூர், அம்பத்தூர் மற்றும் வியாசர்பாடி ஆகிய மூன்று இடங்களில்

வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு, 1992 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகின்றன. இதனைத் தவிர 111 தனியார் நிலையங்கள், சென்னையில் வாகனப் புகையினை சோதனை செய்ய போக்குவரத்துத் துறையினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. மேலும், வாரியம் திண்டுக்கல், பழநி, உதகமண்டலம், காட்டேரி மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களில் வாகனப் புகை கண்காணிப்பு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது.

2002-2003 ஆம் ஆண்டில் 31-01-2003 வரை 41,073 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இதில் 12,105 வாகனங்கள் அவற்றின் முதல் ஆய்வில், நிர்ணயிக்கப்பட்ட தரத்திற்குட்படாமல் இருப்பது கண்டறியப்பட்டது. அவற்றில் 1,816 வாகனங்கள் குறைகள் சீரமைப்பு செய்யப்பட்ட பிறகும் தரத்திற்குட்படவில்லை. சென்னை பெருநகர போக்குவரத்துக் கழகத்தின் வாகனங்களின் புகை அளவிற்கான சோதனையினை மேற்கொள்ள வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. புகை அளவீடு செய்யும் தேவைக்காக பெருநகர போக்குவரத்துக் கழகத்திற்கு புகைமானி ஒன்று வாரியத்தால் வழங்கப்பட்டுள்ளது. பிற போக்குவரத்துக் கழகங்களும் அவற்றின் பேருந்துகளின் புகை அளவினை கூர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளன. அனைத்து அரசு நிறுவனங்கள் மற்றும் துறைகளும் பிறர்க்கு உதாரணமாக விளங்கும் வகையில், அவற்றின் வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட புகை அளவு கட்டுப்பாட்டினை மீறவில்லை என்பதனை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

வாகனப் புகையினைக் கட்டுப்படுத்த, காரீயம் இல்லாத மற்றும் 3 சதவீத பென்சின் அளவு உள்ள பெட்ரோல், மற்றும் குறைந்த சல்பர் (0.05 சதவீதம்) உள்ள எரிபொருள் போன்ற தூய்மையான எரிபொருள்கள் சென்னை பெருநகர்ப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. பாரத் நிலை-II தரத்தினைப் பூர்த்தி செய்யும் பயணிகள் கார்கள் மட்டுமே ஜூலை 2001-லிருந்து சென்னையில் பதிவு செய்யப்படுகின்றன. தூய எரிபொருளான எல்.பி.ஜி-யினை சென்னையில் அறிமுகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இரண்டு எல்.பி.ஜி. நிலையங்கள் கோயம்பேடு மற்றும் கிண்டி ஆகிய இரண்டு இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. பொது போக்குவரத்தினை ஊக்கப்படுத்துதல் மற்றும் எல்.பி.ஜி-யினை தனியார் வாகனங்கள் உபயோகப்படுத்துதல் ஆகியவற்றிற்கான அரசின் கொள்கை காற்றுத் தரத்தினை மேம்படுத்த உதவும்.





நகர்ப்பகுதிகளில் ஒலி மாசினைக் கட்டுப்படுத்தும் வகையில், மாநிலமெங்கும் பேருந்துகள் மற்றும் கனரக வாகனங்களிலிருந்து சுமார் 40,000-த்திற்கும் மேற்பட்ட காற்று ஒலிப்பான்கள் அகற்றப்பட்டன. 21 மாவட்டங்கள் காற்று ஒலிப்பானற்ற மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. சென்னை மாநகர போக்குவரத்துக் கழகம் காற்று ஒலிப்பான்கள் அற்ற போக்குவரத்துக் கழகமாக அறிவிக்கப்பட்டதில் முதன்மையானதாகும். பிற போக்குவரத்துக் கழகங்கள் இதனைப் பின்பற்றியுள்ளன.

**4.5 நீரின் தன்மை கண்காணிப்பு**

உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் ஊராட்சிகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத வடிகால் கழிவுநீராலும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத மற்றும் பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீராலும் நதிகள் மாசுபடுகின்றன. மாசுபடுத்துவோர் சரியான வழிமுறைகளை மேற்கொள்ள அறிவுறுத்தும் பொருட்டு நீர் மாதிரிகளை வாரியம் தொடர்ச்சியாக சேகரித்து ஆறுகளின் தரத்தினைக் கண்காணித்து வருகிறது. தொழிற்சாலைகளைப் பொறுத்த அளவில் வெளியேற்றப்படும் கழிவுநீர், வாரியம் நிர்ணயித்துள்ள தரத்தினை அடையும் வகையில் சுத்திகரிப்பு நிலையங்களை தனியாகவோ அல்லது பொதுவான முறையிலோ அமைக்க வேண்டியது தொழிற்சாலைகளின் பொறுப்பாகும். தேசிய நதிநீர்ப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் காவிரி ஆற்றில் திருச்சிராப்பள்ளி, பவானி, ஈரோடு, பள்ளிப்பாளையம் மற்றும் குமாரபாளையம் ஆகிய இடங்களில் மாசு தடுப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. பிற நதிகள் மற்றும் நீராதாரங்களும் தேசிய நதிநீர்ப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் மாசு தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படவுள்ளன.

**4.5.1. நீரின் தரக் கண்காணிப்பு**

உலகச் சுற்றுச்சூழல் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் மேட்டூர், பள்ளிப்பாளையம் மற்றும் முசிறி ஆகிய இடங்களில் காவிரி ஆற்றிலும் மற்றும் ஆற்றுப்படுகையிலும், முசிறியில் நிலத்தடி நீரிலும், நீரின் தரத்தினை வாரியம் கண்காணிக்கிறது. இதுபோல் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்புத் திட்டத்தின்கீழ் காவிரி (16 இடங்கள்), தாமிரபரணி (7 இடங்கள்), பாலாறு (1 இடம்) மற்றும் வைகை (1 இடம்) ஆகிய ஆறுகள் மற்றும் உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காடு ஆகிய 3 முக்கிய ஏரிகள் ஆகியன வாரியத்தால் கண்காணிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும்

செய்முறை கழிவுநீர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளிலிருந்து வெளியேற்றப்படும் நகரக் கழிவுநீர் ஆகியவற்றால் ஏற்படும் மாசினைத் தடுக்கும் வகையில் சென்னை நகர நீர்வழிகளை வாரியம் தொடர்ந்து கண்காணித்து வருகிறது. சென்னை நகர நீர்வழிகளின் ஆற்றுநீர் மற்றும் கழிவுநீர் கலக்கும் இடங்கள் ஆகியவற்றிலிருந்து மாதிரிகளை வாரியம், 1991 ஆம் ஆண்டிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சேகரித்து பகுப்பாய்வு செய்து வருகிறது.

குறிப்பிட்ட ஆதாரம் இல்லாத மாசு உருவாக்கம் குறித்த விழிப்புணர்வினை வாரியம் உருவாக்கி வருகிறது. குறிப்பிட்ட ஆதாரம் இல்லாத மாசு உருவாக்கம் ஏற்படுத்துவது இரசாயனத்தை அடிப்படையாகக் கொண்ட வேளாண்மையாகும். இரசாயன பூச்சிக் கொல்லிகள் மற்றும் உரங்கள் ஆகியவற்றின் குறைந்த பயன்பாட்டின் மூலம் அதிக அளவு சுற்றுச்சூழலுக்கு உகந்த உயிரக விவசாயத்திற்கு மாறுவது அவசியம் என வாரியத்தால் நடத்தப்பட்ட விழிப்புணர்வு எடுத்துக்காட்டுகிறது.

### 4.6 கழிவுகள் மேலாண்மை

### 4.6.1. அபாயகரமான பொருட்கள் மேலாண்மை

அபாயகரமான இரசாயனப் பொருட்களைக் கையாளுதல் மற்றும் நிர்வகித்தல், அபாயகரமான கழிவுகளை சுத்திகரித்து சுற்றுச்சூழலுக்குப் பாதுகாப்பான முறையில் வெளியேற்றுதல் ஆகியவற்றில் வாரியம் சிறந்த வழிவகைகளைக் கையாண்டு வருகிறது. வாரியம், 2000 ஆண்டில் திருத்தப்பட்ட 1989 ஆம் ஆண்டு அபாயகரமான கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளின் கீழ், 1,516 அபாயகரமான கழிவுகளை வெளியேற்றும் தொழிற்சாலைகள்/அமைப்புகளையும், அவ்வாறான அமைப்புகளில் அபாயகரமான கழிவுகளின் வகைப்பாட்டினையும் கண்டறிந்துள்ளது.

சென்னை, காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், பொது அபாயகரமான கழிவுகள் சுத்திகரிப்பு, சேமிப்பு மற்றும் வெளியேற்றத்திற்கான அமைப்பினை தனியார் நிறுவனத்தின் மூலமாக ஏற்படுத்துவதற்காக, தொழிற்சாலை கழிவு மேலாண்மை கூட்டமைப்பினை உருவாக்கி உள்ளன. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, மேலக்கோட்டையூர் கிராமத்திலுள்ள ஓர் இடத்தில் இத்தகைய அமைப்பினை ஏற்படுத்த இடம் கண்டறியப்பட்டுள்ளது.





வாரியத்தின் அறிவுரையின்படி, பொது அபாயகரமான கழிவுகளை பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியினை ஏற்படுத்துவதற்காக திருப்பூரில் உள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, கோயம்புத்தூர் மாவட்டம், திருப்பூர் தாலுகா, நெல்லூர் கிராமம், கருப்பகவுண்டர்பாளையத்தில் ஓர் இடத்தைக் கண்டறிந்துள்ளது. கரூர் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் கூட்டமைப்பு, சாயப்பட்டறை கழிவுநீர் சுத்திகரிப்பிலிருந்து வெளியேறும் கழிவு சேற்றினைப் பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதியின் மூலமாக வெளியேற்ற, கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தாலுகா, மாதகிரி கிராமத்தில் ஓர் இடத்தினைக் கண்டறிந்துள்ளது.

உகந்த இடங்களில் பாதுகாப்பாக திடக்கழிவுகளை நிலத்தடியில் நிரப்பும் வசதிகளை அந்நிலையங்கள் உரியமுறையில் கண்காணிக்கப்படுவதனையும் அதன் தொடர்பான சுற்றுச்சூழல் பிரச்சினைகள் சீரியமுறையில் மேலாண்மை செய்யப்படுவதனையும் உறுதி செய்யும் வகையில் உருவாக்குவதில் வாரியம் முனைந்துள்ளது.

வாரியம், 25 அபாயகரமான இரசாயனப் பொருட்களை சேமிக்கும் தனிப்பட்ட சேமிப்பு கிடங்குகளையும் கண்டறிந்துள்ளது. வாரியத்தின் தொடர் கண்காணிப்பினால், 1991 ஆம் ஆண்டு பொதுமக்கள் காப்புறுதி சட்டத்தின்கீழ் 73 தொழிற்சாலைகள் அபாய நேர்வு காப்பீடுகளை எடுத்துள்ளன. 1997-1998 ஆம் ஆண்டில் அபாயகரமான பொருட்கள் மேலாண்மை பிரிவிற்கான கருவிகள் மற்றும் உபகரணங்கள் வாரிய நிதியின் மூலம் ரூபாய் 12.60 இலட்சம் மதிப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் இந்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் அபாயகரமான பொருட்கள் மேலாண்மை திட்டத்திற்காக ரூபாய் 41.95 இலட்சம் அனுமதி அளித்துள்ளது.

### 4.6.2. நகர திடக் கழிவுகள் மேலாண்மை

நகரமயமாதல் அதிகமாவதாலும், நகர திடக் கழிவுகளின் அளவு அதிகரிப்பதாலும் நகரப் பகுதிகளில் அறிவியல் ரீதியாக திடக் கழிவுகளைப் பிரித்து கையாண்டு வெளியேற்றுவது அவசரத் தேவையாகிறது. இதுகுறித்து தமிழகத்தில் சுற்றுலா மற்றும் யாத்திரிகத் தலங்களான உதகமண்டலம், கொடைக்கானல், பழநி, திருச்செந்தூர், கன்னியாகுமரி, இராமேஸ்வரம், மாமல்லபுரம் மற்றும் குற்றாலம் ஆகிய பகுதிகளுக்கான நகர திடக் கழிவுகள் மேலாண்மைக்கான சாத்தியக்கூறு அறிக்கையை தயாரித்தளிக்கும் திட்டத்தினை, வாரியம் தனது

நிதியிலிருந்து ரூபாய் 23.60 இலட்சம் மதிப்பில் மேற்கொண்டுள்ளது. திருப்பூர் நகராட்சி, கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுக்கத் தொடங்கியுள்ளது. பிரித்தெடுக்கப்பட்ட உயிரகக் கழிவுகளை தனியார் நிறுவனமொன்று கடந்த ஒரு வருடமாக உரமாக்கி வருகிறது. இதுவரை 92 நகராட்சிகளில் கழிவுகளை ஆதாரத்திலேயே பிரித்தெடுத்து உரமாக்கும் பணி தொடங்கப்பட்டுள்ளது. நகர திடக் கழிவுகளை உரமாக்குவதற்கான இடங்களுக்கு கொள்கை அளவில் வாரியத்தால் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் 2001-ல் அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கும், டிசம்பர் 2001-ல் பேரூராட்சி செயல் அலுவலர்களுக்கும், மீண்டும் ஆகஸ்ட் 2002-ல் நகராட்சி ஆணையர்களுக்கும் நகர திடக் கழிவு மேலாண்மைக்கான செயல்முறை கருத்தரங்கு நடத்தப்பட்டது. நவம்பர் 2002-ல் நகராட்சி ஆணையர்களுக்கு 'ஒரே மையத்தில் இல்லாத நகர கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நகர திடக் கழிவுகள் மேலாண்மைக்கு நுண்ணுயிர் மீத்தேனாக்கம் ஒரு தொழில்நுட்ப வழிமுறை' என்ற கருத்தரங்கு நடத்தப்பட்டது. மாவட்டங்களில் குப்பையே இல்லாத நிலை ஏற்பட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

### 4.6.3. பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை

பிளாஸ்டிக் பொருட்களின் வரைமுறையற்ற உபயோகம் மற்றும் வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளை உணர்ந்து, தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் பயன்பாட்டினைக் குறைக்கும் வகையில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிளாஸ்டிக்கிற்குப் பதிலாக சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றுப் பொருட்களைப் பயன்படுத்துவது சம்பந்தமாக ஒரு நடமாடும் கண்காட்சி சென்னையில் ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கண்காட்சி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் 3-8-2001 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. மாவட்ட அளவிலான, 'பிளாஸ்டிக்கிற்கு எதிரான குழந்தைகள்'-எனும் திட்டம் செப்டம்பர் 2001-ல் தொடங்கி வைக்கப்பட்டது. வீசியெறியப்படும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு உகந்த பொருள்களை ஊக்கப்படுத்தும் நிகழ்ச்சிகளை அவர்தம் மாவட்டங்களில் நடத்த ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் தலா ரூபாய் 1.25 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டது. வீசியெறிப்படும் பிளாஸ்டிக்குகளின் பயன்பாடு மற்றும்



வெளியேற்றத்தினால் ஏற்படும் சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் விழிப்புணர்வு விளம்பரப் பலகைகள் சென்னை மாநகரப் பேருந்துகளில் பொருத்தப்பட்டன. நீலகிரி, கொடைக்கானல், ஏற்காடு, இராமேஸ்வரம், கன்னியாகுமரி மற்றும் பிற சுற்றுலா நகரங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. திருவண்ணாமலை கோயிலின் கிரிவலப் பாதையை உபயோகிக்கும் பக்தர்களுக்காக தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. நீலகிரி மாவட்டம், ஒகேனக்கல், கன்னியாகுமரி, கொடைக்கானல் , ஊட்டி, இராமேஸ்வரம், வால்பாறை, ஏலகிரி, ஏற்காடு திருமூர்த்தி நீர்வீழ்ச்சி முதலிய பகுதிகள் தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் அற்ற மாவட்டம்/நகரங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன. பிளாஸ்டிக்கிற்கு மாற்றாக பனை ஓலைகளில் பொருட்கள் தயாரிப்பதில் சுய உதவி தொழில் முனைவோர்கட்கு கிராமத் தொழில் ஆணையத்தின் பனை மற்றும் பனைப் பொருட்கள் நிறுவனம் மூலம் சேலம், வேலூர் மற்றும் கடலூர் மாவட்டங்களில் பயற்சி அளிக்கப்பட்டது.

தேசிய / மாநில நெடுஞ்சாலைகள் மற்றும் பிற மாவட்டச் சாலைகளை பிளாஸ்டிக் கழிவுகள், ஆக்கிரமிப்புகள் மற்றும் பிற மாசுபடுத்தும் செயல்கள் இல்லாதவையாக உருவாக்கும் வகையில் தூய்மைப்படுத்தும் பணி அரசு அளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தமிழ்நாட்டில் ஒரு தூய பயணம் மேற்கொள்ள உதவியாக இருக்கும்.

### 4.6.4. மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் மேலாண்மை

2000 ஆண்டில் திருத்தப்பட்ட 1998 ஆம் ஆண்டு மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகளை வாரியம் செயல்படுத்துகிறது. அதன்படி வாரியம் 317 அரசு மருத்துவமனைகளையும், 1,835 தனியார் மருத்துவமனைகளையும் கண்டறிந்துள்ளது. இந்திய மருத்துவ சங்கத்துடன் இணைந்து அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும் இடம் கண்டறியவும் மருத்துவக் கழிவுகளைக் கையாள பொது அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிய கால நடவடிக்கையினை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் சுகாதார பராமரிப்பு நிலையங்களுக்கான பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்புகள் ஏற்படுத்த 10 இடங்கள் இந்திய மருத்துவ சங்கத்தினரால் கண்டறியப்பட்டுள்ளன. பொது மருத்துவ

நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பில், ஆட்டோகிளேவ், துண்டுகளாக்கும் கருவி, அழுத்தும் கருவி, உடல் கழிவுகளுக்கான எரிப்பான், பாதுகாப்பாக நிலத்தடியில் நிரப்பும் வசதி, ஆய்வகம் மற்றும் கழிவுகள் போக்குவரத்திற்கான வாகனங்கள் ஆகியன அடங்கியுள்ளன. அரசாங்க மருத்துவமனைகளிலிருந்து வெளியேற்றப்படும் மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகளுக்காக, வசதிகள் செய்ய தனியே 6 மாநகராட்சிகளிலும் உத்தேசிக்கப்பட்டுள்ளன. சிறிய நகரங்களில் உள்ள மருத்துவமனைகள் அவ்விடத்திலேயே, ஆட்டோகிளேவ் மற்றும் நிலத்தில் புதைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். வாரியம், மருத்துவக் கழிவுகளைக் கையாளுவது தொடர்பான பயிற்சியினை வாரிய அலுவலர்கள், இந்திய மருத்துவ சங்க உறுப்பினர்கள், மருத்துவ மற்றும் மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு அளித்துள்ளது. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுகா, தென்மேல்பாக்கம் கிராமத்தில் பொது மருத்துவ நுண்ணுயிர்க் கழிவுகள் சுத்திகரிப்பு மற்றும் வெளியேற்றும் அமைப்பின் கட்டுமானப் பணி நடந்து வருகிறது. இது விரைவில் தொடங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## 4.7 வாரியத்தின் பிற பணிகள்

### 4.7.1. சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி

மாசினைக் குறைக்கும் தூய்மையான தொழில்நுட்பத்தினை ஊக்குவிக்கும்பொருட்டு, வாரியம் சுற்றுச்சூழல் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றப் பிரிவினை, சென்னையிலுள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகத்தில் அமைத்துள்ளது. சுற்றுச்சூழல் மற்றும் மாசு தடுப்பு மற்றும் தூய்மையான தொழில்நுட்ப மேம்பாடு பணிகளில் ஆராய்ச்சியினை மேற்கொள்வதற்கு வாரியம் தனது நீர் மேல்வரி நிதியிலிருந்து ஆராய்ச்சி நிதியை உருவாக்கி உதவி வருகின்றது. நிதி உதவிக்கு உகந்த கருத்துகளை ஆராயவும், தெரிவு செய்யவும் ஒரு குழுவினை வாரியம் அமைத்துள்ளது. இதுவரை ரூபாய் 45.38 இலட்சம் மதிப்பில் 9 திட்டங்களுக்கு வாரியம் அனுமதியளித்துள்ளது.

### 4.7.2. சுற்றுச்சூழல் பயிற்சி மையம்

தொழிற்சாலை பணியாளர்கள், வாரிய ஊழியர்கள், உள்ளாட்சித் துறை ஊழியர்கள் மற்றும் அரசு சாரா அமைப்பைச் சார்ந்தவர்கள், மாசு தடுப்பு மற்றும் சுத்திகரிப்பு உத்திகள் குறித்து தொழிற்சாலைகளுக்கு ஆலோசனை வழங்குவது மற்றும் மாசினைக் கட்டுப்படுத்துவதில் திறமை



அடைவது ஆகிய நோக்கத்திற்காக டென்மார்க் நாட்டிலிருந்து ரூபாய் 4 கோடி நிதி உதவியுடன் சுற்றுச்சூழல் பயிற்சி மையத்தை, தனது தலைமை அலுவலகத்தில் வாரியம் அமைத்துள்ளது. 1995 டிசம்பர் மாதத்திலிருந்து 31-01-2003 வரை சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 163 பயிற்சிகளையும், 5,717 நபர்களுக்கு பயிற்சிகளையும் அளித்துள்ளது. மேலும், சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம், 43 சிறப்புப் பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை சுமார் 17,256 மாணவர்கள் உள்ளிட்ட பங்கேற்பாளர்களுடன் நடத்தியுள்ளது.

நீர் மற்றும் காற்று சட்டங்களின் அம்சங்களின்படி, நீர் மற்றும் காற்று மாசினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் அல்லது களைதல் ஆகியவற்றிற்கான பயிற்சியினை வழங்குவது மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பணிகளில் ஒன்றாகும். சுற்றுச்சூழல் பயிற்சி மையம், பயிற்சிக்குத் தேவையான பொருட்கள் மற்றும் சிற்றுண்டிகளுக்கான செலவினங்களுக்கு மட்டும் பங்கேற்பாளர்களிடமிருந்து பயிற்சிக் கட்டணத்தைப் பெறுகிறது. ஏப்ரல் 1997-லிருந்து மார்ச் 2002 வரை பங்கேற்பாளர்களிடமிருந்து பெறப்பட்ட இத்தகைய வருமானம் ரூபாய் 41.50 இலட்சம் ஆகும்.

### 4.7.3. சுற்றுச்சூழல் விழிப்புணர்வு

சென்னையில் பெரியார் அறிவியல் தொழில்நுட்பத் திடலில் அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சூழல் விழிப்புணர்வு அரங்கம், சுற்றுச்சூழல் சம்பந்தமான ஓவியப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி ஆகியவற்றை நடத்துகின்றது. சுற்றுச்சூழல் தொடர்பான ஒளிக்காட்சிகள் மற்றும் சிறு படங்களும் திரையிடப்படுகின்றன. மேலும், வாரியம் தனது தலைமை அலுவலகத்தில் மாசு விழிப்புணர்வு மற்றும் சேவை மையத்தினை அமைத்துள்ளது. வாரியம், வாகனப்புகை மாசு தடுப்பு, ஒலி மாசு தடுப்பு, அபாயகரமான கழிவு மேலாண்மை, திடக் கழிவு மேலாண்மை, மருத்துவ நுண் கழிவு மேலாண்மை பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை, ஓசோன் மண்டல பாதுகாப்பு, மழைநீர் சேமிப்பு முதலியவை தொடர்பான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்தி வருகின்றது. தீபாவளி மற்றும் போகி போன்ற விழாக் காலங்களில் ஏற்படும் காற்று மற்றும் ஒலி மாசுக்கெதிராக சிறப்பு விழிப்புணர்வு பிரச்சாரங்கள் நடத்தப் படுகின்றன. இந்நிகழ்ச்சிகள் பெருமளவு வெற்றியடைந்துள்ளன. குடியிருப்புப் பகுதிகள் மாசு அற்றதாக இருப்பதை உறுதிசெய்யும் வகையில் குடியிருப்புப் பகுதியில்

அனுமதிக்கப்பட்ட நடவடிக்கைகளுக்காக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 4.8 திட்டப் பணிகள்

#### 4.8.1. பசுமைப் போர்வைத் திட்டம்

நகரப் பகுதிகளில் காற்று மற்றும் ஒலி மாசினைத் தணிப்பதற்காக ஒரு பெரிய பசுமைப் போர்வைத் திட்டம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சிகளில் 2000 ஆண்டில் தொடங்கி வைக்கப்பட்டது. இதன் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.455.70 இலட்சம் ஆகும். மத்திய அரசின் உதவி ரூபாய் 400 இலட்சம் ஆகும். இத்திட்டத்தின்கீழ் 2,94,000 மரக்கன்றுகள் வனத் துறையினால் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இந்த திட்டமானது அனைத்து நகர்ப்புற மற்றும் நகராட்சிகளுக்கும் மத்திய அரசின் ரூபாய் 76.50 இலட்சம் மற்றும் வாரியத்தின் ரூபாய் 25.50 இலட்சம் நிதியுதவியோடு விரிவாக்கப்பட்டது. தொழிற்சாலைகளும் தமது வளாகத்தில் 25 சதவிகித பகுதியில் மரங்களை வளர்த்து பசுமைப் பகுதியினை உருவாக்கி வருகின்றன. இதுவரை 73,38,768 மரக்கன்றுகள் தொழிற்சாலைகளில் நடப்பட்டுள்ளன.

#### 4.8.2. சுற்றுச்சூழல் வரைபடம் தயாரித்தல்

மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்தின் உதவியுடன் சுற்றுச்சூழல் வரைபடம் தயாரிக்கும் திட்டத்தினை வாரியம் செயல்படுத்தி வருகின்றது. இதன் முதல் கட்டமாக ரூபாய் 6 இலட்சம் மதிப்பில் திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களுக்கான மண்டல நிலப்படத் தொகுதி உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது. 2000-2001 ஆம் ஆண்டில் ரூபாய் 8.25 இலட்சம் மதிப்பில் கோயம்புத்தூர், வேலூர் மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களுக்கான மண்டல நிலப்படத் தொகுதி உருவாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டில் ரூபாய் 5 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சூழலைக் கருத்தில் கொண்டு சென்னைக்கான நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தினை பரிசீலனை செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.



#### 4.8.3. அயல்நாட்டு உதவித் திட்டங்கள்

1. வேலூர் பகுதியில் அமைந்துள்ள தோல் தொழிற்சாலைகளின் கழிவுநீரை மறுசுழற்சி மற்றும் மறு உபயோகம் செய்வதற்கான சாத்தியக்கூறினை ஆராய அமெரிக்க வர்த்தக மற்றும் அபிவிருத்தி நிறுவனத்துடன் வாரியம் 24-11-2000 அன்று ஒப்பந்தம் ஒன்றினை ஏற்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு 1,80,100 அமெரிக்க டாலர் ஆகும். இத்திட்டம் முன்னேற்றத்தில் உள்ளது.

2. இத்தாலி மற்றும் ஸ்பெயின் நாட்டு நிறுவனங்களின் பங்கேற்புடன் வாரியம், ஆசிய நகரங்கள் உயிரினச்சூழல் திட்டத்தினை 28-11-2000 அன்று தொடங்கியுள்ளது. வேலூர் மாவட்டம் மற்றும் சென்னை பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் தொழிற்சாலை மாசு தடுப்பு தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் வகையில் கொள்கைகள், அனுபவங்கள் மற்றும் தொழில்நுட்பங்களில் பரிமாற்றங்களை இத்திட்டம் ஏற்படுத்தும். இத்திட்டத்தின் மொத்த மதிப்பீடு 4,95,040 யூரோ ஆகும்.

#### 4.8.4. பசுமை விருதுகள்

சீரிய பணியின் மூலம் நிலைத்தகு வளர்ச்சியினை ஏற்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் ஆகிய பணியினை தனது மாவட்டத்தில் ஊக்குவிக்கும் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு பசுமை விருதுகளை வழங்க அரசு உத்தேசித்துள்ளது. மாவட்ட ஆட்சியாளர்கள் அவர்களது தனி முயற்சியாக சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காகவும், நிலைத்தகு வளர்ச்சிக்காகவும் மேற்கொண்ட பணிகளைக் கருத்தில் கொண்டு பசுமை விருதுகள் மாவட்ட ஆட்சியாளர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்விருதுகள் நீலகிரி, சேலம் மற்றும் விருதுநகர் ஆகிய மூன்று மாவட்ட ஆட்சியர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 05-06-2002 அன்று வழங்கப்பட்டன. மாவட்டங்களில் சுற்றுச்சூழல் குறித்த பிரச்சினைகள்மீது மாவட்ட ஆட்சியாளர்கள் கவனம் செலுத்த இவ்விருதுகள் தூண்டுகோலாக இருந்தது.

### 4.9. உத்தேசிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

#### 4.9.1. பசுமை விருது 2003

தமிழக அரசு சுற்றுச்சூழல் பாதுகாப்பினை தனது முதன்மையான பணிகளில் ஒன்றாகக் கருதுகிறது. சுற்றுச்சூழல் மேம்பாடு அடைய அரசு மற்றும் சமுதாயத்தின் அனைத்து பிரிவினரும் இணைந்து

செயல்பட வேண்டியது அவசியமாகிறது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதிலும் மற்றும் அதன் தரத்தை மேம்படுத்துவதிலும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு முக்கிய பங்கு உள்ளது. இத்தகைய சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், மேம்பாட்டிற்கும் மிகுந்த முழு ஈடுபாட்டுடன் செயல்படுத்தும் மாநகராட்சிகள்/நகராட்சிகள், பேரூராட்சிகள்/கிராம பஞ்சாயத்துகள் ஆகியவற்றிற்கு 'பசுமை விருதுகள்' வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவ்விருதுகளை அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக ஆணையாளர்கள்/நகராட்சி ஆணையாளர்கள்/செயல் அலுவலர்கள்/வட்டார வளர்ச்சி அலுவலர்கள் பெற்றுக்கொள்வார்கள். இவ்விருதானது சான்றிதழ் மற்றும் பரிசுக்கோப்பையினைக் கொண்டதாகும்.

### 4.9.2. சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதுமை அறிமுகப்படுத்துவோர் விருது

உற்பத்தி முறையில் குறைந்த மாசினை ஏற்படுத்தும்பட்சத்தில், தொழிற்சாலையினால் ஏற்படும் மாசினை சீரிய முறையில் கட்டுப்படுத்த முடியும். இறுதியில் மாசினை சுத்திகரிக்கப்படும் முறையானது, மாசினை ஓரளவிற்கே குறைக்கவல்லதாக இருக்க முடியும். தூய்மையான தொழில்நுட்பங்கள் மூலம் ஆதாரத்திலேயே மாசினைக் குறைக்கும் முறைகள் மற்றும் கழிவுநீர்/வாயுக்களை மறுசுழற்சி செய்தல் ஆகியவற்றைப் புகுத்த தொழிற்சாலை உரிமையாளர்களை ஊக்கப்படுத்தும் வகையில் தமிழக அரசு 'சுற்றுச்சூழல் பாதுகாப்பில் புதுமையை அறிமுகப்படுத்துவோர் விருதினை' அறிமுகப்படுத்த உத்தேசித்துள்ளது. புதுமையான வகையில் பெருமளவு தொழிற்சாலை மாசினைத் தடுக்க முயற்சி எடுத்துள்ள தொழிற்சாலைகளுக்கு இவ்விருது வழங்கப்படவுள்ளது.

### 4.9.3. மதுரை மின்முலாம் தொழிற்பூங்கா ஏற்படுத்துதல்

மதுரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் 80 சிறிய உலோக மின்முலாம் பூசும் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றிலிருந்து வெளிவரும் கழிவுநீர் வைகை ஆற்றினைச் சென்றடைகிறது. இத்தொழிற்சாலைகள், நகரின் நெரிசல் மிகுந்த குடியிருப்புப் பகுதியில் அமைந்திருப்பதால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க இயலாமல் உள்ளது.

ஆதலால், சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், டி.கரிசல்குளம் கிராமத்தில் மின்முலாம் பூசும் தொழிற்சாலைகளுக்கு





முன்மாதிரியான தொழிற்பேட்டை அமைத்து, மதுரை பகுதியில் உள்ள அனைத்து மின்முலாம் பூசும் தொழிற்சாலைகளையும் மாற்றியமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்தொழிற்பேட்டை இந்திய-ஜெர்மன் ஒத்துழைப்புத் திட்டத்தின்கீழ் ஜெர்மன் தொழில்நுட்ப கூட்டமைப்பு மற்றும் காரைக்குடி மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் நிறுவப்படவுள்ளது. இத்திட்டத்திற்கான செலவு ரூபாய் 6.50 கோடியாகும். மின்முலாம் பூசுவோர் சங்கம் இதற்கென 22 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளது. இத்திட்டம் 2 ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்டு, 1,000 பேர்களுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுத்தரும்.

### 4.9.4. தானியங்கி தொடர் காற்றுத் தர கண்காணிப்பு மையம்

வாகனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் மூலம் வெளியேற்றப்படும் காற்று மாசு சுற்றுச்சூழல் மாசடைவதற்கும் மற்றும் மக்களின் சுகாதாரப் பாதிப்பிற்கும் காரணமாகிறது. வாகனங்கள் வெளியிடும் புகையில் நுண்துகள்கள் கார்பன் மோனாக்ஸைடு, கந்தக டையாக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு, காரீயம் மற்றும் ஹைட்ரோ கார்பன்கள் உள்ளன. இந்தக் காற்று மாசுகளினால் ஆஸ்துமா, நுரையீரல் பாதிப்பு, தோல் வியாதி மற்றும் புற்று நோய் உண்டாகக் காரணமாகின்றன.

ஏற்கெனவே தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் சென்னையில் 6 இடங்களில் சுற்றுப்புறக் காற்றின் தரத்தினைக் கண்காணிக்கிறது. சுவாசிக்கக்கூடிய மிதக்கும் நுண்துகள்கள். கந்தக டை ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடுகள், கார்பன் ஆக்ஸைட் மற்றும் ஹைட்ரோ கார்பன் முதலியவற்றை துல்லியமாகக் கணக்கிட கோயம்பேட்டில் ரூ.57 இலட்சம் செலவில் தானியங்கி தொடர் காற்றுத் தர கண்காணிப்பு நிலையம் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் காற்றின் நிலைமை பற்றி காற்றில் உள்ள பல்வேறு வகை மாசினை அறிந்துகொள்ள பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், மின்னணு விளம்பரப்பலகை நிறுவப்படும். இதனால் அன்றாட மற்றும் பருவ காலங்களில் ஏற்படும் மாசு காரணங்களின் அளவீடுகளை துல்லியமாகக் கணக்கிட்டு போக்குவரத்து மேலாண்மை, பெருநகர வடிவமைத்தல், காற்றுத் தர கண்காணிப்பு உத்திகள் மற்றும் கொள்கைகள் உருவாக்க இந்த மையம் உதவியாக இருக்கும்.

மற்ற மாநகரங்களில் (மதுரை, சேலம், கோயம்புத்தூர், திருச்சி மற்றும் திருநெல்வேலி) காற்று மாதிரி சேகரிக்கும் கருவிகள் ஒவ்வொன்றும் ரூபாய் 14.40 இலட்சம் வீதத்தில் மொத்தம் ரூபாய் 72 இலட்சத்தில் அமைக்கப்படும்.

### 4.9.5. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் ஆய்வகங்களுக்கு புகைபோக்கி வாயு ஆய்வுக் கருவிகளை அளித்தல்

தமிழ்நாட்டில் அனைத்து வசதிகளுடன் கூடிய 14 தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் உள்ளன. தொழிற்சாலைகளில் புகை போக்கியிலிருந்து வெளியேறும் வாயுக்களை கண்காணித்து உடனுக்குடன் கணக்கிடவும் முறைப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 2 சுற்றுச்சூழல் ஆய்வகங்களில் புகைபோக்கி வாயுக்களை அளவிடும் கருவிகள் உள்ளன. மீதமுள்ள ஆய்வகங்களுக்கு மேலும் 12 வாயுக்கள் அளவிடும் கருவிகளை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒரு கருவி மாற்றுக் கருவியாக வைக்கப்படவுள்ளது. 13 கருவிகளின் மொத்த மதிப்பு சுமார் ரூபாய் 39 இலட்சமாகும். புகைபோக்கி வாயுக்களை அளவிடும் கருவிகள் மூலம் சுமார் 1,000 தொழிற்சாலைகளைக் கண்காணிக்க முடியும்.





## இணைப்பு II

*(235ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 25 — வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003–2004

### 1. முன்னுரை

1.1. மக்களின் இன்றியமையாத அடிப்படைத் தேவைகளில் ஒன்றான உறைவிடத் தேவையினை பூர்த்தி செய்வதனை தலையாய கடமைகளில் ஒன்றாகக் கருதி இந்த அரசு செயல்படுகிறது. "ஒரு குடும்பத்திற்கு ஒரு வீடு" எனும் உன்னத குறிக்கோளை எய்த புதிய திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. பெருகிவரும் மக்கள்தொகை மற்றும் வேலைவாய்ப்பு தேடி நகர்ப்புறங்களுக்கு குடிபெயரும் மக்களின் வீட்டுவசதி தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. மேலும் மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப தங்களுக்கென்று சொந்த வீடு அமைத்துக் கொள்ளும் தேவையும் ஆவலும் அதிகரித்து வருகிறது. ஆகவே அனைத்து தரப்பினருக்கும் தேவையான வீட்டுவசதியை அளிப்பதற்காக வீடுகள், வீட்டுமனைகள், வீடு கட்ட நிதி வசதி மற்றும் தகுந்த தொழில் நுட்பத்தையும் வழங்க அரசு வகை செய்கிறது. அனைத்துப் பிரிவினையும் சார்ந்த மக்கள் தங்கள் பொருளாதாரத்திற்கு ஏற்றவாறு குடியிருப்பு இல்லங்களை அமைத்துக்கொள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள், தமிழ்நாடு வீட்டுவசதி இணையம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஆகியவை உகந்த திட்டங்களைத் தயாரித்து ஒருங்கிணைந்த முயற்சியோடும் உறுதியோடும் செயல்படுத்தி வருகின்றன.

1.2. அரசு ஊழியர்களுக்கு வீட்டுவசதித் தேவையினை பூர்த்தி செய்வதற்காக குறைந்த வட்டியில் கடன் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழக அரசு, அரசு ஊழியர்களுக்கு வாடகை குடியிருப்புகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மூலம் கட்டி செயல்படுத்தி வருகிறது. மேலும், இடவசதிக் கட்டுப்பாடு திட்டத்தின் மூலம் குறைந்த வாடகையில் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்வதும் நடைமுறையில் உள்ளது.

[2003 மே 8

*1.3.* இந்தியாவிலுள்ள வெகுவேகமாக நகர்ப்புறமாகி வரும் மாநிலங்களில் தமிழ்நாடு ஒன்றாகத் திகழ்கிறது. நகர்மயமான மாநிலங்களில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெற்றிருக்கிறது. 1931-லிருந்து 2001 வரையிலான கால அளவில் இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கள்தொகை 18 விழுக்காட்டிலிருந்து 43.86 விழுக்காடாக அதிகரித்துள்ளது.

*1.4.* தமிழ்நாடு நகர்-ஊரமைப்புச் சட்டம், 1971-ஐ செயல்படுத்துதல் நகர்-ஊரமைப்பு இயக்ககத்தின் பொறுப்பாக அமைந்துள்ளது. சட்ட ரீதியான திட்டங்கள் தயாரித்தல், அவற்றைச் செயல்படுத்துதல், மேலும் மக்கள் வாழும் இடங்களில் தூய்மையான, சுற்றுச்சூழலுக்கு வழிவகுக்கும் இதர திட்டங்கள் தயாரித்தல் போன்ற பணிகளில் திட்டக் குழுமங்களுக்கு நகர்-ஊரமைப்பு இயக்ககம் உதவி புரிந்து வருகிறது. மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் போன்ற திட்டங்களைத் தயாரித்தல் நகர்-ஊரமைப்புச் சட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்கின்றன.

*1.5.* சென்னை மாநகரத்தின் மக்கள்தொகை தற்பொழுது 45 இலட்சம் என மதிப்பிடப்பட்டு இந்தியாவின் ஒரு பெருநகரமாக விளங்குகிறது. 2011-ல் சென்னைப் பெருநகரம் மற்றும் சுற்றியுள்ள நகரப்பகுதிகளையும் சேர்த்து அதன் மக்கள்தொகை 75 இலட்சமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லை 1,177 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாகும். சென்னைப் பெருநகர் எல்லைக்குள் அமைந்துள்ள பகுதிகள் அதிக அளவில் நகரங்களாக மாறி வருவதால், நகர வசதிகள் மற்றும் நகர அடிப்படை வசதிகள் ஆகியவற்றிற்கு கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மேற்கூறிய குறைபாடுகளைக் கருத்தில் கொண்டு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் தக்க கொள்கைகளை வரையறுத்துக் கொண்டு பல்வேறு பெரிய நகர அடிப்படை வசதித் திட்டங்களை உருவாக்கி, சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் செயல்படுத்தி வருகிறது.



2003 மே 8]

### கோரிக்கை 25—வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை

### 2003–04 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு

சுருக்கம்

ரூபாய் ஆயிரத்தில் (தொகு மொத்தம்)

| | | | துறை தலைமை அலுவலகங்கள் | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | 25 | 01. | தலைமைச் செயலகம் | 2,64,02 | .. | 102,00,00 | 104,64,02 |
| 2. | 25 | 02. | நகர ஊரமைப்பு இயக்ககம் | 10,59,61 | .. | .. | 10,59,61 |
| 3. | 25 | 03. | வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 5,06,67 | .. | 8,75,63 | 13,82,30 |
| 4. | 25 | 04. | சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் | 37,11,84 | 35,82,86 | .. | 72,94,70 |
| 5. | 25 | 05. | தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் | 11,28,22 | 26,86,94 | .. | 38,15,16 |
| 6. | 25 | 06. | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | 42,13,34 | 20,00,00 | .. | 62,13,34 |
| 7. | 25 | 07. | குடியிருப்பு கட்டுப்பாட்டாளர் | 11,15 | .. | .. | 11,15 |
| | | | மொத்தம் .. | 108,94,85 | 82,69,80 | 110,75,63 | 302,40,28 |

[2003 மே 8

2003–2004 ஆம் ஆண்டிற்கான பகுதி – II திட்டங்கள்

| வ. எண் | திட்டப் பணிகளின் விவரம் | 2003–2004 ஆம் ஆண்டுக்கான திட்டச் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | |
| 1. | மூன்று புதிய கணினிகள் வாங்குதல் (பென்டியம் III துணைக் கருவிகளுடன்) | 2.01 |
| | தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் | |
| 2. | மழைக் காலங்களில் அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்க அடிப்படை வசதிகள் செய்தல் | 108.39 |
| 3. | மகளிர் தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் மகளிருக்குப் பயிற்சி அளித்தல் | 25.00 |
| | நகர மற்றும் ஊரக அமைப்பு இயக்ககம் | |
| 4. | 8 மண்டலம் மற்றும் தலைமை அலுவலகத்தில் கணினி வசதி மேம்படுத்துதல் | 13.00 |
| 5. | 8 மண்டலம் மற்றும் தலைமை அலுவலகத்தில் பயன்படுத்துவதற்காக பழைய ஒளி நகல் கருவிகளை ஒப்படைத்து 9 புதிய கருவிகள் வாங்குதல் | 7.20 |
| 6. | வரைபடக் கருவிகள் வாங்குதல் | 4.00 |
| 7. | நூலகத்திற்குப் புத்தகங்கள் வாங்குதல் | 1.00 |
| | வீட்டுவசதி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | |
| .8. | கணினி மற்றும் அச்சுக் கருவி வாங்குதல் | 1.00 |
| 9. | கோயம்புத்தூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய இடங்களில் உள்ள மண்டல அலுவலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு செய்து கொடுத்தல் | 1.20 |
| | மொத்தம் – திட்டத்தில் சேராதது | 28.41 |
| | மொத்தம் – திட்டப் பணிகள் | 134.39 |
| | பெரு மொத்தம் | 1162.80 |



2003 மே 8]

## 2. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம்

பொருளாதாரத்தில் நலிவுற்றோர், குறைந்த வருவாயினர், நடுத்தர வருவாயினர் மற்றும் உயர் வருவாயினர் என சமுதாயத்தில் உள்ள அனைத்துப் பிரிவு மக்களுடைய வீட்டுவசதித் தேவைகளையும் நிறைவு செய்வது வீட்டுவசதி வாரியத்தின் நோக்கமாகும். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் அனைத்து வருவாய்ப் பிரிவினருக்கும் வேண்டிய மேம்படுத்தப்பட்ட மற்றும் அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும் கொண்ட மனைகளையும், வீடுகளையும் வாங்கத்தக்க நிலையில் அளிக்கிறது.

### 2.1 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சாதனைகள்

கடந்த 42 ஆண்டுகளாக தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்குவதிலும், வீடுகள் கட்டுவதிலும் ஈடுபட்டுள்ளது. வீட்டுவசதி வாரியம் தனது பல்வேறு திட்டங்களின் மூலம் இதுவரை 3,93,684 மனைகள்/குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது. இவற்றுள் 2,04,813 மேம்படுத்தப்பட்ட மனைகளாகும். மீதமுள்ளவை வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளாகும். மேற்குறிப்பிட்ட 2,04,813 மனைகளில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்காக உருவாக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை 1,25,647 ஆகும். 1960-61 ஆம் ஆண்டிலிருந்து வாரியத்தின் திட்ட முதலீடு படிப்படியாக உயர்ந்து வந்துள்ளது.

### 2.2 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை வீட்டுவசதித் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் தமிழக அரசு அலுவலர்களுக்கு வாடகை வீட்டுவசதித் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதுவரை 29,055 வாடகைக் குடியிருப்புகள் ரூ. 281.42 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளன. தமிழக அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கு தற்போது சிறப்பு சீரமைப்புப் பணிகள் சுமார் ரூ. 13 கோடி செலவில் செய்து முடிக்கப்பட்டன.

### 2.3 குடிசை மாற்றுக் குடியிருப்புகள்

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் அமைக்கப்படுவதற்கு முன்பு வரை 20,060 குடிசைமாற்று குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் மாநிலம் முழுவதும் கட்டப்பட்டன. அவற்றுள்

மாவட்டத் தலைநகரங்களான மதுரை, சேலம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், கடலூர், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களிலுள்ள 9,637 குடிசை மாற்றுக் குடியிருப்புகள் இதுவரை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தாலேயே பராமரிக்கப்பட்டு வந்தன. அவை தற்போது குடிசைப் பகுதி மாற்று வாரியத்திடம் பராமரிப்புக்கு ஒப்படைக்கப்பட உள்ளன.

**2.4 பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்**

பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்காக மேம்படுத்தப்பட்ட மனைகளில் இன்றைய தேதியில் சுமார் 7,068 மனைகள் ஒதுக்கீடு செய்வதற்குத் தயாராக உள்ளன. இவற்றுள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 5,413 மனைகளும், வாரிய நிலவங்கித் திட்டத்தின்கீழ் 1,655 மனைகளும் உள்ளன. மேற்படி மனைகளின் அளவு 350 சதுர அடியிலிருந்து 750 சதுர அடி வரை ஆகும். இந்த வீட்டுமனைகள் நலிவுற்ற பிரிவினருக்கு மிகக் குறைந்த விலையில் வழங்கபபடுகினறன. அவற்றின் விலை அவை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்து ரூ. 1,300-லிருந்து ரூ. 23,000 வரை உள்ளது. தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகள் ஒதுக்கீடு பெறுவதற்கான மாத வருமான வரம்பு கீழ்வருமாறு:—

'ஏ' பிரிவிற்கு - ரூ. 920-ம் அதற்குக் குறைவாகவும்

'பி' பிரிவிற்கு - ரூ. 921-ல் இருந்து ரூ. 1,340 வரை

நிலவங்கித் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட மனைகளைப் பெற மாத வருமானம் ரூ. 2,100-க்குள்ளாக இருக்க வேண்டும்.

**2.5 குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்**

குறைந்த வருவாய்ப் பிரிவினருக்கான திட்டத்திற்குத் தகுதி பெற மாத வருமானம் ரூ. 2,101 முதல் ரூ. 4,500 வரை இருத்தல் வேண்டும். இக்குடியிருப்பிற்கான ஒதுக்கீடு பெற்றோர் மனையின் கிரயத்தில் 30 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாத தவணைகளில் செலுத்தலாம். இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை 91,463 மனைகள்/குடியிருப்புகளை ரூ. 148.61 கோடி செலவில் உருவாக்கியுள்ளது.



**2.6 நடுத்தர வருவாய் மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்**

நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டத்திற்கு தகுதி பெற மாத வருமானம் ரூ. 4,501 முதல் ரூ. 7,500 வரையில் இருத்தல் வேண்டும். இக்குடியிருப்பிற்கான ஒதுக்கீடு பெற்றோர் கிரயத்தில் 35 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாதத் தவணைகளில் செலுத்தலாம்.

உயர் வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டத்திற்கு தகுதி பெற மாத வருமானம் ரூ. 7,500-க்கு மேல் இருக்க வேண்டும். ஒதுக்கீடு பெற்றோர் இக்குடியிருப்புக்குரிய கிரயத்தில் 40 விழுக்காடு முன்பணமாகச் செலுத்த வேண்டும். மீதமுள்ள தொகையை 8-லிருந்து 15 ஆண்டுகளில் (திட்டத்திற்கான கடனைத் திரும்பச் செலுத்தும் காலத்தைப் பொறுத்து) சம மாதத் தவணைகளில் செலுத்தலாம். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் இதுவரை ரூ. 975.99 கோடி செலவில் 1,20,672 மனைகள்/குடியிருப்புகளை நடுத்தர மற்றும் உயர் வருவாய்ப் பிரிவினருக்கு உருவாக்கியுள்ளது. குறைந்த வருவாய்ப் பிரிவு, நடுத்தர வருவாய்ப் பிரிவு மற்றும் உயர் வருவாய்ப் பிரிவு ஒதுக்கீடுதாரர்கள் அவர்கள் விரும்பினால் மிகக் குறைந்த அளவான 15 சதவீதம் முன்பணம் செலுத்தவும் மீதமுள்ள தொகையை 15 ஆண்டு காலத்தில் சம மாதத் தவணைகளில் செலுத்தவும் வசதி செய்யப்பட்டுள்ளது. இந்த வசதியைப் பயன்படுத்துபவர்கள் கூடுதலாக ஒரு சதவீத வட்டி செலுத்த வேண்டும்.

**2.7 சிறிய மற்றும் நடுத்தர நகரத் திட்டங்கள்**

மாநிலம் முழுவதிலும் தெரிந்தெடுக்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர நகரங்களில் வீட்டுவசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கான திட்டம் 1990-91 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டது. இம்மக்களின் வீட்டுவசதித் தேவைகளின் அடிப்படையில் நில மேம்பாட்டுத் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, இத்திட்டப்பகுதியில் வீடுகள் கட்டவும் கருதப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின்கீழ் 68 நகரங்களில் 12,125 வீடுகளும் 11,176 மேம்படுத்தப்பட்ட மனைகளும் ரூ.218.85 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளன.

## 2.8 மழைநீர் சேகரிப்பு

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மழைநீர் சேகரிப்புப் பணியை முனைப்புடன் ஆரம்பித்து ரூ.14.38 இலட்சம் செலவில் 100 வாரியக் கட்டடங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. சமீபத்தில் திட்டப் பணிகள் முடிவடைந்த 19 தவணைமுறை திட்டக் குடியிருப்புகளுக்கும் ரூ.23.71 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள 120 தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்புகளுக்கு ரூ.39.68 இலட்சம் செலவில் மழைநீர் சேகரிப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 119 திட்டங்களில் இப்பணிகள் நிறைவு பெற்றுள்ளன. மேலும் ஒரு திட்டத்தில் இப்பணி முடிவடையும் தருவாயில் உள்ளது.

## 2.9 தமிழ்நாடு விட்டுவசதி வாரிய ஒதுக்கீடுதாரர்களுக்கு விட்டுவசதிக் கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் கடன் பெற்று விடுகள் கட்ட உதவும் திட்டம்

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் ஒதுக்கீடு பெற்றவர்கள் தங்கள் மனைகளில் வீடு கட்டிக்கொள்ள போதிய நிதி வசதி இன்மையால் அவதிப்படுகின்றனர். இவர்களுக்கு வீட்டுவசதிக் கடன் வழங்கும் ஹட்கோ நிவாஸ் மற்றும் இதர நிதி நிறுவனங்கள்/வங்கிகள் மூலம் கடன் பெற்று வீடுகள் கட்ட உதவும் திட்டம் ஒன்றினைச் செயலாக்க நடவடிக்கை பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 2.10 விடுகள்/குடியிருப்புகள்/மனைகள் விற்பனையை மேம்படுத்த முனைப்புடன் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

தற்போதுள்ள மந்தமான சந்தை நிலவரம், தனியார் நிறுவனங்கள் ஏற்படுத்தியுள்ள கடுமையான தொழில் போட்டி, நிதி நிறுவனங்கள் குறைந்த வட்டியில் கடன் வழங்க பெருமளவில் முன் வந்துள்ள நிலையாலும் வாரியத்தின் வீடுகள்/குடியிருப்புகள் மனைகள் அதிக அளவில் விற்பனையாகாமல் உள்ளன.

இந்நிலையிலும், வீடுகள்/குடியிருப்புகள்/மனைகள் நல்லமுறையில் விற்பதற்கு வாரியம் தனது விற்பனைக் கொள்கையில் மாற்றங்களைக்



கொண்டு வந்துள்ளது. தனியார் நிறுவனங்களுக்கு இணையான பல்வேறு விற்பனை உத்திகளைப் பயன்படுத்தியும், வட்டி முதலாக்கத்தைத் தள்ளுபடி செய்தும், ஒரு காலவரம்பு வரை வட்டியை நிறுத்தி வைத்தும், விலைக்குறைப்பு செய்தும், ஒதுக்கீடு விதிகளைத் தளர்த்தியும் தனது விற்பனைக் கொள்கையில் மாற்றத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கொண்டு வந்துள்ளது. பரிசு மற்றும் தள்ளுபடித் திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தியும், விற்பனையைப் பெருக்க முனைப்புடன் நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன. இவை தவிர, கீழ்க்கண்ட விற்பனை உத்திகளும் கையாளப்பட்டு வருகின்றன:-

1. வாரியக் கோட்டங்கள், வட்டங்கள் ஒவ்வொன்றிலும் தனித்தனியே குழுக்களை ஏற்படுத்தி விற்பனைக் குறியீடுகளை நிர்ணயித்தல்.

2. நிலவுடைமைப் பொருட்காட்சிகள், வர்த்தகக் கண்காட்சிகள், சுற்றுலாப் பொருட்காட்சி ஆகிய இடங்களில் அரங்குகள் அமைத்து விற்பனையைப் பெருக்குதல்.

3. அரசுத் துறை அலுவலகங்கள், அரசு சார்பு நிறுவனங்கள் சென்னை துறைமுகம், தெற்கு இரயில்வே, ஐ.சி.எப். மற்றும் தமிழ்நாடு மின்சார வாரியம் ஆகியவற்றில் விற்பனை முகாம்கள் நடத்துதல்.

4. திரை அரங்குகளில் ஸ்லைடுகள் மூலம் விளம்பரம் செய்தல்.

5. விழாக்கால பரிசுத் திட்டங்களைச் செயல்படுத்துதல்.

6. பொருட்காட்சி அரங்குகளில் பதிவு செய்வோர்க்கு செலுத்தும் பணத்தில் ஒரு சதவீதம் தள்ளுபடி செய்தல்.

7. விற்பனை முகவர்களை நியமித்தல்.

8. அரசு விருப்புரிமை பங்கீட்டின்கீழ் விற்பதற்குத் தயாராக உள்ள வீடுகள்/அடுக்குமாடி குடியிருப்புகள் குறித்து விவரங்கள் செய்தித்தாள்களில் விளம்பரம் செய்யப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு ஆணைகள் அரசால் வழங்கப்பட்டு வருகின்றன.

[2003 மே 8

மேற்கண்ட உத்திகளில் அண்ணாநகர் தந்தை பெரியார் சமூகக் கூடத்தில் நடத்தப்பட்ட நிலவுடைமை பொருட்காட்சியில் 29 அலகுகள் ரூ.162.50 இலட்சத்தில் விற்கப்பட்டன. அசோக் நகர் சமூகக் கூடத்தில் நடத்தப்பட்ட பொருட்காட்சியில் 83 அலகுகள் ரூ.625 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. மதுரை வட்டார அலுவலகத்தில் நடத்திய கண்காட்சியில் 42 அலகுகள் ரூ.115.61 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. கோயம்புத்தூர் தமிழ்நாடு சுற்றுலா விடுதியில் நடத்திய கண்காட்சியில் 12 அலகுகள் 60.89 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடத்தப்பட்ட கண்காட்சியில் 22 அலகுகள் ரூ.185.77 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. சென்னை மேற்கு அண்ணாநகர் ஆர்.40எ வாரிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற கண்காட்சியில் 122 அலகுகள் ரூ.1030.23 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. அண்ணாநகர் விஜயஸ்ரீ அரங்கில் நடந்த கண்காட்சியில் 31 அலகுகள் ரூ.274.07 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. சென்னை இராஜா முத்தையா அரங்கில் நடைபெற்ற கண்காட்சியில் 16 அலகுகள் ரூ.158.58 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. சென்னை இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் நடைபெற்ற கண்காட்சியில் 11 அலகுகள் ரூ.86.51 இலட்சத்திற்கும், இராணி மெய்யம்மை அரங்கில் நடைபெற்ற கண்காட்சியில் 12 அலகுகள் ரூ.94.74 இலட்சத்திற்கும் விற்கப்பட்டன. இந்த அனைத்து கண்காட்சிகள் மூலமாக 380 அலகுகள் ரூ.2793.90 இலட்சத்திற்கு விற்கப்பட்டன. இவற்றுடன் அண்ணாநகரில் அலுவலக வளாகங்கள் மத்திய கலால் துறைக்கும் மற்றும் முகப்பேர் திட்டத்தில் 152 வீடுகள் கடலோரக் காவல் படைக்கும். ரூ.40.51 கோடிக்கு மொத்த விற்பனையாக 2002-2003-ல் விற்கப்பட்டன.

## 2.11 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் செயல்பாடுகளை திறன்மிக்கதாக்க குழுக்களை அமைத்தல்

விற்பனையை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள், சந்தை உத்திகள் மற்றும் விற்பனைக் கொள்கை ஆகியவை குறித்துப் பரிந்துரைக்க மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் உயர் மட்டக் குழு ஒன்று அரசாணை (நிலை) எண் 479 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 5-12-2001 மூலம் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு, அரசாணை (நிலை) எண் 207 வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14-8-2002-ல் நிலைக் குழுவாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.



2003 மே 8]

அரசாணை (நிலை) எண் 418, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள் 22-10-2001-ல், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தற்போதைய விற்பனைக் கொள்கையை மறு ஆய்வு செய்து, அக்கொள்கையில் மாற்றங்கள் செய்வது குறித்து ஆலோசனைகள் வழங்குவதற்கு தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது.

நில உடைமைச் சந்தைகளில் நிலவிவரும் தளர்வு, வாரியத்தின் கட்டுமானப் பணிகள் குறைந்துள்ளது ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு வாரியத்தின் சரியான அமைப்பினை முடிவு செய்தல் மற்றும் வாரிய பணியாளர்களின் எண்ணிக்கையை தேவைப்படின் குறைத்தல் குறித்து வழிவகைகளை ஆய்ந்து தெரிவிக்க, குழு ஒன்றினை அரசு அரசாணை நிலை எண் 17 (வீ.வ.ம.ந.வ. துறை) நாள் 18-1-2002-ன் மூலம் அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகள்மீது உரிய முடிவுகள் எடுக்கப்படும்.

## 2.12 வாரியத்தின் வட்டிச்சுமையைக் குறைக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

2001-2002 ஆம் நிதியாண்டின் தொடக்கத்தில் வாரியம், வீட்டுவசதி கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு திரும்பச் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.843 கோடியாக இருந்தது. இதில் சுமார் ரூ.415 கோடிக்கான கடன்கள் 14 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையிலான அதிக வட்டிக் கடன்களாகும். மேற்கண்ட அதிக வட்டிக் கடன்கள் 11 சதவீதம் மற்றும் 11.1 சதவீதம் குறைந்த வட்டியில் புதிய கடன்கள் பெறப்பட்டு திருப்பிச் செலுத்தப்பட்டன. இவ்வகையில் வீட்டுவசதி வாரியத்திற்கு ரூ.100 கோடி அளவில் வட்டிச் சுமை குறைந்துள்ளது.

## 2.13 வாரியச் செயல்பாடுகளை கணினிமயமாக்குதல்

வாரியத்தின் அன்றாட நடவடிக்கைகள், ஒதுக்கீடுதாரர்களின் கணக்குகள் ஆகியவை கணினிமயமாக்கப்படும். அனைத்துக் கோட்டங்களும் சரகங்களும் வலைப்பின்னல் (Network system) மூலம் ஒருங்கிணைக்கப்படும். புதிய கணினி அமைப்புகள் வாங்கப்பட்டு, கோட்டங்கள் மற்றும் சரகங்களில் நிறுவப்பட்டுள்ளன. இதற்கான மென்பொருள் உருவாக்கும் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

[2003 மே 8

**2.14 தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத் திட்டங்களில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு முன்னுரிமை அளித்தல்**

வீட்டு வசதி வாரியத்தால் நிறைவேற்றப்படும் எல்லாத் திட்டங்களிலும் (சுயநிதி திட்டம் நீங்கலாக) மனை/வீடு/குடியிருப்பு ஒதுக்கீட்டில் ஆதிதிராவிடருக்கு 18 சதவீதமும், பழங்குடியினருக்கு 1 சதவீதமும் தனியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. இச்சலுகை இனிவரும் திட்டங்களிலும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும்.

**3. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம்**

தமிழ்நாடு, நாட்டின் மிகவும் நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களில் ஒன்றாகும். நகரங்களில் பொருளாதார நடவடிக்கைகள் ஒருமுகப் படுத்தப்பட்டதன் காரணமாக, நகரங்களுக்கு, வேலைவாய்ப்பின் பொருட்டு கிராமங்களிலிருந்து மக்கள் ஈர்க்கப்படுகின்றனர். இவர்கள் தாங்கள் பணிபுரியும் இடங்களுக்கு அருகிலுள்ள அரசு மற்றும் தனியார் வெற்று மனைகளை ஆக்கிரமித்து குடிசைகளை அமைத்துக் கொள்கின்றனர். இதுபோன்ற குடியமைப்புகள் கழிவு நீர் வெளியேற்றும் வசதியின்மை காரணமாக பின்னர் சுகாதாரமற்ற சூழ்நிலையில் குடிசைப் பகுதிகளாக மாறுகின்றன. இயற்கையான மக்கள்தொகைப் பெருக்கம் மற்றும் தொடர்ந்து நடைபெறும் குடிபெயருதல் காரணமாக இக்குடியமைப்புகள் பின்னர் பெருகி விடுகின்றன. நகரங்களில் குடிசைப் பகுதிகள் அமைத்திருத்தல் ஒரு குறிப்பிடத்தக்க சதவிகித மக்கள் ஏழ்மையான நிலையில் வாழ்வதைக் கோடிட்டுக் காட்டுகின்றது.

குடிசைப் பகுதிகளை மாற்றி அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கவும் குடிசைப் பகுதிகளை மேம்படுத்தவும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாரியத்தின் பணிகள் முதலில் சென்னை நகரில் மட்டும் செயல்படுத்தப்பட்டன. பின்னர் தமிழகத்திலுள்ள மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கும் 1984 ஆம் ஆண்டு முதல் படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டன.

**3.1. குடிசைப் பகுதியைப் பற்றிய கொள்கைகள்**

(1) நகரப் பகுதிகளில் நிலத்தினைச் சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் மிகவும் நெரிசலான இடங்களில், சுகாதாரமற்ற சூழ்நிலையில் அமைந்துள்ள குடிசைப் பகுதிகளை மாற்றி அவ்விடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தல்.



2003 மே 8]

(2) கள மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கேற்றவாறு அமைந்துள்ள குடிசைப் பகுதிகள் தேர்வு செய்யப்பட்டு கள மேம்பாட்டுப் பணிகள் உள்ளது உள்ளபடி அமைத்து அப்பகுதிகளை மக்கள் வாழ்வதற்கேற்றவாறு மேம்படுத்துதல்.

(3) அடுக்குமாடிக் குடியிருப்புகள் அல்லது கள மேம்பாட்டுப் பணிகள் அமைக்க இயலாத இடங்களில், மறு குடியமர்வுத் திட்டத்தின்கீழ் மாற்றிடங்களில் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் அமைக்கும் முறை பின்பற்றப்படுகிறது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், தலைவர், மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 9 இயக்குநர்களால் நிர்வகிக்கப்படுகிறது.

*3.2.* தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் பல்வேறு வீட்டு வசதி, குடிசைப் பகுதி மேம்பாடு மற்றும் மறு குடியமர்வுத் திட்டப் பணிகளை நகர குடிசைப்பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்தும்பொருட்டு கீழே கூறப்பட்டுள்ளவாறு செயல்படுத்தி வருகிறது:—

**3.2.1. குடிசைப் பகுதி மாற்றுத் திட்டம்**

நகர குடிசைப் பகுதிகளில் நிலத்தினை சமமாகப் பங்கிட்டு அளிக்க இயலாமல் மிகவும் நெரிசலான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு அடிப்படை வசதிகளான குடிநீர், கழிவு நீர் அகற்றும் வசதி, சாலை, தெரு மின்விளக்கு போன்றவைகளுடன் தன்னிறைவான சுகாதார வசதியுடன் கூடிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் அதே பகுதியில் அமைத்தல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது முதல் இத்திட்டப் பணிகளை இதுவரை நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 69,126 அடுக்குமாடிக் குடியிருப்புகள் ரூ.264.09 கோடி செலவில் நகரங்களில் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | நகரத்தின் பெயர் | அமைக்கப்பட்ட குடியிருப்புகள் |
|---|---|---|
| 1 | சென்னை | 61,396 |
| 2 | ஈரோடு | 1,880 |
| 3 | சேலம் | 1,472 |
| 4 | திருச்சி | 927 |
| 5 | கோவை | 822 |
| 6 | திருநெல்வேலி | 704 |
| 7 | மதுரை | 604 |
| 8 | தஞ்சாவூர் | 294 |
| 9 | கரூர் | 256 |
| 10 | திருப்பூர் | 240 |
| 11 | கும்பகோணம் | 206 |
| 12 | தூத்துக்குடி | 160 |
| 13 | நாகப்பட்டினம் | 117 |
| 14 | சங்கரன்கோவில் | 48 |
| | மொத்தம் | 69,126 |

சென்னை நகரிலுள்ள சுதந்திரா நகர் திட்டப் பகுதியில் 576 அடுக்குமாடிக் குடியிருப்புகள் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டன.

### 3.2.2. பதினொன்றாவது நிதிக் குழு-சிறப்பு மானியம்-பெருநகரங்களில் வாழும் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்

தமிழகத்தின் மூன்று பெருநகரங்களான சென்னை, மதுரை மற்றும் கோவை ஆகிய நகரங்களில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும்பொருட்டு மைய அரசின் பதினொன்றாவது நிதிக் குழுவிடம் 2001-2005 ஆம் ஆண்டுகளுக்காக சிறப்பு மானியமாக ரூ.49.00 கோடி தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் பெற்றுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு, சென்னை நகரில் 2,820 மூன்றடுக்கு மாடிக் குடியிருப்புகளும் மதுரை மற்றும் கோவை நகரங்களில் மொத்தம் 1,832 தனி வீடுகளும் 2001 முதல் 2005 ஆம் ஆண்டிற்குள் கீழே கூறப்பட்டவாறு படிப்படியாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது:—



| வ. எண் | நகரத்தின் பெயர் | அடுக்குமாடிக் குடியிருப்புகள் | தனி வீடுகள் | செலவினம் (ரூ.கோடியில்) |
|---|---|---|---|---|
| 1 | சென்னை | 2820 | - | 35.250 |
| 2 | மதுரை | - | 916 | 6.875 |
| 3 | கோவை | - | 916 | 6.875 |
| | மொத்தம் | 2820 | 1832 | 49.000 |

இத்திட்டத்தின் ஒருபகுதியாக, சென்னை நகரில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 1,620 அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைக்கும் பணிகள் 2002-2003 ஆம் ஆண்டில் அமைத்து முடிக்கப்பட்டன. இக்குடியிருப்புகள் சென்னை மெரினா கடற்கரைக்கு அருகில் திடீர் நகர் பகுதியில் வாழும் குடிசைப்பகுதி வாழ் குடும்பங்களுக்கு விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். மேலும், சென்னை மெரினா கடற்கரை திடீர் நகர்ப் பகுதியில் வாழும் மீதமுள்ள குடும்பங்களை மறுகுடியமர்வு செய்யும்பொருட்டு, சென்னை ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் மேலும் 486 குடியிருப்புகள் ரூ.6.32 கோடி செலவில் அமைப்பதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும். பதினொன்றாவது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு, 2003-2004 ஆம் ஆண்டில் மேலும் 714 குடியிருப்புகள் ரூ.9.49 கோடி செலவில் சென்னை நகரில் அமைப்பதற்கான பணிகள் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட பெரு நகரங்களில் ரூ.49.00 கோடி செலவில் குடிசைப் பகுதி வாழ் மக்களுக்கு வீடுகள் அமைக்கும் திட்டப் பணிகள் பதினொன்றாவது நிதிக் குழுவின் திட்டக் காலத்திற்குள் (31-03-2005) முடிக்கப்படும்.

பதினொன்றாவது நிதிக் குழுவின் சிறப்பு மானிய உதவியினைக் கொண்டு, குடியிருப்புகள் அமைக்கும் திட்டத்தின்கீழ் மார்ச் 2003 வரை ரூ.14.36 கோடி தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் செலவிட்டுள்ளது. மேலே கூறப்பட்டுள்ள இத்திட்டப் பணிகளுக்காக, 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.26.50 கோடி செலவிடப்படும்.

[2003 மே 8

### 3.2.3. வெள்ளக் குறைப்புப் பணிகள்—தூர்வாரும் பணிகளுக்கு இடையூறாக நதிக்கரைகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு விடுகள் அமைத்தல்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மற்றும் பொதுப் பணித் துறையினர் சேர்ந்து நடத்திய கணக்கெடுப்பில் சென்னை நகரின் நதிக்கரைகளில் பொதுப் பணித் துறையினரால் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வதற்கு இடையூறாக வாழும் 8,164 குடிசைவாழ் குடும்பங்கள் மறுகுடியமர்வு செய்யப்பட வேண்டுமென்று கண்டறியப்பட்டுள்ளது. இக்குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை, பொதுப் பணித் துறையினரின் தூர்வாரும் பணிகள் மேற்கொள்வதற்கு ஏதுவாக, அருகில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்து மறுகுடியமர்வு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறப்பட்ட 8,164 குடும்பங்களை மறுகுடியமர்வு செய்ய இத்திட்டத்தின் ஒரு பகுதியாக சென்னை ஒக்கியம்— துரைப்பாக்கம் பகுதியில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் 3,000 குடியிருப்புகளை ரூ.27.50 கோடி செலவில் அமைத்து வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மார்ச் 2003 வரை 2,688 குடியிருப்புகள் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகளுக்காக ரூ.23.32 கோடி செலவிடப்பட்டுள்ளது. மேலும் 312 குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.3.54 கோடி செலவில் அமைத்து முடிக்கப்படும்.

### 3.2.4. வால்மீகி அம்பேத்கர் விட்டு வசதித் திட்டம்:

மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள வால்மீகி அம்பேத்கர் வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் நகரக் குடிசைப் பகுதிகளில் புதிய வீடுகள் அமைக்கப்படும். இத்திட்டப் பணிகள் மைய அரசின் மானியம் 50 சதவீதம், ஹட்கோ நிறுவனத்தின் கடன் 40 சதவீதம் மற்றும் பயன் பெறும் குடும்பங்களிடமிருந்து 10 சதவீதம் நிதி ஆதாரம் பெற்று நிறைவேற்றப்படும்.

இத்திட்டத்தின்கீழ் தமிழகத்தின் நகரங்களில் உள்ள குடிசைப் பகுதிளில் வாழும் 1,000 குடும்பங்களுக்கு ரூ.4.00 கோடி செலவில் வீட்டுவசதி 2002-2003 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழகத்தின் நகரக் குடிசைப் பகுதிகளில், ரூ.25.00 கோடி மொத்தச் செலவில் 6,250 வீடுகள் அமைப்பதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ள நிதி ஆதாரத்துடன் செயல்படுத்தப்படுகின்றன:—



2003 மே 8]

| வ. எண் | நிதி ஆதாரம் | சதவீதம் | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மைய அரசின் மானியம் | 50 | 12.50 |
| 2 | ஹட்கோ கடன் | 40 | 10.00 |
| 3 | பயன்பெறும் குடும்பங்களின் பங்கு | 10 | 2.50 |
| | மொத்தம் | | 25.00 |

ஒவ்வொன்றும் கான்கிரீட் தளம் மற்றும் செங்கல் சுவர்களுடன், 150 சதுர அடி கட்டடப் பரப்பில் 6,250 தனிநபர் உறைவிடங்கள் அமைப்பதற்காக 2002-03 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ள இத்திட்டப் பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

மேலே கூறப்பட்ட நிதி ஆதாரத்தினைக் கொண்டு, 2003-04 ஆம் ஆண்டில் வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் தமிழகத்தின் நகரக் குடிசைப் பகுதிகளில் மேலும் 5,000 தனி வீடுகள் ரூ.20.00 கோடி செலவில் கட்டி முடிக்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.5. மைய அரசின் 10-வது நிதிக் குழுவின் சிறப்பு மானியம் – சென்னை நகரில் ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களை மறுகுடியமர்வு செய்தல்

சென்னை நகரில் உள்ள குடிசைப் பகுதி மேம்பாட்டிற்காக மைய அரசின் 10-வது நிதிக் குழுவிடம் சிறப்பு மானியமாக ரூ.54.00 கோடி தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் பெற்றுள்ளது. இந்நிதியுதவியினைக் கொண்டு சென்னை ஒக்கியம்—துரைப்பாக்கம் பகுதியில் 6,500 குடியிருப்புகள் ரூ.54.00 கோடி செலவில் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன. துரிதப் போக்குவரத்துப் பகுதி 2-ன் தடம் மற்றும் இதர ஆட்சேபகரமான பகுதிகளில் வாழ்ந்த குடிசைப் பகுதி வாழ் குடும்பங்கள் இக்குடியிருப்புகளில் மறு குடியமர்வு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டப் பகுதியினை ஒரு முன்னோடி நகரமாக உருவாக்கும் பொருட்டு மேலும் சில அடிப்படை வசதிகளான நல்ல சாலைகள், தெரு மின் விளக்குகள், சமுதாயக் கூடங்கள், நியாயவிலைக் கடைகள் மற்றும் தொழிற்பயிற்சிக் கூடங்கள் போன்ற பணிகளை அமைக்க உரிய நடவடிக்கைகளை தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மேற்கொண்டுள்ளது.

[2003 மே 8

### 3.2.6. நகரக் குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறங்களை மேம்படுத்துதல்

குடிசைப் பகுதிகளை நல்ல உறைவிடமாக மேம்படுத்த, உடனடி நடவடிக்கையாக சுகாதாரமற்ற நகரக் குடிசைப் பகுதிகளில் உள்ளது உள்ளபடி நிலையில் அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, சாலைகள், தெரு மின்விளக்குகள் போன்ற பணிகள், குடும்பம் ஒன்றுக்கு ரூ.2,000 செலவில் அமைக்கப்படுகின்றன.

அரசின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் நிதி ஒதுக்கீடு பெற்று இத்திட்டப் பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் இதுகாறும் 3,26,092 குடும்பங்களுக்கு ரூ.48.79 கோடி செலவில் செய்து தரப்பட்டுள்ளன.

### 3.2.7. தமிழ்நாடு சிறப்பு நல நிதி – விடுகள் அமைத்தல்

தமிழ்நாடு அரசின் சிறப்பு நலநிதியிலிருந்து 1994-95 முதல் ஒவ்வொரு ஆண்டும் மானியமாக தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு, குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கு வீடுகள் அமைக்க நிதியுதவி வழங்கப்படுகிறது. இந்நிதியுதவியினைக் கொண்டு மார்ச் 2003 வரை 295 குடியிருப்புகள் ரூ.2.91 கோடி செலவில் சென்னை நகரில் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப்பணிகளுக்காக ரூ.10.00 இலட்சம் 2003-2004 ஆம் ஆண்டில் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.8. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்

சென்னை மற்றும் இதர நகரங்களில் வாரியம் தொடங்கப்பட்டது முதல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்பட்ட குடியிருப்புகள், மாறுபட்ட இயற்கைச் சூழ்நிலை, கடலுக்கு அருகில் அமைத்துள்ளதன் காரணமாக உப்புக்காற்று வீசுவதால் கூரைத்தளம், மாடிப்படிகள், மாடி முகப்புகள், மாடிப்படிகளுக்கான முகப்புகள் பழுதடைந்துள்ளன. இக்குடியிருப்புகளுக்கு நிதிப் பற்றாக்குறை காரணமாக இதுபோன்ற பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 02-12-1995 அன்று நடைபெற்ற குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளிவிழாவின்போது, ஒரு முன்னோடி நடவடிக்கையாக அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வாழும் குடும்பங்களின் உயிர் மற்றும் உடைமைகள் பாதுகாப்பினை உறுதி செய்யும் நோக்கத்துடன் குடியிருப்புகளுக்கு அவசர பழுதுபார்ப்புப்



2003 மே 8]

பணிகளை நிறைவேற்றிட ரூ.5.00 கோடி நிதியுதவி மானியமாக அரசு வழங்கும் என அறிவித்தார்கள். பின்னர் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்குப் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேலும் தொடர ரூ.9.50 கோடி அரசால் வழங்கப்பட்டது. இந்நிதியுதவியினைக் கொண்டு சென்னை மாநகரில் உள்ள 29,510 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு ரூ.14.50 கோடி மொத்த செலவில் பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், சென்னை, மதுரை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய நகரங்களில் கட்டப்பட்டுள்ள 30,514 குடியிருப்புகளுக்கு கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் புதுப்பித்தல் பணிகளை ரூ.8.93 கோடி மொத்த செலவில் செயல்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது. இத்திட்டப் பணிகள், 'வால்மீகி அம்பேத்கர்' திட்டத்திற்கான மைய அரசின் மானிய உதவி மற்றும் ஹட்கோ நிறுவனத்தின் கடனுதவி 50:50 அடிப்படையில் பெற்று செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள் வெவ்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன. இதுகாறும் ரூ.5.43 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் மீதமுள்ள ரூ.3.50 கோடி செலவிலான பணிகள் 2003-2004 ஆம் ஆண்டில் அமைத்து முடிக்கப்படும்.

### 3.2.9. சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகள்

சென்னை சட்டமன்றத் தொகுதிகளுக்கான மேம்பாட்டு நிதியுதவியின் கீழ் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மானியம் பெற்று அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு கட்டமைப்பு பழுதுபார்ப்புப் பணிகள் கீழே கூறப்பட்டுள்ளவாறு நிறைவேற்றப்பட்டுள்ளன:—

| வ. எண் | ஆண்டு | தொகை (ரூ.கோடியில்) |
|---|---|---|
| 1 | 2000-2001 | 1.74 |
| 2 | 2001-2002 | 0.45 |
| 3 | 2002-2003 | 1.47 |
| | மொத்தம் .. | 3.66 |

சென்னை நகர சட்டமன்றத் தொகுதி உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.2.00 கோடி மானிய உதவி 2003-2004 ஆம்

[2003 மே 8

ஆண்டில் பெற்று அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கு பழுதுபார்ப்புப் பணிகள் மற்றும் புதுப்பித்தல் பணிகள் ஆகியவற்றை நிறைவேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.10. குடிசைப்பகுதிவாழ் குடும்பங்களுக்கு தீப்பிடிக்காத கூரை வீடுகள் அமைத்தல்

நகரக் குடிசைப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துகளைத் தடுக்கவும் அதன் காரணமாக ஏற்படக்கூடிய உயிர்ச்சேதம் மற்றும் பொருட் சேதங்களைத் தவிர்க்கவும், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் சுற்றுச் சுவர்களுடன் கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் 6 மாநகராட்சிப் பகுதிகளில் அடிக்கடி தீ விபத்துக்குள்ளாகும் குடிசைப் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் 45,308 குடும்பங்களுக்கு ரூ.56.92 கோடி செலவில் சுற்றுச் சுவர்களுடன்கூடிய கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | நகரத்தின் பெயர் | பயன்பெற்ற குடும்பங்கள் | செலவினம் (ரூ. இலட்சங்களில்) |
|---|---|---|---|
| 1. | சென்னை | 38,457 | 4813.45 |
| 2. | மதுரை | 2,368 | 308.79 |
| 3. | திருச்சி | 1,465 | 165.23 |
| 4. | சேலம் | 1,920 | 260.15 |
| 5. | கோவை | 698 | 91.00 |
| 6. | திருநெல்வேலி | 400 | 53.09 |
| | மொத்தம் | 45,308 | 5691.71 |

இத்திட்டப் பணிகளுக்கான நிதி ஆதாரம் ஹட்கோவிடம் கடனாகப் பெறப்படும். இக்கடன் தொகை அரசால் திருப்பிச் செலுத்தப்படும்.

### 3.2.11. தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்

மேலும், திருச்சி நகரில் 2,000 குடும்பங்களுக்கு கல்நார் ஓட்டுக் கூரை வீடுகள் மார்ச் 2003 வரையில் ரூ. 2.711 கோடி செலவில் தேசிய குடிசைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அமைத்து முடிக்கப்பட்டுள்ளன.



2003 மே 8]

### 3.2.12. நகர சீரமைப்புத் திட்டம்

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புகள் குறைந்த வாடகையில் ஒதுக்கீடு செய்யப்படுவதால் அவர்களிடமிருந்து பெறப்படும் தொகை அக்குடியிருப்புகளைப் பராமரிக்கப் போதுமானதாக இல்லை. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பராமரிப்புச் செலவினங்களுக்குப் போதிய நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த, சென்னை மற்றும் தமிழகத்தின் இதர பெருநகரங்களில் வணிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் வணிக வளாகங்கள் மற்றும் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் அரசாணை நிலை எண் 129, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 12-02-1993-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் அமைக்கப்படுகின்றன. இதுபோன்ற வணிக வளாகங்கள் குடிசைப்பகுதிவாழ் மக்களுக்கு அவ்விடங்களிலேயே அடுக்குமாடிக் குடியிருப்புகள் அமைத்தது போக மீதமுள்ள நிலங்களில் மட்டுமே கட்டப்படுகின்றன. இதன் மூலம் கிடைக்கப்பெறும் உபரி வருவாய் அடுக்குமாடி குடியிருப்புகளைப் பராமரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் இதுகாறும் சென்னை, மதுரை மற்றும் சேலம் ஆகிய நகரங்களில் ரூ. 5.07 கோடி செலவில் 8 வணிக வளாகங்களும், ரூ. 14.92 கோடி செலவில் 12 இடங்களில் மத்திய வருவாய்ப் பிரிவினருக்கான 722 அடுக்ககங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இத்திட்டப் பணிகள் ஹட்கோ மற்றும் தேசிய வீட்டுவசதி வங்கி போன்ற நிதி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று நிறைவேற்றப்பட்டன. இக்கடன்களை திருப்பிச் செலுத்தும் பொறுப்பினை வாரியம் மேற்கொண்டுள்ளது.

சென்னை திருவான்மியூர் சிங்காரவேலர் நகர்ப்பகுதியில் 112 மத்திய தர வருவாய்ப் பிரிவு அடுக்ககங்களுக்கான கட்டுமானப் பணிகள் முடிவுற்றுள்ளன. இக்குடியிருப்புகளுக்கான முடிவாக்கப் பணிகள் (finishing works) முன்னேற்றத்தில் உள்ளன. இத்திட்டப் பணிகள் ரூ. 4.90 கோடி செலவில் முழுமைபெறும்.

சென்னை நந்தனம் பகுதியில் ஒரு அலுவலக மற்றும் வணிக வளாகம் ரூ. 3.22 கோடி செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் அமைக்க தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் திட்டமிட்டுள்ளது.

[2003 மே 8

மேலும், நகர சீரமைப்புத் திட்டத்தின்கீழ் திருநெல்வேலி மற்றும் புதுக்கோட்டை நகரங்களில் மத்திய தர வருவாய்ப் பிரிவினருக்கான அடுக்ககங்கள் 2003-2004 ஆம் ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**3.2.13 மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புப் பணிகள்**

சென்னை நகரிலுள்ள அடுக்குமாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் நிலத்தடி நீர் வளத்தினை மேம்படுத்த குறிப்பிட்ட அடுக்குமாடி திட்டப் பகுதிகளிலும் கோட்ட அலுவலகம், வாரிய அலுவலகம், சமுதாயக் கூடங்கள் போன்ற இடங்களிலும் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகள் ரூ.11.50 இலட்சம் செலவில் ஒரு முன்னோடித் திட்டமாக நிறுவப்பட்டுள்ளன.

தற்போது நடைபெறும் அனைத்துத் திட்டங்களிலும் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மழைநீர் சேகரிக்கும் கட்டமைப்புகளை நிறுவி வருகின்றது.

**3.3 குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிட குடும்பங்கள் பயனடைய சிறப்பு உள்ளடக்கத் திட்டம் (2003-2004)**

நகர குடிசைப் பகுதிகளில் வாழும் ஆதிதிராவிடர் குடும்பங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டிற்கு நிதி ஆதாரத்தினை ஏற்படுத்த சிறப்பு உள்ளடக்கத் திட்டம் வகை செய்கிறது.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் நகர குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களின் வாழ்க்கை நிலையினை மேம்படுத்த பல்வேறு வீட்டுவசதித் திட்டப் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இதுபோன்று 2003-2004 ஆம் ஆண்டில் நிறைவேற்ற திட்டமிடப்பட்டுள்ள பல்வேறு வீட்டுவசதிப் பணிகளின் மூலம் குடிசைப் பகுதிகளில் வாழும் 60 சதவிகித ஆதிதிராவிடர் இன மக்கள் பயன்பெறுவர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—



2003 மே 8]

2003-04-க்கான சிறப்பு உள்ளடக்கத் திட்டம்

செயலாக்கம்-வீடுகள்
செலவினம்-ரூபாய் கோடியில்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | மொத்தம் | | சிறப்பு உள்ளடக்கத் திட்டம் | |
|---|---|---|---|---|---|
| | | செயலாக்கம் | செலவினம் | செயலாக்கம் | செலவினம் |
| 1 | பதினொன்றாவது நிதிக் குழுவின்-சிறப்பு மானியம்-குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல். | 2116 | 20.00 | 1270 | 12.00 |
| 2 | வெள்ளக் குறைப்புத் திட்டப் பணிகள்-மறு குடியமர்வுத் திட்டம்-குடிசைப் பகுதி வாழ் குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்தல். | 312 | 3.54 | 187 | 2.12 |
| 3 | வால்மீகி அம்பேத்கர் வீட்டுவசதித் திட்டம். | 11250 | 45.00 | 3000 | 12.00 |
| 4 | கல்நார் வீட்டு வசதித் திட்டம். | 2729 | 4.00 | 1634 | 2.54 |
| | மொத்தம் .. | 16407 | 72.54 | 6091 | 28.66 |

**3.4 சமுதாய வளர்ச்சிப் பணிகள்**

குடிசைப் பகுதிகளில் கீழே கூறப்பட்டுள்ள சமுதாய வளர்ச்சிப் பணிகள் அரசு சாரா நிறுவனங்களின் ஈடுபாட்டுடன் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தால் 1981 ஆம் ஆண்டு முதல் நிறைவேற்றப்பட்டு வருகின்றன:

[2003 மே 8

### 3.4.1 வேலைவாய்ப்புப் பயிற்சித் திட்டம்

குடிசைப்பகுதிகளில் உள்ள இளைஞர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத இளைஞர்களுக்கு குறுகிய கால பயிற்சி அளித்து அவர்களின் வேலைவாய்ப்புத் திறனை அதிகரித்தல் இத் திட்டத்தின் நோக்கமாகும். இப்பயிற்சியின் காலம் ஒரு மாதம் முதல் ஓராண்டு வரையாகும். வேலைவாய்ப்பிற்கான இப்பயிற்சிகள் பதிவு செய்யப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள், முறையான அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இக்காறும் 9,536 குடிசைப்பகுதி வாழ் இளைஞர்கள் அரசு மானியம் ரூ. 137.34 இலட்சங்கள் செலவில் இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.

### 3.4.2. குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டம்

கடந்த 02-12-1995 அன்று நடைபெற்ற தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளிவிழாவின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகரில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்கும் திட்டத்திற்காக ரூ.100 கோடி மானியம் அளித்தார்கள். இம்மானிய உதவியினைக் கொண்டு தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் 1996 ஆம் ஆண்டு முதல் குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புத் திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது.

குழந்தைத் தொழிலில் ஈடுபட்டுள்ள சிறார்களை அத்தொழிலிலிருந்து படிபடியாக மீட்டு அரசு சாரா மற்றும் சமூக சேவை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் அச்சிறுவர்களின் உரிமையை திரும்பப் பெறச் செய்து குழந்தைத் தொழிலாளர் முறையினை ஒழிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தில் இடைக்காலப் பள்ளிகளை ஓராண்டு நடத்துதல், சமுதாய ஒருங்கிணைப்பு, அடிப்படை புள்ளிவிவரம் சேகரித்தல், பயிற்சி, அரசு மற்றும் அரசு சாரா நிறுவனங்களின் புத்தறிவுப் பயிற்சி ஆகியவை அடங்கும். ஐக்கிய நாடுகளின் பன்னாட்டு குழந்தைகளின் அவசர நிதி மற்றும் தேசிய நிதி நிறுவனங்களான UNICEF மற்றும் CRY ஆகிய நிறுவனங்கள் பயிற்சி மேம்பாடு மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு ஒத்துழைப்பு அளித்துள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுகாறும் 6,200 குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் பள்ளிப் படிப்பைத் தொடர இயலாத குழந்தைகளும் இத்திட்டத்தின்கீழ் இடைக்காலப் பள்ளிகளில் சேர்க்கப்பட்டு, மறுவாழ்வு பெற்றுள்ளனர். இத்திட்டப் பணிகளுக்காக இதுகாறும் ரூ.1 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் அரசு வரவு-செலவுத் திட்டத்தில் நிதியுதவி பெற்று நிறைவேற்றப்படுகின்றன.



2003 மே 8]

### 3.4.3 மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

மகளிரை சுயசார்பு உடையவர்களாகவும், குடும்ப மேம்பாட்டுப் பணிகளில் உரிய பங்கு வகிப்பவர்களாகவும் மேம்படுத்த தொழில் முனைவோர் திட்டத்தின்கீழ் ஐந்து இலட்சம் பெண்களுக்கு ஐந்தாண்டுகளில் பயிற்சி அளிக்க திட்டம் ஒன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டம் நகர குடிசைப்பகுதிகளில் வாழும் பெண்களிடையே சமூகப் பொருளாதார உணர்வுகளை ஏற்படுத்தி, விழிப்புணர்ச்சி பெறுதல் மூலம் தன்னம்பிக்கை உடையவர்களை மேம்படுத்தி மேம்பாட்டுத் திட்டங்களில் பங்கேற்பவர்களாக்குதல் ஆகியவற்றினை உறுதி செய்து அதன் மூலம் அவர்களது ஒருங்கிணைந்த சமூகப் பொருளாதார நிலையினை மேம்படுத்துதல் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் சென்னை நகர குடிசைவாழ் பெண்களுக்கு திறனாய்வினை அதிகரிக்கவும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காகவும் பயிற்சி அளித்து அதன் மூலம் அவர்களது பொருளாதார நிலையினை உயர்த்தி தன்னம்பிக்கை உடையவர்களாக மேம்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் 2001-2002 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2001-2002 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின் கீழ் ரூ.50.00 இலட்சம் அரசு மானிய உதவி அளித்துள்ளது. இந்நிதியுதவியினைக்கொண்டு குடிசைப்பகுதிகளில் வாழும் 12,604 பெண்களுக்கு பயிற்சிகள் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் 2001-2002, 2002-2003 ஆண்டுகளில் அளிக்கப்பட்டது.

## 3.5 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம் (பகுதி-2 திட்டம்)

சென்ற ஆண்டு பெய்த மழையின்போது குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்ட வட சென்னைப் பகுதியில் தாழ்வாக அமைந்துள்ள அடுக்குமாடி திட்டப்பகுதிகளில் தரைத்தள குடியிருப்புகளின் தரை மட்டத்தினை உயர்த்தவும், அடுக்குமாடி குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் குடியிருப்பு தொகுதிகளின் பின்புறத்தில் நடைபாதை மற்றும் 'U' வடிவ கால்வாய் ஒன்றினை பகுதி-II திட்டத்தின்கீழ் அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.108.39 இலட்சம் செலவிடப்படும்.

மேலும் குடிசைப்பகுதி வாழ் பெண்களின் தொழில் முனைவோர் திறனை அதிகரிக்க 2003-2004 ஆம் ஆண்டில் 6,200 பெண்களுக்கு ரூ.25.00 இலட்சம் செலவில் பயிற்சிகள் அளிக்கப்படும்.

## 4. கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள்

தமிழக மக்களின் அவசிய தேவைகளில் உறைவிடம் என்பது பல்லாண்டு காலமாக மிக முக்கியப் பங்கு வகிக்கின்றது. இத்தேவையைப் பூர்த்தி செய்ய தமிழக அரசின் வீட்டுவசதிக் கொள்கைகளுக்கு ஏற்ப வீட்டுவசதியினை மேம்படுத்துவதில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் குறிப்பிடத்தக்க சாதனை படைத்துள்ளன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 1,033 கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் நகர்ப்புற மக்களின் சேவைக்கென 837 தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும், கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்களின் தேவையினைப் பூர்த்தி செய்ய வட்ட அளவில் 196 வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களும் மக்கள் சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளன. மேற்கண்ட சங்கங்களில் 770 வீட்டுவசதிச் சங்கங்கள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்துடன் இணைக்கப்பட்டுள்ள சார்புச் சங்கங்களாகும். அடிப்படை வசதிகளுடன் கூடிய வீட்டுமனைகள் உறுப்பினர்களுக்கு கிடைக்க, மனைப்பிரிவுகளை உருவாக்குதல் மற்றும் புதிய வீடுகள் கட்டுவதற்கு நிதியுதவி வழங்குதல் போன்றவை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் நோக்கமாகும்.

### 4.1 மேலாண்மை

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் பாரபட்சமற்ற மேலாண்மையினை உறுதி செய்யும்பொருட்டு அனைத்து தொடக்க நிலை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் 25-5-2001 முதல் தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மக்களாட்சி கோட்பாடுகளின்படி விரைவில் இச்சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவிடம் சங்க நிர்வாகம் ஒப்படைக்கப்படும்.

### 4.2 தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம்

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களுக்கு ஒருங்கிணைப்பு நிறுவனமாக இருப்பதால் சார்புச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு வீடுகள் கட்டத் தேவைப்படும் நிதியுதவியை திரட்டித் தரும் பணியினைச் செய்கிறது. வீட்டுவசதி கடன் வழங்க மாநில வீட்டுவசதி இணையத்திற்குத் தேவைப்படும் நிதியாதாரங்கள் தமிழ்நாடு அரசு,



ஆயுள் காப்பீட்டுக்கழகம், ஹட்கோ நிறுவனம், தேசிய வீட்டுவசதி வங்கி, வீட்டுவசதி மேம்பாட்டு நிதிக் கழகம், வணிக மற்றும் கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து அரசு பொறுப்புறுதியின் பேரில் பெறப்படுகின்றன. தொடக்க காலத்திலிருந்து இணைக்கப்பட்ட சார்புச் சங்கங்களுக்கு 31-3-2003 வரை 11,13,719 வீடுகள் கட்ட ரூ.3964.56 கோடி கடனுதவி அளிக்கப்பட்டுள்ளது. தேசிய அளவில் கடனுதவி அளிப்பதில் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், மிகச் சிறந்த கூட்டுறவு நிறுவனமாக தேர்வு செய்யப்பட்டு பரிசும் பெற்றுள்ளது.

### 4.3 பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வீட்டுவசதியினைப் பெருக்குவதில் தொலைநோக்கு கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் 1978-79 ஆம் ஆண்டிலிருந்து ஊரக வீட்டுவசதித் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. திட்ட ஆரம்ப காலத்திலிருந்து பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு மொத்தம் ரூ.412.66 கோடி நிதியுதவி வழங்கப்பட்டு 6,27,108 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

### 4.4 கிராமப்புறங்களில் குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கான வீட்டுவசதித் திட்டம்

இத்திட்ட தொடக்கத்திலிருந்து இதுவரை 83,576 வீடுகள் கட்டி முடிக்க ரூ.469.92 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. 2002-2003 ஆம் நிதி ஆண்டில் மட்டும் குறைந்த வருவாய்ப் பிரிவில் 1,356 வீடுகளும் நடுத்தர வருவாய்ப் பிரிவில் 646 வீடுகளும் கட்ட முறையே ரூ.13.49 கோடி மற்றும் ரூ. 13.32 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

### 4.5 நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம்

2002-2003 ஆம் நிதி ஆண்டில் 11,618 நகர்ப்புற பயனீட்டாளர்களுக்கு புதிய வீடுகள் கட்ட ரூ.212.83 கோடி கடன் வழங்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கிய ஆண்டு முதல் இதுவரை நகர்ப்புற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் 2,97,596 வீடுகள் கட்ட ரூ.2779.02 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

[2003 மே 8

**4.6 வீடுகள் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கம்**

பழைய வீடுகளைப் புதுப்பிக்கவும் மற்றும் விரிவாக்கம் செய்யவும், ஹட்கோ நிறுவன நிதியுதவியுடன் 1998-99 ஆம் ஆண்டு முதல் ஒரு வீட்டிற்கு அதிகபட்சமாக ரூ.1,00,000 வீதம் கடனுதவி வழங்கப்படுகிறது. இந்த முன்னோடித் திட்டத்தின் மூலம் 2002-2003 ஆம் நிதியாண்டில் 282 வீடுகளைப் புதுப்பித்து விரிவாக்கம் செய்ய ரூ.2.48 கோடி கடன் வழங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தில் 58,948 வீடுகளைப் புதுப்பிக்கவும் விரிவாக்கம் செய்யவும் மொத்தம் ரூ.50.18 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.7 அடமானக் கடன்**

2002-2003 நிதியாண்டில் 636 வீடுகளின்பேரில் ரூ.14.98 கோடி அடமானக் கடனாக பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இதுவரை நகர கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் மொத்தம் 6,675 வீடுகளுக்கு ரூ.157.47 கோடி அடமானக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**4.8 "வாம்பே" திட்டம் (வால்மீகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜனா)**

இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் நிதியாண்டில் 31-03-2003 வரை 2,342 வீடுகளுக்கு ரூ.5.83 கோடி பயனீட்டாளர்களுக்கு வீடுகள் கட்ட கடன் வழங்கப்பட்டுள்ளது.

**4.9 2003-2004 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள்**

வீட்டுவசதித் தேவையில் ஒரு பெரும் பகுதியினை கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் ஈடுசெய்யும்பொருட்டு 2003-2004 ஆம் ஆண்டில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் மூலம் புதிய வீடுகள் கட்டுவதற்கு ரூ.210 கோடியளவிற்கு நிதியுதவி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண் | திட்ட விவரம் | அலகுகள் | ரூபாய் (கோடியில்) |
|---|---|---|---|
| 1 | நகர்ப்புற வீட்டுவசதித் திட்டம் | 12,000 | 200.00 |
| 2 | (வாம்பே) வால்மீகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜனா திட்டம் | 2,250 | 10.00 |
| | மொத்தம் .. .. | 14,250 | 210.00 |



2003 மே 8]

1. நகர்ப்புற வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் ஆண்டில் 12,000 வீடுகள் கட்ட ரூ.200 கோடி கடனுதவி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2. நகர்ப்புறங்களில் குடிசைப்பகுதியில் வசிக்கின்ற, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவு மக்களுக்கு வீட்டுவசதி அளிக்கும் நோக்கத்தில் வால்மீகி அம்பேத்கார் ஆவாஸ் யோஜனா (வாம்பே) என்னும் புதிய திட்டத்தினை மத்திய அரசு அறிவித்துள்ளது. இதன்படி தமிழகத்தின் பல்வேறு நகரங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது. இத்திட்டத்தின்படி சென்னை பெருநகரத்திற்கு ஒரு வீட்டிற்கு ரூ.60,000 எனவும் ஏனைய நகர்ப்புறங்களில் ரூ.40,000 எனவும் கடன் மற்றும் மானியமாக வழங்கப்படும். இத்திட்டத்தின்கீழ் மொத்தம் ரூ.10 கோடி வழங்கப்படவுள்ளது. இதில் மத்திய அரசின் மானியமாக ரூ.5 கோடியும் தமிழக அரசுக் கடன் ஹட்கோ மூலமாக ரூ.4 கோடியும், உறுப்பினர்களின் பங்களிப்பாக ரூ.1 கோடியும் இத்திட்டத்தில் பயன்படுத்தி மொத்தம் 2,250 வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

**4.10 ஆய்வு**

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் செயல்பாடுகள் துறை அலுவலரால் முறைப்படி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. 1,033 சங்கங்களையும் கண்காணிக்கும்பொருட்டு, ஒவ்வொரு மேற்பார்வை அலுவலராலும் ஆண்டுதோறும் 24 சங்கங்களில் ஆய்வுகளும் மேலும் 60 திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த ஆய்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட கடுமையான முறைகேடுகளின்பேரில் சட்டபூர்வ விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**4.11 விசாரணை**

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் நடைபெற்ற கடுமையான நிதி முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 81-ன்கீழ் சட்டபூர்வ விசாரணைக்கு ஆணையிடப்பட்டு 24 சங்கங்களில் விசாரணை நடைபெற்று வருகிறது.

[2003 மே 8

### 4.12 குற்ற வழக்கு

தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களில் சட்டப்பிரிவு 81-ன்கீழ் சட்டபூர்வ விசாரணை முடிக்கப்பட்டு சுமார் ரூ.376.02 இலட்சம் நிதி முறைகேட்டில் சம்பந்தப்பட்ட 32 சங்கங்களில் குற்றமுறு செயல்கள் புரிந்த 128 நபர்கள்மீது குற்ற வழக்குத் தொடர அனுமதி அளிக்கப்பட்டு வணிகவியல் குற்றப் புலனாய்வுப் பிரிவில் வழக்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

### 4.13 லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறை வழக்குகள்

முறைகேடுகள் நடைபெற்ற கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் ஊழல் சம்பந்தமான குற்றச்சாட்டுகளை விசாரணை செய்ய லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்ட 11 சங்கங்களில் தற்போது 4 சங்கங்களின் விசாரணை முடிக்கப்பட்டு வணிகவியல் மற்றும் குற்றப் புலனாய்வுத் துறை பிரிவின் விசாரணைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 7 சங்கங்களில் விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இது தவிர தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தில் 31-8-1998 முதல் 25-5-2001 வரை நடைபெற்ற நிதி முறைகேடுகள் குறித்த விசாரணையும் அரசின் வணிகவியல் குற்றப் புலனாய்வுத் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 4.14 தண்டத் தீர்வை

வீட்டுவசதிச் சங்கங்களில் ஏற்பட்ட நிதி இழப்பை வசூல் செய்வதற்கு 95 சங்கங்களில் சுமார் ரூ.641.49 இலட்சம் வசூல் செய்வதற்கு 302 நபர்கள்மீது சட்டப் பிரிவு 87-ன்கீழ் தண்டத் தீர்வை நடவடிக்கை தொடரப்பட்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

### 4.15 மழைநீர் சேகரிப்புத் திட்டம்

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களில் கடன் பெற்று கட்டப்படும் வீடுகளில் மழைநீர் சேகரிப்புத் தொட்டிகளை கண்டிப்பாக நிறுவ, உரிய அறிவுரைகள் அனைத்து அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அரசு அலுவலகங்களுக்கு இத்தகைய மழைநீர் சேகரிப்புத் திட்டத்தினை செயல்படுத்துமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.



2003 மே 8]

### 4.16 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம் (பகுதி-II திட்டம்)

கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் பதிவாளர் அவர்களின் அலுவலகத்தின் பணிகளை நீண்ட கால அளவில் ஒழுங்குபடுத்தவும், கணினிமயமாக்கவும் 2003-2004 ஆம் ஆண்டில், பகுதி இரண்டு திட்டத்தின் கீழ் ரூபாய் 1.00 இலட்சம் செலவில் இரண்டு கணினிகள் வாங்கப்படும். மேலும் இந்நிதியாண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் துணைப் பதிவாளர் (வீட்டுவசதி) அலுவலகம் கோயம்புத்தூர், தஞ்சாவூர், விருதுநகர் ஆகிய மூன்று மண்டல அலுவலகங்களுக்கு புதிதாக தொலைபேசி இணைப்புகள் ரூ.1.20 இலட்சம் செலவில் செய்து தரப்படும்.

### 5. அரசு அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டம்

5.1 அரசு அலுவலர்களுக்கு வீடுகட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் கீழே குறிப்பிட்டுள்ள வீட்டுவசதி அமைப்பு இனங்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கப்படுகிறது:—

(1) வீட்டுமனை வாங்கி அதில் வீடு கட்டுதல்

(2) புதிதாக வீடு கட்டுதல்

(3) தனியாரால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்

(4) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடிக் குடியிருப்பு/வீடு வாங்குதல்

(5) தற்போதுள்ள வீட்டை விரிவாக்குதல்

(6) தற்போதுள்ள வீட்டை மேம்படுத்துதல்

5.2 இத்திட்டத்தின்கீழ் வீடுகட்ட முன்பணம் மாநில அரசு அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.6.00 இலட்சமும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு உயர்ந்தபட்சமாக ரூ.7.50 இலட்சமும் வழங்கப்படுகிறது. அதேபோன்று தற்போது வீட்டை விரிவாக்க/ மேம்படுத்த முன்பணத் தொகை ரூ.3 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.

5.3 2002-2003 ஆம் ஆண்டில் வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்திற்கு ரூ.103.00 கோடி ஒதுக்கப்பட்டது.

இத்தொகை அரசு ஊழியர்களுக்கு பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட்டது:—

| அரசு அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் | வரவு-செலவுத் திட்டத்தில் (ரூபாய் கோடியில்) | திருத்தி அமைக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தில் (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| 1 இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள். | 2.00 | — |
| 2 தலைமைச் செயலக அலுவலர்கள் | 7.50 | 1.00 |
| 3. பிற அரசு ஊழியர்கள் | 82.50 | — |
| 4. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள் | 10.00 | — |
| மொத்தம் .. | 102.00 | 1.00 |

**5.4** 2003-2004 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தில் அரசு ஊழியர்கள் மற்றும் இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களுக்கு வீடு கட்ட முன்பணம் வழங்கும் திட்டத்தின்கீழ் ரூ.102.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.5 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டம் (பகுதி-II திட்டம்)

இந்த நிதியாண்டில் பகுதி இரண்டு திட்டத்தின்கீழ் தலைமைச் செயலகத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் பணிகளை ஒழுங்குபடுத்தவும் கணினிமயமாக்கவும் மூன்று கணினிகள் மற்றும் அது சார்ந்த இயந்திர சாதனங்கள் ரூ.2.01 இலட்சம் செலவில் வாங்கப்படும்.

## 6. இடவசதிக் கட்டுப்பாடு

தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகை கட்டுப்பாடு) சட்டம் 1960-திருத்தப்பட்ட சட்டம் 23/1973 கீழ்க்கண்ட நோக்கங்களைக் கொண்டுள்ளது:—

| | |
|---|---|
| 1 இடவசதிக் கட்டுப்பாடு | வீடுகள் வாடகைக்கு விடுவதை சீர் செய்வது, முறைப்படுத்துவது. |
| 2 வாடகைக் கட்டுப்பாடு | வாடகைகள் கட்டுப்படுத்துவது. |
| 3 வெளியேற்றுகைக் கட்டுப்பாடு | முறையற்ற வெளியேற்றங்களைத் தடுப்பது. |





***6.1*** இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி (சென்னையைப் பொறுத்தவரை சென்னை மாவட்ட ஆட்சியாளர்) இடவசதி கட்டுப்பாட்டுக்கு பொறுப்பானவராவார். வீடுகளை வாடகைக்கு விடுவதற்கான சட்ட வழிவகைகளைக் கவனிப்பதற்கு இடவசதி கட்டுப்பாடு அதிகாரி அவர்கள் மேற்படி சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலராவார். மற்ற மாவட்டங்களில் கோட்ட வருவாய் அலுவலர் இப்பணியை கவனிக்கிறார். மேலும், மேற்படி தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் 1960 ஓர் ஒருங்கியல் சட்டம் என்பதால் எந்தவித திருத்தமும் மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட வேண்டும்.

அரசு கட்டுப்பாட்டில் உள்ள வீடுகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியாளர்/கோட்ட வருவாய் அலுவலர் சட்டபூர்வமான வாடகைதாரர் என்பதால் வீட்டிற்கான வாடகை செலுத்துவது, பராமரிக்க வேண்டியது ஆகிய பொறுப்புகள் அவரையே சார்ந்ததாகும்.

பொதுப் பணித் துறையின் கணக்கீட்டு முறைப்படி கணக்கிடப்படும் வாடகை மிகவும் அதிகமாக உள்ள காரணத்தால் கடந்த 6 வருடங்களாக சென்னை மாநகரில் எந்தக் கட்டடங்களும் அரசு கட்டுபபாட்டில் கொண்டுவரப்படவில்லை. தற்போதைய நில மதிப்பீடு பழைய மற்றும் அடிப்படை வசதிகளற்ற கட்டடங்களுக்கும் வாடகை மதிப்பீட்டை உயர்த்திக் காட்டுகிறது. ஆதலால் நிதிநிலை அடிப்படையில் எந்த ஒரு கட்டடத்தையும் அரசு கட்டுப்பாட்டில் சட்டப்பிரிவு 3(3)-ன்கீழ் கொண்டுவருவது நன்மை பயக்கக்கூடியதல்ல. ஏனென்றால் யாரும் அந்தக் கட்டடத்திற்கு குடிவர விரும்பாத நிலையில் அரசு அதற்கான வாடகையைச் செலுத்த வேண்டியுள்ளது. சட்டபூர்வமான வாடகைதாரர் என்ற முறையில் அரசு கட்டுப்பாட்டிலுள்ள கட்டடத்தை பராமரிக்கும் பொறுப்பு அரசையே சார்ந்ததாகும்.

கட்டடங்கள், பிரிவு 3-ன்கீழ் அரசு கட்டுப்பாட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டு, அரசு ஊழியர்களுக்கு குடியிருப்பு

நோக்கத்திற்கும், அரசு அலுவலகங்களுக்கு குடியிருப்பு அல்லாத நோக்கத்திற்கும் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கட்டடங்கள் எடுத்துக் கொள்ளப்படுவது சட்டபூர்வமான அதிகாரத்தின்கீழும், வீடுகள் ஒதுக்கீடு செய்யப்படுவது அரசு அவ்வப்போது வழங்கும் நெறி முறைகளின்படியும் செயலாக்கப்படுகிறது.

முதன் முதலில் 1949-ல் இந்தச் சட்டம் அரசு ஊழியர்களுக்கு வீடுகள் ஒதுக்கீடு செய்யும் ஒரு வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது. தற்போது அரசு ஊழியர்களின் இடவசதிக்கான தேவைகளைக் கவனிக்க வீட்டுவசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மற்றும் வீடு கட்ட முன்பணம் வழங்குதல் போன்ற வசதிகள் உள்ளன. தற்போது வெளியேற்றப்பட்டோர்/மாற்றலுக்குரியவர்/ புதிதாக திருமணம் ஆனவர் மற்றும் அரசு விருப்புரிமை ஆகிய பிரிவின்கீழ் வரும் நபர்கள் தங்கள் பெயர்களை இந்த அலுவலகத்தில் பதிவு செய்துள்ளனர்.

தற்போது சென்னையில் மட்டும் அரசுக் கட்டுப்பாட்டில் 98 கட்டடங்கள் உள்ளன. கோயம்புத்தூரில் 26 வீடுகளும் மதுரையில் ஒரு வீடும் உள்ளன. மற்ற மாவட்டங்களில் வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின்கீழ் வீடுகள் இல்லை. இந்த வீடுகள் விடுவிக்கப்பட்டு உரிமையாளர்கள் வசம் ஒப்படைக்கப்படும் வரை, அரசே இந்த வீடுகளின் குடியிருப்புதாரர்கள் ஆவார்கள். அரசுக் கட்டுப்பாட்டிலுள்ள வீடுகள் சம்பந்தப்பட்ட 71 வழக்குகள் பல்வேறு நீதிமன்றங்களில் நிலுவையிலுள்ளன.

தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம். சட்டம் சம்பந்தமுடைய அரசின் கொள்கை விவரம் என்பதால், இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு சட்டப்பிரிவு 29-ன் கீழும் பொறுப்புகள் உள்ளன. தனிப்பட்ட குடியிருப்புதாரர்கள் சம்பந்தப்பட்ட சட்டப் பிரிவு 29-ன்கீழ் வரும் வழக்குகளை இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரி அவர்கள் விசாரிக்க வேண்டும்.

தற்போது தனிப்பட்ட குடியிருப்பாளர், அந்த வீட்டின் உரிமையாளர் இடையே பிரச்சினை இருக்கும்பட்சத்தில் அந்த வீட்டிற்கான வாடகை வசூலிக்கும் அதிகாரியாக நீதிமன்ற அறிவுரைப்படி அரசு இடவசதிக் கட்டுப்பாடு அதிகாரியான சென்னை மாவட்டாட்சியரை நியமித்துள்ளது.





**6.2** குடியிருப்பவர்களும், வீட்டின் உரிமையாளர்களும் எதிர் நோக்கும் சில நடைமுறை இடர்ப்பாடுகளை கருத்தில்கொண்டு, தற்போதுள்ள சட்டத்தில் விரிவான திருத்தங்களைச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏற்கெனவே அரசின் ஆய்வில் உள்ளது. தற்போது சட்டத் துறையிலிருந்து பெறப்பட்ட தமிழ்நாடு சட்ட ஆணையத்தின் வாடகைக் கட்டுப்பாடுச் சட்டத்தின் மீதான தமது டிசம்பர் 2001 அறிக்கையில் உள்ள பரிந்துரைகளின் அடிப்படையிலும் தொடர்ந்து ஆய்வு செய்து தக்க சட்டத் திருத்தம் விரைவில் வெளியிடப்படும்.

**7. நகர்-ஊரமைப்பு இயக்கம்**

**7.1.** நகர்ப்புறத் திட்டமிடல் என்பது சமூகத்தின் செயல்பாடு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவற்றை ஆராய்ந்து முறைப்படுத்தி, அதற்குத் தக்கதொரு தீர்வைத் தருகின்ற ஓர் ஒருங்கிணைந்த கோட்பாடாகும். மேலும், சமுதாய மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடைவதற்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கிட உதவும் ஒரு செயலாகவும் இது கருதப்படுகிறது. நகர்ப்புறத் திட்டமிடல் என்பது சீரிய வாழ்க்கைக்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதோடு சம காலத்து நகர்மயமாதலின் பிரச்சினைகளை எதிர்கொண்டு அதில் ஏற்படும் குறைபாடுகளையும் களைவதாக உள்ளது. நகர்மயமாதல் என்பது வளர்ச்சியின் ஓர் அளவுகோலாகும். வெகு வேகமாக நகர்ப்புறமாகி வரும் மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகத் திகழ்கிறது. நகர மையங்களில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, நகர வாழ்க்கையின் மேம்பாட்டினை நிலைநிறுத்திக்கொள்ள மேம்படுத்தப்பட்ட கட்டமைப்பு வசதிகள் தேவைப்படுகின்றன.

1931-லிருந்து 2001 வரையிலான கால அளவில், இம்மாநிலத்தின் நகர்ப்புற மக்கள்தொகை 18 விழுக்காட்டிலிருந்து 43.86 விழுக்காடாக அதிகரித்துள்ளது. 1991 ஆம் ஆண்டு முதல் 2001 வரையிலான பத்தாண்டு காலத்தில் நகர்ப்புற மக்கள்தொகை பெருக்கம் 0.36 விழுக்காட்டிலிருந்து 2.84 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கின்படி தமிழ்நாட்டின் மக்கள்தொகை 6.21 கோடி ஆகும். இதில் 43.86 விழுக்காடு அதாவது 2.72 கோடி மக்கள் 832 நகர்ப்புற மையங்களில் வாழ்கின்றனர். 1991-ல் நகர்ப்புற மையங்களின் எண்ணிக்கை 469 ஆக இருந்தது. இவை 2001-ல் 832 ஆக அதிரிகரித்துள்ளது.

[2003 மே 8

தமிழ்நாடு-நகர்ப்புற மக்கள்தொகை வளர்ச்சி

| | ஆண்டு | எண்ணிக்கை | மக்கள் தொகை | விழுக்காடு |
|---|---|---|---|---|
| மாநிலத்தின் மொத்த மக்கள் தொகை | 2001 | | 6.21 கோடி | |
| நகர்ப்புற மையங்கள் | 1991 | 469 | | |
| | 2001 | 832 | 2.72 கோடி | 43.86 |
| மொத்த நகர்ப்புற மக்கள் தொகை | 1991 | | | 18.00 |
| | 2001 | | | 43.86 |
| நகர்ப்புற மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் | 1991 | | | 0.36 |
| | 2001 | | | 2.84 |
| நகர்ப்புற மக்கள் தொகைப் பங்கீடு (6 மாநகராட்சிகள்) 102 | 2001 | | 79.13 இலட்சம் | 29.05 |
| நகராட்சிகள் மற்றும் இரு கண்டோன்மென்டுகள் 611 | 2001 | | 82.46 இலட்சம் | 30.27 |
| பேரூராட்சிகள் | 2001 | | 95.75 இலட்சம் | 35.15 |



2003 மே 8]

| | | | |
|---|---|---|---|
| 111 மக்கள் தொகை கணக்கெடுப்பு நகரங்கள் | 2001 | 15.06 இலட்சம் | 5.53 |

நகர்ப்புற வளர்ச்சிக்கான முதலீட்டில், சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்குரிய முதலீட்டையும், பெரிய நகரங்களே பெறக்கூடிய நிலை ஏற்பட்டு அதன் காரணமாக கிராமப்புறத்திலிருந்து மக்கள் அதிக அளவில் நகர்ப்புறப் பகுதிகளுக்குக் குடிபெயர்ந்து விட்டனர் என்று தேசிய நகர்மயமாக்கல் ஆணையம் தனது ஆய்வில் தெரிவித்துள்ளது. இதற்கான தீர்வாக, முதலீடு செய்யத்தக்க நகரங்கள் எவை எவை என முன்னுரிமை அடிப்படையில் தீர்மானிப்பதும், அதன்படி நகர்ப்புற வளர்ச்சிக்கான உரிய செயல் திட்டத்தை உருவாக்குவதும் எதிர்காலத்தில் நகர்ப்புற வளர்ச்சியை சிறப்பான முறையில் செயல்படுத்த உதவும்.

**7.2. நகர்ப்புற வளர்ச்சிக்கான செயல் திட்டம்**

சமச்சீரான வளர்ச்சியை அடைவதற்கு, சிறிய மற்றும் நடுத்தர நகரங்களை வலுவூட்டுவதன் மூலம் பொருளாதார மற்றும் நிலப்பயன்பாடு திட்டங்களை ஒருங்கிணைக்க வேண்டும் என்று இம்மாநிலத்திற்கான வரைவு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இச்செயல் திட்டத்தின் நோக்கமானது:—

(அ) போக்குவரத்துக் கட்டமைப்பில் உள்ள விடுபட்ட இணைப்புகளைக் கண்டறிதல் மற்றும் மாநிலம் முழுமையிலும் சமச்சீரான வளர்ச்சிக்கு வழி வகுத்தல்;

(ஆ) குறு நகரங்களைக் கொண்ட வட்டங்களைக் கண்டறிதல்; வட்டங்களில் உள்ள நகரக் குடியிருப்புகளை நகர வளர்ச்சி மையங்களாக மேம்படுத்துதல்; இதன் மூலம் நகர வளர்ச்சி மையங்களைச் சுற்றியுள்ள கிராம மக்களுக்கு நகர்ப்புற வசதிகள் கிடைக்குமாறு செய்தல்.

மேற்கண்ட நோக்கங்களைக் கருத்தில் கொண்டு, நகர் ஊரமைப்புத் துறை பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு, அவற்றின் மூலம் மாநிலத்தில் உள்ள நகர மையங்களை மேம்படுத்த வழிவகைகளைக் கண்டறிகிறது. அவற்றோடு, பெரிய நகர்ப்புற மையங்களுக்கான பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களைத் தயாரித்து, நகரங்களின் வளர்ச்சியை முறைப்படுத்துகிறது.

### 7.3. முக்கிய கோட்பாடுகள்

நகர் ஊரமைப்புத் துறைக்கு, நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ஐ அமல்படுத்தும் பொறுப்பு தாப்பட்டுள்ளது. சட்டரீதியான திட்டங்களுடன் இதா திட்டங்களைத் தயாரிப்பதிலும், அவற்றைச் செயல்படுத்துவதிலும் திட்டக் குழுமங்களுக்கு உதவுதல்; அதன் மூலம் முறையான வளர்ச்சியை அளித்து, மக்களது குடியிருப்புகளில் தூய்மையான மற்றும் ஆரோக்கியமான சுற்றுப்புறச் சூழலை உறுதிப்படுத்துதல் ஆகியவை இத்துறையின் பணிகளாகும். நகர் ஊரமைப்புச் சட்டத்தினை செயல்படுத்துவது இதன் முனைப்பான பணியாக இருப்பினும், தனியார் நிலங்களில் தொழிற்சாலை, குடியிருபபு மற்றும் இதா நோக்கங்களுக்கான பயன்பாட்டை முறைப்படுத்துவதும், கட்டட விதிகள் மூலமாக கட்டடப் பணிகளை முறைப்படுத்துவதும் இத்துறையின் செயல்பாடுகளாக உள்ளன.

மண்டலத் திட்டங்கள், முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள், விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் ஏனைய சிறப்புத் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பது நகர் ஊரமைப்புச் சட்டத்தின் நோக்கமாக உள்ளது.

### 7.4. வளர்ச்சித் திட்டங்கள்

#### 7.4.1. மண்டலத் திட்டங்கள்

குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு மண்டலத் திட்டங்கள் முனைப்பான கருவிகளாக உள்ளன. கீழ்க்காணும் நோக்குடன் மண்டலத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன:—

(அ) வளர்ச்சி மையங்களைக் கண்டறிதல்

(ஆ) போக்குவாத்து மற்றும் தகவல் தொடர்பு கட்டமைப்பின் மேம்பாடு

(இ) இயற்கை வளம் மற்றும் இயற்கைக் காட்சி உள்ள பகுதிகளின் எல்லைகளை வரையறுத்து, அவற்றைப் பாதுகாத்து வளர்ச்சியடையச் செய்தல்

(ஈ) தொல்பொருள் மற்றும் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த, இயற்கை எழில்மிக்க கட்டடங்கள் மற்றும் அவை அமைந்துள்ள பகுதிகளின் எல்லைகளை வரையறுத்தல்





நகர் ஊரமைப்புத் துறை, தற்போது சென்னை பெருநகர்ப் பகுதிக்கு அண்மையில் உள்ள காஞ்சிபுரம் மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களின் மண்டலத் திட்டங்களைத் தயாரிக்கும் பணியை முன்னோடித் திட்டமாக எடுத்துக்கொண்டுள்ளது.

#### 7.4.2. முழுமைத் திட்டங்கள்

எதிர் வரும் பத்தாண்டுகளில் அதிகரிக்கும் மக்கள்தொகைக்கேற்ப, குடியிருப்பு மற்றும் ஏனைய பயன்பாடுகளுக்குச் சீரான முறையில் நிலத்தைப் பகிர்தல் முழுமைத் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். தமிழ்நாடு அரசு இதுவரை 108 முழுமைத் திட்டங்களுக்கும், ஆறு புதுநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கும் அனுமதி அளித்துள்ளது. ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள முழுமைத் திட்டங்கள், தற்போது நிகழ்ந்துள்ள வளர்ச்சிகளுக்கு ஏற்பவும், அரசின் கொள்கைகளுக்கேற்பவும் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் மதுராந்தகம், வேலூர், ஈரோடு, இராசிபுரம், மதுரை, கோயம்பத்தூர், பொள்ளாச்சி, திருவாரூர், பரமக்குடி மற்றும் கோவில்பட்டி ஆகிய பத்து நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்யும் பணி மேற்கொள்ளப்பட்டது.

2003-2004 ஆம் ஆண்டில் திருவள்ளூர், குடியாத்தம், கரூர், திருச்சிராப்பள்ளி, திருபுவனம், உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு நகரங்களுக்கான முழுமைத் திட்டங்களை மறு ஆய்வு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. பெருந்துறை மற்றும் சேலம் இரும்பாலை நகர் ஆகியவற்றின் புதுநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு அரசின் புதிய இணக்கம் பெறவும், குறிச்சி புதுநகர் வளர்ச்சித் திட்டத்தினை மறு ஆய்வு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### 7.4.3. விரிவு அபிவிருத்தித் திட்டங்கள்

பல்வேறு வகையான தேவைகளுக்கு நில ஒதுக்கீடு செய்தல், சாலைகள் மற்றும் கட்டடங்களை முறைப்படுத்துதல் ஆகிய நோக்கோடு விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இதுவரை நகர் ஊரமைப்புத் துறையால் 1,625 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அவை வரைவு, இணக்கம் மற்றும் ஒப்புதல் ஆகிய பல்வேறு நிலைகளில் உள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில் 40 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கும் பணிகள்

மேற்கொள்ளப்பட்டு, அவை பல்வேறு நிலைகளில் உள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் 50 விரிவு அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.4.4. புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள்

தொழில் வளாகம் மற்றும் பாரம்பரியம் மிக்க நகரங்களான ஓசூர், மாமல்லபுரம் போன்ற தனித்தன்மை வாய்ந்த நகரங்களுக்குப் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. அரசால் அறிவிப்பு செய்யப்பட்ட பத்து புதுநகர் வளர்ச்சிப் பகுதிகளில் இதுவரை ஆறு நகரங்களுக்குப் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. 2003-2004ல் ஒரு புதுநகர் வளர்ச்சித் திட்டத்தை மறு ஆய்வு செய்யவும், இரண்டு புதுநகர் வளர்ச்சித் திட்டங்களுக்கு புதிய இணக்கம் பெறவும், ஆக மூன்று புதுநகர் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 7.4.5. இத்துறை சட்ட ரீதியான திட்டங்களைத் தயாரிப்பதோடு, சில சிறப்புத் திட்டங்களையும் தயாரித்து வருகிறது. அதன் விவரம் பின்வருமாறு:—

#### (அ) பாரம்பரியம் காக்கும் வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்தல்

தொன்மைச் சிறப்புவாய்ந்த சின்னங்களைப் பாதுகாக்கும் பொருட்டு, அறிவிப்பு செய்யப்பட்ட 38 பாரம்பரியம் மிக்க நகரங்களுக்கான வளர்ச்சித் திட்டங்களைத் தயாரித்து, அதன் மூலம் அவற்றை அழகுபடுத்தவும், வசதிகளை உருவாக்கி, கட்டுமானங்களை முறைப்படுத்தி, அந்தப் பகுதிகளைப் பாதுகாக்கவும், பராமரிக்கவும் தமிழக அரசு முடிவெடுத்துள்ளது. பாரம்பரியம் மிக்க இடங்களின் சுற்றுப்புறங்கள் எந்தவிதத்திலும் மாசுபடாமல் தவிர்த்து, அவற்றின் சுற்றுச்சூழலைப் பாதுக்காக வேண்டிய அவசியம் உள்ளது. இக் குறிக்கோளை அடையவும், பார்வையாளர்கள் மற்றும் பயணிகள் பயனடையும் வகையிலும் தொன்மைச் சிறப்புவாய்ந்த பகுதிகளிலிருந்து ஒரு கிலோ மீட்டருக்குள் வாகனங்கள் நிறுத்துவதற்கான இடங்களைத் தெரிந்தெடுத்து, அவ்வாறு தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் வாகனத்தை நிறுத்திவிட்டு, புராதனச் சின்னங்கள் அமைந்துள்ள பகுதிகளுக்கு பயணிகள் நடந்து செல்ல வழிகோலவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், பார்வையாளர்கள் வசதிக்காக உணவகம் மற்றும் கட்டணக் கழிப்பறை போன்ற வசதிகளை,



வாகனங்களை நிறுத்தும் பகுதியிலேயே அமைத்திடவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன்பொருட்டு கீழ்க்காணும் நகாங்களுக்கு, திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு நகர் ஊரமைப்புத் திட்ட நிதியிலிருந்து தலா ரூ.50.00 இலட்சம் வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது:—

| | | |
|---|---|---|
| (1) சிதம்பரம் | (5) பூம்புகார் | (8) கங்கைகொண்டசோழபுரம் |
| (2) காரைக்குடி | (6) செஞ்சி | (9) பழனி |
| (3) பேரூர் | (7) குளச்சல் | (10) இராமேஸ்வரம் |
| (4) வேளாங்கன்னி | | (11) நாகூர் |

இந்த நிதியாண்டில் மேலும் அறிவிக்கப்பட்ட ஐந்து பாரம்பரியம்மிக்க நகரங்களுக்கு வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.

#### (ஆ) மிகக் குறைந்த நகர்ப்புற வளர்ச்சி அடைந்த வட்டங்களுக்கான திட்டங்கள்

குறைந்த நகர்ப்புற வளர்ச்சி அடைந்த வட்டங்களில் உள்ள நடுத்தர நகரங்களை மேம்படுத்த கலந்தாய்வாளர்கள் உதவியுடன் இத்துறை ஆய்வு மேற்கொண்டுள்ளது. இப்பணி 45 வட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவற்றில் அரூர், பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய பகுதிகள் நகர் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ் திட்டப்பகுதிகளாக அறிவிக்கப்பட உள்ளன. அதன் மூலம் இப்பகுதிகள் துரிதமான நகர்மயமாதல் எனும் இலக்கை நோக்கி வளர்ச்சி அடைய முடியும்.

#### (இ) போக்குவரத்து செயல்பாடு மற்றும் வேளாண்மைத் திட்டங்கள்

நகர்ப்புறங்களில் போக்குவரத்துப் பிரச்சினைகள் உள்ள பகுதிகளைக் கண்டறிந்து, அதற்குத் தீர்வு காணும்பொருட்டு, இத்துறை ஐந்து மாநகராட்சிகளில் ஒருங்கிணைந்த போக்குவரத்து என்பது பற்றிய ஆய்வினை மேற்கொண்டு உள்ளது. மேலும், 58 சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கு போக்குவரத்து செயல்பாடு மற்றும் நிர்வாகத் திட்டம் பற்றிய ஆய்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி ஆய்வுகளில் குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்கள் போக்குவரத்து நிர்வாக மேம்பாட்டிற்காகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. குறுகிய காலப் பணித் திட்டங்கள் ஏற்கெனவே பெரும்பாலான நகரங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளன. நீண்டகாலத் திட்டங்களை, முழுமைத்

திட்டம் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களில் உரிய இடத்தில் சேர்த்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 7.4.6. நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கான புவியியல் தகவல் முறை

வேகமான மக்கள்தொகைப் பெருக்கம் மற்றும் விரைவான நகர்ப்புற வளர்ச்சி அடைந்து வரும் இன்றைய காலகட்டத்தில், நடைமுறை வழக்கப்படி பல்வேறு அளவிலான வரைபடங்கள் தயாரிப்பதற்கு அதிக அளவில் காலமும் மற்றும் மனித வளமும் தேவைப்படுவதோடு அதிக செலவினமும் ஏற்படுகிறது. நவீன முறையான புவியியல் தகவல் முறையைப் பயன்படுத்தி இத்துறையில் நகர்ப்புற வரைபடங்கள் மற்றும் திட்டச் செயல்பாடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. திண்டிவனம், இராஜபாளையம் மற்றும் நாகப்பட்டினம் போன்ற நகரங்களுக்கு ஏற்கெனவே புவியியல் தகவல் முறையில் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நகரங்களுக்குக் கூடுதலான புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. இத்துறையில் உள்ள கணிப்பொறிகளைப் பயன்படுத்தி சாத்தூர், திருவண்ணாமலை மற்றும் இராணிப்பேட்டை ஆகிய நகரங்களுக்கு புவியியல் தகவல் முறையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டிலும் புவியியல் தகவல் முறையில் அடிப்படைப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கும் பணி தொடர்ந்து நடைபெறும்.

### 7.4.7. முழுமைத் திட்டங்கள், புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் விரிவு அபிவிருத்தித் திட்டங்களைச் செயல்படுத்துதல்

முழுமைத் திட்டம், விரிவு அபிவிருத்தித் திட்டம் மற்றும் புதுநகர் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றைத் தயாரிக்க நகர் ஊரமைப்புச் சட்டத்தில் வழிவகை உள்ளது. இந்தத் திட்டங்களில் வரையறுக்கப்பட்ட உத்தேசங்கள், சம்பந்தப்பட்ட பகுதிகள் வளர்ச்சியடைய வினையூக்கிகளாக அமைகின்றன. திட்ட உத்தேசங்களைச் செயல்படுத்த அரசின் உதவி பெறப்படுகிறது. இந்தத் திட்டத்தின்படி, உள்ளாட்சிகளுக்குத் துவக்க முதலீடு உதவித் (Seed Capital Assistance) திட்டத்தின்கீழ் நிதியுதவி அளிக்கப்படுகிறது. ஏற்கெனவே பதினொன்று உள்ளாட்சிகளுக்கு திட்டங்களைச் செயல்படுத்த ரூ.123.11 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. ஆற்காடு, ஈரோடு, இராசிபுரம், கோபிச்செட்டிப்பாளையம் மற்றும் சிவகங்கை ஆகிய நகரங்களுக்கு நிதி உதவி வழங்கும் கருத்துரு பரிசீலனையில் உள்ளது.





### 7.4.8. முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களில் பூங்கா அபிவிருத்தித் திட்டம்

நெரிசல் மிகுந்த நகரப் பகுதிகளுக்குப் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்கள் சுவாச மையங்களாகவும் பொழுதுபோக்கு இடங்களாகவும் அமைகின்றன. இவற்றை உள்ளாட்சிகள் நன்கு பராமரிக்க வேண்டும். முக்கியத்துவம் வாய்ந்த, இந்த நகர அடிப்படை வசதியைச் செம்மைப்படுத்திப் பராமரிக்க அரசு மானியமாக முதல் மற்றும் இரண்டாம் நிலை நகரங்களுக்கு ஒருமுறை மட்டும் நிதி உதவி வழங்கத் திட்டங்களை உருவாக்கியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு நகரத்திற்கும் ரூ.2.50 இலட்சம் வழங்கப்பட்டு, மேற்படிச் செலவினத்தை 50:50 என்கிற விகிதத்தில் அரசு மற்றும் உள்ளாட்சி/அரசு சாரா நிறுவனங்கள் ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் ' என்ற அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்படி இதுகாறும் 14 உள்ளாட்சிகளுக்கு ரூ.17.65 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டு பயனடைந்துள்ளன. மேலும், ஆத்தூர், திண்டிவனம் மற்றும் அரக்கோணம் ஆகிய நகரங்களுக்கு இத்திட்டத்தின்கீழ் மானியம் வழங்க கருத்துருக்கள் பெறப்பட்டு துறையின் பரிசீலனையில் உள்ளன. இதர உள்ளாட்சி அமைப்புகள் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற்றிட, வலியுறுத்தப்பட்டு வருகின்றன.

### 7.5. மழைநீர் சேகரிப்புத் திட்டம்

அரசின் கொள்கைப்படி, கட்டட அனுமதி ஆணை வழங்கும் அனைத்து நேர்வுகளிலும் மழைநீர் சேகரிப்பதற்கும் நிலத்தடி நீரினை அதிகரிக்க மழைநீர்த் தொட்டிகளை அமைத்திடவும் அறிவுறுத்தி ஒரு புதிய நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. நகர் ஊரமைப்புத் துறையின் ஆலோசனைப்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், 1972, பலமாடி மற்றும் பொதுக் கட்டட விதிகள், 1973 ஆகியவற்றிற்கு மழைநீர் சேகரிப்பு சம்பந்தமாக தக்க திருத்தங்கள் செய்து நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதல் துறையிலிருந்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

### 7.6. 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள் (பகுதி-II திட்டங்கள்)

(அ) நகர் ஊரமைப்புத் துறையின் பயன்பாட்டிற்காக இந்த நிதியாண்டில் மேம்பட்ட வசதிகள் கொண்ட கணினிகள்

மற்றும் அது சார்ந்த இயந்திரச் சாதனங்கள் செங்கல்பட்டு, வேலூர், சேலம், திருச்சி, சிவகங்கை, மதுரை, கோவை மற்றும் திருநெல்வேலி ஆகிய எட்டு மண்டல அலுவலகங்களுக்கும் மற்றும் தலைமை அலுவலகத்திற்கும் ரூ.13.00 இலட்சம் செலவில் வாங்கி வழங்கப்படும்.

ஆ) மேற்கண்ட எட்டு மண்டல அலுவலகங்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் உள்ள பழைய ஒளிநகல் கருவிகளை ஒப்படைத்து, ஒன்பது புதிய ஒளிநகல் கருவிகள் ரூ.7.20 இலட்சத்தில் வழங்கப்படும்.

இ) இத்துறையின் பணி சார்ந்த வரைபடங்கள் தயாரிக்க ரூ. 4.00 இலட்சம் செலவில் புதிய வரைபட உபகரணங்கள் தலைமை அலுவலகம் மற்றும் சார்நிலை அலுவலகங்களுக்கு வழங்கப்படும்.

ஈ) நகர்-ஊரமைப்புத் துறையில் உள்ள நூலகத்தை மேம்படுத்தவும். புனரமைக்கவும் புதிய புத்தகங்கள் வாங்கவும் பகுதி-II திட்டத்தின்கீழ் ரூபாய் ஒரு இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 8. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

சென்னை மாநகரம் 8 நகராட்சிகள், 28 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்கள் அடங்கிய 1177 சதுர கி.மீ. பரப்பு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் அதிகார எல்லையில் உள்ளது. கீழ்வரும் திட்டங்களை சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது.

### 8.1. கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் காய்கறி கழிவை மூலப்பொருளாக்கி மின்சார உற்பத்தி செய்வதற்கான திட்டம்

ரூ.5 கோடி மதிப்பீட்டில் காய்கறி கழிவை மூலப் பொருளாக்கி மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஒன்று கோயம்பேடு மொத்த வணிக வளாகத்தினுள் அமைக்கப்பட உள்ளது. நாட்டிலேயே முதன் முதலாக மத்திய அரசின் மாபு சாரா எரிசக்தித் துறையின் 75 சதவிகித மானிய உதவியுடன் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும். சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்/அங்காடி நிர்வாகக் குழு அதன் பங்காக





(25 சதவிகிதம்) ரூ.1.25 கோடியை ஏற்றுக்கொள்ள உத்தேசித்துள்ளது. மத்திய அரசும் ரூ.3.75 கோடி மானியமாக வழங்கியுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ரூ.63.00 இலட்சத்தினை மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு விடுவித்துள்ளது. ஓராண்டிற்கு 17.20 இலட்சம் யூனிட்டுகள் மின்சாரம் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் இந்தத் திட்டத்தினை செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 8.2. மழைநீர் சேகரிப்புத் திட்டம்

மழைநீரைப் பாதுகாக்கும்பொருட்டு, வளர்ச்சித் திட்ட விதிகளில் அரசு ஆணை எண் 383 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, நாள் 14-09-2001-ல் திருத்தம் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை கட்டுமான உரிமையாளர்கள் மற்றும் மேம்பாட்டாளர்களிடம் பிரபலப்படுத்த வளர்ச்சித் திட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு மட்டுமல்லாமல், பலவிதமான மண்ணின் தன்மைக்கேற்பவும், வளர்ச்சிக்கேற்பவும் மேம்படுத்தப்பட்ட முறைகளை அறிமுகப்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் நடவடிக்கை எடுத்துள்ளது.

### 8.3. சென்னைப் புறநகர் பேருந்து வளாகம்–கோயம்பேடு

பெருகிவரும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் உத்தேசத்தில் ஏற்கெனவே இருந்துவரும் பாரிமுனை, பேசின்பாலம், எம்.யூசி. வளாகம் போன்ற பேருந்து நிலையங்களில் உள்ள மேலாண்மை செய்ய இயலா சூழ்நிலையை மாற்றவும் பேருந்துகளை ஜவகர்லால் நேரு சாலையில் (உள்வட்டச் சாலை) அமைந்துள்ள கோயம்பேட்டில் புறநகர் பேருந்து வளாகம் சுமார் 37 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 103 கோடி (ரூபாய் நூற்று மூன்று கோடி) செலவில் கட்டப்பட்டுள்ளது. இத்திட்டம் கடந்த 18-11-2002 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

### 8.4. திருப்போரூர் தகவல் தொழில்நுட்ப நடைக்கூடம்

தகவல் தொழில்நுட்பத் தொழிலில் சென்னை குறிப்பிடத்தக்க பங்கு வகிக்கிறது. சமீப காலங்களில் பல தகவல் தொழில்நுட்பக் கூடங்கள் சென்னையில் பெருகி வருகின்றன. குறிப்பாக பழைய மகாபலிபுரம் சாலையில் இத்தகைய தொழிற்கூடங்கள் அதிகமாக செயல்பட்டு வருகின்றன. மேலும் பல தகவல் தொழில்நுட்ப

[2003 மே 8

தொழிற்கூடங்களை ஈர்க்கும் நிலையில் சென்னை பெருநகர்ப் பகுதி உள்ளது.

இத்தகைய தொழில்கள் வளர அதற்கான உகந்த சூழ்நிலையை அமைத்துத் தர வேண்டியுள்ளது. இதைக் கவனத்தில் கொண்டு அரசின் வழிகாட்டுதலுடன் தகவல் தொழில்நுட்ப நடைக்கூடத்தினை திருப்போரூர் வரை நீட்டிக்க உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான தகவல் தொழில்நுட்ப தொழிலகங்கள் மற்றும் அவை சார்ந்த தொழிலகங்களுக்கு தேவைப்படும் அடிப்படைத் தேவைகள் மதிப்பீடு செய்யப்பட்டு அதற்கான துறை சார்ந்த திட்ட நடவடிக்கைகள் உருவாக்கப்பட்டு, தேவைப்படும் வீட்டு வசதித் திட்டம், உள்கட்டமைப்புத் திட்டம் மற்றும் சமூக வசதிகள் அமைந்திட திட்டம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இத்துறை சார்ந்த திட்ட நடவடிக்கை தயாரிப்பதன் முதற்கட்டமாக தகவல் தொழில்நுட்ப நடைக்கூடத்தினை ஒட்டிய பகுதிகளில் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 9.60 இலட்சமாக உயரும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இதைப் போன்று வேலைவாய்ப்புகள் 4 இலட்சமாகப் பெருகும். மொத்த வீட்டு வசதி தேவை 1.05 இலட்சம், 1.55 இலட்சம் மற்றும் 2.14 இலட்சமாகவும் முறையே 2003, 2006 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் அமையும் என கணிக்கப்படுகிறது.

**8.5. பூகோள தகவல் தொகுப்புப் பிரிவு**

சென்னைப் பெருநகர் பகுதிக்கான பூகோளத் தகவல் தொகுப்பு ஏற்படுத்த சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தை, ஒருங்கிணைப்பாளராக தமிழ்நாடு அரசு நியமித்துள்ளது. மேலும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தில் 45.60 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் பூகோள தகவல் தொகுப்புப் பிரிவு ஏற்படுத்த அனுமதி அளித்து 16.50 இலட்சம் ரூபாயை அரசு மானியமாக வழங்கியுள்ளது.

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், சென்னைப் பெருநகர் பகுதிக்கான பூகோள தகவல் தொகுப்பைப் பயன்படுத்தும் தமிழ்நாடு நில அளவை மற்றும் பதிவேடுகள் துறை, சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம்,



2003 மே 8]

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் சென்னை தொலைபேசி ஆகிய துறைகளை இணைத்து, சென்னைப் பெருநகர் பகுதிக்கான பூகோளத் தகவல் தொகுப்பிற்கான முதற்கட்ட வேலைகளை ஆரம்பித்துள்ளது. தொழில் நுட்ப ஆலோசனை வழங்க அண்ணா பல்கலைக்கழகத்தின் தொலைநுட்ப நிறுவனமும், சென்னை பல்கலைக்கழகத்தின் புவியியல் துறையும் இத்திட்டத்தில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளன. பூகோளத் தகவல் தொகுப்பு உருவாக்குவதற்காக ஒரு கோடி ரூபாய் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்திலிருந்து மானியமாகக் கேட்கப்பட்டுள்ளது. இந்த நிதியைக் கொண்டு அடையாறு, ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் பகுதிகளுக்கான பூகோளத் தகவல் தொகுப்பு உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், மேற்கூறிய மூன்று பகுதிகளுக்கான மூல வரைபடம் தயாரிப்பதற்காக இத்துறையில் அனுபவமுள்ள நிறுவனங்களிடமிருந்து விருப்பக் கடிதம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனை செய்து வருகிறது.

பூகோளத் தகவல் தொகுப்பு மையத்தில் புதிய கணினி மற்றும் மென்பொருட்களின் மூலம் ஆலந்தூர், அடையாறு மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய பகுதிகளுக்குத் தேவையான பூகோளத் தகவல் தொகுப்பிற்கான நில உபயோகம் மற்றும் நில உரிமையாளர்கள் பற்றிய அடிப்படைத் தகவல்களை கணினிமயமாக்குதல் மற்றும் ஒப்புதல் பெறப்பட்ட 49 விரிவான வளர்ச்சித் திட்டப் பகுதிகளுக்கான மூலாதார வரைபடத்தை கணினி மூலம் வரையும் பணி நடைபெற்று வருகிறது.

இத்திட்டத்தின் அடுத்த கட்டத்தில் சென்னை நகரின் மீதமுள்ள பகுதிகளுக்கும் மற்றும் இதர பகுதிகளுக்கும் பூகோளத் தகவல் தொகுப்பை விரிவுபடுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**8.6. (அ) திரளான துரித இரயில் போக்குவரத்து விரிவுத் திட்டம் நிலை-II**

சென்னைக் கடற்கரை முதல் திருமயிலை வரையிலான திரளான துரித இரயில் போக்குவாத்துத் திட்டமானது (நிலை-I), ஏற்கெனவே மக்கள் பயன்பாட்டில் உள்ளது. துரித இரயில் போக்குவாத்துத் திட்டம் நிலை-II திருமயிலை முதல் வேளச்சேரி வரை 11.17 கி.மீ. தூரத்திற்கு ரூ.689 கோடி திட்ட மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தினை டிசம்பர் 2003-க்குள் நிறைவேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்கான செலவில் மூன்றில் இரண்டு பங்கினை தமிழக அரசும், மூன்றில் ஒரு பங்கினை மத்திய அரசும் ஏற்றுக்கொள்கின்றன. தமிழக அரசு இதுவரை தனது பங்காக ரூ.384 கோடியை மானியமாக அளித்துள்ளது. இத்திட்டத்திற்கு இதுவரை செய்யப்பட்டுள்ள செலவு ரூ.472 கோடியாகும்.

**(ஆ) திரளான துரித இரயில் போக்குவரத்து நீட்டிப்புத் திட்டம் நிலை-II**

இந்தத் திட்டத்தை பரங்கிமலை வரை நீட்டித்து ஒரு வளைவு இரயில் பாதையொன்றினை அமைத்தால்தான் திரளான துரித இரயில் போக்குவாத்துத் திட்டத்தின் பயன்களை உணர முடியும் என்கிற உண்மையைக் கருத்திற்கொண்டு, ரூ.378 கோடி மதிப்பீட்டில் 5 கி.மீ. தூரத்திற்கு வேளச்சேரி முதல் பரங்கிமலை வரை திரளான துரித போக்குவாத்துத் திட்டத்தை நீட்டித்து அமைக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. 67 சதவிகித செலவினை தமிழக அரசும், 33 சதவிகித செலவினை மத்திய அரசும் பகிர்ந்துகொள்ளும் முறையில் இந்திய அரசுடன் கூட்டாக இத்திட்டத்தைச் செயல்படுத்த, தமிழக அரசு ஏற்கெனவே மத்திய அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

**(இ) திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம், நிலை-II-இதில் உள்ள இரயில் நிலையங்களின் மேல் பகுதியில் வணிகப் பகுதி அமைத்தல்**

சென்னைக் கடற்கரை முதல் - திருமயிலை இரயில் நிலையம் வரையிலான திரளான துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் நிலை-I-ல் 8.96 கி.மீ. தூரத்திற்கு 1995 மற்றும் 1997-ல் இரண்டு கட்டங்களாக செயல்படுத்தப்பட்டது. திரளான துரித இரயில் போக்குவாத்துத் திடடம் நிலை-II-ல் திருமயிலை நிலையத்திலிருந்து வேளச்சேரி நிலையம் வரையிலான 11.17 கி.மீ. தூரம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அட்டவணைப்படி முன்னேற்றம் அடைந்து வருகிறது. மேலும் 2003 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இரயில் போக்குவரத்து தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.





தமிழ்நாடு அரசு ஒன்பது இரயில் நிலையங்களின் கூரைப்பகுதி'' மேலே உள்ள ஆகாயப் பகுதியில் (Air Space) வணிகப்பகுதி அபிவிருத்திச் செய்ய முழு உரிமை பெற்றுள்ளது. இதன் மூலம் நகரக் கட்டட பகுதிகளின் பரப்பை அதிகரிக்கவும், திரளான துரித இரயில் போக்குவரத்தில் பயணிகள் எண்ணிக்கையை அதிகரிக்கவும் இயலும். இதன் காரணமாக, ஒன்பது நிலையங்களின் கூரைப்பகுதியின் மேல் வணிகப் பகுதி அபிவிருத்தி செய்வதற்கான வடிவமைப்புகள் தயாரிப்பதற்காக நான்கு கலந்தறிதற்குரிய நிறுவனங்கள் அமர்த்தப்பட்டுள்ளன.

இந்த கலந்தறிதற்குரிய நிறுவனங்கள், ஒன்பது நிலையங்களின் அபிவிருத்திக்கான விரிவான வரைபடங்களைச் சமர்ப்பித்தன. இரயில்வே துறையால் கட்டப்பட்டு வரும் இரயில் நிலையங்களின் கட்டுமானப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நிலையங்களின் கூரைப்பகுதிக்கு மேலே உள்ள கட்டமைப்புக்கான விரிவான வடிவுகள் மற்றும் செயல்முறை வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அலுவலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப இடங்களுக்கான தேவைகளை அறிய ஒரு கலந்தறிதற்குரிய நிறுவனம் மூலம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

## 8.7. விரிவான வளர்ச்சித் திட்டம்

விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்கு நகர் ஊரமைப்பு சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. விரிவான வளர்ச்சித் திட்டமானது ஒவ்வொரு சிறிய துண்டு நிலத்திற்கும் பகுதி வாரியான உத்தேச அபிவிருத்திக்கும், தேவையான நில உபயோகப் பயன்பாட்டை அளிப்பதாக உள்ளது. விரிவான வளர்ச்சித் திட்டம் தயாரிப்பதற்காக சென்னை நகரம் 99 திட்டப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 51 பிரிவுகளுக்கான விரிவான வளர்ச்சித் திட்டங்களுக்கு ஏற்கெனவே அரசால் ஒப்புதல் வழங்கப்பட்டது. மீதமுள்ள பகுதிகளுக்கு விரிவான வளர்ச்சித் திட்டங்கள் பல்வேறு நிலைகளாக தயாரிக்கப்பட உள்ளன.

## 8.8. வரன்முறைப்படுத்தும் திட்டம்

1-3-1999-க்கு முன், அனுமதிமீறி/அனுமதியின்றி கட்டப்பட்ட/முடிவுற்ற கட்டடங்களை வரன்முறைப்படுத்த, 'வரன்முறைப்படுத்தும் கட்டண விதிகள் (சென்னைப் பெருநகர் பகுதி) 1999' முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது. இதன்கீழ் மிகக் குறைந்த அளவு

விண்ணப்பங்களே பதிவானதால் இந்த வரன்முறைப்படுத்தும் கட்டணம் [illegible] விழுக்காடு குறைக்கப்பட்டு இத்திட்டம் 31-12-2000 வரை நீட்டிக்கப்பட்டது. வரன்முறைப்படுத்தும் திட்டம் 2000-ன்படி 31-8-2000 வரை கட்டப்பட்ட / முடிவுற்ற கட்டடங்கள் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றன. இந்த வரன்முறைப்படுத்தும் திட்டம் 2000-த்தின்கீழ் ஏறக்குறைய 16,311 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டு, மனுதாரர்கள் மொத்தத் தொகையாக ரூபாய் 98.79 கோடி செலுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் கோரிக்கைக்கு இணங்க, அரசு இத்திட்டத்தை திருத்தியமைக்க முடிவு செய்தது. அதன்படி 31-7-2001-க்குமுன் கட்டி முடிக்கப்பட்ட தனி அடுக்ககங்கள் உள்ளிட்ட கட்டடங்களுக்கு 30-11-2001 வரை விண்ணப்பிக்க இத்திட்டத்தை நீட்டித்தும் மற்றும் நடைமுறையில் உள்ள கட்டண மதிப்பீட்டில் 10 விழுக்காடு குறைத்தும் [illegible]-2001-ல் அரசு அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது. மீண்டும் அரசு [illegible]-11-2001-ல் அவசரச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்தது [illegible]-12-2001-ல் அறிவிக்கையை வெளியிட்டது. அதில் 31-12-2001 வரை மனுபதிவு செய்ய கால அவகாசம் நீட்டிக்கப்பட்டு 31-10-2001 வரை கட்டப்பட்ட கட்டடங்களையும் சேர்த்து வரன்முறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் பதிவான 12,714 விண்ணப்பங்கள் மூலம் வரன்முறைப்படுத்தும் கட்டணமாக ரூ.20.36 கோடி பெறப்பட்டது. இந்த விண்ணப்பங்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தாலும், பெருநகரில் உள்ள தொடர்புடைய மற்ற உள்ளாட்சி அமைப்புகளாலும் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

மீண்டும் அரசு 2002-ல் 31-3-2002 வரை கட்டி முடிக்கப்பட்ட அனைத்து கட்டடங்களுக்கும் 30-6-2002 வரை இறுதி நீட்டிப்பு வழங்கப்பட்டும், கட்டண விகிதத்தை பாதியாகக் குறைத்தும் வரன்முறைப்படுத்தும் திட்டம் திருத்தப்பட்டது. பொதுமக்கள் கேட்டுக்கொண்டதன்படி வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்தவும், வரைபடங்கள் சமர்ப்பிக்கவும் கடைசி நாள் 8-7-2002 வரை நீட்டிக்கப்பட்டது. 29,871 விண்ணப்பங்கள் பெறப்பட்டு விண்ணப்பதாரர்களிடமிருந்து ரூ.32.64 கோடி வசூலிக்கப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமும் அதன் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளும் இவ்விண்ணப்பங்களை ஆய்வு செய்து வருகின்றன. இத்திட்டத்தின் மூலம் மார்ச் 2003 வரை ரூ.179 கோடி வசூல் செய்யப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.



## இணைப்பு-III

*(236 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 27

## செய்தி மற்றும் விளம்பரம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

### முன்னுரை

மக்கள் தொடர்பு என்பது மக்களுக்கும் அரசுக்கும் இடையே நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்க்கும் இருவழித் தொடர்பு சாதனமாகும். ஆகவே மக்கள் தொடர்பு நடவடிக்கைகள் உண்மை, நேர்மை, மதிப்பு, சமூக பரிவர்த்தனை, நம்ப வைக்கும் ஆற்றல் மற்றும் தர்க்கம் ஆகியவற்றைச் சார்ந்து அமைகின்றன.

மக்கள் தொடர்பு என்பது ஒரு அரசுக்கு மிக முக்கியமானதாகும். அதே நேரத்தில் இது மிகவும் இன்றியமையாததாகவும் மிகுந்து வேண்டப்படுவதாகவும் உள்ளது. ஏனெனில், தாம் எப்படி ஆளப்படுகிறோம் என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அரசின் கொள்கைகளையும், திட்டங்களையும் பற்றி மக்கள் புரிந்து கொண்டுவிடுவார்களேயானால், அவற்றை அவர்களுடைய ஆதரவுடன் வேகமாக நிறைவேற்றுவது அரசுக்கு எளிதாகிவிடும்.

அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் மக்கள் தொடர்பு என்பது இரண்டு முக்கியமான செயல்பாடுகளைக் கொண்டதாகும். அவற்றுள், முதன் முதலானது அரசு சார்ந்த பல்வேறு துறைகளின் திட்டங்களையும், சாதனைகளையும் மற்றும் செய்திகளையும் வெளியிடுவதாகும்.

இரண்டாவதாக சட்டங்களைப் பற்றியும், வழிமுறைகளைப் பற்றியும் மட்டுமின்றி, குடிமக்கள் தங்கள் வாழ்க்கையில் அன்றாடம் பிரதிபலிக்கும் அனைத்து நிகழ்வுகளையும் அவர்கள் அறியச் செய்வது முக்கிய பணியாகும்.

செய்திகள் முழுமையற்றதாக இருக்கக்கூடாது. உண்மையாகவும், முழுமையாகவும் இருக்க வேண்டியது அவசியமாகும்.

[2003 மே 8

மக்கள் தொடர்புப் பணிகளை மேற்கொள்வது என்பது ஒரு தொழில்; அறிவியல் ரீதியாக கடைப்பிடிக்கப்படும் கலை. இது பொதுமக்களின் நலனை மையமாகக் கொண்டது. வருவாயை நோக்கமாகக் கொண்டது அல்ல. பொதுமக்களுக்கு நன்மை விளைவிக்கும் செயல்களை மேற்கொள்வதே சிறந்த மக்கள் தொடர்பு ஆகும்.

செய்தி மக்கள் தொடர்புத் துறையானது அனைவரும் அரசின் திட்டங்களைப் பற்றிய அடிப்படைச் செய்திகளை அறியச் செய்து, அவர்கள் வாழ்க்கைத்தரம் உயர, அரசுக்கு உதவியாகச் செயல்படுகிறது. வறுமைக்கோட்டிற்குக் கீழுள்ள மக்கள், புதுப்புதுத் திறமைகளை வளர்த்துக்கொள்ளும்போது அவர்களது வாழ்க்கைத் தரம் நிச்சயமாக உயரும். இவ்வாறு அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயர்ந்து, தேசிய நீரோட்டத்துடன் இணைந்து முன்னேற வழி செய்வதுடன் மட்டுமல்லாமல், வரவேற்கத்தக்க, நல்ல செயற்பாடுகளை அவர்கள் மேற்கொள்ளச் செய்யவும் உதவுகிறது.

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை நடப்பு 2003-2004 ஆம் ஆண்டில் அனைத்து மக்கள் தொடர்பு சாதனங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி, மக்களிடையே விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வளர்ச்சிப் பணிகளிலும், சமூக நலத் திட்டங்களிலும் அவர்களை ஈடுபடுத்திக்கொள்ள வழி செய்யும்.

மின்னணுவியல் சார்ந்த, சமகாலத்திய, தகவல் தொடர்பு சாதனங்கள், இன்றைய சமுதாயத்தின் மனோநிலைகளின்பாலும் கருத்துகளின்பாலும் ஒரு தொடர்ந்த மாற்றத்தை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன. மின்னணு சாதனங்கள், வானொலி, தொலைக்காட்சி, கேபிள் தொலைக்காட்சி, இண்டர்நெட் ஆகியவை புரட்சிகரமான மாறுதல்களை சமுதாயத்தில் ஏற்படுத்தியுள்ளன. செய்தி பத்திரிகைகள் மூலமாக மட்டுமின்றி, மின்னணு ஊடகங்களையும் பயன்படுத்தி, மக்களையும் அரசையும் நெருக்கமடையச் செய்ய செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.



2003 மே 8]

**அத்தியாயம்-1**

## செய்தியாளர் நலனும், செய்தி வெளியீட்டுப் பிரிவின் பணிகளும்

### செய்தி வெளியீட்டுப் பிரிவு

மக்கள் தொடர்புச் சாதனங்களான நாளிதழ்கள், காலமுறை வெளியீடுகள், தொலைக்காட்சிகள் மற்றும் வானொலி ஆகியவை மக்களுக்கும் அரசுக்கும் உள்ள தொடர்பை வலுப்படுத்தும் முக்கியச் சாதனங்களாக உள்ளன. தலைமைச் செயலகத்தில் உள்ள செய்தி வெளியீட்டுப் பிரிவு, அரசின் வளர்ச்சிப் பணிகளைப் பற்றிய தகவல்களைப் பரப்பி, அரசுக்கும் அவற்றிற்கும் உள்ள உறவை நிலைப்படுத்தும் முக்கிய பணியினை நிறைவேற்றும் பிரிவாகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களின் அலுவலகங்களிலிருந்து பெறப்படும் செய்தி வெளியீடுகள் மற்றும் அரசின் அனைத்துத் துறைகளில் இருந்து வெளியிடப்படும் செய்தி வெளியீடுகள், அரசின் நலத் திட்டங்கள், சாதனைகள் மற்றும் ஆக்கப் பணிகளைப் பற்றிய செய்திகள், நாளிதழ்கள், தொலைக்காட்சிகள், செய்தி நிறுவனங்கள், வானொலி மற்றும் செய்தி இணைய தளங்கள் என சுமார் 100 தகவல் தொடர்பு நிறுவனங்களுக்கு நேரிலும், நிகரி மற்றும் கணினி வழியாகவும் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செய்தியாளர் கூட்டம், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் நடத்தப்படும் செய்தியாளர் கூட்டம் ஆகியவற்றிற்குத் தேவையான ஏற்பாடுகளை இப்பிரிவு மேற்கொண்டு வருகிறது. அரசின் முக்கிய அறிவிப்புகள் மற்றும் செய்தி வெளியீடுகளை மாவட்டங்களில் உள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்து, அங்குள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்கள் வாயிலாகச் செய்திகள் வெளியாகும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், துறைச் செயலாளர்கள் கலந்துகொள்ளும் முக்கிய நிகழ்ச்சிகள், கூட்டங்கள், விழாக்கள், முக்கியப் பிரமுகர்களின் வருகை ஆகியவற்றை கறுப்பு,

வெள்ளை மற்றும் வண்ணப் புகைப்படமெடுத்து அனைத்து நாளிதழ்களுக்கும் வழங்கும் பணியுடன், தொலைக்காட்சியினர், நாளிதழ் மற்றும் சஞ்சிகைகளின் புகைப்பட கலைஞர்கள் இந்நிகழ்வுகளைப் படமெடுப்பதற்கான அனைத்து உதவிகளையும் இப்பிரிவு செய்து வருகிறது.

**செய்தியாளர்களுக்கு அரசு அங்கீகாரம்**

சென்னையிலிருந்தும் வெளி மாநிலங்களிலிருந்தும் வெளியாகும் நாளிதழ்களின் சென்னைச் செய்தியாளர்கள் மற்றும் அரசுத் துறையைச் சார்ந்த வானொலி, தொலைக்காட்சி, திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு ஆகியவற்றில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் மற்றும் தனியார் தொலைக்காட்சியினர் ஆகியோருக்கென அரசால் அமைக்கப்பட்ட செய்தியாளர் அங்கீகாரக் குழுவின் பரிந்துரைக்கேற்ப ஒவ்வொரு ஆண்டும் 'செய்தியாளர் அங்கீகார அட்டைகள்" வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் 561 பேர்களுக்கு செய்தியாளர் அங்கீகார அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

'அரசு அங்கீகார அட்டைகள்' பெற்ற பத்திரிகையாளர்களுக்கு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பயணம் செய்ய 'இலவசப் பயண அட்டை', இரயில் பயணத்தில் 50 சதவிகித கட்டணச் சலுகை, அரசு வாடகைக் குடியிருப்பு வீடுகள் ஒதுக்கீட்டில் முன்னுரிமை, வீட்டிற்குத் தொலைபேசி இணைப்புப் பெறுவதில் முன்னுரிமை ஆகிய சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

**காலமுறை வெளியீடுகளின் செய்தியாளர்களுக்கு, செய்தியாளர் அட்டை**

முக்கியப் பிரமுகர்கள் வருகை, மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் அமைச்சர் பெருமக்கள் செய்தியாளர் கூட்டம், அரசு விழாக்கள் மற்றும் அரசு நிகழ்ச்சிகளுக்குச் சென்று செய்திகள் சேகரிப்பதற்கென காலமுறை வெளியீடுகளைச் சேர்ந்த செய்தியாளர்களுக்கு, 'செய்தியாளர் அட்டைகள்' வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாண்டில் 130 செய்தியாளர்களுக்கு, செய்தியாளர் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.



**பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்**

பத்திரிகைத் துறையில் 20 ஆண்டுகளும், அதற்கு மேலும் தொடர்ச்சியாகப் பணியாற்றிய ஆசிரியர்கள், துணை ஆசிரியர்கள், செய்தியாளர்கள் ஆகியோர் பணியில் இருக்கும்போதே இயற்கை எய்தினால் அவர்களது குடும்பத்திற்கு "முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து" நிதி உதவி வழங்கும் "பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதித் திட்டம்" செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆலோசனைக்கிணங்க, 2001-2002 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் அறிவித்தபடி, மறைந்த பத்திரிகையாளரின் குடும்பம் பயன்பெறும் வகையில், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் உதவி நிதியை ரூ.50,000-லிருந்து ரூ.2 இலட்சமாக 4-9-2001 முதல் உயர்த்தப்பட்டுள்ளது.

**பத்திரிகையாளர் ஓய்வூதியம்**

பத்திரிகைத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்று, நலிந்த நிலையில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் 1986 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டது. இத்திட்டம் தொடங்கப்பட்டபோது, மாதந்தோறும் தலா ரூ.250 பத்திரிகையாளர் ஓய்வூதியமாக வழங்கப்பட்டது. பின்னர் பத்திரிகையாளர் ஓய்வூதியம் படிப்படியாக உயர்த்தப்பட்டு, மாதந்தோறும் தலா ரூ.2,000 ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வந்தது. இத்தொகையை மேலும் உயர்த்தி வழங்க வேண்டும் என்ற பத்திரிகையாளர்களின் கோரிக்கையை, அரசு பரிவுடன் ஏற்று, கடந்த 2001-2002 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததற்கிணங்க, பத்திரிகையாளர் மாத ஓய்வூதியத் தொகை தற்போது ரூ.2,000-லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. ஓய்வு பெற்று, வறுமை நிலையில் உள்ள 67 பத்திரிகையாளர்கள் தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் இம்மாத ஓய்வூதியத்தைப் பெற்று வருகிறார்கள்.

**பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம்**

பத்திரிகையாளர் ஓய்வூதியம் பெற்றுவந்த பத்திரிகையாளர் இயற்கை எய்திவிட்டால், அவரின் துணைவியாருக்கு குடும்ப ஓய்வூதியமாக மாதம் தலா ரூ.500 அவரின் வாழ்நாள் முழுவதும் வழங்கப்பட்டு வந்தது.

[2003 மே 8

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பத்திரிகையாளர் சங்கங்களின் நீண்டகால கோரிக்கையை ஏற்று, பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.500-லிருந்து ரூ.1,500 ஆக அதிக அளவில் உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்தார்கள்.

**பத்திரிகையாளர்களுக்கு சுலபத் தவணையில் அடுக்கு மாடி குடியிருப்புகள்/விடுகள்**

தமிழகத்தில் உள்ள அனைத்து உழைக்கும் பத்திரிகையாளர்களும் 'தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால்' கட்டப்படும் அடுக்கு மாடிக் குடியிருப்புகள் அல்லது வீடுகள் வாங்குவதற்கு ஏதுவாக ஒரு சிறப்புத் திட்டத்தை அரசு ஏற்கெனவே அறிமுகப்படுத்தியுள்ளது. இத்திட்டத்தை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியமும் பாரத மாநில வங்கியும் (ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா) இணைந்து செயல்படுத்துகிறது.

**புகைப்படப் பிரிவு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள், விழாக்கள், கூட்டங்கள் மற்றும் அரசால் மேற்கொள்ளப்படும் நலத் திட்டங்கள், வளர்ச்சிப் பணிகள், திட்டப் பணிகள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து உடனுக்குடன் அனைத்து நாளிதழ்களுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது. புகைப்படப் பிரிவின் பயன்பாட்டிற்காக கடந்த ஆண்டில் (2002-2003) இரண்டு புதிய டிஜிட்டல் கேமராக்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. இதனால் நாளிதழ்களுக்கு விரைவாக, தரமான வண்ணப் புகைப்படங்களை இ.மெயில் மூலம் வழங்க ஏதுவாகிறது.



2003 மே 8]

## அத்தியாயம் - 2

## நினைவகங்கள்

விடுதலைக்கு வித்திட்டவர்கள் மற்றும் சமுதாய மேம்பாட்டிற்கும், தமிழ்மொழி மேம்பாட்டிற்கும் உழைத்திட்டவர்கள் ஆகிய பெரியோர் தம் பெருமையைப் போற்றிடும் வகையில், அரசின் சார்பில் அவர்களுக்கு நினைவகங்கள் மற்றும் திருவுருவச் சிலைகள் அமைத்து சிறப்புச் செய்து வருகிறது. 37 நினைவகங்கள், 2 அரங்கங்கள், 4 நினைவுத் தூண்கள் மற்றும் ஒரு நினைவுப் பூங்கா ஆகியவை இவ்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இந்நினைவகங்கள் செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டிலும், பொதுப் பணித் துறையின் பராமரிப்பிலும் உள்ளன. இத்துறையின் கட்டுப்பாட்டில் வரும் நினைவகங்கள், அரங்கங்கள், நினைவுத் தூண்கள் மற்றும் பூங்கா ஆகியவை பின்வருமாறு:

1. பேரறிஞர் அண்ணா நினைவிடம் மற்றும்
   பேரறிஞர் அண்ணா அருங்காட்சியகம்,
   மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.

2. பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவிடம்,
   மெரினா கடற்கரை, காமராஜர் சாலை, சென்னை.

3. வள்ளுவர் கோட்டம்,
   வள்ளுவர் கோட்டம், நுங்கம்பாக்கம், சென்னை.

4. கலைவாணர் அரங்கம்,
   வாலாஜா சாலை, சென்னை.

5. இராஜாஜி மண்டபம்,
   ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
   அண்ணா சாலை, சென்னை.

5.அ. சீரணி அரங்கம், மெரினா கடற்கரை,
   காமராஜர் சாலை, சென்னை.

6. காந்தி மண்டபம்,
   சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

[2003 மே 8

7. இராஜாஜி நினைவாலயம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

8. காமராஜர் நினைவகம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

9. மொழிப்போர் தியாகிகள் மணிமண்டபம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

10. தியாகிகள் மணிமண்டபம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

11. பெரியவர் எம். பக்தவத்சலம் நினைவிடம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

12. காமராஜர் நினைவு இல்லம்,
திருமலை சாலை, தியாகராயநகர், சென்னை.

13. மகாகவி பாரதியார் நினைவு இல்லம்,
துளசிங்கப் பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

14. 'வெள்ளையனே வெளியேறு' இயக்கப் பொன்விழா
நினைவுத் தூண், காந்தி மண்டப வளாகம்,
சர்தார் வல்லபாய் பட்டேல் சாலை, கிண்டி, சென்னை.

15. சுதந்திரப் பொன்விழா நினைவுத் தூண்
(போர் நினைவுச்சின்னம் அருகில்),
காமராஜர் சாலை, சென்னை.

16. குடியரசு பொன்விழா நினைவுத் தூண்
(காந்திசிலை அருகில்), காமராஜர் சாலை, சென்னை.

17. பேரறிஞர் அண்ணா நினைவு இல்லம்,
51, சின்ன. அண்ணாதுரை தெரு,
சின்ன காஞ்சிபுரம், காஞ்சிபுரம் மாவட்டம்.

18. முத்து மண்டபம் — இலங்கையின் கடைசித்
தமிழ் மன்னர் விக்ரமசிங்க ராஜா நினைவகம்,
பாலாற்றங்கரை, வேலூர், வேலூர் மாவட்டம்.



2003 மே 8]

19. அண்ணா கலை அரங்கம்,
ஆபீஸர்ஸ் லேன், வேலூர், வேலூர் மாவட்டம்.

20. சிப்பாய்க் கலகம் நினைவுத்தூண், மக்கான் சந்திப்பு, வேலூர்,
வேலூர் மாவட்டம்.

21. இராஜாஜி இல்லம்,
தொரப்பள்ளி கிராமம், தருமபுரி மாவட்டம்.

22. பெரியார்-அண்ணா நினைவகம்,
பெரியார் தெரு, ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

23. திருப்பூர் குமரன் நினைவகம்,
திருப்பூர் குமரன் சாலை, திருப்பூர்,
கோயம்புத்தூர் மாவட்டம்.

24. பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி
மணிமண்டபம், உடுமலைப்பேட்டை,
கோயம்புத்தூர் மாவட்டம்.

25. வ.வே. சுப்பிரமணியம் நினைவகம்,
வராகனேரி அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

26. தில்லையாடி வள்ளியம்மை நினைவகம்,
தில்லையாடி கிராமம், நாகப்பட்டினம் மாவட்டம்.

27. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் நினைவு இல்லம்,
கவிஞர் இராமலிங்கம் தெரு, நாமக்கல்,
நாமக்கல் மாவட்டம்.

28. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மணிமண்டபம்,
முத்துப்பேட்டை சாலை, நாடியம்மாள்புரம்,
பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டம்.

29. கவியரசர் கண்ணதாசன் மணிமண்டபம்,
புதிய பேருந்து நிலையம், காரைக்குடி,
சிவகங்கை மாவட்டம்.

30. தவத்திரு குன்றக்குடி அடிகளார் மணிமண்டபம்,
தெற்கு ரத வீதி, குன்றக்குடி, சிவகங்கை மாவட்டம்.

31. மருதுபாண்டியர் நினைவு மண்டபம்,
சுவீடிஷ் மிஷன் மருத்துவமனை வளாகம்,
திருப்பத்தூர், சிவகங்கை மாவட்டம்.

32. தியாகி விஸ்வநாததாஸ் நினைவு மண்டபம்,
விஸ்வநாததாஸ் தெரு, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

33. தியாகசீலர் கக்கன் மணிமண்டபம்,
தும்பைப்பட்டி கிராமம், மேலூர் வட்டம், மதுரை மாவட்டம்.

34. பூலித்தேவன் நினைவு மாளிகை,
நெல்கட்டும்செவல் கிராமம், சிவகிரி வட்டம்,
திருநெல்வேலி மாவட்டம்.

35. காமராஜர் இல்லம்,
சுலோசனா தெரு, விருதுநகர், விருதுநகர் மாவட்டம்.

36. பாரதி மணிமண்டபம்,
தூத்துக்குடி சாலை, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

37. பாரதி இல்லம்,
பாரதி தெரு, எட்டயபுரம், தூத்துக்குடி மாவட்டம்.

38. வ.உ.சி. இல்லம்,
வ.உ.சி. தெரு, ஒட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம்.

39. காந்தி நினைவு மண்டபம்,
கடற்கரை சாலை, கன்னியாகுமரி,
கன்னியாகுமரி மாவட்டம்.

40. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம்,
கடற்கரை சாலை, கன்னியாகுமரி மாவட்டம்.

41. சதாவதானி செய்குத்தம்பி பாவலர் நினைவு மண்டபம்,
இடலாக்குடி, போட்டார், நாகர்கோவில்,
கன்னியாகுமரி மாவட்டம்.

42. பொதுவுடைமை வீரர் ப. ஜீவானந்தம் மணிமண்டபம்,
சர். சி.பி. ராமசாமி நினைவுப் பூங்கா,
நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.



43. வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட இடமான
கயத்தாற்றில் நினைவுப் பூங்கா, தூத்துக்குடி மாவட்டம்.

44. பெரியார் நினைவகம், வைக்கம், கோட்டயம் மாவட்டம்,
கேரள மாநிலம்.

| | | |
|---|---|---|
| மொத்த நினைவகங்கள் | - | 37 |
| அரங்கங்கள் | - | 2 |
| நினைவுத் தூண்கள் | - | 4 |
| நினைவுப் பூங்கா | - | 1 |

அரசால் அமைக்கப்பட்டுள்ள நினைவகங்களை செம்மையாகப் பராமரிக்கும் வகையில், குறிப்பிட்ட நினைவகங்களை செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு, தொடர்ந்து அவற்றைப் பொதுப் பணித் துறையின் மூலம் பராமரிக்கும் வகையிலும், நிர்வாகக் காரணங்களை முன்னிட்டும், தொடர்ந்து சிறப்பான முறையில் பராமரித்திடவும், வருவாயைப் பெருக்கிடவும், சில நினைவகங்களை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் ஒப்படைக்கும் வகையிலான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் மணிமண்டபம், சென்னை, காயிதேமில்லத் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி வளாகத்தில் காலியாக உள்ள அரசுக்குச் சொந்தமான இடத்தில் ரூ. 50 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ளது. இதன் முகப்பை மாற்றியமைக்க, இவ்வரசு கூடுதலாக ரூ. 8.69 இலட்சம் வழங்கியுள்ளது. தற்போது இம்மணிமண்டபத்தின் முகப்புப் பணிகள் முடிக்கப்பட்டு விரைவில் திறக்கப்படவுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கட்டாரங்குளத்தில் வீரன் அழகுமுத்துக்கோன் மணிமண்டபம் அமைக்க ரூ. 35 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் அவர்களுடைய நினைவாக ரூ. 75 இலட்சம் செலவில் மணிமண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மணிமண்டபம் 1,674 ச.மீட்டர்

பாப்பளவில் திருநெல்வேலி மாநகராட்சி, நகர சர்வே எண் 2407, பிளாக்-19, வார்டு எண் 10-ல் அமைத்திட அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 13-3-2003 அன்று திருநெல்வேலி மாவட்டத்திற்கான விழா பாளையங்கோட்டையில் நடைபெற்றபோது, இம்மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டினார்கள்.

நடப்பு நிதியாண்டில், கேரள மாநிலம் வைக்கத்திலுள்ள, தந்தை பெரியார் நினைவகத்தில் சிறப்புப் பராமரிப்புப் பணிகளுக்காக ரூ. 4.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள் நினைவாக, நினைவு மண்டபம் அமைப்பதற்கு இலவசமாக இட ஒதுக்கீடு செய்து, அதில் தென்னிந்திய நடிகர் சங்கம், கட்டுமானப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசாணை வழங்கப்பட்டுள்ளது. சென்னை, மயிலாப்பூர்-திருவல்லிக்கேணி வட்டம், அடையாறு ஆற்றுக்கு அருகில் ஆந்திர மகிள சபா அருகில் அமைந்துள்ள அடையாறு கிராமம் சர்வே எண் 4269/3-ன்படி உள்ள 0.65 ஏக்கர் இடம் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்களுக்கு நினைவகம் அமைக்கும்பொருட்டு விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் வட்டம், ஓமந்தூர் கிராமத்தில் சர்வே எண் 115/ஏ மற்றும் 115/பி-ல் 0.46.5 எக்டேர் நிலப்பரப்பை கையகபபடுத்திட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டு நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளி கிராமத்தில் மூதறிஞர் இராஜாஜி அவர்களுக்கும், ஈரோடு மாவட்டம், அரச்சலூர் கிராமம், ஓடாநிலையில், விடுதலைப் போராட்ட வீரர் தீரன் சின்னமலை அவர்களுக்கும், அவர்தம் நினைவாக மணிமண்டபங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.





## அத்தியாயம் - 3

## அரசு விழாக்கள்

இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ்மொழி மேன்மையைக் காக்கவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில், அவர்களது பிறந்தநாள விழாக்கள், நினைவுநாள் நிகழ்ச்சிகள் அரசினால் நடத்தப்படுகின்றன. அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலையணிவித்தும் மரியாதை செலுத்தப்படுகிறது.

கீழ்க்காணும் தலைவர்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலையணிவித்து மரியாதை செய்யப்படுகிறது:

| | | | |
|---|---|---|---|
| 1. | ஜனவரி 17 | - | முன்னாள் முதலமைச்சர் டாக்டர் எம்.ஜி.ஆர். பிறந்த நாள். |
| 2. | ஜனவரி 23 | - | நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பிறந்த நாள். |
| 3. | ஜனவரி 30 | - | மகாத்மா காந்தியடிகள் நினைவு நாள் |
| 4. | ஏப்ரல் 14 | - | டாக்டர் அம்பேத்கர் பிறந்த நாள். |
| 5. | ஏப்ரல் 27 | - | சர். பிட்டி. தியாகராயர் பிறந்த நாள். |
| 6. | ஏப்ரல் 29 | - | பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள். |
| 7. | ஜூன் 5 | - | கண்ணியத்தென்றல் காயிதேமில்லத் பிறந்த நாள். |
| 8. | ஜூன் 24 | - | கவியரசர் கண்ணதாசன பிறந்த நாள். |
| 9. | ஜூலை 15 | - | பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள். |

10. ஜூலை 17 - தியாகிகள் தினம் - தியாகி சங்கரலிங்கனார் மற்றும் தியாகி ஆர்யா என்கிற பாஷ்யம்.

11. செப்டம்பர் 5 - கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. பிறந்த நாள்.

12. செப்டம்பர் 15 - பேரறிஞர் அண்ணா பிறந்த நாள்.

13. செப்டம்பர் 17 - தந்தை பெரியார் பிறந்த நாள்.

14. செப்டம்பர் 29 - முன்னாள் மேயர் சிவராஜ் பிறந்த நாள்.

15. அக்டோபர் 2 - மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள்

16. அக்டோபர் 30 - பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள்.

17. நவம்பர் 14 - பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்த நாள்.

18. டிசம்பர் 10 - மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள்.

19. டிசம்பர் 11 - மகாகவி பாரதியார் பிறந்த நாள்.

கடந்த 2002-2003ஆம் ஆண்டில் கீழ்க்காணும் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்கள், மாவட்டங்களில் கொண்டாடப்பட்டன:—

1. தூத்துக்குடி மாவட்டம், பாஞ்சாலங்குறிச்சியில் வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த நாள் விழா மே திங்கள் 12 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

2. சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாள் விழா அக்டோபர் 2 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

3. மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்த நாள் விழா அக்டோபர் 30 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.



4. அனைத்து மாவட்டங்களிலும் அக்டோபர் 31 ஆம் நாள் மறைந்த முன்னாள் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவுகூறும் வகையில் தேசிய மறு அர்ப்பணிப்பு நாள் அனுசரிக்கப்பட்டது.

5. தருமபுரி மாவட்டம், தொரப்பள்ளியில், டிசம்பர் 10 ஆம் நாள் மூதறிஞர் இராஜாஜி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

6. தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் டிசம்பர் 11 ஆம் நாள் மகாகவி பாரதியார் பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது.

7. நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் ஆகஸ்ட் 3 ஆம் நாள் வல்வில் ஓரி விழா கொண்டாடப்பட்டது.

8. கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சதாவதானி செய்குத்தம்பி பாவலர் பிறந்த நாள் விழா ஆகஸ்ட் 10 ஆம் நாள் கொண்டாடப்பட்டது.

பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு நிறைவு விழாவினை விருதுநகரில் 15-7-2003 அன்று கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2003-2004ஆம் ஆண்டில் முக்கியத் தலைவர்களின் பிறந்த நாள் விழாக்களையும் கொண்டாடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**பல்துறை பணி விளக்க முகாம்கள்**

பல்வேறு துறைகளையும் ஒருங்கிணைத்து, அவற்றின் சார்பில் அரங்குகள் அமைத்து, அரசின் திட்டங்கள், சாதனைகளை விளக்கக்கூடிய வகையில் பல்துறை பணி விளக்க முகாம்கள் மற்றும் சிறு புகைப்படக் கண்காட்சிகள் மாவட்டங்களில் அவ்வப்போது நடத்தப்பட்டு வருகின்றன. அந்த நேரங்களில் பல்வேறு நிகழ்ச்சிகள் மூலமும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாதந்தோறும் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் கிராமங்களில் நடைபெறும் மக்கள் குறை கேட்பு தினத்தன்று, பல்துறை பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாதம் ஒன்று வீதம் ஆண்டுக்கு பன்னிரெண்டிற்கும் மேற்பட்ட பல்துறை பணி விளக்க முகாம்கள்

[2003 மே 8

நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, மேலும் கூடுதலான அளவில் முகாம்கள் சிறப்பான முறையில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு**

அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளை குறித்த தகவல்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து, பயன்பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அப்பணியினைத் தீவிரப்படுத்தி, செம்மையாகச் செயலாற்றும் வகையில் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு" அனைத்து மாவட்டங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுக் கூட்டம் மாதம் ஒருமுறை, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெற்று வருகிறது. இக்கூட்டத்தில் அரசின் திட்டங்கள் விளம்பரப்படுத்தப்பட வேண்டிய முறைகள்பற்றி விவாதிக்கப்பட்டு, விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2003 மே 8]

## அத்தியாயம் – 4

## தமிழ்நாடு அரசு திரைப்பட விருதுகள்

தமிழ் திரைப்படத் துறையை ஊக்குவிக்கும்பொருட்டு, 1968 ஆம் ஆண்டு முதல் சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு தமிழ்நாடு அரசால் திரைப்பட விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஆகியோரை தேர்வு செய்வதற்கென ஆண்டுதோறும் ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது.

தேர்வு பெறும் திரைப்படங்களுக்கு ஆண்டுதோறும் கீழ்க்கண்டவாறு விருதுகள் வழங்கப்படுகின்றன:—

1. முதல் பரிசு - ரூ. 2 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
2. இரண்டாம் பரிசு - ரூ. 1 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
3. மூன்றாம் பரிசு - ரூ. 75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு
4. சிறப்புப் பரிசு - ரூ. 75 ஆயிரம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு

பெண்களின் முன்னேற்றம் மற்றும் பெண்களைப் பற்றி உயர்வாகச் சித்தரிக்கும் திரைப்படத்திற்குச் சிறப்புப் பரிசாக ரூ. 1.25 இலட்சம் மற்றும் ஒரு நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது.

தேர்வு பெறும் சிறந்த நடிகர்கள், நடிகைகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்படுகிறது. 2000ஆம் ஆண்டிற்கான விருதுகளில் ஆண் மற்றும் பெண் 'டப்பிங்' கலைஞர்களும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**கலைத் துறை வித்தகர் விருதுகள்**

தமிழ் திரைப்படத் துறை வரலாற்றில் முத்திரை பதித்து, மக்கள் மனதில் இடம்பெற்ற அறிஞர் அண்ணா, கலைவாணர், ராஜாசாண்டோ, எம்.ஜி.ஆர்., கவிஞர் கண்ணதாசன், நடிகர் திலகம் சிவாஜி, தியாகராஜ பாகவதர் ஆகியோர் பெயர்களில் கலைத் துறை வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.

**அரசு மானியம்**

குறைந்த செலவில், சமூக நீதி கொண்ட திரைப்படங்கள் தயாரிப்பதை ஊக்குவிக்கும்பொருட்டு, இவ்வகையான படங்களுக்கு அரசு மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயல்படுத்தி வருகிறது. ஆண்டுதோறும் இத்திட்டத்தின்கீழ் படங்களைத் தேர்ந்தெடுக்க ஒரு தேர்வுக் குழு அரசால் அமைக்கப்படுகிறது. தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு படத்திற்கும் ரூ. 5 இலட்சம் மானியமாக வழங்கப்படுகிறது.

**கேளிக்கை வரி விலக்கு அளிக்கும் திட்டம்**

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களை ஊக்குவிக்கும் திட்டத்தின்கீழ், தகுதியுடைய திரைப்படங்களுக்கு, அத்திரைப்படங்கள் வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் நான்கு வாரங்களுக்கு, கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்பட்டு வருகிறது.

**திரைப்படத் துறையினருக்கு அரசின் சலுகைகள்**

1. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு தலா ரூ. 5 இலட்சம் மானியம் வழங்கப்படுகிறது.
2. குறைந்த செலவில் தயாரிக்கப்பட்ட தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு முதல் நான்கு வாரங்களுக்கு கேளிக்கை வரி விலக்கு அளிக்கப்படுகிறது.
3. சிறந்த திரைப்படங்கள், நடிகர், நடிகையர் மற்றும் தொழில் நுட்பக் கலைஞர்கள் ஆகியோருக்கு ரொக்கப் பரிசு, தங்கப் பதக்கம், நினைவுப் பரிசு ஆகியவை வழங்கப்படுகின்றன.
4. திரைப்படத் துறையில் குறிப்பிடத்தக்க அளவில் சாதனை புரிந்தவர்களுக்கு வித்தகர் விருதுகள் வழங்கப்படுகின்றன.
5. அரசுக்குச் சொந்தமான இடங்களில் படப்பிடிப்பு நடத்த ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கப்படுகின்றது.
6. திரைப்படத் துறையில் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க, மாவட்ட மற்றும் மாநில அளவில் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
7. சண்டைக் காட்சிகளில் நடிக்கும்போது சண்டைப் பயிற்சியாளர்கள் காயமுற்று இறந்தால், அவரது குடும்பத்தினருக்கு ரூ. 1 இலட்சமும், செயல்பட முடியாத அளவுக்கு ஊனமுற்றால் ரூ. 50 ஆயிரமும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.



## அத்தியாயம்-5

## திரைப்படம், வீடியோ மற்றும் கேபிள் தொலைக்காட்சி இணைப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் பெரிய தொழில்களில் திரைப்படத் தொழில் ஒன்றாகும். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் இந்தி மொழிப் படங்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன. திரைப்படத் தொழில் உள்ளாட்சி அமைப்புகளுக்கும், அரசுக்கும் வருவாய் ஈட்டித் தருகின்ற நிதி ஆதாரங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 2,053 திரையரங்குகள் இயங்கி வருகின்றன. அவற்றின் விவரங்கள் பின்வருமாறு:—

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தரத் திரையரங்குகள் | 1,414 |
| 2. | பகுதி நிரந்தரத் திரையரங்குகள் | 183 |
| 3. | நடமாடும் திரையரங்குகள் | 448 |
| 4. | திறந்தவெளித் திரையரங்குகள் | 8 |
| | மொத்தம் | 2,053 |

தமிழ்நாடு 1955 ஆம் ஆண்டு திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) சட்டம், அதன்கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு 1957 ஆம் ஆண்டுத் திரைப்படங்கள் (முறைப்படுத்தல்) விதிகளின் அடிப்படையில் வசதிகளுடன் கூடிய வலுவான கட்டடங்கள் உட்பட திரையரங்குகளின் முறையான பராமரிப்புக்கு வகை செய்கின்றன.

திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கும்பொருட்டு இவ்வரசு பின்வரும் சலுகைகளை அளித்துள்ளது:

(அ) உரிமம் வழங்கும் அலுவலர்/வணிக வரித் துறை அலுவலர்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்து திரையரங்கு உரிமதாரர்கள், கடைசி வகுப்பைத் தவிர மற்ற வகுப்புகளுக்கு விதிக்கப்படும் கட்டணத்தில் 75 சதவீதம் வரை உயர்த்தி நிர்ணயிக்க அனுமதித்துள்ளது. கடைசி வகுப்புக் கட்டணம்

மாநகரங்களில் ரூ.10-க்கு (ரூபாய் பத்து மட்டும்) மிகாமலும் மற்ற இடங்களில் ரூ.5-க்கு (ரூபாய் ஐந்து மட்டும்) மிகாமலும் இருக்க வேண்டும். மேலும், அது அடுத்த உயர் வகுப்புக் கட்டண வீதங்களைக் காட்டிலும் குறைவாக இருக்க வேண்டும். திரையரங்குகள், அனுமதிக்கப்பட்ட மொத்த இருக்கைகளில் 10 சதவீத இருக்கைகள் கடைசி வகுப்புக்கு ஒதுக்கப்பட வேண்டும்.

(ஆ) உரிமம் வழங்கும் அலுவலர் மற்றும் வணிக வரித் துறை அலுவலர்களுக்கு முன்னறிவிப்புக் கொடுத்துவிட்டு புதிய திரைப்படங்கள் திரையிடப்படும் நாளிலிருந்து இரண்டு வார காலத்திற்கு உச்சவரம்பு இன்றி கட்டண வீதங்களை நிர்ணயிக்க திரையரங்கு உரிமதாரர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள்.

திரைப்படங்கள், பொதுமக்களின் பொழுதுபோக்கு அம்சங்களில் முக்கியப் பங்கு வகிப்பதாலும், ரசிகர்கள், அதற்காகக் கணிசமான தொகையைக் கட்டணமாகச் செலுத்துவதாலும், அவர்களுக்கு உரிய வசதிகள் கிடைப்பதை உறுதிசெய்கின்ற வகையில், திரையரங்குகள் சுத்தமாகவும், நல்ல நிலைமையிலும் பராமரிக்கப்பட வேண்டுமென எதிர்பார்ப்பதை நியாயமற்றதெனக் கூற முடியாது. ஏழை, எளிய மக்கள் சுகாதாரமான சூழ்நிலையில் வசதியாக அமர்ந்து திரைப்படங்களை ரசித்து மகிழ வேண்டும் என்பதே அரசின் நோக்கமாகும். கழிப்பிட வசதியைச் சரியாகப் பராமரிக்காதது, காற்றோட்ட வசதிக் குறைவு, குளிர்வசதிக்கான சாதனங்களை (A/C) இயக்காதது போன்ற பல புகார்கள் தொடர்ந்து வரப்பெற்றமையால் திரையரங்குகளைக் கூட்டாக இணைந்து பார்வையிட்டு, சுகாதாரமாக நல்லமுறையில் பராமரிக்காத, உரிய வசதிகளை வழங்காத திரையரங்கு உரிமதாரர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து உரிமம் வழங்கும் அலுவலர்களுக்கும், அரசு, உள் துறையின் 16-4-2002 ஆம் நாளிட்ட கடித எண் 35964/சினிமா I/2002-1-ல் உத்தரவுகள் பிறப்பித்துள்ளது.

**வீடியோ சட்டமும், விதிகளும்**

தமிழ்நாட்டில் வீடியோ கேசட் பதிவுக் கருவிகளைப் பயன்படுத்தி திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரைகளில் ஒளிபரப்புவதை முறைப்படுத்துவதற்காகவும், இதன் இடைநிகழ்வான அல்லது தொடர்புடைய பொருள்களுக்காகவும், தமிழ்நாடு அரசு 1984ஆம் ஆண்டு வீடியோ கேசட் பதிவுக் கருவிகளின் மூலம் தொலைக்காட்சித்



திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இந்தச் சட்டம், வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம், தொலைக்காட்சித் திரையில் வீடியோ நூலகங்கள் மூலம், தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களை ஒளிபரப்புவதற்கும், வீடியோ நூலகங்கள் (Video Library) நடத்துவதற்கும் தனியார்களுக்கு உரிமம் வழங்க வகை செய்கிறது. மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையரும் உரிமம் வழங்கும் அலுவலர்களாவர். வீட்டின் குடும்ப உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக வீடியோ கேசட் பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டுவதற்கு உரிமம் எதுவும் அவசியம் இல்லை.

**திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு**

தமிழ்நாடு அரசு, உள் துறையின் (திரைப்படம் II) 17-2-1995 ஆம் நாளிட்ட 3 (D) 16 ஆம் எண் அரசாணையின்படி தமிழ்நாடு குற்றப்புலனாய்வுத் துறை குற்றப் பிரிவில் திருட்டு வீடியோ தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டது. தற்போது சென்னை காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநரின் (குற்றம்) நேரடிக் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது. மேலும் பதிப்புரிமைச் சட்டம்/2000 ஆண்டு தகவல் தொழில்நுட்பச் சட்டம் ஆகியவை தொடர்பான மீறல்களைத் தடுக்கவும் இப்பிரிவினைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு அறிவுறுத்தியுள்ளது.

இப்பிரிவுக்கென, காவல் துறை கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் ஒருவர், காவல் துறை ஆய்வாளர்கள் அறுவர், காவல் துறை உதவி ஆய்வாளர்கள் இருவர், காவலர்கள் (நிலை I) பதினான்கு மற்றும் காவலர்கள் இருவர் ஆகிய பதவிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இப்பிரிவுக்கு ஒரு கார், ஒரு ஜீப் மற்றும் 4 மோட்டார் வண்டிகள் அனுமதிக்கப்பட்டன.

இப்பிரிவில் ஆறு சிறு பிரிவுகள் உள்ளன. ஒவ்வொரு சிறு பிரிவிலும் காவல் துறை ஆய்வாளர் ஒருவரும் மற்றும் காவலர்கள் (நிலை I) இருவரும் உள்ளனர். இந்த ஆறு சிறு பிரிவுகளின் தலைமையிடங்கள் மற்றும் அவற்றின் அதிகார வரம்பு குறித்த விவரம் வருமாறு:

| தொடர் எண் | சிறு பிரிவுகள் | சரகம் |
|---|---|---|
| 1. | சென்னை | சென்னை மாநகர், செங்கல்பட்டு சரகம் மற்றும் விழுப்புரம் சரகம். |
| 2. | சேலம் | சேலம் மாநகர், சேலம் சரகம் மற்றும் வேலூர் சரகம். |
| 3. | கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் மாநகர் மற்றும் கோயம்புத்தூர் சரகம். |
| 4. | திருச்சி | திருச்சி சரகம் மற்றும் தஞ்சாவூர் சரகம். |
| 5. | மதுரை | மதுரை மாநகர், மதுரை சரகம், இராமநாதபுரம் சரகம் மற்றும் திண்டுக்கல் சரகம். |
| 6. | திருநெல்வேலி | திருநெல்வேலி மாநகர் மற்றும் திருநெல்வேலி சரகம். |

வீடியோ திருட்டுக் குற்றங்கள் அண்மைக் காலத்தில் புதிய தொழில் நுட்பத்தால் தோன்றிய ஒன்றாகும். வீடியோ நூலக முதலாளிகளுடன் வணிக ரீதியில் தொடர்பு வைத்துள்ளவர்களே பெரும்பாலும் பிரபலமான திரைப்படங்களைத் திருட்டுத்தனமாக பதிவு செய்து வருகின்றனர். இத்தகைய நபர்கள் திரையரங்கு உரிமையாளர்கள் அல்லது திரையரங்குகளின் திரைப்படம் காட்டும் கருவி இயக்குபவர்கள் ஆகியோரின் உடந்தையுடன், சட்டத்திற்குப் புறம்பாகப் புதிய திரைப்படங்களை வீடியோ கேசட்டுகளில் திருட்டுத்தனமாகப் பதிவு செய்கிறார்கள். வீடியோ கேசட்டுகளைத் திருட்டுத்தனமாகப் பதிவு செய்வதற்கு பிறமுறைகளும் கையாளப்படுகின்றன. மலேசியாவிலிருந்தும். ஏனைய நாடுகளிலிருந்தும் வீடியோ குறுந்தகடுகள் (VCDs) வந்து கொண்டு இருக்கின்றன. எனினும் விமான நிலையங்களில் இவற்றைக் கைப்பற்றுவது தொடர்பாக எடுத்துவரும் நடவடிக்கைகள் காரணமாக, இவற்றின் வரத்து தற்போது கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திருட்டைக் கட்டுப்படுத்துவதற்கு 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டம், தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு, வீடியோ கேசட் ஒளிப்பதிவுக்



கருவி மற்றும் கேபிள் தொலைக்காட்சி மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) திரைப்படங்கள் சட்டம் போன்ற சட்டங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

திருட்டு வீடியோ குற்றங்களைத் தடுக்கும் தனிப் பிரிவின் செயல்பாடுகளாவன:

(1) திருட்டு வீடியோ குறுந்தகடுகள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல்.

(2) திரைப்படத் தயாரிப்பாளர்கள் அளிக்கும் தகவலைச் சரிபார்த்தல்.

(3) திடீர் சோதனை நடத்தி குற்றம் சாட்டப்பட்டவரைக் கைது செய்தல்.

(4) குற்றத்திற்கு உட்படுத்தும் பொருட்களைக் கைப்பற்றுதல்

(5) தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல். குற்றம் சாட்டப்பட்டவரை 'ரிமாண்டு' காவலில் வைத்தல். புலனாய்வை முடித்த பின்னர், நீதி மன்றத்தில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தல்.

(6) நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளில் கலந்துகொண்டு உதவி செய்தல்.

பதிப்புரிமைத் திருட்டு (Piracy of printed word) ஒலிப்பதிவுத் திருட்டு, திரைப்படத் திருட்டு, கணினி மென்பொருள் திருட்டு ஆகியன 1957 ஆம் ஆண்டு பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் வரும் நான்கு வகையான திருட்டுக்கள் ஆகும். குறுகிய காலத்தில் பணம் சம்பாதிப்பதும்; சட்டப்படியான வரிகள் மற்றும் உரிமத் தொகைகள் செலுத்துவதைத் தவிர்ப்பதும் இந்த அனைத்து வகைத் திருட்டுக்களின் நோக்கம் ஆகும். பதிவு செய்யப்பட்ட இசை, திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பதிவு செய்யப்பட்ட வீடியோ கேசட்டுகள் ஆகியவை சம்பந்தப்பட்டது. ஆசிரியர்கள், கலைஞர்கள், வெளியீட்டாளர்கள், தயாரிப்பாளர்கள் ஆகியோருக்கு எந்தவித ஆதாயமுமின்றி உலகின் பல பாகங்களில் மீண்டும் தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டு, விற்பனை செய்யப்படுகின்றன. ஒலி நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தல், நிலைப்படுத்தல், மீண்டும் தயாரித்தல்

தொடர்பாகப் பெருகிவரும் நவீன தொழில்நுட்பங்களுடன் வீடியோ தொழில்நுட்ப வருகையும் சேர்ந்து இத்திருட்டுக்குப் பெரிதும் துணை புரிகின்றன. இது தவிர, நம்நாட்டில் அண்மையில் வீடியோ துறையில் ஏற்பட்ட திடீர் வளர்ச்சியினால் சான்றளிக்கப்படாத வீடியோ திரைப்படங்கள் பெருமளவில் காட்டப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு ஒளிப்பதிவு வீடியோ ஒளிப்பதிவுக் கருவிகளின் (VCR) மூலமாகவும், கேபிள் தொலைக்காட்சி மூலமாகவும் தொலைக் காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுதல் (முறைப்படுத்தல்) சட்டத்தின் 5 மற்றும் 6 ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி, (2) இச்சட்டம் 7 மற்றும் 5 ஆம் பிரிவுகளின்கீழ் அனுமதி வழங்கப்பட்டுள்ள இடத்தைத் தவிர, வேறு ஒரு இடத்தில் வீடியோ ஒளிப்பதிவுக் கருவிகள் மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்களைக் காட்டக்கூடாது. இச்சட்டத்தின் 6 மற்றும் 5ஆம் பிரிவுகளின்கீழ் வழங்கப்பட்ட உரிமத்தின்படி அன்றி, மற்றபடி எவரும் கேபிள் தொலைக்காட்சி மூலமாகத் தொலைக்காட்சித் திரையில் திரைப்படத்தைத் திரையிடக்கூடாது.

1952ஆம் ஆண்டு திரைப்படச் சட்டத்தின்கீழ், சான்றளிக்கப்பட்ட திரைப்படங்களைப் பொறுத்தவரையில் விநியோகஸ்தர்களுக்கும், திரைப்படம் காட்டுபவர்களுக்கும் அளிக்கப்பட வேண்டிய தகவல் மற்றும் ஆவணங்கள் யாதொரு விநியோகஸ்தருக்கு அல்லது திரைப்படம் காட்டுபவருக்கு சான்றளிக்கப்பட்ட திரைப்படத்தை அளிக்கும் ஒருவர், வரையறுக்கக்கூடிய முறையில், நேர்விற்கேற்ப விநியோகஸ்தரிடம் அல்லது திரைப்படம் காட்டுபவரிடம் திரைப்படத்தின் பெயர், நீளம் அத்திரைப்படத்திற்கு வழங்கப்பட்ட சான்றிதழின் எண் மற்றும் தன்மை, அச்சான்றிதழ் ஏதேனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு வழங்கப்பட்டிருந்தால் அந்த நிபந்தனைகள், அந்தத் திரைப்படத்தைப் பொறுத்தமட்டில் வரையறுக்கப்படக்கூடிய ஏனைய விவரங்களை அளிக்க வேண்டும். திரைப்படம் காட்டுவதற்கு உரிமம் பெறப்பட வேண்டும். இப்பகுதியில் வேறு விதமாக வகை செய்யப்பட்டாலன்றி, மற்றபடி, ஒருவர் இப்பகுதியின்கீழ் உரிமம் வழங்கப்பட்ட இடத்தைத் தவிர, வேறு இடத்தில் அல்லது இத்தகைய உரிமத்தின் மூலம் விதிக்கப்பட்ட நிபந்தனை மற்றும் கட்டுப்பாடுகளுக்கிணங்க வேறு வகையில் திரைப்படக் கருவி மூலமாகத் திரைப்படம் காட்டக்கூடாது.



வீடியோ வகையிலான திருட்டுத் தடுப்புப் பிரிவில் 2001ஆம் ஆண்டில் 514 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. 2002ஆம் ஆண்டில் 650 வழக்குகளாக உயர்ந்தது. 1-1-2002 முதல் 31-12-2002 வரையிலான கால அளவில் வீடியோ வகைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ.2,56,38,790 ஆகும். 1995 முதல் 2002 வரையிலான கால அளவில் இப்பிரிவு கைப்பற்றிய குற்றத்திற்குட்படுத்தும் சொத்துக்களின் மதிப்பு ரூ. 8,92,87,170 ஆகும்.

தொடர்புடைய தயாரிப்பாளர்களிடமிருந்து உரிய பதிப்புரிமை பெறாமல் கள்ளத்தனமாக வீடியோ மற்றும் கணினியில் தயாரிப்பவர்கள் மீதும், கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொலைதூரம் செல்லும் சில பேருந்துகள், வீடியோ ஒளிப்பதிவுக் கருவி (VCR) மூலம் திருட்டு வீடியோ திரைப்படங்களைத் தொலைக்காட்சித் திரையில் காட்டுகின்றன. இவ்வகைக் குற்றங்கள் பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகின்றன. சம்பந்தப்பட்ட திரைப்படத் தயாரிப்பாளர்களிடமிருந்து பதிப்புரிமை பெறாமல் வீடியோ ஒளிப்பதிவுக் கருவி மூலம் கேபிள் தொலைக்காட்சியில் புதிய படங்களைக் காட்டும் கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது தொடர்புடைய அனைத்து அலுவலர்களும் கடுமையான நடவடிக்கை எடுத்துள்ளனர்.

**கேபிள் தொலைக்காட்சிக் கூட்டமைப்பு**

கேபிள் தொலைக்காட்சி மூலம் திரைப்படங்களைக் காட்டுவதை முறைப்படுத்தும்பொருட்டு தமிழ்நாடு அரசு 1991ஆம் ஆண்டு வீடியோ கருவி மூலம் தொலைக்காட்சித் திரையில் திரைப்படங்கள் காட்டுவது (முறைப்படுத்தல்) திருத்தச் சட்டத்தை இயற்றியுள்ளது. இத்திருத்தச் சட்டம், 1-11-1991 முதல் செயலுக்கு வந்துள்ளது.

மத்திய அரசு 1995 ஆம் ஆண்டு மத்திய கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டம் மற்றும் விதிகளை இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்தியா முழுவதற்கும் பொருந்துகின்ற ஒன்றாகும். இதன்படி, தலைமை அஞ்சல் நிலைய அலுவலர், பதிவு செய்யும் அலுவலர் ஆவார். 2000 ஆண்டு திருத்தப்பட்ட கேபிள் தொலைக்காட்சி (முறைப்படுத்தல்) சட்டத்தின் (36/2000)படி, மாவட்ட மாஜிஸ்டிரேட், உட்கோட்ட

மாஜிஸ்டிரேட் மற்றும் சென்னை காவல் துறை ஆணையாளர் ஆகியோருக்கு இச்சட்டத்தின் 3,5,6 அல்லது 8 ஆகிய பிரிவுகளை மீறி குற்றம் செய்த கேபிள் தொலைக்காட்சி இயக்குபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளது.

சென்னை, குற்றப்புலனாய்வுத் துறை, குற்றப் பிரிவு வீடியோ வகையிலான திருட்டுத் தடுப்புப் பிரிவு, 2002 ஆம் ஆண்டில் கேபிள் தொலைக்காட்சிகள் தொடர்பாக, 66 வழக்குகளைப் பதிவு செய்துள்ளது. 2001 ஆம் ஆண்டில் 37 வழக்குகள் மட்டும் பதிவாயின. அனைத்து வழக்குகளும் தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன.



## அத்தியாயம் - 6

## தமிழ்நாடு திரைப்படப் பிரிவு

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, அரசின் பல்வேறு நிகழ்ச்சிகள், மக்கள் நலத் திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியவை குறித்து இப்பிரிவு தொடங்கப்பட்ட காலத்திலிருந்து செய்திப் படம் தயாரித்து வெளியிடும் பணியில் ஈடுபட்டு வருகிறது. 1986 ஆம் ஆண்டு முதல் செய்திப் படங்கள் வண்ணத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஆண்டும் ஆறு செய்தி மலர்கள் (35 மி.மீ.) வண்ணப் படச்சுருளில் தயாரிக்கப்பட்டு 75 பிரதிகள் எடுக்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள திரையரங்குகளில் சுழற்சி முறையில் திரையிடப்படுகின்றன.

ஒவ்வொரு ஆண்டும், 12 வீடியோ செய்தி மலர்கள், மாதம் ஒரு வீடியோ மலர் வீதம் தயாரிக்கப்படுகின்றன. இவ்வீடியோ மலர்கள் 50 பிரதிகள் எடுக்கப்பட்டு மாவட்டங்களிலுள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம், கிராமப் பகுதிகளில், கள விளம்பரப் பணிகளில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும், 60 வீடியோ குறுந்தகடுப் பிரதிகள் எடுக்கப்பட்டு, மாவட்டச் செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்கள் மூலம் கேபிள் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

தமிழ்நாடு திரைப்படப் பிரிவு, மக்கள் பயனடையக்கூடிய வகையில் குடும்ப நலம், சமூகக் காடுகள், சுகாதாரம், கல்வி, சிறுசேமிப்பு, நுகர்வோர் பாதுகாப்பு, விபத்துகள் தடுப்பு போன்ற பொருட்கள் குறித்து வீடியோ விளக்கப் படங்கள் தயாரித்து வெளியிட்டு வருகிறது. மேலும் வீடியோ வினாடிப் படங்களையும், வீடியோ விளம்பரப் படங்களையும் தயாரித்து வெளியிடுகின்றது.

தமிழ்நாடு அரசின் முக்கிய நிகழ்ச்சிகளையும் வீடியோ படப்பிடிப்பு செய்து, அதனை தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது.

தமிழ்நாடு அரசு சட்டமன்றப் பேரவையின் நிகழ்ச்சிகளைப் பதிவு செய்வதற்கென, வீடியோ படப்பிடிப்புக் கருவிகள் ரூ. 2 கோடியே 70 இலட்சம் செலவில் வாங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வீடியோ சாதனங்களால் சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளைத் தரமான முறையில் எடுத்து, வீடியோ காசெட்டுகளாக அனைத்துத் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும், மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவரின் அனுமதியுடன் சட்டமன்றப் பேரவை நடைபெறும் அனைத்து நாட்களிலும் அனுப்பப்படும்.

## அத்தியாயம் - 7

# தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம்

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் திரைப்படம் தயாரிக்கத் தேவைப்படும் பல்வேறு தொழில்நுட்பங்களையும் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பு நுணுக்கங்களையும் கற்றுத் தருகின்ற முன்னோடி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் முக்கியக் குறிக்கோள் திரைப்படம் தயாரிப்பதிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பதிலும், அதன் தொடர்புடைய பொருள்களிலும் சிறந்த பயிற்சி அளித்து, அத்துறையிலுள்ள சிறந்த ஆதாரங்களை அறியவைப்பதாகும்.

இந்தியாவிலுள்ள மூன்று பெரிய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்களில் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் ஒன்றாகும். ஏனைய இரண்டு நிறுவனங்கள் கொல்கத்தாவிலுள்ள சத்யஜித்ரே திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமும் மற்றும் பூனாவிலுள்ள நிறுவனமும் ஆகும்.

சென்னை, தலைமைச் செயலகத்திலுள்ள செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அவர்களின் நிர்வாகத்தின்கீழ் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் கீழ்க்கண்ட பட்டயப் படிப்புகள் நடத்தப்படுகின்றன:

1. இயக்குதல் மற்றும் திரைக்கதை எழுதுதல்
2. ஒளிப்பதிவு
3. ஒலிப்பதிவு மற்றும் ஒலிப்பொறியியல்
4. படம் பதனிடுதல்
5. படத்தொகுப்பு



இந்நிறுவனத்தில் பயிற்சி அளிக்கப்படும் எல்லாப் பட்டயப் படிப்புகளுக்கும் புதுடெல்லியில் உள்ள அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுவால் (AICTE) அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு துறைகளின் மாணவர்கள் சேர்ந்து 14 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு முழுமையான திரைப்படம் தனியாகத் தயார் செய்வது குறித்து, விவரமான, படிப்படியான பயிற்சி அளிக்கப்படுகிறது. பட்டயப் படிப்பு மாணவர்களின் படத் தயாரிப்புச் செலவிற்காக ஆண்டுதோறும் ரூ. 15 இலட்சம் செலவிடப்பட்டு வருகிறது.

இந்நிறுவனத்தில் பயின்று பட்டயம் பெற்றுச் சென்ற மாணவர்களில் சிலர் திரைப்பட உலகிலும், இந்தியத் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனங்களிலும் பணிபுரிகின்றனர்.

இந்நிறுவன மாணவர்கள் தயாரிக்கும் குறும்படங்களின் சிறந்த இயக்குநர், சிறந்த ஒளிப்பதிவாளர், சிறந்த ஒலிப்பதிவாளர், சிறந்த படத்தொகுப்பாளர், சிறந்த படச்சுருள் பதனிடுபவர் ஆகியோருக்குத் தலா ஒரு பவுன் தங்கப்பதக்கம், ரூ.5,000 ரொக்கம் மற்றும் நினைவுப் பரிசு வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நிறுவனத்தில் தற்போது நடத்தப்பட்டுவரும் பட்டயப் படிப்புகளை பட்டப் படிப்புகளாக உயர்த்தி, சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்க அரசு அணை வெளியிட்டுள்ளது.

தேசிய மற்றும் அனைத்து நாடுகளின் திரைப்பட விழாவில், இந்நிறுவன மாணவர்கள் தயாரித்த திரைப்படங்கள் பங்கு பெற ஆண்டிற்கு ரூ.75,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாமபதம், பயணம், தாமரை, சுவடுகள் ஆகிய திரைப்படங்கள், திரைப்பட விழாக்களுக்கு அனுப்புவதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

### கணினி மையம்

நடப்பாண்டில் தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களுக்காக ஒரு கணினி மையம் அமைக்கப்படவுள்ளது. ரூ. 11 இலட்சம் செலவில் இக்கணினி மையம் அமைக்கப்படவுள்ளது. இக்கணினி மையத்தின் மூலம் மாணவர்களுக்கு மிக நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் உயிரூட்டக் காட்சிகள் அமைக்கும் முறைகள் பயிற்றுவிக்கப்படும்.

[2003 மே 8

இக்கணினி மையம் அமைப்பதற்கு முதற்கட்டமாக 2002-2003-ல், ரூ. 3 இலட்சம் வழங்கப்பட்டது. மீதமுள்ள தொகையான ரூ. 8 இலட்சம், 2003-2004 ஆம் ஆண்டில் பகுதி - II திட்டத்தின்கீழ் வழங்கப்பட்டுள்ளது. கணினிகளையும், துணைக் கருவிகளையும் வழங்குவதற்கு 'எல்காட்' நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் - 8

## பொருட்காட்சி

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மூலம் நடத்தப்படும் பொருட்காட்சிகள் அரசு வகுத்திடும் கொள்கைகள், நலத் திட்டங்கள், சாதனைகள் ஆகியவற்றைப் பற்றிய விளக்கங்களை மக்களறியச் செய்திடும் பணியினைச் செவ்வனே செய்து வருகிறது. ஆண்டுதோறும் மதுரையில் ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், கோயம்புத்தூரில் ஏப்ரல் - ஜூன் மாதத்திலும், சேலத்தில் ஜூலை - செப்டம்பர் மாதத்திலும். இரண்டாண்டிற்கு ஒருமுறை வேலூரில் டிசம்பர் - ஜனவரி மாதத்திலும், திருநெல்வேலியில் ஜூன் - ஜூலை மாதத்திலும் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

இந்தப் பொருட்காட்சிகளில், அரசுத் துறைகள், அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகியவை பங்கு கொள்கின்றன.

1978 ஆம் ஆண்டு முதல், இத்துறை மூலம் 109 அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் அரசுக்கு ரூ.10.71 கோடி நிகர இலாபம் பெறப்பட்டது. அரசுப் பொருட்காட்சிகள் மக்களுக்கு பொழுதுபோக்காக அமைவதோடு, நேரடியாகவும், மறைமுகமாகவும் பலருக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது.

தற்போது மதுரையிலும், கோயம்புத்தூரிலும் அரசுப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் சேலம், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நகரங்களில் அரசுப் பொருட்காட்சிகள நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியத் துணைக் கண்டத்தின் ஒருமைப்பாடு, மத நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், புதுடெல்லியில் 2002 அக்டோபர் மாதம் நடைபெற்ற மலர்ப் பேரணி விழா (Phool Walon Ki Saire)விலும் இத்துறை பங்கேற்று முதல் பரிசினைப் பெற்றுள்ளது.



2003 மே 8]

சென்னையில் ஆண்டுதோறும் நடைபெறும் குடியரசு தின விழாவில், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பில் பங்கேற்று, ஒருங்கிணைப்புப் பணிகளை இத்துறை மேற்கொள்கிறது. இந்த ஆண்டும், அலங்கார ஊர்திகள் அணிவகுப்பு, கலை நிகழ்ச்சிகள், வர்ணனையாளர்கள் தொடர்பான ஒருங்கிணைப்புப் பணிகளை மேற்கொண்டது.

இரண்டாண்டுகளுக்குப் பிறகு, இந்த ஆண்டு சனவரி 26 ஆம் நாள் புதுடெல்லியில் நடைபெற்ற குடியரசு தின விழா அலங்கார ஊர்தி அணிவகுப்பில் தமிழ்நாட்டுக் கோயில்களின் கோபுரங்களையும், விமானங்களையும் சித்தரிக்கும் வகையில் ஓர் அலங்கார ஊர்தி தமிழக அரசின் சார்பில் பங்கேற்றது.

ஆண்டுதோறும், சென்னையில் நடைபெறும் அகில இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில் இத்துறை பங்கேற்கிறது. ஆண்டுதோறும், நவம்பர் மாதத்தில் புதுடெல்லியில் நடைபெறும் இந்தியப் பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழ்நாடு அரங்கில், தமிழ்நாடு அரசின் பல்வேறு துறைகளைப் பங்கேற்கச் செய்யும் பணிகளையும் மேற்கொள்கிறது.

மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களால், கிராமப்புறங்களில் வீடியோ படக்காட்சிகள் நடத்தும்போது, அவ்விடங்களில் சிறிய கண்காட்சிகளையும் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, அனைத்து மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் எளிதில் எடுத்துச் செல்லக் கூடிய புகைப்பட விளம்பரப் பலகைகள் வழங்கப்படவுள்ளன.

[2003 மே 8

## அத்தியாயம் - 9

## தமிழரசு

தமிழக அரசின் அரசு இதழாக வெளிவரும் 'தமிழரசு' இதழ் அரசின் முக்கியத் திட்டங்கள், ஆக்கப் பணிகள் மற்றும் சாதனைகளை மக்களுக்குத் தெரிவிக்கும் இதழாக விளங்குகிறது. வளர்ச்சிப் பணிகளையும், நலத் திட்டங்களையும் மக்களுக்கு எடுத்தியம்பும் முக்கியச் செய்தி இதழாகவும் விளங்குகிறது. 1970 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தமிழரசு இதழ், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுகிறது.

மேதகு ஆளுநர் அவர்களுடைய உரை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உரை மற்றும் மாண்புமிகு அமைச்சர்களுடைய உரை ஆகியவை தமிழரசு இதழ்களில் வெளியிடப்படுகின்றன.

'தமிழரசு' இதழுக்கென ஒரு நவீன அச்சகம் இயங்கி வருகிறது. இந்த அச்சகத்தில் தமிழரசு இதழ்கள் மற்றும் சிறப்புக் கையேடுகள், அரசு விழா அழைப்பிதழ்கள், பல்வேறு அரசுத் துறைகளின் அச்சுப் பணிகள் ஆகியவை அச்சடிக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

'தமிழரசு' இதழ், தமிழில் மாத இதழாகவும், ஆங்கிலத்தில் காலாண்டு இதழாகவும் வெளியிடப்பட்டு வருகிறது. 'தமிழரசு' தமிழ் இதழின் விலை ரூ. 10. ஆங்கில இதழின் விலை ரூ. 15. தமிழ் இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 120 மற்றும் ஆயுள் சந்தா ரூ. 1,000 (10 ஆண்டுகள்) ஆகும். ஆங்கில இதழுக்கு ஆண்டுச் சந்தா ரூ. 60 ஆகும்.

தமிழரசு இதழில் இளைஞர்கள், மாணவர்கள் மற்றும் அவர்களின் விளையாட்டுச் சாதனைகள், பெண்கள் மற்றும் மகளிர் மேம்பாடு குறித்த கட்டுரைகளும், செய்திகளும் வெளியிடப்படுகின்றன.

தற்போது ஆண்டுச் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 40,154 ஆகவும், ஆயுள் சந்தாதாரர்களின் எண்ணிக்கை 1,891 ஆகவும் உயர்ந்துள்ளன. மேலும் கூடுதலாக சந்தாதாரர்களைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### சிறப்பு வெளியீடுகள்

அரசின் ஆக்கப் பணிகள் குறித்த சிறு புத்தகங்களும், மாண்புமிகு முதலமைச்சரின் உரைகள் தொகுக்கப்பட்டும், பின்வருமாறு சிறு புத்தகங்களாகவும் சிறப்பு வெளியீடுகளாகவும் வெளியிடப்பட்டுள்ளன:



2003 மே 8]

1. 'இந்த அரசு ஏழை எளியோர்களின் அரசு'
2. 'வளம் தரும் திசையில் வளரும் தமிழகம்' (100 நாள் சாதனை)
3. பெரியார் விருது - அம்பேத்கர் விருது - திரு.வி.க. விருது - பாரதியார் விருது - பாரதிதாசன் விருது - கி.ஆ.பெ. விருது ஆகியவை குறித்த தகுதி உரைத் தொகுப்பு.
4. 'முதல்நிலை நோக்கி முன்னேறும் தமிழகம்'
5. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 15 அம்சத் திட்டம்
6. தமிழ்நாடு ஒரு அமைதிப் பூங்கா (மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை மானியத்தின்போது ஆற்றிய பதிலுரை)
7. பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதில் விழிப்புணர்வு
8. இந்திய அளவில், முதலீட்டில் முதல்நிலை பெற்றுள்ள தமிழ்நாடு
9. காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை.
10. அரிசி நிலை நிர்ணயம் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் அறிக்கை.

தமிழறிஞர்கள், தலைவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிய கையேடுகளை அச்சிட்டு, நினைவகங்கள் மூலமாகப் பொதுமக்களுக்கு வழங்கிட ஏற்பாடுகள் இத்துறையின் மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

'தமிழரசு' இதழின் தரத்தை உயர்த்திட புகழ்பெற்ற எழுத்தாளர்கள் தமிழரசு எழுத்தாளர் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

## அத்தியாயம் - 10

## விளம்பரம்

தமிழ்நாடு அரசின் அனைத்து விளம்பரங்களும், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்களில் வெளியிடுதல் மையப்படுத்தப்பட்டு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. அரசின் அனைத்துத் துறைகள், பல்வேறு கழகங்கள், அனைத்து வாரியங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றின் விளம்பரங்கள் அனைத்தும் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை வழியாக வெளியிடப்பட்டு வருகின்றன. விளம்பரத்தின் தன்மை, அவை சென்றடைய வேண்டிய பகுதி, மக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பத்திரிகைகளுக்கு விளம்பரம் அளிக்கப்பட்டு வருகிறது. சிறிய மற்றும் நடுத்தரப் பத்திரிகைகளுக்கும் அரசு விளம்பரங்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

நவீன தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்தி கூடுதல் செலவு ஏதுமின்றி அனைத்து அரசு விளம்பரங்களும் மக்களை எளிதில் சென்றடையும் வகையில் ஒப்பந்தப்புள்ளி மற்றும் வரைகலை விளம்பரங்கள் மத்திய அரசின் தேசிய தகவல் மையத்தின் தமிழக அரசின் www.tn.gov.in என்ற வலைதளத்தில் இலவசமாக வெளியிடப்படுகின்றன.

அரசு விளம்பரங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதுடன் இணைய தளத்திலும் வெளியிடப்படுவதால், அரசின் வெளிப்படையான நிர்வாகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்பதோடு, தகுதியான எவரும் தமிழக அரசின் ஒப்பந்தப்புள்ளிகளில் பங்கேற்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்கள் அறிந்துகொள்ளும் வகையில் வெளிப்படையாக இருத்தல் வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில், ஒப்பந்தப்புள்ளிச் சட்டம் 1998-ல் உட்பட்ட தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000 இயற்றப்பட்டு 13-10-2000 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் மாவட்ட/மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர்கள் 13-10-2000 முதல் வாரந்தோறும் வியாழக்கிழமை வெளியிடப்படுகின்றன.



ரூ. 25 இலட்சத்திற்கு மேற்பட்ட ஒப்பந்தப்புள்ளி விவரங்கள் மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், ரூ. 5 இலட்சத்திற்குமேல் ரூ. 10 இலட்சம் வரையிலான கொள்முதல் மதிப்பு மற்றும் ரூ. 10 இலட்சத்திலிருந்து ரூ. 25 இலட்சம் வரையிலான பணிகளின் மதிப்பு ஆகியன பற்றிய ஒப்பந்தப்புள்ளிகள் மாவட்ட ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் வெளியிடப்படுகின்றன. இம்மலர்களில், ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் மீது மேற்கொண்ட முடிவுகளும் வெளியிடப்பட்டு வருகின்றன.

[2003 மே 8

## அத்தியாயம் - 11

## மேற்கோள் பிரிவு

ஆங்கிலம் மற்றும் தமிழ் நாளிதழ்கள், பருவ இதழ்களின் முக்கியச் செய்தி நறுக்குகளை அன்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொடர்புடைய மாண்புமிகு அமைச்சர்களுக்கும், துறைச் செயலாளர்களுக்கும் பார்வைக்காகவும், நடவடிக்கைக்காகவும் எனத் தொகுத்து அனுப்பிவைக்கும் பணியை, இத்துறையில் இயங்கிவரும் மேற்கோள் பிரிவு மேற்கொண்டு வருகிறது.

அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் குறித்த செய்திகளைத் தொகுத்து வைக்கும் பணியினையும், பொதுமக்களின் குறைகளைக் களைந்திடும் செய்திகளையும் நடவடிக்கைக்காக அனுப்பும் பணியை இப்பிரிவு ஆற்றி வருகிறது.

முந்தைய ஆண்டுகளில் நாளிதழ்களிலும், பருவ வெளியீடுகளிலும் வெளிவந்த தேவையான செய்திகளையும் தலைமைச் செயலகத்திலுள்ள துறைகளுக்குத் தேவைப்படும்போது வழங்கும் பணியினையும் இப்பிரிவு ஆற்றி வருகிறது.

### மின்னணுவியல் வழி ஆவணங்கள் பாதுகாக்கும் முறை

முக்கியமான பத்திரிகை நறுக்குகள், கட்டுரைகள், திட்டங்கள் பற்றிய சாதனை விவரங்கள், புகைப்படங்கள் மற்றும் வீடியோ காட்சிகளை நவீன முறையில் மின்னணுவியல் வழி ஆவணப் பாதுகாப்பு முறையில் பாதுகாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ரூ. 17.15 இலட்சம் தேவைப்படுகிறது. 2003-2004 ஆம் ஆண்டில் இத்திட்டத் தயாரிப்புப் பணிக்கென கலந்தறி கட்டணத்திற்காக ரூ. 1 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.



2003 மே 8]

## அத்தியாயம் - 12

## மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்கள்

தமிழ்நாட்டிலுள்ள 29 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களும், பல்வேறு விளம்பர நிகழ்ச்சிகள் மூலம் அரசினுடைய வளர்ச்சித் திட்டங்களைப் பற்றிய விளம்பரப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

ஏழை எளிய மக்களின் நலனுக்காக, அரசு மேற்கொள்ளும் பல்வேறு நலத்திட்டப் பணிகள் பற்றி, விளம்பரப் பணிகள் மேற்கொள்ள, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு நவீன விளம்பரச் சாதனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 12 ஒளிநகல் இயந்திரங்கள், 12 நிகரிகள் வாங்கப்பட்டு, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. தற்போது அனைத்து மாவட்டங்களுக்கும் ஒளிநகல் இயந்திரங்களும், நிகரி இயந்திரங்களும் வழங்கப்பட்டு இவ்வகைத் தேவையில் தன்னிறைவு பெற்றுள்ளன.

புகைப்படக்காரர்கள் தொகுப்பூதிய அடிப்படையில், 9 மாவட்டங்களில் அமர்த்தப்படவிருக்கின்றனர். இம்மாவட்டங்களுக்கு 9 புகைப்படக் கேமராக்கள் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. ஏற்கெனவே ஏனைய 20 மாவட்டங்களுக்கு புகைப்படக் கேமராக்கள் வழங்கப்பட்டு, புகைப்படக்காரர்களும் அமர்த்தப்பட்டுவிட்டனர்.

இந்த ஆண்டு, 14 செய்தியாளர் ஊர்திகளும், 2 வீடியோ விளம்பர ஊர்திகளும் ரூ. 66 இலட்சம் செலவில், 15 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்காக வாங்கப்பட்டு, இவ்வூர்திகளுக்கான சாவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து 15 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களும், ஊர்தி ஓட்டுநர்களும் 17-1-2003 அன்று பெற்றுக்கொண்டனர்.

மாவட்டங்களில் பல்வேறு துறைகளின் மூலம் ஆண்டுதோறும் மார்ச் 31 ஆம் நாள் வரை மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்தும், சாதனைகள் பற்றியும் சிறு புத்தகம் வெளியிடப்படும். இப்புத்தகத்தை மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிவுரைப்படி, மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர் அச்சிட்டு வெளியிடுவார்.

[2003 மே 8

## அத்தியாயம் -13

## செய்தி நிலையங்கள்

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின்கீழ் ஆறு செய்தி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

சென்னையில் மாநில செய்தி நிலையம், திருவல்லிக்கேணியிலுள்ள மகாகவி பாரதியார் இல்லத்தில் இயங்கி வருகிறது. இச்செய்தி நிலையத்தில் 16,000 மேற்கோள் நூல்கள் உள்ளன. இவை பத்திரிகையாளர்களுக்கும், மாணவர்களுக்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும், பொதுமக்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

புதுடெல்லி, சாணக்கியபுரியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் அமைந்துள்ள செய்தி நிலையம், இத்துறையின் உதவி இயக்குநர் மேற்பார்வையில் இயங்குகிறது.

மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களிலுள்ள நான்கு செய்தி நிலையங்கள் அந்தந்த மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலர்களின் மேற்பார்வையில் இயங்குகின்றன.



2003 மே 8]

## அத்தியாயம்-14

## 2002-2003 ஆம் ஆண்டில் பகுதி-I மற்றும் பகுதி-II திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள்

| வரிசை எண் | திட்டம் | செலவிடப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 12 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் தலைமையிடத்திற்கும் 13 நிகரி இயந்திரங்கள் வாங்கியதற்காக | 1.80 |
| 2. | 12 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கும் தலைமையிடத்திற்கும் 13 ஒளிநகல் இயந்திரங்கள் வாங்கியதற்காக | 12.17 |
| 3. | சட்டமன்றப் பேரவை நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்ய வீடியோ சாதனங்கள் வாங்கியதற்காக | 270.00 |
| 4. | திரு. பிலிம் நியூஸ் ஆனந்தன் அவர்களின் அரிய திரைப்பட சேகரிப்புகளை அரசுடைமையாக்குவதற்கும் அவர் எழுதிய 'சாதனைகள் படைத்த தமிழ்த் திரைப்பட வரலாறு' என்ற புத்தகத்தை வெளியிடவும் அவருக்கு வழங்கப்பட்ட தொகை | 15.50 |
| 5. | தலைமையிட புகைப்படப் பிரிவிற்கு 2 டிஜிட்டல் கேமராக்கள் வாங்கியதற்காக | 2.34 |
| 6. | தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனத்தில் கணினி மையம் அமைக்க | 3.00 |

| | | |
|---|---|---|
| 7. | தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்கள் தயாரித்த குறும்படங்களைத் திரைப்பட விழாக்களுக்கு அனுப்புவதற்காக | 0.75 |
| 8. | 15 மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்கு 14 செய்தியாளர்கள் ஊர்திகளையும் 2 வீடியோ விளம்பர ஊர்திகளையும் வாங்கியதற்காக | 66.00 |
| 9. | மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்பு அலுவலகங்களுக்காக 9 புகைப்பட கேமராக்கள் வாங்கியதற்காக | 2.69 |
| 10. | மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகத்திலுள்ள மக்கள் தொடர்பு அலுவலகத்திற்கு ஒரு கணினியும் துணைக் கருவிகளும் வாங்கியதற்காக | 1.00 |
| | மொத்தம் | 375.25 |





## அத்தியாயம் - 15

## பொது

### செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி

செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை அலுவலர்களுக்கு நவீன தகவல் மற்றும் விளம்பரத் தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. பல்வேறு நிலையிலுள்ள அலுவலர்களுக்கு முதற்கட்டமாக ரூ. 2 இலட்சம் செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்படும்.

# இணைப்பு – IV

*(236 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 28 – சுற்றுலா

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**முன்னுரை**

சுற்றுலா, நினைவுக்கெட்டாத நாள் முதல் மனித வாழ்வுடன் இணைந்துள்ளது. சாதி, நிறம், மதம் போன்ற வேற்றுமைகளுக்கு அப்பாற்பட்டு, மனித நேயத்தைச் சுற்றுலா உருவாக்குகிறது. உலகத்தின் மிகப் பழமையான தொழில்களில் ஒன்றான சுற்றுலாத் தொழில் வளர்ந்துவரும் பெரிய தொழில்களில் ஒன்றாகும். சுற்றுலா பெருமளவில் வேலைவாய்ப்பினை உருவாக்கி, அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து, தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த சுற்றுலாத் துறையும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் தோற்றுவிக்கப்பட்டன. சுற்றுலாத் துறை, சுற்றுலாப் பயணிகளுக்கு தகவல்களை அளித்து, அவர்களுக்கு சுற்றுலாத் தலங்களில் தேவையான வசதிகளைச் செய்யும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலாப் பயணத் திட்டங்களையும், விடுதிகளையும் நடத்தி வருகிறது. கடந்த பல ஆண்டுகளில் தமிழ்நாட்டில் சுற்றுலா நல்ல வளர்ச்சியை அடைந்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் சுற்றுலாத் துறைக்கு பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் மட்டுமின்றி, தனியார் சுற்றுலாப் பயண முகவர்கள், ஓட்டல் உரிமையாளர்கள் ஆகியோருடன் கருத்து பரிமாறிக்கொள்ள வாய்ப்புகள் கிடைத்தன. சுற்றுலா அலுவலர்களிடமிருந்து சுற்றுலா மேம்பாடு குறித்த விவரங்களும் கிடைத்தன. சுற்றுலா வளர்ச்சிபற்றி ஆய்வு செய்தபோது, சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாத் தலங்களில் செய்துதரப்படுகின்ற வசதிகளை, பன்னாட்டுத் தரத்திற்கேற்ப அமைக்க வேண்டிய அவசியம் குறித்து அறிய முடிந்தது. சுற்றுலாப் பயணிகளும் உயர்தர வசதிகளை எதிர்பார்க்கிறார்கள். நட்சத்திர தரம் உள்ள விடுதிகள், கேளிக்கை பூங்காக்கள் போன்ற உயர்தர கட்டமைப்பு வசதிகள் செய்ய அதிகமான முதலீடு தேவைப்படும். இத்தகைய பணிகளில் தனியாரின் பங்கு இன்றியமையாததாக உள்ளது. எனவே அரசு தானே பணிகளைச் செய்யும் ஒரு நிலையைத் தவிர்த்து, தனியாரை அப்பணிகள் செய்ய



ஊக்குவிக்கும் பொறுப்பை மேற்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. அரசு, இத்தகைய கொள்கை மாற்றத்தினை செயல்படுத்தவிருப்பதால், நிலையான அடிப்படையில் பொதுத் துறை-தனியார் துறை பங்குகொள்ளும் தொலைநோக்குத் திட்டத்தை உருவாக்க இத்துறை விரும்புகிறது.

2001 ஆம் ஆண்டு செப்டம்பரில் நியூயார்க் நகரத்திலுள்ள உலக வர்த்தக மையத்தின்மீது நடந்த வன்முறைத் தாக்குதலுக்குப் பின்னர், சுற்றுலா வளர்ச்சிக்கு உலக அளவில், கடந்த இரண்டு ஆண்டுகளில் பின்னடைவு ஏற்பட்டது. தீவிரவாதம் மட்டுமல்லாமல், பொருளாதாரம், பருவநிலை, சுற்றுச்சூழல் நெருக்கடியும், கடந்த இரண்டு ஆண்டுகளில் சுற்றுலாவைப் பாதித்துள்ளது. இந்தியாவிலும் சுற்றுலாப் பயணிகளின் வருகை பாதிக்கப்பட்டது. இருப்பினும், தமிழ் நாட்டிற்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிக அளவில் பாதிக்கப்படவில்லை. தற்பொழுது சுற்றுலாத் தொழில் மீண்டும் இயல்பு நிலைக்குவர தொடங்கியுள்ளது. 2002-ல் பிரான்சு நாட்டிற்கு 76.7 மில்லியன் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததன் காரணமாக அந்நாடு உலக அளவில் பிரபலமான சுற்றுலா நாடாக விளங்குகிறது.

உலகம் முழுவதும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை சுமார் 700 மில்லியன் ஆகும். ஆண்டுதோறும் அப்பயணிகள் சுற்றுலாப் பயணத்திற்கு ஏறக்குறைய 460 பில்லியன் அமெரிக்க டாலர் செலவு செய்கிறார்கள். உலகம் முழுவதும் சுற்றுலா மூலம் 10 சதவீத வேலைவாய்ப்புகள் உருவாகின்றன. இந்தியாவைப் பொறுத்தவரை ஆண்டுதோறும் 2.5 மில்லியன் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

### 1. சுற்றுலாப் பயணிகள்

தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளில் 75% பேர் உல்லாசமாக தங்கள் விடுமுறை நாட்களைக் கழிப்பதற்காக வருகிறார்கள். இதர சுற்றுலாப் பயணிகள் வர்த்தகம், கல்வி, மங்களகரமான நிகழ்ச்சிகள், அரசியல், மதம், சமூக மாநாடு ஆகியவற்றுடன் தங்களுடைய பயணத்தை இணைத்துக்கொள்கிறார்கள். இவற்றைக் கருத்தில் கொண்டு, சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய அரசு முயற்சி செய்து வருகிறது. தமிழ்நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் பல்வேறு தரப்பினைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். இவர்கள் உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டிற்கு

வருகின்றனர். அவர்களின் நிறம், இனம், மதம், மொழி, உணவுப் பழக்கம் மற்றும் எதிர்பார்ப்புகள் ஆகியவை பெரிதும் வேறுபட்டவையாகும். அவர்களின் தேவைகள்மீது போதுமான கவனம் செலுத்தி, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும்பொருட்டு, சுற்றுலாப் பயணிகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளனர்:

* தமிழ்நாட்டிற்குள்ளேயே சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளும் தமிழ்நாட்டு சுற்றுலாப் பயணிகள்
* தமிழ்நாட்டிற்கு பிற மாநிலங்களிலிருந்து வருகைதரும் சுற்றுலாப் பயணிகள்.
* வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள்

இவ்வாறு சுற்றுலாப் பயணிகளை வகைப்படுத்துவதால், ஒவ்வொரு சுற்றுலாப் பயணிக்கும் ஏற்றவாறு சுற்றுலாப் பயணத் திட்டத்தை தயாரிக்கவும், உணவு, தங்குமிடம், போக்குவரத்து போன்ற வசதிகளைச் செய்யவும் எளிதாக உள்ளது. இத்தகைய நடவடிக்கை மூலம் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க முடியும். அவர்கள் தமிழ்நாட்டில் அதிக நாட்கள் தங்குவதற்கு வழிவகுக்க இயலும்.

**2. இந்தியாவில் சுற்றுலா**

கடந்த ஐந்தாண்டுகளில் இந்தியாவுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை பின்வருமாறு:

| ஆண்டு | சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1997 | 23.74 இலட்சம் |
| 1998 | 23.58 இலட்சம் |
| 1999 | 24.81 இலட்சம் |
| 2000 | 26.41 இலட்சம் |
| 2001 | 25.37 இலட்சம் |

விலை உயர்ந்த நவரத்தினக் கற்கள், ஆபரணங்கள் மற்றும் ஆடைகள் ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக, சுற்றுலாதான் அதிகமாக அந்நியச் செலாவணியை ஈட்டித் தருகிறது. 2001-ல் சுற்றுலா மூலம் இந்தியாவிற்குக் கிடைத்த அந்நியச்செலாவணி ரூ. 14,344 கோடி என்று மதிப்பிடப்பட்டுள்ளது.



மத்திய அரசின் சுற்றுலா அமைச்சகத்தின் கணக்கீட்டின்படி, சுற்றுலாவில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூ. 10 இலட்சத்திற்கும் 47.5 வேலைவாய்ப்புகள் உருவாகின்றன. ஆனால் அதே நேரத்தில் வேளாண்மைத் துறையில் 44.7 மற்றும் உற்பத்தித் துறையில் 12.6 வேலைவாய்ப்புகள் மட்டுமே உருவாகின்றன என்பது குறிப்பிடத் தக்கது. சுற்றுலா மூலம் 164.5 இலட்சம் நேரடி வேலைவாய்ப்புகளும், 223.7 இலட்சம் வேலைவாய்ப்புகளும் மறைமுகமாக உருவாக்கப்படுகின்றன. உலகச் சுற்றுலா குழுமம், தனது கணக்கீட்டின்படி (Tourism Satellite Account) சுற்றுலா மூலம் ஏற்படும் வேலைவாய்ப்பு வசதி தற்போதுள்ள 2.4 சதவிகிதத்திலிருந்து 6.8 சதவிகிதமாக, வரும் பத்தாண்டுகளில் உயரும் என கணித்துள்ளது. இதன் மூலம் 80 இலட்சம் புதிய வேலைவாய்ப்பு வசதிகள் உருவாகும். அதேபோன்று, ஓட்டல் தொழிலில் முதலீடு செய்யப்படும் ரூ.10 இலட்சம், 12 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பளிக்கும். ஐந்து நட்சத்திர ஓட்டல்களில் உள்ள ஐந்து அறைகள், எட்டு நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பு அளிக்கும்.

தேசிய வளர்ச்சிக் குழு பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (2002-2007) 21-12-2002 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் ஐந்து கோடி மக்களுக்கு வேலைவாய்ப்புகளை அளிக்கும். மாபெரும் இப்பணியில் சுற்றுலாத் தொழில் முக்கிய பங்கினை ஏற்க உள்ளது.

**3. தமிழ்நாட்டில் சுற்றுலா**

ஆண்டு முழுவதும் தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் மிகவும் விரும்பி வருகை தருகின்றனர். இதற்கு ஏதுவாக சுற்றுலாச் செல்வங்களை இயற்கை நமக்கு அளித்துள்ளது. அத்துடன் புகழ்மிக்க சிற்பங்கள், வானுயர்ந்த கோபுரங்கள், நம் முன்னோர்கள் நமக்களித்த பாரம்பரியம், வரலாற்றுச் சின்னங்கள் முதலியன தமிழ்நாட்டில் உள்ளன. பராம்பரியமும், வனப்பும், கவர்ச்சியும் மிக்க மாநிலம் தமிழ்நாடு ஆகும். இங்கு புதுமையும் தொன்மையும் இரண்டறக் கலந்துள்ளன. தொன்மையான கட்டடங்களும், அமைதிகொள்ளும் சமூகச் சூழ்நிலையும், நவீன முயற்சிகளும் ஒருங்கிணைந்து நிற்கின்றன. வருகை புரியும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அடிப்படையில் இந்தியாவில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தை வகிக்கிறது.

[2003 மே 8

**தமிழ்நாட்டில் சுற்றுலா வளங்களைப் பின்வருமாறு பிரித்திடலாம்:-**

(1) மலைவாசஸ்தலங்கள்

(2) கடற்கரைகள்

(3) நீர்வீழ்ச்சிகள்

(4) அணைப் பகுதிகள்

(5) உயிரியல் பூங்காக்கள்

(6) தாவர/மலர்த் தோட்டங்கள்

(7) வனவிலங்குச் சரணாலயங்கள்

(8) வரலாற்றுப் பாரம்பரிய, புகழ்மிக்க சுற்றுலாத் தலங்கள்

(9) புனிதத் தலங்கள்

(10) ஓய்வுச் சுற்றுலா (கேளிக்கை பூங்காக்கள்)

(11) சாகசச் சுற்றுலா (மலை ஏற்றம், படகு சவாரி)

(12) பொருட்காட்சி/விழாக்கள்

(13) புராதனச் சின்னங்கள்

**2003-2004 ஆம் ஆண்டில் பின்வரும் சுற்றுலா வகைகளை மேம்படுத்துதல்:**

(1) சுகாதாரச் சுற்றுலா

(2) சிறப்புமிக்க கல்வி நிறுவனங்கள்/தகவல் - தொழில்நுட்பப் பயிற்சி அளிக்கும் உயர்கல்வி இடங்கள்.

(3) மலைத்தோட்டச் சுற்றுலா (காபி/தேயிலைத் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள்)

(4) திரைப்படத் தொழில் (தமிழ்நாட்டில் திரைப்பட வீடியோ படப்பிடிப்பை ஊக்குவிப்பதன் மூலம் சுற்றுலா வளர்ச்சி மேற்கொள்ளுதல்).



2003 மே 8]

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை:

| ஆண்டு | உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மொத்தம் (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1998 | 204.13 | 6.36 | 210.49 |
| 1999 | 211.37 | 7.22 | 218.59 |
| 2000 | 229.82 | 7.86 | 237.68 |
| 2001 | 238.12 | 7.73 | 245.85 |
| 2002 | 246.61 | 8.05 | 254.66 |

**4.1 நமது திட்டத்தின் குறிக்கோள்கள்**

(அ) சுற்றுலாப் பயணிகள் வருகையை ஆண்டொன்றுக்கு தற்பொழுதுள்ள 4-9 சதவீதத்திலிருந்து 10-12 சதவீதமாக அதிகரிப்பது.

(ஆ) உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் தங்கும் காலத்தை 7-9 நாட்களிலிருந்து, 10-12 நாட்கள் வரை அதிகரிப்பது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை 4-7லிருந்து, 6-8 நாட்களாக அதிகரிப்பது.

(இ) அரசின் தலைமையில் தனியார் பங்கேற்கும் சமுதாய முன்னேற்றம் தழுவிய திட்டங்களை உருவாக்குதல்.

(ஈ) சுற்றுலா வசதிகளை முழுவதும் பயன்படுத்தி, அவற்றை வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும், வறுமை ஒழிப்பிற்கும் பயன்படுத்துதல்.

(உ) சுற்றுலாவுக்கும் கலாச்சாரத்திற்கும் இடையே உள்ள இயல்பான தொடர்பினை வலுப்படுத்துதல்.

[2003 மே 8

(ஊ) சுற்றுச்சூழல் சுற்றுலாவை மேம்படுத்துதல்.

(எ) கடலோரப் பகுதி சுற்றுலா வளர்ச்சிக்கான ஆதாரங்களைப் பயன்படுத்துதல்.

(ஏ) இதர மாநிலங்களுடன் அதிக அளவில் ஒருங்கிணைப்பு ஏற்படும் வகையில் சுற்றுலாக் கட்டமைப்பினை விரிவுபடுத்துதல்.

(ஐ) தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொடர்பு வளர்ச்சியினைப் பெருமளவில் பயன்படுத்துதல்.

(ஒ) திறமை மிக்க துறையாகச் சுற்றுலாத் துறையை மேம்படுத்துதல்.

(ஓ) இலங்கை, சிங்கப்பூர், மலேசியா, மொரீசியஸ், ரீயூனியன் தீவு போன்ற நாடுகளிலிருந்து தமிழ் பாரம்பரிய மரபுகளைப் பின்பற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க தகுந்த நடவடிக்கைகள் எடுத்தல்.

(ஔ) சுற்றுலாப் பகுதிகளில் பிச்சைக்காரர்கள், இடைத்தரகர்களின் தொந்தரவுகளை நீக்குதல் மற்றும் அனைத்து சுற்றுலாத் தலங்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ளல்.

**4.2. மேலே கூறப்பட்ட குறிக்கோள்களை அடைவதற்கான நடவடிக்கைகள்:**

* தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை ஒருங்கிணைந்த முறையில் முழுமையாக மேம்படுத்தி செயல்படச் செய்தல்.
* கட்டமைப்பு வசதிகளின் தரத்தை உயர்த்த நீண்ட கால, குறுகிய கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

**சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்ப்பதற்கு எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள்:**

* தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலா வளங்களை விளம்பரம் செய்யும் வகையில் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தீவிரமான விளம்பரத் திட்டத்தை செயலாக்குதல்.
* பிற மாநிலங்களில் சுற்றுலா தகவல் மையங்களை அமைத்தல்.



2003 மே 8]

* உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விற்பனை முகவர்களை நியமித்தல்.
* இந்திய மொழிகள் மற்றும் வெளிநாட்டு மொழிகளில் உயர்தரமான மடிப்பேடுகளை வெளியிடுதல்.
* திரையரங்குகள், இரயில்வே நிலையங்கள், விமான நிலையங்கள், பேருந்து நிலையங்கள் ஆகிய இடங்களில் விளக்கப் படங்களைத் திரையிடுதல்.
* உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல்.
* சுற்றுலாக் கட்டமைப்பு, சுற்றுலாத் தலங்கள் வளர்ச்சி சம்பந்தப்பட்ட பெருந்திட்டங்களைத் தொடங்குதல்.
* சுற்றுலாச் சுற்றுச்சாலை மேம்பாடு.
* கடற்கரைச் சுற்றுலா, ஒலி-ஒளிக்காட்சிகள், கம்பிவழிப் பயணம் போன்ற அதிக வருவாய் ஈட்டித்தரும் திட்டங்களை செயல்படுத்துதல்.
* சுற்றுலாவின் ஆற்றல் திறனை அதிகரித்தல்.
* நீண்டகாலப் பொதுத் துறை - தனியார் துறை கூட்டுறவை வளர்த்தல்.
* சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை தனியார் துறை மேற்கொள்ள ஊக்குவித்தல்.
* ஒற்றைச் சாளர முறைப்படி தனியார் நிறுவனங்கள் அளிக்கும் திட்டக் கருத்துருக்களின்மீது விரைவில் ஆணையிடல்.
* தேவைப்படும் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்.
* கலாச்சாரச் சுற்றுலா வளர்ச்சியில் கவனம் செலுத்துதல்.
* வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் மற்றும் இந்திய வம்சா வழியினர் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

[2003 மே 8

* தமிழ்நாட்டின் கலாச்சாரத்தையும், பாரம்பரியத்தையும் விளக்குகின்ற புதிய விழாக்களை மேலும் அதிகமான சுற்றுலாத் தலங்களில் நடத்தி சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வாய்ப்புகளை விரிவாக்குதல்.

* கடற்கரைப் பகுதி சுற்றுலா

* தமிழ்நாட்டில் சிறப்புமிக்க நீண்ட கடற்கரை உள்ளது. இங்கு தனியார் உதவியுடன் பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் வசதினை அமைத்தல்.

* சுற்றுச்சூழல் சுற்றுலா வளர்ச்சி

  மலைவாசஸ்தலங்கள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள், சதுப்பு நிலக்காடுகள் (Mangrove Forests) போன்றவற்றை பாதுகாக்க வேண்டும். எளிதில் பாதிக்கப்படக்கூடிய இயற்கை சுற்றுச்சூழலுக்கு குந்தகம் விளைவிக்காத வண்ணம், இயற்கை வளங்களைப் பயன்படுத்துதல்.

  மலை ஏற்றம், படகு சவாரி, நீர் விளையாட்டுகள், ஹேங்க் கிளைடிங் (Hang Gliding) போன்றவற்றை அறிமுகம் செய்தல், தற்போதுள்ள வசதிகளை ஒருங்கிணைத்துச் சீராக்குதல்.

* இதர மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து செயல்படுத்துதல்

  பிராந்தியங்களுக்கிடையிலான பயணத் திட்டங்களையும், சுற்றுலா இடங்களையும் முறையாக மேம்படுத்துதல்.

* பிற மாநிலங்களுக்கிடையே சுற்றுலாப் பயணத் தடங்களை விரிவாக்குதல்.

  ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா, உத்தரப் பிரதேசம், உத்ராஞ்சல், இராஜஸ்தான், புதுடெல்லி மற்றும் ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களுடனும், இந்திய அரசு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்துடனும் இணைந்து செயல்பட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்கு வங்காளம், கேரளா, மகாராஷ்டிரா, அந்தமான்—நிக்கோபார் தீவுகள் ஆகியவற்றுடன் சுற்றுலா மேம்பாட்டிற்கான உடன்பாடு ஏற்படுத்திக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



2003 மே 8]

* சுற்றுலாத் தலங்களை விளம்பரப்படுத்த உலகளவில் சந்தைகளைக் கண்டறிந்து அதில் பங்கேற்றல்.

* மின் தகவல் தளம், தொடுதிரை கணினி, விளக்கப் படங்கள் மற்றும் மென் தட்டு ஆகிய வசதிகளை சுற்றுலாத் துறை அமைத்துள்ளது.

* சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் உள்ள அலுவலகங்களிலும் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திலும் கணினி முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது.

* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விடுதிகளில் தங்குவதற்கும், சுற்றுலாப் பயணத் திட்டத்தில் பங்கேற்கவும் இண்டர்நெட் மூலம் முன்பதிவு செய்யவும் வசதிகள் விரைவில் ஏற்படுத்தல்.

### 5.1. சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களை செயல்படுத்த மாநிலங்களுக்கு நிதியுதவி அளிக்கும் மைய அரசின் புதிய கொள்கை

ஏழாவது, எட்டாவது மற்றும் ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட பல சிறிய, தனித்தனியான பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றுலா வளர்ச்சித் திட்டங்களுக்காக மாநில அரசுகளுக்கும், மைய நிர்வாகப் பகுதி அரசுகளுக்கும் மைய அரசின் சுற்றுலாத் துறை நிதியுதவி அளித்து வந்தது. இந்த நிதி உதவி மிகவும் குறைந்ததாக இருந்தது. அதனால் இது நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களின் கட்டமைப்பு வசதிகளில் பெருமளவில் தாக்கத்தினை ஏற்படுத்தவில்லை.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் சுற்றுலாத் துறை துரிதமாகவும் கணிசமாகவும் வளர்ச்சிபெற, புதிய சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்களை மத்திய அரசு சுற்றலாத் துறை தீட்டியுள்ளது. அவற்றில் தமிழ்நாட்டிற்கான திட்டங்கள் பல உள்ளன.

### ஒருங்கிணைந்த சுற்றுலா சுற்றுச்சாலை மேம்பாட்டுத் திட்டம்

இந்தியாவில் உலக தரத்திற்கேற்ப அபிவிருத்தி செய்யப்படத்தக்க 25 சுற்றுலாச் சாலைகள் (Tourism Circuits) பட்டியலை மைய அரசு கண்டறிந்துள்ளது. இதில், தமிழ்நாட்டில் பின்வரும் இரண்டு சுற்றுச்

சாலைகள் இடம் பெற்றுள்ளன:

(அ) சென்னை-மாமல்லபுரம்-பாண்டிச்சேரி-
செஞ்சி-திருவண்ணாமலை-காஞ்சிபுரம்-சென்னை.

(ஆ) தேக்கடி-மதுரை-இராமேஸ்வரம்

இவற்றிற்கான பெருந்திட்டங்களை மைய அரசே தயாரித்து, முழுமையாக நிதி உதவியளிக்கும்.

### முழுமையான கட்டமைப்பு மற்றும் சுற்றுலாத் தல மேம்பாடு

### (Product/Infrastructure and Destination Development)

இத்திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த சுற்றுலா வளர்ச்சிக்கான ஒரு சுற்றுலாத் தலம் ஒவ்வொரு ஆண்டும் தேர்வு செய்யப்படும். 90:10 (மைய அரசு: மாநில அரசு) என்ற அடிப்படையில் நிதியுதவி அளிக்கப்படும். சுற்றுச்சூழல் அபிவிருத்தி, மின் விளக்குகள் அமைத்தல், கழிவு நீர் வசதி, பாதை வசதிகள், தொன்மைச் சின்னங்களைச் சீரமைத்தல், விளம்பரப் பலகைகள், சுற்றுலா தகவல் மையங்கள் அமைத்தல் போன்ற முக்கியப் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்.

### தமிழ்நாடு அரசு 2002-2003-ல் மைய அரசின் நிதி உதவி கோரி பின்வரும் திட்டக் கருத்துருக்களை மைய அரசின் சுற்றுலா அமைச்சகத்திற்கு அனுப்பியது:

| | | |
|---|---|---|
| (1) | மாமல்லபுரத்தில் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு. | ரூ.1900.00 இலட்சம். |
| (2) | கழுகுமலையைக் கிராமியச் சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | ரூ.48.08 இலட்சம். |
| (3) | கோடியக்கரை சுற்றுப்புறச் சூழல் சுற்றுலா மேம்பாடு. | ரூ.274.10 இலட்சம் |
| (4) | முக்கியமான சுற்றுலாத் தலங்களில் விளம்பரப் பலகைகள் அமைத்தல். | ரூ.154.00 இலட்சம் |
| (5) | தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலில் வெள்ள ஒளிவிளக்கு அமைத்தல். | ரூ.16.50 இலட்சம் |



இதில் மைய அரசு 2002-2003 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு நிதி ஒப்பளிப்பு செய்துள்ளது:

| | | |
|---|---|---|
| (1) | மாமல்லபுரம் ஒருங்கிணைந்த சுற்றுலா மேம்பாடு (முதற்கட்டப் பணிகள்) | ரூ.499.85 இலட்சம் |
| (2) | கழுகுமலை கிராமியச் சுற்றுலா மேம்பாடு | ரூ.48.08 இலட்சம் |
| (3) | தஞ்சை பிரகதீஸ்வரர் கோயிலில் வெள்ள ஒளிவிளக்கு வசதி | ரூ.16.50 இலட்சம் |

8-2-2003 அன்று காஞ்சிபுரம் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் தொடக்க விழாவின்போது, மாமல்லபுரம் ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

### முதற்கட்டமாக பின்வரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன:

(அ) கடற்கரைக் கோயில் பகுதி மேம்பாடு

(ஆ) ஐந்து இரதப் பகுதி மேம்பாடு

முதற்கட்டப் பணிகள் முடிந்த பின்னர் 2003-2004-ல் இரண்டாம் கட்டமாக கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்படும்:

* அர்ச்சுனன் தபசு பகுதி மேம்பாடு
* டோலட்சவா மண்டபம்/பூதத்தாழ்வார் மண்டபம் மேம்பாடு.
* பால்வாடி, தொடக்கப் பள்ளி மற்றும் உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றை தற்போது உள்ள இடத்திலிருந்து மாற்றி அவற்றிற்கு புதிய கட்டடம் கட்டுதல்.
* புலிக்குகைப் பகுதி மேம்பாடு
* முகுந்த நாயனார் கோயில் பகுதி மேம்பாடு
* தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நிலம் மேம்பாடு
* தொழிலாளர் நலத் துறை நிலம் மேம்பாடு
* புதிய பேருந்து நிலையம் கட்டுதல்.

இப்பணிகளுக்காக மொத்தம் சுமார் ரூ.19.00 கோடி செலவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் நிலம் மாற்றம் செய்து கையகப்படுத்துதல் போன்றவற்றிற்கு மாநில அரசு தனது பங்காக ரூ.2.13 கோடி செலவிடும்.

### அதிக வருவாய் பெருக்கும் திட்டங்களுக்கு உதவி

மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், தனியார் மூலம் மேற்கொள்ளவிருக்கும் கேளிக்கை பூங்காக்கள், கம்பிவழி பயண வசதி, கடல் பயணிகள் இறங்கும் தளங்கள் (Cruise Terminals), ஆகாயப் பூங்கா (Air Park) ஒலி-ஒளிக்காட்சி அமைத்தல் போன்ற பெரிய அளவில் வருவாய் ஈட்டும் தமிழக அரசின் திட்டங்களுக்கு மைய அரசு மானியமளித்து ஊக்குவிக்கும். இதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

### 5.2. பூர்த்தி செய்யப்பட்ட திட்டங்கள்

2001-2002 ஆம் ஆண்டு வரை மாநில அரசு பரிந்துரை செய்த திட்டங்களை முன்னுரிமைப்படுத்தி மைய அரசு ஒவ்வொரு ஆண்டும் நிதியுதவி வழங்கி வந்தது. அவ்வாறு ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களுக்கு மாநில அரசும் நிதியுதவி அளித்து வந்தது. இதன் அடிப்படையில் 2001-2002 வரை ஒப்பளிக்கப்பட்ட திட்டங்களில் 2002-2003-ல் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் பின்வருமாறு:

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசின் பங்கு | மாநில அரசின் பங்கு | இதர வகை நிதி உதவி | திட்டத்தின் மொத்த மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 1 | கன்னியாகுமரியில் காந்திமண்டபம் அருகிலுள்ள கடற்கரை நடைபாதை மற்றும் நீச்சல் குளம். | 25.00 | 25.00 | .. | 50.00 |
| 2 | திருச்சிராப்பள்ளியில் உயர்கம்ப மின் விளக்கு | 11.35 | .. | 2.90 | 14.25 |





| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 3 | வட்டக் கோட்டையில் வழித்தட வசதிகளை ஏற்படுத்துதல் | 20.00 | 5.00 | .. | 25.00 |
| 4 | கன்னியாகுமரியில் காட்சி கோபுரம் அமைத்தல் | 30.00 | 5.00 | .. | 35.00 |
| 5 | மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் சுற்றுப் பகுதிகளில் சுற்றுச் சூழல் (முதற்கட்டம்) மேம்பாடு | 15.00 | 7.50 | .. | 22.50 |
| 6 | மதுரை இராணி மங்கம்மாள் சத்திரம் புனரமைத்தல் | 10.00 | 5.00 | .. | 15.00 |
| 7 | மாமல்லபுரம், கொடைக்கானல் மற்றும் கன்னியாகுமரி ஆகிய இடங்களில் உள்ள ஓட்டல் தமிழ்நாட்டை மேம்படுத்துதல் | 60.00 | 60.00 | .. | 120.00 |

### 2003-2004-ல் நிறைவுபெறும் நிலையில் உள்ள திட்டங்கள்

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 1 | ஒகேனக்கல்லில் பொதுக்கழிப்பிட வசதிகள் | 12.00 | 4.00 | .. | 16.00 |

[2003 மே 8

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 2. | நாகூரில் பொதுக் கழிப்பிட வசதிகள் | 12.00 | 4.00 | .. | 16.00 |
| 3 | வேளாங்கண்ணியில் பொதுக் கழிப்பிட வசதிகள் | 12.00 | .. | 4.00 | 16.00 |
| 4 | ஒகேனக்கல்லில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு | 13.40 | .. | 6.60 | 20.00 |
| 5 | தஞ்சாவூர் அரண்மனையை புனரமைப்பு செய்தல் | 15.00 | 7.50 | .. | 22.50 |
| 6 | தஞ்சாவூர் பெரிய கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல் | 15.00 | .. | 7.50 | 22.50 |
| 7 | திருத்தணியில் சாலையோர வசதியாக கூடுதல் அறைகள் அமைத்தல் | 20.00 | 5.00 | .. | 25.00 |
| 8 | வேலூர் கோட்டை ஒருங்கிணைந்த மேம்பாடு | 26.60 | 13.40 | .. | 40.00 |
| 9. | திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ஸ்ரீரங்கம் மற்றும் திருவானைக்காவல் கோயில்களைச் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல் | 15.00 | 6.65 | .. | 21.65 |
| 10 | ஏற்காடு (சேலம் மாவட்டம்) மற்றும் ஏலகிரி (வேலூர் மாவட்டம்) ஆகிய இடங்களில் இயற்கை தடங்களை மேம்படுத்துதல். | 4.00 | .. | .. | 4.00 |



2003 மே 8]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 11 | காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளை மேம்படுத்துதல் | 15.00 | 7.50 | .. | 22.50 |
| 12 | காஞ்சிபுரத்தில் சுற்றுலா வளாகம் கட்டுதல் | 24.60 | 6.15 | .. | 30.75 |
| 13 | மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் கோயிலைச் சுற்றியுள்ள இடங்களை மேம்படுத்துதல் (2-வது கட்டம்) | 9.00 | .. | 3.00 | 12.00 |
| 14 | மாமல்லபுரம் ஐந்து இரதங்கள், கடற்கரைக் கோயில் ஆகிய இடங்களைச் சுற்றியுள்ளப் பகுதிகளை மேம்படுத்துதல் | 15.00 | 7.50 | 5.33 | 27.83 |
| 15 | இராமேஸ்வரத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் | 28.50 | 28.50 | .. | 57.00 |
| 16 | மண்டபம் அருகிலுள்ள குருசடைத் தீவில் கண்ணாடி அடித்தளப் படகுகளை அறிமுகம் செய்தல் | 18.90 | .. | .. | 18.90 |
| 17 | கன்னியாகுமரியில் பொதுக் கழிப்பிட வசதிகள் | 12.00 | 4.35 | .. | 16.35 |
| 18 | காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோயில் அருகே பொதுக் கழிப்பிடங்கள் அமைத்தல் | 12.00 | .. | 4.00 | 16.00 |

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 19 | கன்னியாகுமரியில் குடிநீர் வசதிகள் அமைத்தல். | 15.00 | .. | 15.00 | 30.00 |
| 20 | கொடைக்கானலில் வாகனங்கள் நிறுத்துமிடம் அமைத்தல். | 20.00 | .. | 10.00 | 30.00 |
| 21 | திருத்தணியில் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல். | 20.00 | .. | 5.00 | 25.00 |
| 22 | மதுரை திருமலை நாயக்கர் மகால் பகுதியில் வாகனங்கள் நிறுத்துமிடம் மேம்பாடு. | 16.00 | .. | 4.00 | 20.00 |
| 23 | பிச்சாவரத்தில் சுற்றுச்சூழல் அபிவிருத்தி செய்தல். | 50.00 | .. | 5.55 | 55.55 |
| 24 | கோடியக்கரையில் வன விடுதி கட்டுதல். | 25.00 | 4.45 | 5.00 | 34.45 |
| 25 | தஞ்சாவூரில் உயர்கம்ப மின்விளக்கு அமைத்தல். | 20.00 | .. | 1.50 | 21.50 |
| 26 | மதுரையில் பயணிகள் விடுதி (யாத்ரி நிவாஸ்) மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடம் அமைத்தல். | 38.10 | .. | 14.00 | 52.10 |
| 27 | நாகப்பட்டினம் கடற்கரை அழகுபடுத்துதல், நடைபாதை மற்றும் விளக்கு வசதி அமைத்தல். | 9.00 | .. | 9.00 | 18.00 |



| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 28 | திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லியை கிராமிய சுற்றுலாத் தலமாக மேம்படுத்துதல். | 10.00 | .. | 10.00 | 20.00 |
| 29 | திருச்சிராப்பள்ளி மாவட்டம் புளியஞ்சோலை பகுதியில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள். | 17.50 | 17.50 | .. | 35.00 |
| 30 | முட்டுக்காடு படகுக் குழாமிற்கு படகுகள் வாங்குதல் மற்றும் படகு நிலையத்தை மேம்படுத்துதல் (சிறப்புச் சுற்றுலாப் பகுதி). | 20.00 | .. | .. | 20.00 |
| 31 | தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மற்றும் சுற்றுலாத் துறையை கணினி மயமாக்குதல் WAN (Wide Area Net Work Connectivity) தொடர்பு அமைத்தல். | 50.00 | .. | .. | 50.00 |
| | **மொத்தம் ..** | **590.60** | **116.50** | **109.48** | **816.58** |

[2003 மே 8

## 5.3. 2003-2004 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்படவுள்ள மைய அரசு நிதியுதவித் திட்டங்கள்

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 1 | திருவண்ணாமலையில் சுற்றுலாப் பயணிகள் விடுதி (யாத்ரி நிவாஸ் கட்டுதல்). | 39.10 | 5.00 | - | 44.10 |
| 2. | திருச்செந்தூரில் பொதுக்கழிப்பிட வசதிகள் அமைத்தல். | 16.00 | - | 8.00 | 2400 |
| 3. | திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காட்டில் பொதுக் கழிப்பிட வசதிகள் அமைத்தல். | 12.00 | 4.00 | - | 16.00 |
| 4. | கன்னியாகுமரியில் வாகனம் நிறுத்தும் இடம் அமைத்தல். | 50.00 | - | 50.00 | 100.00 |
| 5. | மாமல்லபுரத்தில் வாகனங்கள் நிறுத்தும் இடத்தை மேம்படுத்துதல். | 12.00 | - | 12.00 | 24.00 |
| 6. | வேலூர் கோட்டையினை புனரமைத்தல். | 15.00 | 7.50 | - | 22.50 |
| 7. | மதுரை திருமலை நாயக்கர் மகாலில் நடத்தப்படும் ஒலி-ஒளிக் காட்சியினை நவீனப்படுத்துதல். | 54.65 | 41.53 | - | 96.18 |
| 8. | சென்னை எலியட்ஸ் கடற்கரையில் நடைபாதை, விளக்கு வசதிகள் அமைத்தல் மணல்பரப்புப் பகுதி சீரமைப்பு. | 15.00 | - | 23.53 | 38.53 |



2003 மே 8]

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 9. | ஏலகிரியில் பயணியர் விடுதி (யாத்ரி நிவாஸ்) கட்டுதல். | 30.00 | - | 10.00 | 40.00 |
| 10. | ஏற்காடு மலை மேம்பாடு. | 7.50 | - | 7.50 | 15.00 |
| 11. | மாமல்லபுரத்தில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 13.33 | 6.66 | - | 19.99 |
| 12. | சி.டி.ரோம் (CD Rom) தயாரித்தல் (குறுந்தட்டு). | 1.60 | - | - | 1.60 |
| 13. | தொடுதிரை கணினிகள் நிறுவுதல். | 23.50 | - | - | 23.50 |
| 14. | மாமல்லபுரம் புராதனச் சின்னங்கள் அர்ச்சுனன் தபசு-மேம்படுத்துதல். | 11.25 | 11.25 | - | 22.50 |
| 15. | விழுப்புரம் மாவட்டம் வீடூர் அணைக்கட்டில் சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள். | 5.00 | 5.00 | - | 10.00 |
| 16. | கன்னியாகுமரியில் சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல். | 45.00 | 15.00 | - | 60.00 |
| 17. | திருத்தணியில் உயர்கம்ப மின் விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |

[2003 மே 8

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | மைய அரசு பங்கு | மாநில அரசு பங்கு | இதர வகை நிதி உதவி | மொத்த திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|
| | | (ரூ. இலட்சத்தில்) | | | |
| 18. | திருக்கழுக்குன்றத்தில் உயர்கம்ப மின்விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |
| 19. | திருவண்ணாமலையில் உயர்கம்ப மின்விளக்கு அமைத்தல். | 7.00 | 3.00 | - | 10.00 |
| 20. | செஞ்சியில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல். | 37.50 | 37.50 | - | 75.00 |
| 21. | காஞ்சிபுரத்திலுள்ள அருள்மிகு கைலாசநாதர் கோயிலைச் சுற்றி மேம்பாட்டுப் பணிகள். | 40.00 | 10.00 | 37.00 | 87.00 |
| | மொத்தம் .. | 449.43 | 152.44 | 148.03 | 749.90 |

## 5.4. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்

நீலகிரி மாவட்டத்தில் சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 2002-2003-ல் இத்திட்டத்தின்கீழ் ரூ. 50 இலட்சம் நிதி வழங்கப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| (1) சுற்றுச்சூழல் விழிப்பு விளம்பரப் பலகைகள் அமைத்தல் | - | ரூ. 5.00 இலட்சம் |
| (2) குன்னூர் பெட்-போர்ட் முதல் டால்பின்ஸ் நோஸ் வரை சாலை மேம்பாடு | - | ரூ. 35.00 இலட்சம் |
| (3) நீலகிரிவாழ் உயிரினம், தாவரவியல் வளம் குறித்த மென்தட்டு தயாரித்தல் | - | ரூ. 10.00 இலட்சம் |
| மொத்தம் .. | - | ரூ. 50.00 இலட்சம் |



2003 மே 8]

2003-2004-ல் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் கீழ்க்கண்ட சுற்றுலா மேம்பாட்டுத் திட்டங்கள் ரூ. 75.25 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படவுள்ளன:—

| | | |
|---|---|---|
| (அ) சுற்றுச்சூழல் சுற்றுலா மேம்பாடு | - | ரூ. 46.25 இலட்சம் |
| (ஆ) மீன்காட்சியகம் அமைத்தல் | - | ரூ. 19.00 இலட்சம் |
| (இ) ஊட்டி ஏரிப்பகுதியில் உள்ள படகுக் குழாம் மேம்பாடு | - | ரூ. 10.00 இலட்சம் |
| மொத்தம் | - | ரூ. 75.25 இலட்சம் |

## 5.5. பெரும் சுற்றுலாத் திட்டம் (உத்தேசிக்கப்பட்டுள்ளவை) ஒருங்கிணைந்த கன்னியாகுமரி மேம்பாடு

மாமல்லபுரத்திற்கு அடுத்தபடியாக, கன்னியாகுமரி ஒருங்கிணைந்த மேம்பாட்டுத் திட்டத்தை 2003-2004-ல் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவினை மைய அரசும் மாநில அரசும் ஏற்றுக்கொள்ளும். இத்திட்டத்திற்கு மைய அரசு ரூ. 6 கோடி வரை அதிகபட்சமாக வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சமண புனிதத் தலங்கள் சுற்றுச் சாலை (Jain Theertha Shetra Tourism Circuit) மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட முக்கியமான சமண புனிதத் தலங்கள் உள்ளன:—

திருப்பரத்தி குன்றம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
திருமலை (திருவண்ணாமலை மாவட்டம்)
திருநாதர் குன்றம் (விழுப்புரம் மாவட்டம்)
மேல் சித்தாமூர் (விழுப்புரம் மாவட்டம்)
முத்துப்பட்டி, மேட்டுப்பட்டி (மதுரை மாவட்டம்)
விஜயமங்கலம் (ஈரோடு மாவட்டம்)
கழுகுமலை (தூத்துக்குடி மாவட்டம்)
சிதறால் (கன்னியாகுமரி மாவட்டம்)
வள்ளிமலை (வேலூர் மாவட்டம்)

[2003 மே 8

இப்புனிதத் தலங்களில் மைய அரசு நிதியுதவியுடன் கட்டமைப்பு மற்றும் அடிப்படை வசதிகளை உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. 2003-2004-ல் இதற்கான பெருந்திட்டம் தயாரிக்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்.

### 6.1. மாநில அரசின் கூடுதல் நிதி ஒதுக்கீடு

மாநில அரசு சுற்றுலா வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. சுற்றுலா, பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் பரவலான முறையில் உதவி வருகிறது. சுற்றுலாத் துறைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகுந்த ஆதாவையும் ஊக்கத்தையும் அளித்து வருகிறார்கள். பதவியேற்ற உடனேயே 13-7-2001-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுற்றுலாத் துறையின் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்கள். அச்சமயம் சுற்றுலாத் துறை மேற்கொள்ள வேண்டிய பணிகள், நோக்கங்கள் பற்றி மிகுந்த ஆர்வத்துடன் விளக்கினார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரைக்கேற்ப மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றுலா கட்டமைப்பு மற்றும் விளம்பரப் பணிகளுக்கு அதிக நிதி வசதி தேவைப்பட்டது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

### சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள்

சுற்றுலாத் துறை, தமிழ்நாட்டில் பிற துறைகளுடன் இணைந்து சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் 15 மாவட்டங்களில் உள்ள சுற்றுலாத் தலங்களில் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த சுற்றுலாத் துறை மட்டும் ரூ. 5.00 கோடி செலவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. 2003-2004-ல் ஏற்காடு, பர்வத மலை, சோத்துப்பாறை, கும்பக்கரை நீர்வீழ்ச்சி, சுருளி நீர்வீழ்ச்சி, ஏலகிரி மலை, கொல்லி மலை, பச்சை மலை போன்ற இடங்களில் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த சுற்றுலாத் துறை உத்தேசித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் குடிநீர், பொதுக்கழிப்பிடங்கள், ஓய்வுக் கூடங்கள், மின் விளக்குகள், சிற்றுண்டிச் சாலைகள், நடைபாதை, வாகனம் நிறுத்தும் இடம் போன்ற வசதிகள் ஏற்படுத்தப்படும்.



2003 மே 8]

## கங்கைகொண்ட சோழபுரம் சுற்றுலா வளர்ச்சிப் பணிகள்

2003-2004-ல் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளில் பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாடு முக்கியமான பணியாகும். தஞ்சை பெரிய கோயிலில் உள்ளது போன்று இங்குள்ள "பெருஉடையார்" பிரசித்தி பெற்றது. இக்கோயில் கி.பி. 1023-1029-ல் கட்டப்பட்டதாகும். எனவே இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து இதன் வளர்ச்சிக்கு ரூ. 163.50 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

### 6.2. கன்னியாகுமரி

கன்னியாகுமரியில் சுற்றுலா வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு பின்வரும் திட்டங்கள் 2001-2003-ல் நிறைவேற்றப்பட்டுள்ளன:

| வ. எண் | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1. | சூரியன் மறையும் காட்சிகாணும் இடம் மேம்பாடு, குடில்கள், அமரும் இருக்கைகள், விளக்கு வசதிகள் அமைத்தல். | நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். | 20.00 |
| 2. | கடற்கரையில் சுற்றுச்சுவர் கட்டுதல், சுற்றுச்சுவரைப் பராமரித்தல். | சிறுசேமிப்பு ஊக்குவிப்பு. | 5.00 |
| 3. | நீர்ஊற்று கட்டுதல், காந்தி மண்டபத்திற்கு எதிரில் பூங்கா அமைத்தல். | சுய தேவைத் திட்டம். | 5.00 |
| 4. | கன்னியாகுமரியில் அலங்கார நுழைவாயில் அமைத்தல். | சுய தேவைத் திட்டம். | 5.00 |

| வ. எண் | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 5. | காமராசர் நினைவு மண்டபம் காட்சி கோபுரம் இடையே அமர்ந்து கடல் பார்க்கும் வசதி செய்தல். | சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். | 12.00 |
| 6. | வட்டகோட்டையில் சிறுவர் பூங்கா உள்ளிட்ட இடங்களில் பாதைவழி வசதிகள் செய்தல், அழகான செடிகள் வளர்த்தல், சிற்றுண்டி நிலையத்திற்கு தளவாடங்கள் வாங்குதல், தங்கும் அறை, சமையல் அறை வசதி ஆகியவை அமைத்தல். | சுற்றுலாத் துறை | 25.00 |
| 7. | காட்சிக்கோபுரம் கட்டுதல் மற்றும் தொலைநோக்கு வசதி செய்தல். | சுற்றுலாத் துறை | 36.76 |
| 8. | கன்னியாகுமரியில் பொதுக்கழிப்பறை அமைத்தல். | சுற்றுலாத் துறை | 16.35 |
| 9. | காந்தி மண்டபத்திலிருந்து கடற்கரை வரை நடைபாதை அமைத்தல். | சுற்றுலாத் துறை | 50.00 |
| 10. | காட்சிக்கோபுரத்தில் இரண்டு முறை வண்ணம் பூசுதல் | சிறுசேமிப்பு ஊக்கத் தொகை. | 3.25 |
| 11. | கல்மண்டபம் கட்டுதல், அரசு அருங்காட்சி யகத்திற்கு நுழைவு வாயில் பெயர் பலகை நிறுவுதல். | சிறுசேமிப்பு ஊக்கத் தொகை. | 1.67 |





## சங்குத் துறை கடற்கரை

| வ. எண். | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 12. | சங்குத் துறை கடற்கரை, தங்கும் நிழற்குடை, அமரும் இருக்கைகள் ஆகியவற்றை அழகுபடுத்துதல். | ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம். | 1.40 |
| 13. | குழந்தைகள் பூங்கா மற்றும் சங்குத் துறை கடற்கரையில் மின்விளக்கு வசதிகள் செய்தல். | ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம். | 0.60 |
| 14. | அலங்கார வேலை அமைப்பு மற்றும் சல்பேட் பாதுகாப்பு வேலைப்பாடு. | வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். | 0.88 |
| 15. | சிருந்து நிறுத்துவதற்காக சாலையை அகலப்படுத்துதல். | ஜவகர் கிராம வளர்ச்சி திட்டம். | 0.77 |

## சொத்தவிளை கடற்கரை

| வ. எண். | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 16. | சொத்தவிளை கடற்கரையை அழகுபடுத்துதல் மற்றும் காட்சிக்கோபுரம், குடில், கடற்கரையில் அமரும் இருக்கைகள் அமைத்தல். | நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 5.00 |
| 17. | சொத்தவிளை கடற்கரையில் சிறுவர் பூங்கா அமைத்தல். | சிறுசேமிப்பு ஊக்கத்தொகை. | 1.50 |

| வ. எண் | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- | --- |
| 18. | சொத்தவிளை கடற்கரையை மேலும் அபிவிருத்தி செய்தல். (காட்சிக்கோபுரம், சிறுவர் விளையாட்டுப் பூங்கா, குப்பைத் தொட்டிகள் அமைத்தல்). | சிறுசேமிப்பு ஊக்கத்தொகை. | 1.50 |

**முட்டம் கடற்கரை**

| வ. எண் | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- | --- |
| 19. | முட்டத்தில் சிறு கடைகள் கட்டுதல். | பொன்விழா மறுமலர்ச்சித் திட்டம். | 1.60 |
| 20 | இரண்டு கடைகள் கட்டுதல், சங்குத் துறை கடற்கரை பகுதி சுத்தப்படுத்துதல். | ஜவகர் கிராம வளர்ச்சித் திட்டம். | 1.60 |
| 21. | பாதுகாப்பு வேலி அமைத்தல், பாறைப்படிகள் அமைத்தல். | மாநில நிதிக் குழு மானியம். | 5.00 |
| 22. | முட்டத்தில் சூரிய ஒளி விளக்கு அமைத்தல் | சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். | 1.60 |
| 23. | பள்ளம்-மணக்குடி கடற்கரைச் சாலை அமைத்தல். | பிரதமர் முழு கிராம வளர்ச்சித் திட்டம். | 45.83 |
| 24. | கோவளம்-அந்தோணியார் ஆலயம்-வேளாங்கண்ணி மாதா கோயில் கடற்கரைச் சாலையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை சாலை மேம்பாடு செய்தல். | பிரதமர் முழு கிராம வளர்ச்சித் திட்டம். | 9.90 |



| வ. எண் | பணிகள் | திட்டத்தின பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- | --- |
| 25. | இனையம்புத்தம் துறை கடற்கரைச் சாலை மேம்பாடு. | பிரதமர் முழு கிராம வளர்ச்சித் திட்டம். | 7.35 |
| 26. | முட்டம் கடற்கரை சாலை அபிவிருத்தி. | பிரதமர் முழு கிராம வளர்ச்சித் திட்டம். | 2.70 |

**மாத்தூர் தொட்டிப்பாலம்**

| வ. எண் | பணிகள் | திட்டத்தின பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
| --- | --- | --- | --- |
| 27. | தொட்டிப்பாலம் அருகில் சிறுவர் பூங்கா அமைத்தல். | ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம். | 2.60 |
| 28. | தரை மட்டத்திலிருந்து மாத்தூர் தொட்டிபாலத்திற்கு படிக்கட்டுகள் அமைத்தல். | வேலைவாய்ப்பு உறதித் திட்டம். | 2.00 |
| 29. | மாத்தூர் தொட்டி பாலத்தில் குளியல் அறை அமைத்தல். | வேலைவாய்ப்பு உறுதித் திட்டம். | 0.35 |
| 30. | மாத்தூர் தொட்டிப் பாலத்தை அபிவிருத்தி செய்து சீரமைத்தல். | சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். | 4.00 |
| 31. | திற்பரப்பில் நடைபாலம் அமைத்தல். | சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம். | 6.50 |
| 32. | திற்பரப்பு நீர்வீழ்ச்சியில் நீச்சல் குளம் அமைத்தல். | சிறுசேமிப்பு ஊக்கத் தொகை. | 4.50 |

**தக்கலை (உதயகிரி கோட்டை)**

| வ. எண் | பணிகள் | திட்டத்தின் பெயர் | செலவு மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | உதயகிரி கோட்டையிலும் மான்கள் பூங்காவிலும் மேம்பாட்டுப் பணிகள். | சிறுசேமிப்பு ஊக்கத்தொகை | 5.85 |
| | மொத்தம் | | 293.06 |

**இராமேசுவரம்:**

**(6.3) இராமேசுவரத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் விவரம்**

| | | |
|---|---|---|
| 1) | டி.எஸ்.பி. ஆலை வழியாக ஓலக்குடாவிற்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் இணைப்புச் சாலையிலிருந்து பி.டி. சாலை அமைத்தல். | ரூ. 5.00 இலட்சம் |
| 2) | இராமேசுவாத்தில் அரசு விருந்தினர் மாளிகைக்கு எதிரில் கடற்கரைப் பூங்கா அமைத்தல். | ரூ. 21.00 இலட்சம் |
| 3) | பாம்பன் முதல் இராமேசுவரம் வரை தேசிய நெடுஞ்சாலை எண் 49-ன் இருபக்கங்களிலும் மரங்கள் நடுதல். | ரூ. 5.00 இலட்சம் |
| 4) | சுடுகாட்டான்பட்டி வழியாக இராமேசுவரம் முதல் ஆஞ்சநேயர் கோயில் வரை பி.டி. சாலை அமைத்தல். | ரூ. 8.80 இலட்சம் |
| 5) | சங்குமால் (இராமேசுவாம்) கட்டுமலையில் கழிப்பிட வசதி அமைத்தல். | ரூ. 1.10 இலட்சம் |
| 6) | இராமேசுவரத்திலிருந்து மண்டைக்காடு வரை பி.டி. சாலை அமைத்தல். | ரூ. 3.00 இலட்சம் |
| 7) | இராமேசுவரத்திலிருந்து ஜடாயுதீர்த்தம் வரை பி.டி. சாலை அமைத்தல். | ரூ. 13.10 இலட்சம் |
| 8) | இராமேசுவரத்தில் சுற்றுலா இல்லம் அமைத்தல். | ரூ. 35.00 இலட்சம் |
| | மொத்தம் | ரூ. 92.00 இலட்சம் |



## 7) சொகுசு வரி குறைப்பு

தமிழ்நாட்டில் வசூலிக்கப்படும் சொகுசு வரி இதர மாநிலங்களைக் காட்டிலும் அதிகம் (25%) என்று சுற்றுலாப் பயணிகளும், ஓட்டல் உரிமையாளர்களும் கருதினர். சொகுசு வரியைக் குறைக்க வேண்டுமென்று பலதரப்பட்ட மக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கோரிக்கைகளைப் பரிவுடன் பரிசீலித்தார்கள். மேலும் தனிப்பட்ட முறையில் அவர்கள் எடுத்துக்கொண்ட பெரும் முயற்சியாலும் அவர்களின் அறிவுரையின்படியும் டிசம்பர் 2002-ல் சொகுசு வரிகளைப் பின்வருமாறு குறைத்து, அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**குறைக்கப்பட்ட சொகுசு வரி விவரம் பின்வருமாறு:**

| | | | வரி சதவீதம் (கட்டணத்தில்) |
|---|---|---|---|
| 1) | நாளொன்றுக்கு ஓர் அறைக்கு விடுதிக் கட்டணம் இருநூறு ரூபாய்க்குக் குறையாமலும், ஐநூறு ரூபாய்க்கு மிகாமலும் உள்ள விடுதி. | .. | 5 சதவீதம் |
| 2) | அத்தகைய கட்டணம் நாள் ஒன்றுக்கு ஓர் அறைக்கு ஐநூறு ரூபாய்க்குக் குறையாமலும் ஆயிரம் ரூபாய்க்கு மிகாமலும் உள்ள விடுதி. | .. | 10 சதவீதம் |
| 3) | நாள் ஒன்றுக்கு ஓர் அறைக்கு ஆயிரம் ரூபாய் அல்லது அதற்கு அதிகமாகவும் உள்ள விடுதி. | .. | 12.5 சதவீதம் |

இந்த சொகுசு வரிக் குறைப்பை சுற்றுலாப் பயணிகள், ஓட்டல் உரிமையாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைவரும் வரவேற்றுள்ளனர். இது மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஊக்கத்தினை அளித்துள்ளது.

[2003 மே 8

## 8) தனியார் முதலீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள்

[கூட்டுத்திட்டம், சமபங்கீட்டு குத்தகை, அமைப்பு, செயல், மாற்றம் (B.O.T.) அமைப்பு, செயல், குத்தகை, மாற்றம் (B.O.L.T.) மூலம்]

தமிழ்நாடு தனியார் முதலீட்டாளர்களின் சொர்க்கம் என்று இன்று கருதப்படுகிறது. தனியார் பெருமளவில் அனைத்துத் துறைகளிலும் முதலீடு செய்வதற்கு உகந்த சூழ்நிலைகளும், வசதிகளும் தமிழ்நாட்டில் உள்ளன.

### பண்பாட்டுக் கிராமம்/அமைதிப் பூங்கா/நட்சத்திர விடுதிகள்

மாமல்லபுரம் அருகே பண்பாட்டுக் கிராமம்/அமைதிப் பூங்கா அமைப்பது மற்றும் பழநி, நாகூர், வேளாங்கண்ணி, திருவண்ணாமலை ஆகிய இடங்களில் மூன்று நட்சத்திரத் தாம் வாய்ந்த ஓட்டல்கள் கட்டுவது குறித்து ஏற்கெனவே திட்டமிடப்பட்டுள்ளது. அதன்படி, மாமல்லபுரத்தில் "பண்பாட்டுக் கிராமமும்" முட்டுக்காட்டில், "அமைதிப் பூங்காவும்" தனியார் பங்கேற்புடன் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மூன்று நட்சத்திர ஓட்டல் கட்டுவது தொடர்பாக முதலீட்டாளர்கள் தங்களின் விருப்பத்தினைத் (Expression of Interest) தெரிவிக்கும்படி விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் இப்பணிகள் துரிதப்படுத்தப்படும்.

### ஆகாய சாகச விளையாட்டுப் பூங்கா, சென்னை

நீர் விளையாட்டு, மலையேற்றம் போன்ற சாகச விளையாட்டுகளை சுற்றுலாத் துறை ஏற்கெனவே நடத்தி வருகிறது. தொங்கும் கிளைடிங் (Hang Gliding), பாராகிளைடிங், பாரா செய்லிங், பறக்கும் சிமுலேட்டர், பலூன் பயணம் (Hot air Baloon Flight) போன்ற விளையாட்டுகளுக்கான ஆகாய சாகச விளையாட்டுப் பூங்கா ஒன்று சென்னைக்கு அருகில் அமைக்கப்படவுள்ளது.

### மாமல்லபுரத்தில் சாகச விளையாட்டுப் பூங்கா

மாமல்லபுரத்திற்கு வருகைபுரியும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்க அங்குள்ள வசதிகள் அதிகரிக்கப்படும். மாமல்லபுரத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக விடுதி வளாகத்தில் கடல் நீர் சாகச விளையாட்டுப் பூங்கா அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பூங்காவில்



2003 மே 8]

வாட்டர் சர்பிங், வாட்டர் ஸ்கூட்டர், மீன் பிடித்தல் போன்ற பொழுதுபோக்கு விளையாட்டு வசதிகள் இருக்கும்.

### கன்னியாகுமரியில் 'ஸ்பா' (Spa) உலாத்தலம்

உடல்நலம் காப்பது பற்றிய விழிப்புணர்வு இன்று அதிகரித்துள்ளது. எனவே மாற்று மருத்துவ முறை முக்கியத்துவம் பெற்று வருகிறது. இப்புதிய வகை சிகிச்சைக்கு மையங்களும் மருத்துவர்களும் தேவைப்படுகின்றன. உடல், உள்ளம், உணர்வு, ஆத்மா ஆகியவற்றுடன் நல்லிணக்கமாகவுள்ள பஞ்ச மூல பொருட்களுடன் இணைந்துள்ள முறை, மாற்று மருத்துவ முறை ஆகும். கன்னியாகுமரியில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ள "ஸ்பா"வில் இந்த வசதிகள் இருக்கும்.

### கம்பிவழிப் பயணம் (Ropeway)

மலைப்பகுதி, பள்ளத்தாக்கு மற்றும் இரண்டு மலைகளுக்கிடையே உள்ள பகுதிகளுக்கு மனிதர்களையும், பொருட்களையும் அனுப்புவதற்காக கம்பிவழி வசதி உலகம் முழுவதும் உபயோகப்படுத்தப்படுகிறது. சுற்றுலாத் தலங்களில் கம்பிவழிப் பயணம் பெரிதும் பயன்படுகிறது. கம்பிவழிப் பயணத்தில் தாழ்வான பகுதிகளில் அமைந்துள்ள இயற்கையின் வனப்பைக் கண்டுகளிக்க இயலும். தமிழ்நாட்டில் கன்னியாகுமரி, உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் ஏற்காட்டில் கம்பிவழிப் பயணம் அமைக்க வசதிகள் உண்டு. இத்திட்டத்திற்காக ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### ஒளி-ஒலிக் காட்சி

1981 முதல் மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒளி-ஒலிக் காட்சி நடத்தப்பட்டு வருகிறது. நீண்ட காலமாக இக்காட்சி நடைபெற்று வருவதால் அதன் சிறப்புத் தன்மை குறைந்துள்ளது. எனவே இதனை மைய/ மாநில அரசு நிதியுதவியுடன் ரூ. 96.18 இலட்சம் மதிப்பீட்டில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழக தொழில்நுட்ப உதவியுடன் நவீனமயமாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மேலும், மாமல்லபுரம், தஞ்சாவூர், காஞ்சிபுரம் மற்றும் கன்னியாகுமரியில் இதுபோன்ற ஒளி-ஒலிக் காட்சி அமைக்க திட்டமிடப்படுள்ளது. இப்பணியில் இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழக சுற்றுலாத் துறையுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளது.

[2003 மே 8

## கேளிக்கை வசதிகள்

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் தங்கும் நாட்களை நீட்டிப்பது பல காரணங்களைப் பொறுத்துள்ளது. தேர்வு செய்யப்பட்ட சில இடங்களில் இரவில் தங்க கட்டமைப்பு மற்றும் கேளிக்கை வசதிகள் அவ்விடங்களில் தேவைப்படுகின்றது. பொதுவாக, சுற்றுலாத் தலங்களில் கேளிக்கை வசதிகள், பூங்காக்கள், கோல்ப் விளையாட்டு மைதானம், குதிரைப் பந்தயம், ஆகாயம்/கடல் சாகச விளையாட்டு, மலை ஏற்றம் போன்ற வசதிகள் வேண்டுமென்று சுற்றுலாப் பயணிகள் விரும்புகின்றார்கள். இத்தகைய கேளிக்கை வசதிகள் போதுமான அளவில் சென்னையில் உள்ளன. ஆனால் ஆண்டு முழுவதும் சுற்றுலாப் பயணிகள் விரும்பிப்போகும் இதர சுற்றுலாத் தலங்களில் இத்தகைய வசதிகள் போதுமான அளவில் இல்லை. எனவே மாவட்டங்களில் இத்தகைய கேளிக்கை பூங்கா, சாகசப் பூங்காக்களைத் தனியார் பங்கேற்புடன் நிறுவ இத்துறை நடவடிக்கை எடுக்கும். முதற்கட்டமாக காஞ்சிபுரம், கன்னியாகுமரி, தஞ்சாவூர், இராமேசுவரம் மற்றும் மதுரை போன்ற இடங்களில் கேளிக்கை பூங்காக்கள் அமைக்கப்படும். இவற்றை தனியார் நிறுவனங்கள் அமைக்க, அவர்களுக்குத் தேவையான உதவிகளை அரசு வழங்கும். இவை உலகத்தரத்துடன் ஒப்பிடும் அளவிற்கு அமைக்கப்படும். கேளிக்கை பூங்காக்கள் அமைப்பதால் சுற்றுப்புறச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பார்த்துக்கொள்ளப்படும்

## (9) தொலைநோக்குத் திட்டம்

தமிழ்நாட்டில் சுற்றுலா வளர்ச்சிக்காக, மைய அரசு 20 ஆண்டு நீண்டகால தொலைநோக்குத் திட்டத்தைத் தயாரித்து வருகிறது. இதற்கான வரைவு அறிக்கையை தமிழ்நாடு சுற்றுலாத் துறை பரிசிலனை செய்து, தனது கருத்துகளை மைய அரசுக்கு அளித்துள்ளது. விரைவில் இத்தொலைநோக்குத் திட்டத்தை மத்திய அரசு வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## (10) சுற்றுலா மேம்பாடு மற்றும் விளம்பரம்

தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணிகள் வருகையை அதிகப்படுத்தி, அவர்கள் தமிழ்நாட்டில் தங்கும் நாட்களையும் அதிகரிக்க வேண்டுமென்ற இலக்கினை அடைய, விளம்பரம், மக்கள் தொடர்புப் பணிகளை நம் மாநிலத்திற்கு வரக்கூடிய, சுற்றுலாப் பயணிகள் வாழ்கின்ற அல்லது படிக்கின்ற அல்லது பணிபுரியும் இடங்களிலேயே மேற்கொள்ளும் ஒரு



2003 மே 8]

புதிய விளம்பர அணுகுமுறையை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளை உள்ளூர ஈர்க்கும் வகையில் புதிய விளம்பர யுத்திகள் செயலாக்கப்படும்.

### பத்திரிகை விளம்பரம்

சுற்றுலா வளங்களைச் சித்தரிக்கும் விளம்பரங்கள், நாளிதழ்களிலும், பருவ ஏடுகளிலும் வெளியிடப்பட்டு வருகின்றன. நம் நாட்டில மட்டுமல்லாமல் வெளிநாட்டுப் பருவ இதழ்களிலும். விமானங்களில் விநியோகிக்கப்படும் இதழ்களிலும் விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன.

### மின்னணு சாதனங்கள் மூலம் விளம்பரங்கள்

தமிழ்நாட்டின் சுற்றுலா வளம், தொலைக்காட்சிகள், நகரும் மின் தகவல் பலகைகள், வலைத் தளம் ஆகியவை மூலம் விளம்பரம் செய்யப்படுகிறது. அண்மையில் தமிழ்நாடு சுற்றுலா குறித்த குறுந்தட்டு (C.D. Rom) ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது. பல புதிய தகவல்களை இணைத்து மேலும் விவரங்கள் கொண்ட புதிய குறுந்தட்டு ஒன்றினைத் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாப் பயணிகள் தாமே தகவல்களைத் தெரிந்துகொள்ளும் வகையில் தொடுதிரைக் கணினி (Touch Screen) ஒன்று சென்னை சுற்றுலா வளாகத்திலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் முன்பதிவு அலுவலகத்தில் நிறுவப்பட்டுள்ளது.

### விளம்பரப் பலகைகள்

தேசிய நெடுஞ்சாலைகளிலும், சுற்றுலாப் பயணிகள் அதிகமாகப் பயன்படுத்தும் வழித்தடங்களிலும் விளம்பரப் பலகைகள் அமைக்கப்படுகின்றன.

### (11.1) மாநில அளவில் விளம்பரம்

செய்தித் துறை நடத்தும் அனைத்துப் பொருட்காட்சிகளிலும் இத்துறை பங்கேற்று சுற்றுலா வளங்கள், வாய்ப்புகள் பற்றி விளக்குகிறது. முக்கிய விழாக்கள் நடைபெறும் இடங்களிலும் சுற்றுலாத் தகவல் மையங்கள் அமைக்கப்படுகின்றன. மாவட்டங்களிலிருந்து வெளிவரும் நாளிதழ்கள், பருவ இதழ்களில் அவ்வப்போது விளம்பரம் வெளியிடப்படுகிறது. கையேடுகள், வரைபடங்கள், படங்கள் அச்சிட்ட அட்டைகள், சுவரொட்டிகள் அச்சிடப்பட்டு சுற்றுலாத் துறையின்கீழ்

உள்ள அலுவலகங்கள் மற்றும் சுற்றுலா தகவல் மையங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகின்றன. இவ்வாண்டு சென்னையிலும், மதுரையிலும் இந்தியத் தொழில் கூட்டமைப்புடன் இணைந்து "சென்னை விழா"-வும், "மதுரை அபூர்வம்" விழாவும் நடத்தியது சிறப்பான நடவடிக்கைகளாகும். தனியார் ஒத்துழைப்புடன் இதுபோன்ற நிகழ்ச்சிகள் வரும் ஆண்டுகளில் அதிக அளவில் நடத்தப்படும். தமிழ்நாட்டின் சுற்றுலா வளத்தைச் சித்தரிக்கும் வண்ணமிகு கைப்பை தயாரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டது. சுற்றுலாத் தலங்கள் பற்றிய முழு விவரம் கூறும் சுற்றுலா நூல் (Tourism Guide Book) பல மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## (11.2) தேசிய அளவில் விளம்பரம்

வெளிமாநிலங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்கள் மூலம் விளம்பரம் மேற்கொள்ளப்படுகின்றது. இதர மாநிலங்களின் சுற்றுலாத் துறைகளுடன் தொடர்பு கொண்டு பரஸ்பர அடிப்படையில் தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் விளம்பரப்படுத்தப்படுகின்றன.

பிற மாநில மொழிகளில், குறிப்பாக இந்தி, குஜராத்தி, மராத்தி, ஒரியா, தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடத்தில் மடிப்பேடுகளை வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. புவனேஸ்வர், கொல்கத்தா, லக்னோ, மும்பை, பெங்களூர், ஹைதராபாத், அஹமதாபாத் மற்றும் போபால் போன்ற பிற மாநிலத் தலைநகரங்களில் விளம்பர முகாம்கள் நடத்தப்பட்டன. 2003-2004-ல் புவனேஸ்வர், இந்தூர், புனே, சிம்லா, லக்னோ, வாரணாசி, அஹமதாபாத், கௌஹாத்தி, சூரத் போன்ற இடங்களிலும் மாநில சுற்றுலா வளம் பற்றி விளம்பர முகாம்களை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## (11.3) வெளிநாடுகளில் விளம்பரம்

மைய அரசின் சுற்றுலா அலுவலகங்கள் வெளிநாடுகளில் 13 இடங்களில் செயல்பட்டு வருகின்றன. அவ்வலுவலகங்களின் சேவையை இத்துறை பயன்படுத்தி வருகிறது. துண்டுப் பிரசுரங்கள், குறுந்தட்டு (C.D. Rom) ஆகியவை இவ்வலுவலகங்கள் மூலம் வெளிநாடுகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் விற்பனை முகவர்கள் லண்டனிலும், மலேசியாவிலும், பாங்காக்கிலும் செயல்பட்டு வருகிறார்கள். பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகளில் இத்துறை பங்குகொள்வது ஒரு முக்கிய விளம்பரப் பணியாகும். லண்டன், சிங்கப்பூர், பெர்லின், மொரிசியஸ், தென்



ஆப்பிரிக்கா, மலேசியா, குவைத், அமெரிக்கா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளில் முக்கியமான சுற்றுலாச் சந்தைகள் ஆண்டுதோறும் நடைபெறுகின்றன. 2002 ஆம் ஆண்டு நவம்பரில் லண்டனில் நடைபெற்ற WTM (World Travel Mart) மாநாட்டிலும், 2003 மார்ச்சில் பெர்லினில் நடைபெற்ற ITB மாநாட்டிலும் இத்துறை பங்கேற்றது. இந்த மாநாடுகள் நடைபெறும் சமயத்தில் வெளிநாடுகளில் பிரசுரிக்கப்படும் பருவ இதழ்களில் தமிழ்நாடு சுற்றுலா குறித்த விளம்பரங்கள் வெளியிடப்பட்டன. 2003-2004-ல் குறைந்தது ஐந்து பன்னாட்டு சுற்றுலாச் சந்தைகளிலாவது இத்துறை பங்குகொள்ள உத்தேசித்துள்ளது. 2002-2003-ல் பன்னாட்டுத் தரத்திற்கேற்ற வகையில் சிறு வெளியீடுகள் ஜப்பானிய மொழியில் டோக்கியோவிலுள்ள மைய அரசின் சுற்றுலா அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் வெளியிடப்பட்டன. நடப்பு ஆண்டில் இன்னும் அதிகமான அந்நிய மொழிகளில் வெளியீடுகள் தயாரிக்கப்படும். இங்கிலாந்து மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளில் சுற்றுலாப் பயணிகளின் தகவலுக்காக விமானங்களில் விநியோகிக்கப்படும் பருவ இதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து வெளிவரும் பருவ இதழ்களிலும் தமிழ்நாடு சுற்றுலா பற்றி கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. விடுதி மற்றும் சுற்றுலாப் பயண தகவல்களை அறிய வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தகவல் தளத்தை பெரிதும் பயன்படுத்தி வருகிறார்கள். "பிரவாசி பாரதிய நிவாஸ் சம்மேளன், புதுடெல்லி ஜனவரி 2003" என்ற நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை பங்குபெற்று தமிழ்நாட்டின் சுற்றுலா வளம் குறித்து அயல்நாட்டில் வாழும் இந்தியர்களிடையே விளம்பரம் செய்தது.

## அண்டை நாடுகளிலிருந்து சுற்றுலாப் பயணிகளைக் கவருதல்

சுற்றுலாவிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் திறன் உண்டு. வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் அதிகமாக செலவு செய்பவர்கள் என்பதால் அந்நியச் செலாவணி அதிகமாகக் கிடைக்க வாய்ப்புள்ளது. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் சுற்றுலாத் துறை எடுக்கும். லண்டன், மலேசியா மற்றும் பாங்காக் ஆகிய இடங்களிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக முகவர்கள் தமிழ்நாட்டின் சுற்றுலா வளங்கள் பற்றி விளம்பரம் செய்து வருகின்றனர். 2003-2004-ல் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள பண்பாடு சார்ந்த (Ethnic Tourists) சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டிற்கு ஈர்க்க அதிகமான வாய்ப்புகள் உள்ளதால் அவர்களை ஈர்க்க தனிச் கவனம் செலுத்தப்படும். எனவே அந்த

நாடுகளில் விற்பனை முகவர்களை நியமித்தல், விளம்பர முகாம் நடத்துதல், சுற்றுலாச் சந்தைகளில் கலந்துகொள்ளுதல் போன்ற நடவடிக்கைகளை எடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலும் வெளிநாடுகளிலுமுள்ள தூதாகங்கள் மற்றும் உதவி தூதாக அலுவலகங்கள் மூலம் ஒருங்கிணைப்பையும் இணக்கமான ஒத்துழைப்பையும் பெறுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். தொலைக்காட்சி, பத்திரிகை விளம்பரங்கள் மூலம் அண்டை நாடுகளில் பேசப்படும் மொழிகளில் பிரச்சாரம் மேற்கொள்ளப்படும்.

### (11.4) ஸ்கால் (SKAL) மாநாடு

சுற்றுலாவுடன் தொடர்புள்ள பல்வேறு நிறுவனங்களை ஒன்று சேர்க்கும் பன்னாட்டு அமைப்பு 'ஸ்கால்' எனப்படும். 1937-ல் பாரிசில் முதல் "ஸ்கால்" சங்கம் அமைக்கப்பட்டது. இந்த அமைப்பின் 500 கிளைகள், 80 நாடுகளில் 25,000-க்கும் மேற்பட்ட உறுப்பினர்களுடன் செயல்படுகின்றன. இவ்வமைப்பு பல்வேறு நாடுகளில் ஆண்டுதோறும் 5 நாட்கள் மாநாட்டினை நடத்துகின்றது. 2003 அக்டோபரில் "ஸ்கால்" அமைப்பு சென்னையில் மாநாட்டை நடத்தவுள்ளது. இதில் 1,200-க்கும் அதிகமான பன்னாட்டுப் பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய மாபெரும் மாநாடு இந்தியாவில், குறிப்பாக சென்னையில் முதல் முறையாக நடைபெற உள்ளது. தமிழ்நாடு அரசு சுற்றுலாத் துறை இம்மாநாட்டை "ஸ்கால்" அமைப்புடன் இணைந்து நடத்த உத்தேசித்துள்ளது. இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டின் கலை, பண்பாடு, கைவினைப் பொருட்கள், பட்டாடைகள், பாரம்பரியம், வாலாறு, நம் மக்களின் விருந்தோம்பல் தன்மை போன்றவற்றிற்கு பன்னாட்டைச் சேர்ந்த முக்கியப் பிரதிநிதிகளிடையே சிறப்பான விளம்பாமும் ஆதாவும் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## (12) தகவல் தொழில்நுட்பம்

சுற்றுலாத் துறையின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்கள், 21 சுற்றுலாத் தகவல் மையங்கள் உள்ளன. இவற்றில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமேசுவரம், தருமபுரி, கொடைக்கானல், மதுரை, உதகமண்டலம், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பூம்புகார், சிதம்பரம், மாமல்லபுரம் மற்றும் சென்னையில் உள்ள சுற்றுலா அலுவலகங்களில் கணினிகள் நிறுவப்பட்டுள்ளன. 2003-2004-ல் கோவா, மும்பை, புதுடெல்லி, ஆக்ரா, ஜெய்ப்பூர் ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்களிலும்,





திருவனந்தபுரம்,, பெங்களூர் மற்றும் ஹைதராபாத்திலுள்ள சுற்றுலாத் தகவல் மையங்களிலும் கணினிகள் நிறுவப்படும்.

மும்பை, கோவா, கொல்கத்தா, புதுடெல்லி ஆகிய இடங்களிலுள்ள சுற்றுலா அலுவலகங்களிலும், ஹைதராபாத், பெங்களூர் மற்றும் திருவனந்தபுரத்திலுள்ள சுற்றுலா தகவல் மையங்களிலும நிகரி (Fax) வசதிகள் உள்ளன. 2003-2004-ல் ஆக்ரா, ஜெய்ப்பூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, இராமேசுவரம், தருமபுரி, கொடைக்கானல், உதகமண்டலம், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், பூம்புகார், சிதம்பரம், மாமல்லபுரம் மற்றும் சென்னையிலுள்ள சுற்றுலா அலுவலகங்களில் நிகரி வசதி (Fax) அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அனைத்து அலுவலகங்களிலும் கணினி முறை அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் சுற்றுலா அலுவலகங்கள், சுற்றுலா தகவல் மையங்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பிரிவுகள் ஒன்றோடொன்று வான் இணைப்பு (WAN Connectivity) மூலம் இணைக்கப்படும். இதன் மூலம் சரியான தகவல்களைச் சேகரித்துவைத்து, தேவைப்படும்பொழுது துல்லியமாகப் பெற்றுக்கொள்ள இயலும். சுற்றுலாப் பயணத் திட்டங்களில் இருக்கைகள் முன்பதிவு செய்ய, விடுதிகளில் அறை முன் பதிவு செய்ய, சுற்றுலாப் பயணிகளுக்கு ஆன்லைன் (On Line) வசதிகள் செய்து கொடுப்பதுதான் நமது இலக்காகும். வான் (WAN Connectivity) தொடர்பு வசதி அமைப்பதற்காக மைய அரசு ரூ.50 இலட்சம் நிதி உதவி அனுமதித்துள்ளது. இப்பணி விரைவில் முடிவுறும்.

### (13.1) மனிதவள மேம்பாடு - வழிகாட்டிகள் பயிற்சி

சுற்றுலாத் தலங்கள், விடுதிகள், உணவு வகை, போக்குவரத்து போன்றவை பற்றி தகுந்த தகவல்களை, வழிகாட்டிகள் சுற்றுலாப் பயணிகளுக்கு தருகின்றனர். இவர்களுக்குப் பயிற்சி மிகவும் தேவை. மேலும், படித்த இளைஞர்களுக்கு இப்பயிற்சி வேலைவாய்ப்பினையும் அளிக்கிறது. எனவே 2003-2004-ல் வழிகாட்டிப் பயிற்சிகள் வழங்கப்படும்.

### (13.2) உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில் பயிற்சி

சுற்றுலா, விருந்தோம்பலை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே வரவேற்பு, சமையல், விருந்தோம்பல், அரங்கு உள் அலங்காரம் போன்றவற்றில் தொழில் திறமை தேவைப்படுகிறது. இப்பணிகளில் பயிற்சி அளிக்க தமிழ்நாட்டில் இரண்டு அரசு நிறுவனங்கள் உள்ளன.

53-89—34

[2003 மே 8

**(13.3) மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்கத் தொழில்நுட்பப் பயிலகம், திருச்சிராப்பள்ளி**

1981-ல் நிறுவப்பட்ட இந்த நிறுவனத்தை புதுடெல்லி, அனைத்திந்திய தொழில்நுட்பப் பயிற்சிக் குழு அங்கீகரித்துள்ளது. இது தமிழ்நாடு அரசு தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனத்திற்கு 1980-வரை மைய அரசு நிதி உதவி அளித்தது. அதன் பின்னர் தமிழ்நாடு அரசு இப்பயிலகத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.11 இலட்சம் மானியம் வழங்கி வருகிறது. மூன்றாண்டு பட்டப் படிப்பு மற்றும் ஓராண்டுச் சான்றிதழ் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகின்றன. ஓட்டல் வரவேற்பு, கணக்குவைப்பு முறை, இல்லம் பராமரித்தல், சிற்றுண்டிச் சாலைகளில் உணவு பரிமாறுதல், ரொட்டி மற்றும் இனிப்புப் பண்டங்களைத் தயாரித்தல், உணவு உற்பத்தி செய்யும் முறைகள் போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. பல்வேறு பயிற்சிகளுக்கு சுமார் 400 மாணவர்கள் ஒவ்வொரு ஆண்டும் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பயிற்சி பெற்ற மாணவர்கள் வளாக நேர்காணல் முறை மூலம் வேலைவாய்ப்பும் பெறுகின்றனர்.

**(13.4) உணவாக்கத் தொழில்நுட்பம், உணவக மேலாண்மை மற்றும் சத்துணவுப் பயிலகம், தரமணி, சென்னை-113**

1963-ல் மைய அரசு இந்நிறுவனத்தை ஏற்படுத்தியது. தமிழ்நாடு அரசும் இந்நிறுவனத்திற்கு ஆதரவு அளித்து வருகிறது. மூலதனம் மத்திய அரசு சுற்றுலாத் துறை வழங்குகிறது. தொடர் செலவுகளை இந்நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது. தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் சுற்றுலாத் துறையின் செயலர் இதன் நிர்வாகக் குழுத் தலைவர் ஆவார். ஓட்டல் மேலாண்மை, உணவு தயாரிப்பு, பானங்கள் தயாரிப்பு போன்ற பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. தற்போது சுமார் 300 மாணவ, மாணவியர் பயிற்சி பெறுகின்றனர்.

## சுற்றுலா வளர்ச்சிப் பகுதிகள்

**(14.1) ஆன்மீகச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் ஏராளமான ஆலயங்கள் உள்ளன. தமிழ்நாட்டின் மிகப் பெரிய ஆலயங்கள் கலைநுட்பத்துடனும், புனிதத் தன்மையுடனும், வரலாற்றுச் சிறப்புகளுடனும் நிகழ்வுகளை எடுத்துக்கூறும் வகையில் உள்ளன. காஞ்சிபுரம், சிதம்பரம், மதுரை, கன்னியாகுமரி, இராமேசுவரம், தஞ்சாவூர், கும்பகோணம், ஸ்ரீரங்கம் ஆகிய ஊர்களில் உள்ள ஆலயங்கள்



2003 மே 8]

இதற்கு உதாரணங்களாகும். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள ஆலயங்களின் கலை நுட்பங்கள் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்த்து வருகின்றன. ஆலய வளர்ச்சிப் பணி பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும்போது, சுற்றுலாத் துறையும் இந்து சமய அறநிலையத் துறையும் இணைந்து செயல்படுகின்றன. சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கணக்கில் கொண்டு சுற்றுலாத் துறை, புனிதத் தலங்களில் தேவைப்படும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி வருகின்றது.

**மாதா கோயில்கள்**

வேளாங்கண்ணி, (நாகப்பட்டினம்), மணப்பாடு (தூத்துக்குடி), சாந்தோம் (சென்னை) ஆகிய இடங்களில் உள்ள மாதா கோயில்களுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். எனவே இங்கு வரும் பயணிகளின் நன்மையைக் கருத்தில்கொண்டு, அடிப்படை வசதிகளை மேற்கொள்ள இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக வேளாங்கண்ணியில் மைய/மாநில அரசு நிதி உதவியுடன் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை கட்டப்பட்டு வருகிறது.

**மசூதிகள்**

தமிழ்நாட்டில், நாகூர் தர்கா (நாகப்பட்டினம் மாவட்டம்), ஆத்தங்கரை பள்ளிவாசல் (திருநெல்வேலி மாவட்டம்), ஏர்வாடி தர்கா (இராமநாதபுரம் மாவட்டம்) போன்றவை மிகவும் புகழ்பெற்றவைகளாகும். இந்த இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைபுரிவதால் இங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது. முதற்கட்டமாக நாகூரில் மத்திய-மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.16.00 இலட்சம் மதிப்பீட்டில் கழிப்பறை ஒன்று கட்டப்பட்டு வருகிறது.

**வரலாற்று நினைவுச் சின்னங்கள்**

மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறை மற்றும் மாநில அரசு தொல்பொருள் துறையின் பராமரிப்பில் பல புராதனச் சின்னங்கள் உள்ளன.

| | |
|---|---|
| மைய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள வரலாற்று நினைவுச் சின்னங்கள் எண்ணிக்கை | .. 241 |

மாநில அரசின் தொல்பொருள் துறையின்
கட்டுப்பாட்டில் உள்ள நினைவுச் சின்னங்கள்
பராமரிக்கை.

8.1

இந்த இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருகைபுரிவதால் அவர்களின் வசதிக்காக மத்திய/மாநில தொல்பொருள் ஆய்வுத் துறைகளின் உதவியோடு அடிப்படை வசதிகளை சுற்றுலாத் துறை செய்துவருகிறது.

**(14.2) சுற்றுச் சூழல் சுற்றுலா**

சுற்றுச் சூழல் சுற்றுலா ஒரு புதிய செயல்கருத்தாகும். இது ஆறு, வனம் மற்றும் வனவிலங்குகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இப்பகுதிகளைக் காண அதிகம் விரும்புகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுச் சூழல் சிறப்புமிக்க செல்வங்களுள் பிச்சாவரம், கோடியக்கரை மற்றும் முத்துப்பேட்டை ஆகியவை சதுப்பு நிலக்காடுகளுக்கு (Mangrove Forests) பெயர் பெற்றவையாகும். ஊட்டி, மன்னார் வளைகுடா ஆகியவை உயிரியல் ஆதாரங்களுக்கும், கொடைக்கானல், ஊட்டி, ஏற்காடு மற்றும் ஏலகிரி போன்றவை மலைப்பகுதிகளுக்கும் குறிப்பிடத்தக்கவையாகும். வனவிலங்குச் சரணாலயங்கள் மற்றும் தேசியப் பூங்காக்கள் பெறற்கரிய இயற்கைச் செல்வங்கள் ஆகும். கடல், ஏரி, ஆறு, நீர்வீழ்ச்சிகள் மற்றும் அணைப்பகுதிகள் வளமைகள் நீர் ஆதாரங்களாகும்.

இந்தச் சுற்றுச் சூழல் இடங்களைக் கருத்தில்கொண்டு பிச்சாவரம், கோடியக்கரை மற்றும் முத்துப்பேட்டை ஆகியவற்றை இணைக்கும் "சுற்றுச் சூழல் சுற்றுலா வழித்தடம்" ஒன்றைச் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சுற்றுச் சூழல் சுற்றுலா மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கோடியக்கரையின் மேம்பாட்டிற்காக ரூ.274.10 இலட்சம் மதிப்பீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டு மைய அரசின் நிதி உதவி வேண்டி அனுப்பப்பட்டுள்ளது. ரூ.34.15 இலட்சம் மதிப்பீட்டில் கோடியக்கரையில் கருத்துரு வனக் குடில்கள் கட்டப்பட்டு வருகின்றன.



பிச்சாவரத்தில் சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்காக மைய/மாநில அரசுகளின் நிதியுதவியுடன் ரூ.55.55 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள குருசடைத் தீவுகள் சுற்றுச் சூழல் சுற்றுலாவிற்கான மற்றொரு முக்கியமான இடமாகும். குருசடைத் தீவுகளில் சுற்றுச் சூழல் மேம்பாட்டிற்காக, கண்ணாடி அடித்தளம் கொண்ட படகுகள் வாங்க மைய அரசு ரூ.18.90 இலட்சம் வழங்கியுள்ளது. சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிற்கு இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

**(14.3) கடற்கரைச் சுற்றுலா**

தமிழ்நாட்டில் மாமல்லபுரம், கன்னியாகுமரி ஆகியவை கடற்கரைச் சுற்றுலாவிற்கு புகழ்பெற்ற இடங்களாகும். கடற்கரைச் சுற்றுலாவின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதிக பிரபலமாகாத கடற்கரைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு மேம்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன்படி அதிக அளவில் பிரபலமாகாத கீழ்க்கண்ட கடற்கரைப் பகுதிகளின் மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது:

| | | |
|---|---|---|
| 1) நாகப்பட்டினம் கடற்கரை | - | ரூ.18.00 இலட்சம் |
| 2) தூத்துக்குடி கடற்கரை | - | ரூ.10.25 இலட்சம் |
| 3) எலியட்ஸ் கடற்கரை, சென்னை | - | ரூ.38.43 இலட்சம் |

**(14.4) மலைவாச ஸ்தலங்கள்**

தமிழ்நாட்டில் உதகமண்டலம், கொடைக்கானல், ஏற்காடு மற்றும் ஏலகிரி ஆகியவை முக்கிய சுற்றுலாத் தலங்களாகும். ஆண்டு முழுவதும் இந்த மலைப் பிரதேசங்களுக்கு ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிகின்றனர். சுற்றுலாப் பயணிகளின் நன்மையைக் கருதி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இந்த மலைப் பகுதிகளைக் கண்டு களிக்க சுற்றுலாப் பயணத் திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

தேனி மாவட்டம் மேகமலை, திண்டுக்கல் மாவட்டம் சிறுமலை, திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலை போன்ற மலைத் தலங்களின் மேம்பாட்டிற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

[2003 மே 8

### (14.5) கலாச்சார விழாக்கள் மற்றும் பொருட்காட்சிகள்

பழமையும் செழிப்பும் மிக்க கலாச்சாரமும் பண்பாடும் தமிழ்நாட்டின் சிறப்புச் சின்னங்களாகும்.

இந்தச் சிறப்புச் சின்னங்களில் இசை, நடனம் மற்றும் நாடகம் போன்றவை குறிப்பிடத்தக்கவை ஆகும். கால ஓட்டத்தால் பாதிப்பு அடையாமல் நிலைத்திருக்கும் பரத நாட்டியத்தினைக் காணும் வாய்ப்பினை எந்த ஒரு சுற்றுலாப் பயணியும் இழக்க முன்வரமாட்டார் என்பது அனுபவ உண்மையாகும். எனவே தமிழக பண்பாட்டுச் சுற்றுலாவை வளர்க்கும் வகையில் சில விழாக்கள் வருடாந்திர விழாக்களாக நடத்தப்படுகின்றன. வெளிநாட்டுப் பயண நிறுவனங்கள், தங்கள் பயணத் திட்டங்களை முன்கூட்டியே திட்டமிட இவ்விழாக்கள் பயன்படுகின்றன.

**கோடை விழாக்கள்**

ஆண்டுதோறும் மே மற்றும் ஜூன் மாதங்களில் கோடை விழாக்கள் உதகமண்டலம், கொடைக்கானல், சுருளி அருவி, சிறுமலை, ஏலகிரி, கொல்லிமலை, ஏற்காடு, நாகப்பட்டினம் கடற்கரை, வால்பாறை, ஜவ்வாது மலை, பச்சைமலை, வெள்ளி கடற்கரை - கடலூர் மற்றும் பாஞ்சாலங்குறிச்சி ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன.

முதல் விடுதலைப் போராட்ட வீரர் வீரபாண்டிய கட்டபொம்மனின் நினைவாக பாஞ்சாலங்குறிச்சியில் ஆண்டுதோறும் மே மாதத்தில் சிறப்பு விழா ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது.

மேலும் குற்றாலம் மற்றும் பாலமதியில் சாரல் விழா நடத்தப்படுகிறது.

**நாட்டிய விழா**

| | | | |
|---|---|---|---|
| (1) | நாட்டிய விழா | - மாமல்லபுரம் | - டிசம்பர்/ஜனவரி |
| (2) | நாட்டியாஞ்சலி விழா | - சிதம்பரம் | - பிப்ரவரி/மார்ச் |

**2002-2003-முதல் ஆண்டுதோறும் நடத்தப்படும் விழாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| (1) | நாட்டிய விழா | - மதுரை | - ஜனவரி |
| (2) | அருணாஞ்சலி விழா | - திருவண்ணாமலை | - மார்ச் |
| (3) | பட்டு விழா | - காஞ்சிபுரம் | - அக்டோபர் |



2003 மே 8]

### பொருட்காட்சி மற்றும் கண்காட்சிகள்

1. இந்தியச் சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி - தீவுத்திடல், சென்னை - ஜனவரி முதல் மார்ச் வரை.
2. உலகச் சுற்றுலா தின விழா - அனைத்துச் சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் சுற்றுலாத் தகவல் மையங்கள் (வெளி மாநிலங்களில் இயங்குபவை உட்பட) - செப்டம்பர்.
3. சேலம், கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் செய்தித் துறை நடத்தும் பொருட்காட்சிகளில் இத்துறை கலந்துகொண்டு சுற்றுலா பற்றிய விவரங்களை அளிக்கிறது. இது தவிர சிறப்பு விழாக்கள் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன:

| | | | |
|---|---|---|---|
| 1) | சித்திரைத் திருவிழா | - மதுரை | - ஏப்ரல் |
| 2) | சித்திரை முழுநிலவு விழா | - பூம்புகார் | - மே |
| 3) | தேர்த் திருவிழா | - திருவாரூர் | - மே |
| 4) | சித்திரை விசு விழா | - திருநெல்வேலி | - மே |
| 5) | வேளாங்கண்ணி மாதா திருவிழா | - வேளாங்கண்ணி | - ஆகஸ்டு/ - செப்டம்பர் |
| 6) | ஆடிப்பெருக்கு | - பவானிகூடுதுறை<br>ஒகேனக்கல் | - ஜூலை/<br>- ஆகஸ்டு |
| 7) | ஆடிப்பூரம் | - மேல்மருவத்தூர் | - ஜூலை |
| 8) | சந்தூரி விழா | - நாகூர் | - ஆகஸ்டு/செப்டம்பர் |
| 9) | சந்தனக்கூடு | - ஏர்வாடி | - மார்ச் |

**அறுவடைத் திருவிழாக்கள்**

| | | | |
|---|---|---|---|
| 1) | பொங்கல் | - அனைத்துச் சுற்றுலாத் தலங்களில் | - ஜனவரி |

[2003 மே 8

| | | |
|---|---|---|
| 2) தேயிலை (ம) சுற்றுலா | - உதகமண்டலம்/ குன்னூர் | - ஜனவரி |
| 3) மாங்கனி விழா | - கிருட்டிணகிரி | - ஜூன் |

## 14.6) வனவிலங்குச் சரணாலயங்கள்

தமிழகத்தில் ஐந்து தேசிய பூங்காக்களும், எட்டு வன விலங்கு சரணாலயங்களும் உள்ளன. அவை பின்வருமாறு:—

| தேசிய பூங்காக்கள் | அமைந்துள்ள இடங்கள் |
|---|---|
| 1. முதுமலை | - நீலகிரி மாவட்டம் |
| 2. இந்திராகாந்தி தேசிய பூங்கா | - கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. முக்குறுத்தி | - நீலகிரி மாவட்டம் |
| 4. கிண்டி | - சென்னை மாவட்டம் |
| 5. மன்னார் வளைகுடா | - இராமநாதபுரம் மாவட்டம் |

| வனவிலங்கு சரணாலயங்கள் | அமைந்துள்ள இடங்கள் |
|---|---|
| 1. முதுமலை | - நீலகிரி மாவட்டம் |
| 2. இந்திராகாந்தி தேசிய பூங்கா | - கோயம்புத்தூர் மாவட்டம் |
| 3. முண்டந்துறை | - திருநெல்வேலி மாவட்டம் |
| 4. களக்காடு | - திருநெல்வேலி மாவட்டம் |
| 5. ஸ்ரீவில்லிபுத்தூர் | - விருதுநகர் மாவட்டம் |
| 6. கோடியக்கரை | - நாகப்பட்டினம் மாவட்டம் |
| 7. வல்லநாடு | - தூத்துக்குடி மாவட்டம் |
| 8. கன்னியாகுமரி | - கன்னியாகுமரி மாவட்டம் |

இந்த தேசிய பூங்காக்களிலும், வனவிலங்குச் சரணாலயங்களிலும் சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக வனத் துறை ஒத்துழைப்புடன் அடிப்படை வசதிகளை உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.



2003 மே 8]

## 14.7) பறவைகள் சரணாலயம்

தமிழ்நாட்டில் 12 பறவைகள் சரணாலயங்கள் உள்ளன. அவை பின்வருமாறு:—

| | |
|---|---|
| 1. வேடந்தாங்கல் | - காஞ்சிபுரம் மாவட்டம் |
| 2. கரிகிளி | - காஞ்சிபுரம் மாவட்டம் |
| 3. பழவேற்காடு | - திருவள்ளூர் மாவட்டம் |
| 4. வேட்டங்குடி | - சிவகங்கை மாவட்டம் |
| 5. கஞ்சாங்குளம் | - இராமநாதபுரம் மாவட்டம் |
| 6. சித்திரங்குடி | - இராமநாதபுரம் மாவட்டம் |
| 7. உதயமார்த்தாண்டபுரம் | - திருவாரூர் மாவட்டம் |
| 8. வடுர் | - நாகப்பட்டினம் மாவட்டம் |
| 9. கூந்தன்குளம் | - திருநெல்வேலி மாவட்டம் |
| 10. கரைவெட்டி | - பெரம்பலூர் மாவட்டம் |
| 11. வெள்ளோடு | - ஈரோடு மாவட்டம் |
| 12. மேலசெல்வனூர்/கீழசெல்வனூர் | - இராமநாதபுரம் மாவட்டம் |

இந்தப் பறவைகள் சரணாலயத்திற்கு பருவகாலங்களில் பல்வேறு நாடுகளிலிருந்து பல வகையான பறவைகள் வருகின்றன. அவற்றைக் கண்டுகளிக்க சுற்றுலாப் பயணிகள் அதிக அளவில் வருவதால் அங்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்த இத்துறை உத்தேசித்துள்ளது.

## 14.8) சாகசச் சுற்றுலா

சுற்றுலாத் தலங்களுக்கு வருகைதரும் சுற்றுலாப் பயணிகள் சுமார் 40 சதவிகிதம் 15 வயது முதல் 35 வயது வரை உள்ள இளைஞர்களாக காணப்படுகிறார்கள். தங்கள் கல்வி நிறுவனங்கள் மூலம் கல்விச் சுற்றுலாவிற்காக வருகை தரும் இளைஞர்களில் பெரும்பாலானோர் சாகசச் சுற்றுலாவில் பெரிதும் விருப்பம் உள்ளவர்களாகத் தென்படுகின்றனர். இவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் இத்துறை முட்டுக்காடு மற்றும் கொளவாய் ஏரிகளில் நீர் சாகச விளையாட்டுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. ஊட்டி,

[2003 மே 8

கொடைக்கானல், ஏலகிரி ஆகிய இடங்களில் மலை ஏறுதல், மலைப்பாதையில் நடத்தல், பாறை ஏறுதல் முதலிய நிகழ்ச்சிகளை வனத் துறை மற்றும் இளைஞர் விடுதி சங்கங்களோடு இணைந்து நடத்துகிறது.

### 14.9) உடல்நலச் சுற்றுலா

சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டில் தங்கும் நாட்களை அதிகப்படுத்துவதற்கான சூழலை உருவாக்குவதில் சுற்றுலாத் துறை அதிக ஆர்வம் செலுத்தி வருகிறது. இந்திய வைத்திய முறைகளை ஊக்குவிப்பதின் மூலம் சுற்றுலாப் பயணிகளை தமிழ்நாட்டில் அதிக நாட்கள் தங்க வைக்க இயலும் என இத்துறை நம்புகிறது. எனவே உடல்நலச் சுற்றுலா மையங்களை முதற்கட்டமாக கொல்லிமலை, குற்றாலம் மற்றும் மாமல்லபுரத்தில் (Rejuvenative Centre) தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

### 14.10) பாரம்பரியச் சுற்றுலா

மத்திய அரசு கீழ்க்கண்ட இடங்களை சுற்றுலாத் தலங்களாகவும் புனிதத் தலங்களாகவும் அறிவித்துள்ளது:—

| சுற்றுலாத் தலம் | புனிதத் தலம் |
|---|---|
| கன்னியாகுமரி | மதுரை |
| மதுரை | நாகப்பட்டினம் |
| மாமல்லபுரம் | நாகூர் |
| உதகமண்டலம் | பழனி |
| இராமேசுவரம் | இராமேசுவரம் |
| வேளாங்கண்ணி | தஞ்சாவூர் |
| தஞ்சாவூர் | |
| திருச்சிராப்பள்ளி | |
| தரங்கம்பாடி | |
| திருவண்ணாமலை | |



2003 மே 8]

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுரைப்படி தமிழ்நாட்டில் உள்ள கீழ்க்கண்ட 38 பாரம்பரிய நகரங்களையும் பாதுகாக்க, நகர மற்றும் ஊரமைப்புத் துறையுடன் இணைந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| 1) காஞ்சிபுரம் | 20) தரங்கம்பாடி |
| 2) சிதம்பரம் | 21) நாகூர் |
| 3) இராமேசுவரம் | 22) வேளாங்கண்ணி |
| 4) ஸ்ரீரங்கம் | 23) குற்றாலம் |
| 5) மாமல்லபுரம் | 24) ஸ்ரீபெரும்புதூர் |
| 6) திருவில்லிப்புத்தூர் | 25) திருநெல்வேலி |
| 7) தஞ்சாவூர் | 26) திருச்செங்கோடு |
| 8) கும்பகோணம் | 27) காரைக்குடி |
| 9) கங்கைகொண்டசோழபுரம் | 28) பே[illegible]ர் |
| 10) பூம்புகார் | 29) பவானி |
| 11) மதுரை | 30) பிச்சாவரம் |
| 12) பழநி | 31) மருதூர் |
| 13) திருச்செந்தூர் | 32) குறிஞ்சிப்பாடி |
| 14) திருத்தணி | 33) திருமயம் |
| 15) கன்னியாகுமரி | 34) சித்தன்னவாசல் |
| 16) திருவண்ணாமலை | 35) ஆவுடையார்கோயில் |
| 17) செஞ்சி | 36) பத்மநாபபுரம் |
| 18) செட்டிநாடு | 37) கொளச்சல் |
| 19) வாலிநோக்கம் | 38) மரக்காணம் |

இந்நகரங்களில் கீழ்க்கண்ட 11 நகரங்களின் வளர்ச்சிக்காக 2002-2003 ஆம் ஆண்டில் தலா ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:

[2003 மே 8

பூம்புகார்

சிதம்பரம்

பழநி

காரைக்குடி

செஞ்சி

இராமேசுவரம்

பேரூர்

கொளச்சல்

நாகூர்

வேளாங்கண்ணி

கங்கைகொண்ட சோழபுரம்

**14.11) வியாபாரச் சுற்றுலா**

வியாபார நோக்கத்துடன் வரும் பயணிகள் தங்கள் பணி முடிவுற்றவுடன் தங்கள் நேரத்தை இன்பமாகச் செலவிட விரும்புகின்றனர். எனவே அவர்கள் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளத் தூண்டும் வகையில் மாநாடு, கருத்தரங்கு ஆகியவை நடைபெறும் இடங்களில் தற்காலிக சுற்றுலாத் தகவல் மையங்களைத் தொடங்க இத்துறை உத்தேசித்துள்ளது.

## 15) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி, சுற்றுலாவை வணிக முறையில் மேம்படுத்தும் முக்கிய நோக்கத்தோடு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தமிழக அரசிடமிருந்து ஐந்து சுற்றுலா மாளிகைகளைப் பெற்று இரு பேருந்துகளுடன் இக்கழகம் சிறிய அளவில் செயல்படத் தொடங்கியது. ஆரம்பத்தில் இக்கழகம், சுற்றுலாப் பயணிகளுக்குத் தங்குமிட வசதி அளித்தல், சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று வர பயணங்களை ஏற்பாடு செய்தல் ஆகிய இரு முக்கிய நோக்கங்களில் கவனம் செலுத்தியது. இதனைத் தொடர்ந்து இக்கழகம் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் வழித்தட வசதிகளை ஏற்படுத்தியது.



2003 மே 8]

தற்போது, தமிழ்நாட்டில் உள்ள முக்கிய சுற்றுலாப் பகுதிகளில் தமிழ... சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட வசதிகளை அளிக்கிறது:—

ஓட்டல்கள்

இளைஞர் விடுதிகள்

உணவகங்கள்

படகு இல்லங்கள்

தொலைநோக்கு கருவி இல்லங்கள்

சுற்றுலாப் பயணிகள் சேவை மையம்/

பெட்ரோல் நிலையம் (மாமல்லபுரம்)

குறைந்த வருவாயுடைய சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக இளைஞர் விடுதிகள் நடத்தப்படுகின்றன. இவற்றில் ஓரே இடத்தில் பலர் தங்குவதற்கு வசதிகள் கொண்ட பெரிய அறைகள் (Dormitory) மட்டுமின்றி தனி அறைகளும் உள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலாப் பயணத் திட்டங்களை ஏற்படுத்தித் தருவது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ...ொரு முக்கிய பணி ஆகும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ...த்தி...ும் சுற்றுலாப் பயணத் திட்டங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளிடையே பெரும் வரவேற்பைப் பெ...றுள்ளன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் சென்னையில் ஆண்டுதோறும் இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை நடத்தி வருகிறது.

**ஓட்டல்கள் மற்றும் உணவகங்களை தனியார் பங்கேற்புடன் நடத்துதல்**

தற்பொழுது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் 54 ஓட்டல்கள் உள்ளன. உயர்ந்த தாமுடைய ஓட்டல் அறைகளைப் பராமரித்தல், தரமுடைய உணவு வகைகளை வழங்குதல், சுற்றுலாப் பயணிகள் திருப்தி அடையும் வகையில் தரமான உபசரிப்பு அளித்தல் போன்றவை ஓட்டல் தொழிலுக்கு மிகவும் அவசியமாகும். ஓட்டல்களை லாபகரமாகவும் நடத்த வேண்டும். எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் முதற்கட்டமாக தன் வசமுள்ள 30 ஓட்டல்களையும், 7 உணவகங்களையும், தனியார் மூலம் நடத்த நடவடிக்கையினை எடுத்தது. அதன்படி, 10 ஓட்டல்கள் தனியார் மூலம் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன. அவை பின்வருமாறு:—

[2003 மே 8

1) சாத்தனூர் அணை
2) விருதுநகர்
3) மண்டபம்
4) கொடைரோடு
5) மேல்மருவத்தூர்
6) பயணியர் முகாம், மாமல்லபுரம்
7) திருக்கழுக்குன்றம்
8) சிதம்பரம்
9) நாகப்பட்டினம்
10) கும்பகோணம்

மற்ற 20 ஓட்டல்களையும், 7 உணவகங்களையும் குத்தகைக்கு விட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் உதகமண்டலம் படகு குழாமில் உள்ள உணவகம், பொழுது போக்கு அம்சங்கள் இவற்றை தனியார் மூலம் நடத்த தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்த நடவடிக்கை நல்ல பலனை அளித்துள்ளது. இந்த இனங்களிலிருந்து ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டுமே கடந்த ஆண்டு லாபம் கிடைத்தது. தனியாரிடம் ஒப்படைத்ததன் மூலம் ரூ.35.00 இலட்சம் லாபம் கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. ஏரிப் பூங்காவில் உள்ள உணவகம் மற்றும் நுழைவுக் கட்டண வசூல ஆகியவற்றை தனியாரிடம் ஒப்படைத்ததன் மூலம் ரூ.16.60 இலட்சம் வருமானம் கிடைத்துள்ளது.

**தனியார் ஓட்டல் துறை:**

தமிழ்நாட்டில் 150-க்கும் மேற்பட்ட நட்சத்திரத் தரம் கொண்ட வகைப்படுத்தப்பட்ட (classified) ஓட்டல்கள் உள்ளன. இந்த வகைப்படுத்தப்பட்ட ஓட்டல்களில் சுமார் 9,170 அறைகள் உள்ளன. மேலும் வகைப்படுத்தப்படாத (unclassified) 1,800 ஓட்டல்களில் சுமார் 5,000 அறைகள் உள்ளன. இந்த ஓட்டல் அறைகளில் 60 சதவிகிதம் பதிவு (Booking) ஏற்படும் நிலையில், தமிழ்நாடு 7.90 இலட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளையும் 230 இலட்சம் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளையும் வரவேற்கும் நிலையில் உள்ளது. தமிழக அரசால் சொகுசு வரி குறைக்கப்பட்டிருப்பதால் ஓட்டல் துறை நன்கு வளர்ச்சி அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2003 மே 8]

**இரயில்மூலம் சுற்றுலாப் பயணங்கள்**

2002-2003-ல் முதல்முறையாக இந்திய இரயில்வே சுற்றுலாக் கழகத்தோடு (Indian Railway Catering and Tourism Corporation Limited) தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதன் மூலம், மும்பை, கொல்கத்தா மற்றும் டெல்லி ஆகிய இடங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு சுற்றுலாப் பயணங்கள் நடத்தப்படும். இப்பயணத்தில் பங்குகொள்வோருக்கு உறுதி செய்யப்பட்ட இரயில் பயணச் சீட்டு, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்தில் இடவசதி, தமிழ்நாடு ஓட்டல்களில் தங்குமிட வசதி போன்றவை அளிக்கப்படுகிறது. இரயில்வே நிர்வாகத்துடன் சேர்ந்து நடத்தப்படும் இந்தச் சுற்றுலாப் பயணத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. 2002-2003-ல் இப்பயணத் திட்டத்தின் மூலம் ரூ.51 இலட்சம் வருவாய் கிடைத்துள்ளது. இதில் லாபம் ரூ.22 இலட்சமாகும். இந்த இரயில் சுற்றுலாப் பயணத்திற்கு கிடைத்த நல்ல வரவேற்பினால் தற்போது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் அஹமதாபாத் மற்றும் லக்னோ ஆகிய இடங்களில் இருந்தும் இந்தப் பயணத்தைத் தொடங்கியுள்ளது.

ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கோடை பருவக் காலங்களில் இந்த இரயில் சுற்றுலாப் பயணங்களின் மூலம் ரூ.80 இலட்சம் வருவாய் கிடைக்கும் எனவும் இதன் மூலம் ரூ.36 இலட்சம் லாபம் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பிற மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகங்களுடன் ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒப்பந்தத்தின் மூலம் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் லக்னோ, அஹமதாபாத் ஆகிய இடங்களில் இரயில் மூலம் சுற்றுலாப் பயணங்களை நடத்தி வருகிறது. இந்தச் சுற்றுலாப் பயணங்களுக்காக பயணச் சீட்டுகளை அந்த மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வழங்கும். சுற்றுலாப் பயணிகள் இரயில் பயணங்களை மேற்கொள்ள அனைத்து வசதிகளையும் அந்த மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மேற்கொள்ளும். இதுபோன்ற இரயில் சுற்றுலாப் பயணங்களை சென்னையிலிருந்து வாரணாசி, அலஹாபாத் மற்றும் அயோத்தி ஆகிய இடங்களுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உத்தரப்பிரதேச மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வாரணாசியிலிருந்து மூன்று நாட்களைக் கொண்ட சுற்றுலாப் பயணத்தை நடத்தும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள உள்ளது. தங்குமிட வசதி, உள்ளூர்

சுற்றிப் பார்க்க வழிகாட்டிகளை அமர்த்துதல் போன்ற வசதிகளை அந்தக் கழகமே மேற்கொள்ளும்.

**படகு இல்லங்கள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கீழ்க்கண்ட இடங்களில் படகு இல்லங்களை நடத்தி வருகிறது:—

1. உதகமண்டலம்
2. பைகாரா
3. ஏற்காடு
4. கொடைக்கானல் (இரண்டு இடங்களில்)
5. திருச்சிராப்பள்ளி
6. திருவாரூர்
7. கும்பகோணம்
8. பிச்சாவரம்
9. குற்றாலம்
10. முட்டுக்காடு
11. கொளவாய் ஏரி

இந்தப் படகு இல்லங்களில் விசைப் படகுகள், மிதி படகுகள், துடுப்புப் படகுகள், உயிர் மீட்புப் படகுகள், சாகச விளையாட்டுச் சாதனங்களான கேனோ, விண்ட் சர்ப்பர், வாட்டர் ஸ்கூட்டர் போன்றவைகளும் உள்ளன. முட்டுக்காட்டுக்கு அருகில் உள்ள இடைக்கழிநாட்டில் புதிய படகு இல்லம் தொடங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தொலைநோக்குக் கருவி இல்லம்**

இயற்கை எழில்மிகு காட்சிகளை தொலைநோக்குக் கருவி மூலம் பார்க்காவிட்டால் பயணத்தின் மகிழ்ச்சி முழுமை பெறாது தானே! எனவே சுற்றுலாப் பயணிகள் தூரத்தில் உள்ள இயற்கைக் காட்சிகளைக்





கண்டு களிப்பதற்கு ஏதுவாக உதகமண்டலத்தில் இரண்டு இடங்களிலும், கொடைக்கானலில் இரண்டு இடங்களிலும், மேலும் ஏற்காடு, கன்னியாகுமரி ஆகிய சுற்றுலாத் தலங்களில் தொலைநோக்குக் கருவி இல்லங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்தி வருகிறது. நீலகிரி மாவட்டம் கொடநாடு காட்சி முனையில் உள்ள தொலைநோக்குக் கருவி இல்லத்தை மகளிர் சுய உதவிக் குழுவினர் நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**சிக்கன நடவடிக்கை**

தமிழக அரசு 2001 ஆம் ஆண்டு முதற்கொண்டு பல்வேறு இனங்களில் செலவினங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதைப் பின்பற்றி தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும் பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தில் மொத்தம் உள்ள 959 பணியாளர்களில் 205 பணியாளர்கள், மார்ச் 2003 வரை விருப்ப ஓய்வுத் திட்டத்தின்கீழ் ஓய்வு பெற்றுள்ளனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் மின் கட்டணம், தொலைபேசிக் கட்டணம் ஆகியவற்றில் சிக்கனத்தைக் கடைப்பிடித்ததன் மூலம் ரூ.30.00 இலட்சம் வரை செலவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

**தொழில் நுட்ப உதவிப் பிரிவு**

2001 ஆம் ஆண்டு முதல் சுற்றுலாத் துறை பல்வேறு பிரம்மாண்டமான, அதிக தொழில்நுட்பம் தேவைப்படும் பெருந்திட்டங்களைச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. இத்திட்டங்களைச் செயல்படுத்தும் மற்றும் பராமரிக்கும முகமைகள் அதிக திறமைவாய்ந்ததாக இருத்தல் அவசியம். இத்தகைய தொழில்நுட்பம் தேவைப்படும் பணிகளை மேற்கொள்வதற்காக ஒரு தொழில்நுட்ப உதவிப் பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் சுற்றுலாத் தலங்களை மேம்படுத்தவும், சுற்றுலா சுற்றுச்சாலை (Tourism Circuit) மேம்படுத்தவும், பெருந்திட்டம் தயாரிக்க முதன் முதலாக 2002-2003-ல் ரூ.20 இலட்சம் மாநில அரசு வழங்கியுள்ளது. 2003-2004-ல் மேலும் ரூ.25 இலட்சம் மாநில அரசால் வழங்கப்படும். இந்த நிதியுதவியைக் கொண்டு கீழ்க்கண்ட சுற்றுலாத் தலங்கள்/ சுற்றுச்சாலைகளுக்கு பெருந்திட்டம் தயாரிக்கப்படும்:

## சுற்றுலாத் தலங்கள்

1. இராமேசுவரம்
2. கொடைக்கானல்
3. குற்றாலம்
4. உதகமண்டலம்
5. ஏற்காடு
6. ஒகேனக்கல்
7. தஞ்சாவூர்
8. திருச்சிராப்பள்ளி
9. ஏலகிரி
10. கொல்லிமலை
11. புதுக்கோட்டை
12. ஆவுடையார்கோயில்
13. காரைக்குடி
14. செட்டிநாடு

1. **சுற்றுச்சாலை** சிதம்பரம்-கங்கைகொண்ட சோழபுரம்-தாராசுரம்-கும்பகோணம்-தஞ்சாவூர்-முத்துப்பேட்டை-திருச்சிராப்பள்ளி
2. **அறுபடைவீடு சுற்றுலா**
   திருத்தணி-சுவாமி மலை- பழநி-பழமுதிர்ச்சோலை-திருப்பரங்குன்றம்-திருச்செந்தூர்
3. **சென்னையைச் சுற்றி உள்ள புனிதத் தலங்கள் சுற்றுலா**
   திருவிடந்தை-திருமலைவையாவூர்- வல்லக்கோட்டை-ஸ்ரீபெரும்புதூர்-திருநின்றவூர்-திருமுல்லைவாசல்-மேலூர்-கோயம்பேடு

## போக்குவரத்துப் பிரிவு

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், 29 வகையான சுற்றுலாப் பயணத் திட்டங்களை (அரை நாள் முதல் 14 நாட்கள் வரையிலான) நடத்தி வருகிறது.



சுற்றுலாப் பயணத் திட்டங்கள் விவரம் பின்வருமாறு:-

1) 1/2 நாள்-சென்னை நகர சுற்றுலா
2) 1 நாள்-மாமல்லபுரம் சுற்றுலா
3) 1 நாள்-பாண்டிச்சேரி சுற்றுலா
4) 1 நாள்-திருப்பதி சுற்றுலா
5) 1 நாள்-திருவண்ணாமலை கிரிவலம் சுற்றுலா
6) 1 நாள்-சுருட்டப்பள்ளி சுற்றுலா
7) 3 நாள்-அறுபடைவீடு சுற்றுலா
8) 3 நாள்-நவக்கிரக சுற்றுலா (ஒன்பது கிரகங்கள்)
9) 6 நாள்-தென்னிந்திய சுற்றுலா
10) 7 நாள்-மூகாம்பிகை சுற்றுலா
11) 7 நாள்-கோவா-மந்திராலயம்-புட்டபர்த்தி சுற்றுலா
12) 8 நாள்-கிழக்கு-மேற்கு கடற்கரைச் சுற்றுலா
13) 8 நாள்-தமிழ்நாடு சுற்றுலா
14) 7 நாள்-ஆந்திரா சுற்றுலா
15) 14 நாள்-மும்பை-அஜந்தா-எல்லோரா சுற்றுலா
16) 14 நாள்-தென்னிந்திய (Sunny South) சுற்றுலா
17) 14 நாள்-பூரி-கயா-காசி-அலஹாபாத் சுற்றுலா
18) 1 நாள்-திருத்தணி-காளஹஸ்தி-நல்லாத்தூர்- மாத்தூர் சுற்றுலா
19) 1 நாள்-சக்தி சுற்றுலா (ஒன்பது அம்மன் கோயில்கள்)
20) 1 நாள்-திருமால் தரிசனம் (ஒன்பது வைஷ்ணவ கோயில்கள்)
21) 1 நாள் தொண்டைநாட்டு திருப்பதிகள் சுற்றுலா
22) 1 நாள்-கொளவாய் ஏரி-வண்டலூர் உயிரியல் பூங்கா-கிஷ்கிந்தா சுற்றுலா
23) 1 நாள்-தென்னங்கூர்-உத்திரமேரூர்-மதுராந்தகம் சுற்றுலா

**தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வருங்காலப் பணிகள்**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் இதுவரை ஓட்டல்கள் மற்றும் பயணங்கள் நடத்தி சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான பணிகளை (Service Provider) செய்யும் நிறுவனமாக செயல்பட்டு வந்தது. இனி வருங்காலத்தில் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளை தனியார் ஒத்துழைப்புடன் உருவாக்க (Service Facilitator) துணை நிற்கும். முதற்கட்டமாக 10 ஓட்டல்களை தனியார் மூலம் நடத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் விளம்பர முகாம்கள், விழாக்கள் போன்றவையும் இனி தனியார் பங்கேற்புடன் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**16) சுற்றுலா ஆணையரகம்**

சுற்றுலா ஆணையரகம், சுற்றுலா ஆணையர் தலைமையில் செயல்பட்டு வருகிறது. சுற்றுலா ஆணையர் அவர்களுக்கு உதவி புரிய ஒரு இணை இயக்குநர், மூன்று துணை இயக்குநர்கள், ஒரு உதவி இயக்குநர், ஒரு வெளியீட்டு அலுவலர், ஒரு கணக்கு அலுவலர் மற்றும் 208 அமைச்சுப் பணியாளர்கள் உள்ளனர். சுற்றுலா ஆணையரகத்தின்கீழ் 20 சுற்றுலா அலுவலகங்கள் (14 தமிழ்நாட்டிலும் 6 வெளிமாநிலங்களிலும்) மற்றும் 21 தமிழ்நாடு சுற்றுலாத் தகவல் மையங்கள் (18 தமிழ்நாட்டிலும் 3 வெளிமாநிலங்களிலும்) உள்ளன.

சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான ஆலோசனை வழங்குதல், தமிழ்நாட்டில் சுற்றுலா வளத்தைப் பிரசித்தப்படுத்துதல் மற்றும் மாவட்ட ஆட்சியர்/ பொதுப் பணித் துறை/உள்ளாட்சி அமைப்புகளுடன் திட்டம் செயல்படுத்துவதில் ஒத்துழைத்தல் போன்றவை மேற்கூறிய சுற்றுலா அலுவலகங்களின் முக்கியமான பணிகளாகும்.

**சுற்றுலா அலுவலகங்கள்**

சுற்றுலா ஆணையரகம் சுற்றுலாத் திட்டங்களைத் தயாரித்து அவற்றைச் செயல்படுத்துவதை கண்காணித்து வருகிறது. சுற்றுலா அலுவலகங்கள் விவரம் பின்வருமாறு:—

1) சுற்றுலா அலுவலகம், கன்னியாகுமரி

2) சுற்றுலா அலுவலகம், திருநெல்வேலி

3) சுற்றுலா அலுவலகம், இராமேசுவரம்

[2003 மே 8

4) சுற்றுலா அலுவலகம், தருமபுரி
5) சுற்றுலா அலுவலகம், கொடைக்கானல்
6) சுற்றுலா அலுவலகம், மதுரை
7) சுற்றுலா அலுவலகம், உதகமண்டலம்
8) சுற்றுலா அலுவலகம், சேலம்
9) சுற்றுலா அலுவலகம், திருச்சிராப்பள்ளி
10) சுற்றுலா அலுவலகம், தஞ்சாவூர்
11) சுற்றுலா அலுவலகம், பூம்புகார்
12) சுற்றுலா அலுவலகம், சிதம்பரம்
13) சுற்றுலா அலுவலகம், மாமல்லபுரம்
14) சுற்றுலா அலுவலகம், சென்னை
15) சுற்றுலா அலுவலகம், மும்பை
16) சுற்றுலா அலுவலகம், கொல்கத்தா
17) சுற்றுலா அலுவலகம், பனாஜி-கோவா
18) சுற்றுலா அலுவலகம், புதுதில்லி

(16–18: பிற மாநிலங்கள்)

**புதிய சுற்றுலா அலுவலகங்கள்**

தமிழ்நாட்டில் சுற்றுலா வளத்தை மேலும் சிறப்பாக விளம்பரப்படுத்தும் வகையில் 2001-2002 ஆம் ஆண்டில் ஜெய்ப்பூர் மற்றும ஆக்ராவில் இரண்டு சுற்றுலா அலுவலகங்கள் திறக்கப்பட்டன.

**சுற்றுலா தகவல் மையங்கள்**

சுற்றுலா ஆணையாகத்தின்கீழ் செயல்பட்டுவரும் சுற்றுலா தகவல் மையங்கள்:

1) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருநெல்வேலி
2) சுற்றுலாத் தகவல் மையம், பாஞ்சாலங்குறிச்சி.
3) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், இராமேசுவரம்
4) சுற்றுலாத் தகவல் மையம், பேருந்து நிலையம், இராமேசுவாம்



2003 மே 8]

5) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், மதுரை
6) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், மதுரை
7) சுற்றுலாத் தகவல் மையம், கூடலூர் (நீலகிரி மாவட்டம்)
8) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், கோயம்புத்தூர்
9) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், கோயம்புத்தூர்
10) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், திருச்சிராப்பள்ளி
11) சுற்றுலாத் தகவல் மையம், விமான நிலையம், திருச்சிராப்பள்ளி
12) சுற்றுலாத் தகவல் மையம், ஓட்டல் தமிழ்நாடு வளாகம், தஞ்சாவூர்
13) சுற்றுலாத் தகவல் மையம், தரங்கம்பாடி
14) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (சென்ட்ரல்)
15) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், சென்னை (எழும்பூர்)
16) சுற்றுலாத் தகவல் மையம், காமராசர் உள்நாட்டு விமான நிலையம், சென்னை
17) சுற்றுலாத் தகவல் மையம், அண்ணா பன்னாட்டு விமான நிலையம், சென்னை
18) சுற்றுலாத் தகவல் மையம், சென்னை மாநகரப் பேருந்து நிலையம், கோயம்பேடு, சென்னை
19) சுற்றுலாத் தகவல் மையம், இரயில் நிலையம், பெங்களூர்
20) சுற்றுலாத் தகவல் மையம், ஹைதராபாத்
21) சுற்றுலாத் தகவல் மையம், திருவனந்தபுரம்

## 17) முடிவுரை

தற்போது தமிழக அரசு, சுற்றுலா வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டிவருகிறது. அதிக பிரபலமடையாத சுற்றுலாத் தலங்கள்மீது கவனம் செலுத்தி மாபெரும் வளர்ச்சியை எதிர்நோக்கி இத்துறை செயல்பட்டு வருகிறது.

[2003 மே 8

*2003-2004* ஆம் ஆண்டில் சுற்றுலா மேம்பாட்டிற்காக ரூ.*26.79* கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சுற்றுலாவின் இந்த மாபெரும் வளர்ச்சிக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தனிப்பட்ட ஆர்வம் ஒரு முக்கிய காரணமாகும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும். அரசின் ஒத்துழைப்பினால் சுற்றுலாத் துறை கடந்த இரண்டு ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியைக் கண்டுள்ளது. இத்துறையின் முயற்சிகள் அனைத்தும் தமிழ்நாட்டிற்கு அதிக அளவு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கவும், அதன் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் அந்நியச் செலாவணியைப் பெருக்கும் எண்ணத்தோடும் மேற்கொள்ளப்படுகின்றன. சுற்றுலாப் பயணிகள் மனநிறைவுடன் தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேற்கொள்ளவும், நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையவும் இத்துறை அயராது தொடர்ந்து பாடுபட்டுவருகிறது.

185076
சென்னை-600 008